*An Online, Peer - reviewed, Refereed and Quarterly Journal*

EISSN 2456-5571




# BODHI

## INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE

VOLUME 9 | SPECIAL ISSUE 1

OCTOBER 2024 | E-ISSN: 2456-5571



## அரசு கலைக் கல்லூரி, மேலூர்

தமிழ் உயராய்வுமையம் வெளியிடும்
பன்னாட்டுக் கருத்தரங்கச் சிறப்பிதழ்

## கால வளர்ச்சியில் தமிழ் இலக்கியத்தின் போக்கு

பதிப்பாசிரியர்கள்

முனைவர் இர.ஷீலாராணி | முனைவர் இரா.முருகானந்தம்

# BODHI

# International Journal of Research in Humanities, Arts and Science

**An Online, Peer Reviewed, Refereed and Quarterly Journal**

Vol. 9 | Special Issue 1 | October 2024 | E-ISSN: 2456-5571

**CENTRE FOR RESOURCE, RESEARCH & PUBLICATION SERVICES** (CRRPS)

www.crrps.in | www.bodhijournals.com

**BIJRHAS**

The **BODHI International Journal of Research in Humanities, Arts and Science** (E-ISSN: 2456-5571) is online, peer reviewed, Refereed and Quarterly Journal, which is powered & published by **Center for Resource, Research and Publication Services, (CRRPS)** India. It is committed to bring together academicians, research scholars and students from all over the world who work professionally to upgrade status of academic career and society by their ideas and aims to promote interdisciplinary studies in the fields of humanities, arts and science.

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, bioscience, entrepreneurship, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

Research should be at the core and must be instrumental in generating a major interface with the academic world. It must provide a new theoretical frame work that enable reassessment and refinement of current practices and thinking. This may result in a fundamental discovery and an extension of the knowledge acquired. Research is meant to establish or confirm facts, reaffirm the results of previous works, solve new or existing problems, support theorems; or develop new theorems. It empowers the faculty and students for an in-depth approach in research. It has the potential to enhance the consultancy capabilities of the researcher. In short, conceptually and thematically an active attempt to provide these types of common platforms on educational reformations through research has become the main objective of this Journal.

**Dr. S. Balakrishnan**
Publisher and Managing Editor
bodhijournal@gmail.com
www.bodhijournals.com
09944212131

## AUTHOR GUIDELINES

**About Bodhi**

The BODHI International Journal of Research in Humanities, Arts and Science (E-ISSN:2456-5571) is open access, peer reviewed, referred and quarterly journal, which is powered & published by center for Resource, Research and Publication Services, (CRRPS) India. It is committed to bring together academicians, research scholars and students from all over the world who work professionally to upgrade status of academic career and society by their ideas and aims to promote interdisciplinary studies in the field of humanities, arts and science.

**Subjects for Papers**

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. Agriculture, anthropology, education, geography, advertising botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, bioscience, entrepreneurship, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

**Call for Papers**

The journal invites balanced mix of theoretical or empirical, conceptual papers to publish including research articles, case studies, review papers, comparative studies, dissertation chapters, reports of projects in progress, analytical and simulation models, technical notes, and book reviews, leading academicians, business peoples, corporate sectors, researcher scholars and students from academic institutions, research organizations, non-government organizations (NGOs), corporate sectors, civil societies, industries, and others from India and abroad.

**Submission of Manuscript**

1. Submit your article by email to **bodhijournal@gmail.com**
2. The manuscripts/papers should be research based or related, original and comprise of previously unpublished material and must be presented following scientific methodology.
3. Authors must send an abstract of the paper not exceeding 250 words, all manuscripts must be in font style of Times New Roman, size: 12, line spacing: double spaced and submitted only in MS Word 2003/ 2007 version.
4. All manuscripts should follow the MLA or APA style manual. The full paper must not exceed 3000 words, including tables and references.
5. The manuscript should be well-organized to have Title page, Abstract, Keywords, Introduction, Literature Survey, Problem Definition, Material & Methods, Findings & Results, Interpretation & Discussion, Conclusion and References.
6. All quoted, reproduced material should clearly be referenced.
7. Tables and figures should appear in the document near / after where they are referenced in the text.
8. All contents should be original – authors' own words, ideas, findings and arguments.

9. Tables and figures should appear in the document near / after where they are referenced in the text. All figures and tables must have an intelligible caption in relation to the text.
10. Photographs must be sharp, and exhibit good contrast.
11. Correct and complete referencing of quoted and reproduced material is the obligation of the author. In the text, references should be inserted in parentheses in full.
12. If author uses a reference from an out-source, author should cite relevant source giving credit to the original author/contributor.

**Review of Article / Manuscript**

1. The manuscript will be numbered and sent to the review committee for review-report.
2. The author will be intimidated of the review and the process will take a maximum period of 15 – 20 days.

**Ethical Policy**

1. Authors are advised to adhere to the ethics of publication of his/her article to be considered for publication.
2. Acknowledgement of the original ideas, borrowed from other sources is imperative.
3. The authors of original research work (previously unpublished / under process for the publication elsewhere) should be an accurate submission of the work carried out, provide the rationale of the significance of the research work in context with previous works, and should contain sufficient details to allow others for further research.
4. It will be the wholesome responsibility of the authors for such lapses if any on legal bindings and against ethical code of publication or communication media.

**Plagiarism Alert & Disclaimer**

1. The publisher & editors will not be held responsible for any such lapse of the contributor regarding plagiarism and unwarranted quotations in their manuscripts.
2. All submissions should be original and must have a "statement of declaration" assuring their research paper as an original and fresh work and it has not been published anywhere else.
3. It will be authors are sole responsibility for such lapses, if any on legal bindings and ethical code of publication.
4. Contributors are advised to be aware about Plagiarism and ensure their paper is beyond plagiarism as per UGC norms.

**Publication Policy & Peer-review Process**

Peer review exists to ensure that journals publish article which is of benefit to entire research community. Peer reviewers' comments and recommendations are an essential guide to inform the editor's decision on a manuscript that revisions and improvement. They are part of the publication process and actually help raise the quality of the manuscript. It also helps the readers to trust the research integrity of the article.

1. The Editor-in-Chief will primarily examine each manuscript.
2. The editor-in- Chief will advise the authors about the acceptance of the manuscript by email.
3. The manuscript will be evaluated on parameters of originality, practical importance, subject relevance, scientific level and contribution to the current academic scenario.
4. If the manuscript is accepted following publication policies.

5. Accepted manuscript will be forwarded to the double-blind peer review process. Such that the journal does not disclose the identity of the reviewer(s) to the author(s) and does not disclose the identity of the author(s) to the reviewer(s).
6. The review committee is not responsible for stripping of any information during panel review as the original author is not known to the committee.
7. Manuscript/paper will be published only when the article is 'commended for publication' from the review committee/editorial board.
8. If necessary the copy-editing work will be done by the members of the Editorial Board.
9. The review process may take minimum 20 working days.
10. In case of acceptance of the manuscript and commended for publication favorably, the manuscript will be published in online mode of time. If paper/article/manuscript is not commended for publication, the rejected manuscripts shall not be returned.

**Copyright Notice**

Submission of an article implies that the work described has not been published previously (except in the form of an abstract or as part of a published lecture or academic thesis), that it is not under consideration for publication elsewhere, that its publication is approved by all authors and tacitly or explicitly by the responsible authorities where the work was carried out, and that, if accepted, will not be published elsewhere in the same form, in English or in any other language, without the written consent to the Publisher. The Editors reserve the right to edit or otherwise alter all contributions, but authors will receive proofs for approval before publication.

Copyrights for articles published in Bodhi International Journal of Research in Humanities, Arts and Science are retained by the authors, with first publication rights granted to the journal. The journal/publisher is not responsible for subsequent uses of the work. It is the author's responsibility to bring any infringement action if so desired by the author.

**Indexed & Open Access**

The journal will be indexed as per database norms. The Indexing will provide the manuscript to achieve its purpose of being accessible to worldwide readers. Easy accessible will increase as manuscript's and journal's reputation. It will be a source of the quality information in respective areas/studies.

**Privacy Statement**

We may collect the contact details from authors like names, designation with Institutional address, email addresses, postal address, phone numbers and other information to understand needs and provide with a better service that are entered in this journal site and will be used exclusively for the stated purposes of this journal.

**Frequency of Publication of the Journal**

BODHI is a quarterly journal, will be published in January, April, July and October on respective Years.

**Review and Evaluation Committee**

Quarterly review committee meeting will be convened by the editor-in-chief. Authors are expected to submit their manuscript before 20 working days of the publication of the respective month. The journal will be published regularly as per Journal publication policy.

**Article Submission**

Authors are kindly advised to send manuscripts along with registration & copyright forms. (Duly filled-in Registration form is mandatory with the paper for acceptance) Soft copy of the papers should be mailed to **bodhijournal@gmail.com**

**Conference Proceedings**

Bodhi will be published as special issues for the national / international conference and seminars volumes. The group of papers also will be published in Bodhi journal.

# வாழ்த்துரை

**முனைவர் அ. அந்தோணி செல்வராஜ்**
*முதல்வர் (மு.கூ.பொ.) அரசு கலைக் கல்லூரி மேலூர்*

தமிழர்களாய்ப் பிறந்ததற்கு நாம் என்றைக்கும் பெருமை கொள்ளலாம். ஏனெனில் உலகில் மற்றவர்கள் தத்தம் தாய்மொழிகளில் பேசிக் கொண்டிருக்கிறார்கள் தமிழர் நாம் மட்டும் பல மொழிகளுடைய தாய் மொழியில் பேசிக்கொண்டிருக்கிறோம். இன்றைய காலகட்டத்தில் உலகின் பல மொழியியல் சார்ந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாய்வுகளின் முடிவுகள் உலகின் மூத்த மொழியாக தமிழை முன் நிறுத்துகின்றன.

மொழயியல் ஆய்வுகளும், வரலாற்று ஆய்வுகளும் மானுடவியல் சார்ந்த ஆய்வுகளும் போதுமான அளவில் மேற்கொள்ளப்படாத காலத்தில் தமிழுக்கும் “நீஷ பாஷை” என்ற முத்திரை குத்தப்பட்டது. ஆய்வுகளில் கிடைத்த தரவுகள் முன்கூறப்பட்ட புரட்டுக் கட்டமைப்பை உடைத்து வருகின்றன, சிலரால் நீஷ பாஷையாக கட்டமைக்கப்பட்ட தமிழ் என்றும் மக்களின் நேச பாஷை என்று இன்று உணரப்படுகின்றது. ஆம், மக்களுக்காக மக்களே படைத்த மக்களின் மொழி தமிழ்.

ஒரு மொழியின் காலத்தை, நீளத்தை, ஆழத்தை, மூலத்தை, கோலத்தை, அறிய உதவுபவை அம்மொழியில் வந்த இலக்கியங்களே. நமது நாட்டில் பல மொழிகள் தோன்றுவதற்கு முன்பே தமிழில் இலக்கியங்கள் வந்துவிட்டன. பல மொழிகளில் எழுத்து வடிவங்கள் பிறப்பதற்கு முன்பே தமிழில் இலக்கண நூல்கள் எழுதப்பட்டுவிட்டன. நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே இலக்கண நூல்களையே இலக்கியங்களாகப் படைத்த பெருமைபெற்ற ஒரே மொழி தமிழ்மொழி தான். அன்றைக்கு எழுதப்பட்ட இலக்கியங்களை இன்றை காலத்திலும் நாம் வாசித்து அனுபவிக்கமுடியும் என்பது தான் அறுந்து போகாத மொழித்தொடர்ச்சிக்கு எடுத்துக்காட்டு.

நம் தமிழ் மொழியின் பயன்பாட்டுத் தொடர்ச்சியையும், அதன் இலக்கிய செறிவையைம் பதிவு செய்யவேண்டும் என்ற உயரிய நோக்கத்தில்தான் ‘‘காலந்தோறும் தமிழ் இலக்கியத்தின் போக்கு’’ என்ற பன்னாட்டுக் கருத்தரங்கு மேலூர் அரசு கலைக் கல்லூரி தமிழ்த்துறையால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படுகிறது. நமக்குப் பிடித்தமான எழுத்தாளரின் எழுத்துக்களை நூல் வெளியானவுடனே வரிசையில் காத்திருந்து வாங்கி நாம் வாசிக்கும் மகிழ்வையும் மனநிறைவையும் தமிழ்த்துறையினரின் இம்முயற்சிகள் தருகின்றன. முயற்சியாளர்களான கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர் இர. ஷீலாராணி மற்றும் முனைவர் இரா. முருகானந்தம் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

கருத்தரங்கின் ஆய்வுக் கட்டுரைகள் ‘‘போதி’’ என்னும் சர்வதேச ஆய்விதழில் இரண்டு தொகுதிகளாக வெளிவருவது கருத்தரங்க முயற்சிக்கு மேலும் வலுச் சேர்க்கின்றன.

முயன்றோருக்கும், முயற்சிக்கும், முயற்சிகளின் தொடர்ச்சிக்கும் என் வாழ்த்துக்கள்!

**முதல்வர்**

# மகிழ்வுரை

**முனைவர் பா. சிங்காரவேலன்**
இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்
தமிழ் உயராய்வு மையம், அரசு கலைக்கல்லூரி, மேலூர்


மேலூர் அரசு கலைக்கல்லூரி தமிழ் உயராய்வு மையமும், போதி பன்னாட்டு ஆய்விதழும் இணைந்து நடத்தும் கால வளர்ச்சியில் தமிழ் இலக்கியத்தின் போக்கு எனும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம். ஒரு முறை இரு முறை அல்ல. ஏழாம் முறையாக அரசு கலைக் கல்லூரி மேலூரில் நடைபெறுவது தமிழ்த்துறைக்குப் பெருமை சேர்க்கிறது. அரசு கல்லூரிக்கும் ஆய்வுலகிற்கும் இடையே உள்ள தடைகளை உடைத்து, வசதி பொருந்திய தன்னாட்சிக் கல்லூரிகளுக்கு நிகராகவும், பல கல்லூரிகள் ஒருங்கிணக்க இயலாத ஒன்றிணைச் செய்து முடித்த மன நிறைவை ஒருங்கிணைப்பாளர்களிடம் காண்கின்றேன்.

2015 -2016 ஆம் ஆண்டு கருத்தரங்கம் தொடங்க முயற்சித்து போது எதிர்கொண்ட இன்னல்களையும், ஏற்படுத்திய தடைகளையும் அதனை முறியடித்து ஆறு ஆண்டுகள் நடத்திட இறைவன் மன வலிமையினையும் உடல் நலத்தையும் அளித்தார், என்னோடு ஐந்து ஆண்டுகள் கரம் கோர்த்தார் முனைவர் செ.எபநேசர். ஒரு ஆண்டு முனைவர் இர.ஷீலாராணி அவர்கள் உறுதுணையாக இருந்தார். அந்த அனுபவத்தின் வெளிப்பாடாக இவ்வாண்டு முனைவர் இரா, முருகானந்தம் அவர்களோடு இணைந்து செயல் பட்டு வருகிறார்.

தமிழ் மொழியின் இனிமையினையும், சம கால ஆய்வு நெறிகளையும், அதன் இன்றைய வளர் நிலைகளையும் ஆய்வுலகிற்கு எடுத்துரைக்கும் விதமாக 18.10,2024 வெள்ளிக்கிழமை நடைபெறுவது மிகிழ்வளிக்கிறது. தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இருந்து கட்டுரை அனுப்பிய பேராளர்களுக்கு நன்றியும் பாராட்டும். ஆண்டு தோறும் பன்னாட்டுக் கருத்தங்கம் நடத்த திட்டமிட்டுள்ளோம். மகிழ்வுடன் வாருங்கள். இன்முகத்துடன் கலந்துரையாடுங்கள்.

கருந்தரங்க ஒருங்கிணப்பாளர்களான தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் இர.ஷீலாராணி அவர்களுக்கும், கௌரவ விரிவுரையாளர் முனைவர் இரா.முருகானந்தம் அவர்களுக்கும் வாழ்த்துக்கள்..

**இவண்**



**முனைவர் பா. சிங்காரவேலன்**
இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்
தமிழ் உயராய்வு மையம், அரசு கலைக்கல்லூரி, மேலூர்

# பதிப்புரை

இலக்கிய இலக்கண வளமுடைய தமிழ்மொழியில் அந்தந்தக் காலங்களுக்கேற்ப இலக்கியங்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. அந்த வகையில் நாங்களும் காலத்திற்கேற்ப **“கால வளர்ச்சியில் தமிழ் இலக்கியத்தின் போக்கு”** என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருந்தரங்கை ஏழாவது ஆண்டாக துறை மேற்கொண்டாலும் நாங்கள் முதல்முறையாக இப்பணியினை ஏற்று நடத்த முயற்சித்தோம். எம் முயற்சிக்கு பலனாக இவ்வாய்வரங்கிற்கு பல்வேறு இடங்களில் இருந்து பேராசிரியர்களும் ஆய்வு மாணாக்கர்களும் கட்டுரை வழங்கி என்னை ஊக்கப்படுத்தியதன் விளைவாக கட்டுரைகளை இரண்டு தொகுதிகளாகப் பிரித்து நூலாக்கம் செய்வதில் பெருமிதம் கொள்கின்றோம்.

கருத்தரங்கம் நடத்த அனுமதி வழங்கிய கல்லூரியின் முதல்வர் (மு.கூ.பொ) முனைவர் அ.அந்தோணி செல்வராஜ் அவர்களுக்கும், தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் பா.சிங்காரவேலன் அவர்களுக்கும், துறைப் பேராசிரியப் பெருமக்களுக்கும் எங்கள் அன்பு கலந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். பதிப்புப் பணிக்கு உற்ற துணையாக விளங்கிய அன்பு கணவர் ரா.ஜாண் டார்வின் துரை மற்றும் மகள் ஜா.ஷீ.கிருத்திகா அவர்களுக்கும் எம்துறை கௌரவ விரிவுரையாளர் இரா.முருகானந்தம் அவர்களின் அன்பு துணைவியார் மு.புவனேஸ்வரி அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

கட்டுரை வழங்கி சிறப்பித்த அனைவருக்கும் நன்றிகள் பல. என்னை தொலை தொடர்பு வழி ஊக்கப்படுத்திய அன்புதோழி ஈரோடு, சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, இணைப்பேராசிரியர், முனைவர் இராக்கு, அவர்களுக்கும் நன்றி. பதிப்புத்துறை போதி ஆய்விதழ் நிறுவனர் முனைவர் செ.பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் நன்றி. ஆண்டுதோறும் எங்களோடு நீங்கள் பயணிக்க தமிழை உலகறியச் செய்ய ஒன்று கூடி இணைந்து செயல்படுவோம்.

இவண்

**இர.ஷீலாராணி**

**இரா.முருகானந்தம்**

கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள்

மற்றும் பதிப்பாசிரியர்கள்

**BODHI**
**INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE**
An Online, Peer-reviewed, Refereed and Quarterly Journal

**Vol: 9** **Special Issue 1** **October 2024** **E-ISSN: 2456-5571**

**Aim & Objectives**

Academic Excellence in research is sustained by promoting research support for young Scholars. Our Journal on Humanities, Arts and Science of research is motivating all aspects of encounters across disciplines and research fields in a multidisciplinary view, by assembling research groups and consequently projects, supporting publications with this inclination and organizing programmes. Internationalization of research work is the unit seeks to develop its scholarly profile in research through quality of publications. And visibility of research is creating sustainable platforms for research and publication, such as series of books; motivating dissemination of research results for people and society.

**Disclaimer**

Contributors are advised to be strict in academic ethics with respect to acknowledgment of the original ideas borrowed from others. The Publisher & editors will not be held responsible for any such lapse of the contributor regarding plagiarism and unwarranted quotations in their manuscripts. All submissions should be original and must be accompanied by a declaration stating your research paper as an original work and has not been published anywhere else. It will be the sole responsibility of the authors for such lapses, if any on legal bindings and ethical code of publication.

**Communication**

Papers should be mailed to bodhijournal@gmail.com

**CONTENTS**


| S. No. | Title | Page No. |
|---|---|---|
| 1 | பிரபஞ்சன் நாவல்களில் பெண்கள் மீதான சமூக வன்முறைகளும், சிக்கல்களும்<br>**முனைவர் (திருமதி) ந. அமுதவல்லி** | 1 |
| 2 | வாழ்வியல் நெறிகள்<br>தகைசால் கவிஞன் அரிமா முனைவர் **ச. அய்யர்** | 6 |
| 3 | சித்தியார் காட்டும் வாழ்வியல் நெறிகள்<br>**முனைவர் சி. அற்புதராணி** | 8 |
| 4 | புலம்பெயர் தமிழ்க் கவிதைகளில் இலங்கைத் தமிழர் வாழ்வியல்<br>**அ. அழகுராஜா &**<br>**முனைவர் உ. கருப்பத்தேவன்** | 14 |
| 5 | பழனி முருகன் கோயிலும் மக்கள் வழிபடும் முறைகளும்<br>**ஆ. சித்ரா தேவி &**<br>**முனைவர் க. பரமேஸ்வரன்** | 18 |
| 6 | ரூஹ் புதினத்தில் மதநல்லிணக்கச் சிந்தனைகள்<br>**ரா. சித்திரகலா &**<br>**முனைவர் வெ. திலகம்** | 22 |
| 7 | கொற்றவை புதினம் உணர்த்தும் சடங்குகள்<br>**கு. ஈஸ்வரன்** | 26 |
| 8 | விடுகதையின் பின்னிணைப்புப் பகுதியும் அதன் செயல்பாடுகளும்<br>**முனைவர் ஆ. கணேஸ்வரி** | 30 |
| 9 | புறப்பொருள் வெண்பாமாலையில் புறத்திணைப் பண்பாடும், திணைக்கோட்பாட்டு விரிவுகளும்<br>**முனைவர் சா. கணேசன்** | 33 |
| 10 | திருக்குறளில் காணப்படும் வாழ்வியல் நெறிகள்<br>**சு. கோபாலகிருஷ்ணன்** | 38 |
| 11 | வள்ளுவத்தில் மனித நேயப்பண்புகள்<br>**முனைவர் வே. கோமதி** | 41 |

| | | |
|---|---|---|
| 12 | பெண்ணியம்<br>**முனைவர் பூ. காயத்ரி** | 44 |
| 13 | சு.சமுத்திரம் நாவல்களில் பெண்ணியச் சிந்தனை<br>**முனைவர் பொ. ஜான்சி** | 47 |
| 14 | தமிழிலக்கியம் வலியுறுத்தும் மதுரபாடணம்<br>**முனைவர் சை. ஜெஸிமா** | 53 |
| 15 | பத்துப்பாட்டில் வாழ்வியல்<br>**அ. ஜெயா &**<br>**முனைவர் த. சந்திரகுமார்** | 57 |
| 16 | தமிழ் இலக்கியத்தில் அறமும் சமயச்சார்பும்<br>**முனைவர் எம்.எம். ஜெயசீலன்** | 62 |
| 17 | அப்துல்காதரின் "மின்னல் திரிகள்" கவிதையில் வரலாற்றுச் செய்திகள்<br>**முனைவர் பி. ஜூடஸ்மேரி** | 67 |
| 18 | பாலைக்கலி: திணைக்கலப்பும் வேனிற்பருவமும் சுரமும்<br>**முனைவர் மு. ஜெகதீசன்** | 69 |
| 19 | கண்ணன் சிறுவர் இதழில் இடம்பெற்ற சிறுகதைகள் காட்டும் வாழ்வியல் நெறிகள்<br>**முனைவர் இரா. ஜீவா** | 76 |
| 20 | மாத்தளை சோமுவின் சிறுகதைகளில் ஆஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர் வாழ்வியல்<br>**முனைவர் உ. கருப்பத்தேவன்** | 81 |
| 21 | தொல்காப்பியத்தில் வடமொழியை உயர்த்திப் பிடித்த உரையாசிரியர்கள்<br>**முனைவர் சி. குமார்** | 87 |
| 22 | ராசன் - ராயன் - சொல்லாய்வு<br>**முனைவர் மு. கற்பகம்** | 92 |
| 23 | சங்கப் புறநூல்களில் வணிகம்<br>**முனைவர் க. கனகலட்சுமி** | 94 |
| 24 | 'என்மகஜெ' புதினத்தில் சூழலியல் சிக்கல்கள்<br>**முனைவர் சு. முருகவேல்** | 97 |
| 25 | கம்ப இராமாயணத்தில் இராமனின் தனிமனித ஒழுக்கம்<br>**ஐ. மகாலட்சுமி &**<br>**முனைவர் சி. குமார்** | 100 |
| 26 | நாலடி நானூற்றில் அறக்கருத்துக்கள்<br>**பேரா. வெ.மணிகண்டன்** | 103 |
| 27 | குறுந்தொகைப் பாலைத்திணை புலப்படுத்தும் தலைவியின் பிரிவாற்றாமையும் தூய அன்பும்<br>**ஆ. மணி &**<br>**முனைவர் சு. ரவி ஜேசு ராஜ்** | 106 |
| 28 | பா.விஜய்யின் உடைந்த நிலாக் கவிதையில் - காதல்<br>**முனைவர். அ. மோகன்ராஜ்** | 110 |
| 29 | எஸ்.அர்ஷியாவின் புதினங்களில் இஸ்லாமிய வழக்கங்கள்<br>**முனைவர் கா. மைதீன் &**<br>**சௌ. பிரேம்குமார்** | 114 |
| 30 | மனமெங்கும் மனிதப் பூ நாடகத்தில் நா.இளங்கோவின் எடுத்துரைப்பு<br>**திருமதி த. முத்துலெட்சுமி &**<br>**முனைவர் பா. சிங்காரவேலன்** | 119 |
| 31 | அறிவின் படிநிலைகளும் இயங்கியலும்<br>**த. மலர்விழி &**<br>**முனைவர் கு. பெரியசாமி** | 122 |
| 32 | ஆகாயத்துக்கு அடுத்தவீடு உணர்த்தும் சமுதாயச் சிந்தனைகள்<br>**முனைவர் இரா. நித்யா** | 127 |
| 33 | சங்க - இக்கால கவிதைகளில் பெண் மன உணர்வுகளும் கருத்தாக்கங்களும்<br>**ப. நீலாவதி &**<br>**முனைவர். இரா. கௌரி** | 131 |
| 34 | குழந்தைகளின் மொழி வளர்ச்சியின் சிக்கல்களும் சில தீர்வுகளும்<br>**முனைவர் த. நிர்மல் கருணாகரன்** | 136 |
| 35 | காளவாய் புதினம் காட்டும் சமுதாய நிலைகள்<br>**முனைவர் பா.நேருஜி** | 140 |
| 36 | சிலப்பதிகாரம் சித்தரித்திடும் சமயப் பொறையறம்<br>**முனைவர் செ. பாண்டியம்மாள்** | 146 |
| 37 | புலம் பெயர்ந்தோர் கவிதைகளில் வெளிப்படும் பெண்ணினக்குரல்கள்<br>**முனைவர் வெ. பிரபாவதி** | 150 |
| 38 | வள்ளுவரின் வாக்குமூலம்<br>**முனைவர் க. பிரீதா** | 154 |
| 39 | கண்ணக்குமார விஸ்வரூபன் படைப்புகளில் பெண்கள்<br>**மு. பிரியதர்ஷினி &**<br>**முனைவர் வை. இராமராஜபாண்டியன்** | 159 |
| 40 | சூழலியல் நோக்கில் 'சோகவனம்' சிறுகதை<br>**முனைவர் இரா. பிரியதர்சினி** | 163 |

Vol. 9 Special Issue 1 October 2024 E-ISSN: 2456-5571

# பிரபஞ்சன் நாவல்களில் பெண்கள் மீதான சமூக வன்முறைகளும், சிக்கல்களும்

**முனைவர் (திருமதி) ந. அமுதவல்லி**
*இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்*

**ஆய்வுச்சுருக்கம்**
சமூகத்தில் பெண்களின் மீதான வன்முறைகள் பெருகி கிடக்கின்றன. இதனால் பெண்கள் பல சிக்கல்களுக்கு உள்ளாகின்றனர் இதனைப் பெண்ணிய நோக்கோடு ஆராய்வது என்பது காலத்தின் தேவையாகிறது. அந்த வகையில் பிரபஞ்சனின் நாவல்களில் இடம்பெறும் பாலியல் வன்முறை, பாலியல் தொல்லை, கேலி கிண்டலுக்கு உள்ளாக்குதல் போன்றவற்றை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.
**குறியீட்டுச் சொற்கள்:** பெண்களுக்கு எதிரான வன்முறைகள், பாலியல் வன்முறை, பாலியல் தொல்லை, பெண்ணைக் கேலி கிண்டலுக்கு உள்ளாக்குதல்.

## முன்னுரை

மனிதன் கூடி வாழத் தொடங்கி என்று சமுதாயத்தைத் தோற்றுவித்தானோ அன்றே சமுதாயச் சிக்கல்களும் தோன்றி விட்டன எனலாம். சமூகச் சிக்கல்கள் சமூக வன்முறைகளுக்கு வழிவகுக்கின்றன. மனித இனங்களுள் இருபால் பிரிவான ஆணினமும், பெண்ணினமும் தமக்குள் கருத்து முரண்படும் போது வலிமை நிறைந்தது என்று கருதப்படும் ஆணினம் வலிமை குறைந்தது என்று கருதப்படுகின்ற பெண்ணினத்தை அடக்கியாள எண்ணுகின்றது. இதனால் சமூகத்தளத்தில் பெண் மீதான வன்முறைகள் தொடுக்கப்படுகின்றன. இதனால் பெண்கள் பலவித வாழ்க்கைச் சிக்கல்களுக்கு உள்ளாகின்றனர்.

“பெண் மக்களிடையே பீதித் தீயை மூட்டிப் பெருந்தணலாய்க் கொழுந்து விட்டெரியும் பெரும் பிரச்சினையாய் விளங்குவது பெண்களுக்கெதிரான வன்முறைக் கொடுமைகளாகும். பெண்ணும் சக மனிதப் பிறவியே என்கிற நேயம் மறந்து அவளது உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் அலட்சியமாக நடத்துவது, தரம் தாழ்த்தி அவளது உரிமைகளுக்குத் தடை போடுவது, பாலியல் நிர்பந்தங்கள் கொடுப்பது எனப் பெண்களுக்கெதிரான வன்முறைகள் பலப் பலவாய்ச் சமூகத்தில் மலிந்து காணப்படுகின்றன”.[1]

“பெண் சிசுக் கொலை, வரதட்சணைக் கொடுமைகளின் உச்சமாய் கொலை, பெண்ணைத் தற்கொலைக்கு இலக்காக்குதல், கற்பழிப்பு, விபச்சாரம், அச்சுறுத்தல், அத்துமீறல்கள், மனைவியை அடித்துத் துன்புறுத்தல், கற்பு நெறியைச் சந்தேகித்துத் துன்பமிழைத்தல் என வன்முறைகள் பல்வேறு கூர்முனைகளாய்ப் பெருகி பெண்களைக் குத்திக் குதறி வருகின்றன”.[2]

சமூகவியலாளர்கள், பெண்கள் மீதான வன்முறையை ஒரு சமூக நோயாகக் குறிப்பிடுகின்றனர். “மக்களின் நலனுக்காக ஏற்படுத்தப்படும் மருத்துவமனைகள், கல்வி நிலையங்கள், திருத்தலங்கள், போக்குவரத்து நிலையங்கள், வாகனங்கள், நடைபாதைகள் இன்னும் பிற பொது இடங்களில் பெண் தனது பாலினத்தாலும், பொருளாதாரமின்மையாலும் பல அவமானங்களுக்கு உள்ளாகின்றாள். இவை பெண்ணைத் தனித்து இயங்க இயலாதவளாகவும் துணிவும் திறமும் மழுங்கடிக்கப்பட்டவளாகவும் நிலை நிறுத்துகின்றன”.[3]

“கணவனைப் பிரிந்து தனித்து வாழ்தல், தனியாகப் பயணம் செய்தல், சாலைகளில் செல்லுதல் போன்ற சமயங்களில் ஆண்களின் வக்கிரப் பார்வைக்கும் அத்துமீறிய செயலுக்கும் பெண்கள் உள்ளாக நேரிடுகிறது. பெண்ணின் உடலியற் கூறு, பெண்ணைப் பற்றிய கருத்தரங்கங்களில் “அழகு பிரதானப்படுத்தப்படுவது” ஆகியவை ஆண்களின் வன்முறைகளுக்குக் காரணங்களாய் அமைகின்றன”.[4]

“முள்ளின் மேல் சேலை விழுந்தாலும், சேலையின் மேல் முள் விழுந்தாலும் கிழிவது சேலை தான்’ என்னும் பொதுவான நியதியைச் சமுதாயம் பெண்ணுக்குப் போதித்து கொண்டே வருவதால் பெண் தவறு செய்யாத போதும் அவள் மீது பழி சுமத்தப்படும் என்பதால் ஆண்களின் அத்துமீறிய செயல்களை வெளிப்படுத்த அஞ்சுகின்றனர். இதனால் ஏற்படும் அவமானங்கள் பெண்ணையே சாரும் என்பதால் அவர்கள் ஒழுக்கம் தவறும் ஆண்களைப் புறவுலகிற்குக் காட்டத் தயங்குகின்றனர். இந்நிலையே ஆண்கள் பெண்கள் மீது மேலும் மேலும் குற்றங்களைச் செய்வதற்கு வாய்ப்பாகிப் போகின்றது”.[5] ஆகையால்

சமூகத்தில் நிலவி வரும் ஆண்-பெண் ஏற்றத் தாழ்வுகளுக்கெதிரான சமூக, பொருளாதார, உடல்ரீதியான அனைத்து வகையான பேதங்களையும் அறவே போக்கிடவும், அவ்வாறான நடைமுறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் பாங்கில் சவால்களை எதிர் கொண்டு சமாளிக்கவுமான தகுதியும் திறனும் வளர்க்கப்பட வேண்டியது மிக மிக அவசியமாகிறது என்ற நோக்கில் பிரபஞ்சன் நாவல்கள் சமூகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை எடுத்துக்காட்டி அவை களையப்பட வேண்டியவை என்பதையும் சுட்டிக் காட்டுகின்றன. சமூகத் தளத்தில் பெண்களின் மீதான வன்முறைகளையும் அதனால் அவர்களுக்கு ஏற்படும் சிக்கல்களையும் இக்கட்டுரை விளக்கமுயலுகின்றது.

**பாலியல் வன்முறை**

பெண் மீதான வன்முறைகள் என்பது பெரும்பான்மை அவள் உடல் மீது ஆதிக்கத்தைச் செலுத்துவதாக உள்ளது. இதன் காரணமாகப் பெண்ணின் உடல், மனம், கண்ணியத்தோடு வாழ்வதற்கான மனித உரிமைகள் இவற்றை ஒடுக்கி அவற்றின் மீது வன்மையாகத் தாக்குவதே அதிகாரத்தின் உச்சமாக உள்ளது. இத்தாக்குதலே வன்புணர்ச்சி ஆகும். அதிகார ஆதிக்க வர்க்கத்தினரின் ஆதிக்க உணர்வு, வன்முறை போன்ற உணர்வுகளின் வெளிப்பாடான வன் புணர்ச்சிகள் பெண்களைச் சிறுமைப்படுத்தி கண்ணியத்தைக் குலைய வைக்கின்றது.

இன்றைய சமூகமும் சட்டமும் “ஒரு ஆண் ஒரு பெண்ணின் விருப்பத்திற்கு மாறாகத் தன்னுடன் உடல் உறவு கொள்ள அவளைக் கட்டாயப்படுத்தினால் அது பலாத்காரமாகும்”[6] என்று பாலியல் வன்முறை குறித்து வரையறை செய்கின்றன.

- “ஒரு பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக உடலுறவு கொள்ளுதல்.
- அவள் போதையிலோ, மயக்கத்திலோ உள்ள நிலையில் ஒப்புதலின்றி.
- அவளுடைய ஒப்புதல் இருந்தாலும், அவளை மரண பயத்துக்கு ஆட்படுத்தியோ, அவள் விரும்பும் ஒருவரைத் துன்புறுத்தியோ நெருக்கடியை உண்டாக்கி.
- ஒரு பெண் தன் கணவன் என்று தவறாக நம்பிய நிலையில் ஒப்புதல் கொடுத்த போதும் கணவனில்லை என்று தெரிந்து கொண்டு ஒரு மனிதன் உடலுறவு கொள்ளுதல்.
- சரியாகச் சிந்திக்க இயலாத நிலையில் விளைவுகளை அறியாத சூழலில் ஒப்புதல் கொடுத்தாலும் ஒரு மனிதன் அவளுடன் உடலுறவு கொள்ளுதல்.
- ஒப்புதலுடனோ, ஒப்புதலின்றியோ பதினாறு வயதுக்குட்பட்ட பெண்ணை வற்புறுத்துதல் என்று இந்திய தண்டனைச் சட்டம் 375 ஆவது பிரிவு வன்புணர்வு என்பதற்கான விளக்கங்களைப் பட்டியலிடுகின்றது”.[7]

“பாலியல் பலாத்காரம் என்பது ஆணின் பலவீனமான உடல் ஆசையால் உண்டாவதாகும். இந்தப் பலவீனமான உடல் ஆசையால் நிகழ்ந்து விடும் பாலியல் பலாத்காரம் பாலியல் வன்முறையாகச் சமூகத்தில் தொடர்கிறது. சமூக வன்முறையைக் கட்டவிழ்த்திருக்கும் பண்பாட்டால் பாலியல் பலாத்காரம் நிகழும் போது அது சமூக வன்முறையாகக் கருதப்படுகிறது. தந்தை வழிச் சமூகம் சமூக இணைப்பின் மூலம் பெண்ணைக் கீழ்நிலைப்படுத்தி வருகிறது என்பதற்குப் பாலியல் பலாத்காரம் காரணம் எனக் கூற முடிகிறது”[8] என்று அரங்க மல்லிகா குறிப்பிடுகின்றார். பெண் மீது தொடுக்கப்படும் இத்தகைய பாலியல் பலாத்காரம் என்ற சமூக வன்முறை குறித்து பிரபஞ்சன்தனது நாவல்களில் பதிவு செய்துள்ளனார்.

பெண்ணை ஏமாற்றி உடல் வேட்கையைத் தணித்துக் கொள்ளும் ஆணின் கொடூரம் சமூக வன்முறையாகத் தொடர்கிறது. “காலம் காலமாகப் பெண் ஆணின் கொடுமைகளுக்கும், நயவஞ்சகப் போர்வைக்கும் தலைகுனிந்தே வருகிறாள். அவள் எதிர்த்து நின்று சுயமாகத் தன்னைக் காட்டிக் கொள்ளத் திறமின்றியே மழுங்கிக் கிடக்கிறாள்”[9] என்ற இராஜம் கிருஷ்ணனின் கூற்றுக்கேற்ப படைக்கப்பட்டவள் பிரபஞ்சனின் தீவுகள் நாவலில் இடம் பெறும் மீனா. இவள் சச்சுதானந்தத்தின் அக்கா மகள். இவளைச் சேகர் என்பவன் காதலித்தான். அவன் அவளை மூன்று நாட்கள் வீட்டிற்கு அழைத்து வந்து பாலியல் இன்பம் அனுபவித்து விட்டுத் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று புறக்கணிக்கின்றான். “கல்யாணத்துக்கு எங்கள் வீட்டில் இப்போதைக்குத் தயார் இல்லை.”[10] என்று காரணம் கூறித் தட்டிக் கழித்தான். அப்பெண்ணும் அவனை எதிர்க்கும் துணிவின்றி முடங்கிக் கிடக்கும் நிலையைப் பிரபஞ்சன் இப் பாத்திரப் படைப்பின் வழியே புலப்படுத்துகின்றார். இவ்வாறு சமூகத்தில் காதல் என்ற போர்வையில் பெண்ணுக்கு நிகழும் பாலியல் வன்முறைகளைப் பிரபஞ்சன் இனங் காட்டுகின்றார்.

**பாலியல் தொல்லை**

பெண்கள் பணி நிமித்தமாகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ வெளி இடங்களுக்குச் செல்லும் சூழ்நிலை ஏற்படும் போது ஆண்களால் பாலியல் தொல்லைகளுக்கு உள்ளாகின்றனர். தங்களுக்கு ஏற்படும் பாலியல் தொல்லைகளை வெளியில் சொன்னால் தங்கள் சுய கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படும் என்று பெண்கள் நினைப்பது ஆணினத்திற்கு மிகவும் சாதகமாகப் போய் விடுகின்றது. அச்செயலைச் சில பெண்கள் மட்டுமே எதிர்க்கின்றனர். இவ்வாறு தங்களுக்கு நேரும் பாலியல் தொல்லைகளை எதிர்க்கும் பெண்களையும், மௌனமாகவே ஆண்கள் நிகழ்த்தும் வன்முறைகளை பொறுமையாக தாங்கிக் கொண்டு வாழும் பெண்களையும் பிரபஞ்சனின் நாவல்கள் விளக்குகின்றன.

பிரபஞ்சன் பஸ்ஸில் நிகழும் பாலியல் தொல்லை பற்றித் தனது 'சந்தியா' என்ற நாவலில் கூறுகின்றார். பஸ்ஸில் சந்தியா பயணம் செய்து கொண்டிருந்த போது ஒரு நடுவயது ஆண் அவளை உரசுவது போல் இருக்கவே திரும்பிப் பார்த்தாள். அந்த ஆளுக்கு முன்தலை வழுக்கை, வயிறு பெருத்து தொப்பைப் போட்டிருந்தது. தன் உடம்புக்கு ஏலாத இறுக்கமான சட்டை போட்டிருந்தான். முகத்தில், ஓர் அதீதமான ஒன்றும் தெரியாத அப்பாவியின் பாவம் தெரிந்தது. ஏதோ, ஏதேச்சையாக அவள் உடம்பை ஸ்பரிசித்து விட்ட மாதிரியும், அந்த ஸ்பரிசம் கூடத் தன்னை எவ்விதமும் பாதிக்கவில்லை என்பது மாதிரியும் அவன் இருந்தான். சந்தியா அந்த நடுவயதினனை அவன் கண்களை ஊடுருவிக் கொண்டு பார்த்தவுடன் கொஞ்சம் தாக்குற்று அவன் அவளை விட்டுத் தள்ளி மூன்றடி முன்னால் போய் நின்று கொண்டான். சந்தியா தனியாக வெளியே வரும் பெண்கள் சீறக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

மேலும் இளைஞன் ஒருவன் பஸ்ஸில் நெரிசலில் இருந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு குழந்தையுடன் இருந்த இளம் பெண்ணின் பின் பகுதியை உரசினான். சந்தியா அதனைக் கண்டு அப் பெண்ணை பெண்கள் பகுதியின் இருக்கைக்கு நடுவாக நிற்க வைத்தாள். சந்தியா மீண்டும் அந்த இளைஞனைப் பார்த்தாள். "அவன் முகம் லேசாகச் சிவந்தது, உறுத்தலாகச் சந்தியாவைப் பார்த்தான். குரூரம் உணர்வைக் கவ்விக் கொண்டு ஓடும் நாளை மற்றொரு நாய் துரத்துகிற குரூரம், வேற்று மனிதரைப் பார்த்துக் காரணமின்றி குரைக்கின்ற நாயின் ஆங்காரம்"[32] போன்ற குணம் கொண்ட அவ் இளைஞன் தன் முன் மணிக்கட்டால் அவள் தோளை உரசிக் கொண்டிருந்தான். சந்தியா கொஞ்சம் பக்கவாட்டாகத் திரும்பி தோளை, அவன் தொடுவதைத் தவிர்த்தாள். இப்போது அவள் அவன் எதிரில் முதுகைத் திருப்பிக் கொண்டு நின்றிருந்தாள். ஒன்றிரண்டு நிமிஷங்கள் கழித்து சந்தியாவின் பின் பக்கத்தை, கீழே ஒரு கை தொடுவது அவளுக்குத் தெரிந்தது. உடனே சந்தியா அதனை எதிர்த்தாள்.

> **"மிஸ்டர் ஒழுங்கா,கௌரவமா நடந்துக்குங்க.." என்று கூறினாள். உடனே அவன்,"கூட்டம்னா இடிபடத்தான் செய்யும். யார் உடம்பும் உங்க மேலே படக் கூடாதுன்னா,நீங்கள் ஏன் பஸ்ஸில் வரணும்? ஆட்டோவில் போறது தானே"[12]**

என்று பதிலளித்தான்.

உடனே சந்தியா,

> **"அது எனக்குத் தெரியும் சார். கூட்டத்துல ஒருத்தர் உடம்பு ஒருத்தர் மேலே படத்தான் செய்யும். அது தவிர்க்க முடியாமே இருந்தா சரி. வேணும்னேஉங்க உடம்பை என் மேலே உரசுறது அயோக்கியத்தனம். நீங்க வேணும்னே என்னை உரசிறீங்க ஜாக்ரதை"[13]**

என்று அவனது தகாத செயலைக் கண்டித்து எச்சரித்தாள். விவகாரம் போலீஸ் ஸ்டேஷன் வரை சென்றது. "பெரிய பத்தினியாட்டம் பேசாதே"[14] என்று கூறினான். சந்தியா அவனை எதிர்த்து பேசினாள். "பெண்கள் தென்றலாகவும் இருப்பர். ஆலமரத்தையும் வேரோடு பெயர்த்து வீழ்த்தவும் அவர்கள் அஞ்சார்"[15] என்பதற்கேற்ப சந்தியா அவனை அடித்தாள். தெரியாமல் அப்படிச் சரியான இடங்களில் எப்படிப்பா கைப்படும்? உன் கை ஏன் ஆண்களின் மேல் படவில்லை? பொய் சொல்லாதே. செய்தது அயோக்கியத்தனம். அதற்கு என்னிடம் நீ மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கூட நான் எதிர்பார்க்கவில்லை. இனி இன்னொரு பெண்ணிடம் நீ இப்படி வாலாட்டத் துணியும் போது, நான் அடித்த அடி உனக்கு நினைவுக்கு வரும். அது உனக்கு ஓர் எச்சரிக்கை தர வேண்டும். அது போதும் எனக்கு"[16] என்று அவனை எச்சரித்தாள்.

பேருந்தில் பயணம் மேற்கொள்ளும் பொழுது கூட்ட நெரிசலைப் பயன்படுத்திப் பல்வேறு சில்மிஷங்கள் நிகழ்த்தப்பட்டு வருவது அன்றாட நிகழ்வாகிவிட்டது. இதற்கு வரம்பு மீறிய பாலியல் வேட்கையும், பாலியல் பற்றிய தவறான புரிதல்களும் காரணங்களாக அமைகின்றன. இங்கு தனிமனித ஒழுக்கம் கேள்விக்குள்ளாகிறது. ஆணின்

இவ்வொழுக்கக் கேடான செயலால் பெரிதும் பாதிக்கப்படும் நிலையில் பெண்களே உள்ளனர்.

சமூகத் தளத்தில் இத்தகைய பாலியல் தொல்லைகள் செய்யும் ஆண்களை பெண்கள் எதிர்க்க வேண்டும். அவர்களுக்கு அஞ்சிக் கோழைகளாக இருக்கக் கூடாது என்ற கருத்தினைச் சந்தியா பாத்திரப் படைப்பு வாயிலாகப் பிரபஞ்சன் உணர்த்துகின்றார்.

பிரபஞ்சனின் 'பூக்கள் நாளையும் மலரும்' நாவலில் இடம் பெறும் ஜானு மாமி பிந்துவிடம் தான் சிறிய வயதாக இருக்கும் போது, அக் காலனியில் வசிக்கும் சந்தா என்பவர் தன்னை அவரின் ஆசைக்கு இணங்குமாறு வற்புறுத்தியதைப் பற்றிக் கூறுகின்றாள். ஜானு மாமியின் கணவர் பல பெண்களோடு தொடர்பு வைத்துக் கொண்டு அலைந்ததை அறிந்த அக் காலனியில் வசிக்கும் சுந்தா என்பவர் ஜானு மாமி அனுமார் கோவிலில் தனியாக இருந்த போது அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு முறைகேடாக நடக்க முயன்றார். இதனை ஜானு மாமி பிந்துவிடம் கூறுகின்றாள்.

"என் முன்னால் வந்து நின்னு என் கையைப் பிடிச்சுக்கிட்டார். பகவானுக்குத் தெரியும் நான் பட்ட பாடு. பயம் இல்லை. ரொம்ப அவமானமாக இருந்துச்சு. மோகம் தப்பு இல்லை. ரெண்டு கையும் நீளும் போது தானே சினேகம் சாத்தியம். அவர் மட்டுமே கையை நீட்டுண்டு நின்னார். அதுதானே ஆபாசம். நான் வேணாம்னு சொன்னேன், என்னைச் சேர்த்துண்டு – முரட்டுத்தனமாத்தான் - இதுல என்ன தப்புன்னார். உனக்குத் தான் புருஷன் சரியில்லை-யேன்னார். புருஷன் சரியில்லைன்னு பெண்டாட்டிகள் சீரழிய ஆரம்பிச்சா அதுக்கு முடிவு தான் ஏது? பத்துக்கு ஆறு புருஷன்காரன் சரியில்லை. என்னடியம்மா ஆகும்? என் புருஷன் சரியில்லேன்னு உன்கிட்டே வந்து அழுதேனா? கேட்டேன். ஹி. . . ஹி. . .ன்னு கனைச்சார். குதிரை கணக்கா என்னென்னமோ பண்ணத் தொடங்கினார். நாயே, கையை எடுன்னேன், கறாரா உடம்பைச் சுத்தின பாம்பு விலகிடுச்சு, அந்த கோபத்தை மனசுக்குள்ளே வச்சுண்டு காலனி முழுக்க, அந்த கட்டேலே போறவன் என்ன பண்ணினான் தெரியுமா? நான் அவன் கையைப் பிடிச்சு இழுத்ததா சொல்லிட்டு திரிஞ்சான்"[17] என்று கூறுகின்றாள்.

இதன்மூலம் பெண்கள் தங்கள் ஆசைக்கு இணங்க மறுக்கும் சூழ்நிலையில் ஆணினம் அப்பெண் மீது அவதூறாக பழி சுமத்துவதைக் காண முடிகின்றது. ஆண் பாலியல் சீண்டல் நிகழ்த்த முற்படும் போது பெண் அதனை எதிர்ப்பவளாக தைரியமும், மனோ வலிமையும் பெற்றவளாக இருக்க வேண்டும் என்ற கருத்தை ஜானு மாமி பாத்திரப் படைப்பின் வாயிலாகப் பிரபஞ்சன் வெளிப்படுத்துகின்றார்.

**கேலி, கிண்டலுக்கு உட்படுத்துதல்**

பெண்கள் சமூகத் தளத்தில் கல்வி அறிவினைப் பெறுவதற்கு வீட்டை விட்டு வெளியே வரும் சூழலில் பள்ளியில் படிக்கும் அல்லது கல்லூரியில் படிக்கும் மாணவர்களால் கேலி, கிண்டலுக்கு உள்ளாகும் நிலை காணப்படுகின்றது. மாணவர்கள் தன் உடன் பயிலும் மாணவியைச் சக உயிரியாகக் கருதாமல் பால் வேறுபாட்டு அடிப்படையில் பாலியல் பார்வையுடன் நோக்குவதால் பெண்கள் மனச் சிக்கலுக்கு உள்ளாகின்றனர். சமூக நடப்பியலில் அன்றாடம் காணப்படும் இந்நிகழ்வை பிரபஞ்சன் தனது படைப்புக்களில் எடுத்தியம்புகின்றார்.

"பெண் உடல் குறித்த பண்பாட்டுக் கற்பிதங்கள் ஆண்மை குறித்த கருத்தாக்கத்தையும் நிலைப்படுத்துகின்றன. பெண் உடல் மீது செலுத்தப்படும் வன்முறைகளில் மிகக் கொடுமையானதாகப் பாலியல் பலாத்காரத்தைக் குறிப்பிடலாம். ஆனால் தினந்தினம் தவணை முறையில் இவ் வன்முறை பொது இடங்களில் பெண்ணைக் கேலி செய்தல் என்று செல்லமாக அழைக்கப்பட்டு அரங்கேறுகிறது. ஈவ்டீசிங் என்று அப்பாவித்தனமாகப் பெயரிடப்பட்டுள்ள இக்கொடுமை பெண் உடல் மீதான வன்முறையை நியாயப்படுத்துவதே"[18] என்ற அ.மங்கையின் கூற்றிற்கு பொருத்தமாக பிரபஞ்சன் 'தீயிலே வளர்சோதி' நாவலில் பெண்ணின் உடலைப் பட்டப் பெயர் வைத்துக் கேலி செய்யும் மாணவ சமூகத்தின் மன எண்ணங்களை வெளிப்படுத்துகின்றார்.

பிரபஞ்சனின் 'தீயிலே வளர் சோதி' நாவலில் சுமதி ப்ளஸ் டூ படித்துக் கொண்டிருக்கும்போது அவள் படித்துக் கொண்டிருந்த பள்ளிக்கும், அவளிருந்த தெருவுக்கும் இடையே தான் சட்டக் கல்லூரி மாணவர் விடுதியும் இருந்தது. மாணவர்கள் விடுதியின் சுற்றுச் சுவர்களில் உட்கார்ந்து கொண்டு பள்ளிக்குப் போவோர்களைச் சீண்டுவார்கள். "என்ன கற்பனை அவர்களுக்கு, ஒவ்வொருத்திக்கும் ஒரு அழகான பெயர் வைத்திருப்பார்கள். அது ரொம்பவும் பொருத்தமான பெயராகவும் இருக்கும். பதினொன்றாம் வகுப்பு 'இ' பார்வதிக்கு 'ஒட்டைக் குச்சியாம்'. அகிலாண்டேஸ்வரியைச் 'செவண்டி எம்.எம்' என்றார்கள். அவள் கொஞ்சம் வாகானவள் தான். ஆனாலும் அது கொஞ்சம் அநியாயம் தான். 'எல்லோருடனும் நின்று நின்று கலகலப்பாகப்

பேசிச் செல்கிற மேகலாவுக்கு 'டவுன் பஸ்' எப்பொழுதும் தன் குட்டித் தம்பியைப் பாதுகாப்புக்காக அழைத்து வரும் கோமளாவைக் 'கங்காரு' என்றார்கள். சுமதியைப் 'புளு டிராகன்' என்று சொன்னார்கள்''.[19] இவ்வாறு பருவப் பெண்களின் உடல் அமைப்பை வைத்தும், அவர்களின் செயல்களை வைத்தும் அவர்களைக் கிண்டல் செய்யும் போக்கு வளரும் மாணவ சமுதாயத்தில் காணப்படுகின்றது. இதனால் மாணவிகள் அச்சத்தினால் உள ரீதியான சிக்கல்களுக்கு உள்ளாகின்றனர் என்பதை பிரபஞ்சனின் கீழ்க்கண்ட வரிகள் விளக்குகின்றன.

> **"மாணவர் விடுதியை நெருங்க நெருங்க மனசு முழுவதும் பயக் குருவிகள் சிறகு விரித்துப் படபடக்கும். எவ்வளவு வேகமாக அந்த இடத்தை விட்டு ஓடிப் போக முடியுமோ புயல் மாதிரி தாண்டிச் செல்வாள். இருந்தாலும் அந்த கோட்டான்கள் கத்தாமல் இருப்பதில்லை.**
> **புளு டிராகன் என்று அவர்கள் கத்தும் போது சுமதிக்கு பய உணர்வில் உயிரே போய்விடும் போல இருக்கும். எப்படியோ ஒரு வழியாக அடித்துப் பிடித்துக் கொண்டு பள்ளிக்குப் போய்ச் சேர்வாள். தினம் தினம் இந்தச் சங்கதி தான் தொடர்ந்தது"[20]**

இவ்வாறு பள்ளிக்குச் செல்லும் மாணவிகள், கல்லூரி மாணவர்களின் கேலிக்கும், கிண்டலுக்கும், பரிகாசத்திற்கும் உள்ளாகி மன துன்பம் அடைகின்றனர். இதற்குக் காரணம் ஆண் பெண்ணைப் பாலியல் அடிப்படையில் நோக்குகின்றான். பெற்றோர்கள் குழந்தைகளை வளர்க்கும் போது ஆண், பெண் எனப் பிரித்து பேதம் காட்டி வளர்க்கின்றனர். ஆண் என்றால் ஆணோடு தான் சேர வேண்டும் விளையாட வேண்டும். பெண் என்றால் பெண்ணோடு தான் சேர வேண்டும், விளையாட வேண்டும் என்று கட்டுப்பாடு விதித்து வளர்ப்பதனால் அவர்கள் மனதில் பாலினப் பாகுபாடு புகுத்தப்பட்டு பாலியல் நோக்கு மட்டுமே அங்கு செயலாக்கம் பெறுகின்றது. இதனால் பாலியல் நோக்கினால் மட்டுமே பெண்ணை நோக்கும் ஆண் கேலி, கிண்டல் செய்து பெண்ணைக் கவர முற்படுகின்றான். இது சில சமயங்களில் சமூகத்தில் தீங்கு விளைவிப்பதாக அமைந்துள்ளது. இத்தகைய போக்கு சமூகத்தில் பெருமளவில் காணப்படுகின்றது. இவை களையப்பட வேண்டும் என்பதே பிரபஞ்சனின் நோக்கமாகும்.

## தொகுப்புரை

பிரபஞ்சன் காதல் என்ற போர்வையில் நயவஞ்சகமாகப் பெண்ணைக் கவர்ந்து தனது பாலியல் இன்பத்தை பெண்ணின் விருப்பத்துடனே தீர்த்துக் கொள்ளும் ஆண் பாத்திரத்தை மட்டுமே படைத்துள்ளார்.

பெண்கள் தங்களது பணி நிமித்தமாகவோ அல்லது வேறு பல அலுவல் காரணமாக வெளியிடங்களுக்குச் செல்லும் சூழல்களில் அவர்களுக்குப் போக்குவரத்துத் தடங்களிலும், அலுவலகங்களிலும், மேலும் அவர்கள் வசிக்கும் இடங்களிலும் பாலியல் தொல்லை ஏற்படுகிறது என்று பிரபஞ்சன் பதிவு செய்கிறார். சமூகத்தளத்தில் இத்தகைய பாலியல் தொல்லைகள் செய்யும் ஆண்களைப் பெண்கள் எதிர்க்க வேண்டும். அவர்களுக்கு அஞ்சிக் கோழைகளாக இருக்கக் கூடாது என்ற கருத்தையும் தனது நாவல்களில் எழுதியுள்ளார்.

பிரபஞ்சன் நாவலில் பெண்ணின் உடல் அமைப்பை அடிப்படையாக வைத்து பாலியல் நோக்குடன் பெண்ணைக் கேலி செய்யும் ஆணின் மன உணர்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## அடிக்குறிப்புக்கள்

1. வாசுகி ஜெயரத்தினம், பெண்ணியச் சுவடுகள், ப.41.
2. மேலது, ப.41.
3. வீ. நிர்மலாராணி, பெண்ணியத் திறனாய்வு, ப.2.
4. வாசுகி ஜெயரத்தினம், பெண்ணியச் சுவடுகள், ப.39.
5. மேலது, ப.39.
6. து. சரஸ்வதி, பெண்களும் சட்டமும், ப.20.
7. Women Awake Central Social Welfare Board, P.19. (ச. விஜயலெட்சுமி, தமிழ்க் கவிதைகளில் பெண்ணுரிமை, ப.121 என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது)
8. அரங்க மல்லிகா, தமிழ் இலக்கியமும் பெண்ணியமும், ப.116.
9. இராஜம் கிருஷ்ணன், ரோஜா இதழ்கள், ப.139.
10. பிரபஞ்சன், தீவுகள், ப.31.
11. பிரபஞ்சன், சந்தியா, ப.64.
12. மேலது, ப.65.
13. மேலது, ப.66.
14. மேலது, ப.67.
15. மேலது, ப.68.
16. மேலது, ப.69.
17. பிரபஞ்சன், பூக்கள் நாளையும் மலரும், ப.116.
18. அ.மங்கை, பெண்ணிய அரசியல், ப.40.
19. பிரபஞ்சன், 'தீயிலே வளர்சோதி', ப.49.
20. மேலது, ப.50.

Vol. 9 Special Issue 1 October 2024 E-ISSN: 2456-5571

# வாழ்வியல் நெறிகள்

**தகைசால் கவிஞன் அரிமா முனைவர் ச. அய்யர்**
*அரசு பள்ளி பட்டதாரி ஆசிரியர் (பணி நிறைவு)*
*125, அறிவாலயம், அமைதிச்சோலைநகர், திருநகர், மதுரை*

**முன்னுரை**

முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறைகளையும், வாழ்வில் நடந்த நிகழ்வுகளையும், அன்றைய சூழ்நிலையில் நிலவிய பருவகால மாற்ற முறைகளையும் பிறரும் தெரிந்து கொள்வதற்காக இலக்கியங்களை படைத்தனர். இதன் வாயிலாக நாம் வாழ்க்கை நெறிமுறைகளை நன்கு தெரிந்து கொள்ள முடிகிறது.

**சங்ககால மக்களின் வாழ்வியல் நெறிகள்**

சங்க கால மக்கள் இயற்கையோடு ஒன்றிணைந்து அன்பு வாழ்க்கையும், அறத்தோடு பொருந்திய புறவாழ்க்கையையும் வெளிக்கொண்டு வர உதவக்கூடியதாக திகழ்கிறது. சங்க இலக்கியங்கள், இக்கால மக்கள் இன்றைய சூழ்நிலையில் நிலவும் நிகழ்வுகளை வருங்கால சந்ததிகள் தெரிந்து கொள்வதற்காக இலக்கியங்களை படைத்துள்ளனர். சங்க கால மக்கள் அறநெறி தவறாமல், இல்லற வாழ்வில் இன்புற்றும், தன்நலனில் மட்டும் அக்கறை கொள்ளாமல் பிற நலனிலும் அக்கறை கொண்டுள்ளனர். காதல், வீரம், விருந்தோம்பல், அறம், இல்லறம் போன்றவைகளை வாழ்வியல் முறைகளாக கடைபிடித்து வந்துள்ளனர். கொடையிலும்சிறந்து விளங்கினர் என்பதை,

**"முந்தையிலிருந்து நாட்டோர் கொடுப்பின் நஞ்சும்**
**உண்பர் நனிநா கரிகாறர்"** (நற் 355:6.7)

என்னும் நற்றிணை வரிகள் மூலம் அறியலாம்.

சங்க கால மக்கள் நாட்டை பாதுகாத்து மட்டுமல்லாது, நட்பின் பெருமையை பற்றி பிற்கால மக்கள் தெரிந்து கொள்ள வழிமுறைகளை வகுத்துள்ளனர். விருந்தோம்பல் செய்வதில் சங்ககால மக்கள் மகிழ்வுடன் செய்து வந்துள்ளனர். இதையே

**"உண்பது நாழி: உடுப்பவை இரண்டே**
**பிறவும் எல்லாம் ஓர் ஒக்குமே"**

(புற 189: 5-6)

என்னும் புறநானூற்று பாடல் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

இல்லற வாழ்விற்கு கணவன் மனைவி ஒத்து அன்பும், அறமும் என்பதனை குறுந்தொகை பாடல் ஒன்று எடுத்துரைக்கிறது.

**"செம்புலப் பெயல் நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாங் கலந்தனயே"**

(குறு: 40)

இப்பாடல் அன்பின் அடையாளத்தை காட்டுகிறது.

**கற்றோர் காட்டும் கண்ணியம்**

மனித வாழ்விற்கு பணம், புகழ், செல்வாக்கு ஆகியவை மட்டும் போதாது ஒழுக்க நெறிகள் மட்டும் இருந்தால் வாழ்வில் வெற்றி அடையலாம்.

**"நின்னடை நின்நின்று அறிகிற்பார் இல்"**

(ப.நா.37, பக் 30)

என்னும் பழமொழிகள் மூலம் ஒழுக்கம் இல்லாதவர்களிடம் கூடி சேர்வதை விட்டு விலக வேண்டும். நல்ல குடியில் பிறந்தவரிடம் பழகி நட்பு பாராட்டுதல் வேண்டும். அவ்வாறு நடந்து கொண்டால் நம் குலப்பெருமையும் குடியும் உயரும்.

**தந்தை பெரியாரின் ஒழுக்கநெறிகள்**

நாம் பிறரிடத்தில் எதை எதிர்பார்க்கின்றோமோ, பிறர், நம்மிடத்தில் எதை செய்ய வேண்டும் என்று நினைக்கிறோமோ, பிறர் நம்மிடத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறோமோ, அதன்படியே பிறரிடத்தில் நாம் நடந்து கொள்ள வேண்டும். இதுவே ஒழுக்கமாகும். மேலும் ஒழுக்கம் என்பது தனிமனிதன் சொத்து அல்ல, சமூக சொத்து என்பதை,

**"பக்தி என்பது தனிச்சொத்து**
**ஒழுக்கம் என்பது பொதுச்சொத்து**
**பக்தி இல்லாவிட்டால் நட்டமில்லை-ஆனால்**
**ஒழுக்கம் இல்லாவிட்டால் எல்லாமே பாழ்"**

பக்தியை காட்டிலும் ஒழுக்கம் சிறந்தது என்பதை தெளிவாக சொல்லியுள்ளார்கள் தந்தை பெரியார் அவர்கள்.

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்"** (குறள்-131)

என்று வள்ளுவரும் உயிரைக் காட்டிலும் ஒழுக்கம் மேலானது என்றும் கூறியுள்ளார்.

**ஔவையின் அறநெறி கருத்துக்கள்**

அறம் என்பது பிறர் நலனில் அக்கறை கொள்வதாகும். பிறருக்கு செய்யும் உதவிகளை எதிர்பார்க்காமல் செய்தல் ஆகும்.

**“நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி**
**என்று தருங்கால் எனவேண்டா- நின்று**
**தளரா வளர்தெங்கு தான்உண்ட நீரை**
**தலையாலே தான்தழுத லால்”**

என்கிறார். நிலைபெற்று நின்று தளர்ச்சியில்லாமல் வளர்கின்ற தென்னை மரமானது, அடியில் உறிங்சிய நீரை, உச்சியில் இளநீராக கொடுக்கிறது. ஆதலால் ஒருவருக்கு ஓர் உதவி செய்யும்போது அவ்வுதவியின் பயனை என்றைக்கு திரும்ப தருவாரோ என்று எண்ணி உதவி செய்தல் கூடாது என்பதை வலியுறுத்துகிறார்.

**“நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம்**
**கல்மேல் எழுத்துப்போல் காணுமே-அல்லாத**
**ஈரமிலா நெஞ்சத்தார்க்(கு) ஈந்த உபகாரம்**
**நீர் மேல் எழுத்துக்கு நேர்”**

என்று கூறுகிறார்.

நல்லவர் ஒருவருக்குச் செய்த உதவியானது. கல்மேல் பொறிக்கப்பட்ட எழுத்தினைப் போல அந்த நல்லவரின் உள்ளத்தில் அழியாது நன்றியுள்ளவராய் நிலைத்து நிற்கும். நல்லவர் அல்லாத இரக்கமில்லா உள்ளம் கொண்டவர்களுக்கு செய்த உதவியானது. நீர் மேல் எழுதப்பட்ட எழுத்தில் போல நிலை கொள்ளாமல் உடனே அழிந்து விடும்.

**கல்லாதவர் நிலை**

கல்வி அறிவு பெற்றவர்களுக்குக் கிடைக்கும் பெருமையைப் பார்த்து, கல்வி அறிவு பெறாதவர்களும் பெருமை பெற விரும்பிச் செயல்பட்டால் அவர்களுக்கு பெருமை வந்து சேராது. இதனை உணர்த்தும் பாடல்

**“கான மயிலாட கண்டிருந்த வான்கோழி**
**தானும் அதுவாகப் பாவித்து, தானும்தன்**
**பொல்லாச் சிறைகைவிரித்து ஆடினாற் போலுமே**
**கல்லாதான் கற்ற கவி”**

கல்வியறிவு உள்ளவன் சமூக சிந்தனைகளைக் கொண்டு நல்ல அறிவு சார்ந்த புத்தகங்களை எழுதுவான். அறிவில்லாதவன் புத்தகம் எழுதினால் நல்ல கருத்துள்ள புத்தகமாகாது என்பதை ஔவை விளக்குகிறார்.

**பெண் கல்வி**

தமிழ் சமூகம் சிறக்க உடனடி தேவை கல்வி எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால் இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும் என்று பாடுவதோடு மட்டுமின்றி,

**“மலைவாழை அல்லவோ கல்வி? நீ**
**வாயார உண்ணுவாய் போ என் புதல்வி!**

என்று பாடுகிறார். குழந்தைகளுக்குப் பாடும் தாலாட்டில் அறிவை வலியுறுத்தி பாடல் பாடுகிறார்.

**“வேண்டா சாதி இருட்டு வெளுப்பதற்குத்**
**தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி”**

என்று பாடுகிறார். பெண்களின் அறியாமை இருள் அகல, மக்களை பேணி நோயின்றி வாழ அவர்களுக்கு கல்வி தேவை.

**“மகளிர் எல்லாம் கல்விஅறிவு ஒழுக்கம் உளராயின்**
**மருத்துவமே வேண்டாமா பிணிமூப்பு வாரா”**

என்று புரட்சிக்கவிஞர்கள் அவர்கள் பாடியுள்ளார்.

**முடிவுரை**

சங்ககல மக்கள் வாழ்வு நெறிகளை இலக்கியமாக பாடியுள்ளனர். இவ்விலக்கியங்கள் கற்றறிந்தோர் கற்று, நல்ல கருத்துக்களை, சமகால மக்கள் வாழ்நெறிகளை கடைபிடித்து, வாழ வேண்டும் என்று பல படைப்புகளை படைத்துள்ளனர். இப்படைப்புகளின் வாயிலாக நாமும் நன்கு கற்று வருங்கால சமுதாயத்திற்கு நல்ல வழிமுறைகளை வகுத்துக் கொடுத்து வழிவிட்டு வாழ்வோம்.

**“அறங்களை விதைப்போம்**
**நல்ல விளைச்சலை பெறுவோம்**
**வாருங்கள் அறம் செய்ய தோழர்களே!”**

**துணை நூற்பட்டியல்**


1. புலியூர் தேசிகன்-ஐங்குறுநூறு, ராம் பிரகாரம், 18.∵171, பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை-600 001
2. நீலகண்ட பிள்ளை – “சங்கத்தமிழர் வாழ்வியல்” செம்மூ தாய் பதிப்பகம், 14 தாகூர் தெரு, சிட்லபாக்கம், சென்னை-
3. தமிழ்ப்பிரியன் இளமுனைவர், பழமொழி நானூறு மூலமும், உறையும், கற்பகம் புத்தகாலயம், 4-2, சுந்தரம் தெரு, தியாகராய நகர், சென்னை.
4. ஔவையாரின் மூதுரை
5. பாரதிதாசனின் படைப்புகளில் பல
6. உ.வே.சா. (பா.ஆ) குறுந்தொகை மூலமும், உறையும், உ.வே.சா நூல் நிலையம் சென்னை-2002
7. சி. பாலசுப்பிரமணியன், சங்ககால மகளிர், பாரி நிலையம், சென்னை.
8. தந்தை பெரியாரின் பொன்மொழிகள்

# சித்தியார் காட்டும் வாழ்வியல் நெறிகள்

**முனைவர் சி. அற்புதராணி**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*யாதவர் கல்லூரி, மதுரை*

சிவபெருமானை முழுமுதற் கடவுளாக கொண்டு வழிபடும் சமயம் சைவம். சைவ சமயம் உயிர்களை ஈடேற்றம் செய்த பொருட்டு அறிவுறுத்திய நெறிகள் இரண்டு. அவை அன்பு நெறி அறிவு நெறி என்பன. அன்பு நெறிப்பட்ட நூல்கள் தோத்திரங்கள். அறிவு நெறிப்பட்ட நூல்கள் சாத்திரங்கள். தோத்திரங்கள் பன்னிரண்டு என்றும் சாத்திரங்கள் பதினான்கு என்றும் கூறுவர். பதினான்கு சாத்திரங்களில் ஒன்றான சிவஞான சித்தியார் காட்டும் அற நெறிகள் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**சிவஞான சித்தியார்**

சிவஞானபோதத்தை இயற்றிய மெய்கண்ட தேவரின் மாணவராகிய அருணந்தி சிவாச்சாரியார் எழுதிய சிவஞான சித்தியார் சிவஞான போதத்தின் வழி நூலாகும். இந்நூலில் சைவ சித்தாந்தத்துடன் முரண்படுகின்ற புறச்சமயக் கொள்கைகளை மறுத்துச் சித்தாந்தக் கொள்கைகளை நிலை நாட்ட முயலும் பரபக்கம் என்னும் பகுதியும், சிவஞானபோதத்தின் 12 சூத்திரங்களை பன்னிரண்டு அத்தியாயங்களாக விரித்து எழுதப்பட்ட பரபக்கம் எனும் பகுதியும் கொண்டது. 629 பாடல்களால் ஆனது.

**வாழ்வியல் நெறிகள்**

உயிர்கள் தாம் ஈட்டிய வினைகளில் இருந்து நீங்கி இன்புறுவதற்கு மேற்கொள்ள வேண்டிய தவ நெறிகளாக சைவ சமயம் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கினைக் கூறும். இதனை நாற்பதம் எனவும் நாற்பத நெறிகள் எனவும் கூறுவர். இந்நால்வகை நெறிகளைப் பின்பற்றுவதற்கு முன் உயிர்களிடம் பொதுவாக சில ஒழுக்க நெறிகள் இருத்தல் வேண்டும். அவற்றை வாழ்வியல் நெறிகள் என்பர். இதனை சிவஞான சித்தியார்,

> **"ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவு சீலம்**
> **வழுக்கு இலாத் தவம் தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை**
> **அழுக்கு இலாத்துறவு அடக்கம் அறிவொடு அர்ச்சித்தல் ஆதி**
> **இழுக்கு இலா அறங்களானால் இரங்குவான் பணி அறங்கள்"**[1]

என்னும் பாடலில் குறிப்பிட்டு, இப்பதினாறு பேறுகளும் ஒருவனுக்கு உளவாயின் இறைவன் அவற்றைத் தன் பணி என ஏற்று அருள் புரிவான் என்கிறது இவை, இல்லறம் துறவறம் எனும் இரு நிலைகளிலும் நின்று இறைவழிபாட்டை மேற்கொண்டு ஒழுகுபவர்களுக்கு உரியதாகும். இறைவன் இவ்வற நெறிகளாகவும் அவற்றை அறிவித்தவனாகவும் உள்ளான் என்பதை அப்பர்,

> **"பிற நெறியாய் பீடாகிப் பிஞ்ஞகனுமாய்ப் பித்தனாய் பத்தர் மனதில் உள்ளே**
> **உறநெறியாய் ஓமமாய் ஈமக்காட்டில் ஓரிபல விடநட்ட மாடினானைத்**
> **துறநெறியாய்த் தூபமாய்த் தோற்றமாகி நாற்றமாய் நன்மலர் மேலுறையா நின்ற**
> **அறநெறியை ஆரூரில்லம்மான் தன்னை அறியாதடி நாயேன் அயர்த்த வாரே" (6-29-5)**

எனும் ஆரூர்த் தாண்டகத்தில் தெளிவுபடுத்துவதால் அறியலாம்.

1. **ஒழுக்கம்**

> **"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
> **உயிரினும் ஓம்பப் படும்"(திருக்குறள் - 131)**

என்பது அய்யன் திருவள்ளுவரின் வாக்கு. ஒரு மனிதன் 16ம் பெற்று பெருவாழ்வு வாழ அடிப்படையாக அமைய வேண்டிய குணம் ஒழுக்கமாகும். வீட்டிற்கு அடித்தளம் எவ்வாறு முக்கியமோ அதைப் போல் மனித வாழ்க்கைக்கு அடிப்படையாக விளங்குவது ஒழுக்கம். 63 நாயன்மார்களுள் திருநீலகண்ட நாயனார் எப்படியும் வாழலாம் என்று வாழ்ந்த வாழ்வைப் புறந்தள்ளி 'எம்மைத் தீண்டாதீர்' திருநீலகண்டத்தின் மீது ஆணை என்று தன் மனைவியார் இட்ட கட்டளை ஆண்டவன் இட்ட ஆணையாகக் கருதிப் பிற எந்த ஒரு பெண்ணையும் தீண்டாது வாழ்ந்த ஒழுக்க நெறியினை உலக மக்களுக்கு உணர்த்த இறைவன் தோன்றினான் என்றும், அவ்விறைவன் நாயனாரது ஒழுக்க நெறி தவறாத தன்மையை உலகிற்கு உணர்த்தியதோடு நாயனாரையும் அவரது மனைவியையும் இளமையாக்கி ஆட்கொண்டான் என்ற செய்தியினையும் பெரியபுராணத்தின் வாயிலாக அறியலாம்.

2. அன்பு

மனிதனுக்கு இயல்பாக அமைந்திருக்கும் பண்பு நலன்களில் தலையாயது அன்பு. அன்பே ஒருவனைப் பிற உயிர்களிடமிருந்து உயர்த்திக் காட்டும். அன்பே அனைத்து உயிர்களையும் பிணைக்கும் கயிறாகும். உலக உயிர்கள் அனைத்தும் அன்பிற்கே ஏங்குகின்றன. அன்புள்ளம் கொண்டோர் நெஞ்சில் இறைவன் குடி கொள்வான். அன்பே சிவம் இதனை உணர்ந்தால் சிவமாகலாம் என்பதைத் திருமூலர்,

**"அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்**
**அன்பே சிவமாய் அமர்ந்து இருந்தாரே"**[2]

என்று அருளிச்செய்கிறார். காளத்தி மலையில் உள்ள குடுமித் தேவரை வேடனாக இருந்த திண்ணனார் அன்போடு வழிபட்டுக் கண்ணப்பரான செய்தியைப் பெரியபுராணத்தின் வழி அறியலாம்.

3. அருள்

அன்பும் அருளும் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றுவதாகும். தொடர்புடையவரிடத்து தோன்றும் அன்பு தொடர்பில்லாதவரிடத்து அருளைத் தோற்றுவிக்கும். தொடர்பு இல்லாதவரிடத்து ஏற்படும் அருள் பின் அவருடன் நெருங்கிப் பழக அன்பாக நட்பாக மாறுகிறது. இதனை,

**"அருள் என்னும் அன்பின் குழவி"**
**"அருள் கருதி அன்புடைய ராதல்"**
**"கண்ணிற்கு அணிகலன் கண்ணோட்டம்"**
(திருக்குறள் - 757, 285, 575)

என்றெல்லாம் குறிப்பிடுகிறது வள்ளுவம்.அருள் என்பதற்கு இரக்கம், கருணை என்றும் பொருள் கூறுவர், ஒருவரிடத்தில் மற்றவருக்காக நிகழும் கருணை அருளாகும். உலக உயிர்கள் அனைத்தும் இறைவனின் அருளைப் பெறுவதற்காகவே ஏங்குகின்றன.

**"கரும்பு பிடித்தவர் காயப்பட்டார் அங்கோர்**
**கோடரியால் இரும்பு பிடித்தவர் இன்புறப்பட்டார்…."**
(4-5-3)

எனும் அடிகளில் கரும்பைக் கையில் கொண்ட மன்மதனின் செயல் கண்டு வெகுண்டு சாம்பலாக்கிய இறைவனது மறக் கருணையும், இரும்பைக் (கோடாரி) கொண்டு சண்டேஸ்வரர் செய்த தந்தையைக் கொல்லுதலாகிய செயல்கண்டு அவரை விரும்பி அறக்கருணை புரிந்து சண்டேஸ்வரர் பதவி கொடுத்த சிறப்பினையும் உணர்த்துவதை அறியலாம்.

4. ஆசாரம்

ஆசாரம் என்பதற்கு விதித்தன செய்யும் வாழ்க்கை முறை என்பது பொருள். மனித வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளுக்கு ஆசாரம் என்று பெயர். ஆசாரம் என்பதற்கு ஒழுக்கம் என்பதும் பொருளாகும். இதைச் செய்யலாம் இதைச் செயலாகாது போன்ற நல்லொழுக்கங்களும், உள்ளும் புறமும் தூய்மையாக இருப்பதும் தான் ஆச்சாரங்களாகும்.

**"இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"**
(திருக்குறள் - 100)

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப, அப்பர் பெருமானும்

**"கொய்யுலாம் மலர்ச்சோலைக் குயில் கூவ மயிலாடும் ஆரூராரைக் கையினால் தொழா தொழிந்தே கனியிருப்பக் காய்கவர்ந்த கள்வனேனே"**(4-5-1)

எனும் திருப்பாடலில் நல்லொழுக்கமுள்ள மக்களோடு நட்பு பாராட்டுதல் வேண்டும் என்ற ஆச்சாரங்களை விளக்குவதைச் சான்றாகக் கூறலாம்.

5. உபசாரம்

உபசாரம் என்பதற்கு உதவி என்பது பொருள். தக்கோர் இடத்தில் செய்யும் செயலைக் குறிக்கும். ஒருவருக்குத் துன்பம் துயரம் எனில் அவர் வேண்டுதற்கு முன்பே ஓடிப்போய் அவற்றை துடைத்து, ஆறுதல் பெறச் செய்வதும், துன்பம் நீங்கப் பெற்றவர் தம் துயரத்தைப் போக்கியவரிடம் நன்றி மறவாமல் இருப்பதும், தமக்கு யாரும் எவ்வித உதவியும் செய்யாமல் இருக்க, அவர் ஒருவரது துன்பத்தைக் கண்டு அதனைப் போக்குதலும் செய்யாமல் செய்த உதவியாகும் அதற்கு ஈடாக எப்பொருளைக் கொடுத்தாலும் நிகராகாது என்பதனை,

**"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது"**
(திருக்குறள் - 101)

என்கிறார் வள்ளுவர்.

**"சொல்லிற் குலாவன்றிச் சொல்லேன் தொடர்ந்தவர்க்கும் துணையல்லேன் கல்லில் வலிய மனத்தோன்……"** (7-73-3)

எனும் அடிகளில் சுந்தரர் தன்னைத்தானே பெருமைப்பட்டுக் கொள்வதில் வல்லவனாகவும், தன்னைச் சார்ந்த உறவினர்களுக்கும் உதவாதவனாகவும் இருந்தேன். இக்கூற்றானது பிறருக்கு உதவும் குணம் ஒவ்வொருவருக்கும் வேண்டும் என்பதையும்

அக்குணம் உள்ளவரே இறைவனால் ஆட்கொள்ளப்படுவர் என்பதையும் வலியுறுத்துவதைக் காணலாம்.

### 6. உறவு

உறவு என்பதற்குப் **"பொருத்தம், சேர்க்கை, சம்பந்தம், சுற்றம், நட்பு, ஒற்றுமை, விருப்பம், எல்லோரிடத்தும் கொள்ளும் நல் உறவு"**[3] என்றெல்லாம் தமிழ் அகராதி பொருள் கூறுகின்றது. உறவு உண்டாக அன்பே அடிப்படையாகும். அன்புடன் கூடிய அருள் நிறைந்த பார்வையே நட்பாகிய உறவு ஏற்படுவதற்கு அடிப்படையாக அமையும். இதனை வள்ளுவர்,

> **"அன்புஈனும் ஆர்வமுடைமை அது ஈனும்**
> **நண்பெண்ணும் நாடாச் சிறப்பு"**
> **(திருக்குறள் - 74)**

என்கிறார். சைவ உலகில் இறைவனிடம் தந்தை, தாய், தோழன், குரு எனும் உறவுகள் கொண்டாடியவர்களாக சமயக்குரவர்களாகிய நாயன்மார்கள் போற்றப்படுகிறார்கள். பாரதியாரும் கண்ணனைக் காதலன், காதலி, தந்தை, தோழன், குழந்தை, சீடன், சேவகன், அரசன், சத்குரு, குலதெய்வம் எனப் பல உறவு நிலைகளில் வைத்துப் பாடியுள்ளார்.

### 7. சீலம் எனும் பண்புடைமை

சீலம் என்பதற்கு நல்லொழுக்கம், நற்பண்புடைமை, நல்லுணர்வு, சான்றாண்மை என்றெல்லாம் பொருள் உரைப்பர். பண்புடைமை என்ற சொல்லுக்கு பரிமேலழகர், **"பெருமை சான்றாமைகளில் தாம் வழுவாது நின்றே எல்லா இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்"**[4] என்று உரை எழுதியுள்ளார். எனவே தான் கலித்தொகையும் பண்பு என்பதற்கு உலகம் அறிந்து ஒழுகும் தன்மை, **"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்"**[5] என்று உணர்த்துகிறது. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை முதலிய பல குணங்களாலும் நிறைந்து அப்பண்புகளையே உலக வாழ்க்கையில் பயன்படுத்தும் நன் மக்களது இயல்பினைச் சான்றாமை என்பர். இறையடியார்கள் மேற்கொண்ட நற்குணங்களை அவர்களுக்கு இறைவனை நல்லருள் புரியச் செய்தன. இதனையே, **"இல்லையே எண்ணாத இயற்பகை", "திருநின்ற செம்மையே செம்மையாய்க் கொண்ட திருநாவுக்கரையன்", "பொய்யடிமையில்லாப் புலவர்","சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்"** (7-39-1, 4, 7, 11) எனும் சுந்தரர் வாக்குகள் விளக்குகின்றன.

### 8. வழுக்கு இல்லா தவம்

தவம் என்பதற்கு தனக்குள் மறைந்துள்ள பொருளைக் காணும் முயற்சி, உலகப்பற்றை விடுத்து மெய்ப்பொருளை அடையும் முயற்சி, ஞானத்தை அடையச் செய்யும் முயற்சி எனப் பலவாறும் பொருள் கூறுவர். வழுக்கு இலாத்தவம் என்பது ஒருபோதும் வழுவாத ஐம்பொறி அடக்கலாகிய தவம் என்பதாகும். தவம் என்பதற்குப் பரிமேலழகர்,

> **"மனம் பொறிவழி போகாது நிற்றல் பொருட்டு விரதங்களால் உண்டி சுருக்கலும், கோடைக்கண் வெயில் நிலை நிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு அவற்றால் தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்து பிற உயிர்களை ஓம்புதல், புலால் மறுத்து உயிர்கள் மேல் அருள்முகத்துடன் நடத்தல் என்பனவே தவம்"**[6]

என்கிறார்.

தேர்ச்சி இல்லாதவன் ஓட்டும் தேர் ஒழுங்காக ஓடாது. அதுபோல ஐம்புலன்களையும் அறிவால் அடக்கிக் காக்காதவன் செய்யும் தவமும் ஒரு நெறியில் நிலைக்காது என்பதை,

> **"உய்வினை யொருவன் துண்டாதுலத்தலின் தவத்தை**
> **நண்ணி ஐவினை நலிய நைவான வறிவிற்கு உவமையாகி மெய்வினை**
> **அமைந்த காமம் விற்கின்ற விறகில் தோலாப் பொய்வினை மகளிர்**
> **கற்பும் போன்றதப் பொலம் போற்றிண்டோ"**[7]

என்ற கம்பராமாயணப் பாடல் வழி அறியலாம்.

### 9. தானம்

தகுதி உடையோருக்கு மகிழ்வோடு அளிக்கும் கொடை தானமாகும். தானம் என்பதற்கு கொடை, ஈகை, அறம் என்றும் பொருள் கூறலாம். ஈகை என்பது உள்ளதைப் பிறருக்கு கொடுத்தலே ஆகும். நிறைவான மனதுடன் வலக்கை கொடுப்பதை இடக்கை அறியாது ஏழைகளுக்கும், திக்கற்றவர்களுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும் கொடுப்பதுதான் ஈகை. ஏழைகளுக்கு இறங்குகிறவன் கடவுளுக்குக் கடனாகக் கொடுக்கிறான் என்று நீதிமொழிகள் ஈகை பற்றி கூறுகின்றன. மெய்ப்பொருள் நாயனார் அரசியலில் தாம் ஈட்டிய பொருள்களை எல்லாம் சிவனடியார்களுக்கு வாரி வழங்கி ஈகைப் பண்புமிக்கவராக காணப்பட்டதைச் சேக்கிழார்,

**"தேடிய மாடுநீ செல்வமும் தில்லை மன்றுள் ஆடிய பெருமான் அன்பர்க்கு ஆவண ஆகுமென்று நாடிய மனத்தினோடு நாயன்மார் அணைந்த போது கூடிய மகிழ்ச்சி பொங்க குறையறக் கொடுத்து உவந்தார்"**[8]

என்று குறிப்பிடுகின்றார்.

அப்பர் பெருமானும் இறைவனே ஈகைக் குணம் உடையவன் என்பதை,**"இந்திரத்தை இனிதாக ஈந்தார் போலும்"** (6-28-8) என்றும், தாயுமானவர், **"தானம் தவம் தருமம் சந்ததமும் செய்வர் சிவஞானம் தனை அடைய நல்லோர் பராபரமே"**[9] எனும் அடிகளில் தானம் தவம் தர்மம் இவற்றை செய்ய வல்லவர் சிவஞானத்தைப் பெறுவார் என்றும் கூறுவதால் அறியலாம்.

## 10. வந்தித்தல்

வந்தித்தல் என்பதற்கு மதித்தல். வாழ்த்தல், போற்றல், புகழ்தல் என்றெல்லாம் பொருள் கூறுவர். தன்னைவிடப் பெரியவர் இடத்தில் செய்யும் வழிபாடாகும். ஒவ்வொரு மனிதனும் மன்னர், ஆசிரியர், பெற்ற தாய், தந்தை, உடன் பிறந்தார், மூத்தோர், இறையடியார் முதலான சான்றோர்களையும் பெரியோர்களையும் கடவுளைப் போன்று போற்றித் தொழுதலே வந்தித்தல் என்ற சிறந்த பண்பாகும். நமக்கு எல்லா நலங்களையும் தருபவன் இறைவன். நமது வாழ்விற்கு முதலாக இருக்கும் அவனை வாழ்த்தாத வாழ்வு வாழ்வாகாது. அதனால்தான் மணிவாசகரும் திருப்பள்ளி எழுச்சி முதல் பாடலில், **"போற்றி என் வாழ்முதலாகிய பொருளே"**[10] என்று போற்றுகின்றார். அப்பர் பெருமானும், **"கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி"** (6-32-1) என்று தொடங்கி போற்றித் திருத்தாண்டகம் பாடுகிறார். **"அடல் விடையாய் ஆரமுதே ஆதி என்றும் ஆரூரா என்றென்றே அலறா நில்லே"** (6-31-1) என்று ஆரூரானை வாழ்த்துவதால் கிடைக்கும் பயன்களாக, உலகியலை நினையாது இறைவனது அருள்நிலையையே நினைந்து சொல்லியும் பணிந்தும் வாழ்த்தியும் ஒழுகுபவருக்கு துன்பங்கள் ஒழியும் என்றும் குறிப்பிடுகிறார்.

## 11. வணங்கல்

வணங்கல் என்பது வழிபடுதலைக் குறிக்கும். வணங்கல் என்ற சொல்லிற்கு **தமிழ் அகராதி வழியிற் செல்லுகை (Proccessing on the way), பின்பற்றுகை (Following), வணக்கம் (Rever-ence, adoration)** என முப்பொருள் பகரும். **தற்காலத் தமிழ்ச்சொல் அகராதி 'வழிபாடு' என்னும் சொல்லிற்கு வணக்கம், கோட்பாடு என இரு பொருள் தருகிறது.**[11] இதன் வழி வணக்கம் என்பதற்கு வழிபாடு என்பதே பொருள் என்றும், வழிபாடு என்ற சொல்லிற்கு வணங்கல் என்பதே பொருள் என்றும் உணரலாம். இறைவனையும் இறைஅடியார்களையும் வழிபடுவதால் கிடைக்கும் பயன்கள் பலவாகும். மானுடப்பிறவி எடுத்ததன் பயனை இறை வழிபாட்டினாலேயே பெற முடியும் என்பர். இறைவனை மலர்கள், தீபம், தூபம் கொண்டு வழிபட வினைகள் அகன்றோடும் என்பர் அருளாளர்கள். இதற்கு,

**"வெய்யவினைதீர ஐயனணியாரூர் செய்ய மலர் தூவ வையம் உமதாமே"** (1-91-7),

**"நறுமலர் பூவும் நீரும் நாள்தோறும் கொண்டு வணங்குதல்"** (7-8-3)

எனும் அடிகளைச் சான்றாகக் கூறலாம்.

## 12. வாய்மை

வாய்மை என்பதற்கு உண்மை, மெய்மை, பொய்கூறாமை, நேர்மைத்தன்மை என்றெல்லாம் பொருள் கூறுவர். அறங்கள் யாவிலும் மேலான அறம் பொய் பேசாமையே என்பதை, **"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற"** (திருக்குறள் - 297) **"வாழ்தல் வேண்டின் பொய் கூறேன் மெய்கூறுவல்"**[12] என்ற இலக்கிய அடிகள் எடுத்து இயம்புகின்றன. மனம் தூய்மை அடைவதற்கு இன்றியமையாத நன்னீராய் அமைந்து மெய்ப்பொருளாகிய இறைவனைச் சிந்திப்பதற்குத் துணையாகவும் இருப்பது வாய்மை ஒழுக்கமே என்பதை,

**"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக....."**(4-76-4)

என்றும்,

**"பொய் அஞ்சி வாய்மைகள் பேசிப் புகழ்புரிந்தாருக்கு அருள் செய்வான்"** (4-4-10)

என்றும் நாவுக்கரசர் தம் பதிகத்தில், வாய்மையின் தூய்மையையும், பொய் பேச அஞ்சி உண்மை பேசுபவர்களுக்கு ஆரூர்ப் பெருமான் அருள் புரிவார் என்பதையும் கூறுவதால் வாய்மையின் சிறப்பை உணரலாம்.

## 13. வழுக்குஇலாத் துறவு

துறவு என்பதற்கு உலகத்தின் மீதும் உலகப் பொருள்கள் மீதும் உள்ள ஆசையை விட்டு விடுவது என்பது பொருளாகும். அதாவது உலகத்தின்

நிலையாமையை உணர்ந்து யான் எனது எனும் இருவகைப் பற்றையும் விட்டு மெய்யுணர்வில் ஒழுகுவதாகும். பரிமேலழகர் துறவு என்பதற்குப் **"புறமாகிய செல்வத்தின் கண்ணும் அகமாகிய உடம்பின் கண்ணும் உள்ள பற்றினை அவற்றினது நிலையாமையை நோக்கி விடுதல்"**[13] என்று விளக்கம் தருகின்றார். தொல்காப்பியர் தலைவனும் தலைவியும் தாம் ஒழுகிய இல்லற நிலையில் மக்கட் பேறு முதலியன வாய்க்கப் பெற்று, அனுபவம் முதிர்ந்து அதனில் வெறுப்பு வரும் காலத்தில் வீட்டின்பம் பெறுவதற்கு வழியாகிய துறவற நிலைகளை அடைந்து அந்நெறிகளில் அவ்விருவரும் ஒழுக வேண்டும் என்பதை,

**"காமம் சான்ற கடைக்கோட் காலை**
**ஏமஞ் சான்ற மக்களோடு துவன்றி**
**அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"**[14]

என்கிறார்.

உயிர்கள் பிறப்பு, இறப்பு ஆகிய இரண்டினின்றும் நீங்குவதற்கு துறத்தலாகிய தவநெறி இன்றியமையாதது என்பதனை,

**"கட்டுநீத்தவர்கட்கு இன்னருளே செய்யும் திட்டர்"** (5-85-1)

என்று அப்பர் தேவாரமும்,

**"அறவன் பிறப்பிலி ஆருமிலாதான்**
**உறைவது காட்டகம் உண்பது பிச்சை**
**துறவனும் கண்டீர் துறந்தவர் தம்மைப்**
**பிறவியறுத்திடும் பித்தன் கண்டீரே"**[15]

என்று திருமந்திரமும் துறவின் சிறப்பை உணர்த்தித், துறந்தவர்களே சிவப்பேற்றிற்கு உரியராதலையும் விளக்குகின்றதைக் காணலாம். இறைவன் துறவு நெறியினை வழங்குபவனாகவும் அந்நெறியாகவே விளங்குபவனாகவும் உள்ளான் என்பதை, **"துறநெறியாய் தூபமாய்த் தோற்றமாகி"** (6-29-5) எனும் அப்பர் தேவார அடியின் வாயிலாக உணரலாம்.

### 14. அடக்கமுடைமை

மனம், மொழி, மெய்களைத் தீநெறியில் செலுத்தாது அடக்கி ஆண்டு நன்னெறியில் செலுத்துதலே அடக்கமாகும். தீய சொற்களையும் பிறர்மனதைப் புண்படுத்தும் வன்சொற்களையும் சொல்லாது பயனுடைய நல்ல சொற்களைச் சொல்லும்படியாக நாவை அடக்கி ஆளுதலே மெய்யடக்கமாகும் எனும் கருத்துக்கள் அடக்கமுடைமையின் சிறப்பை விளக்கும். ஐம்புலன்களை வென்ற அறவோர்களின் பெருமையினை,

**"ஐந்து புலன்களைக் கட்டவர் போற்ற அந்தண் புகலி நிலாவிய புண்ணியனே"** (1-4-8),
**"புலன்கள் தமை வென்றார் புகழவர்புலன் தாங்கி ஐம்புலனும் செற்றார் வாழும் பூம்புகலி"** (1-16-8)

எனவரும் திருஞானசம்பந்தர் வாய்மொழிகள் இனிது விளக்கு விளக்கும்.

### 15. அறிவுடைமை

அறிவுடைமை என்பதற்கு உண்மை அறிவுடையனாதல் என்பது பொருளாகும். மனிதனை உயர்வு உடையவன் ஆக்குவது அறிவு. நல்லறிவு ஒருவனை எல்லா இன்பங்களை எய்திடவும், துன்பங்களிலிருந்து காத்திடவும் செய்யும். மக்களின் அறிவு வளர்ச்சிக்கு உதவும் கருவி கல்வியாகும். ஒட்டுமொத்த மனிதனிலிருந்து சான்றோன் ஆக்குவது கல்வி. **"அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்"**[16] எனும் கலித்தொகை அடி அறிவு என்பதனை அறியாதார் தன்னைப் பார்த்துச் சொல்லும் சொல்லைப் பொறுத்துக் கொள்ளுதல் என்கிறது. உலக உயிர்கள் அனைத்தையும் அறிவின் அடிப்படையில் பகுத்துள்ளார் தொல்காப்பியர். மனிதனுக்கு ஆறாவது அறிவு பகுத்தறிவு என்பதையும், அவ்வறிவால் மனிதன் பிற உயிர்களிடமிருந்து வேறுபடுகின்றான் என்பதும் தொல்காப்பியர் கருத்தாகும். வள்ளுவரும்,

**"அறிவு உடையோர் எல்லாம் உடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர்"**

(திருக்குறள் - 430)

எனும் குறளில் அறிவுடையவர்கள் பொருள் அற்றவராக இருப்பினும் அவர்கள் தான் பெற்ற அறிவின் காரணமாகஎல்லாம் உடையவர்கள் ஆவர் என்கிறார். அறிவு பெற்றதன் பயன் அறம் கனிந்த நெஞ்சுடையாரே ஆசை, சினம், வெறுப்பு முதலிய தீய குணங்களிலிருந்து விடுபடுதலே என்பதை அப்பர்,

**"அறத்தையே புரிந்த மனத்தனாய் ஆர்வச்செற்றக் குரோதம் நீக்கியபின் திறத்தனாய் ஒழிந்தேன் திருவாரூர் அம்மானே"** (4-20-8)

எனும் பாடலில், அப்பர் ஆசை, குரோதம் நீங்கிய மனத்துடன் இறைவனை வணங்கினால் வீடுபேறாகிய ஞானத்தை இறைவன் வழங்குவான் என்பதை நுட்பமாக உணர்த்தியுள்ளதைக் காணலாம்.

### 16. அர்ச்சித்தல்

அர்ச்சித்தல் என்பதற்குப் போற்றுதல், அர்ச்சனை செய்தல், வழிபடுதல், மதித்தல் என்றெல்லாம் பொருள் கூறுவர். இறைவனது பெருங்கருணையை

உயிர் நினைந்து நினைந்து கசிந்து உருகப் பாடும் நிலை அருச்சனை (அர்ச்சித்தல்) எனப்படும். இறைவன் இறைவியது கோடித் திருநாமங்களைக் கூறி அர்ச்சிப்பதால் கிடைக்கும் பயன் அளவிற்கு அறியதாகும். **"பேராயிரம் பாடி வானோர் ஏத்தும் பெம்மான்" என்றும், "ஆயிரம் தாமரை போலும் ஆயிரஞ் சேவடியானும்" (4-4-8)** என்றும் தொடங்கும் பாடலில் அப்பர் பெருமான் போற்றுவதைக் காணலாம். அருச்சனை பாட்டேயாகும் ஆதலால் நம்மை மண்மேல் சொற்றமிழால் பாடுக என்று இறைவன் பணித்தபடியே ஆரூரர் ஆகிய சுந்தரர் பாடிய பாடல்கள் அனைத்தும் அர்ச்சனை என்று கொள்ளத் தக்கனவாகும்.

> **"நாமாறா துன்னையே நல்லன சொல்லுவார்**
> **போமாறென் புண்ணியா புண்ணிய மானவனே**
> **போய்மாறப் பிணமிடு காடுகந் தாடுவாய்க்**
> **காமாறென் பரவையுண் மண்டளி அம்மானே"**
> (7-96-3)

எனும் பாடல் ஆரூர் பரவையுண்

மண்டளிப் பெருமானை சுந்தரர் அர்ச்சித்ததாகும்.

இவ்வற நெறிகள் அனைத்தும் மரமாக நிற்க மரத்திற்கு இலை, தழை, கிளை தண்டுகளாக அமைவதற்கு இறைவன் திருவருளே வேராய் நிற்பதாகும். இதற்கு,

> **"காண்பவன் சிவனே ஆனால் அவன் அடிக்கு அன்பு செய்கை**
> **மாண்பு அரன்றன்பாதம் மறந்துசெய் வினைகளெல்லாம்**
> **வீண்செயல், இறைவன் சொன்னவிதி அறம் விருப்புஒன்று இல்லான்**
> **பூண்டனன் வேண்டல் செய்யும் பூசனை புரிந்துகொள்ளே"**

என்றும்,

> **"அரனடிக்கு அன்பர்செய்யும் பாவமும் அறமதாகும்**
> **பரனடிக் கன்பிலாதார் செய்புண்ணியமும் பாவமாகும்**
> **வரம்உடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை ஆகி**
> **நரரினில் பாலன் செய்த பாதகம் நன்மை ஆய்த்தேகும்"[17]**

என்னும் சித்தியார் பாடல்கள் சான்றாக அமைவதைக் காணலாம். எத்துணைப் புண்ணியச் செயல்கள் ஆனாலும் அவை இறையருளில் அழுந்தி இறை அன்புடன் செய்யும் பொழுதே அறங்களாகி உயிருக்கு உறுதி தருவனவாகின்றன என்பதை உணரமுடிகிறது.

**நிறைவாகச் சில**

அற நெறிகளைப் பின்பற்றிய உயிரானது வீடு பேற்றினை விரும்பும் தன்மையினைப் பெறும். அத்தன்மை பெற்ற உயிர்களுக்கு இதுவே நன்னெறி இதுவே நன்னெறி என்பதை இறைவன் உள்நின்று உணர்த்துவான். சிவமாகிய இறைவனால் உணர்த்தப் பெற்ற நெறிகளே தவ நெறிகள் ஆகும். அத்தவ நெறிகளைப் பின்பற்றி இறை அருளைப் பெறுவதே ஒவ்வொரு மனிதனின் கடமையாகும்.

**அடிக்குறிப்புகள்**

1. சிவஞான சித்தியார், பா.113
2. திருமந்திரம், பா.270
3. தமிழ் அகராதி, ப.180
4. திருக்குறள், பரிமேலழகர் உரை, ப.436
5. கலித்தொகை, நெய்தல், 16
6. திருக்குறள், பரிமேலழகர் உரை, ப.133
7. கம்பராமாயணம், யுத்தகாண்டம், 3101
8. திருத்தொண்டர் புராணம், பா.470
9. தாயுமானவர் பாடல்கள், பராபரக்கண்ணி, 158
10. திருவாசகம், திருப்பள்ளியெழுச்சி, பா.1
11. தற்காலத் தமிழ் அகராதி, ப.114
12. புறநானூறு, பா.139
13. திருக்குறள், பரிமேலழகர் உரை, ப.168
14. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா.190
15. திருமந்திரம், பா.1595
16. கலித்தொகை, நெய்தல், 133
17. சிவஞான சித்தியார், பா.117, 119

Vol. 9 Special Issue 1 October 2024 E-ISSN: 2456-5571

# புலம்பெயர் தமிழ்க் கவிதைகளில் இலங்கைத் தமிழர் வாழ்வியல்

**அ. அழகுராஜா**

*முனைவர் பட்ட ஆய்வாளர், இலக்கியத் திறனாய்வியல் துறை*
*தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை*

**முனைவர் உ. கருப்பத்தேவன்**

*நெறியாளர், உதவிப்பேராசிரியர் (ம) தலைவர் (பொ)*
*இலக்கியத் திறனாய்வியல் துறை, தமிழியற்புலம்*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை*

## முன்னுரை

புலம்பெயரும் இலங்கைத் தமிழர்கள், அடைக்கலம்புகும் நாடுகளில் பல்வேறு துன்பங்களை எதிர்கொள்கின்றனர். இதற்கு முக்கியக் காரணமாக அமைந்த இலங்கையின் இனவெறிப்போரினை மையமா வைத்துப் படைக்கப்பட்ட ஸி.வி.வேலுப்பிள்ளையின் ‘‘தேயிலைத் தோட்த்திலே’’ என்னும் கவிதைத் தொகுப்பு நூல் மற்றும் சக்கரவர்த்தியின் ‘யுத்தசன்யாசம்’ என்னும் கவிதைத் தொகுப்பு நூலில் காணலாகும் இலங்கைத் தமிழர்கள், முன்னோர் உழைப்பும் மரணமும், தமிழர் வாழ்க்கை, இலங்கையில் சிங்களவர் - தமிழர் போரை நிறுத்தல், மண்ணுக்காகப் போர், இலங்கையின் கண்டி, யாழ்ப்பாணத் தேயிலைத் தோட்டங்களில் தமிழ்ப் பெண்களபடும் துயரங்கள், இனவெறிப்போரினால் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களின் வாழ்வியலை வரலாற்றியல், சமுதாயவியல் விளக்கவியல் திறனாய்வு முறைகளில் ஆராய்ந்து வெளிப்படுத்துவனவாக இக்கட்டுரை அமைகின்றது.

### தேயிலைத் தோட்டத்தில் இலங்கைத் தமிழர்கள்

கவிஞர் ஸி.வி.வேலுப்பிள்ளை அவர்கள் 1969 ஆம் ஆண்டு ‘‘தேயிலைத் தோட்டத்திலே’’ என்னும் கவிதைத் தொகுப்பு நூலினை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். அந்த ஆங்கில மூலம் இன்று கிடைக்கவில்லை. இக்கவிதைத் தொகுப்பு நூலினை சக்தீ அ.பாலையா என்பவர் தமிழில் கவிதையாகவே ஆங்கில மூலம் சிதையாமல் நல்ல தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். இந்நூலினைக் கண்டியிலுள்ள செய்தி பதிப்பகம் (தபால் பெட்டி எண்.5) 1969 ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளது. ஸி.வி.வேலுப்பிள்ளை உள்ளமும் உணர்வும் ஏழ்மையில் வாழும் இலங்கைத்தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள்/ மலையகத் தமிழ்த் தொழிலாளர்கள் துயரங்களில் அவர் கொண்டிருந்த ஈடுபாடும் பங்கேற்பும் பாசமும் பரவும் ஒத்துணர்வும் (Sympathy) சிந்தனைகளும் அவரது ஆங்கில மூலத்தில் மனிதநேயத்துடன் காணப்படுகின்றன. அவற்றை அப்படியே தமிழில் மொழிபெயர்த்து சக்தீ அ.பாலையா வெளியிட்டிருப்பது புலம்பெயர்ந்தோர் வாழ்க்கைக்கு அர்ப்பணமாகும்.

ஒருநூற்றாண்டுக் காலமாக மலையகப் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் தம் கடுமையான உழைப்பால் மலையகத்தைச் சீராக்கிச் சேர்த்துக் கொடுத்த செல்வ வளங்கள் எண்ணற்றவை. காப்பியையும் தேயிலையையும் ரப்பரையும் நட்டுப் பயிரிட்டுக் கிராமங்களையும் நகரங்களையும் உருவாக்கினார்கள். பிரதானமான போக்குவரத்துச் சாலைகளை அமைப்பதில் இலங்கை - யாழ்ப்பாணத் தமிழர்கள் தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் இலங்கைத்தீவின் வளர்ச்சிக்காகவும் நலன்களுக்காகவும் நாட்டின் நல்வாழ்வுக்காகவும் அர்பணித்தவர்கள் தமிழர்கள். அத்தகைய தமிழர்கள் நிலையை,

**“நடுக்கடலில் திக்குத் திசையறிந்திடாத நாவாய்போல ஆக்கப்பட்ட ஓர் நிலையை அவர்கள் அடைந்திட நேர்ந்ததைக் கவிஞரின் உணர்வு குமுறிக் கூறுகிறது. மகாகவி பாரதி பாடினான் “கரும்புத் தோட்டத்திலே” அவன் மக்கள்படும் பாட்டினைக் கண்டு நெஞ்சம் குமுறினான் அவர்கள் தம் நிலைமாறி உயர்வடைய நினைவளித்தான். ஆம் அதுபோலத்தான் கவிஞர் வேலுப்பிள்ளையின் குமுறல்களும் “தேயிலைத் தோட்டத்திலே” நம் தமிழர்களின் நிலைமாறி வாழ்க்கைத் தரம் உயர்ந்திட வேண்டும் என்று உள்ளம் குமுறுகிறார் அவர்கள் சுதந்திரத்தை நினைவூட்டுகிறார்.” (ஸி.வி.வேலுப்பிள்ளை (மூல ஆசிரியர்), சக்தீ அ.பாலையா (மொ.பெ.ஆ) தேயிலைத் தோட்டத்திலே, “சக்தீயுரை” - (முன்னுரை)** கவிஞர்ஸி.வி.வேலுப் பிள்ளையின் ஆங்கிலக் கவிதைகளைத் தமிழ்ப்படுத்தும் போது அவரது மூலக் கருத்துக்களையே வெளிப்படுத்தியுள்ளார் சக்தீ அ.பாலையா மலையக மக்களின் வாழ்வியல் கருப்பொருள்களும் தமிழகத்தில் நுட்பமாக வெளிப்பட்டுள்ளன.

**முன்னோர் உழைப்பும் மரணமும்**

ஸி.வி.வேலுப்பிள்ளை இலங்கைத் தேயிலைத் தோட்டத்தில் உழைத்த மூதாதையர் களாகிய தமிழர்களின் கடின உழைப்பையும் அவர்களது அவல மரணத்தையும்,

**"முந்தையோர் செய்த**
**முயற்சியும் அவர்தம்**
**மூச்சும் உணர்வும்**
**…………….**
**…………. ……**
**எத்தனை! எத்தனை!**
**எத்தனை! எத்தனை!"**

**(தேயிலைத் தோட்டத்திலே ப.2)**

எனவும்

**"புழுதிப் படுக்கையில்**
**புதைந்த என்மக்களைப்**
**போற்றும் இரங்கற்**
**………. ………**
**…………….**
**புவைப் பறித்துப்**
**போடுவாரில்லையே"**

**(தேயிலைத் தோட்டத்திலே ப.5)**

எனவும் மனம் நொந்து கவிதையாக்கியுள்ளார். இவ்வாறு தேயிலைத் தோட்டத்தில் பிரதிபலன் நோக்காமல் உழைத்த முந்தைத் தமிழர் இன்றில்லை அவர்களை நினைத்துப் போற்றுவோறும் இல்லையென ஸி.வி.வேலுப்பிள்ளை மனம் நொந்து கவிதை பாடியுள்ளார்.

**தேயிலைத் தோட்டத் தமிழர் வாழ்க்கை**

கவிஞர் இக்கவிதையை இயற்றியக் காலத்தில் கூடத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் குச்சில் குடிசைகளில் ஆடுமாடுகளைப் போலவே வாழ்ந்தனர். தொழிற் சாலைக்கும் தோட்டத்திற்கும் சாலைகள் இல்லை ஒற்றையடிப் பாதைகளே. முதுமையைக் கூட பொருட்படுத்தாமல் முதியவர்களும் தேயிலைத் தோட்டங்களில் உழைத்தனர். மன்வளம் பெருக்க கன்னியரும் குமரிகளுமாகிய தமிழ்ப் பெண்கள் தம் வாழ்க்கையைத் தொலைத்துக் கடுமையாக உழைத்தனர். முதுகுகளில் மூங்கில் கூடைகளைத் தாங்கி தேயிலை பறித்த அப்பெண்களின் துயரநிலை வெளிப்படுத்த இயலாதது. மலைகளிலும் மடுக்களிலும் தேயிலைச் சுமைகளோடு ஏறி இறங்கினர். குழந்தைகளுக்குப் பாலூட்டும் தாய்மார்கள் வேலைக்களத்திற்குச் சற்றுத் தாமதமாக வந்தால் கூட தோட்டத்துரைகளும் கங்காணிகளும் கடுமையான இழிந்த வார்த்தைகளால் பேசி, அவர்தம் உள்ளங்களைப் புண்படத்துவர்.

**"இப்படி என்றிலா**
**இழிந்த வார்த்தையால்**
**எத்தனை வசவுகள்**
**எத்தனை! அந்தநாள்**
**……………**
**……. ……**
**கடமைகள் புரிந்தும்**
**கருதுவாரில்லையே!**

**(தேயிலைத் தோட்டத்திலே ப.21)**

வீட்டுவேலை, தோட்டவேலை, பிள்ளைகள் மற்றும் கணவனுக்குச் சமைத்துப் போடுதல் எனப் பெண்கள் அல்லல்பட்டு மூடுபணிக் குளிரில் இரவு நேரங்களில் துயில்வதுகூட இல்லை. பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் தொல்லைகளைக் கவிஞர்,

**"………… இயற்கையின்**
**உறவுப் பாசமும்**
**உணர்ச்சித் தொடர்பும்**
**………….**
**…….. ……..**
**கற்பைக் கெடுக்கும்**
**காமப் பேய்களாய்"**

**(தேயிலைத் தோட்டத்திலே ப.24)**

என வேதனையோடு வெளிப்படுத்தியுள்ளார்.

மொத்தத்தில் இலங்கைத் தேயிலைத் தோட்டத்தில் தொழிலாளர்கள் **"கூலிகள்" (தேயிலைத் தோட்டத்திலே ப.29)** என்ற பெயரில் கொத்தடிமைகளாகவே வாழ்ந்தனர். **தேயிலைத் தோட்ட வேலையில் தங்கப் புதையல் கிடைக்குமென நம்பிப் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஊரையும் உறவுகளையும் விடுத்து வறுமையில் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தனர். மாத்தளையின் கண்டித் தோட்ட வளமைக்கு புலம் பெயர்ந்த தமிழர்களின் உழைப்பே உரமாகும் எனினும் அன்றையச் சூழலில் யாழ்ப்பாணத்தில் பயங்கர யுத்தங்கள் இல்லை. ஆனால் தேயிலைத் தோட்டத் துரைகள் இராணுவக் கெடுபிடிகளை உழைப்பவர் மீது திணித்தனர்." (தேயிலைத் தோட்டத்திலே ப.39)** தேயிலைத் தோட்டக் கூலிகள் தகரக் கூரைகள் தாங்கிய லயங்களில் வாழ்ந்தனர்.

பொங்கல், தீபாவளிப் பண்டிகைகளில் கூட தேயிலைத் தோட்டக் கூலிகளுக்கு விடுப்பு இல்லை. அவர்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சியும் விடுதலையும் வேண்டுமெனக் கவிஞர் ஸி.வி.சண்முகம் இக்கவிதைத் தொகுப்பில் தம் அவாவை வெளிப்படுத்தியுள்ளார்.

**சக்கரவர்த்தியின் 'யுத்தசன்யாசம்' கவிதைத்தொகுப்பு**
சிங்கள இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையெ நடைபெற்ற ஈழவிடுதலைப் போராட்டத்தை / இனப்படுகொலையை (Genocide) மையமாக வைத்துக் கவிஞர் சக்கரவர்த்தி **'யுத்தசன்யாசம்'** என்னும் நூலினை வெளியிட்டுள்ளார். இது இலங்கை யுத்தகால ஈழவர் வாழ்க்கை நிலைப்பாடுகளை விளக்குவதாக அமைந்துள்ளது. படிக்கின்ற வயதில் பிள்ளைப் பருவத்திலேயே ஈழத்தமிழ்ச் சிறுவர்கள் கைகளில் புத்தகங்களுக்குப் பதிலாக எறிவெடிகுண்டுகள் திணிக்கப்பட்டன. இதனால் அவர்கள் கல்வியையும் வாழ்க்கையையும் இழந்தனர்.

**"நீங்கள் அறிந்ததுண்டா பேனாகூட**
**சரியாகப் பிடிக்கத் தெரியாத என்கைகளில்**
**எறிகுண்டுகள் திணிக்கப்பட்டதை"**
**(சக்கரவர்த்தி, யுத்தசன்யாசம், ப.5)**

இக்கவிதை வரிகள் போர்வெறியைச் சாடுவதாக உள்ளன. சிங்கள - ஈழத்தமிழர் விடுதலைப் பேரில் மக்கள் தூக்கத்தைத் தொலைத்துத் துக்கம் கொண்டனர். வாழ்க்கையின் நிம்மதியை இழந்தனர்.

**"குண்டு போட்டுக் குழிவிழுவதால்**
**கிணறுவெட்டப் பூதம் புறப்படாத**
**ஓர் இராக்காலம் அது"**
**(சக்கரவர்த்தி, யுத்தசன்யாசம், ப.7)**

இக்கவிதை கூலிகள் யுத்தகாலத்தில் இலங்கையில் இருந்த ஊரடங்கு நிலையையும் மக்களின் அன்றாட வாழ்வில் பாதிக்கப்பட்டதையும் வெளிப்படுத்துகின்றன. இலங்கையின் இனவாதப் போரில் கையெறிகுண்டுகள், தோட்டாக்கள், துவக்குகள் (துப்பாக்கிகள்) ஆகியனவற்றுடன் அலையும் இலங்கைத்தமிழ் இளைஞர்களின் அவலநிலையைக் கவிஞர்,

**"கைகளில் கையெறி குண்டுகளும்**
**தோளில் தோட்டாப் பைகளும்**
**கூடவே கையில் துவக்குடனும்**
**எத்தனை கம்பீரம் நான் என்னில்"**
**(சக்கரவர்த்தி, யுத்தசன்யாசம், ப.8)**

எனச் சுட்டியுள்ளார். இனவாதப் போரைப் பொறுத்தவரையில் சிங்களவர்களும் தமிழர்களும் இரக்கமின்றி வன்முறையில் மக்களைக் கொன்றனர் என்பதைக் கவிஞர்,

**"துப்பாக்கிகள் துருப்பிடிப்பதில்லை என்பது**
**என்விரோதிகளைப் போலவே எனக்கும்**
**ஐதீகம்"**
**(சக்கரவர்த்தி, யுத்தசன்யாசம், ப.11)**

எனக் கூறியுள்ளார்.

**இலங்கையில் சிங்களவர் - தமிழர் போரை நிறுத்தல்**
பூகம்பம் மற்றும் போர்க்களமான இலங்கை மண்ணையும் மக்களையும் மீட்பதற்கு மீண்டும் ஒருமீட்பர் (ஏசுநாதர்) பிறக்க வேண்டும் என்பதைக் கவிஞர் சக்கரவர்த்தி,

**"மீட்பர் ஒருவர் மறுபடியும் இங்கு வருவார்**
**சிலுவையில் அறைப்படினும்**
**கல்லால் அடிபடினும் பூகம்பப் புழுதியிலிருந்து**
**தூசிதட்டி மீண்டும் மனிதனை மீட்பர்"**
**(சக்கரவர்த்தி, யுத்தசன்யாசம், ப.14)**

என வெளிப்படுத்தியுள்ளார். சிங்களவர் - தமிழர் ஆகிய இருவரும் தம் நிலைகளைச் சீர்தூக்கிப் பார்த்து இழப்புக்கள் எதுவாயினும் அதனைச் சரிசெய்து, போரில் மனிதர்களைக் கொல்வதை விடுத்து அமைதி காணவேண்டும் என்பதே கவிஞர் சக்கரவர்த்தியின் நோக்கமாகும்.

**மண்ணுக்காகப் போர்**
தமிழன் மண்ணுக்காகவும் பெண்ணிற்காகவும் காலங்காலமாகப் போரிடுகின்றான். இப்போர்களில் வாசமே இல்லாத வாகைப் பூவிற்கு முதன்மை தந்து வெற்றியை மட்டுமே இலக்காகக் கொள்கின்றான். இலங்கையில் நடைபெற்றுவரும் மண்ணுக்கானப் போர் இன அழிவுப்போராகும். மண் யாருக்கும் சொந்தமானது அல்ல அது அங்கு வாழும் மக்களுக்கு உரியது. போர் மக்களின் வாழ்க்கையைப் பாழ்படுத்துகின்றது. இதனைக் கவிஞர் போரினால் ஏற்படும் மரணங்களைக் கருத்தில் கொண்டு போரை நிறுத்த வேண்டும். வரலாற்றின் ஒரு குருஷேத்திரப் போரும் ஒரு கலிங்கப்போரும் போதிக்கும் படிப்பினை என்ன? எனக் கேட்கின்றார்.

**"இது யாரது பூமி? யாரது மண்? உன்னதா? என்னதா?**
**ஒருகலிங்கமும் ஒரு குருஷேத்திரமும் போதாத**
**மரணங்களால் மகிழ்வுறும் உனக்கு?"**
**(சக்கரவர்த்தி, யுத்தசன்யாசம், ப.15)**

வாழ்க்கை என்பது மனிதன் தன்னுயிரைப் பாதுகாத்தலும், பதுங்கு குழிகளில் மறைந்து உயிர் தப்புதலும் என்பதையே இலங்கையின் இனவெறிப்போர் உலகிற்குக் கற்றுக்கொடுத்துள்ளது. மனிதர்கள் உயிர்ப்பயம் இல்லாமல் சுதந்திரமாக வாழ்வதே வாழ்க்கை.

**'தமிழீழம்' என்னும் நாடு வேண்டும்**
இலங்கை மண்ணில் சிங்களவர்களைப் போலவே அனைத்து உரிமைகளுடனும் தமிழர்களும் சமமாக

வாழ்வதற்கு உரிமை உள்ளவர்கள். அந்த உரிமை தமிழர்கள் தமக்கென்று ஒருநாட்டை, தமிழீழத்தைப் பெறுவதை இலக்காகக் கொண்டு போராடி வருகின்றனர். இது வரலாற்றின் தொடர்கதை ஆகிவிட்டது.

**"உனக்கு நாடு இல்லை என்றவனைவிட**
**நமக்கு நாடே இல்லை என்று தூபமிட்டவன் எவனோ**
**…….. ……………………………………..**
**வாழ்க்கையை மறுப்பவனுக்கும் உள்ள வேறுபாடு அது"**

**(சக்கரவர்த்தி, யுத்தசன்யாசம், ப.21.)**

இலங்கை - யாழ்பாணம் தமிழர்களுக்குச் சொந்தமில்லை என்றும், தமிழர்கள் இலங்கையில் வாழ உரிமையற்றவர்கள் எனவும் ஆதிக்க இனமான சிங்களவர் பிரகடனம் செய்ததால் இனவெறிப் போர் மூண்டு தமிழர்கள் இலங்கையிலிருந்து புலம்பெயரும் நிலை ஏற்பட்டது.

**யுத்தசன்யாசம் - புலம்பெயர் வாழ்க்கை**

இலங்கையின் இனவெறிப் போரால் புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் அகதிகளாக வாழச் செல்லும் இலங்கைத் தமிழர்களின் பல்வேறு நிலைப்பாடுகளைக் கவிஞர் சக்கரவர்த்தி இரண்டாம் உலகப்போரில் பங்கேற்று ஒரு காலிழந்த இராணுவக் கிழவன் கூற்றில் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார். அயல்களில் அகதிகளாகத் தஞ்சம் புகும் இலங்கைத் தமிழர்கள்,

**"இன்றும்கூட எத்தனையோ இனத்தவர்கள்**
**வெள்ளையர்களை மட்டுமே கடவுளின் படைப்பெனக்**
**கருதுகின்றபோது கறுப்பு நான்**
**கைகளால் அவனைத் தொட்டால் வேண்டாத பழி**
**என்மீது வருமோ? எனஅஞ்சினேன்"**

**(சக்கரவர்த்தி, யுத்தசன்யாசம், ப.25)**

என்னும் கவிதை வரிகளுக்கேற்ப முதலில் பாதிப்படைகின்றனர். அதன் தொடர்ச்சியாக நிற அடிப்படையிலானதீண்டாமை அமைகின்றது.

**"தீண்டாமை என்பது யாழ்ப்பாணத்தாருக்கும்**
**பார்ப்பனர்களுக்கும் தான் ஏகபோக உரிமையோ?**
**அது இங்கிலிஷ்காரர்களுக்கும் பரம்பரைச் சொத்துத்தான்?"**

**(சக்கரவர்த்தி, யுத்தசன்யாசம், ப.25)**

இலங்கைத் தமிழர்களின் புலம்பெயர்வு வாழ்க்கை, புகலிட நாடுகளில் பல்வேறு கோணங்களில் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றது.

**"நீ தப்பித்து வந்தனவா? இல்லை**
**தவிர்த்து வந்தனவா?"**

**(சக்கரவர்த்தி, யுத்தசன்யாசம், ப.26)**

**"நீ யுத்தத்திலிருந்து தப்பித்து வந்தனவா? இல்லை**
**யுத்தத்தைத் தவிர்த்து வந்தனவா?**

**(சக்கரவர்த்தி, யுத்தசன்யாசம், ப.27)**

இந்த வினாக்களுக்குக் கவிஞர் சக்கரவர்த்தி, வாழ்வை உரிய முறையில் அனுபவித்துச் சுவைத்தலே சன்யாசம் உலக வாழ்க்கையை உரியமுறையில் உண்மையாக நுகர்பவர்கள் சன்யாசிகள் மட்டுமே. இலங்கையிலிருந்து போரைத் தவிர்த்து உலகெங்கும் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஒருவகை சன்யாசிகள் எனச் சாதுர்யமாக விடையளித்துள்ளார். அக்கவிதை வரிகள் வருமாறு

**"சண்டையில் எனக்குச் சம்மதம் இல்லை சண்டைச்**
**சாவுகளில் எனக்கு உடன்பாடும் இல்லை**
**யுத்தத்தைத் தவிர்ப்பதற்காய்**
**தப்பித்து வந்துள்ளேன் இது ஒருவகைச் சன்யாசம்"**

**(சக்கரவர்த்தி, யுத்தசன்யாசம், ப.27)**

**முடிவுரை**

புலம்பெயர்ந்த தமிழர்களின் சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள், விமர்சனங்கள் ஆகிய புலம்பெயர் இலக்கியங்கள் அனைத்தும் இலங்கை இனவெறிப் போரினால் இலங்கையின் யாழ்பாணப் பகுதிகளிலிருந்து புலம்பெயர்ந்து அந்நிய நாடுகளில் அகதிகளாக அடைக்கலம் புகுந்த இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கைத் துயரங்களை வெளிப்படுத்துகின்றன. இதற்குச் சான்றாக 'யுத்தசன்யாசம்' என்னும் கவிதைத் தொகுப்பு அமைந்துள்ளது. பாரதியாரைப் போன்று ஸி.வி.வேலுப்பிள்ளை ஆங்கிலத்தில் எழுதியுள்ள 'தேயிலைத் தோட்டத்திலே' என்ற கவிதைத் தொகுப்பு நூலிற்கும், பாரதியாரின் கரும்புத் தோட்டதத்திலே என்ற கவிதைக்கும் மிகுந்த ஒப்புமைகள் உள்ளன.

**பயன்பட்ட நூல்கள்**

1. சக்கரவர்த்தி, யுத்தசன்யாசம், பரிமணம், கனடா-1994.
2. வேலுப்பிள்ளை.ஸி.வி,தேயிலைத்தோட்டத்திலே,சக்தீ அ.பாலையா (மெ.பெ.ஆ), செய்திபதிப்பகம், தபால் பெட்டி எண்.5, கண்டி-1969.

# பழனி முருகன் கோயிலும் மக்கள் வழிபடும் முறைகளும்

**ஆ. சித்ரா தேவி**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை*

**முனைவர் க. பரமேஸ்வரன்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*தொலைநிலைக் கல்வி இயக்ககம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை*

## முன்னுரை

பழனி ஒரு புனித தலம் ஆகும்.தமிழகத்திலுள்ள முருகன் கோவில்களில் பழனி முருகன் கோவில் முதன்மையானதாகக் கருதப்பட்டு வருகின்றன். நாள்தோறும் எண்ணற்ற பக்தர்கள் இக்கோவிலுக்கு வந்து பழனி முருகப்பெருமானே தரிசித்து செல்கின்றனர். தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்லாது கேரளா, ஆந்திரா, கர்நாடகா முதலிய இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலிருந்து வெளிநாட்டவரும் வந்து முருகப்பெருமானே வழிபட்டுச் செல்கின்றார்கள். தான் நினைத்தது நிறைவேறும் என்ற நம்பிக்கையில் மக்கள் முருகனை தரிசிக்கின்றன. பழனி முருகன் கோவில் ஆறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடாகும். தண்டாயுதபாணியாக ஆண்டியாக எழுந்தருளி இருப்பதால் ஏனைய முருகன் கோயிலுக்கு இல்லாத ஒரு சிறப்பு இத்தலத்திற்கு உண்டு. முருகனை வணங்கி சென்றால் தங்கள் வாழ்வு வளம் பெறும் என மக்கள் நம்புகின்றனர்.

## பழனிப் பெயர்க் காரணம்

பழனித் திருத்தலத்திற்கு திருஆவினன்குடி, பழனி என்ற பெயர்கள் ஏற்படுவதற்குப் புராணம் கூறும் வரலாறுகள் மிகவும் சுவையுடையதாகும். கயிலையங்கரியில் ஒரு நாள் கலகப்பிரியரான நாரதர் முனிவர் பரமேஸ்வரனையும், பார்வதிதேவியையும் தரிசிக்க செல்கிறார். நாரதர் ஒரு மாங்கனியை எடுத்துச் செல்கிறார். அக்கனியை இறைவனது பாதங்களில் இட்டு அன்னையிடம் கொடுக்கிறார். கனியை விநாயகனும் வேலவனும் தங்களுக்குத தருமாறு தந்தையாகிய சிவபெருமானிடம் வேண்டுகின்றர். ஒரு கனியை இருவரும் கேட்பதால் அந்த கனி முழுமையாக பெறுவதற்கு ஒரு போட்டியை வைத்து அந்த போட்டியில் வெற்றி பெறுவதற்கு மாங்கனியை தருவதாகத் தெரிவிக்கிறார். சிவபெருமான் அந்த போட்டியில் அவர்களிடம் யார் முதலில் உலகத்தை ஒரு நொடியில் வளம் வருகிறார்களோ அவரே அக்கனியே அடைய தகுதியானவர் என முடிவாகிறது. உலகத்தை வலம் வர முருகப்பெருமான் மயில் மீது அமர்ந்து புறப்பட்டார் விநாயகர் அம்மையும் அப்பனும் உலகம் என்று அவர்களை வலம் வந்தால் உலகே வலம் வருவதாகவும் என்று கூறி இறைவனையும் இறையையும் வலம் வந்து கனியே பெறுகிறார். வலிமையுடன் கூடியது பழநிமலை என்று குறிப்பிடுகிறார். மேகங்கள் சூழ்கின்ற அழகிய சோலைகளும், தாமரைத் தடாகங்களும் குதிரைப் பாய்ச்சலில் மீன்கள் பாய்வதானால் துவர்க்கின்ற பாக்குகள் உதிர்கின்ற கமுகு மரங்களும் கொண்டு விளங்குகின்ற பழநியம் என்று பழநித்தலத்தின் இயற்கை வளத்தை வர்ணிக்கிறார் அருணகிரிநாதர்.

ஆதனை,

> **"கொண்டல் சூழமாஞ்சோலை மலர் வாவிகயல்**
> **கந்து பாயரின் நடுதுவர் பகையுதிர்**
> **கந்தியோட கஞ்சேர் பழநி"**

என வரும் பாடலடியால் அறியலாம்.

## முருக வழிபாடு விளக்கம்

'முருகு' என்ற தமிழ்ச்சொல்லிற்கு மனம், இளமை, அழகு, கடவுள் தன்மை என்ற பொருள்கள் உண்டு இயற்கை வழியே இறைவனை முருகனை அடையும் முறை பற்றி திரு.வி. கல்யாணசுந்தரனார் குறிப்பிடுகிறார். "முருகு வழிபாடு பழங்காலம் முதல் தமிழ்நாட்டில் நிலவி வந்தது என்றும், இன்று உருவம் இல்லாமல் வேலை மட்டும் வணங்கும் வழக்கம் பாமர மக்களிடையே காணப்படுகிறது என்றும் கூறுவர்."

குறிஞ்சி நிலக்கடவுள் முருகன் குறிஞ்சியில் குமரன் எழுந்தருளக்காரணம் அங்கு நிலவும் தூய இயற்கையே என்று கூறுவர் அங்கு தோன்றிய மனிதன் உயர்ந்த மலை உச்சிலிருந்து நீலக்கடலின் மேல் காலைப்பொழுதில் தோன்றும் செங்கதிரவனைக் கண்டு சேயோன் என்று போற்றினான். இயற்கையான இக்காட்சியே முருக வழிபாடு முகிழ்ப்பதற்கு காரணமாகிது. குறிஞ்சிக் கிழவனாகிய முருகனை தமிழனின் முதற்கடவுள் என்று கூறுவர். தனித்தமிழ்

கடவுளாக முருகப்பெருமான் தமிழர்கள் அன்று முதல் இன்று வரை வணங்கப்பட்டு வரும் தெய்வமாகும். அழகு உறையும் இடங்கள் எல்லாம் முருகன் உறைவதாகப் பழந்தமிழர்கள் கண்டு வழிபட்டு வந்தனர். 'முருகு' என்ற சொல்லுக்குப் பல பொருள் உண்டு. அழகுத்தெய்வமான முருகனைப் பழந்தமிழர் முருகன் என்று அழைத்து வழிபட்டு வந்தனர்.

### புறநானூற்றில் முருகன்

புறநானூற்றில் புலவர்கள் முருகனைக் குறிப்பிடுகிறார்கள். சேரமான் செல்வக் கடுங்கோவாழியதன் போரில் சேயோனைப் போன்று காணப்படுகின்றான் என்பதைக் கபிலர்

**"இருநிலத்து அன்ன நோன்மைச்செருமிகு**
**சேய்றின் பாடுநர் கையே"**

என்று கூறுகிறார். சேரமான் யானைக் கட்சேய் மாந்திரஞ்சேரல் இரு பொறையைக் குறுங்கோழியூர் கிழர் யானையினது நோக்குப்போலும் நோக்கினையுடைய வெற்றியை விரும்பும் சேயோனைப் போன்றவன் நீ என்பதை

**"வேழ நோக்கின் விறல் வெஞ்செ எய்''**

என்ற பாடல் மூலம் புலப்படுத்துவதைக் காணலாம்.

### வேத இலக்கியத்தில் முருகன்

முருகக் கடவுள் வேதங்களில் சுப்ரமண்யா என்றே அழைக்கப்படுகிறார் 'சு' என்றால் மகிழ்ச்சி என்றும் பிரம்மா' என்றால் முழு முதற் கடவுள் என்றும் 'சன்யா' என்றால் முழு முதற் கடவுளிலிருந்து தோன்றியவன் என்றும் பொருள்படுகின்றன. ஆதலால் சுப்ரமணியா என்றால் முழுமுதற் கடவுளிடமிருந்து தோன்றியவர் என்றும் மகிழ்ச்சியை அளிக்க வல்லவர் என்று பொருள் கூறுவர்.

சுப்ரமண்ய சுவாமிக்கு மிகவும் ஏற்ற மந்திரம் 'சரவணபவ' என்பதேயாகும் 'சரம்' என்பது புற்களில் ஒரு வகை இனமாகும். வனம் என்பது சரங்கள் அடர்ந்த காட்டுப் பகுதி சரவணபவ என்றால் வனத்திலே புற்களில் தோன்றியவர் என்று பொருள்படும். புராணங்கள் சிவபெருமானின்ன நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய ஒளிப்பூக்கள் வானம், காற்று, நெருப்பு, நீர், மண் பஞ்சபூதங்களைக் கடந்து கங்கை நதிக்கரையில் உள்ள ஏரி அருகில் புற்களுக்கு இடையில் பூமியில் அவதரித்தவர் என்று கூறுகின்றனர். 'ச' மங்களகரமான 'ர' ஒளிமயமான 'வ' தூய்டையான 'ண' வீரம் ஆண்மை 'பவ' தோன்றியவர் எனப் பொருள்படுகிறது. ஸ்கந்தா என்பது முருகப்பெருமானின் நாமங்களில் ஒன்றாகும். அவருடைய விளையாடல்கள் ஸ்கந்த புராணம் என்று அழைக்கப்படுகிறது. 'ஸகந்தகம்' என்றால் ஒன்றுபட்டது என்று பொருள் சிவபெருமானின் நெற்றிப் பொட்டில் இருந்து தோன்றிய ஆறு ஒளிப்பூக்களும் பொங்கையில் ஆறு குழந்தைகளாகத் தோன்றியது என்றும் அவ்ஆறு குழந்தைகளும் ஒன்றாக இணைக்கப்பட்டு 'ஸ்கந்தா' என்று ஒரே குழந்தையாக உருபெற்றது என்று புராணம் கூறுகிறது ஸ்கந்தா என்றால் எதிரிகளை அளிக்க வல்லமை கொண்டவர் என்றும் பொருள்படும். தமிழில் கந்தா என்று அழைக்கப்படுகிறது கந்தா என்றால் பக்தரின் மீது அளவில்லாத கருணை கொள்பவர் எனப் பொருள்படும்.

### முருகனின் தோற்றப்பெயர்

ஞானசக்தி, தாரா, ஸ்கந்தா ஸ்வாமி, தேவசேனாதிபதி, சுப்ரமணியா, கஜவாகனர், சரவணபவா, கர்த்திகேயாகுமாரா, சண்முகா, தாரகந்தா, சேனாதிபதி, பிரம்மசாஸ்தா, வள்ளிகல்யாண கந்தரா, பாலசுப்பிரமணியனா, ஸ்ரீதத்துவநிதி ,குமராதந்திரம், குவா போன்ற முருகனின் பல்வேறு தோற்ற பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதையெல்லாம் புராணம் மரபில் தோன்றிய கருத்துகளை தாங்கிய பெயர்களாகும்.

### திருவிழாக்கள்

உலகில் வாழும் மக்கள் அனைவரும் எல்லா நிலைகளிலும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற அடிப்படையில் விழாக்கள் தோன்றின. பழங்காலத்தில் இருந்தே திருவிழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. முக்கியமாக திருவிழாக்களின் போது மக்கள் அவை ஒன்று சேர வைக்கிறது.

ஆதி காலத்தில் மக்கள் தனிமனிதனுக்கோ குழுவினருக்கோ நெருக்கடி வரும் காலங்களில் அதே தீர்த்து கொள்வதற்கும் மன அமைதி அடைவதற்கும் விழாக்கள் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்று கூறுகிறார்கள். தனி மனிதர்களைக் குழுவாகவோ சமூகமாகவோ ஒன்றிணைத்து திரும்பத் திரும்ப நிகழ்த்தப் பொதுமைக் கூறுகள் கொண்ட செயல்களும் உரியவர்களாக ஆக்குகின்ற ஒரு முக்கியமான கருவியென்றும் கேளிக்கைகளுக்கு, மகிழ்ச்சிக்கும் இடம் தந்து தம் வேறுபாடுகளை மறந்த ஓர் 'ஒத்துப்போதல்' தன்மையினைத் திருவிழாக்கள் உருவாக்குகின்றன என்றும் 'ராபர்ட் ஜெரோம்' திருவிழாக்களின் அடிப்படை பண்புகளைத் தெளிவுபடுத்தி உள்ளார்.

### பங்குனி உத்திரம்

பழனி முருகன் கோவிலில் பங்குனி உத்திரப் பெருவிழா பங்குனி மாதம் வெகு சிறப்பாக நடைபெற்று

வருகின்றன தேவர்களை காக்க முருகப் பெருமான் சூரனை அழித்து வெற்றிக் கொடி காட்டுகிறார். முருகப்பெருமானுக்குச் சிறப்புச் செய்யும் வகையில் அமரர் தலைவன் இந்திரனின் மகளை அவருக்குத் திருமணம் செய்விக்கின்றனர். பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்தில் முருகன் இந்திரனின் மகள் தேவசேனாவைத் திருமணம் செய்து கொண்ட நிகழ்வாக பங்குனி உத்திர பெருவிழா கொண்டாடப்படுகிறது. உத்திர திருவிழாவிற்கு வரும் முருக பக்தர்கள் பல்வேறு காவடிகளைச் சுமந்து வந்து நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். பெரும் ஆரவாரங்களுடன் மேளதாளங்கள் வாத்தியங்கள் முழங்க பக்தர்கள் ஆடியும் பாடியும் தங்கள் தோலில் காவடிகளை சுமந்து கொண்டு முருகனைக் கண்டு வழிபட்டுச் செல்கின்றனர்.

முருகப் பெருமானின் உக்கிரத்தைத் தணித்து வரம் பெற்று செல்கின்ற மக்கள் கூட்டம் இந்நாளில் மிகுதியாக உள்ளது.கொடுமுடி, காவேரி, சண்முகநிதி, போன்ற புண்ணிய ஆறுகளில் இருந்து தீர்த்தக் காவடி கொண்டு வந்து முருகனை வழிபட்டுச் செல்கின்றனர்.பங்குனி உத்திர திருவிழா பழனி முருகன் கோவிலில் கொடியேற்றத்துடன் தொடங்கி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும் பெரிய விழாவாகும்.கொங்கு நாட்டு மக்கள் மிகுதியாக பங்குனி உத்திரத் திருவிழாவில் காவடி கொண்டு வந்து செலுத்தி முருகனை வழிபட்டுச் செல்கின்றனர்.பங்குனி உத்திர திருவிழாவின் ஏழாம் நாளில் பங்குனித் தேரோட்டம் பழனியில் வெகு சிறப்பாகநடைபெற்று வுரகின்றன. ‘பாசி படர்ந்த மலை பங்குனித் தேர் போடும் மலை’ என நாட்டுப்புற பாடல் ஒன்று பங்குனி தேரோட்டத்தை வெகு சிறப்பாக எடுத்துக்காட்டி உள்ளது.

**தைப்பூசதிருவிழா**

பழனி முருகன் கோவிலில் ஆண்டுதோறும் புகழ்பெற்ற திருவிழாவாகத் தைப்பூச திருவிழா கொண்டாடப்பட்டு வருகின்றது. மாதம் பூச நட்சத்திர தினத்தில் கொண்டாடப்படும் விழா தைப்பூச விழாவாகும். முருகப்பெருமானின் அன்னையாகிய உமா தேவியார் தன்னுடைய மகனாகிய முருக பெருமானுக்கு ‘தாரகன்’ என்னும் கொடிய அரக்கனை வென்று வர, வெற்றிவேல் எடுத்துக் கொடுத்த நாள் தைப்பூச நாள், முருகனின் வெற்றியைப் போற்றும் தினமே தைப்பூச திருவிழாவின் நோக்கம் ஆகும்.தைமாதம் பௌர்ணமி அன்று வெகு சிறப்பாகப் பழனிக் கோவிலில் தைப்பூச விழா நடைபெறும்.புழனி நகரின் மேற்கு எல்லையில் அமையப்பெற்றுள்ள அருள்மிகு பெரியநாயகி அம்மன் ஆலயத்தில் தான் தைப்பூசம் கொடியேற்றத்துடன் நடைபெறுவது மரபு. அன்னையிடம் தான் முருகப்பெருமான் சக்திவேல், ஞானவேல் பெற்று அசுரனை அழிக்க சென்றார். தைப்பூசம் கொடியேற்றத்துடன் தொடர்ந்து பத்து நாட்கள் ‘பெரியநாயகி அம்மன்’ ஆலயத்தில் இவ்விழா நிகழ்வுகள் நடைபெற்று வருவது தான் வழக்கமாக இருந்து வருகின்றது.

**பழனி பாதயாத்திரையும் தைப்பூசமும்**

பழனி முருகன் கோவிலில் நடைபெறும் தைப்பூசத் திருவிழாவைக் காணப் பலலட்சம் மக்கள் பாதயாத்திரையாக பழனியே நோக்கி வந்த வண்ணம் உள்ளனர். முருகப் பக்தர்கள் தங்கள் கால்களில் எவ்வித காலணிகளை அணியாமல் விரதம் இருந்து கடுமையான பனி, குளிர், வெயில் இவற்றையெல்லாமல் முருகனின் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டே பாதயாத்தரையாக வருகின்றனர். திருத்தலப் பயணம் என்று முருக பக்தர்கள் கூறுகின்றனர்.

**அக்னி நட்சத்திர விழா**

அக்னி நட்சத்திர விழா பழனி முருகன் கோவிலில் வேனிற் காலமாகிய சித்திரைத் திங்களின் பிற்பகுதியும், வைகாசித் திங்களின் முற்பகுதியும் கூடிய பதினான்கு நாட்கள் நடைபெறும் விழாவாகவும், கிரிவலம் வருதல் அக்னி நட்சத்திர விழாவின் சிறப்பாகும். பதினான்கு நாட்கள் அதிகாலை நேரத்திலும், மாலை நேரத்திலும் பழனி மலையைச் சுற்றி வந்து முருகன் வழிபாடு செய்கின்றனர்.இவ்விழாவின் போது முருக பக்தர்கள் நேர்த்திக்கடனாக காவடிகளைச் சுமந்து வருகின்றனர்.

பழனி மலையில் உள்ள மூலிகைகளோடு கலந்து வரும் தூயக் காற்று உடலுக்கும் உள்ளத்துக்கும் நன்மை தருவதாய் விளங்குகின்றன. அக்கினி நட்சத்திரம் தொடங்கிய நாளிலிருந்து ‘கிரிவலம்’ வந்து பழனியாண்டவரைத் துதித்தால் தீராத நோய்கள் எல்லாம் தீர்ந்துவிடும் என்று மக்கள் நம்புகின்றனர். மனம் உருகி, கிரிசுற்றி ஆண்டவனை வணங்குவது இவ்விழாவின் சிறப்பாகும்.

**முடிவுரை**

தமிழகத்தில் உள்ள வழிபாட்டு தலங்களில் பழனி முருகன் கோவில் ஒரு புண்ணியத்தலமாக விளங்கி வருகின்றது. பழனி தலமானது ஒரு வேண்டுதல் தலமாகவும் முதன்மைத்தலமாகவும் விளங்கி

வருகின்றது. இத்திருத்தலத்தில் முருகப்பெருமான் மயில் மீது அமர்ந்து குழந்தை வேலாயுத சுவாமி என்ற திருப்பெயருடன் மேற்கு நோக்கி எழுந்தருளுகின்றார். பழனி முருகன் கோவிலில் ஆண்டு தோறும் திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. குறிஞ்சி நில வழிபாடு தெய்வமாக 'முருகப்பெருமான்' என்பதை அறிய முடிகிறது. பழனி முருகன் கோவில் வழிபாட்டு முறைகளில் திருவிழாக்கால வழிபாடு சிறப்பிடம் பெறுகின்றன.

**அடிக்குறிப்புக்கள்**

1. திரு. வி.க.முருகன் அல்லது அழகு, ப. 46.
2. நா. வானமாமலை, தமிழர் பண்பாடும் தத்துவமும், ப.8
3. ந. கல்யாணசுந்தரம், முருக வழிபாட்டு முறைகள் (க.ஆ) ப.38.
4. புறநானூறு, வரி. 18-19, ப. 14
5. மேலது, நூற். 219.
6. தமிழ் மரபும் முருக வழிபாட்டு நெறியும், தொகுதி 1, பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோவில் வெளியீடு 2005, ப. 206.
7. மேலது, ப. 207.
8. Festivels of India, p.5.

**மேற்பார்வை நூல்கள்**

1. கல்யாணசுந்தரம். நா - திருச்செந்தூர் முருகன் கோயில் வரலாறு, திருக்குமரன் பதிப்பகம், திருச்செந்தூர், மு.ப. 1980.
2. காந்தி. ச. தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவானம், சென்னை மு.ப. 1980.
3. காந்திதாசன். மா – தமிழகத்தில் முருக வாழிபாடு, குமரன் பதிப்பகம், மதுரை, மு.ப. 1988.
4. கிருட்டிண மூர்த்தி இரத்தின (ப. ஆ) - பழநித்தல வரலாறு, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் வெளியீடு பழனி, 2005.
5. சுப்பிரமணியன். பெ.– பழனி முருகன் கோயில் வழிபாடும் திருவிழாக்களும், ராம்குமார் பதிப்பகம், லட்சுமிபுராம் பழனி தமிழ்நாடு, 2004
6. மாணிக்கவாசகன், திருமுருகாற்றுப்படை, உமா பதிப்பகம், 58, சென்னை, 1996.

# ரூஹ் புதினத்தில் மதநல்லிணக்கச் சிந்தனைகள்

**ரா. சித்திரகலா**

*முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்), தமிழ்த்துறை ஆய்வு மையம்*
*ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), குற்றாலம்*

**முனைவர் வெ. திலகம்**

*இணைப் பேராசிரியர், நெறியாளர்*

## முன்னுரை

ஒரு நாட்டின் வளர்ச்சி அங்கு வாழும் நாட்டு மக்களிடத்தில் உள்ளது. நாட்டு மக்கள் பின்பற்றும் சமயங்களுக்கு இடையே சகிப்பு தன்மையும், நல்லிணக்கமும் இருக்க வேண்டும். பழங்காலத்தில் இருந்த மக்கள் அனைவரும் சாதி, மதம், வேறுபாடின்றி வாழந்து வந்தனர். இவ்வாறே ரூஹ் புதினத்தில் ஜோதிலிங்கம் ராபியா மீது கொண்ட நட்பும், மதங்கள் கடந்து ஜோதி செய்யும் பரிகாரங்களையும் அவற்றால் ஏற்படும் மதநல்லிணக்கத்தையும் ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

## மதநல்லிணக்கம் விளக்கம்

“மத நல்லிணக்கம்” என்ற சொல்லுக்கு அனைத்து மதங்களுக்கிடையில் வேற்றுமையில் ஒற்றுமை என்று பொருள். பெரியவர்களோ, சிறியவர்களோ எல்லோரும் தங்கள் சொந்த மதத்திலோ அல்லது தங்கள் சாதியினரோ நண்பர்களை மட்டும் தேடுவதில்லை. நிறம், கறுப்பு, வெள்ளை, இந்து, கிறிஸ்தவர், உயரமானவர், குட்டையானவர், பணக்காரர், ஏழை என்ற பாகுபாடின்றி தங்களுக்குப் பிடித்தவர்களைத் தேர்ந்தெடுத்து ஒற்றுடையுடன் பழகி வாழும் சூழலே மதநல்லிணக்கம் தோன்ற வித்தாகிறது. “யாதும் ஊரே, யாவரும் கேளிர்” என்ற கணியன்பூங்குன்றனாரின் வரிகளுக்கேற்ப ஒருமைப்பாட்டோடு வாழ்வதே மதநல்லிணக்கம் என்பர்.

## ரூஹ் புதினத்தில் மதம் தாட்டிய அன்பு

தோல்பாலைக் கூத்து கலைஞன் விட்டல் ராவின் மகனான ஜோதிலிங்கத்திற்குப் பிறவியிலேயே பெண் நலினம் அமையப் பெற்றதால் ஊராரின் ஏழனப் பேச்சிற்கு ஆளானான். அம்மாவிற்கு உதவுவதற்காக பொதுக்குழாய்க்கு குடங்கயோடு செல்லும் போது அவன் வயதையொத்த சிறுவர்களோ வயதில் மூத்த இளைஞர்களோ பாரத்துவிட்டால் “என்னாடி ஜோதி தண்ணி எடுக்க வந்தியா? என வம்பிழுக்க “போடா தூமச்சீல.... ஒனக்கு என் பொச்ச மோந்து பாக்காட்டி தூக்கம் வராது” 1 (ரூஹ் ப- 69) என முகத்தை கோணலாக்கித் திட்டுவான். ஒரு நாள் பள்ளிக்கூட மைதானத்தில் கிட்டிப்புல் விளையாடும் போது காயம் ஏற்பட வலித்தாங்காமல் கதரிய ஜோதியை அம்மா ரத்னா கை வைத்தியம் பார்க்கும் இஸ்லாமிய பெண் ராபியாவிடம் அழைத்துச் சென்றாள். “அச்சச்சோ என்னம்மா ஆச்சு தம்பிக்கு? கீழ வுழுந்துட்டாப்ளையா?” என நீண்ட நாள் பழகிய பரிவின் குரலில் கேட்ச அம்மா நடந்ததை அனைத்தையும் கூறினாள். எப்போதும் அல்லாவிடம் தொழுகையின் போது கேட்கும் அதே அர்ப்பணிப்போடு பிரார்த்தித்து காயம்பட்ட கண்ணில் மூன்று முறை ஊதினாள். கண்ணில் பட்ட காயத்தின் வேதனை குறைய ஆரம்பித்த. “முகம் தெரியாத மனிதனுக்காகச் செய்யும் பிரார்த்தனைகளுக்குத்தான் எத்தனை வலிமை?” 2(ரூஹ் ப-72) ஜோதிக்கு அவளின்மீதும் கடவுளின் மீதும் ஒருசேர நம்பிக்கை வந்தது. அவன் அம்மாவின் முகத்தில் தெரிந்த வறுமையும், அந்தச் சிறுவனிடம் மிகுந்திருந்த கூச்சமும் அவர்களை ராபியாவிற்கு நெருக்கமாக்கியது. ரத்னாவிற்கு மகன் குறித்த கவலைகள் எல்லாம் கண்ணீராய்க் கசிய, ராபியா அவளின் கைகளைப் பிடித்துக் கொண்டு. “சின்னப்பையந்தானம்மா எல்லாம் சரியாய் போகும், நீங்க எதுக்கும் கவலப்படாதிங்க. தம்பிக்குக் கண்ணு சரியாகவும் அனுப்பி வைய்யிங்க நான் நம்ம கடையில் சொல்லி வேலைக்கு எடுத்துக்கச் சொல்லுறேன்” 3 (ரூஹ் ப-73) என்று கூறி ராபியா அவர்களுக்கு உதவும்போது மதம் கடந்த அன்பு வெளிப்படுவதையும் மதநல்லிணக்கம் உருவாவதையும் லஷ்மி சரவணகுமார் அழகாக தன் புதினத்தில் எடுத்துக்காட்டியுள்ளார்.

## ராபியா, ஜோதியின் நட்பு பலப்படுதல்

நன்மைகளை வேண்டி நிற்கிறவர்களுக்கு அவர்கள் மனம் போலவே அமைந்துவிடுதல் வரம். அவ்வாறு ராபியாவிற்கு இஸ்லாமிய மததைச் சேர்ந்த

அன்வருடன் திருமணம் நடைபெற்றது. நிக்காவும் நல்லபடியாய் முடிந்திருக்க ராபியாவுக்கு இந்த புதிய வீட்டின் சூழலும், பழக்கமில்லாத மனிதர்களோடு ஒன்றாக வசிக்கவும் சேர்ந்து உணவருந்தவும் தயக்கமாய் இருந்தது. நாட்கள் செல்லச் செல்ல தயக்கங்கள் விளகி மாமி சமைக்கும் போதும் துவைக்கும் போதும் உதவிக்குப் போனாள், “நீ எதுக்குத்தா இதெல்லாம் செய்ற, பேசாம ரெஸ்ட் எடு” 4(ரூஹ் ப.66) எனச் சிரித்தபடியே மாமி அனுப்பி வைத்துவிடுவாள். கல்யாணக் கொண்டாட்டங்களும் விருந்தும் முடிந்து இரண்டு வாரங்களுக்குப் பிறகு அன்வரும் ராபியாவும் பேரையூருக்குத் தனியாக குடிவந்தார்கள். ஜோதி வளர்ந்தான் அவனோடு அவன் நளினமும் வளர்ந்தது. எல்லோரையும் போல படிக்கவே விரும்பிய ஜோதி பள்ளியில் எதிர்கொண்ட உதா சீனங்களையும் அவமானங்களையும் பொறுக்க முடியாமல் பள்ளிக்குச் செல்வதைக் குறைத்துக் கொண்டான். தன்னைப் பெற்ற தந்தையே “பொண்டுகப்பய தான நீயி... “எனக் கூறியதைக் கேட்டு அவமானம் கொண்ட புழுவைப் போல துடித்தான்.

இரண்டு மூன்று நாட்களாக ஜோதி வேலைக்குச் செல்லவில்லை என்பதைக் கேள்விப்பட்டு வந்த ராபியா “என்னடா ஆச்சு?” என அவன் தலையில் கைவைத்துக் கேட்க தேம்பித் தேம்பி அழத் துவங்கினான். எல்லோரும் தன்னை நோக்கி எறியும் வார்த்தைகளை, அவமானங்களை எல்லாம் ஒரு நாளில் சொல்லித் தீர்க்க முடியாதென்கிற வேதனை அந்தக் குரலில். நண்பர்கள், ஆசிரியர்கள், தெரிந்த தெரியாத மனிதர்கள் அவ்வளவு பேரும் அவன் நளிணத்தைக் பார்த்துக் கேலி செய்கிறார்களென்றால் சொந்த அப்பாவும் தங்கையும் கூட ஏன் கேலி செய்ய வேண்டும். என்று கூறி அழுது புரண்ட ஜோதியின் கண்களைத் துடைத்துவிட்டவள் “டேய் ஜோதி, யாரு என்ன சொன்னா என்னடா? ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு விதமான இயல்பு இருக்கும். அந்த மாதிரிதான் நீ பேசுறதும் நடக்கறதும். மத்தவங்க வார்த்தைய நீ உதாசினப்படுத்துடா. ஒரு தடவ காட்டிட்டா காலம் முழுக்க உன்னய மட்டம் தட்டிக்கிட்டுத்தான் இருப்பாங்க. இப்பிடி இருக்கறதுதான் உன்னோட இயல்பு. அத ஏன் நீ யாருக்காகவும் மாத்திக்கணும் அழாதடா தைரியமா இரு...” 5(ரூஹ் ப.76) ஜோதியை அவள் அந்நொடியில் முழுமையாக அரவணைத்து ஆற்றுப்படுத்தினால். உனக்காக நான் துவா கேக்கறேன். எல்லாம் சரியாய் போகும் என்று கூறி கிளம்பிச் சென்ற பிறகும்கூட அவள் அவனுக்காக அவள் மனமிரங்கியதும் அழியா சித்திரமாய் இருந்தது. இவ்வாறு ஒருவர்மீது ஒருவர். அன்பு கொண்டு மதங்கள் தாண்டிய உறவை வழுப்படுத்தியதை ரூஹ் புதினத்தின் மூலம் அறிய முடிகிறது.

### ராபியாவிற்கு ஜோதி செய்த பணிவிடைகள்

ராபியா கருத்தரித்திருந்தால். விருதுநகர். சிவகாசி ரயில் நிலையங்களிலும் ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஒரு துணிக்கடையிலும் அன்வருக்கு வேலை நடந்து கொண்டிருந்ததால் ராபியாவை வீட்டிலிருந்து கவனிக்க முடியவில்லை. அன்வரின் வேதனையைப் புரிந்து கொண்ட ராபியா “நான் வேணா ஜோதியை கூட வெச்சிக்கறேன்” என்று கூறினாள். துடுக்குத்தனமில்லாத பேச்சும், முகத்தில் ஒட்டியிருக்கும் சிரிப்புமாய் ராபியாவிடம் அக்கா. அக்கா... என வளைய வரும் ஜோதியை அன்வருக்கும் பிடிக்குமென்பதால் அவன் சம்மதித்தான். காலை பள்ளிக்கூடம் போவதற்கு முன்பாக ஒருமுறை, மதிய உணவு இடைவேளையின் போது ஒருமுறை மாலை ரசூலின் கடைக்குச் செல்வதற்கு முன்பாக ஒருமுறையென, ஜோதி அவனை வந்து பார்த்துவிட்டுச் செல்வான். விடுமுறை நாட்களில் பகல் நேரங்களை ஜோதி முழுக்கவும் அவளுடனேயே கழித்தான். தனக்கு அறிமுகம் இல்லாத இந்த ஊரின் மனிதர்களைப் பற்றின கதைகள் அவ்வளவையும். அவன் சொல்லித் தெரிந்து கொண்டாள். காய்கறிகளை வெட்டிக் கொடுப்பதும். வீட்டைக் கூட்டிச் சுத்தம் செய்வது. அவளுக்கு இறைச்சி வாங்கி வந்து குடுப்பது, தண்ணீர் பிடித்து வைப்பது. சுடு தண்ணீர் வைத்துக் கொடுப்பதென எல்லா வேலைகளையும் செய்வான். “எல்லா வேலையவும் ஏண்டா செய்ற? சுடு தண்ணீலாம் நான் வெச்சுக்க மாட்டனா?” என முகம் சுளித்தாலும் நான் பக்கத்துல இருக்கிற வரைக்கும் நான் வெச்சுத் தர்றேங்கா, நான் இல்லாதப்போ நீயே வெச்சுக்க” 6(ரூஹ் ப.79) என்று கூறி சிரிப்பான். ஆனால் அவன் இல்லாத நேரங்களில் அவளுக்கு என்ன தேவைப்படுமோ அவற்றை செய்து கொடுத்து விட்டுத்தான் போவான்.

ராபியாவின் அருகாமை ஜோதிக்கு முக்கியமானதாய் இருந்ததால் அவளுக்காகச் செய்யும் எந்த வேலைகளிலும் அவனுக்கு முகச்சுளிப்போ, மனவருத்தமோ ஏற்பட்டிருக்கவில்லை. பதிலாக தனக்கு உரிமையுள்ள ஒரு உறவாய் நினைக்க முடிந்தது. மனிதன் தன் சந்தோசங்களை அனுபவிக்க முதலில் அவனுக்குப்

பாதுகாப்பான தொரு சூலல் தேவைப்படுகிறது. அப்படியானதொரு கூடாய் அந்த வீடு மாறியிருந்தது. தன் முதுகுக்குப் பின்னால் அவமானங்கள் தொடராத இடமாய் உணர்ந்து சக மனிதர்களின் அன்பும் அரவணைப்புமில்லாத நீண்டகால ஏக்கம் மறைந்து நிறைவானவனாய்த் தன்னை உணரத் துவங்கினான். ஆண்களின் உலகோடு பெரிய அறிமுகமில்லாத ராபியாவிற்கு ஜோதி செய்யும் பணிவிடைகள் இஸ்லாம் மதம் கடந்த நல்லிணக்கத்தை எடுத்துக் கூறுவதாக அமைகிறது.

**ராபியாவிற்காக ஜோதி செய்த நேர்த்திகடன்**

கற்றுக் கொண்ட தொழிலில் தனது அபரிமிதமான திறமைகளை நிரூபித்திருந்தாலும் அதில் பெரிய சேமிப்பு எதுவும் கிடைத்திருக்கவில்லை. அன்வருக்கும் வாழ்வை நிறைவாக வாழ்வதற்கான வருமானம் கிடைத்தாலும் தன் பேராசையால் மதுரையில் புதிய உணவகம் ஒன்றைத் துவக்குவதற்கான யோசனையை நண்பன் கூறியது கேட்டு தன் கையிலிருந்தப் பணத்தையெல்லாம் நம்பிக் கொடுத்துவிட்டு பின் ஏமாந்து போனான். நண்பனின் ஏமாற்றத்தால் மனமுடைந்த அன்வர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு உயிர்த்தப்பி குடிக்கு அடிமையாகினான். எந்த வேலையும் இல்லாமல் ராபியாவின் குடும்பம் வறுமையால் துவண்டபோது அவளுக்கு உதவ முடியாமல் தவித்த ஜோதிலிங்கம் இறைவனிடம் முறையிட்டு வேண்டிக் கொண்டான்.

அத்திப்பட்டியைச் சுற்றின அத்தனை ஊர்களிலும் திருவிழா களைகட்டியிருந்தது. முளைப்பாரி எடுத்தல், மாவிளக்கு எடுத்தல், பால்குடம் எடுத்தலென ஒவ்வொரு நாளும் பக்தர்கள் தங்களின் நேர்த்திக்கடன்களுக்காகக் கூட்டம் கூட்டமாய் வந்து கொண்டிருந்தனர். நம்பிக்கையோடு வருகிறவர்களுக்கு எல்லாம் கைகூடும் இடமது. ஜோதி தீச்சட்டி எடுப்பதாக நேர்த்திக்கடன் போட்டிருந்தான். திருவிழாவின் கடைசி நாள் தீச்சட்டித் திருவிழா. பேரையூர், சாப்டூர், செம்பட்டி, மங்கல்ரேவு, தம்பிப்பட்டி என அத்திப்பட்டியைச் சுற்றி இருக்கும் எல்லா ஊர்களில் இருந்தும் ஏராளமானோர் தீச்சட்டி எடுத்து வந்தனர். நான்கைந்து நாட்கள் விரதமிருந்து ஜோதி தன் பிரார்த்தனையைத் தொடர்ந்தான். சட்டி எடுக்கும் தினத்தன்று காலைலே ராபியா தன் குடும்பத்தோடு ஜோதி வீட்டிற்கு வந்திருந்தாள். அவன் குளித்து மஞ்சள் வேட்டி சட்டையுடன் முதலில் ராபியா அன்வர் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினார். ஊர்வலம் துவங்கி ஒவ்வொரு வீதியிலும் புதிது புதிதாய் ஆட்கள் சேர்ந்தபடியே இருந்தார்கள். தீச்சட்டியின் தகிப்போ சூடோ எதுவும் ஜோதியை வருந்தவில்லை. ‘‘மாரியாத்த ராபியாக்கா பிரச்சனலாம் சரியா போயிரனும். மனப்பூர்வமாய் வேண்டிக் கொண்டான். ‘‘7(ரூஹ் ப.161) இவ்வாறாக தான் நட்புக் கொண்ட இஸ்லாமிய பெண்ணான ராபியாவிற்காக கோவிலில் வேண்டி நேர்த்திக்கடன் செய்வதும், இந்துகோவில் திருவிழாவில் ராபியா கலந்து கொண்டு ஜோதியை ஆசிர்வாதம் பண்ணுவதும் சாதி, மதம், பேதம் கடந்த மதநல்லிணக்கத்தை ரூஹ் புதினத்தில் எழுந்தாளர் லஷ்மி சரவணகுமார் எடுத்துக் காட்டியுள்ளது, சாலச்சிறந்ததாகும்.

**மதம்மாறிய சடங்குமுறை**

அத்திபட்டி எல்லையைக் கடந்தபோது ஜோதிக்கும் சாமி இறங்கியது. கூட்டத்தை விலக்கி உக்கிரமாக அவன் சாமியாடியபோதும் கையலிருந்த தீச்சட்டி ஓர் அங்குலம்கூட நகர்ந்திருக்கவில்லை. ஊர்வலத்தில் வந்த நிறையபேர் அவன் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்க, ஜோதியின் தங்கை தேவியும் அவளது கணவன் இகோவும் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினர். ஜோதி கைநிறைய விபூதியை அள்ளி இருவர் தலையிலும் அடித்தான். ஜோதியின் அம்மா தங்கை எல்லோரும் மஞ்சள் தண்ணீர் ஊற்றி சாமியைச் சாந்தப்படுத்த முயன்றார்கள் முடியவில்லை. ஊர்க்காரர்கள், பூசாரி ஜோதியின் ஆக்ரோஷத்தைக் குறைக்க என்னசெய்வதென தெரியாமல் குழம்பியபோது, தேவிதான் சட்டென யோசித்து அந்த முடிவெடுத்தாள். ‘‘அக்கா நீ அவனுக்கு மஞ்ச தண்ணி ஊத்துக்கா’’ என்று ராபியாவிடம் சொல்ல ஊர்க்காரர்கள் அத்தனை பேரும் அவர்களை ஆச்சர்யமாய்ப் பார்த்தனர் ‘‘ஏய் நான் எப்டிடி?’’ என ராபியா, தயங்க, சட்டி எடுத்து வந்த ஒரு வயதான அம்மா ‘‘ஏம்மா யோசிக்கிற எந்த சாமி கும்பிட்டா என்ன? யார் பேச்சுக்கு ஒரு மனுஷனோட மனசு கட்டுப்படுதோ அவங்க மனசார என்ன வேணாலும் செய்யலாம். சாமி கோவிச்சுக்காது. நீ தண்ணிய ஊத்து’’ 8(ரூஹ் ப.162,163) என்று சொன்னாள். உடனிருந்த சிலரும் அதை ஆமோதிக்கத் தயக்கத்தோடு ராபியா அவனுக்கு மஞ்சள் தண்ணீர் எடுத்து ஊற்றினாள். அந்தக் கூட்டத்தில் அவள் ஒருத்தியைப் பார்த்தபோது மட்டுந்தான் ஜோதியின் கண்களில் கருணை நிறைந்தன். அவள் மஞ்சள் தண்ணீரை தலையிலும் உடலிலுமாக ஊற்றியபின் ஜோதி கொஞ்சம் கொஞ்சமாய் மூர்க்கம் குறைந்து இயல்புக்கு வந்தான். சட்டியை செலுத்திவிட்டு

திரும்பிய ஜோதியின் கைகளை எடுத்துப் பார்த்த ராபியா கொப்புளங்கள் நிறைந்த உள்ளங்கைளில் வெக்கை தெரியாமலிருக்க ஊதினாள். அவள் தன்னை இப்படி வருத்திக் கொள்ள வேண்டுமாவென்கிற அவளின் வேதனை கண்ணீரத் துளிகளாய் அவனின் உள்ளங்கையில் வழிந்தன். ஜோதி தனக்காக இல்லாமல் தான் அன்பு கொண்ட ராபியாவிற்காக நேர்த்திக்கடன் செய்வதும், ராபியா குடும்பத்துடன் வந்து கோவில் திருவிழாவில் கலந்து கொண்டு சடங்குமுறை செய்வதும், அன்பு கொண்ட மனிதர்கள் எந்தவிதமான பேதமை இல்லாமல் ஒருவருக்கொருவர் நட்பு பாராட்டுவதையும், இக்கால இலக்கியங்களிலும் காண முடிகிறது என்பதை ரூஹ் புதினம் நமக்கு உணர்த்துகின்றன.

**முடிவுரை**

எல்லாரிடத்தும் அன்பு செய்தல் ஒன்றே, நல்லிணக்கம் உருவாக நயன்மிக்க வழி என்பதை திருவள்ளுவர்,

**"அன்பு ஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்**
**நண்பு என்னும் நாடாச் சிறப்பு"** (குறள் 74)

என்ற குறள் மூலம் புலப்படுத்துகிறார். இவ்வாறாக ராபியா, ஜோதியின் நட்பு இந்து, முஸ்லீம் என்ற மதம் கடந்த நட்பாகவும், அந்நட்பிற்காக ஜோதிலிங்கம் செய்யும் பணிவிடைகளையும், ராபியாவின் வறுமையைப் போக்க ஜோதி செய்யும் நேர்த்திக்கடன் மூலம் நட்பைத் தாண்டிய அவர்களின் பந்தம் அக்கா, தம்பி உறவாக மலர்வதையும், தன்னுடைய மதக்கொள்கைகளையும் கட்டுப்பாடுகளையும் மீறி ராபியா ஜோதிக்காக சடங்குமுறை செய்வதையும் ரூஹ் புதினத்தில் எழுத்தாளர் லஷ்மி சரவணகுமார் சுட்டிக்காட்டிருப்பது "எம்மதமும் சம்மதம்" என்ற பொதுவான நல்லிணக்கக் கோட்பாட்டை எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

**துணை நின்ற நூல்கள்**

1. லஷ்மி சரவணகுமார், ரூஹ், zero Degree Publishing, 2020

**அடிக்குறிப்புகள்**

1. லஷ்மி சரவணகுமார், ரூஹ், zero Degree Publishing, பக்கம் -69
2. மேலது பக்கம் - 72
3. மேலது பக்கம் - 73
4. மேலது பக்கம் - 66
5. மேலது பக்கம் - 76
6. மேலது பக்கம் - 79
7. மேலது பக்கம் - 161
8. மேலது பக்கம் - 162, 163

Vol. 9 Special Issue 1 October 2024 E-ISSN: 2456-5571

# கொற்றவை புதினம் உணர்த்தும் சடங்குகள்

**கு. ஈஸ்வரன்**
*முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*அரசு கலைக் கல்லூரி, (தன்னாட்சி) கோவை*

**முன்னுரை**

தமிழ் இலக்கியங்களில் திருநங்கைகளின் சடங்கு முறைப்பற்றி ஏராளமான பதிவுகள் காணப்படுகின்றன. சடங்குகள் என்பது பிற்போக்கு தனமாக இருந்தாலும் இன்றைய மனிதர்கள் நம்பிக்கையுடன் செய்கின்றனர். நாட்டுப்புற மக்கள் இச்சடங்குகள் செய்து வருவதை காணமுடிகின்றது. மனிதர்கள் தோன்றும்போது சடங்குகள், இறக்கும்போது சடங்குகளை அறிந்துகொள்ள முடிகின்றது. கொற்றவை புதினத்தின் திருநங்கைகளின் சடங்கு முறைகளை வாழ்வியல் சார்ந்த சடங்கு முறைகளை உணர்த்துகின்றது. திருநங்கையர்கள் தனக்கென்று சமூகத்தில் தனியிடம் பிடித்துள்ளனர். வாழ்வியல் செயல்பாடுகளை உணர்த்தும்போது சடங்குகள் செய்வதை முக்கியமாக கொண்டுள்ளனர். சமூகம் திருநங்கையர்களை வாழ்வியல் நிலைப்பாட்டை சில இறப்புச் சடங்குகள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. கொற்றவை புதினம் உணர்த்தும் சடங்குகளின் வழியாக காணலாகின்றது.

**மூத்த திருநங்கைகளுக்கு மரியாதை**

திருநங்கை கொற்றவையும் ஆராய்ச்சி மாணவி ஆதிரையும் பலதரப்பட்ட திருநங்கையரைச் சந்திக்கச் செல்கின்றனர். அவ்வாறு சந்திக்கும் மூத்த திருநங்கைகளுடைய பாதங்களை இளம் திருநங்கைகள் தொட்டு வணங்கி வணக்கம் செலுத்துவது மரபாகும். அவ்வாறு வணங்கும் இளம் திருநங்கையை வாழ்த்துவது பெரியோரின் கடமையாகும். “பாம்படுத்தி அம்மா கொற்றவை படுத்திருந்த உருவத்தின் காலை தொட்டு வணங்கினாள். திடுக்கென்று விழித்துக் கொண்டு பஞ்சம்மா, ‘ஜியோ பேட்டி’ (வணக்கம் மகள்)வா, உக்காரு எப்போ வந்தா என்றார்.” (கொற்றவை ப.6) இவ்வாறு மூத்த திருநங்கையர்களை மதித்து நடப்பது இன்றைய இளம் தலைமுறையினர் கற்றுக் கொள்ள வேண்டிய பண்பிணைப் புதின ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

**தத்துச் சடங்கு**

தத்துச் சடங்கு குறித்து முனைவர் கி. ஐயப்பன் கூறுகையில், “ஹார்மோன் குறைபாடு காரணமாக வீட்டில் தங்களுக்கு முழு சுதந்திரம் இல்லை என்பதாலும் வீட்டாரின் அன்பு குறைபாடு காரணமாகவும் வீட்டை விட்டு வெளியேறும் திருநங்கை மூத்த திருநங்கைகளுடைய தன் மகளாகத் தத்தெடுத்துக் கொள்கின்றனர். இதுக்கு பலர் அரிய சடங்கு நடத்தப்படுகிறது. சடங்கு நடத்தப்படும் நாள் முதல் தாய் மகளாக வாழ்கின்றனர். ஒரு தாய் எத்தனை மகள்களை வேண்டுமானாலும் தத்தெடுத்து கொள்ளலாம்” (அரவாணிகள் அன்றும் இன்றும்.ப.37) இவ்வாறு தன்னுடைய பாலின மாற்றத்தால் குடும்பத்திலிருந்து வெளியே விரட்டியடிக்கப்பட்டு அல்லது வீட்டை விட்டு வெளியேறி பெண்தன்மைக் கொண்டவர்களை திருநங்கையர்கள் தத்து எடுத்துக் கொள்ளும் நிகழ்வுக்கு ரீத்து போடுதல் என பெயர். அவ்வாறு பெற்றோர்களால் புறக்கணிக்கப்பட்ட பஞ்சம்மா, “ரீத்து தான் ஒரு பொட்டைக்கு நடக்கிற முதல் சடங்கு முதல்முதலா திருநங்கையா கூட்டத்துக்குள்ள வரப்போ, பெரியவங்க எல்லோரும் கூடி பேசி புதுசா வரவங்களத் தத்து எடுப்பாங்க அந்த சடங்கு தான் ரீத்து.” (கொற்றவை.49) திருநங்கைகளுக்கான உலகத்தில் தன்னைத் தேடி வரக்கூடிய நபரின் பெண்மை உணர்வினை மதித்து அவனைப் பெண்ணாகவே அங்கீகரித்து பெயரிடும் முதல் சடங்காகும் இதனை கொற்றவை புதினத்தின் ஆசிரியர் தெளிவாகக் கூறியுள்ளார்.

**திருநங்கையர்களின் சமூக கட்டமைப்புகள்**

திருநங்கையர் தங்களுக்கான உறவு முறைகளைப் பற்றி “ஆண் உறவு முறைக் கூறும் தந்தை, அண்ணன், தம்பி, தாத்தா, மாமா போன்ற அனைத்து ஆண் சொல்லாடல்களையும் தவிர்த்து விடுகிறார்கள். அம்மா, அக்கா, தங்கை, பேத்தி போன்ற பெண் வழக்காறுகளையே பயன்படுத்தி வருகிறார்கள்” (திருநங்கைகள் வாழ்வியல் இறையியல். பா.37) என்று சூ.ம. செயசீலன் கூறுகின்றார். இவ்வாறு இரத்த உறவுகளற்ற திருநங்கையர் சமூகம் தங்களுக்குள்ளேயே உறவு முறையினை வகுத்து கொண்டு வாழ்கின்றனர். அதுவும் பெண்வழிச் சமூகத்தினை அதாவது தாய்வழிச் சமூகமாக இன்றைக்கும் கடைபிடிக்கின்றனர். “எங்க திருநங்கை

சமூகத்துலயும் கட்டமைப்பு இருக்கு ஒரு திருநங்கை புதுசா வரப்போ, எல்லா பெரிய திருநங்கைகளும் ஒன்னு கூடுவாங்க. அதுக்கு பேரு ஜமாத்துனு சொல்லுவோம். அங்கு இருக்கிற ஒரு பெரிய திருநங்கை யாராவது மகளாய்த் தத்தெடுப்பாங்க என்னையும் அப்படித்தான் என் குரு தத்தெடுத்துக்கிட்டாங்க'' (கொற்றவை.பா. 50) இவ்வாறு பாட்டி, அம்மா, பெரியம்மா, சித்தி, அண்ணி, அக்கா, தங்கை என உறவு முறைகளை வைத்து குடும்பக் கட்டமைப்புக்குள் திருநங்கையர் சமூகம் ஒன்றாக வாழ்ந்து வருகின்றனர்.

**திருநங்கைகள் இறப்பு**

திருநங்கை கண்மணி காலையில் கடை கேட்கப் போவா, இரவு நேரங்களில் பாலியல் தொழில் செய்து அதன் மூலம் கிடைக்கக்கூடிய பணத்தை வைத்துக்கொண்டு தன்னுடைய மகள் மலர். மங்கை ஆகியோரை, படிக்க வைத்துள்ளார். தன்னுடைய வயிற்றுப் பிழைப்பிற்காக பாலியல் தொழில் செய்கின்றனர். அவ்வாறு ஒருநாள் பாலியல் தொழிலுக்கு செல்லும் இடத்தில் ஒருவன் தான் என அழைத்துச் சென்று அங்கு சென்று பார்த்த பிறகு தான் ஏழு பேர் இருந்தனர். இதனால் அச்சத்தில் ''அவ மொறண்டு பிடிச்சு தப்பிச்சிருப்பாளாட்ருகு, வயித்துல கத்தியால குத்திருக்கானுங்க மொத்தம் பன்னிரெண்டு எடத்துல குத்துபுருமா கொலையுருமா தான் நான் பார்த்தேன் என் மடியிலேயே போயிட்டா. **(கொற்றவை. ப. 96)** என்று பஞ்சம்மா கூறினாள்.

**இறப்பு சடங்கு**

திருநங்கையர் ஒருவர் இறந்துவிட்டால் அவர்களின் மதம் சார்ந்த முறையில் அடக்கம் செய்கின்றனர். கொற்றவை புதினத்தில் கண்மணி திருநங்கை இறந்த பின் ''கண்மணி படவேளி (பெரியவீட்டு திருநங்கையை) சேர்ந்த திருநங்கையானதால் சோட்டேவேளி (சின்னவீட்டு திருநங்கையை) சேர்ந்த திருநங்கைகள் வந்து கோடி புடவை மலர் மாலை அணிவித்து மரியாதைச் செய்கின்றனர். பின்னர் கண்மணியின் உடலை வெளியே எடுத்து வந்து சவப்பெட்டியில் வைத்தனர். இமாம் வந்து ஒரு முஸ்லீமுக்கு இறுதியாக ஓதும் குரான் வசனங்களை ஓதும்போது தான் கண்மணி பிறப்பால் ஒரு முஸ்லீம் என்பது கொற்றவைக்குத் தெரிந்தது. (கொற்றவை.ப.88) என்று படவேளி சோட்டேவேளி என்று தென்னிந்தியாவில் திருநங்கைகளின் சமூகம் இரண்டு குழுவாக இயங்குவதையும் அதுவும் ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு தலைமை நிர்வாகமாக இருக்கக் கூடியவர் எடுக்கக்கூடிய முடிவிற்கு கட்டுப்பட்டு இயங்குகின்றனர். அவர்களின் சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்கள் அந்தந்த தலைவியின் பொறுப்பில் நடப்பதைப் புதின ஆசிரியர் மகாலட்சுமி ராகவன் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறுகிறார்.

**பஞ்சமா ஒப்பாரி பாடுதல்**

மனிதர்களாகப் பிறந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் இறப்பு என்பது ஒன்று கண்டிப்பாக உள்ளது. கணவன் இறந்து விட்டால் கணவனின் அருமை பெருமைகளைக் கூறி மனைவி ஒப்புவைத்து பாடுகிறாள். அதே போல் திருநங்கை மரணத்தின் போது கிடத்தப்பட்டிருக்கும் சடலத்தின் அருகில் உடன் இருக்கும் திருநங்கைகள் வட்டவடிவில் நின்று தலைமுடியை விரித்து போட்டுக் கொண்டு தன்னுடைய மார்பில் அடித்துக் கொண்டு ஒப்பாரி பாடுவார்கள் அவ்வாறாக பஞ்சம்மா தன்னுடைய மகள் கண்மணியின் இறப்பினால் தன்னுடைய மனதில் உள்ளவற்றை பாடலாகப் பாடுகிறாள்.

> **"இப்படிக் காலனுக்கு பலி கொடுக்கவா**
> **ஒனக்கு கண்மணின்னு பேருவச்சேன்?**
> **பச்சைப் புடவை உடுத்தி, பச்சணம் வச்சு ………**
> மாதா தான் எங்கு போனா?
> **(கொற்றவை. ப. 86 - 87)**

எனப் பஞ்சம்மா வயிற்றில் அடித்துக் கொண்டு அழுவது மூலமாக தன்னுடைய மகளின் இறப்பினைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை என்பது உணரமுடிந்தது.

**இறப்பிற்கு பின் இறுதி சடங்குகள்**

திருநங்கையர் சமூகத்தில் திருநங்கையர்கள் யாரேனும் இறந்தால், பொது சமூகப் பெண்களுக்கு நடைபெறும் இறுதிச்சடங்கு போன்றே அவர்களுக்கும் நடத்துகின்றனர். இறந்தவர் உடல் அருகில் ஆண்களை இவர்கள் அனுமதிப்பதில்லை. திருநங்கையர் இறப்புச் சடங்குகள் பெரும்பாலும் திருநங்கை இனத்தைத் தவிர பிறர் கலந்து கொள்வது மிகக் குறைவாக காணப்படுகிறது. இறந்தவர் சடலத்தைப் பச்சை மட்டையில் கிடத்திச் செருப்பால் அடித்துக் கொண்டே இடுகாடு வரை எடுத்துச் செல்கின்றனர். இறந்த திருநங்கைக்கு நெருங்கிய உறவினராக இருக்கக்கூடிய திருநங்கைகள் ஆபரணம் விலக்கி, வெள்ளைப் புடவை அணிந்து வளையல்களை உடைத்து முப்பது நாட்கள் விரதம் மேற்கொள்கின்றனர். அவ்வாறு செய்யக்கூடிய தகுதி உடையவர் தல மகள் (சேலா)விற்கு தான் உண்டு. அவ்வாறு

கொற்றவை புதினத்தில் “மலரையும் மங்கையும் புதுபெண்ணாய் அலங்கரித்தனர் கைநிறைய வளையல் இட்டனர். நெற்றி நிறைய பொட்டும் தலை நிறைய பூவும் சூட்டினர். வீட்டில் அமர வைத்து ஒரு கைம் பெண்ணிற்கு செய்யும் அத்தனை சடங்குகளும் நிறைவேற்றப்பட்டன. கோட்டேஹவேளி திருநங்கைகள் வந்து இருவரின் கைவளைகளையும் உடைத்தனர் பொட்டழித்து பூவையும் எடுத்தனர். பின்னர் இருவருக்கும் வெள்ளைப் புடவை போர்த்தினர்.” (கொற்றவை.ப.89) இவ்வாறு இறந்த தாயிற்காக மலர் மற்றும் மங்கை ஆகிய இரண்டு பேரும் வெள்ளைப் புடவையில் அவர்களது முகம் களையிழந்து கொஞ்சம் வெறுமையாகவே காட்சியளித்தது.

### கண்மணிக்கு நாற்பதாவது நாள் கும்பிடுவது

பொதுச்சமூக மக்கள் இறந்தவர்களுக்கு நாற்பதாவது நாள் சடங்குகள் செய்கின்றன. அதுபோல கண்மணி இறந்து நாற்பது நாள் ஆகியவுடன் அரவாண் குப்பத்தில் பஞ்சம்மா வீட்டில் சோட்டேஹவேளிய இருந்து திருநங்கைகள் பதினைந்து பேர் சீர்வரிசை பொருள்களாகப் புடவை, வளையல் என ஒரு தட்டில் வைத்திருந்தனர். அனைவரும் பஞ்சம்மா (பாம்பெடுத்தி) வணக்கம் சொல்லி காலைத் தொட்டு ஆசீர்வாதம் வாங்கினர். மலரும் மங்கையும் அதேபோல் (பாம்படுத்தி) வணக்கம் சொல்லி ஆசிர்வாதத்தை வாங்கிக் கொண்டனர். கண்மணிக்கு பிடித்த உணவு வகைகள் எல்லாத்தையும் படையில் வைத்தனர். பின்னர் அனைவருக்கும் உணவு பரிமாறப்பட்டது மங்கையும் மலரும் வெள்ளை புடவையிலிருந்து சீர்வரிசையாக கொடுக்கப்பட்ட கலர் புடவை அணிந்து கொண்டு தாயின் நாற்பதாவது நாள் பூசையில் கலந்து கொண்டனர். இறந்தவர்களுக்காக விரதம் மேற்கொள்ளும் நாட்களில் காக்கைக்கு சோறு வைக்கின்றனர். இறந்தவர் ஆன்மா காக்கை வடிவில் வந்து உணவருந்துவதாக நம்புகின்றனர். இறந்தவருக்குத் தொடர்புடையவர்கள் தங்கி இருக்கும் இடங்களில் கடவுளர் படங்களுக்கு நாற்பது நாட்களுக்கு வழிபாடு செய்வதில்லை. மேலும் சாமி திருவுருவ படங்களை திரையிட்டு மறைத்து வைக்கின்றனர்.

### உறவினர்களால் ஏற்படும் சிக்கல்கள்

திருநங்கை பஞ்சம்மா தன் பெண்மை உணர்வினை இளம் வயதிலேயே உணர்ந்து தன்னுடைய தாய்மாமன் முத்தையாவிடம் கூறினான். அவற்றை கேட்டதும் தன்குடும்ப கௌரவம் பாதிக்கும் என அறிவுரை கூறினான். ஆனால் திருவிழாவிற்கு குடும்பத்துடன் செல்லும்போது புதிய ஆடையாக சட்டையும் டவுசரும் வாங்கி கொடுத்தான் அதற்கு பஞ்சம்மா இந்த புத்தாடை எனக்கு பிடிக்கவில்லை இதற்கு பதிலாக பெண்கள் உடுத்தும் பாவாடை தாவணி தான் புடிச்சிருக்கு நான் பொண்ணா மாறிறேன் மாமா என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியா என்ற கேள்வி சுற்றி இருந்தவரின் காதுகளுக்கு எட்டும் முன்பே கன்னத்தில் பளார் என்று அறையும் பொழுது சுருண்டு விழுந்தான். “ஏன்டா.. பொட்ட நாயே.. நீ குழைஞ்சு குழைஞ்சு நடக்குறதும் பொட்டைகளா பார்க்குறதும் பேசறதும் பாத்து நா அப்பவே சந்தேகப்பட்டேன்டா. ஆனா சின்ன பையலாச்சே தெரியாம ஏதோ செய்யுற திருந்திடுவேன்னு பார்த்தா கல்யாணம் கேக்குதோ உனக்கு. ஓங்கி ஒரு உதை உதைத்தான். என்னடா பார்வை எந்திரா.. வாடா வீட்டுக்கு என்று தலை முடியைப் பிடித்து தரதரவனை இழுத்துச் சென்றான்.” (கொற்றவை.ப. 148) இதனைப் பார்த்த பெற்றோர்கள் என்ன செய்வது என தெரியாமல் திகைத்து நின்றனர்.

### அப்பாவின் இறப்பில் கலந்து கொள்ள மறுத்தல்

திருநங்கை பஞ்சம்மாவின் அப்பா இறந்து விட்டார் என்ற செய்தியை கூட தெரியப்படுத்தவில்லை இறப்புச்செய்தி அறிந்து பிறகு தன்னுடைய சொந்த ஊருக்கு சென்றேன். என்னுடைய அம்மாவிற்கு அடையாளம் தெரியவில்லை இருப்பினும் தன்னை அடையாளம் கண்டு கொண்ட முத்தையா மாமாவை கட்டி அணைத்து அழவேண்டும் எனத்தோன்றிய போது அருகில் சென்ற உடன் சற்றும் எதிர்பார்த்திராத வேலையில் பஞ்சம்மாவை எட்டி அடி வயிற்றில் ஒரு உதை தள்ளி துண்டாய் போய் விழுந்தான். “ஏண்டா பொட்ட நாயே! பொண்டு பயலே இப்ப இங்க எதுக்குடா வந்த? எங்க மானத்தை வாங்குறதுக்கா? ஒன்னைய நெனச்சு நெனச்சு தான்டா எங்க மாமன் செத்துச்சுனு பயங்கரமா அடி அடின்னு அடிச்சு செருப்பைக் கழட்டி என்னய அடிக்காத எடமே இல்ல. ஏன்டா புடவ கட்டுனா நீ பொம்பள ஆயிருவியா கழட்றனு அத்தனை பேரும் முன்னாடி என் சேலைய உருவிடுச்சு எங்க முத்தையா மாமா” (கொற்றவை. ப.156-157) ஆனால் இவற்றை தடுத்து நிறுத்துவதற்கு கூட யாருமே முன் வரவில்லை அங்கு இருந்து தப்பிச் சென்றாலே போதும் என்று நினைத்து ரத்தம் சொட்டச் சொட்டத் தப்பிச்சு ஓடினால் பஞ்சம்மா இவ்வாறு திருநங்கைகள் தன்னுடைய அப்பாவின் முகத்தை இறுதியாக பார்க்க வேண்டும் என்று நினைத்து வந்தவனுக்கு ஏற்பட்ட நிலைமை மிகவும் மோசமானதாக உள்ளது.

**மாதவிடாய் ஏற்பட்ட பெண்ணிற்கு திருநங்கை மங்கை உதவுதல்**

இறைவனின் படைப்பில் பெண்களுக்கு மட்டும் மாதவிடாய் ஏற்படும்படி படைத்துள்ளான். அப்படிப்பட்ட நேரத்தில் என்ன செய்வது என்று தெரியாமல் தவிர்த்து கோதையை பார்த்து திருநங்கை மங்கை ஏன் திடிரென முகத்தில் ஒரு மாற்றம் என்று கேட்டால் அதற்கு நான் தயக்கத்துடனே கோதை கூறினால் இன்று எதிர்பாராமல் எனக்கு மாதவிடாய் ஏற்பட்டு விட்டது. அவற்றை எவ்வாறு தங்களிடம் கூறுவது என சற்று தயக்கப்பட்டு பிறகு கூறினார். அதற்கு திருநங்கை மங்கை எங்களுக்கு இது போன்ற நிகழ்வு ஏற்படுவதில்லை அதனால் எங்களிடம் சானிட்டரிப்பேடு இல்லை எனவும் சற்று இருங்கள் என கூறிய மங்கை வேகமாக எழுந்து வெளியே போனாள் இரண்டு நிமிடங்களில் மீண்டும் வந்தாள். ‘‘இந்தாங்க என்று தான் முந்தியில் மறைத்து எடுத்து வந்த சானிட்டரிப்பேடை கோதையிடம் நீட்டினாள். இங்கே பாக்கெட்டா கெடைக்காது. எங்களுக்கு இது தேவையும் படாது கடைக்கார அக்காவோடது ஓசி கேட்டு வாங்கியாந்தேன். எழுந்து பின்னாடி வாங்க. பாத்ரூம் இருக்கு மறைவாக இருக்கும் ஆனா தப்பா கதவு எல்லாம் இல்ல கீத்து வெச்சி இருக்காங்க நீங்க தைரியமா போங்க. நான் வெளியே நிற்கிறேன் என்று கோதையை அழைத்துச் சென்றாள்.’’ (கொற்றவை.ப.188) இதன் மூலமாக தெரிந்து கொண்டது என்ன என்றால் திருநங்கைகள் தங்களுக்கு நெருங்கி ஒரு பெண்ணிற்கு ஏற்பட்ட ஒரு சிக்கலை தீர்த்து வைத்ததன் மூலம் இவர்களுக்குள்ளும் மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மையுடையவர்கள் என்பதை உணரமுடிகிறது.

**தத்தெடுத்து வளர்த்தல்**

திருநங்கைகள் குழந்தை பெற்றுக் கொள்ள முடியாது என்பதாலும் வயது மூப்படையும் போது தன்னை பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதாலும் தங்களுடைய சமூகத்திற்குள்ளேயே ஒரு திருநங்கை தத்தெடுத்துக் கொள்வது அவ்வாறு தான் வைராக்கியமேரி ஒரு இளம் திருநங்கையைாகவுள்ள மின்னாராவை தத்தெடுத்து வளர்த்து படிக்கவும் வைத்துள்ளேன். ‘‘அவ மின்னரா.. எம் பொண்ணு தான் இங்க ரெண்டாவது வருஷம் படிக்குற.. அந்தா அதான் ஏதோ படிக்குற.. எவாயுள நொழைய மாட்டேனுது ஆனா நல்லா வருவா.. ஆமா கொற்றவை என வைராக்கியமேரி கூறினாள் (கொற்றவை.ப.27) இதனைக் கேட்கும் போது தெரிய வருகிறது என்னவென்றால் தாயைப்போல பிள்ளை நூலை போல சேலை என்ற பழமொழிக்கு ஏற்ப சமூகத்தில் உயர்வாக்கம் பெற்று அனைவராலும் மதிக்க கூடிய வகையில் ஆட்டோ ஓட்டக்கூடிய தாயின் எதிர்பார்ப்பிற்கு ஏற்றார் போல மின்னாராவும் கல்வி மூலம் உயர்வு பெற வேண்டுமெனவும் வைராக்கியமேரி எண்ணுகிறாள்.

**முடிவுரை**

திருநங்கையர்கள் அனைவரும் இச்சடங்குகளை மேற்கொள்வதை சமூகத்தில் காணமுடிகின்றது. கொற்றவை புதினம் இறப்புச் சடங்குகளை முன்னோர்கள் கடைப்பிடித்து வந்ததை மரபு மாறாமல் பரம்பரையாக இச்சடங்குகளை செய்து வருகின்றனர். இச்சடங்குகள் மூலமாக இறைவனின் அருள் இயல்பாக கிடைக்கும் என்ற நம்பிக்கையில் செய்கின்றனர். ஒப்பாரிப்பாடல்கள் தன் வாழ்க்கையில் கடந்துவந்த துன்ப நிலைகளை ஒப்பாரிப் பாடல்கள் மூலமாக வெளிப்படுத்துவதை இப்புதினத்தில் வழியாக அறிந்துகொள்ள முடிகின்றது. இப்பாடல்கள் உளவியல் ரீதியாக இயல்பாக பாடப்படுகின்றன. கொற்றவை புதினம் சடங்கு முறையில் திருநங்கையர் தலைமுறையாக கடைப்பிடித்து கொண்டு வருவதை காணமுடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

1. மாகலட்சுமி ராகவன் 2022 கொற்றவை மனிதநேயத்திற்கானத் தேடல் மதுரை.
2. முனைவர் கி. அய்ப்பன் 2012 அரவாணிகள் அன்றும் இன்றும் விசாலட்சுமி பதிப்பகம், விழுப்புரம்.
3. சூ.ம. செயசீலன் 2010 திருநங்கைகள் வாழ்வியல் இறையியல், வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல்.

# விடுகதையின் பின்னிணைப்புப் பகுதியும் அதன் செயல்பாடுகளும்

**முனைவர் ஆ. கணேஸ்வரி**

*இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் (ஓய்வு)*

*தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி, மேலூர்*

## முன்னுரை

விடுகதை சொல்லுதல் என்பது ஒரு வகைக் கருத்துப் பரிமாற்ற நிகழ்த்துதலாகும். விடுகதை நாட்டுப்புற மக்களின் கற்பனைத் திறனையும் அறிவுத்திறனையும் வெளிப்படுத்துகின்ற நாட்டுப்புற இலக்கிய வகை. கள ஆய்வின் போது விடுகதை நிகழ்த்துதற் சூழல்செயற்கையான முறையில் உருவாக்கப்படுவதுண்டு சில சமயம் இயற்கையாக உருவாவதும் உண்டு. எத்தகைய சூழலாக இருந்தாலும் நிகழ்த்தப்படும் விடுகதையின் தன்மை பார்வையாளரின் சிந்தனையைத் தூண்டுவதற்குரிய காரணியாக அமைகின்றது. அவ்வாறு விடுகதை நிகழ்த்துதலில் வெளிப்படும் விடுகதைப் பனுவலில் காணப்படும் சொற்கள், தொடர்கள் ஆகியவையும் விடுகதைப் பனுவலின் சந்த அமைப்பு, விடுகதைப் பனுவலில் இடம்பெறும் பின்னிணைப்புப் பகுதி ஆகியவையும் பார்வையாளரின் சிந்தனையைத் தூண்டும் தூண்டற் காரணிகளாக அமைந்து பல புதிய விடுகதைப் பனுவல்கள் நிகழ்த்துநரிடமிருந்து வெளிவரக் காரணமாக இருக்கின்றன.

மேலும் விடுகதைப் பனுவல் சார்ந்த பனுவல்களான விடுகதைக்கான விடை, விடுகதைப் பனுவலுக்குத் தரப்படும் அதிகப்படியான புறவிளக்கங்கள் ஆகியவையும் விடுகதை நிகழ்த்துதற் சூழலில் பார்வையாளருக்கு தூண்டற்காரணிகளாக அமைந்து புதிய விடுகதைப் பனுவல்கள் வெளிப்படக் காரணமாகின்றன.

## பின்னிணைப்புப் பகுதியின் செயல்பாடுகள்

இக்கட்டுரையில் விடுகதையின் பின்னிணைப்புப் பகுதி என்று எதைக் கூறுகிறோம் என்பதைப் பற்றியும் பின்னிணைப்புப் பகுதியின் செயல்பாடுகள் குறித்தும் காண்போம்.

நிகழ்த்துதலின் போது சொல்லப்படும் விடுகதைக்கு பார்வையாளர் விடை கூறிவிட்டால் அவருக்கு அதாவது விடை கூறியவருக்கு இன்ன இன்ன பொருட்கள் பரிசாகக் கொடுக்கப்படும் என்ற செய்தி சொல்லப்படும் விடுகதையின் கடைசிப் பகுதியாக இணைத்துப் பின்னிணைப்புப் பகுதியாகச் சொல்லப்படுகிறது சான்றாக்

**'வரிவரி வண்ணக் கொக்கு**
**வாயுள்ள முத்துக் கொக்கு**
**இந்திரன் சேனைக் கொக்கு**
**இந்தக் கதை சொன்னவுகளுக்கு**
**எட்டுக்கட்டு வெத்தலையும்**
**எண்ணாயிரம் கொட்டைப்பாக்கும்.'**

என்ற விடுகதையில் இடம் பெற்றுள்ள இறுதி மூன்று அடிகள் பின்னிணைப்புப் பகுதியாகும். முதல் மூன்று அடிகள் மட்டுமே விடுகதை. இவ்விடுகதைக்குக் 'கருக்கரிவாள்' என்பது விடை. இவ்விடுகதையில் இறுதியாக இணைக்கப்பட்டுள்ள பின்னிணைப்புப் பகுதி விடுகதையில் இடம்பெறாவிட்டால் கூட விடுகதை புரிந்து கொள்ளப்படும். என்றாலும் விடுகதையின் புதிர்த் தன்மையை அதிகரித்துக் காட்டவும் விடை தொடர்பான சிந்தனையை குழப்பி விடும் நோக்கத்திலும் பின்னிணைப்புப் பகுதிகளை நிகழ்த்துநர் விடுகதையின் இறுதியில் இடம்பெறச் செய்கிறார் எனலாம்.

விடுகதைப் பனுவலின் தொடரமைப்பில் இடம்பெறும் எதுகைமோனை, சந்த அமைப்பு ஆகியவற்றிற்குப் பொருந்தும் வகையில் பின்னிணைப்புப் பகுதிகள் இணைக்கப்படுகின்றன. பார்வையாளர் பின்னிணைப்புப் பகுதியோடு சேர்த்தே விடுகதைப் பனுவலை மனதில் வைத்துக் கொள்கிறார். விடை தேடும் முயற்சியிலும் ஈடுபடுகிறார். வழக்கில் உள்ள பின்னிணைப்புப் பகுதி கொண்ட விடுகதைகள் சில சான்றாக கீழே கொடுக்கப்படுகின்றன.

1. **ஆளாத்தூரு கம்மாய்க்குள்ள**
   **அடிமடையாம் பாசாணம்**
   **முப்பது நாளுப் பெருக்கு**
   **மூணு நாள் ஓட்டம்**
   **இந்த கதைய சொன்னவகளுக்கு**
   **'எட்டுக் கட்டு வெத்தலை**
   **எண்ணாயிரம் கொட்டப்பாக்கு**
   **மதுரை மானுவம்**
   **திருச்சிராப்பள்ளி சீதனம்**

2. **ஆணை போய் ஆறுமாசமாச்சு**
   **ஆணைத் தடம் அப்படியே கெடக்குது**
   **இந்த கதைய சொன்னவங்களுக்கு**

நாடு குடுத்து நகரங்குடுத்து
நகரச் செட்டியாரு மகளக்
கட்டியுங் குடுத்து
திருப்பத்தூரத் திருப்பி விட்டுத்
தேவகோட்டையப் பொருதிவிட்டுப்
பதக்கரிசியும் பம்பக்கிடாயும் குடுகிறது.

3. நீரோடி நெலம்பாஞ்சு
நெலத்து வாய் குருத்துவிட்டு
காரோடிய மணலுல
கண்டெடுத்தேன் கதுவாளி முட்டை
இந்தக் கதைய சொன்னவகளுக்கு
'காளையார் கோயிலுச் சீமையக்
கல்லுப் போட்டுத் தாரது"

4. ஆசாரக் கம்பளிய விரிச்சு
அதிகாரக்காரன் பொண்டாட்டிய
ஒக்கார வச்சு
அவள் காட்ட் நான் மாட்ட
இந்தக் கதைய சொன்னவகளுக்கு
'திருப்பாச்சியத் திருப்பிக் குடுத்து
தேவகோட்டையச் சும்மா குடுத்து
மதுரையில பாதி சீதனம் குடுக்கிறது"

5. ஊருல கேரி முதுகுல முட்டையிட்டு
ஆத்துல குஞ்சு பொருச்சு வீட்டுல வந்து
வெட பிரிக்கணும்
இந்தக் கதைய விடுவிச்சவுகளுக்க
நாடு குடுத்து நகரங்குடுத்து
நாட்டுக் கோட்டைச் செட்டி மகளக்
கட்டிக் குடுக்குறது

6. பூமிச்சக்கரக் கூட்டுக்குள்ள
கைவிருந்தாடி போகையில
அஞ்சு வந்தாலும் வந்துரும்
பதினஞ்சு வந்தாலும் வந்தரும்
இந்த கதைய அழச்சவுகளுக்கு
நாமகிருஸ்ணன்மேடை

7. காத்திய (கார்த்திகை) மாதம் பூத்த பூ
கமுகலோடிய விரிச்ச பூ
மந்தரியெல்லாம் மதிச்ச பூ
வேடரெல்லாம் அறுத்த பூ
இந்த கதையை நீ சொல்லீட்டியானா
நாடு தாரேன் நகரமுந்தாரேன்
நாட்டாமைக்காரர் மகளக்
கட்டியுந் தாரேன்

8. நெடுநெடுன்னு வளருவாராண்டி
நெத்தியில திருநீறு பூசுவாராண்டி
கையில கொப்பரை ஏந்துவாராண்டி
கழுத்தில் உத்திராட்சம் போடுவாராண்டி
இந்தக் கதைசொன்னவகளுக்கு
தும்மைப்பூ மாலை துளசிபோல மல்லா
மதுரை சில்லா மாந்தோப்பு குத்தகை

என்பதான விடுகதைகள் நிகழ்த்துதலின் போது வெளிப்பட்டன. இத்தகைய பின்னிணைப்புப் பகுதிகள் விடுகதைக்கு விடை தேடும் முயற்சியில் ஈடுபடும் பார்வையாளரிடம் விடை பற்றிய குழப்பநிலையை உருவாக்கவும் பயன்படுகின்றன

மேலும் நிகழ்த்துதல் சூழலில் பின்னிணைப்புப் பகுதியைக் கொண்ட விடுகதை நிகழ்த்துபவரிடமிருந்து வெளிப்படும் பொழுது பின்னிணைப்புப் பகுதியும் தூண்டற்காரணியாக அமைந்து பார்வையாளரிடமிருந்து அதே அமைப்பைக் கொண்ட மற்றொரு விடுகதை வெளிப்பட்டு விடுகிறது. நிகழ்த்துதற் சூழல் ஒன்று சான்றாக இங்கே தரப்படுகின்றது.

'ஏழேலும் பதினாலு சோலை
இது யாரு செஞ்ச வேலை
ஆசாரி செஞ்ச வேலை
இந்தக் கதையைச் சொன்னவகளுக்கு
எட்டுக்கட்ட வெத்தலையும்
எண்ணாயிரம் கொட்டப்பாக்கும்"

என்ற விடுகதை நிகழ்த்தப்பட்டது. இவ்விடுகதையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுள் ஒருவர் (பார்வையாளர்) விடுகதைக்கான விடையைப்பற்றிச் சிந்திக்கவில்லை. மாறாக இதே அமைப்புடைய அதாவது பின்னிணைப்புப் பகுதிகெண்ட விடுகதையான,

'ஆதனூர் தேவசாரிக் கம்மாய்க்குள்ள போற
அத்தை மகனே! – நான்
ராத்திரிக் கண்ட கன(வை)வச்
சொல்லீட்டியானா – உனக்கு
எட்டுக்கட்டு வெத்தலையும்
எண்ணாயிரம் கொட்டபாக்கும் குடுத்து
உள்ளங்கையில் சோறாக்கிப் போடுறேன்"

என்ற விடுகதையைக் கூறினார். இவ்விடுகதை வெளிப்படத் தூண்டலாக இருந்தது. முதலில் நிகழ்ந்துநர் கூறிய விடுகதையின் பின்னிணைப்புப் பகுதி எனலாம்.

## முடிவுரை

இவ்வாறு விடுகதை நிகழ்த்துதற் சூழலில் விடுகதைப் பனுவலின் சொற்களும் தொடர்களும் சந்த அமைப்பும் தூண்டற்காரணிகளாக அமைந்து பல புதிய விடுகதைப் பனுவல் வெளிப்பட்டு

நிகழ்த்துதல் தொடர பயன்படுவதைப் போல விடுகதையின் இறுதியில் இடம் பெறும் பின்னிணைப்புப் பகுதியும் தூண்டற் காரணியாகச் செயல்பட்டு விடுகதை நிகழ்த்துதல் தொடரப் பயன்படுகிறது எனலாம்.

**தகவலாளர் பட்டியல்**

1. கருப்பாயி அம்மாள் வயது (56), வண்ணாம்பாறைபட்டி
2. வெள்ளமருதி வயது (55), வண்ணாம்பாறைபட்டி
3. சங்கரம்மாள் வயது (70) தேங்கல் பட்டி
4. நல்லமணி வயது (45) பட்டணம்
5. மாரிமுத்து வயது (50) பொதும்பு
6. அழகம்மாள் வயது (60) அதலை
7. கங்காணி வயது (55) வண்ணாம்பாறைபட்டி
8. பாப்பா வயது (43) கண்மாய்ப்பட்டி
9. ஆறுமுகம் வயது (50) குன்னாரம்பட்டி
10. சித்தராயி வயது (42) கண்மாய்ப்பட்டி

# புறப்பொருள் வெண்பாமாலையில் புறத்திணைப் பண்பாடும், திணைக்கோட்பாட்டு விரிவுகளும்

**முனைவர் சா. கணேசன்**
*உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்*
*செந்தமிழ்க் கல்லூரி, மதுரை*

**ஆய்வுச்சுருக்கம்**

'இலக்கணம்' சொல்லும் பொருளும், அகமும் புறமும், புறப்பொருள் வெண்பாமாலையின் துறைகள், திணை, துறை விரிவுகள், திணை புதிய படலங்களும், புறப்பொருள் வெண்பாமாலையில் புதிய படலங்கள், புதிய கலைச்சொற்கள் என்பன இவ்ஆய்வுக் கட்டுரையின் பொருண்மை விளக்கங்கள் ஆகும்.

## புறப்பொருள் வெண்பாமாலை – நூலறிமுகம்

தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் 'புறத்திணையியலில்' கூறப்பெற்றுள்ள புறத்துறைகள் சார்ந்த கருத்துக்களையும், பிற்காலத்தியப் புறத்திணை நூல்களின் கருத்து வளர்ச்சி மற்றும் புறத்துறைகளின் எண்ணிக்கை வளர்ச்சி ஆகியனவற்றையும் சேர்த்து வெண்பா யாப்பில் ஐயனாரிதனார் இயற்றிய புறத்திணை விளக்க இலக்கண நூலே புற்றபொருள் வெண்பாமாலையாகும். இந்நூல் 'புறம்' பற்றிய ஓர் இலக்கியக் கோட்பாட்டு நூலாகும். 'அகம்', 'புறம்', 'புறனாதல்' என ஒரு அமைப்பொழுங்கில் (System) சொல்லப்பட்டுள்ள திணைக்கோட்பாட்டின் ஒரு பகுதியே புறப்பொருள் வெண்பாமாலையாகும்.

'அகம்' என்பது கைகோள் கோட்பாடாகத் தொல்காப்பியத்திலேயே விரிவு செய்யப்பெற்றுத் தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் களவியல், கற்பியல் ஆகிய இயல்கள் அகத்திணையின் கூறுகளில் அடக்கம் பெற்றுள்ளன. இந்த அகத்திணைக் கோட்பாட்டின் விரிவாக்கத்தால் புறகாலத்தில் இறையனார் களவில், நம்பி அகப்பொருள் போன்ற இலக்கண நூல்கள் தோன்றின. இவ்வாறே புறத்திணைக் கோட்பாட்டின் விரிவாக்கமாகப் புறப்பொருள் வெண்பாமாலையைக் கூறலாம்.

'அகம்', 'புறம்', 'புறனாதல்' என்ற திணைக் கோட்பாட்டின் முக்கூட்டு நிலையிலிருந்து விலகி, 'புறம்' என்னும் திணைக்கோட்பாட்டில் பல்வேறு மாற்றங்களுடன் அமைவதே புற்பொருள் வெண்பாம ாலையின் பொருண்மைகள் ஆகும். புறப்பொருள் வெண்பாமாலையின் காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டாக இருக்கலாம்.

## 'இலக்கணம்'– சொல்லும் பொருளும்

அகம், புறம், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகிய அனைத்துமே 'இலக்கணம்' என்ற சொல்லால் குறிக்கப்பெறுகின்றன. ஆயினும் இலக்கணம் என்னும் அடிப்படையில் மொழியமைப்பை விளக்கும் பொருளதிகாரமும் ஒத்ததன்மையான இலக்கணம் அன்று, இலக்கணம் என்ற சொல் முதன்முதலில் தொல்காப்பியம் சொல்லதிகாரம் 'கிளவியாகம்' என்னும் இயலில்,

**"ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்**
**ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்**
**வழக்கி னாகிய உயர்சொற் கிளவி**
**இலக்கண மருங்கிற் சொல்லாறல்ல"**

**(தொல். சொல்.கிளவியாக்கம், நூற்.27)**

உலக வழக்கில் (பேச்சு வழக்கில்) ஒருவரை மதிப்புடன் கூறும் போதும் அ்.றிணையை மதிப்புடன் அல்லது கேலிகலந்த வேடிக்கையுடன் கூறும்போதும் பன்மையில் கூறலாம் இது இலக்கண வழக்கில் வராது, பேச்சு வழக்கில் மட்டுமே வரும். இந்நூற்பாவில் 'இலக்கணம்' என்னும் சொல் விதிமுறையுடன் அமைக்கப்பட்ட ஒரு மொழியைச் சுட்டி நிற்கின்றது. இதனை (Written Language Norms) அதாவது எழுதுமொழி விதி எனலாம். வழக்குச் செய்யுள்போல எழுது மொழிக்குத் தொல்காப்பியத்தில் கலைச்சொல் இல்லை இந்நூற்பாவில் இலக்கணம் என்பது எழுது மொழியைக் குறிக்கின்றது.

**"அகத்திணை மருங்கின் அரில்தப உண்ர்ந்தோர்**
**புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளம்பின்**
**வெட்சிதானே குறிஞ்சியது புறனே**
**உட்குவரத் தோன்றும் ஈ ரேழ்துறைத்தே"**

**(தொல். பொருள் புறத், நூற்.1)**

**"செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி**
**இழைத்த இலக்கணம் பிழைத்தன போல**
**வருவன உள எனினும் வந்தவற்றியலான்**
**திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே"**

**(தொல். பொருள், செய்யு. நூற்.238)**

தொல்காப்பியத்தின் இவ்விரு நூற்பாக்களிலும் பயின்று வந்துள்ள இலக்கணம் என்னும் சொல் எழுதுமொழி விதிகளைக் குறிக்கவில்லை. செய்யுள் என்பது எழுதுமொழியில் அமைவதாயினும் செய்யுள் வேறு, எழுதுமொழி வேறு. வழக்கு, செய்யுள், எழுதுமொழி என்பன வெவ்வேறானவை. ஆதலால் இவ்விரு நூற்பாக்களிலும், 'இலக்கணம்' என்னும் சொல்லிற்கு 'கோட்பாடு' (Theory) எனப்பொருள் கொள்ள இடமுள்ளது. ஆதலால் இலக்கணம் என்ற சொல் மொழியமைக்கைச் சார்ந்து 'எழுதுமொழி விதி' என்ற பொருளிலும், 'செய்யுள் கோட்பாடு' சார்ந்தும் தொல்காப்பியத்தில் ஆளப்பெற்றுள்ளன.

இவை இரண்டும் ஒன்றல்ல, மொழி நிலைக்கும் இலக்கிய நிலைக்கும் வேறுபாடு உண்டு. இதனை வேறுபாடற்ற நிலையில் ஒன்றாகப் பயன்படுத்தக் கூடாது. புறத்திணை இலக்கணத்தைச் சரியாகப் புரிந்து கொள்ள இந்த வேறுபாடுகளை அறிந்திருக்க வேண்டும். 'புறத்திணை' என்பது ஓர் இலக்கில் கோட்பாடாகும், இக்கோட்பாட்டிற்கும் செய்யுளாக்கத்திற்கும் வேறுபாடு உள்ளன. ஆதலால் இலக்கணம் என்ற சொல்லுக்கான பொருள் வேறுபாட்டைத் தெரிந்திருப்பதோடு, இலக்கிய கோட்பாடு வேறு செய்யுள் இக்ககியப் படைப்பு வேறு என்பதையும் மனங்கொள்ள வேண்டும்.

## அகமும் புறமும்

புறப்பொருள் வெண்பாமாலை புறத்திணை இலக்கண நூலன்று அந்நூல் இலக்கியவியல் சார்ந்ததாகும். இது தொல்காப்பியப் புறத்திணையை விளக்கிக் கூறும் புற இலக்கண நூலில்லை அதன் விரிவாக்கமாக அமைவது தொல்காப்பியம் பொருளதிகாரத்திலுள்ள திணைக் கோட்பாடு அகம், புறம், புறனாதல் என்னும் முக்கூட்டு இணைவமைப்பில் மனித வாழ்க்கையைப் பொதுமைப்படுத்திப் பார்க்கும் ஓர் இலக்கிய வாழ்வியல் பார்வையாகும். இதன்படி ஒவ்வொரு அகத்திணைக்கும் ஒரு புறத்திணை புறனாதல் தொல்காப்பியத் திணைக் கோட்பாட்டில் தெளிவுபட விளக்கிக் கூறப்பெற்றுள்ளன. அவை வருமாறு:

**"வெட்டிதானே குறிஞ்சியது புறனே"**

**(தொல்.பொருள்.புறத், நூற்.1)**

**"வஞ்சிதானே முல்லையது புறனே"**

**(தொல்.பொருள்.புறத், நூற்.6)**

**"உழிஞைதானே மருத்துப் புறனே"**

**(தொல்.பொருள்.புறத், நூற்.9)**

**"தும்பைதானே நெய்தலது புறனே"**

**(தொல்.பொருள்.புறத், நூற்.14)**

**"வாகைதானே பாலையது புறனே"**

**(தொல்.பொருள்.புறத், நூற்.18)**

**"காஞ்சிதானே பெருந்திணைப் புறனே"**

**(தொல்.பொருள்.புறத், நூற்.22)**

**"பாடாண்பகுதி கைக்கிணைப் புறனே"**

**(தொல்.பொருள்.புறத், நூற்.25)**

அகமும் புறமும் ஒன்றுக்கொன்று புறனாதல் பற்றிய விளக்கங்கள் தொல்காப்பிய உரையாசிரியர்களால் தரப்பெற்றுறள்ளன.

குறிஞ்சி - நிரைகோடல் மலைப்பகுதியில் நிகழ்கின்றது. அவை களவில் கொள்ளப்படுகின்றன. சூடும்பூ குறிஞ்சிப் பூ என்பதால் குறிஞ்சிக்கு வெட்சி புறம்.

முல்லை - பகைவயிற் சேறலுக்கு நிழலும் நீருள்ள காலமும் வேண்டும் இடம் பரந்து விரிந்த காட்டுப் பகுதியாக இருக்கவேண்டும் சூடும் பூ முல்லையாதலால் முல்லைக்கு வஞ்சி புறம்.

மருதம் - அரண் வலிமைமிக்கதாதலால் போர் செய்யும் காலம் விடியற்பொழுதாக இருக்கவேண்டும், சூடும் பூ உழிஞை ஆதலால் மருதத்திற்கு உழிஞை புறம்.

நெய்தல் - இருபடை வீரர்களும் ஒருகளத்தில் தம் ஆற்றலைக் காட்டி வலிமையுடன் போரிடுவதால் அதற்கேற்றவாறு காடும் மலையும் களமும் மணலும் கொண்ட பரந்த வெளியிடம் வேண்டும். சூடும்பூ நெய்தல் ஏற்பாடு போர்த் தொழிலை முடித்து வைப்பதால் நெய்தலுக்குத் தும்பை புறன்.

பாலை - பாலைக் கெனத்தனியாக நிலமில்லை எல்லா நிலமும் காலமும் பற்றி வருவது பிரிவு புகழ்ச்சி காரணமாக அமைவது ஆதலால் பாலைக்கு வாகை புறம்.

கைக்கிளை - ஒருவனை ஏதேனும் ஒரு பயன் கருதி வழிமொழிதல் புகழ்தல் கைக்கிளைக்குப் பாடாண்புறன்.

பெருந்திணை - நிலையாமை என்னும் கழிபேசிரக்கம் பற்றி வருவது. பெருந்திணைக்கு காஞ்சி புறன்.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் மேற்கண்டவாறு அகத்திணைகளைப் புறத்திணைகளோடு இணைத்து விளக்கங்கள் தந்துள்ளனர். இவற்றுள் குறிஞ்சியில் மட்டும் புணர்தல் ஏன்? என்பதற்கு விடையும் விளக்கமும் இல்லை.

திணை விரிவு என்றாலும் மனிதனின் இருபக்கங்களாகக் காமத்தையும், முரட்டுத்தனத்தையும் கூறும் வகையில், காமத்தின் புறம் முரட்டுத்தனம் என உரை வைப்பதால், மனிதச் செயல்பாடுகளைப் பற்றிய ஒரு கருத்தியலை உரையாசிரியர்கள் கொண்டிருப்பதாகப் புரிந்து கொள்ளலாம்.

திணைக் கோட்பாட்டின் முழுமையில் அகமும் புறமும் ஒன்றின் இருபக்கங்களாகவே உள்ளன. காமம் குறித்த அகத்திணை ஏழும், முரட்டுத்தனமான தாக்குதல் குறித்த புறத்திணைகள் ஏழும் ஒன்றின் புறமாக அமைந்து ஓர் ஒழுங்கனவாக உள்ளன. இந்த ஒன்றிணைப்பைத் தவிர்த்து அகத்திணையை விகற்பமாக்கிச்சியும் விரிவுபடுத்தியும் கட்டமைத்ததே கைக்கிளைக் கோட்பாடாகும். நம்பியகப் பொருளில் மேலும் செய்திகள் கூடுதலாக்கப் பட்டுள்ளன.

புறத்திணையைத் தனிக்கோட்பாடாக மாற்றவே/ புறப்பாடல்களின் உள்ளடக்கப் பொருள்களை மாற்றியமைக்கவே புறத்திணை விரிவு தேவைப்பட்டுள்ளன. 'முத்துவீரியம்' வரை (19 ஆம் நூற்றாண்டு) புறத்திணை விரிவாக்கம் நடந்துள்ளன. புற்பொருள் வெண்பாமாலையில் அகத்திணைக் கூறுகளும் இணைக்கப்பட்டது ஏன்? என்ற வினாவும் உள்ளது.

**புறப்பொருள் வெண்பாமாலையின் துறைகள்**

வெட்சிப்படலம் - 20 துறைகள்
கரந்தைப் படலம் - 14 துறைகள்
வஞ்சிப்படலம் - 21 துறைகள்
காஞ்சிப்படலம் - 22 துறைகள்
நொச்சிப்படலம் - 09 துறைகள்
உழிஞைப்படலம் - 29 துறைகள்
தும்பைப்படலம்- 24 துறைகள்
வாகைப்படலம் - 33 துறைகள்
பாடாண் படலம் - 48 துறைகள்
பொதுவியல் - 12 துறைகள்
சிறப்புப்பொதுவியல், காஞ்சிப்பொதுவியல் - 05 துறைகள்
கைக்கிளை -ஆண்பாற்கூற்று - 09 துறைகள்
கைக்கிளை - பெண்பாற் கூற்று - 12 துறைகள்
பெருந்திணை – பெண்பாற் கூற்று - 19 துறைகள்
பெருந்திணை - 17 துறைகள்

**294 துறைகள்**

தொல்காப்பியத்தில் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி ஆகிய ஏழுதிணைகளிலும் (14+02+21, 13,08+12, 12,18+7, 10+10, 08+10) மொத்தமாக 145 துறைகள் மட்டுமே உள்ளன.

**புறப்பொருள் வெண்பாமாலையில் திணை, துறை விரிவுகள்**

**அ) திணை, துறையாகுதல்**

புறப்பொருள் வெண்பாமாலையில் முதலிலேயே துறைகள் கூறப்படுவதோடு, அதற்கான விளக்கங்களும் உள்ளன. மேலும் ஒவ்வொரு திணைக்குமான துறைகளும் கூறப்பெற்றுள்ளன, 'வெட்சித்திணை' என்னும் தொல்காப்பியப் பகுதியில் இருபது துறைகளாகக் கூறப்பெற்றறுள்ளன. இத்துறைகளில் ஒன்றாகவே 'வெட்சியும்' அமைகின்றது. திணை என்னும் சொல்லுக்குப் பதிலாகப் 'படலம்' என்னும் சொல் வருகின்றது. புறப்பொருள் வெண்பாமாலையின் வெட்சிப்படலம்,

> **"வென்றிவேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும்**
> **சென்றிகல்முனை ஆதந்தன்று"**
>
> **(புறப்பொருள் வெண்பாமாலை, வெட்சி,"கொளு")**

தொல்காப்பியம்,

> **"வேந்துவிடு முனைஞள் வேற்றுப்புலக் களவின்**
> **ஆதந்து ஓம்பல் மேவற்றாகும்"**
>
> **(தொல். பொருள். புறத். நூற்.2)**

என்கின்றது. தொல்காப்பியத்தில் வேந்துவிடுதல் காரணமாக மட்டும் ஆநிரை கவரப்படுகின்றது. புறப்பொருள் வெண்பாமாலையில் வேந்தன் கூறியும், கூறாமல் ஆநிலை கவரப்படுகின்றன. 'படலம்' எனப்பெயர் பெறுதலும் முதலிலேயே துறைகளைக் கூறுதலும், திணை துறைகளில் ஒன்றாக மாறுவதும் புறப்பொருள் வெண்பாமாலையின் பொருண்மை விரிவுகளாகும்.

**ஆ) அகத்திணை, புறப்படலமாதல்**

புறப்பொருள் வெண்பாமாலையில் தொல்காப்பியம் அகத்திணையியல் பிரிவைச் சேர்ந்த கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரண்டு திணைகளும் புறப்படலங்களாக மாறியுள்ளன.

**இ) ஏழு பன்னிரண்டாதலும் புதிய படலங்களும்**

தொல்காப்பித்தின் ஏழுதுறைகளுடன் சேர்த்து கூடுதலாக ஐந்திணை இணைத்து புறப்பொருள் வெண்பாமாலை பன்னிரெண்டு படலங்கள் உள்ளன. பொதுவியல் படலத்துடன் கைக்கிளையும் பெருந்திணையும் புறப்பொருள் வெண்பாமாலையில் மூன்று புதிய படலங்களாகும். வெட்சியானது வெட்சி, கரந்தை என இரண்டாக மாறுதலும், உழிஞையென்பது உழிஞை நொச்சியென இரண்டாக மாறுதலும் கூடுதலாக மொத்தம் ஐந்து படலங்கள் புறப்பொருள் வெண்பாமாலையில் சேர்ந்துள்ளன.

தொல்காப்பயத்தின் காஞ்சித்திணை நிலையாமைப் பொருண்மைகளுக்கு உரியது. புறப்பொருள் வெண்பாமாலையின் காஞ்சிப்படலம், வஞ்சி வேந்தனுக்கு எதிரான காவல் போராகும்.

தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலைகளின் எண்ணிக்கைகள் மட்டுமே தரப்பெற்றுள்ளன. தொல்காப்பியத்தில் வெட்சி திணைவெட்சி, கரந்தை என இரண்டாகின்றது. உழிஞை திணை

உழிஞை, நொச்சி என் இரண்டாகின்றது, காஞ்சி வஞ்சியின் மறுபகுதி ஆகின்றது. இது போன்ற மாற்றங்கள் போர்ச் செயலை ஒழுங்குபடுத்துவதாக உள்ளன. ஆநிரைகவர்தலையும் ஆநிரை மீட்டலையும் புறப்பொருள் வெண்பாமாலை தனித்தனியாகப் பிரித்துக் கூறுகின்றது. ஆனால் ஆழமா உற்றுநோக்கினால் தாக்குதலும் எதிர்த்தலும் ஒரே நேரத்தில் போர் நிகழ்களே ஆகும்.

**"வெஞ்சின மாற்றான் விடுதர வேந்தன்**
**காஞ்சிசூடிக்கடிமனை கருதின்று"**
**(புறப்பொருள் வெண்பாமாலை,**
**காஞ்சிப்படலம்,"கொளு")**

**"பாங்கரும் சிறப்பின் பல்லாற்றானும்**
**நில்லா உலகம் புல்லிய நெறித்தே"**
**(தொல், பொருள் புறத் நூற்.23)**

புறப்பொருள் வெண்பாமாலையில் தன்னைத்தாக்க வந்த மன்னனை எதிர்த்து தன்னிடத்தைக் (கடிமனை காத்தல்) காத்தலே காஞ்சியாகின்றது, தொல்காப்பியத்தில் காஞ்சி நிலையாமையின் குறியீடாகின்றது.

**புறப்பொருள் வெண்பாமாலையில் புதிய படலங்கள்**

புறப்பொருள் வெண்பாமாலையில் பொதுவியல் படலம், கைக்கிளைப் படலம், பெருந்தினைப் படலம் ஆகிய மூன்றும் புதிய படலங்களாகும். தொல்காப்பியர் கூறும் ''காமஞ்சாலா இளமையோள் வயின்…'' (தொல், பொருள். அகத். நூற்.50) என்னும் கைக்கிளை ஆணுக்கே உரியதாகும். இங்கே பால் பொதுமை இடமில்லை. பிற்காலத்தில் நம்பியகப் பொருளே கைக்கிளையை 'ஒருதலைக்காமம்' எனக் கூறுகின்றது, அந்நூலில் ஒருதலைக்காமம் ஆணுக்கா, பொண்ணுக்கா என்ற தெளிவில்லை. புறப்பொருள் வெண்பாமாலையில் கைக்கிளைப் படலம் ஆண்பாற் கூற்று, பெண்பாற்கூற்று என் இருநிலைகளில் உள்ளன. ஆண்பாற் கைக்கிளைக் கூற்றில் தொல்காப்பியம் களவியலில் காணப்பெறும் காட்சி ஐயம் தெளிவு துணிவு என்னும் கூறுகளைக் கொண்டுள்ளன, ஆண், பெண்ணைக்கூடும் வேட்கை வெளிப்படையாகக் கூறப்பெற்றுள்ளன. இதில் புணரா இரக்கம், வெளிப்பட இரத்தல் என்னும் இரண்டுதுறைகள் உள்ளன.

**"உணரா எவ்வம் பெருக ஒளியிழைப்**
**புணரா இரக்கமொடு புலம்பு தெவைகின்று"**
**(புணரா இரக்கம்)**

**"அந்தழை அல்குல் அணிநலம் புணரா**
**வெந்துயர் பெருக வெளிப்பட இரந்தன்று"**
**(வெளிப்பட இரத்தல்)**
**(புறப்பொருள் வெண்பாமாலை,**
**கைக்களைப்படலம், "கொளு")**

புறப்பொருள் வெண்பாமாலையின் பெண்பாற் கைக்கிளைக் கூற்று மிகவும் புதிய பகுதியாகும். தலைவனின் கூடுதல் விருப்பத்தைப் போலவே தலைவியும் இருக்கின்றாள். காண்டல், நயத்தல், உட்கோள், மெலிதல், மெலிவொடு வைதல், காண்டல் வலித்தல், இரவுநீடு பருவரல், கனவில் அரற்றல், நெஞ்சொடு மொழிதல் ஆகிய துறைகள் இதில் உள்ளன. 'உட்கோள்' என்னும் துறை தலைவியைக் கூடக் கருதிய தலைவியின் நிலையைக் கூறுவது ஆகும்.

புறப்பொருள் வெண்பாமாலையின் பெருந்திணைப் படலத்தில் பெண்பாற்கூற்று, இருபாற்பெருந்திணை, வென்றிப் பெருந்திணை என்னும் மூன்று பகுதிகள் காணப்படுகின்றன. தொல்காப்பியம் அகத்திணையியல் பெருந்திணையை ''ஏறியமடல் திறம் இளமை தீர்திறம்'' (தொல், பொருள், அகத், நூற், 51) என்னும் நூற்பாவில் விளக்கு உள்ளது.

ஆயினும் புறப்பொருள் வெண்பாமாலையின் பெருந்திணையில் கற்புப் பகுதியின் பொருண்மைகள் கூறப்பெற்றுள்ளன, அத்துடன் தலைவியின் காமம் வெளிப்படையாகக் கூறப்பெற்றுள்ளன, ''இரவுத்தலைச் சேறல்'' என்னும் துறை தலைவியின் காமமிகுதியைக் காட்டுவதாகும்.

**புதிய கலைச் சொற்கள்**

ஐயனாரிதனார் புறப்பொருள் வெண்பாமாலையில் செய்திருக்கும் புதியவிரிவு, தலைவியின் காமவேட்கையை வெளிப்படையாகக் கூறியிருத்தவே ஆகும், போர் குறித்து விரிவாக விளக்கியுள்ள இவர் புதிய கலைச் சொற்கள் பலவற்றைப் படைத்துத் தந்துள்ளார்,

- **குற்றிசை** - மனைவிக்குத் துரோகம் செய்யும் கணவனின் செயல்
- **குறுங்கலி** - ஆண் தன் மனத்தில் எழும் காமத்தை அழித்தல்
- **குறுவஞ்சி** - போரில் தோற்ற மன்னன் கப்பம் கட்டி வாழ்தல்
- **பெருவஞ்சி**- பகைவன் நாட்டை, இரண்டாம் முறை தீயிடுவது
- **நல்லிசை வஞ்சி**- மன்னவன் வெற்றியைப் புகழ்வது

- **பேய்க்காஞ்சி-** போர்க்களத்தில் வீழ்ந்த மறவரைப்பேய் அச்சுறுத்துவது
- **முதுஉழிஞை-** நொச்சியாரில் மதிலகத்தில் குதித்த நிலை
- **குற்றுழிஞை-** வீரன் ஒருவன் ஒருத்தனாகப் பகைவர் மதில்மேல் ஏறுதல்.

**நிறைவுரை**

புறப்பொருள் வெண்பாமாலையைத் துறைகளாகப் பிரித்து அமைத்திருக்கும் முறையை நோக்கும் போது, அவை கைகோள் கோட்பாட்டின் விரிவாக்கமாகவே உள்ளன, கூடுதலாகப் புறத்திணை பற்றிய செய்திகளும் இந்நூலில் காணப்படுகின்றன. இதனைத் திணைக் கோட்பாட்டின் "புறனாதல்" தவிர்த்த அக, புற திணைக் கோட்பாட்டின் விரிவாக்கமாகக் கொள்ளலாம், ஐயனாரிதனார் உருவாக்கியுள்ள போர்த்துறை சார்ந்த புதிய கலைச்சொற்கள், இலக்கியக் கலைச் சொல்லாக்கத்திற்குப் பெரிதும் பயன்படும்.

**பயன்பட்ட நூல்கள்**

1. தமிழண்ணல், தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும், மீனாட்சி புத்தக நிலையிம், மதுரை, 2009
2. அக்னிபுத்ரன், எல்.கே (உரை.ஆ.), புதிய நோக்கில் புறப்பொருள் வெண்பாமாலை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2008
3. வெள்ளைவாரணன். க, தொல்காப்பியம் புறத்திணையியல் உரைவளம், பதிப்புத்துரை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1983.

# திருக்குறளில் காணப்படும் வாழ்வியல் நெறிகள்

**சு. கோபாலகிருஷ்ணன்,** *M.A., M.ED., M.PHIL.*
*முதுகலைத் தமிழாசிரியர், அரசினர் மேல்நிலைப்பள்ளி*
*கருவாக்குறிச்சி, மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்*

### முன்னுரை

இலக்கியம் என்பது உண்மையைக் கூறுவதோடு மட்டுமல்லாமல் சுவைபடக் கூற வேண்டும். திருக்குறள் மனித வாழ்வியல் நெறிகளை மிகச் சிறப்பாக உணர்த்தும் நூலாகும். நாடு, மொழி, இனம் ஆகியவற்றைக் கடந்து பொதுநிலையில் அமைந்திருப்பது திருக்குறள். இரண்டே வரிகளில் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துக் கருத்துகளையும், வாழ்வியலின் உண்மைகளையும் நுட்பமாகவும், தெளிவாகவும், ஆழமாகவும் திருக்குறள் உணர்த்துகிறது. மனிதவள மேம்பாட்டிற்குத் தேவையான அறம், பொருள், இன்பம் என்ற மூன்று அடிப்படைக் கோட்பாடுகளை உணர்த்துவதுடன் அதிலுள்ள நிறை, குறைகளைச் சுட்டிக்காட்டியுள்ளார் திருவள்ளுவர். திருக்குறளைக் கற்பதன் வாயிலாக நம் நாட்டின் கலை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை நன்கு அறிய முடிகின்றது. 1812 ஆம் ஆண்டு முதல் திருக்குறள் பதிப்பு தொடங்கியது. அன்றிலிருந்து பலர் திருக்குறள் தொடர்பான நூல்களை எழுதி வருகின்றனர். சராசரி மனிதன் அன்றாட வாழ்க்கையில் ஒழுக வேண்டிய நெறிமுறைகளின் தொகுப்பாக திருக்குறள் படைக்கப்பட்டுள்ளது.

திருக்குறளின் சிறப்பைச் சொல்லும் தனி நூல் திருவள்ளுவமாலை என்பதாகும். இந்நூலில் ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு புலவர்களால் பாடப்பெற்றதாக அமைத்துள்ளார்கள். திருக்குறளானது சுவையான கவிதை வடிவில் சொற்சுவை, பொருட்சுவைகளைப் பெற்று மனிதனை உயர்த்தும் உயரிய கருத்துகளைச் சொல்கிறது என்று திருவள்ளுவமாலையின் ஒரு பாட்டில் கூறப்பட்டுள்ளது.

**ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி**
**வேதப் பொருளாய் மிகவிளங்கித்-தீதற்றோர்**
**உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே**
**வள்ளுவர் வாய்மொழி மாண்பு.**

### கடவுள் வாழ்த்து

தமிழர்கள் எந்த செயலைத் தொடங்கினாலும் முதலில் கடவுளைத் தொழுதபின் தொடங்குவர். "கடவுள் வாழ்த்து" என்ற அதிகாரத்தில் கடவுளை மக்கள் மனம், மொழி, மெய்களால் வழிபட வேண்டும் என்று வள்ளுவர் புலப்படுத்துகின்றார்.

**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது.** (குறள் 7)

அதாவது மனத்தால் தியானம் செய்வதைக் குறிக்கிறது. மனக்கவலை மாற்றுவதற்கு இறைவனை மனத்தால் சிந்திக்க வேண்டும் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

**இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.**
(குறள் 5)

அதாவது இறைவனது புகழை வாயினால் சொல்ல வேண்டும் என்று கூறியுள்ளார்.

**கோள்இல் பொறியிற் குணம்இலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை.**

என்பது இறைவனைத் தலையால் வணங்க வேண்டும் என்று மெய்யால் வழிபடுவதைக் குறிப்பிட்டுள்ளார். இறைவனை நினைத்தல், இறைவனை வாழ்த்துதல், இறைவனைப் பணிதல் என்ற மூன்றும் முறையே மனம், மொழி, மெய் என்னும் மூன்றாலும் நிகழ்வன. (கற்பக மலர் ப.19)

கடவுளின் தூய உணர்வால் உந்தப்பட்டு அறநெறி நின்று வாழ்கின்ற மனிதன் தெய்வ நிலைக்கு உயர்ந்து விடுவான் என்பதைக் கீழ்க்கண்ட திருக்குறளில் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்.** (குறள் 40)

### குறள் கூறும் அன்பு

அன்பில்லாத வாழ்க்கை வறண்ட பாலை நிலம் போன்றது. அன்பே அனைத்திற்கும் அடிப்படை வள்ளுவர் இதனைத் தனி அதிகாரமாக அமைத்து அன்பின் தேவையை விளக்கியுள்ளார். இல்லற வாழ்க்கை இனிமையாக அமையவும் பிற உயிர்கள் மீது இரக்கம் கொண்டு வாழ்வதற்கு அடிப்படையாகவும் அன்பு திகழ்கிறது. மனிதர்கள் இவ்வுலகில் வாழும் எல்லா உயிர்களிடத்திலும் அன்பினைச் செலுத்த வேண்டும் என்ற நிலையை இலக்கியங்கள் பல நிலைகளில் எடுத்துரைக்கின்றன.

**மன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது**
**இன்னுயிர் நீக்கும் வினை.** (குறள் 327)

இக்குறளில் திருவள்ளுவர் உன் உயிரே போவதாயினும் நீ மற்றோர் உயிரைக் கொல்லாதே என்று கூறுகிறார். பண்டைக் காலத்தில் தமிழர்கள்

ஆரியர்களை உயிர்ப்பலி கொடுத்து யாகம் செய்யக்கூடாது என்று கட்டளையிட்டனர். தன்னைத்தானே காத்துக் கொள்ளக்கூடிய கரடி, புலி, சிறுத்தை, சிங்கத்தை கோவிலுக்குப் பலியிட வேண்டிக்கொள்ள வேண்டியதுதானே. வாயற்ற, வலுவற்ற, தன்னைத்தானே காத்துக் கொள்ள இயலாத ஆடுகளையும், கோழிகளையும் தன்னுடைய உயிரைக் காப்பாற்ற கடவுளுக்குப் பலியிடுவது தவறான செயலாகும். கொல்லா நோன்பு நோற்பவர்கள் அதிக பலன்களைப் பெறுவார்கள் என்பதே உண்மை. கொல்லாமை மட்டுமல்ல புலால் உண்ணாமையையும் கைக்கொள்வதே சிறப்பு என்று திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

**அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயிர்செகுத்து உண்ணாமை நன்று.**
(குறள் 259)

### அறத்தின் வழி இன்பம்

இலக்கியங்கள் மனிதனை அறவாழ்வில் வாழ்வதற்கு வலியுறுத்துகின்றன. அறச்செயல்களைச் செய்யும்போது ஏற்படும் இன்பமே உண்மையான இன்பமாகும். பிற செயல்களால் ஏற்படும் இன்பமெல்லாம் இன்பமாகாது. அதனால் புகழும் ஏற்படாது என்பதனை,

**அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
**புறத்த புகழும் இல.** (குறள் 39)

என்னும் குறள் எடுத்துரைக்கின்றது. மறந்தும்கூடப் பிறர்க்குக் கெடுதல் செய்யக் கூடாது. அவ்வாறு கெடுதல் செய்தால் நாம் என்ன கெடுதல் செய்தோமோ அதே கெடுதல் நம்மை வந்தடையுமாறு அறமானது செய்துவிடும் என்ற வாழ்வியல் உண்மையை கீழ்க்காணும் குறள் எடுத்துரைக்கிறது.

**மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்**
**அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு.** (குறள் 204)

திருக்குறள் தனது அறம் உரைக்கும் நோக்கத்தினால் சமூக நல்வாழ்விற்கான கருத்துகளின் பெட்டகமாக விளங்குகின்றது.

**அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்.** (குறள் 35)

என்னும் குறட்பாவில் பிறர் ஆக்கம் கண்டு பொறாமை, இன்பமொழி, கோபம், கடும் சுடும் சொற்கள் இவை தவிர்ந்த செயல்களே அறம் ஆகும் என்று விளக்குகிறார். மனம் மாசு இல்லாமல் செய்யும் அறமே சிறந்தது என்று வள்ளுவப் பெருந்தகை வற்புறுத்துகின்றார்.

### ஒழுக்கத்தின் உயர்வு

நெறிமுறைகளைக் கடைபிடித்து ஒழுகுவதே ஒழுக்கம். அஃதாவது மனம், மொழி, மெய்களை நல்ல முறையில் அடக்கி வாழ்வதாகும். தமிழரின் பண்பாட்டிற்கான ஆணிவேர் ஒழுக்கமே ஆகும். வடதுருவம் தென்துருவமாக மாறுபட்டாலும் தமிழர்கள் ஒழுக்கத்தை மட்டும் விட்டுவிட மாட்டார்கள்.

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்.** (குறள் 131)

உயிரைக் கொடுத்தேனும் ஒழுக்கத்தைக் காப்பாற்றுவது என்பது தமிழர் பண்பாடாகும். ஒழுக்க முறைகளை வாழ்க்கை நிலையோடு தொடர்புபடுத்தும் செயல்பாடுகளை குறட்பாக்கள் தெளிவாக்குகின்றன. அடக்கமும், ஒழுக்கமும் வஞ்சனை, பொய், களவு, கொலை, கொள்ளை போன்ற தீயனவற்றை வேரறுக்கும்.

### வாய்மை பற்றிய சிந்தனை

உண்மை என்று சொல்லப்படுவது எது என்றால், எவருக்கும் எத்தகைய சூழ்நிலையிலும் எவ்விதத் தீங்கையும் தராத சொற்களைச் சொல்லுவதே ஆகும் என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். மனதளவில்கூட பொய் கூறாமல் வாய்மையோடு வாழ்ந்தால் அவன் தானம், தர்மம் செய்பவனைக் காட்டிலும் தலைசிறந்தவனாகக் கருதப்படுவான் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

**மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு**
**தானம் செய்வாரின் தலை.** (குறள் 295)

பொய் சொல்லும் உள்ளத்தில் இருட்டைப் போக்க முடியாது. பொய்யுள்ளம் எப்போதும் இருட்டாகவே இருக்கும் என்று பொய் நிறைந்த உள்ளத்தை வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

**எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு.** (குறள் 299)

உண்மை பேசுவோர் உள்ளமே ஒரு நல்ல விளக்காகும். இந்த விளக்கு இருப்பதனால் அவர்கள் உள்ளத்தில் எப்போதும் இருட்டு வருவதில்லை என்று திருக்குறள் கூறுகிறது.

### நன்றியறிதல் பற்றிய சிந்தனை

ஒருவருக்கு நன்மை எதுவும் செய்யாதபோதும், அவர் நமக்கு உதவி செய்தால் அதற்குக் கைமாறாக மண்ணுலகையும், விண்ணுலகையும் கொடுத்தாலும் ஈடாகாது என்னும் நன்றியறிதல் பற்றிய வாழ்வியலின் உண்மையை திருவள்ளுவர் கீழ்க்காணும் திருக்குறளில் கூறியுள்ளார்.

**செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது.** (குறள் 101)

எத்தனைப் பெரிய தான, தர்மங்களை, அறங்களை அழித்தவர்க்கும் பாவங்களைக் கழுவ வழிகள் உண்டு. ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்து

அவர்களுக்குத் தீமை செய்கின்றவர்களுக்கு அந்த பாவத்தைக் கழுவ வழியே இல்லை என்னும் நன்றி மறத்தல் கூடாத வாழ்வின் அறத்தை,

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்நன்றி கொன்ற மகற்கு.** (குறள்110)

என்னும் குறள் மூலம் மக்களுக்கு திருவள்ளுவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

**மனம் என்னும் மாட்சி**

உள்ளத்தை உயர்த்துவது என்பது பெருமனம் படைப்பது ஆகும். அது நாம் மட்டும் வாழ்ந்தால் போதாது. பிறரும் வாழ்ந்தாக வேண்டும் என்று எண்ணுவது. இந்த எண்ணம் ஒருவர் உள்ளத்தில் தோன்றுமானால் அவரது சொல்லும் உயர்ந்து, செயலும் உயர்ந்து காணப்படும். பிறகு அவர்கள் வாழ்விலும் உயர்ந்து காணப்படுவர் என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். மனமானது எவ்விதக் களங்கமும் இல்லாமல் தெளிந்த நீரோடைபோல இருக்க வேண்டும் என்று திருக்குறள் கூறுகிறது. மனம் தூய்மையானதாக இருந்தால் புறத்தோற்றம் ஒரு பொருட்டில்லை.

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற.** (குறள் 34)

குற்றமில்லாத மனம் ஒன்றே அறத்திற்கு அடிப்படையாக விளங்குகின்றது. “சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்“ என்ற தனிப்பாடல் வரிகளால் கல்வி என்பது மணப்பழக்கத்தால் வரக்கூடியது என அறிய முடிகிறது.

**முடிவுரை**

திருக்குறளில் மனித மாந்தர்கள் தம் அகவாழ்விலும், புறவாழ்விலும் சமூகமாகக் கூடி வாழவும், இன்பமுடனும், இசைவுடனும், நலமுடன் வாழவும் கடைபிடிக்க வேண்டிய அடிப்படையான பண்புகளை விளக்குகிறது. நற்குணம், நற்சிந்தனை, நல்லொழுக்கம், அன்பு, பெரியோரை மதித்தல், உண்மை வழி நடத்தல் போன்றவைகளைப் பின்பற்றி வாழ வேண்டும். ஒரு மனிதன் பிறந்ததிலிருந்து அவன் இறக்கும் வரைக்குமான வாழ்வியலை அறநெறிப்படுத்தும் திருக்குறளை வருங்கால சந்ததியினர் புரிந்து, கற்று, வேற்றுமைகளைப் புறந்தள்ளி ஒற்றுமையுடன் வாழ வேண்டும்.

**துணைநூல் பட்டியல்**

1. கற்பக மலர், கி.வா. ஜகந்நாதன், (ஏப்ரல் 1969), நண்பர்கள் அச்சகம், சென்னை - 600 018, திருக்குறள்.

# வள்ளுவத்தில் மனித நேயப்பண்புகள்

**முனைவர் வே. கோமதி,** எம்.ஏ, பி.எட், எம்பில், பி.எச்டி
*உதவிப்பேராசிரியர்*
*உப்பிலியபுரம், துறையூர் வட்டம்*

### முன்னுரை

மனிதன் மனிதனிடம் மட்டுமல்லாது பிற உயிர்களின் மீதும் காட்டும் அன்பும் பரிதாபமுமே மனித நேயமாகும். அன்றைய சங்க இலக்கியம் முதல் இன்றைய இக்கால இலக்கியங்கள் வரை மனித நேயத்தை எடுத்துரைக்கின்றன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான திருக்குறளில் வள்ளுவம் கூறும் மனிதநேயப் பண்புகளாய் அன்பின் வெளிப்பாடு, அறச்செயல்கள், ஈகையின் சிறப்பு, இரக்கத்தின் மேன்மை, விருந்தோம்பலின் சிறப்பு, கொல்லாமை மற்றும் பொறையுடைமை போன்ற கருத்துக்களை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

### மனித நேயம்

சகமனிதனை மனிதனாகப் பார்க்கும் அணுகுமுறையே மனிதநேயமாகும். மனிதனும் நேயமும் சேரும் பொழுது அந்த அற்புதமான மனிதநேயம் பிறக்கிறது என்று அன்னை தெரசா மிக அழகாகச் சித்தரித்துள்ளார். மனிதநேயம் கொண்டவர்கள் மக்கட் பிறப்பில் மேன்மையான பண்புடையவர்களாய் இருப்பார்கள். இதுவே அவர்களுக்கு மேலான ஊன்றுகோலாகவும் உள்ளது. இனம், மதம் பாராமல் அனைவரையும் சமமாகப் பார்த்து திறந்த எண்ணங்களுடன் உதவிகளையும் அன்பையும் செலுத்துபவரிடமே மனிதநேயத்தைக் காண முடிகிறது. மனிதனிடம் மட்டுமல்லாது, ஐந்தறிவுள்ள உயிரகளிடத்திலும், தனது மனிதநேய உணர்வினை வெளிப்படுத்துவதும் சிறப்பேயாகும்.

### அன்பின் வெளிப்பாடு

வாழ்க்கைக் கருத்துக்களைக் கொண்ட திருக்குறளில் வள்ளுவர் மிகச் சிறப்பாக மனித நேயத்தைப் பற்றி எடுத்துரைக்கின்றார். அன்பே, மனித வாழ்க்கைக்கு உதவும் மிக முக்கியமான பிடிப்பாகும். அன்பினால் நாம் எதையும் சாதிக்க முடியும். அன்பே இதயம் (உயிர) போன்றது. நாம் இவ்வுலகில் உயிர் வாழ இதயம் எவ்வளவு முக்கியமோ அதே போல் ஒரு மனிதன் கடைப்பிடிக்கக் கூடிய நல்ல பண்பில் சிறந்தது அன்பு மட்டுமே என்பதை வள்ளுவா்,

> **“அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
> **என்பும் உரியர் பிறர்க்கு”** (குறள் - 72)

என்ற குறளில் அன்பில்லாதவர்கள் எல்லாப் பொருள்களையும் தாமே, நான் மட்டுமே அனுபவிக்க வேண்டுமென விரும்புவா். ஆனால் அன்புடையவா்கள் பிறருக்கு ஒரு துன்பம் வந்தால், மனித நேயத்தைப் பிரதிபலிக்கும் வகையில், தம் உடலையும் உயிரையும் கூட கொடுக்க தயங்காதவர்களாயிருப்பார்கள். மேலும்,

> **“அன்பகத்து இல்லா உயிரவாழ்க்கை வன்பாற்கண்**
> **வற்றல் மரம் தளிர்த்தற்று.”** (குறள் - 78)

என்ற குறளில் ஒருவருக்கு அன்பில்லாத வாழ்க்கையானது, பாலைவனத்தில் ஒரு மரம் வளர்வது என்பது இயலாத காரியம், ஏனெனில் நீரில்லாமல் மரம் வளர முடியாமல் பயனற்றதாகி விடும். அது போல அனைத்து உயிர்களிடத்திலும் அன்பிற்கு ஒரு சக்தியுண்டு. எனவே, அன்பில்லாத வாழ்க்கையும் பயனில்லாமலே போய் விடும் என்பதை உணர்ந்து, இப்புவியில் நாம் உயிரோடு உள்ளளவும் கூடுமானவரை அன்போடு இருத்தலே சிறந்ததாகும். அன்பு அனைத்தையும் தாங்கும், அனைத்தையும் நம்பும் இயல்புடையது, பகைவர்களுடைய பகையை மாற்ற உதவும் கருவியாயும் செயல்படுதல். பின்னர் நட்பாக வளர்ந்து சிறக்கும் என்பதில் ஐயமில்லை.

### அறச்செயல்கள்

மக்களுக்கு முடிந்த வரைக்கும் மனிதநேயத்தோடு அறம் செய்து வாழ்தல் நல்லது என்பதை,

> **“சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்**
> **ஆக்கம் எவனோ உயிர்க்கு.”** (குறள் - 31)

தருமமே புகழையும் செல்வத்தையும் தரக்கூடியது. ஆதலால் தருமத்தை விட மேலான செல்வம் நமக்கு என்ன இருக்கின்றது என்பதை புரிந்து கொண்டு, பகுத்தறிவோடு செயல்படவேண்டுமென வலியுறுத்துகின்றார். நம்முடைய சக்திக்கேற்றபடி, முடிந்த அளவு வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தவறாமல் அறம் செய்தல் நல்லது. மனதில் தீய எண்ணங்கள் இல்லாமல் செய்யும் தருமமே சிறந்தது, மற்றவையெல்லாம் போலியானவை என்பதை,

**“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்**

**ஆகுல நீர பிற.”**(குறள் - 34)

என்ற குறளின் வழி அறியலாம். மேலும் இளவயதில் இருக்கும் போதே, அறத்தைச் செய்வதை விட்டு விட்டு, முதுமையில் செய்வோம் என தள்ளிப் போட்டால், பின்னாளில் பயனளிக்காது போகும். மரணமடையும் காலத்தில் நாம் செய்த தருமச் செயல்கள் உறுதுணையாயிருக்கும் என்பதை அறியலாம்.

**ஈகையின் சிறப்பு**

மனிதன் தன்னிடம் உள்ள பொருளை வறியவர்களுக்கு கொடுப்பதே தருமம். இப்படி ஏழை எளியோர்க்கு உதவும் போது புகழும் பயனும் பெற முடியும். என்பதை,

**“அற்றார் அழிபசி தீர்த்தல் அ∴தொருவன்**

**பெற்றான் பொருள்வைப் புழி.”** (குறள் - 226)

ஒருவனது பசியை போக்குபவர் எவரோ, அவனே தன்னுடைய எதிர்காலச் சேமிப்பாக அறத்தைப் பெறுகிறான். நம்மிடம் இருப்பதை மற்றவர்களோடு (வறியவர்களுக்கு) மனிதநேயத்தோடு பகிர்ந்து கொடுத்து உண்டு வாழ்பவரை பசி என்னும் கொடிய நோய் தீண்டாது. ஒரு உயிர் மற்றொரு உயிர்க்கு கொடுத்து உதவக்கூடிய மனிதநேயத் தன்மை சிறப்புடையது எதையும் கொடுத்து உதவாதவர், இழிவான குணத்தவர் என்பதையும் உணர்த்துகிறது.

**“சாதலின் இன்னாதது இல்லை இனிதுஅதூஉம்**

**ஈதல் இயையாக் கடை.”**(குறள் - 230)

என்ற குறளில் இறத்தல் என்பது துன்பத்தைப் பயக்கும் ஆனாலும் ஈகைக் குணமில்லாதவரின் இறப்பு ஒரு பொருட்டாக கருதப்படவில்லை என்கின்றார் வள்ளுவர். மேலும்,

**“ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**

**ஊதியம் இல்லை உயிர்க்கு.”**(குறள் - 231)

**“உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்று**

**ஈவார்மேல் நிற்கும் புகழ்.”** (குறள் - 232)

வறியவர்களுக்கு, அவர்கள் வேண்டும் பொருளைக் கொடுப்பவரிடமே புகழ் நிலைபெற்று விளங்கும். மனிதநேயமிக்கவரின் புகழை அறிஞர்கள் பாராட்டி மகிழ்வர். கிடைத்த புகழ் என்றும் குறையாமல் நிலைத்திருப்பதற்குக் காரணம் ஈகையேயாகும் எனபதை அறியலாம்.

மனிதநேயத்தோடு நாம் இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவுபவனை, தருமப்பிரபு எனப் புகழ் பெறுவதே உயிருக்கு நாம் தரும் பரிசாகும். வாழும் வாழ்க்கையின் பயன் பேரும் புகழுடன் வாழ்தலே சிறப்பாகும் என்பது உணரப்படுகிறது. ஈகைப் பண்பே செல்வ வளமுடையோரின் சிறந்த பண்பாகும் என்பதை,

**“உண்பது நாழி உடுப்பவை இரண்டே**

**பிறவும் எல்லாம் ஓரொக்கும்மே,**

**அதனால் செல்வத்துப் பயனே ஈதல்**

**துய்ப்போம் எனினே தப்புந பலவே”**

(புறநானூறு - 189)

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் ஈகையின் சிறப்பை விளக்குவதாக உள்ளது. செல்வத்தை எளியவர்களுக்கு கொடுக்க வேண்டிய பொருள் என்ற கருத்தை மனிதநேயத்தோடு நக்கீரனார் காட்டியுள்ளார்.

ஆனால், இன்றைய கால கட்டத்தில் முதுமையடைந்த பெற்றோர்களை வீட்டில் வைத்து பராமரிப்பதற்கே கூலி கேட்கின்ற எத்தனையோ பிள்ளைகள் இருப்பவர்கள் மத்தியில் தருமம் செய்வது என்பது இயலாத காரியமாகவே கருதப்படுகிறது. இந்த நிலைமையெல்லாம் மாறி புதுமையான மனிதநேயத்தோடு கூடிய பிள்ளைகளாக மாற வழி வகை செய்தலே சிறந்தது, இந்நிலை உருவாக வேண்டும் என்ற கருத்தினைப் பதிவு செய்கிறேன்.

**இரக்கத்தின் மேன்மை**

நிலைத்த செல்வமாக இவ்வுலகில் கருதப்படுவது கருணையாகிய அருளுடைமை என்று சொல்லக் கூடிய இரக்க குணமாகும். மிகச் சிறந்த வாழ்க்கைத் துணை அருளேயாகும். இரக்கமே மனிதநேயத்தின் நிலைத்த செல்வமாகும்.

**“அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்**

**பூரியார் கண்ணும் உள.”**(குறள் - 241)

எல்லாச் செல்வங்களிலும் சிறந்தது அருட்செல்வம். ஆனால், பொருட்செல்வமானது இழிந்த குணத்தவர்களிடமும் இருக்கிறது என்பதும், நிலையற்றதாகவும் செயல்படுகிறது. மேலும்,

**“மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற் கில்லென்ப**

**தன்னுயிர் அஞ்சும் பினை.”**(குறள் - 244)

என்ற குறளின் மூலம் அறிவது, மனிதநேயத்தோடு பிற உயிர்களை இரக்க உணர்வோடு காப்பாற்றுபவர்களுக்கு தீய வினைகள் எதுவும் அவர்களை அணுகாது வழி நடத்தும் என்பதும் துன்பமே என்றும் இல்லை என்பதை வள்ளுவர் ‘அருளுடைமை’ என்னும் அதிகாரத்தில் விளக்கியுள்ளார்.

### விருந்தோம்பலின் சிறப்பு

மனிதநேயத்தில் முதற்படியாய் அமைவது, விருந்தோம்பல் மட்டுமே. வீட்டில் விருந்தினரை அன்போடு வரவேற்று, உபசரித்து வாழும் மனிதர்களை வறுமையானது வருத்தாது என்பதை,

**"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுதல் இன்று."**(குறள் - 83)

என்ற குறள் வழி அறியலாம். மேலும்,

**"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத் தவர்க்கு."**(குறள் - 86)

எனவே, இல்லத்திற்கு வரும் விருந்தினரை உபசரித்து, இன்னும் விருந்தினரின் வருகைக்காக காத்திருக்கும் நல்ல குணமிக்க இல்லறத்தால், தேவாதி தேவர்க்கும் மேலானவள். இதன் பயனாக மறுமை இன்பமும் இவளுக்குக் கிடைக்கும் என்பது கருத்தாகும். மனிதனாய் பிறந்து பொருள் ஈட்டி வாழ்ந்த போது, விருந்தினரை வரவேற்று உபசரிப்பதற்கே என்பதை உணர்ந்து செயல்பட வேண்டுமென்பதை வள்ளுவர் தனது 'விருந்தோம்பல்' என்னும் அதிகாரத்தில் விளக்கியுள்ளார். வாழும் வாழ்க்கைக்கான அர்த்தம் யாதெனில் விருந்தோம்பலாகும்.

### கொல்லாமை

மனிதநேயத்தோடு இருப்பவன் எவனோ, மிகச் சிறந்த அறங்களில் முதன்மையானவன் ஆவான். ஏந்த உயிர்களுக்கும் தீங்கு நேரிடாமல் வாழ்பவன் பிறரால் மதித்து போற்றக்கூடியவன் என்பதை,

**"நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்**
**கொல்லாமை சூழும் நெறி."**(குறள் - 324)

மனித நேயத்தன்மை பெற்ற ஒருவர் எந்த சூழ்நிலையிலும் எவ்வுயிரையும் கொல்லாத குணம் பெற்றவராவார் என்பதை, வள்ளுவர் தனது 'கொல்லாமை' என்னும் அதிகாரத்தில் விளக்கியுள்ளார்.

**"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி**
**தின்னுயிர் நீக்கும் வினை."**(குறள் - 327)

என்ற குறட்பாவில் வள்ளுவர், ஒருவன் தன் உயிரே போவதானாலும் போகட்டும், அடுத்த ஒயிர்களைக் கொல்லக் கூடாது என்ற மனிதநேயத் தன்மையினை விளக்கியுள்ளார். மேலும், நோயிலும் வறுமையிலும் ஒருவன் வாடுவதற்கு அவன் முற்பிறப்பில் செய்த கொலைச் செயல்களே காரணம் என்றும் சொல்வதை அறிவோம். எனவே மன்னித்து மறப்போம் நம் வாழ்வு சிறப்படையும்.

### பொறையுடைமை

எல்லாருடைய வாழ்விலும் எந்த ஒரு சூழ்நிலையிலும் பொறுமையைக் கடைபிடித்தல் சிறந்த நல்லறமாகும். மனிதநேயத்தோடு செயல்படும் மக்களின் பண்புகளுள் மிக ஒன்றாய் அமைவது பொறுமையே.

**"நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை**
**போற்றி ஒழுகப் படும்."** (குறள் - 154)

நன்மை, தீமைகளை ஆராய்ந்து செயல்படும் திறமை உள்ளவர்களிடம் மட்டுமே, பிறருடைய தவற்றைப் பொறுத்துக் கொள்ளும் தன்மையிருக்கும். இத்தன்மையுடையோரைச் சான்றோர்கள் பொன்னென மதித்துப் போற்றுவர் என்பதையும், ஒருவர் செய்த தவற்றை மனிதநேயத்தினால், மன்னித்தவர்களுக்கு உலகம் உள்ளளவும் புகழ் கிடைக்கும் என்பது உறுதி என வள்ளுவர் திறம்பட விளக்கியுள்ளார்.

**"மிகுதியால் மிக்கவை செய்தாரைத் தாம்தம்**
**தகுதியால் வென்று விடல்."** (குறள் - 158)

என்ற குறளில் செருக்கினால் பிறர் நமக்குச் செய்யும் தீமையை, நாம் நம்முடைய பொறுமையால் வென்று விட வேண்டும் என்றும், பிறர் நம்மை கடுஞ்சொல்லால் பேசும் போது பொறுத்துக் கொள்ளும் இல்லறத்தவர், துறவிகளை விட மேம்பட்டவர்கள் என வள்ளுவர் 'பொறையுடைமை' என்னும் அதிகாரத்தில் மனிதநேய பண்பில் பொறுத்து போவதினால் உயர்வடைகின்றான் என்பதை எடுத்துரைத்துள்ளார்.

### முடிவுரை

மனிதநேயத்தோடு அறவழிகளால் பெறும் இன்பம் மட்டுமே உண்மையான தூய இன்பம். மேலும் அன்பு, ஈகை, இரக்கம், விருந்தோம்பல், கொல்லாமை, பொறையுடைமை போன்ற அறச்செயல்களைச் செய்தால் நாமும் நலம் பெறுவோம், நாடும் வளம் பெற்று விளங்கும். எனவே, பசியென வந்தவருக்கு உணவளிப்பதால் அங்கு மனிதநேயமானது வெளிப்படுகின்றன. மனிதநேயத்தினால் ஒன்றுபட்டு வாழும் மக்கள் கூட்டத்தினால் உலக வாழ்வானது மேன்மையுறுகிறது.

# பெண்ணியம்

**முனைவர் பூ. காயத்ரி**
*ஆய்வக உதவியாளர்*
*ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு*

## முன்னுரை

பெண்ணியம் என்ற கருத்துரு கி.பி.18ம் நூற்றாண்டிலேயே தோன்றிவிட்டது. பெண்ணிய வரலாறு என்பது காலம் தோறும் எழுச்சி பெறுவதும், அடங்குவதுமாக உள்ளது. மேற்கத்திய பெண்கள் கூட நீண்டகாலம் போராடித்தான் அவர் தன் உரிமையைப் பெற வேண்டி இருந்தது. சென்ற நூற்றாண்டில் ராஜாராம் மோகன்ராய், பண்டித ஈசுவர சந்திர வித்யாசாகர் போன்றோரும் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் அன்னிபெசன்ட் அம்மையார், பண்டிதரமாபாய், கார்வே, சகோதரி சுப்புலட்சுமி போன்றோராலும் தொடங்கி வைக்கப்பட்ட பெண்ணுரிமை எழுச்சி ஆக்கபூர்வப் பயன்பளைத் தந்துள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

நவீன சமுதாயத்தில் இயல்பிற்கேற்ப தன்னை முழுமையாக மாற்றிக்கொள்ள முடியாமலும், கடந்தகாலச் சட்டங்களை அடியோடு ஒதுக்க முடியாமலும் மாறிவரும் சமுதாயத்தில் அவர்கள் தமக்குரிய இடத்தை இன்னும் துலாவித் தேட வேண்டிய நிலையிலேயே உள்ளனர்.பாரதியும், பாரதிதாசனும் கவிதை உலகில் பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய அளவு, புதினங்களோ சிறுகதைகளோ ஏறப்படுத்தவில்லை என்று கூறலாம். பெண்ணியம் என்னும் இக்கட்டுரை வாயிலாக வள்ளுவக் காலக் பெண்ணியம் தொடங்க இக்காலப் பெண் எழுத்தாளர்களின் பெண்ணியச் சிந்தனை வரை விளக்கமாகக் காணலாம்.

## வள்ளுவப் பெண்ணியம்

வள்ளுவர் காலத்திற்கு முன்னரும் பின்னரும் கால சூழலில் களம் அமைத்துப் பெண் நிலையை ஆராய்வது வள்ளுவப் பெண்ணியம். பெண்களின் நிலைப் பற்றி வள்ளுவர் காலச் சிந்தனைப் போக்குகளிலும் அவருக்கு முன்னரும் பின்னருமான சிந்தனைப் போக்குகளிலும் பண்பாட்டுக் கலப்புகள் உண்டு. பெண் நிலை பற்றிப் பெண்கள் தாம் பேசுதல் வேண்டும் எனவும் ஆண்களால் உள்ளார்ந்து பேசுதல் இயலாது எனவும் ஒரு கருத்துப்போக்கு உண்டு.

“திருக்குறளில் வள்ளுவர் மனையறத்திற்கு ஏற்ற பண்புகளை உடையவளாகத் திகழ்பவள் மனைவி. இவள் தன் கணவன் வருவாய்க்கு ஏற்றவாறு வாழக்கையை அமைத்துக் கொள்வாள். இவளே வாழ்க்கைத் துணை ஆவாள் என்று வள்ளுவர் மனைவியை வாழ்க்கைத் துணை என விவரித்துள்ளார் (51).

ஒருவனுடைய மனைவி நற்பண்புகள் அனைத்தையும் பெற்றுத் திகழ்ந்தால் அவனிடம் இல்லாததது எதுவும் இல்லை என்று மனைவியின் உயர்வு கூறப்பட்டுள்ளது (53). கற்பு என்னும் மனத்தன்மை ஒரு பெண்ணிடம் அமையப்பெற்றால் அப்பெண்ணை விடவும் பெருமை உடையன இவ்வுலகில் எதுவும் இல்லை (54). தெய்வங்கள் எதையும் வணங்காது கணவனை மட்டுமே வணங்கி எழும் பெண், பொய் என்று சொல்லும் போது மழைபெய்விக்கும் ஆற்றலை உடையவள் (55). கற்பு முதலியவற்றால் தன்னைக் காத்துக் கொள்பவள்: தன் கணவரையும் பேணிப் பாதுகாப்பவள்: தம் புகழை நிலைத்து நிற்குமாறு காப்பவள்: சோர்வு இல்லாமல் இருப்பவள் பெண் ஆவாள் (56).”[1] இவைப் போன்ற பல்வேறு கருத்துக்களைத் திருவள்ளுவர் திருக்குறளில் எடுத்துரைத்து பெண்களைப் போற்றியுள்ளார்.

வள்ளுவர் காலத்தில் ஆண்களும், பெண்களும் பாலியல் ஒழுக்கத்தில் கட்டுப்பாடே இல்லாமல் இருப்பதைக் கண்டே ஒருவன் ஒருத்தி என்ற ஒருதாரமணக் கோட்பாட்டை முன்மொழிந்துள்ளார். இதற்குமாறான ஒழுக்கத்தில் ஈடுபடுவோரைச் சற்று கடுமையாகவே சாடியுள்ளளர். கணவனுடனே பெண்களின் வாழ்க்கை என்ற உய்த்துணர் கருத்து வள்ளுவத்தின் பிழிவாகக் கிடைக்கிறது. ஆணையும் பெண்ணையும் மீட்டெடுக்கும் பணியில் மிகுதியாகப் பாதிக்கப்பட்டது பெண்கள் என்பது வள்ளுவப் பெண்ணியத்தின் முடிவு.

## இஸ்லாமியப் பெண்ணிய படைப்பாக்கம்

இஸ்லாமியப் படைப்புகளில் பொருந்தாமணம், பலதாரமணம், பிறவகைப் பாலியல் உறவுகள் விரிவாக விளக்கப் பெற்றுள்ளன. ஆண் கதைமாந்தர்களின் செயல்பாடுகளே ஓரளவு அழுத்தமாகப் பதிவுசெய்யப் பெற்றுள்ளன. ஆண், பெண் கதை மாந்தர்களுக்கும் இடையே நிகழும் பாலியல் உறவு முதன்மைப்படுத்திப் பேசப் பெற்றுள்ளது.அது பாலியல் சுரண்டலாக, பாலியல் தொடர்பான சமூகமனோபாவத் தகர்ப்பாக இருவேறு நிலைகளில் கட்டமைக்கப் பெற்றுள்ளது.

நாவலில் இடம் பெற்றுள்ள பெண் கதைமாந்தர்களில் பெரும்பாலானவர்கள் ஏதேனும் ஒருவகைப் பாலியல் பிறழ்வு உடையவர்களாகவே படைக்கப் பெற்றுள்ளன. “அறியாத செய்ததவறாக (றைமா) பரந்தமையாக (கைருன்னிஸா), இரு கணவ முறையாக (சாந்தா), குடும்ப–சமூகக் கட்டுப்பாட்டை மீறுதலாக (பிரதவ்ஸ், பாத்திமா), கள்ள உறவாக (நபிஸா) எனப் பலநிலைப்பட்ட பாலியியல் பிறழ்வு வாழ்க்கை இஸ்லாமிய நாவல்களில் மிக வெளிப்படையாகவே முன்வைக்கப் பெற்றுள்ளது”[2] அவர்களின் வாழ்க்கை முறையானது உடல், மனம் பொருள் சார்ந்த தேவைக்காக மேற்கொள்ளப் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது.

இஸ்லாமியம், ஆணின் அக வாழ்வு தொடர்பானச் சில சுகந்திரங்களை முன் வைத்துள்ளது. பலதாரமணத்தை அங்கரித்துள்ளது என்பது உண்மை. மேலும் ஆணின் பாலியல் மீறல் அங்கீகரிப்பாகப் பேசப் பெற்றுள்ளது.

இதேபோல்இஸ்லாமியம் பெண்ணின் அகவாழ்வு தொடர்பாகக் கொண்டுள்ள சில கருத்துகளையும் முன் வைத்துள்ளது.பெண் விரும்பினால் தாமே தலாக் சொல்லித் தன் கணவனைவிட்டுப் பிரியலாம், மறுமணம் செய்து கொள்ளலாம். கணவனுடன் வாழக்கையிலேயே பொருளுக்காகத் தன்மையும் தன் மகளையும் பாலியியலில் ஈடுபடுத்தும் குடும்பம் ஊரைவிட்டுத் தள்ளி வைக்கப் பெறதாக அமையும் பதிவுகளையும், அவ்வாறு பாலியியல் பிறழ்வுடையவளாக இருப்பினும் சமூகம் அவர்களை ஏற்றுக் கொண்டதற்கானக் குறிப்பிடப் பெறும் பின்புலன்களும் எதார்த்த வாழ்வியல் கூறுகள் நிறைந்ததாக அமைந்துள்ளன. இக்கருத்தியல்கள் பெண்ணுரிமைக் கருத்தியலுக்கு எதிராகப் பொருள் தருவதாகத் திகழ்கின்றன.சமூக இயல்பை ஒட்டிச் சிற்சில மாற்றங்களைப் பெண்ணியல் படைப்பாளர்கள் வாய்ப்பிருந்தும் அவற்றைக் கைவிட்டதன் விளையாகத் திகழ்கின்றன.

வள்ளுவப் பெண்ணியத்தைப் போன்றே இஸ்லாமியப் பெண்ணியமும் பெண்களின் கற்பு நெறியைத் தழுவியதாகவே உள்ளது. ஆண்களும், பெண்களும் வேறுபட்ட கட்டுப்பாடுகளும், உரிமைகளும் வழங்கப்பட்டு உள்ளன என்பதை உணர முடிகின்றது.

### 21ம் நூற்றாண்டில் இந்தியபெண்ணியம்

“ஐரோப்பாவில் 18-ம் நூற்றாண்டில் உலகனைத்தும் பரவி 20களில் வளர்ந்து 21-ம் நூற்றாண்டில் பேரளவு பேசப்படும் நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றது. இந்தியாவிலும் இப்பெண்ணிய சிந்தனைகள் பெண்களின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாகப் பிரதிபலிக்கத் தொடங்கியுள்ளது”[3].

இந்தியாவில் அதிக அளவு செல்வாக்குடன் பேசப்படும் பெண்ணியங்கள் பற்றி கீழ்க்கண்டவாறு காணலாம். சமத்துவப் பெண்ணியம் என்பது உரிமைகளைப் போராடிப் பெறுதல் இல்லை. அதற்குமாறாகச் சமூகச் சீர்திருத்தம், சட்டம் இயற்றுதல் பெண்டிர்க்குக் கல்வியறிவை மேம்படுத்துதல், அனைது வாய்ப்புக்களையும் பெண்களுக்கு பெற்றுதருதல் ஆகியவற்றையே கொள்கையாகக் கொண்டது. கலாச்சாரப் பெண்ணியம் என்பது பெண்கள் தங்களுடைய கலை உணர்சை, ஆளுமையை, சமுதாயத்தில் உரிமையுடன் நிலைநாட்ட முற்பட்டதன் உருவாக்கமே கலாச்சாரப் பெண்ணியம்.

21ம் நூற்றாண்டில் இந்தியாவில் பெண்ணியம் சமூகச் சீர்திருத்தம் என்ற அடிப்படையில் தான் உருவானது. இதன் நோக்கம் பெண்களுக்கு உரிமையைப் பெற்றுதருதல், அவர்களின் திறன் மற்றும் உணர்வுகளை வெளிக்கொணர்வது என்பவை ஆகும். நாட்டின் விடுதலையை ஒட்டி கிராமங்களிலும் பெண் விடுதலை என்பது முளைவிடத் துவங்கியது. அரசின் சீர்த்திருத்தக் கொள்கைகளும் இந்த நூற்றாண்டில் கிராமப்புறப் பெண்கள் தன்னை உணர, தன் திறமையை உலகிற்கு வெளிப்படுத்த வழியமைத்துக் கொடுப்பதாக உள்ளன. மகளிர் சுய உதவிக்குழுக்களின் மூலம் கிராமப்புறப் பெண்களுக்கு வாழ்வில் நம்பிக்கையை, ஆண் துணை இல்லாநிலைகளிலும் எதையும் எதிர்நோக்கும் திறன் போன்றவற்றை உருவாக்கியுள்ளது. படிப்பறிவில்லாத ஒரு கிராமப்புறப் பெண் ஒரு குழு அமைத்து பொருளாதார வளர்ச்சியை உருவாக்கி 2001 முன்னாள் பிரதமர் வாஜ்பாய் அவர்களின் வணக்கத்திற்குரிய சிறந்த பெண்மணியாகத் தேர்வு செய்யப் பெற்றார்சின்னப்பிள்ளை. இது இந்த நூற்றாண்டில் கிராமப்புறப் பெண்ணிய வளர்ச்சிக்கும், வெற்றிக்கும், மேலாண்மைத் திறத்திற்கும் கிடைத்த வெற்றியாகும்.

நவீனக் கண்டுப்பிடிப்புகளின் பயன்களை முழுமையாகப் பயன்படுத்தும் வாய்ப்பு நகர்ப்புறங்களில் உள்ள பெண்களுக்கு கிடைக்கின்றது. அதனால் புதிய துறைகளில் எல்லாம் பெண்கள் நுழைந்து கொண்டிருக்கின்றனர். கல்லூரிகளில் மாணவிகளின் சதவிகித எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றது. கலைத் துறைகளிலும் ஆண் மட்டுமே பணிபுரிந்த புலங்களிலெல்லாம் இன்று பெண்கள் நுழைத்துவிட்டனர். தொழில் துறைகளிலும் பெண்கள் ஆளுமைப் பண்புடன், நம்பிக்கையுடன் முன்னேறி வருகின்றனர். இவ்வாறு 21ம் நூற்றாண்டு பெண்கள் தங்களையும், தங்கள் குடும்பத்தையும் முன்னேற்ற பாதையில் அழைத்துச் செல்கின்றனர்.

**பெண் எழுத்தாளர்களின் பெண்ணியச் சிந்தனைகள்**

ஆண், பெண் வேறுபாடு என்பது அனைத்து உயிரினங்களிலும் காணப்படும் ஒன்று. அவை அனைத்தும் இனிதே வாழ்கின்றன. ஆனால் மனித இனத்தில் 'பெண்' என்றால் கல்வி முதல் வீடுபேறு வரை உள்ள மனித உரிமைகள் பெண்ணுக்கு இன்றளவும் எளிதில் கிடைப்பதில்லை என்பதே பெண் எழுத்தாளர்களின் கருத்து. பெண்கள் தொடக்கத்தில் தந்தையையும் அதன்பின் கணவரையும் இறுதியில் மகனையும் சார்ந்து வாழ்கின்றனர். பெண்ணிற்கு ஏற்படும் கொடுமைகளைத் தட்டிக் கேட்கவே 'பெண்ணியம்'என்ற கோட்பாடும், இயக்கமும் தோன்றியது எனலாம்.

"பெண்ணிய வாதிகள்" என்றாலே பல ஆண்களின் பார்வையில் அடக்கமற்றவாகள், அறநெறிகளுக்கு கட்டுப்படாமல் எப்படியும் வாழ்பவர்கள், கலாச்சாரத்தை மதியாது கண்டபடிதிரிபவர்கள் என்ற பலதரப்பட்ட தவறான கருத்துக்கள் நிலவுகின்றன. உண்மையில் பெண்ணியம் என்பது 'தனக்கும், தன்னைப் போல் அடிமைகளாக வாழும் எத்தனையோ பெண்கள், ஆண்கள், குழந்தைகள் போன்றவர்களின் விடுதலைபெறும் முழுமையான வாழ்விற்குப் போராடுகின்ற தத்துவமாகும் என்கிறார். பெண்ணினத்தின் ஆதரவாளர் இராஜேசுவரி பாலசுப்பிரமணியன் அவர்கள்"[4].

வ.வள்ளி என்ற பெண் எழுத்தாளர் படைப்பில் பெண்கள் பொருத்தமில்லாத கணவனிடமிருந்து விடுதலை வாங்கிக் கொள்ளும் போதும் எத்தனை துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது என்பதை வருத்தத்துடன் எழுதுகிறார். 'தணல் துண்டாய்ச் சில தருணங்கள்' என்ற அவரது சிறுகதையில் சுபா என்ற பெண் நீதிமன்ற வாசலில் தன் கைக்குழந்தையுடன் காத்து நிற்கிறாள். திருமணத்தின் போது பெற்றோர் தனக்குச் சீதனமாக கொடுத்த நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், குழந்தையை வைத்துகாப்பாற்ற நஷ்ட ஈடு ஆகிய இவற்றைக் கணவன் தரவேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை நீதிமன்றத்தில் வைத்து நீதி கேட்கிறாள்.ஆனால் அவளுக்கு அங்கு நியாயம் கிடைக்கவில்லை. அவன் ஆம்பளை ஒன்னுமில்லை அவ பொம்பளை: சகலத்தையும் யோசிக்கணும்" என்பதே அந்தப் பதில்.கணவன் வீட்டில் விவாவகரத்திற்கு காரணம் கருத்துவேற்றுமை என விவாகரத்து பத்திரத்தில் குறிப்பிடப்பட்டு இருந்து. ஆனால் உண்மையான காரணம் அவனுக்கு வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு இருந்தது ஆகும். இதைக் கண்டு அவள் மனம் தனலாய் தகித்தது என்று கதையினை ஆசிரியர் முடித்திருப்பது இன்றைய பெண்ணின் அவல வாழ்க்கையை சித்தரிக்கிறது.

எழுத்தாளர் வத்சலா தன்னுடைய 'சின்னச் சின்ன இழை' என்ற சிறுகதையில் பெண்ணுக்கு பெண்ணே எதிரியாவது சரியா என்ற சிந்தனைக் கேள்வியை முன் வைத்துள்ளார். உளவியல் ரீதியாக பார்க்கும் போது தன் மகன் தன்னை அனாதையாக விட்டுமனைவியின் பின்னால் சென்று விடுவானோ என்ற மிகுதியான பயத்தினால் தான் மாமியார் என்ற போர்வையில் வந்த மருமகளை வாழவிடாமல் வாட்டிவதைக்கிறாள். மகனின் திருமணம் முடிந்த பின்னர் வரவேற்புவிழா எடுக்கப்படவில்லை என்பதற்காக மருமகளை ஒருபியூன் கூட தன் பெண்ணுக்கு ரிசப்சன் வைப்பான். உன் அப்பன் பணம் குடுக்கமாட்டேனுட்டான் ஒரே பொண்ணுன்னு கல்யாணம் பண்ணிவைச்சேன் கடைசியில் ஒன்னும் பேரல" என்று மருமகளைப் பொரித்து தள்ளினால் பெண்ணினத்தின் தவறை இச்சிறுகதைசுட்டிக் காட்டுகிறது.

**முடிவுரை**

'பெண்ணியம்' என்ற இத்தலைப்பின் மூலம் வள்ளுவக் காலப் பெண்ணியத்தையும், இஸ்லாமிய பெண்ணிய படைப்பாக்கத்தை பற்றியும் விளக்கமாக அறிந்தோம். மேலும் 21ம் நூற்றாண்டில் பெண்களின் நிலையைப் பற்றியும் அண்மைக் காலப் பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளில் பெண்ணிணயச் சிந்தனைகள் பற்றியும் தெளிவாக அறிய முடிந்தது.

பாரதி காட்டும் புதுமைப் பெண்ணாக

**'நிமிர்ந்த நன்னடை நேர் கொண்டபார்வை**
**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத திமிர்ந்த**
**ஞானச் செருக்கும் உடைய செம்மை**
**மாதர் திறம்புவதில்லையாம்'**

என்பதை மறவாது நினைவில் கொண்டு வையம் தழைக்க வாழ்வோம்" மற்றவரையும் வாழ வைப்போம், வாழ்க பெண்மை ! வளர்க பெண்மை!.

**துணை நூற்பட்டியல்**


1. வள்ளுவப் பெண்ணியம், சிலம்பு நா.செல்வராசு. (ப.எண் - 16)
2. 21-ம் நூற்றாணடில் பெண்ணியம், டாக்டர் ந.வேலுசாமி. (ப.எண் - 36)
3. 21-ம் நூற்றாணடில் பெண்ணியம், டாக்டர் ந.வேலுசாமி. (ப.எண் - 21)
4. 21-ம் நூற்றாணடில் பெண்ணியம் - டாக்டர் ந.வேலுசாமி. (ப.எண் - 421)

# சு.சமுத்திரம் நாவல்களில் பெண்ணியச் சிந்தனை

**முனைவர் பொ. ஜான்சி**
*உதவி பேராசிரியர் தமிழ்த்துறை*
*மன்னர் திருமலைநாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை*

**முன்னுரை**

இன்றைய காலகட்டத்தில் இலக்கியங்களிலும் திரைப்படங்களிலும் மேடைகளிலும் பெண்ணியம் பற்றி எழுதப்பட்டும் பேசப்பட்டும் வருகின்றது. இருந்த போதிலும் இன்றும் சமுதாயத்தில் பெண்கள் ஆண் ஆதிக்கத்தால் அடக்கப்பட்டு வாழ்கின்ற நிலை காணப்படுகிறது. குடும்பங்களிலும் சரி அலுவலங்களிலும் சரி பெண்கள் ஆண்களுக்குக் கட்டுப்பட்டேதான் வாழ்கின்றனர். இதேபோன்ற திருமணம், காதல், கல்வி போன்ற நிலைகளிலும் இவர்கள் அடக்கப்படுகின்றனர். சு.சமுத்திரம் நாவல்களில் பெண்களுக்கு கற்பு நெறியாலும், பாலினவேறுபாட்டாலும் சிக்கல்கள் எழுகின்றன. சமூகஅமைப்பில் பெண்களின் நிலை என்ன என்பதைக் காண்பதே இல்லியலின் நோக்கமாகும்.

**பெண்ணியம்**

“Femnism” என்ற ஆங்கிலச்சொல் “Femnisa” என்ற இலத்தின் சொல்லிலிருந்து மருவி வந்ததாகும். “Femnisa” என்ற சொல்லுக்குப் பெண்ணின் குணாதிசியங்களைக் கொண்டுள்ள (having the qualities of female) என்பது பொருளாகும்.

”பெண்ணியம் “Femnism” என்பது இன்று தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. ஆணுக்கு எதிராக பேசப்படுவதைத்தான் பெண்ணியம் என்று தவறாக மக்கள் நினைக்கின்றனர்.

“பெமினியம் என்று ஆங்கிலத்தில் வழங்கப்பெற்ற இக்கருத்து தொடக்கத்தில் பெண்ணிலைவாதம் என்ற சொல்லால் தான் குறிக்கப்பட்டது. உலகெங்கும் நீதியும் நெறியும் ஆண்களால் தான் ஏற்படுத்தப்படுகின்றன என்பதை உணர்ந்து அவ்வரைமுறை நியாயங்களைப் பெண் என்ற நிலையில் நின்று ஆராய்வதே பெண்ணிலை வாதம் என்று கொள்ளலாம்”.

“பெண்ணிய இலக்கியத்திறனாய்வின் தலையாய நோக்கம் தந்தைவழிச் சமூகஅமைப்பின் அடித்தளத்தைத் தாக்குவது என்று மேநாட்டுப் பெண்ணியவாதியான கேட்மில்லட் தமது பாலின அரசியல் என்ற நூலில் திட்டவட்டமாகக் கூறுகிறார்”.

“பெண்ணியம் என்பது பெண்களின் எல்லா சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றை நீக்க முயல்வதாகும். அதன் மூலம் உலகளவில் அரசியலும் பண்பாட்டிலும் பொருளாதாரத்திலும் ஆன்மீகத்திலும் பொறுத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்கிறார் சார்லட்பன்ச்”.

பெண்ணியம் என்ற தத்துவமானது ஆண் மேலாதிக்கத்தால் வழிவழியாய் வந்த பண்பாட்டின் அடிப்படையில் பெண்கள் தனித்துவம் பெறாமல் வாழ்ந்து கொண்டிருப்பதையும் தள்ளப்பட்ட விதத்தையும் பேணுவதையே வாழ்வாகக் கொண்டுள்ள நிலையையும் எடுத்துரைக்கின்றது.

பெண்ணியம் என்பது சமூக அக்கரையின் வெளிப்பாடு. சமூகத்தின் சரிபாதியாக பெண் இனத்தின் இருத்தலைப் பேசுவது, ஆணாதிக்கப் பிடியிலிருக்கும் நிகழ்வாழ்வின் இயல்பினை விண்டுரைப்பது பெண்களின் பிரச்சனைகளைக் கண்டறிந்து தீர்க்கமுயவது. மரபு என்ற சமூக மதிப்பீட்டைக் கேலிக்குள்ளாக்குவது.

காலம் காலமாக அடிமைப்பட்டு வதைபட்டு வாழும் பெண்களை அடிமைத்தளையிலிருந்து மீட்டு இவர்களுக்குக் கல்வியின் மூலம் விழிப்புணர்வு ஊட்டி சமூகத்தில் ஆண்களுக்கு இணையான மதிப்பினைப் பெற்றும் தருவதே பெண்ணியத்தின் நோக்கமும் செயற்படும் ஆகும்.

பெண்ணியத்தின் கொள்கைகளையும் பெண்ணியக்க வாதியினர் பிரித்திருக்கின்றனர். அவை 1. தந்தை வழிச்சமூகம், 2. குடும்ப அமைப்பு, 3. பாலியல் பெண்களின் வரலாறு என்பதாகும்.

1. தந்தைவழிச்சமூகம் அதனால் ஏற்பட்ட சொத்துரிமை இழப்பும் பெண்களின் அடிமை நிலைக்கு வித்திட்டது. பழைய சமூக அமைப்பில் குழந்தை பெறுகின்ற காலத்தில் பெண்கள் ஆண்களை நாடினர். தந்தைவழிச்சமூகம் தொடங்கிய பிறகு பெண்கள் மிகவும் கொடுமைப்படுத்தப்பட்டனர். இந்நிலை மாறவேண்டும் என்ற பிரெஞ்சுப் புரட்சியும் அமெரிக்கப்புரட்சியும் பெண்ணியத்தின் தோற்றத்திற்கு அடித்தளமிட்டனர்.

“பெண்ணியம் என்பது ஆணிற்கு எதிரான இயக்கமன்று. பெண் விடுதலை என்ற பெயரில்

வாழ்க்கை வரம்புகளை நிராகரிப்பதும் தாய்மையின் தெய்வீகத் தன்மையை மறப்பதும் இதன் நோக்கமன்று''.

''பெமினியம் என்ற ஆங்கிலத்தில் வழங்கப்பெற்ற இக்கருத்து தொடக்கத்தில் பெண்ணிலை வாதம் என்ற சொல்லால்தான் குறிக்கப்பட்டது''.

மேற்கூறிய பெண்ணியக் கருத்துக்கள் அடிப்படையில் சு. சமுத்திரம் நாவல்களில் பீனியம் இடம்பெற்றுள்ளதை அறிய வேண்டியுள்ளது. இனி அவர் தம் நாவல்களில் பெண்ணியச் சிந்தனை காண்போம்.

**கற்பு**

பொருளாதார நிலையில் என்ன என்ன பிரச்சனைகள் எல்லாம் இருக்குமோ அவற்றையெல்லாம் கக்கூடாகக் கண்டு அனுபவித்தவர் சு.சமுத்திரம் மேலும் இவர் (சமுத்திரம்) சமூதாய முன்னேற்றமே தன் வாழ்க்கை எனத்தன்னையே படைப்புலகிற்கு அற்பணித்துக் கொண்டவர். இவர் தம் படைப்புகளில் பெண்களின் கற்புநெறி எந்தளவு புனிதமாவது என்றும் அதை அவர்கள் எப்படி காக்கின்றனர் என்றும் நமக்கு விளக்குகிறார். அதேசமயம் அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளை அப்படியே நம்முன் படைத்துக்காட்டி உள்ளார்.

**''காலந்தோறும் கோட்பாடுகள் மாரி வருகின்றன. அனால் கற்பு என்ற கோட்பாடு மட்டும் இன்றும் சமூகத்தில் போற்றக்கூடிய உயர்மதிப்பாகக் காணப்படுகிறது. சங்க இலக்கியங்களிலிருந்து இன்றைய இலக்கியங்கள் வரை பெண்களுக்கு கற்பு என்பது மிகவும் முக்கியம் என்று போற்றுகின்றன. கணவனுக்காகத் தன்னையே முழுதும் அர்பணித்தவளாகப் பெண் வாழ்ந்திருந்தார்".**

கற்பு சமுதாயத்தில் உயர்மதிப்பாகப் போற்றப்பட்டாலும் பெண்ணிய வளர்ச்சியால் பெண்ணிய சிந்தனையால் கற்புக்குப் புது விளக்கம் கூறுகின்றனர்.

**"கற்புநிலை என்ற சொல்ல வந்தார் - இரு**
**கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்."**

என்கிறார் பாரதியார்.

இதை நோக்குமிடத்து பெண்ணுக்கு மட்டும் தான் கற்பு என்ற நியதி இல்லை. அது ஆணுக்கும் இருக்கவேண்டும் என்ற பொருளில். முதன்முதலில் பாரதியார் கற்புக்கு விளக்கம் கூறிபாடினார்.

**"ஒருவனும் ஒருத்தியும் ஒன்றாக வாழும்போது ஒருவர்மற்றவரிடமும் உண்மையாக இருப்பதே கற்பு"**

இவ்வாறு கற்பு பற்றி பலரும் வலியுறுத்திருக்கின்றனர்.

**''குறிப்பிட்ட காலத்தில் ஒரு பெண் எந்த ஆணோடு வாழ்கிறாளோ அவனுக்கு உண்மையாக இருப்பதே கற்பு''**

இதுபோன்ற கற்பு பற்றி கூறுமிடத்து "ஆணாதிக்கச் சமூகம் பெண்கள் மீது பூட்டப்பட்ட விலங்க கற்பு என்பர் பெண்ணியவாதிகள்"

மேற்கூறியவாறு கற்பின் விளக்கம் பற்றிப் பலர் கூறுகின்றனர். சமுத்திரம் இதற்கு விதிவிலக்கல்ல. கற்பின் நெறியை பெண்களுக்குரிய இன்றியமையா இயற்பண்பாக கூறியுள்ளார்.

"வெளிச்சத்தைநோக்கி" என்ற நாவலில் வரும் வாணி என்பவள் வாயிலாக ஒரு பெண் தன் கற்பைக் காக்க எப்படிப் போராடுகிறாள் என்பதைக் கீழ்வரும் வரிகள் மூலம் காணமுடிகிறது.

**"இப்போ நான் புறப்படப் போனதைச்**
**தெரிஞ்சிக்கிட்டு கூப்பிடுகிறார் . . . . . .**
**போனால் நான் புனிதமாய் நினைத்துக்**
**காப்பாற்றுவது போகும். மீறிவீட்டுக்குப்**
**போனால் ஒரேடியாய் அங்கேயே இருக்க**
**வேண்டியதாயிரும்"**

மேற்கூறிய வரிகளை நோக்குமிடத்து பெண் தன் கற்பைக் காப்பாற்ற எவ்வளவு போராடுகிறாள் என்பது தெரிகிறது. அதேசமயம் அலுவலகத்தில் உள்ள வாணி பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினையைப் பார்க்குமிடத்து ஆண்களில் ஆதிக்கத்தால் பெண்ணின் வாழ்க்கை பறிபோகும் நிலையைவிட அவள் குடும்பம் பாதிக்கப்படுமோ என்று அவள் தவிக்கும் வேதனையை நம் கண்முன் காண்பது போல் படைத்துக்காட்டி உள்ளார்.

இதுபோன்ற வெளிச்சத்தைநோக்கி நாவலில் பிரிந்தோர் இடத்தில் மெய்யப்பன் வாயிலாக ஆசிரியர் கற்புக்கு விளக்கம் கூறுகிறார்.

**"கற்பு . . . . மண்ணாங்கட்டிகற்பு . . . .**
**இப்போதான் டாக்டர் மு.வரதராசனார் நாவலைப்**
**படிச்சேன். . . . அதிலே அவர் ஒருவனும்,**
**ஒருத்தியும்கூடிவாழ்கிற காலத்தில் அவன், அவளுக்கும்**
**அவள் அவனுக்கும் விசுவாசமாய் இருப்பதுதான் கற்புன்னு**
**புதுவிளக்கம் கொடுக்கிறார். . . . . கூடி வாழாதவன் கணவன்**
**இல்ல அவன் போட்ட கயிறு . . . . . . . . கழுத்தில்**
**கிடந்தால் . . . அந்த பெண் மாடுன்னு**

**அர்த்தம் . . . . ஒனக்கு ஆட்சேபம் . . . . இல்லன்னா**
**நானே அந்த கயிற்றை கழட்டிட்டு . . . . முருகன் கோவில் அறிய . . . .நல்லகயிறாய் போடுறேன்".**

இந்த வரிகளைப் படிக்கும்போது காலம் காலமாக நாம் கற்புன்னு எதைப் புனிதமாக நினைத்து போற்றி வருகிறோமோ அந்த கற்புக்குப் புது விளக்கமாக ஆசிரியர் கூறுகிறார் என்பது தெரிகிறது. கட்டியவன் விட்டுவிட்டு ஓடியதால் அப்பெண் (சத்யா) அண்ணன் அண்ணியின் கொடுமைகளைச் சந்திக்கின்றாள் இப்படிப்பட்ட பெண்ணைச் சமுதாயம் ஏன் தவிக்கவிடுகிறது என்று சாடுகிறார் ஆசிரியர். சாடுவதைக் கீழ்வரும் வரிகள் மூலம் காணமுடிகிறது.

**"நீ பயங்கரமாய் அடிபடும் போதோ**
**கட்டுனவன் தள்ளிவச்ச போதோ . . . .**
**நாலுபேர் கிடக்கட்டும் ஒருதராவது உதவிக்கு வந்தார்களா?"**

என்று மெய்யப்பன் சத்யாவைப் பார்த்துக் கேட்பது போல் ஆசிரியர் சமுதாயத்திடம் கேட்கிறார். எனவே இன்றும் சமுதாயத்தில் பெண்கட்டிய கணவனாலும் குடும்பத்தாலும் கொடுமைகளுக்கு ஆளாகி அடிமைப்பட்டு வாழ்கிற நிலைமாற வேண்டும் என்றதால் ஆசிரியர் சத்யாவை மறுமணம் புரியவைக்கின்றனர். இதுவே ஆசிரியரின் நோக்கமாக உள்ளது.

இதேபோன்ற "சத்தியஆவேசம்" என்ற நாவலில் கல்லூரியில் பணிபுரியும் வசந்தியின் கற்புக்கு எப்படியெல்லாம் அதிகார வர்க்கத்தினரால் சோதனை வருகிறது என்பதை ஆசிரியர் விளக்கி காட்டி உள்ளார். அப்பெண் வசந்தி தன் கற்புக்குக் களங்கம் வந்துவிட்டதே என்று தனக்குத்தானே அழுகிறாள். அவள் மட்டும் துன்பத்தை அனுபவிக்கவில்லை. மாறாக அக்குடும்பமே அனுபவிக்கிறது. இதனை கீழ்வரும் வரிகள் மூலம் காணமுடிகிறது,

**"அப்பாவு இவளுக்கு மூணுநாள் டயம் கொடுத்திருக்கிறாம்,**
**சொன்னபடி எழுதிக்கொடுக்கவிட்டால்,**
**இவளோட கற்புக்கு அவர் பொறுப்பில்லையாம்"**

எப்படியெல்லாம் ஆட்டிவைக்கின்றனர். என்பதையும் ஆண்களின் ஆணையால் பெண்கள் படும் சித்திரவதையை இந்நாவல் மூலம் அறியமுடிகிறது. எனவே மேற்கூறியதை நோக்குமிடத்து சமுதாயத்தில் பெண்கள் காலம் காலமாக ஆணுக்கு அடிமையாகவே இருக்கவேண்டிய சூழ்நிலையை அறியமுடிகிறது.

**பாலின வேறுபாடு**

பாலின வேறுபாடு என்று நோக்குமிடத்து இரண்டு கோணத்தில் நாம் காணவேண்டும்.

1. பாலியல் உணர்வு, 2. ஆண்-பெண் என்ற பிரிவு நிலை இந்த இரண்டிலுமே பெண்தான் பாதிக்கப்படுகிறாள். இன்று நம் சமூகத்தில் ஒருபெண் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறாள் என்று பார்க்கும்போது ஆணைவிட பெண் உரிமையற்றவளாய் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். இக்காலகட்டத்தில் பெண்ணியச் சிந்தனைகள் வளர்ந்த போதிலும் பெண்களுக்குக் கல்வியிலும் பதவியிலும் உரிமை பல கிடைத்திருந்தாலும் முழுமையாக வாழ்க்கையில் பெண் முன்னேறவில்லை என்றே தோன்றுகிறது.

ஆண்-பெண் என்ற பாகுபாட்டில் ஆனைவிடப் பெண் எல்லாவித நிலையிலும் குறைந்தவளாக இருக்கவேண்டும் என்று இச்சமூகம் எதிர்பார்க்கின்றது. பெண் விடுதலை பெண்ணுரிமை என்பது ஆண் ஆதிக்கத்தால் நசுக்கப்பட்டே வந்துள்ளது. இன்றைய சூழலில் பலகுடும்பங்களில் ஒரு ஆணை வளர்பது போல் ஒரு பெண்ணை வளர்ப்பதில்லை. பெண் எப்பொழுதுமே மற்றவர்களின் பாதுகாப்பிலே வளரவேண்டும் என்று எதிர்பார்க்கபடுகிறது. இதனால் பெண்கள் ஒரு குறுகிய வட்டத்தில் வளர்க்கிறார்கள்.

ஆண்கள் வெளி உலகில் சுதந்திரமாக உலவருவதுபோல் பெண்கள் சுதந்திரமாக இருக்க அனுமதிக்கப்படுவதில்லை. இதனால் அவர்கள் மனதில் அடிமை உணர்வே தலைதூக்குகிறது.

எடுத்துக்காட்டாக "வளர்ப்புமகள்" என்ற நாவலைக் காணலாம். இந்நாவலில் வரும் மல்லிகா என்பவள் சொக்கலிங்கம் பார்வதி தம்பதியருக்கு வளர்ப்பு மகளாக வளர்கிறாள். குழந்தைப்பேறு இல்லாத பார்வதி குடும்பம் அதிக பாசத்துடன் மல்லிகாவை வளர்த்தாலும் தன் கட்டுப்பாட்டின் கீழ் அவள் இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறாள். இதனால் தான் தாய் என்ற நிலையைக்காட்டி அவளை ஒரு குடிகாரனுக்கு (ராமன்) மனம் முடிக்க ஆசைப்படுகிறாள். மல்லிகா மறுத்தால் அவளை வீட்டைவிட்டு வெளியேறச் சொல்கிறாள். பின் மல்லிகா தன் தாய் வீட்டுக்குச் செல்கிறாள். இடையில் அதாவது காதலில் மற்றவருடன் பழகும் நிலையில் பல சிக்கல்களுக்குத் தள்ளப்படுகிறாள். இதற்கெல்லாம் காரணம் பார்வதியின் அடக்கு முறையே ஆகும்.

இதே நிலையில் மல்லிகாவிற்குப் பதில் ஒரு ஆணாக இருந்திருந்தால் இவ்வளவு கொடுமைக்கு ஆளாகி இருக்கமாட்டான். பெண் என்பதால் இறுதி வரை பெற்றோரின் சொற்படித்தான் இருக்க வேண்டும்.

அதேபோல் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் அவனைத்தான் மனக்கவேண்டும் என்ற நிலையைக் காணமுடிகிறது.

இதுபோன்ற “ஒருகோட்டுக்குவேளியே” என்ற நாவலிலும் உலகம்மை என்பவள் ஒரு பெண்ணாக இருப்பதால் அவளால் தன் கற்பைக் காப்பாற்ற முடியாது என்று எண்ணி அவளின் தந்தை பயப்படுகிறார். பயத்தால் உலகம்மையை யாருடனும் சண்டைபோட வேண்டாம். உன்னை ஏதாவது செய்துவிடுவார்கள் என்று கூறுகிறார்.

> **“அடிச்சா பரவாயில்லை நீ தனியா இருக்கும்போது**
> **ராத்திரி வேளையில அவமானப் படுத்திட்டா....**
> **பலவேசம் அப்படிப்பட்ட பயல்தான்,**
> **சொந்த சித்திமவளையே வச்சிக்கிட்டிருந்த பய”**

இந்த வரிகளின் மூலம் ஆண்கள் பெண்களை எப்படியெல்லாம் அடிமைப் படுத்தியிருக்கிறார்கள் என்றும் அதனால் பெற்றோர்கள் எப்படி தவிக்கின்றனர், என்பதையும் பார்க்கமுடிகிறது. இதே உலகம்மைக்குப் பதில் மாயாண்டிக்கு ஓர் ஆண்மகன் இருந்திருந்தால் அவர் அவ்வளவு பயப்பட்டிருக்கமாட்டார். எனவே இன்னும் பெண் தனியா ஆணுக்கு நிகரா வாழ முடியவில்லை என்பது தெரிகிறது.

இந்த ஆண் - பெண் பாகுபாட்டில் பாலுணர்வு அடிப்படையிலும் பெண்களுக்கு சிக்கல்கள் எழுகின்றன.

> **“பாலுணர்வு உளவியல் சார்ந்தது என்பது உண்மையே. பெண்கள் அதற்கு விதிவிலக்கல்ல. ஆயினும் ஆண்களது நிலையில் மனத்தில் பெண்கள் தம்மினும் தாழ்ந்தவர் என்ற எண்ணம் கருத்தியலாகப் பதிந்துள்ளது. அதனாலேயே பெண்களை உற்றுப்பார்த்தால், கேலிபேசுதல், தவித்த இடங்களில் சேட்டையில், வாய்ப்பான இடங்களில் பலாத்காரமாக இழுத்தல், கற்பழித்தல் போன்ற சம்பவங்கள் நிகழ்கின்றன”.**

பெண்களை வெறும் போகப்பொருளாக நினைக்கும் ஆண் ஆதிக்கத்தில் பெண்களின் நிலை மிகவும் மோசமாக உள்ளது. காட்டாக வேலைக்குப் போகும் பெண்களுக்குத்தான் பாலியல் பிரச்சனைகள் அதிகம் ஏற்படுகின்றன. அவர்கள் பல ஆண்கள் மத்தியில் வேலை பார்ப்பதால் ஆண்கள் அவர்களுக்குப் பல இடையூறுகளைத் தருகின்றனர். காட்டாக “வெளிச்சத்தை நோக்கி” என்ற நாவலைக் காணலாம்.

> **“அய்யோ . . . . அந்தப்பாழாப் போறவனால**
> **என்நிலமை இப்படி ஆயிட்டே . . . . ஆயிட்டே**
> **. . . . என்று அழுதாள் . . . . அந்தப்**
> **ஃபைல் கிடைக்காது சார் என்னோடராசியே**
> **அப்படித்தான் சார் . . . . நான் எது எதையெல்லாம்**
> **பாதுகாத்துக்கனுமுன்னு நினைக்கேனோ**
> **அதெல்லாம் பறிபோயிடும் சார். மானேஜர் அவள்**
> **கழுத்தை வருடிவிட்டபடி சரி என்னைப்பாரு . .**
> **வெட்கமா இருக்க என்றார்”**

இந்தவரிகளை நோக்குமிடத்து வறுமைக் கோட்டிலிருக்கும் பெண்கள் குடும்பத்தைக் காப்பதற்கு வேலைக்குப் போனால் அங்கு ஆண்கள் அதிகார போர்வையை போர்த்திக்கொண்டு பெண்களைப் போகப்பொருளாக நினைக்கின்றனர். பெண்கள் அடிப்பணியாவிட்டால் வேலையைவிட்டுப் போகச் சொல்கின்றனர். இந்நாவலில் வரும் வாணி என்பவள் ஒரு விதவை. அவள் ஏற்கனவே திருமணமானவள், என்று சிந்திக்காது அவளை தனக்கு இனங்கச் சொல்கிறார் மானேஜர். இதற்கு அம்மானேஜரின் பாலுணர்வே காரணம். தன் அறையில் பல ஆபாசப்படங்களை ஒட்டி மகிழ்பவன். எனவே வானியைப் போகப்பொருளாகக்க நினைக்கின்றான்.

இந்நாவலைப் பற்றி ஆசிரியரே ஓர் இடத்தில் குறிப்பிடுகிறார்.

> **“ஒரு வாலிபன் உணர்வு பிரளயங்கள் அவன் கண்ட**
> **பாரம்மையின் ரத்தநாளங்கள்”**

என்கிறார்.

எனவே ஆண்களின் மட்டமான ரசனை உணர்வால் பெண்களின் கற்புக்கே களங்கம் ஏற்படுகின்றது. இதனால் பெண்களுக்குப் பிரச்சனைகள் ஏற்படுகின்றன, என்பதையும் அவர் பிறிதோர் இடத்தில் குறிப்பிடுகிறார்.

> **“ஓர் இளம் மனதில் வேகத்தாபங்களை**
> **உணரலாம்”**

சத்யா என்பவளின் மன உணர்வுகளை அவள்படும் துன்பங்களை அவள் கணவன் விட்டு ஓடியதால் அவள்படும் அடி உதைகளை ஆசிரியர் நம் மனக்கண்முன் கொண்டு வருகிறார்.

மேலும் “சத்தியஆவேசம்'' என்ற நாவலிலும் பெண்களைத் தனக்குக் கீழ் அடிபணிய வைக்கின்ற நிலையைக் காணமுடிகிறது. தன்விருப்பத்திற்கு ஆடாவிட்டால் ஆண்கள் அவளை மானபங்கப்படுத்தவும் தயாராக உள்ளனர். என்பதைக் கீழ்வரும் வரிகள் மூலம் காணமுடிகிறது.

**"அப்படி என்னடா பொல்லாத மகள்
அப்பாவுகிட்டேபடுக்காமல் அவளுக்கு வேலை
கிடைத்திருக்குமா"**

என்று பெண்களை இழிவு படுத்துகின்ற ஆண் ஆதிக்கத்தில் தான் பெண்கள் வாழ்கின்றனர். எனவே பெண் என்பவள் எவ்வளவு படித்திருந்தாலும் திறமை மிக்கவளாக இருந்தாலும் தனக்குக் கீழ்தான் அவள் வாழவேண்டும் என்று ஆண் சமுதாயம் எதிர்பார்க்கிறது. என்பதை இந்தநாவல்கள் மூலம் அறிந்துகொள்ளமுடிகிறது.

**பெண்களின் நிலை**

பெண்களை உயர்வாகக் கருதுபவர் சு. சமுத்திரம் அவர் படைத்த நாவல்களில் பெண்கள் எத்தகைய துயர்களை அடைகிறார்கள் அவற்றிலிருந்து எவ்வாறு மீள்கிறார்கள் என்பதைத் தெளிவாக ஆசிரியர் படைத்துக்காட்டி உள்ளார். பொதுவாகப் பெண்களுக்கு ஆண்களால் பிரச்சனை வந்தபோதும் குடும்பத்தில் பெற்றவர்களாலும் பிரச்சனைகள் எழுகின்றன. ஆசிரியர் பெண்களைத் துணிவுடனும் சமுதாயப் புரட்சியுடனும் படைத்துக்காட்டி அவர்கள் ஆணுக்குச் சரிநிகராக வெளிக்கொள்பவர். அவர்கள் எந்த எந்தத் தொல்லைகளுக்கு ஆளாகி வெளிவருகிறார்கள் என்பதைத் காட்டுகிறார்.

இன்றைய காலகட்டத்தில் பெண்கள் எத்தனையோ துறைகளில் முன்னேறி உள்ளனர். இதற்குப் பெண்ணுரிமைச் சிந்தனையும் ஒரு காரணமாகக் கருதலாம். இருந்தபோதிலும் இரண்டாம் நிலைதான். அவர்களுக்குத் தரப்படுகிறது. பெண் உயர் பதவிவகித்தாலும் அறிவாற்றலில் சிறந்தவளாக இருந்தாலும் பெண் ஆணுக்குக் கட்டுப்பட்டுத்தான் வாழவேண்டும் என்ற நிலை இன்னும் மாறவில்லை. பெண் ஆணின் பாதுகாப்பில்தான், அவள் மற்றவர்களிடமிருந்து தன் கற்பை காப்பாற்ற முடியும் என்ற நிலையில் அவள் வாழ்கிறாள்.

காட்டாக "வெளிச்சத்தைநோக்கி" என்ற நாவலைக் காட்டலாம்.

**"அவரு உயிரோட இருக்கதுவரைக்கும் இந்த
மானேஜர், என் வீட்டுக்கு வந்திருந்தார்
. . . . . அப்படிப்பட்டவனுடன் நேற்று
என் கையை வலுக்கட்டாயமாக பிடிச்சிக்கிட்டு
நாளைக்கு சினிமாவுக்குப் போகலாமான்னு
கேட்கிறார் . . . . போனால் நான்
புனிதமாய் நினைத்துக் காப்பாற்றுவது போகும்
மீறிவீட்டுக்குப் போனால், என்நிலையைப்
பார்த்தாயா? எப்படி இருந்தவள் எப்படி
ஆயிட்டேன் அவரு இருந்தால்"**

இந்த வரிகளைப் பார்க்குமிடத்து கணவனை இழந்த ஒரு பெண்ணை எப்படியெல்லாம் சமுதாயம் கீழ்த்தரமாக எதிர்பார்க்கிறது என்பதைக் காண முடிகிறது. அப்பெண்ணின் நிலை இரு கோணத்தில் சிக்கி தவிக்கிறது உடன்போனால் கற்பு பறிபோயிடும் போகாவிட்டால் குழந்தைகளின் வயிற்றுப் பசியைப் போக்கமுடியாது. இந்த இரண்டுக்கும் நடுவே அவள் சிக்கித்தவிக்கும் நிலையைக் காணமுடிகிறது.

இது மாதிரியான ஆண்வர்க்கத்தில் பெண்கள் படும் துன்பங்களை ஆசிரியர் படைத்துக்காட்டி உள்ளார். இதைமீறிப்பெண் வெளிவரவேண்டும் என்று ஆசிரியர் வற்புறுத்துகிறார். இதேபோன்று இந்நாவலிலே பெண்ணுக்கு அடைக்கலம் தருவதற்கு மாறாக அவளைக் கொடுமைப் படுத்துகின்ற நிலையம் காட்டுகிறார்.

கணவன் மனைவியை விட்டுவிட்டு ஓடிவிடுகிறான். அப்பெண் (சத்யா) பிறந்த வீட்டுக்கு வருகிறாள். அங்கு அவளை அன்புடன் கவனிக்காது அடியும் உதையும் தந்துகொடுமைப்படுத்துகின்றனர். பெண்ணுக்கு எந்நிலையிலும் பிரச்னையைத் தான் சமுதாயம் தருகிறது.

இருந்தபோதும் இந்நாவலில் வரும் சத்யாவைத் துணிந்து வேறு ஒரு ஆடவனை கைபிடித்து வாழவைக்கிறார் ஆசிரியர். இப்படிப்பட்ட பெண்ணைத்தான் தன் நாவல்கள் மூலம் வெளிக்கொணர்கிறார். "நெருப்புத்தடயம்" என்ற நாவலில் தன் அண்ணண் ஒரு பெண்ணுடன் உடன்போக்கு போவதால் அக்குடும்பத்தினர் எப்படிப்பட்ட நிலைக்கு ஆளாகிறார்கள் என்பதைக் கீழ்வரும் வரிகள் மூலம் காணமுடிகிறது.

**"உடம்பையே கையில்பிடித்து நிற்பவன்போல் நின்று
கையெடித்துக் கும்பிடப்போன கலாவதி மேல்,
கட்டுவிரியன் பாம்புபோல் பாய்ந்தார்கள்.
ஏற்கனவே அவிழ்ந்திருந்த காலாவதியின் சேலை
அவர்கள் கையோடு வந்தது. பாவாடை
துண்டு துண்டாக வந்தது அவள் முண்டியடித்து
முருங்கைமர வேரில் விழுந்தாள். அதில்
சிக்கிக்கிழிந்த ஜாக்கெட், அவர்களிடம் கந்தல்
கந்தலாகப் போவது, அவர்கள் நிர்வாணப்
படுத்தும்போது கலாவதி சொன்ன ஒரே
வார்த்தை எய்யா . . . . என்னைப்பெத்த
அய்யா"**

இந்த வரிகளை பார்க்கும் போது ஆடவன் செய்த குற்றத்திற்கு ஒரு பெண்ணை எப்படியெல்லாம் அவமானப்படுத்துகின்றனர். காரணம் ஆண் ஆதிக்க உணர்வே.

இதே நாளில் பிறிதோர் இடத்தில் பாதிக்கப்பட்ட பெண்களில் தமிழரசியும் ஒருத்தி. இவள் படும் வேதனைகளை ஆசிரியர் காட்டுகிறார்.

**"தமிழரசிக்கு அடிவயிற்றில் மெல்லியதாய்**
**ஒரு உணர்வு உருவாகி இதயத்தைவிட**
**பெரியதாய் வளர்ந்து தொண்டையையே**
**ராக்கெட்டாக்கி வாய்வரை வந்து**
**"அம்மா" என்று சொல்லப் போனது"**

தாய் மக்கள் உறவைக்கூட இந்த ஆண் சமுதாயம் தடுத்து பெண்ணை அழவிட்டு வேடிக்கை பார்க்கிறது என்பதை ஆசிரியர் படைத்துக்கட்டி உள்ளார். மொத்தத்தில் இந்நாவல் முழுக்க ஆண்களால் பெண்களே பல சிக்கல்களுக்கு ஆளாகின்றனர். அதிலிருந்து மீள முடியாமல் மடிந்து போகின்றனர் என்று காட்டுகிறார்.

"ஒருகோட்டுக்குவேளியே" என்ற நாவலிலும் உலகம்மை பெண்ணாக இருப்பதால் அவளுக்கு அவள் சாதிக்காரர்கள் பல இன்னல்களைத் தருகின்றனர். இறுதியில் அவள் இன்னல்களைத் தாண்டி கோட்டுக்குவெளியே வருகிறாள். தன் சாதியிலிருந்து பிரிந்து கீழ்ச்சாதியினரோடு சேருகிறாள். இதற்கு காரணம் ஆண்களின் அதிகாரத் தன்மையாகும்.

## முடிவுரை

பெண்ணென்று பூமியில் பிறந்துவிட்டாலே பல சுமைகளைச் சுமக்க வேண்டும் என்ற நிலைமாற வேண்டும். மேலும் ஆண்களின் ஆதிக்கம் ஒழிய வேண்டும். ஆண்களின் ஆபாச ரசனை உணர்வு மாறவேண்டும். பெண்களைத் தனக்கு கீழ் அடிமைப்படுத்தும் நிலை ஒழியவேண்டும். முக்கியமாக பழி வாங்கும் ஆண் மன உணர்வு இருக்கும் வரை பெண்கள் ஆண்களால் நசுக்கப்பட்டேதான் வாழமுடியும் என்ற கருத்துக்கள் பெறப்படுகின்றன. பெண்களின் நிலை மாற ஆசிரியர் சமுத்திரம் பெண்களைச் சமூகக்கட்டுகளுக்கு வெளியே வரவைக்கிறார். மிகுந்த வேகத்துடன் அவர் சிந்தனை காணப்படுகிறது.

## குறிப்புகள்

1. இரா. பிரேமா, பெண்ணியம், ப.1
2. சு.சந்திரா, பெண்ணியம், தமிழ் நாவல்களில் பெண்ணியம், ப.66
3. மேலது, ப.67.
4. இரா.பிரேமா, பெண்ணியம், ப .3
5. மேலது, ப. 2
6. இரா. பிரேமா, பெண்ணியம், ப. III
7. மேலது, ப. III
8. உமாராணி, இர. பெண்ணியம் திறனாய்வு நோக்கிய ஜோதிலதாகிரிஜாவின் நாவல்கள், ப.க். 12-13.
9. செ. சாரதாம்பாள், பெண்ணியம், பெண்ணிய நோக்கில் தாய்மை அல்லது தாய்மைத்துவம், ப. 80
10. சு. சந்திரா, பெண்ணியம், தமிழ் நாவல்களில் பெண்ணியம், ப. 65.
11. பொ.சத்தியபாமா, தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் தீபம் இதழின்பங்கு பக்.118-121
12. பாரதியார், பாரதியார் கவிதைகள் பெண்விடுதலைக்குப் பின், பாட்டு எண் -5, ப. 205.
13. தியாகமணி, சு. சமுத்திரம் படைப்புகளில் பெண்ணியம், ப.142.
14. சு.சந்திரா, பெண்ணியம், தமிழ் நாவல்களில் பெண்ணியம், ப. 76.
15. மேலது, ப. 75.
16. சு. சமுத்திரம், வெளிச்சத்தைநோக்கி, ப. 36.
17. சு. சமுத்திரம், வெளிச்சத்தைநோக்கி, ப. 182.
18. மேலது, பா. 183.
19. சு. சமுத்திரம், சத்திய ஆவேசம், பா. 234.
20. சு. சமுத்திரம், ஒருகோட்டுக்குவேளியே, ப 42.
21. செ. கணேசலிங்கன், பெண்ணடிமைதீர, ப. 55
22. சு. சமுத்திரம், வெளிச்சத்தைநோக்கி, பக். 57-58.
23. சு. சமுத்திரம், வெளிச்சத்தைநோக்கி, ப. VIII.
24. மேலது, ப. VIII.
25. சு. சமுத்திரம், சத்திய ஆவேசம், ப. 344.
26. சு. சமுத்திரம், வெளிச்சத்தைநோக்கி, ப. 36.
27. சு. சமுத்திரம், நெருப்புதடயங்கள், பக். 149-150.
28. சு. சமுத்திரம், நெருப்புதடயங்கள், ப. 287

# தமிழிலக்கியம் வலியுறுத்தும் மதுரபாடணம்

**முனைவர் சை. ஜெஸிமா**
*உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை*
*ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (த), மதுரை*

### முன்னுரை

கலைகள், நிகழ்த்துக்கலைகள், நுண்கலைகள் என்றெல்லாம் பல்வகைப்படுத்தப்படுகின்றன. ‘‘அறுபத்து நாலுகலை யாவு மறிந்தோம், அதற்கு மேலொரு கலையானதும் அறிந்தோம்’’ என்று பாம்பாட்டிச் சித்தர் அறுபத்துநான்கு கலைகள் உள்ளதைக் குறிப்பிடுகின்றார். இவற்றுள் ‘மதுரபாடணம்’ எனும் இனியன பேசுதலை கலைகளுள் ஒன்றாகக் குறிப்பிடுகிறார். இவ்வாறு, மதுரபாடணம் கலையாகக் கருதப்படுவதற்கான காரணத்தை அறிவதே இவ்வாய்வின் நோக்கம் ஆகும்.

### ‘‘மதுரபாடணம்’’ - சொல் விளக்கம்

‘‘மதுரம்’’ எனும் தமிழ்ச் சொல்லுக்கு ‘இனிமை’, ‘தித்திப்பு’ என்று பொருள். (கழகத்தமிழ் அகராதி, ப. 738) ‘பாடணம்’ என்பது வடசொல். இவ்விரண்டு சொற்களும் இணைவு மதுரபாடணம் என்றாகி, ‘மதுரமொழிவு ‘என்ற பொருளை இணையதளம் உரைக்கிறது. (https://aanmeegam.co.in/blogs/siththarkal/64-kalai-names-tamil/amp/) தமிழில், இனியவை கூறுதல், இனியவைபேசுதல், இன்சொல் பேசுதல் என்ற பொருள்களில் மதுரபாடணம், மதுரமொழிவு எனும் சொற்றொடர்கள் நோக்கப்படுகின்றன.

### மதுரபாடணமும், கலையும்

கற்றுத் துறை போகிய அறிவு என்று சான்றோர் ஒருவரைக் குறிப்பிடும்போது, ஏதேனும் ஒரு துறையில், கற்றுத் தேர்ந்து பெற்ற அறிவு உடையவர் என்று எண்ணுகிறோம். இதையே, நாம் கலை என்று கருதமுடிகிறது. அன்றாட வாழ்வில் நாம் செய்யும் தொழில்களான துவைத்தல், சமைத்தல், சிகையலங்காரம், யோகப்பயிற்சி, கல்வி கற்பித்தல் என்று ஒவ்வொரு செயலும் கலையாகவே பார்க்கப்படுவதை இணையதளங்களின் வழி அறிய முடிகிறது. (https://tamil.oneindia. com/what-is-aayakalaigal-64-what-are-they-cs-405475.html)
எனவே, ‘‘கற்பதற்கு உரிய செயல்களனைத்தும் கலை என்று கூறமுடிகிறது.

பாம்பாட்டிச்சித்தர் குறிப்பிடும் அறுபத்துநான்கு கலைகளாவன, எழுத்திலக்கணம், எழுத்தாற்றல், கணிதம், மறைநூல், தொன்மம், இலக்கணம், நயனூல், கணியம், அறநூல், முகநூல், மந்திரநூல், நிமித்திக சாத்திரம், உருவ சாத்திரம், வைத்திய சாத்திரம், இதிகாசம், வனப்பு, அலங்காரம், மதுரபாடணம், நாடகம், நடம், ஒளி நுட்ப அறிவு, யாழ், குழல், மதங்கம், தாளம், விற்பயிற்சி, பொன் நோட்டம், தேர்ப்பயிற்சி, யானையேற்றம், குதிரையேற்றம், மணி நோட்டம், மண்ணியல், போர்ப்பயிற்சி, மல்லல், கவர்ச்சி, ஓட்டுகை, நட்புப்பிரிப்பு, காமநூல், மயக்கு நூல், வசியம், இதளியம் (ரசவாதம்), இன்னிசைப்பயிற்சி, பிறஉயிர் மொழியறிகை, மகிழுறுத்தம், நாடிப்பயிற்சி, கலுழம், இழப்பறிகை, மறைத்ததை அறிதல், வான்புகவு, வான்செலவு, கூடுவிட்டு கூடு பாய்தல், தன்னுருகரத்தல், மாயச் செய்கை, அழற்கட்டு, நீர்கட்டு, வளிக்கட்டு, கண்கட்டு, நாவுக்கட்டு, விந்துக்கட்டு, புதையற்கட்டு, வாட்கட்டு, சூனியம் ஆகியனவாகும். இவற்றுள் 19ஆவது கலையாக மதுர பாடணம் எனும் கலை குறிப்பிடப் படுகிறது (https://aanmeegam.co.in /blogs/siththarkal/64-kalai-names-tamil/amp/) இனி, இக்கலை குறித்து இனிக் காணலாம்.

### மதுரமொழிவின் பண்புகள்

‘இன்சொல்பேசுதல்’ எனும் பொருள்பட அமைந்த ‘மதுரமொழிவு’ பற்றித் திருக்குறள் ‘வஞ்சனை இல்லாத இனிய சொற்கள்’, ‘பிறர் விரும்பும் இனியசொல்’, ‘பணிவுடைய சொற்கள்’, ‘பிறர் நலன் விரும்பும் சொற்கள்’, ‘பிறருக்குத் துன்பம் விளைவிக்காத சொற்கள்’ என்று கூறுகிறது. இதை, ‘‘இன்சொல்லால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்’’ (இனியவைகூறல்: குறள்:91) ‘‘இன்புறும் இன்சொல்’’ (குறள்:94),’’ பணிவுடையன் இன்சொலன்’’ (குறள்:95), ‘‘நல்லவை நாடி இனிய சொலின்’’ (குறள்:96), ‘‘சிறுமையுள் நீங்கிய இன்சொல்’’ (குறள்:98), என்ற குறட்பாக்களில் அறிய முடிகிறது

இனியவை நாற்பது,‘‘பேதுறார் கேட்டல் இனிது (பாடல்:8 அடி4) என்று கூறுகிறது. அதாவது,

அன்புடையார் வாய்ச்சொல் கேட்பது இனியது என்றும், மிகச்சிறந்த அறிவுடையவர்களாக இருந்தாலும் ஒரு பொருளை ஆராய்ந்து உரைப்பது இனிது என்று

**“சிறந்து அமைந்த கேள்வியர் ஆயினும், ஆராய்ந்து**
**அறிந்து உரைத்தல் ஆற்ற இனிது**

(பாடல்:31:3-4)

என்ற அடியிலும் கூறுகிறது. அதாவது, அறிவுடையவர்களாக இருந்தாலும், வாய் சொல்லில் அன்பு இருக்க வேண்டும். ஒரு கருத்தைப் பேசும் பொழுது/ கூறும்பொழுது, கூறுவோமா? வேண்டாமா? கூறினால் பிறருக்குத் துன்பம் விளையுமா? மனம் புண்படுமா? என்று ஆராய்ந்து உரைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளது. இக்கருத்துக்கள் திருக்குறள் கூறும் இனியவை கூறலின் பண்புகளுக்கு அறம் சேர்க்கும் வகையில் அமைந்துள்ளன. இவை, மதுரமொழியின் பண்புகளையும் உணர்த்துகின்றன.

**மதுரமொழியின் பேறு**

பணிவு, பிறர்நலம் விரும்புதல், வஞ்சனையின்மை, பிறருக்குத் துன்பம் விளைவிக்காத, பிறர் விரும்பும் சொற்களைப் பேசுபவர்களின் சிறப்புகளாகத் திருக்குறள், “செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்” (குறள்:91), “இன்சொலன் ஆதல் ஒருவர்க்கு அணியல்ல மற்றுப் பிற” (குறள்:95) என்று கூறுகிறது. அதாவது, அறநெறி உணர்ந்து பேசுபவரின் இனியசொற்களே அவருக்கு அணிகலன் என்று மொழிகின்றது. எழுத்தாளரும் பத்திரிக்கையாளருமான பவள சங்கரி கூறும் ‘ஜென்’ துறவிக் கதை மதுர மொழிவாளர் அடையும் பேற்றினை விளக்குகிறது. “ஒரு பெரிய ஆலமர அடியில், கண் பார்வையற்ற துறவி ஒருவர் அமர்ந்திருந்தார். அப்போது அந்த வழியாக வந்த ஒரு வழிப்போக்கன், “ஏய் கிழவா, யாராவது இந்த வழியாகச் சென்றார்களா?” என்று சற்றும் மரியாதை இல்லாமல் அதிகாரத்துடன் கேட்டான். அதற்கு அத்துறவி “அப்படி யாரும் சென்றதாகத் தெரியவில்லையே” என்று பதிலளித்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு, மற்றொருவர் வந்து “ஐயா, இதற்கு முன் யாராவது இந்தப்புறம் சென்றார்களா?” என்று கேட்டார். அதற்கு அத்துறவியார் “ஆம், சற்று முன் இதே கேள்வியைக் கேட்டுக்கொண்டு ஒருவன் சென்றான்” என்றார். மீண்டும் சற்று நேரம் கழித்து இன்னொருவர் வந்து அத்துறவியிடம் “வணங்குகிறேன், துறவியாரே. இதற்கு முன் இந்த வழியாக யாராவது செல்லும் சப்தம் தங்களுக்குக் கேட்டதா சுவாமி?” என்று பணிவுடன் கேட்டார். உடனே அத்துறவி “மாமன்னரே, வணக்கம். இவ்வழியாக முதலில் ஒரு வீரன் சென்றான், அடுத்ததாக ஓர் அமைச்சர் சென்றார். இருவருமே தாங்கள் கேட்ட அதேக் கேள்வியை கேட்டுச் சென்றனர்.” என்றார். அப்போது ஆச்சரியத்துடன் மன்னர் “துறவியாரே, உங்களுக்குத் தான் பார்வை இல்லையே. பின்னர் எப்படி முதலில் வீரனும், அடுத்ததாக அமைச்சரும் கேட்டுச் சென்றார்கள் என்பதைச் சரியாகச் சொல்கிறீர்கள்” என்று கேட்டான். அதற்கு அத்துறவி, “இதை அறிவதற்கு பார்வை தேவையில்லை அரசே.! அவரவர் பேசுவதை வைத்தே, அவர் யார், அவரது தகுதி என்ன என்பதைத் தெரிந்து கொள்ளலாம்” என்று சொல்லி,‘முதலில் வந்தவன் சற்றும் மரியாதையின்றி பேசினான். அடுத்து வந்தவரின் பேச்சில் அதிகாரம் இருந்தது. தங்களது பேச்சில் மட்டுமே பணிவும் தென்பட்டது’ என்று எடுத்துக் கூறினார். (https://www.vallamai.com/?p=61987) கண்ணில்லா துறவியின் விடை, அவரவர் பேசுவதை வைத்து அவரவரின் தகுதியை தெரிந்து கொள்ளலாம் என்பதை மொழிவதுடன் மதுர மொழிவாளா் அடையும் தகுதியையும், சிறப்பையும் உணர்த்தும் வகையில் உள்ளது.

அவ்வாறு, மதுரமொழி வின்மையால் அடையும் பாதிப்புகளையும் திரௌபதி, சீதை ஆகிய காப்பியப் பெண் மாந்தர்கள் வழியாக இலக்கியங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. துரியோதனன் பாண்டவர்களின் அரண்மனைக்கு வருகை புரியும் போது, பளிங்குக் கல்லாக இருந்த தளம், நீர்க்குளம் போல் கண்ணுக்குத் தெரிய துரியோதனன் மிகக் கவனமாகக் காலடி எடுத்து வைத்து நடந்தான். ஆனால், குளம் இல்லை. பளிங்குக்கல்லே பதிக்கப்பட்டு இருந்தது. இதை, திரௌபதி உப்பரிகையிலிருந்து பார்த்துக் கொண்டே இருந்தாள். சிறிது தூரம் சென்ற பின் நீர் இருப்பது போன்று உணர்ந்தாலும், தான் முன் பெற்ற அனுபவத்தை மனதில் கொண்டு, நீர் இல்லை என்று எண்ணிக் கால் வைக்க, நீர்க் குளத்தில் துரியோதனன் கால் வைத்து இடறி விழ, இதைக் கண்ட பாஞ்சாலி சிரித்து விட்டாள். “உன் தந்தை திருதராஷ்டிரனுக்கு தான் கண் இல்லை. உனக்குமா கண்ணில்லை என்பது பட பேசிய உடன், துரியோதனனுக்கு மான உணர்ச்சி முன்னெழுந்தது. ஒரு பெண்ணிடம் அவமானப்பட்டு விட்டோமே என்று குமுறினான். இவ்வாறு பாஞ்சாலி

பேசிய வன்பேச்சே, பாண்டவர்கள் நாடு இழந்து, மரியாதை இழந்து நிற்க வைத்தது. கம்பராமாயணத்தில், சீதையின் வேண்டுகோளுக்கு இணங்க, மானைப் பிடிக்கச் சென்றான் ராமன். அலறல் சத்தம் கேட்டவுடன், ராமனுக்கு ஆபத்து ஏற்பட்டு விட்டது என்றெண்ணி சீதை இலக்குவனைப் பார்த்து வருமாறு கோருகிறாள். அதை இலக்குவன் மறுக்க, அண்ணனை விடுத்து, இராமனுக்குற்ற தீங்கைக் கேட்டும் அவற்கு உதவச் செல்லாது இங்கு நின்ற உன்னுடைய இந்த நிலை நீதிமுறைப்பட்டது அன்று" (கம்ப:3330) இராமன் குரல் கேட்ட பின்னும் தம்பியாம் நீ ஒருவனும் என் அருகில் நிற்கின்றாயோ? என்றாள். (கம்ப:3322) எனச்சீதை இலக்குவனிடம் சீறினாள். தனிமையில் எப்பொழுது இருப்பேன் என்பதை எதிர்பார்த்துத்தான் இருந்தாயா? அதனால் தான் செல்ல மறுக்கிறாயா? என்பதுபட கேட்ட, இச்சொல்லை இலக்குவன் பொறுக்காமல் அண்ணனாகிய ராமனின் நிலை காணச் சென்றான். அதன் பிறகே சீதையை இராவணன் அபகரித்துச் செல்லும் நிகழ்வுநடக்கிறது. (http://www.kungumam.co.in/APArticalinnerdetail.aspx?id=3215&id1=53&id2=0&issue=20160416)

இக்கதைகளின் வழியாக, எதார்த்தமாக, நகைச்சொல்லால், சிந்திக்காமல், எதிரியைப் பேசிய பாஞ்சாலியின் வன்சொல் அவசரம், சினம் காரணமாகச் சிந்திக்காமல் இலக்குவனிடம் சீதை பேசிய வன்சொல், இவ்விருவரின் வரலாற்றையும் மாற்றி விட்டது. இவ்வரலாற்றுச் நிகழ்வுகள், எந்தச் குழ்நிலையிலும் இனியசொல் பேச வேண்டியதன் அவசியத்தையும், சிந்தித்து உரையாட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகிறது என்று கூற முடிகிறது. வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார்,'' உத்தியோகத்தில் உள்ளவரும் வேலைக்காரர்களிடத்தில் இன்சொல் கூற வேண்டும். பதவி, பட்டம் பெற்று விட்டோம் என்று துர்வார்த்தைகளால் பேசினால், எசமானனுக்கும், சேவகனுக்கும் மனஒற்றுமை இன்றி, அல்லல் விளையும். எசமானனிடத்தில் அன்பாய் இருக்கிற சேவகனும், சேவகனிடத்தில் அன்பாயிருக்கிற் எசமானனும் சுகமடைவார்கள்... இதை, தோட்டி முதல் தொண்டைமான் வரையில் உள்ள சகலரும் கையாளுவராயின், உலகில் உள்ள எந்த உயிர்க்கும் பகை உண்டாகாது. (வித்துவான் கண்ணப்ப முதலியார், மாணவர் தமிழ்க் கட்டுரை, ப.42,43, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, (மு.ப.1938)

எனவே, இனியவை பேசும் பண்பை உணர்த்தும் மதுரபாடணம் அனைவருக்கும் கைவரப்பெறாமையை இக்கதைகளும், கூற்றுக்களும் உணர்த்துகின்றன. எனவே, இதை ஒரு கலையாக நாம் பாவிக்க முடிகிறது. அதனால் தான், கற்றற்கு உரியன எல்லாம் கலை என்று கூறப்படுகிறது. எத்தொழில் செய்தாலும் அது ஒருவனுக்கு நன்மையை, பயனை விளைவிக்கும். அத்தொழில்களே கலையாகப் பாவிக்கப்படுகின்றன. அதுபோல, இன்சொல் பேசும் 'மதுரபாடணம்' என்பதும் கலையாகச் சித்தர்களால் பாவிக்கப்படுகிறது இம்மதுரபாடணக் கலையும் பல்வகை நன்மைகளையும் பயன்களையும் விளைவிக்கும்.

**மதுரபாடணத்தின் நன்மைகள்**

சங்கஅக இலக்கியங்களில், தலைவி தலைவனிடமும் தோழி தலைவனிடமும் பேசும்முறை, நற்றாய், தலைவியிடமும், தோழியிடமும் நடந்து கொள்ளும் முறை, பேசும் முறை இங்கு சிந்திக்கத்தக்கது. வரைவு மேற்கொள்ளாமல் களவையே விரும்பி வரும் சிறைப்புறத் தலைவனிடம் தோழி, நேரடியாகத் தன் சினத்தை, வெறுப்பைத் தலைவனிடம் நேரடியாக வெளிப்படுத்தாமல், வரைவு கடாவும் பொழுது இற்செறிப்பு, அலர், வெறியாட்டு, மேனிமெலிவு, வேங்கைமலர்தல், நொதுமலர்வரைவு முதலிய தலைவியின் சூழல்களை உணர்த்தி வரைவுகடாவுவாள். இக்கூற்றுக்களில் உள்ளுறை, இறைச்சி போன்ற சங்கஅகமரபுகளைக் காணலாம். இம்மரபுகள் வரையாததால் ஏற்பட்ட சினத்தை, துயரத்தை மட்டுப்படுத்தி, புரிய வைக்க வேண்டிய கருத்தை மட்டும் கூறி, தலைவனின் மனம் புண்படாமல், தலைவனின் உறவைத் தக்கவைத்துக் கொண்டு, மறைமுகமாகப் பேசிப் புரியவைப்பதற்குத் தோழிக்குப் பயன்பட்டுள்ளன.

இவையனைத்தும், இனிய முறையில் இனியனகூறலின் மகத்துவத்தையும், அதனால் அடையும் நன்மைகளையும் வலியுறுத்துவதாகக் கூறமுடிகிறது. தோழி பின்பற்றிய அகமரபுகள் பிறரின் மனத்தைப் புண்படுத்தாமல் தடுத்து உறவைத் தக்கவைத்துக் கொள்ள பின்பற்ற உகந்த வழிகளாகவும் எண்ண முடிகிறது. எனவேதான் வள்ளுவர் ஒரு பொருளை மற்றவருக்குக் கொடுப்பதை விட சிறந்தது இனியவை பேசுதல் (குறள் :92) என்றும், இனிய பேசுதலே ஒருவருக்கு அணிகலன், அழகைத் தரும் (குறள்:95), பாவம் விலக்கும், தர்மம் பெருக்கும் (குறள்:96) இம்மை, மறுமை பயன் தரும் (குறள்:98) என்று கூறுகிறார்.

இன்சொல் பேசுவதால் ஏற்படும் நன்மைகளாக வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், ''இன்சொல் பேசுவோரை உலகோர் விரும்புவர். பகை ஏற்படாது. உலகோர் உதவி செய்வர். ஒற்றுமையுடன் வாழலாம். சகோதரத்துவம் ஏற்படும் ஐஸ்வர்யமும் தானே வந்தடையும் என்று கூறியுள்ளார். (வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், மாணவர் தமிழ்க் கட்டுரை, ப.42,43,ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, (மு.ப.1938)

## முடிவுரை

பாம்பாட்டிச்சித்தரால் குறிப்பிடப்படும் அறுபத்துநான்கு கலைகளுள் பத்தொன்பதாவது கலையாக "மதுரபாடணம்'' என்னும் மதுரமொழிவுக்கலை, தமிழில், இனியவை பேசுதல், இனிய முறையில் பேசுதல் என்று அழைக்கப்படுகிறது.

எல்லாச்சூழலிலும் மக்கள் இனியவற்றைப் பேசுவது, இனியமுறையில் பேசுவது என்பதை மறந்து விடுகின்றனர். எனவே, சங்க இலக்கியம், திருக்குறள், காப்பியங்கள், ஜென்கதைகள் முதலியன மேற்கூறியவற்றை பின்பற்ற வலியுறுத்துவதை இக்கட்டுரை எடுத்துக் கூறுகிறது.

கற்றற்கு உரிய எல்லாம் கலை. எனவே, இனியவை பேசுதல், இனிய முறையில் பேசுதல் ஆகியன அனைத்து தரப்பு மக்களும் பின்பற்ற முடியாததால் அறியாததை அறிதலும், கல்லாததைக் கற்பதும் என்ற நோக்கில் 'மதுரமொழிவு' என்பது கலையாகிறது என்று இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.

வஞ்சனையின்மை, பிறர் விரும்பும் பணிவுடைய சொற்கள், பிறர் நலன் விரும்பும், யாருக்கும் துன்பம் விளைவிக்காத சொற்கள் என்பன இனியன பேசுதல் எனும் மதுரபாடணக் கலைக்கு உரிய பண்புகளாகக் கூற முடிகிறது.

இனிய முறையில் இன்சொல் பேசுபவர், பிறரால் மதிக்கப்படுவர். மனிதனுக்கு அழகைத் தரும். உறவைத் தக்க வைக்கும். பாவம் விலக்கும். தர்மம் பெருக்கும். கோபம் போக்கும். பகை தவிர்த்து ஒற்றுமையுடன் வாழச் செய்யும். சகோதரத்துவத்தை உண்டாக்கும் என்பன மதுரபாடணக் கலையினால் விளையும் நன்மைகள் என்று இலக்கியச் சான்றுகளின் வழியாகவும், அறிஞர் கூற்றுக்களின் வழியாகவும் அறிய முடிகிறது.

பதவி, பட்டங்கள்பெற்றோர் பேசும் துர்வார்த்தைகள் பகையை உண்டாக்கும். மனஒற்றுமையைக் குறைக்கும். சிந்திக்காமல் கூறும் நிந்தனை நகைச்சொற்கள் பழிவாங்கும் உணர்வைத் தோற்றுவிக்கும் என்பதையும் இவ்வாய்வு முடிந்த முடிவாக வலியுறுத்துகிறது.

## துணை செய்த நூல்கள்

1. பரிமேலழகா் (உ.ஆ.), திருக்குறள், கழக வெளியீடு, இருபதாம் பதிப்பு, 1998
2. கழகப் புலவர் குழுவினர், கழகத் தமிழ் அகராதி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. மு. ப. 1964
3. வித்துவான் பாலூா் கண்ணப்ப முதலியார், மாணவா் தமிழ்க் கட்டுரை, ஆசிரியா் நூற்பதிப்புக் கழகம்,சென்னை,மு.ப.1938

## துணை செய்த இணையதளங்கள்

1. https://tamil.oneindia.com/what-is-aayakalaigal-64-what-are-they-cs-405475.html
2. https://aanmeegam.co.in/blogs/siththarkal/64-kalai-names-tamil/amp/
3. http://www.kungumam.co.in/APArticalinnerdetail.aspx?id=3215&id1=53&id2=0&issue=20160416
4. https://www.vallamai.com/?p=61987
5. https://www.tamilvu.org/ta/library-l3700-html-l3700ind-133880

Vol. 9 Special Issue 1 October 2024 E-ISSN: 2456-5571

# பத்துப்பாட்டில் வாழ்வியல்

**அ. ஜெயா**
*பதிவு எண்: கு10253, முழுநேர முனைவட பட்ட ஆய்வாளர்*
*அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி*

**முனைவர் த. சந்திரகுமார்**
*உதவிப்பேராசிரியர்*
*அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி*

**முன்னுரை**

மக்களின் ஒழுக்கம், நீதி, நேர்மை, அறம் முதலியவற்றின் கூட்டுக்குணமே வாழ்வியல் எனப்படும். சமுதாயத்தின் பழக்கவழக்கங்களையும் உலக ஒழுக்கங்களையும் அறிந்து அதற்கேற்ப நடப்பதை வாழ்வியல் என்ற சொல் குறிக்கும். வாழ்வியல் எனும் சொல் ஒரு நாட்டின், நாட்டு மக்களின் சமுதாய வளர்ச்சியைக் குறிக்கின்றது. அவ்வகையில் பத்துப்பாட்டில்,

- பழக்கவழக்கங்கள்
- உணவு, உடை, இருப்பிடம்
- நம்பிக்கைகள்
- வழிபாட்டு முறைகள்

போன்ற வாழ்வியல் நிலைகளை ஆய்வதாக இவ்ஆய்வு அமைகிறது.

**பழக்கவழக்கங்கள்**

பழக்கம் என்பது தனிமனிதனிடம் இயல்பாக அமைந்த நடத்தையைக் குறிக்கின்றது. இது ஒரு செயலின் தொடக்க நிலையை உணர்த்துவாகும். சூழ்நிலையின் தேவைக்கு ஏற்ப தனிமனிதனிடம் வேர் விடுகின்ற செயல்பாடுகளே பழக்கம் எனப்படும். பழக்கம் என்பதற்கு இணையான ஆங்கிலச் சொல் 'Habit' என்பதாகும். பல தனிமனிதர்களின் பழக்கங்கள் ஒரு குழுவின், இனத்தின் மற்றும் சமுதாயத்தின் தொடர்பழக்கங்களாக வளர்ந்து வழக்கம் என்ற நிலைக்கு உயர்கிறது. குறிப்பிட்ட பழக்கவழக்கங்கள் ஒரு சமுதாயத்தில் தொன்றுதொட்டு தொடர்ந்து நிலைபெறும் போது மரபு என்றாகிறது.

நனவுடன் தொடங்கிய செயல் நாளடைவில் நனவின்றியே நிகழக்கூடியதாகிவிடும். இச்செயலையே பழக்கம் என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது. தமிழ் இலக்கியங்களில் பழக்கம் என்ற சொல் பழகுதல் என்ற பொருளில் வருகின்றன. பழக்கம் என்பது தனிமனிதனைச் சார்ந்தது என்றும் வழக்கம் என்பது சமுதாயத்தைச் சார்ந்தது என்றும் மரபு என்பது சமுதாயம் விதிக்கும் கட்டுப்பாடு என்றும் கூறுவர்.

**விருந்தோம்பல்**

எந்த ஒரு செயலும் வெற்றி பெறுவதற்கு ஏதேனும் ஒன்று காரணமாக அமையும். அவ்வகையில் மனிதவாழ்வு பல்வேறு நிலைகளில் வளர்ச்சி பெற்றிருப்பினும் அவ்வளர்ச்சி சீராக அமைவதற்கு மக்களின் பண்பாடும் நாகரிகமும் அடிப்படையாய் அமைகிறது. அனைத்து உயிர்களும் வாழ்வதற்கு அடிப்படையாய் இருப்பது உணவாகும். இந்த உணவினை உற்பத்தி செய்பவர் தாம் உண்பதோடு மட்டுமின்றி மற்றவரையும் உண்ணுமாறு பகிர்தல் வேண்டும். இவை தமிழருடைய நடைமுறை வாழ்க்கையின் தலைசிறந்த பண்பாக இன்றளவும் கருதப்படுகின்றது. அவ்வகையில் பல்லுயிர் ஓம்பும் அறச்செயல், தமிழர்தம் வாழ்வில் அன்றுதொட்டு இன்றுவரை எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என்பதையும் தனிமனித வாழ்விலும் பொது வாழ்விலும் இவ்அறச்செயல் பெற்றிருந்த இடத்தினையும் பின்வருமாறு அறியலாம்.

இல்லறம் நடத்தும் கணவனும் மனைவியும் அன்புடையவராய் இருந்து நம் இல்லத்திலோ அல்லது ஊர் பகுதியிலோ புதிதாக வந்த உயர்ந்தோரையும், தம்மைப் போன்றோரையும், அவர்கள் தங்கும் சில நாள்களுக்கு உணவும், உறைவிடமும் தந்து உதவுதலே விருந்தோம்பல் ஆகும். விரும்புவது என்னும் வேர்ப் பொருளைக் கொண்ட விருந்து என்னும் சொல், விரும்பப் பெற்ற புதியவரையும் அவருக்கு அளிக்கும் உணவையும் குறித்தது. இன்று உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அளிக்கும் உணவைக் குறிக்கின்றது. பண்டைய விருந்தினர் புதியவராயிருந்ததினால் புதுவீர் என அழைக்கப்பட்டனர். இதனை,

**"புலம்பு சேண் அசல, புதுவிர் ஆகுவிர்"**
(மலைபடு.412)

என்று மலைபடுகடாம் குறிப்பிடுகின்றது. இல்லறத்தில் இருந்து அறம் செய்யும் அறங்களுள் முதன்மையானது விருந்தோம்பலாகும். கணவனும் மனைவியும் தம் இல்லத்தில் இருந்து தம்மையும் தம்மக்களையும் தம்பொருள்களையும் பேணிக் காப்பது வீட்டிற்கு வரும் விருந்தினரை உபசரித்து அவருக்குப் பல வகையிலும் உதவி செய்யும் பொருட்டே என்று வள்ளுவர் கூறுகிறார். இதனை,

**"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"**[1]

என்று குறள் சுட்டுகிறது.

இளையான்குடி மாறநாயனார் விதைத்திருந்த நெல் முளைகளை அடியவர்க்குப் படைத்தலும், சிறுதொண்டர் தன்மகனை கறியமுதாய்ச் செய்து விருந்துண்ணச் செய்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. கோவலனைப் பிரிந்த கண்ணகியால் விருந்தோம்பல் பண்பினைச் செய்ய முடியவில்லை. இவ்வாறே குறுந்தொகையும்,

**"நீரொடு சொரிந்த மிச்சில் யாவர்க்கும்**
**வரைகொள் அறியாச் சொன்று"**[2]

என்று கூறுகிறது. ஆகையால் 'விருந்து' என்பது அனைத்து மக்களுக்கும் உரிய பண்புகளுள் ஒன்று. எனவே விருந்தோம்பல் என்பது கணவன் மனைவி இருவரும் இணைந்திருந்து மேற்கொள்ளத்தக்க இல்லறக்கடமை என்பதையும், அன்பை வெளிப்படுத்தும் நிலை என்பதையும் இதன்வழி அறிய முன்டிகிறது.

இன்றைய உலகில் கூட்டுக்குடும்பம் குறைந்து தனிக்குடும்பம் பெருகிவருவதைப் பார்க்கின்றோம். ஆனால் பழங்காலத்தில் குடும்ப உறுப்பினர்கள் பலர் இருப்பினும் பல்வேறு விருந்தினரைப் போற்றிப் பாதுகாத்துள்ளனர் என்பதை உணர முடிகிறது. காலங்கள் பல மாறினாலும் மாறாத பழக்கவழக்கங்களுள் விருந்தோம்பல் பண்பும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

**விளக்கேற்றல்**

விளக்கேற்றல் மங்கலகரமான செயல் என்று கூறுவர். விளக்கின் ஒளியைப் போன்று வாழ்க்கையும் ஒளிரும் என்பர். சாதாரண மக்கள் முதல் அரசன் வரை அனைத்து இடங்களிலும் விளக்கேற்றும் பழக்கம் காணப்பட்டது. தெய்வத்தை வழிபடுவதற்காகவும் இருளை நீக்குவதற்காகவும் திருவிழாக்கள், பண்டிகைகள் போன்றவற்றிற்காகவும் விளக்குகள் ஏற்றப்பட்டன. பெண்களே பெரும்பாலும் விளக்குகளை ஏற்றினர். அரண்மனையில் இரவில் ஒளிவேண்டி பாவை விளக்குகள் ஏற்றப்பட்டன. இதனை,

**"கை ஏந்த ஐ அகல் நிறைய நெய் சொரிந்து**
**……………………………………………….**
**பல்வேறு பள்ளிதொறும் பாய் இருள் நீங்க"**

(நெடு.102 – 105)

என்ற நெடுநல்வாடை அடிகள் உணர்த்துகின்றன. பகலில் மீன் பிடிக்கச் சென்று வீடு திரும்பும் பரதவர் இரவு முழுவதும் எண்ணெய் இல்லாததால் அணைந்த விளக்குகளை விட்டுவிட்டு அணையாமல் எரிந்து கொண்டிருக்கும் விளக்குகளை எண்ணினர்.

**"கொடுந் திமில் பரதவர் குரூஉச்சுடர்**
**எண்ணவும்"** (பட்.112)

என்ற பாடல் அடி மூலமாக அறிய முடிகின்றது. மேலும், ஆண்கள் மீன் பிடிக்கச் செல்லும்போது விளக்கினை ஏற்றி அணையாமல் பாதுகாக்கும் பழக்கத்தினை இவ்அடி குறிப்பிடுகின்றது. விளக்குகள் அணையாமல் இருந்தால், சென்ற கணவர் நல்லபடியாக திரும்பி வருவார் என்ற பெண்களின் நம்பிக்கையை அறிய முடிகிறது. மாலைப் பொழுதில் மகளிர் மனைகளில் விளக்கேற்றுதலை,

**"பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி"**

(குறி.224)

என்ற அடி உணர்த்துகிறது. அந்திப் பொழுதில் தெய்வத்திற்கு விளக்கினை ஏற்றி வழிபடுவர். இதனை,

**"அந்தி மாட்டிய நந்தா விளக்கின்"** (பட்.247)

என்ற அடி உணர்த்துகிறது. நந்தாவிளக்கு என்றால் 'அணையா விளக்கு' என்று பொருள். இன்றைய நாளில் விளக்கு என்பது கோயில்களில் வேண்டுதலை நிறைவேற்றவும் விழாக்களின் போது ஒளிரவும் மட்டுமே பயன்படுகிறது. சான்றாக கார்த்திகை தீபம் ஏற்றல், தீப ஒளித்திருநாளில் தீபம் ஏற்றல் போன்றவற்றைக் கூறலாம். கலங்கரை விளக்கு என்ற பெயரில் மீனவர்களுக்கும் வியாபாரிகளுக்கும் வழிகாட்டியாக விளக்கு இருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆகவே விளக்கேற்றல் என்பது சங்ககாலம் முதல் இக்காலம் வரை தொன்றுதொட்டு பழக்கத்தில் இருப்பதை அறியமுடிகின்றது.

மாலை நேரத்தில் இறைவனை வணங்கும் நிலை காணப்பட்டது. மகளிர் தெய்வம் உறையும் இடங்களுக்கு நெல்லும் மலரும் கொண்டு சென்று வழிபடுவது சங்ககால பழக்கவழக்கங்களுள் ஒன்றாகக் காணப்பட்டது. இறைவனை வணங்கும் வழக்கத்தை,

**"…………………… நெல்லோடு**
**நாழிகொண்ட, நறுவீ முல்லை**
**அரும்பு அவிழ் அலரிதூஅய் கைதொழுது"**

(முல்.8 – 10)

என்ற முல்லைப்பாட்டின் அடி எடுத்துக்காட்டுகின்றன. நெல்லும் மலரும் மட்டுமல்லாது விளக்கினையும் ஏற்றி இறைவனை வணங்கி மாலைப் பொழுதை வரவேற்றனர். இதனை,

**“இரும்புசெய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ**
**நெல்லும் மலரும் தூஉய்க் கைதொழுது”**
(நெடு.42 – 43)

என்ற அடிகள் வாயிலாக அறியலாம்.

**விளையாட்டுகள்**

சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவராலும் விரும்பி மேற்கொள்ளப்படுவது விளையாட்டு. விளையாட்டு மன மகிழ்ச்சியைத் தருவதுடன் உடல் நலத்திற்கு உகந்ததாகவும் அமைகிறது. உடல்நலம் பேணுதல் பற்றி,

**“உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே”**[3]

என திருமூலரும் குறிப்பிடுகின்றார். உடம்பை வளர்க்கக் கூடிய ஒன்றாக விளையாட்டுகள் விளங்குகின்றன எனலாம். ஆற்றலை அளவிடும் அரங்காகவும் விளையாட்டுகள் அமைகின்றன. பரதவர் நண்டுகளைப் பிடித்து விளையாடுவர். கடலின் அலைகளில் நுழைந்தும், கடற்கரை வண்டலில் பாவை செய்தும் பகற்பொழுதெல்லாம் விளையாடி மகிழ்வர். இதனை,

**“அலவன் ஆட்டியும், உரவுத்திரை உழக்கியும்**
**பாவை சூழ்ந்தும்É பல்பொறி மருண்டும்**
**அகலாக் காத லொடு பகல் விளையாடி”**
(பட்.101 – 103)

என்ற பட்டினப்பாலை அடிகள் குறிப்பிடுகின்றன. இதனை,

**“மடவரல் மகளிரொடு பகல்விளையாடி”**
(பெரும்பாண்.387)

என்று பெரும்பாணாற்றுப்படையும் கூறுகிறது. சங்க கால மக்கள் பொழுது போக்கிற்காகவும் விளையாடினர்.

சிறுவர்கள் கவணில் கல் வைத்து வீசி பறவைகளைப் பயமுறுத்துவதை,

**“கல் எறியும் கவண் வெரீஇப்**
**புள் இரியும் புகா போந்தை”** (பட்.73 – 74)

என பட்டினப்பாலை அடிகள் குறிப்பிடுகிறது.

**முக்காற் சிறுதேர்**

பன்னெடுங்காலத்தொட்டே செல்வச் சிறார்கள் மூன்று சக்கர வண்டிகளை உருட்டி விளையாடியமையை இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

**“பொற்காற் புதல்வர் புரவிஇன்று உருட்டும்**
**முக்காற் சிறுதேர்”** (பட்.24 – 25)

என்று பட்டினப்பாலையில் குறிக்கப்படுகிறது.

**பண்டமாற்று முறை**

தொடக்க காலத்தில் தமிழகத்தில் வணிக நிலையில் பண்டமாற்று வழக்கமே இருந்து வந்தது. குறிஞ்சி நில மக்கள் தங்களுக்குக் கிடைத்த தேன், கிழங்கு போன்றவற்றை நெய்தல் நில மக்களிடம் கொடுத்து மீனையும் கள்ளையும் வாங்கிக் கொண்டனர். இதே போன்று மருத நில மக்கள் கரும்பு. அவல் போன்றவற்றைக் கொடுத்து முல்லைநில மக்களிடம் இருந்து மான், இறைச்சி, மது போன்றவற்றைப் பெற்றுக்கொண்டனர். இதனை,

**“தேன் நெய்யோடு கிழங்கு மாறியோர்**
**மீன் நெய்யோடு நறவு மறுகவும்**
**தீங் கரும்பொடு அவல்தர வகுத்தோர்**
**மான் குறையொடு மது மறுகவும்”**
(பொருநர்.214 – 217)

என்ற பொருநராற்றுப்படை அடிகளின் வாயிலாக அறியலாம். கி.மு.முதல் நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் ஏற்றுமதி இறக்குமதி மிகுதியாக இருந்தது என்பதை மேலைநாட்டு அறிஞர்கள் எழுதிய குறிப்புகளில் இருந்து அறியலாம். பாண்டிய நாட்டில் கொற்கைத் துறைமுகம். தொண்டை நாட்டில் எயிற்பட்டினம், சோழர்கள் நாட்டில் காவிரிப்பூம்பட்டினம் என தமிழகத்தில் மூன்று துறைமுகங்கள் இருந்தன. இம்மூன்று துறைமுகங்களிலும் இருந்து மேலைநாட்டிற்குப் பொருள்கள் சென்றன. மேலைநாட்டில் இருந்து பொருள்கள் வந்தன. இதைப் பட்டினப்பாலை தெளிவாகக் கூறுகிறது.

மன்னர்கள் குதிரைப்படையைப் பெருக்குவதில் கருத்தாயிருந்தனர். எனவே, மேலை நாட்டில் இருந்து குதிரைகள் வரப்பெற்றன. அரேபிய குதிரைகளைச் சான்றாகக் கூறலாம். புகார் நகரில் இருந்த வணிகர்கள் கடல் வாணிகத்தில் சிறந்து விளங்கினர். கரியமிளகு, மாணிக்கமணிகள், சாம்பூநாதம் என்னும் பொன். சந்தனம், அகில், பவளம், கங்கையில் உற்பத்தியாகும் பொருள்கள், ஈழநாட்டில் இருந்த உணவுப்பொருள்களும், காழகம் என்ற கடாரமாகிய தற்போதைய மலேசியாவில் இருந்து பலவகைப் பொருள்களும் வந்தன. இதனை,

**“நீரின் வந்த நிமிர்ப்பரிப் புரவியும்**
**காலின் வந்த கருங்கறி மூடையும்**

**வடலைப் பிறந்த மணியும் பொன்னும்**
**குடமலைப்பிறந்த ஆரமும் அகிலும்**
**தெண்கடல் முத்தும் குணகடல் துகிரும்**
**கங்கை வாரியும் காவிரிப் பயனும்**
**ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்**
**அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி"**

(பட்டினப்.185 – 193)

என்ற பட்டினப்பாலை அடி எடுத்துரைக்கின்றன. மேலும், பாவை விளக்கு என்ற விளக்கு யவன நாட்டிலிருந்து வரப்பெற்றதை,

**"யவனர் இயற்றிய வினைமாண் பாவை"**

(நெடு.101)

என்ற அடி எடுத்துரைக்கின்றது.

சங்ககால மக்கள் செழுமையான வாழ்க்கையினை வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. சந்தனகட்டை, மாணிக்கம், முத்து, பவளம் போன்ற அரியவகைப் பொருள்களை அன்றாட வாழ்வில் பயன்படுத்தியுள்ளனர். வாடைக்காலத்தில் வடநாட்டில் உள்ளவர்கள் கொண்டுவந்து தந்த வெண்ணிறமுடைய சந்தனக் கல்லும், தென்நாட்டில் விளையும் சந்தனக்கட்டைகளும் பயன்படுத்தப்படாமல் கிடந்ததை,

**"வடவர் தந்த வான் கேழ் வட்டம்**
**தென்புல மருங்கில் சாந்தொடு துறப்ப"**

(நெடு.51 – 52)

என்ற நெடுநல்வாடை அடிகள் குறிப்பிடுகின்றன. எனவே இந்நாளில் வீட்டளவில் கொடுக்கல் வாங்கல், கைமாற்று என்றழைக்கப்படுவதே அந்நாளில் நாட்டளவில் பண்டமாற்று முறை என்று அறிமுகமாகி நாளடைவில் ஏற்றுமதி, இறக்குமதி, பன்னாட்டு வாணிகம் என்று வளர்ந்துள்ளதை அறிய முடிகிறது. இவ்வாறு ஏற்றமதி, இறக்குமதி என்றல்லாது இறக்குமதியாகும் பண்டங்களுக்குத் தீர்வை வரையறுத்துக் கொண்டனர். அப்பண்டம் உள்ள மூட்டைகளுக்குச் சோழனது புலி இலச்சினைப் பொறித்து அவற்றை சேமித்து வைக்கும் பண்டகசாலைகள், கிடங்குகள், உயர்ந்த மேடைகள் போன்றவையும் காணப்பட்டன. இதனை,

**"அளந்து அறியாப் பல பண்டம்**
**வரம்பு அறியாமை வந்த ஈண்டி**
**அருங்கடிப் பெருங்காப்பின்**
**வலியுடைய வல் அணங்கின் நோன்**
**புலிப் பொறித்து"** (பட்.131 – 135)

என்ற பாடல் அடிகள் எடுத்தியம்புகின்றன.

**நம்பிக்கைகள்**

நம்பிக்கை என்பது ஒன்றின் உண்மையை ஏற்றுக் கொள்வதாகும். சமுதாயத்தின் தேவைகள், குறிக்கோள்கள் போன்றவற்றின் அடிப்படையில் நம்பிக்கை தோன்றுகிறது. தனிமனிதனின் தன்னல உணர்வும் சமுதாயத்தின் பொதுநல உணர்வும் நம்பிக்கைகளுக்கு காரணம் என்கின்றனர். எனவே காலங்காலமாகத் தொடர்ந்து வரும் நம்பிக்கையால் பண்பாடு பாதுகாக்கப்படுகின்றது.

அகமானது காரண காரியங்களுக்கு அப்பாற்பட்ட எண்ணங்களை மூளைக்கு உணர்த்துகிறது. மூளையில் பதியும் அவ்வெண்ணங்கள் உண்மையாகி உறுதிப்படும்போது நம்பிக்கையாகிறது. மனித வாழ்வின் உறுதிப்பாட்டிற்கு ஆதரவு தரும் இந்த நம்பிக்கைகள் மனித வாழ்வில் மிக இன்றியமையாதவை என்கிறார் சு.சண்முகசுந்தரம்.

இன்றைய அறிவியல் உலகில் பழந்தமிழ் மக்களின் நம்பிக்கைகள் அறிவுக்குப் பொருந்தாதது போலத் தோன்றலாம். எனினும் ஒரு நாட்டின் வரலாற்றில் இத்தகைய நம்பிக்கைகளில் பல, அவர்களின் வாழ்வோடு இரண்டறப் பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன என்னும் உண்மையை மறுக்க இயலாது.

ஒவ்வொரு மனிதனும் ஆயிரக்கணக்கான நம்பிக்கைகளில் மூழ்கி காணப்படுகின்றான். நன்மையைத் தேடும் மனிதனுக்கு நம்பிக்கை துணை நிற்கின்றது. கடலிலே அகப்பட்டுத்தவிக்கும் ஒருவனுக்குக் கையில் கிடைத்த சிறிய மரக்கலன்களாக தெரியும். அதனைப்போல் அலைந்து திரியும் மனது, நம்பிக்கைகளைப் பற்றிக் கொள்ளும்பொழுது புணர்ச்சி பெறுகிறது. சங்ககாலத் தமிழர்களிடம் பலவிதமான நம்பிக்கைகள் காணப்பட்டன.

**தொகுப்புரை**

வாழ்வியல் என்பது அது சார்ந்த சமுதாயத்தில் காணப்படும் மக்களின் பழக்கவழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகள் போன்றவையே அவர்களின் பண்புகளாக வெளிப்படுகின்றன என்பதனை இவ்வியல் உணர்த்துவதைக் காண முடிகின்றது.

எந்த ஒரு இலக்கியமாக இருந்தாலும் அது அவ்விலக்கிய காலம் சார்ந்த பண்பாட்டினையே வெளிப்படுத்தும் என்பதனை அறிய இவ்வியல் உறுதுணை செய்கின்றது.

மனித இனத்தின் வாழ்வியல் கூறுகளின் ஒரு பகுதியாகவே பண்பாடு உள்ளதை இவ்வியல் புலப்படுத்துகின்றது.

பத்துப்பாட்டில் காணப்படும் வாழ்வியல் கூறுகளான பழக்கவழக்கம், நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், ஆகியவற்றினை அறிந்து கொள்ள வழிவகை செய்யும் விதமாக இவ்வியல் அமைகின்றது.

ஒவ்வொரு வாழ்வியலும் தான் சார்ந்த நிலத்தின் அடிப்படையில் தான் தன்னுடைய அத்தியாவசிய தேவையான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றை ஏற்படுத்திக் கொண்டன என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது.

பத்துப்பாட்டில் காணலாகும் உணவுகள் குறித்த செய்தியினை அறிவதாக இவ்ஆய்வு அமைகிறது. மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்ந்த காலத்தில் நிலம் சார்ந்தே தன்னுடைய ஆடையினை வடிவமைத்து கொண்டனர் என்பதனை பத்துப்பாட்டு பாடல்கள் வழியாக உணர்ந்தவதாக இவ்வியல் அமைந்துள்ளதை அறிய முடிகின்றது.

**சான்றெண் விளக்கம்**

1. பரிமேலழகர், (உ.ஆ)., திருக்குறள், பா.580.
2. ச.வே. சுப்பிரமணியன் குறுந்தொகை மூலமும் உரையும், பா.233.
3. ஜி.வரதராஜன் திருமந்திரம் விரிவுரை தொகுதி - 1, பா.770

# தமிழ் இலக்கியத்தில் அறமும் சமயச்சார்பும்

**முனைவர் எம்.எம். ஜெயசீலன்**
*முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை*
*பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை*

அறவியலும் சமயமும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பினைக் கொண்டவையாகும். அறத்துக்கான பண்பாட்டுப் பெறுமதி, ஏற்புடைமை முதலியன சமயச் சிந்தனைகளாலேயே வலுப்பெறுகின்றன. சமயத் தத்துவங்களே அறத்தையும் அறச் செயற்பாடுகளினால் விளையும் நன்மைகளையும் அறமற்ற மறத்தையும் மறச் செயற்பாடுகளினால் விளையும் தீமைகளையும் நியாயப்படுத்துகின்றன. அதனால் அறத்தின் இருப்பு சமயத் தத்துவங்களினால் முழுமைபெறுகிறது எனலாம். அதேவேளை, சமயத்தின் நிலைபேற்றுகைக்குத் துணைசெய்யும் கருவிகளுள் ஒன்றாக அறம் விளங்குகிறது. அறம் கட்டமைக்கும் சமூக வாழ்வியலும் அவ்வாழ்வியலை மீறுவதில் உள்ள அறக்கவலையும் சமூகத்தில் சமயத்தின் நீடித்த இருப்புக்குத் துணைநிற்கின்றன.

தமிழிலக்கிய மரபில் கிடைக்கப்பெற்றுள்ள அறநூல்களும் அவை எடுத்துரைக்கும் அறங்களும் பெரும்பாலும் சமயத் தளத்தில் நின்று உரைக்கப்பட்டவையாக விளங்குகின்றன. அதனால் பொதுவான அறங்களைத்தவிர ஏனையவை யாவும் அவ்வவ் சமயக் கொள்கைகளோடு இணைந்ததாக விளங்குகின்றன. இச்சமயச்சார்பு அறங்களிலும் அறங்களின் சமூக மதிப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் சமய வாழ்வியலுக்கு ஏற்ப அறங்களைப் பின்பற்றுவதோடு அவற்றைப் பின்பற்றுவதே வாழ்வின் சிறந்த – உயர்ந்த இலட்சியமாகக் கருதுகின்றனர்.

தமிழ்ச் சமூகத்தில் களப்பிரர்களின் ஆதிக்கமும் சமண-பௌத்த சமயங்களின் பரவலாக்கமும் ஏற்பட்ட பின்புலத்திலேயே அறம் அதிக அழுத்தம் பெற்றது என்பது பொதுவான முடிவாகும். பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டு முதல் பொ.ஆ. ஆறாம் நூற்றாண்டு வரை களப்பிரர் ஆட்சி இடம்பெற்றுள்ளதுடன் அக்காலத்தில் சமண-பௌத்த மதங்கள் மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளன. அக்காலத்துக்குப் பின்னர் ஏற்பட்ட வைதீக அரசின் எழுச்சியும் சைவ - வைணவ பக்தி இயக்கச் செயற்பாடுகளும் சமண – பௌத்த சமயங்களின் செல்வாக்கை மங்கச்செய்தன. அதன்விளைவால் அற நூலாக்கச் செயற்பாடுகள் தன் முதன்மையை இழந்துள்ளன. இருப்பினும் பக்தி இலக்கியங்களிலும் அதற்குப் பின்பான இற்றைவரையான இலக்கியங்களிலும் அறநூற்கால நூல்களின் தாக்கங்கள் வெவ்வேறு மட்டங்களில் வெளிப்பட்ட வண்ணமே உள்ளன.

அற இலக்கியம் என்ற தனிவகை இலக்கியம் சங்கமருவிய காலத்திலேயே தமிழில் முதன்முதல் தோற்றம் பெற்றாலும் அவ்விலக்கியங்களில் பேசப்படுகின்ற அறங்கள் பல, சங்ககால அக, புறப் பாடல்களிலேயே ஆங்காங்கு இடம்பெறத் தொடங்கிவிட்டன. குறிப்பாக,'ஆதித்தமிழர் பாடல்கள் பெரும்பாலும் காதல் வாழ்க்கையையும் அரசர்கள், வீரர்களின் போராட்டங்களையும் பற்றியதாக இருந்தாலும் இப்பாடல்கள் தோன்றிய காலத்தையடுத்து வந்த நீதிப்பாடல்களின் கருத்துக்களும் குறிப்பிடும்படியாகக் காணப்படுகின்றன. மிகத் தொன்மையான சமூக நீதிகளோடு சமண, பௌத்த, வைதீக நீதிகளும் காணப்படுகின்றன' (ராஜ்கௌதமன், 1994: 155). இவற்றுள் மிகத் தொன்மையான சமூக நீதிகள் மதச் செல்வாக்கற்ற வாழ்வியலின் வெளிப்பாடுகளாக அமைந்துள்ளன. ஆணுக்கும் பெண்ணுக்குமான வாழ்வியலைக் கட்டமைப்பதாக அமைந்துள்ள அவ் அறங்கள், தமிழ்ச் சமூக மரபில் மதக்கருத்துக்கள் செல்வாக்குப் பெறாத காலத்தில் உடைமைச் சமூகத்தின் தோற்றத்துடன் மேற்கிளம்பியவைகளாகும். உடைமைச் சமூகத்தின் எழுச்சியும் மதக் கருத்துருங்களின் ஊடுருவலும் செல்வாக்கும் ஏற்பட்டபோது அந்தப் பழமையான சமூக நீதிகள் மதத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, பெண்ணின் பாலியல் வாழ்வை ஒட்டியதாகப் புராதன காலத்தில் அமைக்கப்பட்டிருந்த பெண் அறம் அக்கால நடைமுறை வாழ்வின் பிரதிபலிப்பாக அமைந்திருந்துள்ளது. பத்தினி, பரத்தை என்ற இரு துருவ முரண்பாடுகள் - பத்தினி என்ற தெய்வாம்ச படிமமோ பரத்தை என்ற மோசவலை படிமமோ - அக்காலத்தில் உருப்பெறவில்லை. உடைமைச் சமுதாயத்தின் வளர்ச்சி கற்புக்கோட்பாட்டையும், மதங்களின் செல்வாக்கு அக்கற்புக்கோட்பாட்டுக்கு மதச்சாயத்தையும் பூசிய பொழுதிலேயே கற்பு பற்றிய வியாக்கியானங்களும் கற்பின் தெய்வாம்சமும் பிரஸ்தாபிக்கப்பட்டு, கற்புடைய மாதர்கள் தெய்வாம்சம் கொண்டவர்களாகவும் பரத்தையர்கள்

கீழானவர்களாகவும் சித்திரிக்கப்பட்டு, கற்பு தெய்வமாக்கப்பட்டுள்ளது. பரத்தையர் பற்றி சங்க காலத்தின் தொடக்க காலப் பாடல்களில் இடம்பெறும் பதிவுகளையும் பிந்தைய காலப் பாடல்களில் இடம்பெறும் செய்திகளையும் சங்கமருவிய காலத்து நூல்களில் இடம்பெறும் செய்திகளையும் ஒப்பிடும்போது இதனைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. தொடக்க காலச் சங்கப் பாடல்களில் பரத்தையர் எவ்வித தூற்றுதலுக்கும் உட்பட்டதாகத் தெரியவில்லை. அதனைத் தொடர்ந்துவந்த இடைக்கால மற்றும் பிற்காலச் சங்கப் பாடல்களிலேயே பரத்தையர் பற்றிய எதிர் மதிப்பீடுகள் ஆங்காங்கு இடம்பெறுகின்றன. அவை சங்கமருவிய காலத்தில் உச்சம் பெறுகின்றன. உதாரணத்துக்கு, நாலடியாரில் கற்புடை மகளிர் என்ற அதிகாரத்தில் கற்புடை மகளிரான பதிவிரதையின் இயல்பும் கற்பற்ற பொதுமகளிர் இயல்பும் எதிரெதிர் நிலையில் கூறப்பட்டுள்ளதோடு பொதுமகளிர் என்ற அதிகாரத்திலும் பொதுமகளிர் இயல்பு விவரிக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக,

> **எஞ்ஞான்றும் எம்கணவர் எம்தோள்மேல் சேர்ந்தெழினும்**
> **அஞ்ஞான்றும் கண்டேம்போல் நாணுதுமால் - எஞ்ஞான்றும்**
> **என்னை கெழீஇயினர் கொல்லோ பொருள்நசையால்**
> **பன்மார்பு சேர்ந்தொழுகுவார்**

என ஒரு பெண்ணின் குரலாகவே பதிவிரதை, பரத்தை ஆகியோர் இயல்பு கூறப்பட்டுள்ளதைக் காணலாம். பதிவிரதையின் தோள்களை அவர்தம் கணவர் மட்டுமே தழுவுவர், கணவன் முதன்முதல் தழுவியபோது அவள் அடைந்த நாணத்தையே எந்நாளும் அடைவாள். ஆனால், பொருளாசைக் கொண்ட பரத்தை, பலருடைய மார்பையும் நாணமற்று தழுவிக்கொள்வாள் எனப் பத்தினியும் பரத்தையும் எதிரெதிர நிலையில் பேசப்பட்டுள்ளனர். பரத்தைக்கு இங்கு கூறப்படும் பொருளாசையையே அவளின் பிரதான பண்பாக நாலடியார் முதலிய அறநூல்கள் மீளமீள வலியுறுத்தியுள்ளன.

சங்கமருவிய காலத்தில் பெருகத்தொடங்கிய அவைதீக சமயப் பண்பாடுகளின் பரலவாக்கமும் சங்க காலத்தின் இடைப் பகுதியிலிருந்து மெல்ல மெல்ல வியாபகம் பெற்ற வைதீக சமயச் சிந்தனைகளின் தொடர்ச்சியும் உடைமைச் சமூகத்தின் எழுச்சியும் பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களின் தன்மைகளைத் தீர்மானித்துள்ளன. அதனால் அந்நூல்களில் பொதுவான அறங்கள் காணப்படுவதோடு சமயச்சார்பிற்கேற்ப வேறுபட்ட அறங்களும் காணப்படுகின்றன. அறநூல்கள் பலவற்றில் அவைதீகத்தின் தாக்கம் வெளிப்படையாகத் தெரிவதோடு சில நூல்களில் வைதீக சார்பும் வெளிப்படையாகவே தெரிகின்றது. திருக்குறள், நாலடியார், பழமொழிநானூறு, சிறுபஞ்சமூலம், ஏலாதி ஆகியன அவைதீகம் சார்ந்தவையாகும். இன்னா நாற்பது, இனியவை நாற்பது, ஆசாரக்கோவை நான்மணிக்கடிகை, திரிகடுகம், முதுமொழிகாஞ்சி ஆகியன வைதீகம் சார்ந்தவையாகும். அவைதீகம் சார்பான அனைத்து நூல்களிலும் சமணத்தின் தாக்கமே மேலோங்கியுள்ளது. அதற்கான காரணங்களை ஆ. வேலுப்பிள்ளை பின்வருமாறு கூறுகின்றார்:

> ‘வைதீக சமயத்தவரைச் சமண பௌத்தரோடு ஒப்பிடும்போது, வைதீக சமயத்தவர் மன அமைதியோடு வாழ்வதற்குரிய ஒழுக்கத்திற்கு அடிப்படையான பொதுவகையறங்களைப் பெரும்பான்மையளவில் விதந்தெடுத்து வற்புறுத்தாததாலும், பிராமணரின் நன்மையையே ஏற்றமான அளவிலே கருத்திற் கொண்டிருந்ததாலும் சங்கமருவிய காலத் தமிழ் மக்களிடையே அதிக அளவிற் செல்வாக்குப் பெற முடியவில்லை. கட்டுப்பாடான வாழ்க்கையை வற்புறுத்துவதிற் பௌத்தரிலும் கூடிய அளவு சமணர் தீவிரவாதிகளாக இருந்தமையாற் போலும், சமணரே தமிழ் மக்களிடம் மிகுமளவிலாகிய செல்வாக்கைப் பெற்றனர்… காலத்தின் தேவைக்கேற்ப அந்நூல்கள் மக்களிடம் செல்வாக்கு பெறுதலைக் கண்ட வைதீக சமயத்தினர், அந்நூல் வழியிற் சென்று, தாமும் அறநூல்கள் இயற்றத் தொடங்கினர்’ (வேலுப்பிள்ளை, 1999: 29-36).

வைதீக சமயத்தினர் காலத்தின் போக்கிற்கேற்ப அவைதீகத்தின் வழியிற் சென்று அறநூல்களை இயற்றினாலும் தமது சமயத் தளத்தில் நின்றே அறங்களை எடுத்துரைத்ததோடு தேவைக்கேற்பவே அவைதீக அறங்களில் சிலவற்றைத் தமக்கானவையாக உள்வாங்கிக்கொண்டுள்ளனர். இதனால் அறநூல்கள் முன்மொழியும் அறங்கள் தம்மளவில் ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் கொண்டவையாக அமைந்துள்ளன.

வைதீக அறங்கள் வேதங்களைத் தலைமையாக ஏற்கின்றன. “வேதங்கள் கூறும் ‘ரித’ என்ற கருத்தில், இந்து சமய அறக்கொள்கையின் தொடக்கத்தைக் காணலாம். இச்சொல், பிரபஞ்சத்தைப்

பிணைத்திருக்கும் ஒழுங்கமைப்பைக் குறிப்பிடுகிறது. நற்பண்புகள் ரிதத்தோடியைந்தவை. தீய செயல்கள் இதற்கு மாறானவை. அதன்பின்னர் அறநெறிகள் ‘தருமம்’ என்ற பெயரில் வழங்கப்படுகின்றன. சமயம், சட்டம், நேர்மை, கடமை, ஈகை, அறநெறி என எல்லா ஒழுகலாறுகளையும் உள்ளடக்கியதாகத் ‘தருமம்’ என்ற கருத்து விளங்குகின்றது’’ (வாழ்வியல் களஞ்சியம் தொகுதி II, 1991: 34). இத்தருமம் (அறம்) வருண – ஆசிரம தருமங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். பிறப்பினடிப்படையில் ஒவ்வொரு வருணத்தாரும் (பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர்) சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகள் வருண தருமங்களாகும். இவை ஏற்றத்தாழ்வு என்ற அடிப்படை மையத்திலேயே உருவாக்கப்பட்டுள்ளன. இந்து ஒருவன் தன் வாழ்வில் வெவ்வேறு நிலைகளில் (பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம்) ஆற்ற வேண்டிய கடமைகள் ஆசிரம தர்மம் எனப்படுகின்றன. மனித வாழ்வை மேற்கூறிய நான்கு கட்டங்களுக்குள் கொண்டுவந்த வைதீகம் அவற்றில் சூத்திரரைத் தள்ளிவைத்து முதல் மூன்று வருணத்தாருக்கே அந்நான்கு கட்டங்களும் உரியது என்றது. அத்துடன் வேள்விகளில் தேவர்களுக்கு அவிப்பலியூட்டுவதையும் அவ்வேள்விகளை நிகழ்த்தும் பிராமணர்களுக்குக் கொடைகளை வழங்குவதையும் வைதீக தருமங்கள் வலியுறுத்தியுள்ளன. இவ்வாறு வைதீக தருமங்கள் வேதம், வருண – ஆசிரமம், வேள்வி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சமூக அமைப்பைப் பிறப்பினடிப்படையில் ஏற்றத்தாழ்வாகக் கட்டமைத்துக்கொண்டதோடு அவற்றின் தலைமையைப் பிராமணியம் தம்வசப்படுத்திக் கொண்டது. அதனால் வைதீக வழிபாட்டிலும் வைதீக அறத்திலும் பிராமணர்கள் முதன்மைபடுத்தப்பட்டதோடு அவர்களது வாழ்வியலும் நடத்தைகளும் மேலானவையாக, மதிக்க வேண்டியவையாக முன்மொழியப்பட்டன. அவற்றை மனு போன்றவர்கள் சட்டவாசகங்களாக்கி - அதிகாரம் மிக்க வாழ்வியல் விதிகளாக்கி - கேள்விகளுக்கு அப்பால் நிறுத்தினர். அதன் அனுகூலங்களை பூரணமாக அனுபவித்த பிராமணியம் அவற்றை வாழ்வியல் நெறியாக எல்லா மட்டங்களிலும் நிலைநிறுத்தியதோடு மிகுந்த சமூக அங்கீகாரத்தையும் ஏற்படுத்திக்கொண்டது. இவ்வாறு வடக்கே உருக்கொண்ட வைதீக அறங்கள் சங்ககாலத்தின் பிற்பகுதியில் இருந்தே தமிழ்நாட்டில் செல்வாக்கு பெறத்தொடங்கிற்று. அந்த அறங்களும் பிராமணர்களின் மேன்மையை நிலைநிறுத்தும் வகையில் அவர்களைப் புனிதர்களாகக் கட்டமைத்து, அவர்களின் அசாதாரண பெறுமதிகளைப் புகழ்ந்ததோடு சமூக நல்வாழ்வில் அவர்களின் பங்களிப்பையும் இன்றியமையாமையும் வலியுறுத்தின. உதாரணமாக ஆசாரக்கோவையில் அந்தணர்களின் சமூக முக்கியத்துவமும் மேலான தன்மையும் பலவாறு கூறப்பட்டுள்ளதோடு அதனையும் தாண்டி அவற்றினை அனுசரித்து வாழாதோர் கீழானோராகவும் தாழ்ந்தோராகவும் கட்டமைக்கப்பட்டனர். ஆனால், அவ் அறங்கள் யாவும் சாதாரண அடித்தட்டு மக்களால் பின்பற்றக் கூடியவை அல்ல; அவர்களது வாழ்க்கை முறை இவ் அறங்களுக்கு மாறானதாகவே அமைந்திருந்துள்ளது. அதனால், அவ் அறங்களுக்கு வெளியே நிறுத்தப்பட்ட அடித்தட்டு மக்கள் கீழானோராகவும் புனிதமற்றோராகவும் முத்திக்குத் தகுதியற்றோராகவும் கற்பிதம் செய்யப்பட்டனர். வைதீகத்தின் இந்தச் சுத்த - அசுத்த கோட்பாடு அடிப்படையிலேயே உழைக்கும் அடித்தட்டு மக்களை அடக்கியொடுக்குபவையாக அமைந்தன. இக்கற்பிதத்துக்கு மேலும் வலிமை சேர்க்கும் விதத்தில் அதனைக் கன்ம-மறுபிறப்புடன் தொடர்புபடுத்தியது, வைதீகம். அதனால் வைதீக அறம் அசமத்துவத்தின் அடிப்படையிலேயே இயங்கத் தொடங்கியது. ஆனால், அது அசமத்துவமேயல்ல அதுவே மனித வாழ்வின் அடிப்படை நியதி எனவும் அந்த அறங்கள் எவ்வித கேள்விகளுக்கும் அப்பாற்பட்டவை எனவும் அவற்றின் உருவாக்கம் கடவுளால் தீர்மானிக்கப்பட்டவை எனவும் கட்டமைத்து அறத்துக்குப் புனித மற்றும் பண்பாட்டுப் பெருமதிகளை ஏற்றி, அறம் எல்லோருக்கும் பொதுவானது என்ற விம்பம் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. அந்த விம்பத்தைத் தக்க வைப்பதிலும் காலத்துக்குக் காலம் புதுப்பித்துக் கொள்வதிலும் பிராமணியம் அக்கறையுடன் செயற்பட்டு தமது தலைமையின் இருப்பைப் பாதுகாத்துக்கொண்டுள்ளது.

வேதங்களையும் வேள்விகளையும் ஏற்காத அவைதீகம், வருண – ஆசிரம தருமங்களை முற்றிலும் மறுத்து, எல்லா உயிர்களும் சமம் என ஏற்றத்தாழ்வை நிராகரித்தது. சமணம், பௌத்தம் முதலிய அவைதீக நெறிகள் பொ.ஆ.மு. 06 ஆம் நூற்றாண்டளவில் வடக்கே கங்கைச் சமவெளியில் நிலவிய சமூக, அரசியல், பொருளாதார நடவடிக்கைகளுக்கு எதிரான சமய சீர்திருத்த இயக்கங்களாக உருவெடுத்தமையால் (விரிவுக்கு: சர்மா, 2005: 152-172) அக்காலத்தில் செல்வாக்கு பெற்றிருந்த வைதீக ஆசாரங்களில்

பெரும்பாலானவற்றை நிராகரித்து, துறவினை முதன்மைப்படுத்திக் கொல்லாமை, நிலையாமை, வினை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தமக்கான அறங்களை வடிவமைத்துக் கொண்டன. அவை கூறும் துறவு வைதீகம் கட்டமைக்கும் துறவிலிருந்து வேறுபட்டதாகும். வைதீகம் வாழ்க்கையின் நான்கு கட்டங்களில் இறுதியானதாகத் துறவினை வகுத்து, பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகிய மூன்று வருணத்தினதும் ஆண்களுக்குரியதாக அதனை வரையறுத்துள்ளது. இதிலிருந்து வேறுபடும் அவைதீகம் வாழ்க்கையின் எந்த வயதிலும் எவரும் துறவினை மேற்கொள்ளலாம் எனத் துறவில் சமத்துவத்தினை ஏற்படுத்தியது.

பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள அவைதீகம்சார் அறநூல்கள் யாவும் சமண சமயம் சார்ந்தவையாகும். அவற்றில் எடுத்துரைக்கப்படும் அறங்களுள் பெரும்பாலானவை சமண சமயத்தின் அடிப்படை கொள்கைகளுக்கு ஏற்ப அமைந்தவையாகும். எடுத்துக்காட்டாக நாலடியாரை எடுத்துக்கொண்டால், நூல் முழுதும் உலகியல் வெறுப்பே முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். செல்வம், இளமை, உடல் ஆகியவற்றின் நிலையாமையை வற்புறுத்தி சமண வாழ்வியலான துறவறத்துக்கு அதிக அழுத்தம்கொடுக்கப்பட்டுள்ளது. சமண சமயம் வாழ வேண்டிய நெறியாக துறவறத்தைச் சிறப்பாகப் போற்றினாலும் துறவிகளுக்கு உரிய அறங்களையும் இல்லறத்தாருக்குரிய அறங்களையும் தனித்தனியே கூறியுள்ளது. துறவிகளுக்கு உரியனவற்றுள் மாவிரதங்கள் (அகிம்சை, வாய்மை, கள்ளாமை, துறவு, அவாவறுத்தல்) ஐம்பொறி அடக்கம் போன்றனவும் இல்லறத்தார்க்கு உரியனவற்றுள் அணுவிரதங்கள் (கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறன்மனை நாடாமை, பொருள் வரைதல்), கள், தேன், ஊண் உண்ணாமை போன்றனவும் மீளமீள வலியுறுத்தப்பட்டுள்ளன.

பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள சமண அறநூல்களைத் தவிர தனியே சமண அறமுறைக்கும் நூல்கள் வடமொழியிலும் தமிழிழும் உள்ளன. அவற்றுள் தமிழ் நூலான அருங்கலச்செப்பு தனித்துச் சுட்டிக்காட்ட வேண்டியதாகும். வடமொழியில் ஆசாரியர் ஸமந்தபத்திரர் எழுதிய ரத்ன கரண்டகத்தைத் தழுவி, சமண இல்லற ஒழுக்கத்தைச் சிறப்பாகப் பேசியுள்ள அருங்கலச் செப்பு, சமண மரபில் அறம் என்றால் என்ன என்பதனை விரிவாகப் பேசியுள்ளது. எடுத்துக்காட்டாக,

**நற்காட்சி நன்ஞானம் நல்லொழுக்கம் இம்மூன்றும்**
**தொக்க அறச்சொல் பொருள் (02)**

என நல்ல நம்பிக்கையும் நல்ல அறிவும் நல்ல ஒழுக்கமும் கூடிய உயிரது நிலை தான் அறம் என்பதன் பொருளெனக் கூறும் அருங்கலச்செப்பு தொடர்ந்து நற்காட்சி, நல்லஞானம், நல்ல ஒழுக்கம் என்பனவற்றைத் தனித்தனியே விளக்கியுள்ளது. உதாரணமாக, நற்காட்சி என்றால் நிலையான மெய்ப்பொருளை நம்புதல் எனக்கூறும் அருங்கலச்செப்பு, நிலையான மெய்ப்பொருள்களாக இறைவன், பரம ஆகமம், அகப்புறப் பற்றற்ற மெய்த்துறவி ஆகியவற்றை வரையறுத்து அவற்றின் தன்மைகளையும் விளக்கியுள்ளதோடு நற்காட்சியின் உறுப்புக்களாக ஐயம் இன்மை, அவா இன்மை, உவர்ப்பு இன்மை, மயக்கம் இன்மை, அறப்பழி நீக்கல், அழிந்தாரைத் தாங்குதல், அளவளாவல், அறம் விளக்கல் ஆகிய எட்டினைக் கூறி அவற்றைத் தனித்தனியே விளக்கியுள்ளது. அதனைத் தொடர்ந்து நற்காட்சியின் சிறப்பு, நற்காட்சியால் விலக்க வேண்டியது, நற்காட்சி இன்மையின் பழி, நற்காட்சியின் பயன் என்பன கூறப்பட்டுள்ளன. உதாரணமாக,

**அறம் உண்டேல் யாவரும் எள்ளப் படாஅர்**
**பிற குணத்தால் என்ன பாய் (36)**
**தேவனும் நாயாகும் தீக்காட்சி யால்நாயும்**
**தேவனாம் நற்காட்சியால் (38)**

என நற்காட்சி உடையவரை எல்லோரும் போற்றுவர், நற்காட்சி தவிர பிற குணத்தால் பயன் ஒன்றும் இல்லை என்றும் நற்காட்சி இல்லாவிட்டால் தேவனும் நாயாகப் பிறப்பான் நற்காட்சி உண்டானால் நாயும் தேவனாகப் பிறக்கும் என்றும் நற்காட்சியின் சிறப்பு வலியுறுத்தப்பட்டுள்ளது. அறிவும் ஒழுக்கமும் நற்காட்சியினாலேயே சிறப்படைகின்றது எனக்கூறும் அருங்கலச்செப்பு, அந்நற்காட்சி இல்லை எனின் உள்ள அறிவும் ஒழுக்கமும் தளர்ந்து முறிந்து கெடும் என்பதை,

**நற்காட்சி இல்லார் உணர்வும் ஒழுக்கமும்**
**ஒற்கா ஒசிந்து கெடும் (44)**

என்ற குறளில் வெளிப்படுத்தியுள்ளது. இவற்றைத் தொடர்ந்து நற்காட்சியின் பயன்கள் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக, நற்காட்சி உடையவர் சமண சமயி பின்பற்ற வேண்டிய அணு விரதங்கள், மகா விரதங்கள் என்பனவற்றைப் பின்பற்றாவிட்டாலும் நரகம் புகமாட்டார் (விரதம் இலர்எனினும் காட்சி உடையார் நரகம் புகுதல் இலர்), உலகில் விலங்கு கதியில் பிறக்க மாட்டார், பெண்ணாக, திருநங்கையாகப் பிறக்கமாட்டார், உடல் உறுப்புக்கள் குறைபாடாக இருக்காது எனப் பல பயன்கள் கூறப்பட்டுள்ளன. இவ்வாறு அருங்கலச்செப்பு கூறும் அறங்கள், சமண சமய மரபில் நிலவிவந்த

அறக்கருத்துக்களைத் தொகுத்து விளக்குவதாக அமைந்துள்ளன. அவை வைதீகம் கட்டமைத்துள்ள வேதம், வேள்வி, வருணாச்சிரம தரமம் என்பவற்றுக்கு மாறானதாக அமைந்துள்ளன.

அறம் ஒட்டுமொத்த நலன் சார்ந்தது, அறம் எல்லோருக்கும் பொதுவானது போன்ற பொதுக்கருத்துக்கள் சமூகத்தில் ஆழ வேரூன்றியிருந்தாலும் அறத்தின் பயன்பாடும் பின்பற்றுகையும் இந்தப் பொதுக்கருத்துக்களுக்கு எதிரானதாகவே அமைந்துள்ளன. சமூக வரலாற்று நோக்கில் அறத்தின் வரலாற்றை நோக்குகையில் சில பொதுவான அறங்களைத் தவிர ஏனையவை காலத்துக்குக் காலம், ஆளுக்கு ஆள், கருத்துநிலைக்கு கருத்துநிலை வேறுபட்டு அமைந்துள்ளமையையும் அறங்களின் ஏற்பும் மதிப்பும்கூட சமூகத்துக்கு சமூகம் வேறுபட்டு அமைந்துள்ளமையையும் கண்டுகொள்ளலாம். இவ்வேறுபாட்டுக்கான காரணங்களுள் முக்கியமானதாகச் சமயத் தத்துவங்கள் அமைகின்றன. ஏனெனில் அறத்தின் பொருளும் பயனும் சமயத் தத்துவங்களாலே முழுமையடைகின்றன. அறத்தின் இருப்பு சமயத் தத்துவங்களாலேயே நியாயப்படுத்தப்படுகின்றது. இந்த நியாயப்படுத்தல் ஒவ்வொரு சமயத்தினதும் தத்துவார்த்த மற்றும் வாழ்வியல் நெறிக்கு அமைய அமைவதால் அந்த அறங்களும் அந்த அந்தச் சமய மரபுகளுக்கு ஏற்ப அமைகின்றன. அதனாலேயே வேதங்களை முதன்மை பிரமாணங்களாக ஏற்றுக்கொண்ட வைதீகம், தனது அறக் கோட்பாடாக வேதம் முன்வைக்கும் வருண - ஆசிரம தர்மங்களைக் கொண்டு ஏற்றத்தாழ்வான சமூகத்தைச் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்கின்றது. வேதங்களையும் வேள்விகளையும் ஏற்காத அவைதீகம், வருண – ஆசிரம தருமங்களை முற்றிலும் மறுத்து, எல்லா உயிர்களும் சமம் என ஏற்றத்தாழ்வை நிராகரிக்கின்றது. அறத்துக்கும் சமயத்துக்கும் இடையிலான இவ்வுறவினாலேயே தமிழ்ச் சூழலில் தோன்றிய அறநூல்களும் அவை சார்ந்த சமயங்களுக்கு ஏற்ப வேறுபட்ட அறங்களை முன்மொழிந்துள்ளன. அவை மட்டுமன்றி அந்நூல்களுக்கு உரை வகுத்தோரும் தாம்சார்ந்த சமயத்துக்கு ஏற்ப அந்நூல்களை வியாக்கியானம் செய்துள்ளனர்.

**உசாத்துணை நூல்கள்**


1. சர்மா, ஆர். எஸ்., (2005) **பண்டைக்கால இந்தியா** (3ஆம் அச்சு), சென்னை: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்.
2. சிராவகாசார ஸம்ஸ்கார், (1997) **அருங்கலச்செப்பு,** குந்த குந்தர் நகர்: ஸ்ரீ சுருதகேவலி பத்திரபாகு சுவாமி சேவாதானம்.
3. ராஜ்கௌதமன், (1994) **தலித் பார்வையில் தமிழ்ப் பண்பாடு**, புதுச்சேரி: கௌரிப்பதிப்பகம்.
4. வேலுப்பிள்ளை, ஆ, (1999) **தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்**, (3ஆம் பதிப்பு) யாழ்ப்பாணம்: இலங்கைப் புத்தக நிலையம்.
5. **பதினெண்கீழ்க்கணக்கு,** (1951) சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.
6. **வாழ்வியல் களஞ்சியம்** : **தொகுதி இரண்டு,** (1991) தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

Vol. 9 Special Issue 1 October 2024 E-ISSN: 2456-5571

# அப்துல்காதரின் "மின்னல் திரிகள்" கவிதையில் வரலாற்றுச் செய்திகள்

**முனைவர் பி.ஜஸ்டஸ்மேரி**
*இணைப் பேராசிரியர், வரலாற்றுத்துறை*
*அரசு கலைக் கல்லூரி, மேலூர்*

எந்த ஒரு படைப்புக் கலைஞனும் வெற்றிடத்தில் உருவாவதில்லை. அவன் இயங்குகின்ற சமூகத்தின் தேவைகளில் ஒன்றாகச் சமூகத்தில் இருந்து உருவாகின்றன. கவிஞனும் இவ்விதிக்கு விலக்கானவன் அல்லன். சமுதாயத்தில் ஒருவனான அவன் விளங்கினாலும், சமுதாய நிகழ்வுகள் அவனையும் பாதிக்கின்றன. அப்துல்காதரின் கவிதைகள் சமுதாயப் பார்வையில் பகுத்தறிவை ஊட்டுவனாக அமைந்துள்ளன. இந்நிலையில் அவனுடைய ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள், கோபங்கள், குமுறல்கள் கவிதையாக வெளிப்படுகின்றன. அக்கவிதைத் தொகுப்பில் அமைந்துள்ள வரலாற்றுச் செய்திகளை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

### வரலாற்றியல்

மாற்றம் என்பது வரலாற்றின் அடிப்படைப் பண்பாகும். ஆனால் எல்லா மாற்றங்களும் குறிப்பிடத்தக்கன அல்ல. எழுத்தாளனுடைய ஆளுமைக்குக் காரணமாகவும், அவன் வாழ்ந்த காலக்கட்டத்து அரசியல், சமய, பொருளாதார நிலைகள் அவனால் படைக்கப்படும் இலக்கியத்தின் நோக்காகவும், போக்காகவும், கொள்கையாகவும் அமையும் என்பர். இத்தகைய வரலாற்று நிகழ்வுகள் அப்துல்காதரின் கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

### பாபர் மசூதி இடிப்பு

சமயத்தின் மீது மனிதர்கள் கொண்ட பற்றின் மிகுதி காரணமாக பாபர் மசூதி சூழ்ச்சி செய்யப்பட்டு இடிக்கப்பட்ட நிகழ்வு நாம் அறிந்த ஒன்றே. சமூகம் அறிந்த ஒன்றை அப்துல்காதர் தனது **"முரண்பாடுகள்"** எனும் கவிதையில் பதிவு செய்துள்ளார். இப்பதிவு வரலாற்றுச் செய்தியினை வெளிப்படுத்தும் முகமாக அமைந்துள்ளது.

**"படைகளைச்
சுமந்திருந்தும்
பாபர் மசூதியைப்
பாதுகாக்காத
அரசினைப் போல .......**"(2)

### சின்னமருது, பெரியமருது - படுகொலை

ஆங்கிலேயர்களால் துரத்தப்பட்ட ஊமைத்துரை, சின்னமருது மற்றும் பெரியமருதுவிடம் அடைக்கலம் புகுந்தான். அடைக்கலப் பொருளானாலும், உயிரானாலும் அதனைத்தன் உயிர்ப்போகும் தறுவாயில் காப்பது, பண்டைத் தமிழர் மரபாகும். இதன் வழியில் மருது சகோதரர்களும் நடந்து கொண்டமையால், இருவரும் ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டனர். இதனை,

**"வெள்ளை ஆதிக்க
விதவை ஆன
பாரதத் தாய்க்குப்
பண்டு நிழ்ந்ததே
சுதந்திர மறுமணம்
அதற்கான
சுடர் பொன் தாலி
சின்னமருது
பெரியமருது எனத்
தூக்கில் அன்று
தொங்கிய
தமிழன்னையின்
இரு தொங்கட்டான்களை
உருவாக்கி அல்லவா
உருவாக்கப்பட்டது**"(3)

என்ற வரிகளின் மூலம் எடுத்துக் காட்டியுள்ளார்.

### ஜாலியன் வாலாபாக் படுகொலை

இந்திய விடுதலையை வலியுறுத்தி நடந்த பொதுக் கூட்டமானது ஒரு சிறிய மைதானத்தில் அமைந்தது. அம் மைதானம் நான்கு பக்கம் உயர்ந்த சுவர்களாலும் ஒரு குறுகிய பாதையைக் கொண்டதாகவும் இருந்தது. விடுதலைப் போராட்ட குழுவினரை நோக்கி ஜெனரல் டயர் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி துப்பாக்கிச் சூடு நடத்தினார்.

இதில் தப்ப முயன்ற பலர் கிணற்றில் குதித்ததால் தம் உயிரைத் துறந்தனர். இந்நிகழ்வினை அப்துல்காதர் தம்முடைய **"தீர்த்த யாத்திரை"** என்ற கவிதை வாயிலாக

**"தண்ணீர் முழி
தோண்டப்பட்ட
ஜாலியன் வாலாபாக்
கிணறுகளின்
உச்சி விளிம்பு உதடுகளெல்லாம்
உள்ளே குதிக்கும்**"(4)

என்ற வரிகளில் தம் சோகத்தினைப் பதிவு செய்கின்றார். மேலும் ஜாலியன் வாலாபாக்

படுகொலையை வெளிப்படுத்திக் காட்டியுள்ள தன்மை வரலாற்று நிகழ்வினை மீளப் பதிவு செய்வதாக அமைந்துள்ளது.

### விடுதலை நாள்

1947 ஆகஸ்ட 15 அன்று இந்தியாவிற்குப் பரிசாக சுதந்திரத்தை காந்தியடிகள் அகிம்சையை ஆயுதமாகக் கொண்டு ஆங்கிலேயர்களை வென்று நமக்கு வாங்கி தந்துள்ளார். இவ்வரலாற்று நிகழ்வினை தமது **"அக்டோபர் 2"** கவிதையில்

**"வேர்க்கடலை**
**தோட்டாவை**
**வென்ற நாள்**
**அன்னிய நஞ்சை**
**ஆட்டுப்பால்**
**கொன்ற நாள்"**(5)

என்றவாறு வெளிபடுத்தியுள்ளார். இங்கு வேர்க்கடலை, ஆட்டுப்பால் என்பவை மகாத்மாவையும்/தோட்டா, அன்னிய நஞ்சு என்பவை ஆங்கிலேயர்களையும் குறிக்கின்றன.

### இந்தியா, பாகிஸ்தான் இரண்டாகப் பிரிந்ததை

**"சுதந்திரத்தின்**
**முதல் பிறந்த நாளில்**
**இந்தியக் கேக்**
**இரண்டாக வெட்டப்பட்டது"**(6)

என இந்தியா துண்டாடப்பட்ட நிலையும், பாகிஸ்தான் புதிதாக உருவான நிலையும் புலப்படுத்துப்பட்டுள்ளன.

### ஹிரோஷிமா - நாகசாகி - குண்டு வெடிப்பு

அமெரிக்கா ஹிரோஷிமா - நாகசாகி மீது அணுகுண்டு வீசியதால் ஜப்பான் மக்கள் அழிந்து போயினர். இதனை தமது **"புதிய இரசாயனம்"** எனும் கவிதையில் படம் பிடித்துக் கட்டுகின்றார்.

**"ஹுரோஷிமா**
**நாகசாகியில்**
**அமெரிக்காவின்**
**ஹைட்ரஜன்**
**அணுகுண்டு வீழ**
**ஜப்பானியரின்**
**பிராண வாயு பெயர"**(7)

என்பதில் வரலாற்றுச் செய்தியினை எடுத்துக் காட்டுகின்றார்.

### உலகம் தோன்றிய வரலாறு

உலகத்தின் ஆதாரமாகத் திழழ்வது நெருப்பு. இத்தகைய வரலாற்றுச் செய்தியினை **"பாடுவோம் நெருப்பை"** என்ற கவிதை வாயிலாக

**"பாடுவோம் நெருப்பை**
**பாருலகம் அதற்கு**
**நெருப்பே கருப்பை"**(8)

என்றவாறு புலப்படுத்துகின்றார்.

### தாஜ்மஹால்

காதல் சின்னமாக உலகத்தில் திகழும் தாஜ்மஹால் ஷாஜகானால் மும்தாஜிக்காக கட்டப்பட்டது. இதனை தனது **"இரப்பை"** கவிதையில் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார்.

**"வெள்ளைத் தாஜ்மஹால்**
**உலகிலேயே**
**முதன் முதலாய்**
**மனைவியின் மறைவுக்காகக்**
**கணவன் கட்டிய**
**கைம்மை ஆடை தான்"** (9)

என்று தன் மனைவி இறந்து விட அவளுக்காக ஒரு கணவன் கட்டிய கைம்மை ஆடை போன்றது. வெள்ளைப் பளிங்கால் உருவாக்கப்பட்ட தாஜ்மஹால் என்ற கருத்தை இக்கவிதை வாயிலாக எடுத்துக் காட்டியுள்ளார்.

### முடிவுரை

வரலாற்றில் குறிக்கத் தகுந்த நிகழ்வுகளான பாபர் மசூதி இடிப்பு, சின்னமருது பெரியமருது படுகொலை, ஜாலியன் வாலாபாக் படுகொலை, ஹுரோஷிமா-நாகசாகி குண்டு வெடிப்பு, உலகம் தோன்றிய வரலாறு, தாஜ்மஹால் எனப் பல வரலாற்று செய்திகளை மீட்டுருவாக்கும் வகையில் அப்துல்காதர் தம் கவிதையில் வெளிப்படுத்திய தன்மை இளைய சமூகத்தினருக்கு நினைவுபடுத்தும் விதமாக அமைந்துள்ளது. மேலும் அவர்கள் இதனை மீட்டுருவாக்கம் செய்து பல்வேறு நிகழ்வுகளை தெரிந்து கொள்ள மேலும் பல ஆய்வுகள் மேற்கொள்ள அப்துல்காதரின் கவிதைகள் உறுதுணை செய்யும் என்ற நிலையில் இவ்வாய்வு நிகழ்த்தப் பெற்றுள்ளது.

### அடிக்குறிப்பு

1. நடராசன், தி.சு., திறனாய்வுக்கலை, ப.68
2. அப்துல்காதர், மின்னல் திரிகள், ப.44
3. மேலது, ப.50
4. மேலது, ப.114
5. மேலது, ப.176
6. மேலது, ப.63
7. மேலது, ப.28
8. மேலது, ப.119
9. மேலது, ப.118

### துணை நூற்பட்டியல்

1. அப்துல்காதர்- மின்னல் திரிகள்சல்மா பதிப்பகம், வாணியம்பாடி - 52பிப்ரவரி - 2004.

# பாலைக்கலி: திணைக்கலப்பும் வேனிற்பருவமும் சுரமும்

**முனைவர் மு. ஜெகதீசன்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்*

**முன்னுரை**

வேனிற்காலத்தில் மழைவளம் குன்றி நிலங்கள் வெம்மையுற்று நீர்நிலைகள் வறண்டு பாலை தன்மை பெறுகிறது. பாலையில் உயிரினங்கள் நீர் இன்றி, நிழல் இன்றி, நிலங்களில் விளைச்சல் இன்மையால் உணவு இன்றி துன்பப்படுகின்றன. நிலத்தில் பரற்கற்கள் நிறைந்துள்ளதால் செல்வோரும் வருந்துகின்றனர். பாரதம் பாடிய பெருந்தேவனார் திணைக்கலப்பும், வேனிற்பருவத்தின் வெம்மையையும், சுரத்தில் செல்வோரின் துன்பநிலைகளையும் பாலைக்கலிப் பாடல்களில் சுவைபட கூறியுள்ளவற்றை இக் கட்டுரை எடுத்தியம்ப முற்படுகிறது.

**தொல்காப்பியமும் திணைக்கலப்பும்**

திணை என்ற சொல்லினைத் தொல்காப்பியர் நிலம், ஒழுக்கம் என்று இரு பொருள்களில் கையாளுகிறார். 'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்' என்பதில்,'திணை' என்பது ஒழுக்கம் எனப்பொருள்படுகிறது. 'நடுவண் ஐந்திணை நடுவணது ஒழிய'[1] என்பதில், 'திணை' என்பது நிலத்தைப் பொருளாகக் கொள்கிறது. திணை என்பது நிலம், ஒழுக்கம் என்ற இரு பொருள்களையும் ஒருசேரத் தருதலும் உண்டு. பாலைத் திணையினை ஒழுக்கம் என்பாரும் நிலம் என்பாரும் உளர். நிலம் என்பார் ஒழுக்கம் என்ற கருத்தினையும் மறுக்கவில்லை. தொல்காப்பியர் திணையை (ஒழுக்கத்திணை),

> **"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
> **முற்படக் கிளந்த எழுதிணை என்ப"**2

என வரையறுக்கிறார். இவ்வேழ் திணையுள் கைக்கிளை, பெருந்திணை தவிர ஏனையவை (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) அன்பின் ஐந்திணையாகும். இவை ஒத்த அன்புடையாரின் காதல் வாழ்வினைக் குறித்து அமைவன. கைக்கிளை, பெருந்திணை என்னும் ஒழுக்கங்கள் அன்புடையார் அல்லாதாரின் காதல் உணர்வு வெளிப்பாட்டு இயல்பு குறித்தன.

> **"நடுவண் ஐந்திணை நடுவணது தொழியப்**
> **படுதிரை வையம் பாத்திய பண்பே"**3

எனத் தொல்காப்பியர் கூறுகிறார். இங்கு 'படுதிரை வையம்' என்பது நிலத்தினைக் குறிக்கிறது. 'நடுவணது ஒழிய' என்பது நடுவணது நீங்கலாக என விளங்கலாம். இதில் 'திணை' என்பது நிலப் பொருண்மை உடையது. முதலாவதாகவும் இறுதியாகவும் முறையே அமைந்த கைக்கிளை, பெருந்திணை நீங்க, ஐந்திணைகளில் நடுவணது ஒழிந்த திணை தவிர ஏனையவற்றிற்கு நிலம் உண்டு எனப் பொருள்கொள்ளலாம். ஏனெனில் 'முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச் சொல்லிய முறையால் சொல்லவும் படுமே'4 என மரபு வழிப்பட்ட நால்நிலத்தினைக் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். நிலம் குறிக்காத நடுநின்ற திணையாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவது பாலைத் திணை ஆகும்.

எழுதிணையில் நான்கு நிலம் குறிப்பிடப்படுவது கவனிக்கத்தக்கது. பாலை, கைக்கிளை, பெருந்திணைகளுக்குத் தனித்த நிலம் சுட்டப்பெறவில்லை. ஆயினும் ஏழு திணைகளுக்கும் உரிப்பொருள் சுட்டப்பெறுகின்றது. தொல்காப்பியரின் கூற்றின் வழி நான்கு நிலத்தில் எழு திணைகளின் உரிப்பொருள் நிகழும் என்பது உணர்த்தப்பட்டுள்ளது. நடுவண் ஐந்தினையில் நடுவண் திணை 'பாலை' என்பதாகும். அகத்திணையில் பாலை, பெருந்திணை, கைக்கிளை ஆகிய திணைகளுக்குத் தனித்த நிலமின்றி ஒழுக்கம் மட்டும் குறிப்பிடுள்ளது போலப் புறத்திணையில் அவற்றின் புறத்து வருவனவாகிய வாகை, காஞ்சி, பாடாண் ஆகிய திணைகளுக்குத் தமக்கென தனித்த நிலமில்லை என்று அறியலாகிறது. புறத்திணையியலில், 'வாகை தானே பாலையது புறனே'[5] என்பதில் பாலை என்ற சொல்லைத் திணையாகத் (ஒழுக்கமாக) தொல்காப்பியர் கையாளுகின்றார். ஐந்திணைகளில் பாலை நிலப்பொதுமை பெற்றது தனித்த ஒழுக்கம் கொண்டது என்பதைத் தொல்காப்பியம் வழி அறியலாம். அவ்வாறே வெற்றி குறித்த வாகைப் புறத்திணையும் காஞ்சி, பாடாண் தவிர்ந்த மற்றைய புறத்திணை நிகழ்வுகளுக்குச் சார்புடையது என அறியலாம்.

பாலைத் திணை நான்கு நிலத்திற்குள்ளும் விரவி வருவதால் அதற்கெனத் தனித்த நிலங் கூறப்படாது மற்றைய நான்கு திணைக்கும் நிலம் கூறப்பட்டுள்ளது. கைக்கிளை, பெருந்திணை ஒத்த காமம் இன்மையாதலால் அவற்றிற்கு நிலம் கூறப்படவில்லை. ஆயினும் பாலைத் திணை ஒத்த காமத்திற்குள் வருவதலால் அதற்கென நிலம் கூறப்பட வேண்டியது இன்றியமையாததாகும். தொல்காப்பியருக்குப் பின்னர் முல்லை, குறிஞ்சி நிலக் கலப்பில் அமையும் திரிந்த நிலப்பகுதி பாலை நிலமாகக் குறிக்கப்பட்டது. சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் பாலை நிலப் பாங்கு பற்றிக் குறிப்பிட்டுள்ளமை கீழ்வருமாறு.

**“முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் றிரிந்து**
**நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்**
**பாலை என்பதோர் படிவங் கொள்ளும்”**[6]

தொல்காப்பியர் பாலைத் திணைக்கு நிலம் கூறவில்லையாயினும் அத்திணைக்கு கருப்பொருள், உரிப்பொருள், பொழுது முதலியன குறித்துள்ளார்.

**“நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு**
**முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே”**
**“பின்பனி தானும் உரித்தென மொழிப”**[7]

என்னும் நூற்பாக்கள் பாலைத் திணைக்குரிய பெரும் பொழுது சிறுபொழுது கூறுவன. இங்கு,“நிலையென்றது நிலத்தினை. முடிவுநிலைப் பகுதிக்கண் முன்னப்படுமெனவே அத்துணையாக்கமின்றி ஒழிந்த மருதமும் நெய்தலும் முடியாநிலமாய் அத்துணை முன்னப்படாதாயிற்று. இது பாலைக் கென்பதாம்” என்பது நச்சினார்க்கினியர் விளக்கம். “பாலைக்குக் காலமாகிய முதற்பொருள் உண்டேயன்றி நில முதற்பொருளில்லையென ஆசிரியர் கருதியிருப்பாராயின், ‘நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனில்’ என்றளவில் நூற்பாவை முடித்திருப்பார். அல்லாது என்று ‘முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே’என மேலும் கூறியது பாலைக்கு இயற்கை நிலம் இல்லையாயின் செயற்கை நிலம் உண்டென்பதை அறிவித்தற்கேயாம்” என்பதும் நச்சினார்க்கினியரின் உரைப் பகுதியாகும்.

பெரும்பொழுதுகளான இளவேனிலும், முதுவேனிலும், பின்பனிப் பருவமும் பாலைக்குரிய பொழுதுகளாகக் கூறப்பெற்றுள்ளன. வேனிற் பருவமும் பின்பனிக்கு முன்னதான பனிஎதிர் பருவமான முன்பனியும் குறிஞ்சி ஒழுக்க நிகழ்வுக்குரியதாகும். குறிஞ்சிக்குரிய முன்பனியைப் பாலைக்குரிய பின்பனி தொடர்வதைப் போலக் குறிஞ்சிக்குரிய கூடலைத் தொடர்ந்து பாலைக்குரிய பிரிவும் தொடர்வதாக அமைந்த நிலையில் பொழுதும் உரிப்பொருளும் ஒன்றினை ஒன்று தொடர்ந்தமைதலை அறியலாம். பாலைக்குரிய சிறுபொழுதான நண்பகலுக்கு அடுத்த நிலையில் முல்லைக்கான மாலைப் பொழுது தொடங்குவதாக அமைகிறது. “பிரிந்து மீளுந் தலைவன் திறமெல்லாம் பிரிந்திருந்த கிழத்தி கூறுதலே முல்லைப் பொருளாயும், பிரிந்து போகின்றான் திறமெல்லாம் பாலையாகவும் வருதலின்”[8] என்பதனால் முல்லைக்கும் பாலைக்கும் மிகப்பெரிய அளவில் வேறுபாடில்லை என உணர்த்தப்பட்டுள்ளது.

**திணைக்கலப்பில் உரிப்பொருள்**

உரிப்பொருள் என்பது சங்கப் பாடல்களில் அமையும் காதல் வாழ்க்கை பாடுபொருளாகும். உரிப்பொருள் அகமாந்தர்களின் ஒழுக்கம் குறித்ததாகும்.

“உரிப்பொருள் இன்றேல் பொருட்பயன் இன்று.” “உரிப்பொருள் ஆகிய உணர்வே பாட்டின் உயிர்” எனக் கூறுவன கருதத்தக்கன. பாலைத் திணைக்குரிய உரிப்பொருள் பிரிதலும் பிரிதல் நிமித்தமும் என்பர். “நிமித்தமாவது, ஒவ்வோரொழுக்கத்தையடுத்து முன்னும் பின்னும் முதலும் முடிவுமாகத் தொகுத்து அவ்வொழுக்கத்திற்கு இன்றியமையாத் தொடர்புடையனவற்றைச் சுட்டுவதாம்”[9] என்பது நச்சினார்க்கினியர் உரைக் கருத்தாகும். பிரிதல் புணர்தலுக்கும் இருத்தலுக்கும் இடையில் நிகழ்வது. எனினும் புணர்தல், ஊடல், இருத்தல், இரங்கல் என்ற நான்கு உரிப்பொருளுக்கும் பிரிதல் பொதுவாகிறது. பாலைத் திணை மற்ற திணைகளுக்குப் பொதுமையாவதால் அதன் உரிப்பொருளான பிரிதலும் பொதுமையாகின்றது.

முல்லைக்கு ஆற்றியிருத்தல் உரிப்பொருளாகும். தலைவன் போர் நிமித்தமாகப் பிரிந்து சென்றதிலிருந்து அவன் வரும் வரை தலைவி ஆற்றியிருத்தல் முல்லைப் பாடல்களில் கூறப்பெறும். இங்கு ஆற்றியிருத்தல் பிரிவினால் நிகழ்வது. மருதத்திற்கு ஊடல் உரிப்பொருளாகும். பரத்தையொழுக்கம் விரும்பிச் சென்று மீண்டு வரும் தலைவன் தலைவியிடம் வருகையில் வாயில் மறுத்து ஊடுதல் மருதப் பாடல்களில் உரிப்பொருளாய் அமையும். இங்ஙனம் ஊடல் பிரிவினால் நிகழ்கிறது. நெய்தலுக்கு இரங்கல் உரிப்பொருளாகும். தலைவன் பொருளீட்டச் சென்று உரிய காலத்தில் விரைந்து வரவில்லையாயின் தலைவி பெரிதும் இரங்கி வருந்துவாள். இவ்விரங்கலும் பிரிவினால்

நிகழுகிறது. குறிஞ்சிக்குப் புணர்தல் உரிப்பொருளாகும். புணர்வு உண்டெனின் அதற்குமுன் பிரிவு நிகழ்ந்திருத்தல் வேண்டும். இங்கு புணர்தலுக்கும் பிரிவு காரணமாகிறது. இவ்வாறாகப் புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல் ஆகிய உரிப்பொருள் நிகழ்வுகளுக்குப் பிரிவு அடிப்படைக் காரணமாகிறது. நிலப்பொதுமை மட்டுமின்றி உரிப்பொருளிலும் பொதுமை உடையதாகப் பாலைத் திணை அறியத்தக்கதாகும். பாலை ஒழுக்கம் ஏனைய ஒழுக்கங்களுக்கு வளம் சேர்க்கும் ஆற்றலுடையதாக அமைகிறது. ஏனைய ஒழுக்கங்கள் தன்னிடத்து விரவாமல் இருப்பதற்கு ஒழுக்கங்களுள் நடுவணதாக வைத்து எண்ணத்தக்கதாய் விளங்குகின்றது.

**"இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றினும்**
**உரியதாகும் என்மனார் புலவர்"**[10]

எனப் பாலைக்குரிய பிரிவு பற்றித் தொல்காப்பியர் குறித்துள்ளார். இருவகைப் பிரிவு என்பது தலைவனைப் பிரிதலும், தலைமகளை உடன்கொண்டு தமரைப் பிரிதலும் ஆகும். இவை, காலிற் பிரிவது, கலத்திற் பிரிவது என்றும் குறிக்கப்பெறும். வேனிற் பிரிவும், பின்பனிப் பிரிவும்[11] என்றும் பிரிதலின் பண்பினை உரையாசிரியர்கள் வேறுபடுத்துகின்றனர். வேனிற்பிரிவு வழித்தடத்தினைக் குறிப்பது. பின்பனிப் பிரிவு என்பது உடன்போக்கினைக் குறிப்பதாகும்.

ஒன்று நிலப் பாலை (பிரிவு). மற்றொன்று காலப் பாலை (பிரிவு). பாலைத் திணைக்கு முல்லையும் குறிஞ்சியும் திரிதல் அல்லாத தனித்த நிலமில்லாததால் தமிழ்ச் சூழலில் 'நிலப்பாலை'யினைக் கடத்தல் இல்லை. வேனில் மற்றும் பின்பனி பருவத்தில் வழித்தடச் செலவு நிகழ்வதால் காலப் பாலை உண்டு. சங்கப் பாடல்களில் கூறப்பெறும் பாலைப் பிரிவுகள் அனைத்தும் காலப் பாலைப் பிரிவாகக் கருதுதற்குரியன. இதனால் பாலை திணைப் பாடல் மரபிலும் வாழ்வியல் மரபிலும் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதத்தக்கது. பாலைக்குத் தனித்த நிலமில்லை என்றாலும் நிலக் கலப்பு, ஒழுக்கப் பொதுமை, பிரிவுப் பொதுமை ஆகியவற்றால் தனித்தன்மை பெறுகிறது. பொருள்வயிற் பிரிதலான நிலையிலும், உடன்போக்கில் பெற்றோர் உள்ளிட்ட சுற்றத்தாரைப் பிரிதலான நிலையிலும் தலைவன் தலைவி ஆகியோருக்காகும் உணர்வு நிகழ்வு, அவற்றின் வெளிப்பாடு குறித்த பொருண்மை பாலைப் பாடல்களில் பாடப்பெற்றுள்ளன.

**வேனிற்கால வெம்மையும் பின்பனி கால இளவேனிலும்**

வேனிற் காலத்தில் யானைகள் அருந்துவதற்கு நீர் இல்லாமையால் கானல்நீரைக் கண்டு குடிக்கமுடியாமல் இங்கும் அங்குமாக அலைந்து திரிந்த கானல் (கலித். 7) ஆகும். மரங்கள் இளமையிலேயே வறுமையுற்றவன் போன்று இலை தழைகள் வாடி நின்றன. தன் நிழல் தேடி வருபவர்களுக்கு பயன்படாதவாறு இருந்தன. சூரியனின் வெப்பத்தால் மரங்கள் வேரோடு வாடி நின்றன. பாலை நிலம் உயர்ந்த மரங்களைக் கொண்டிருந்தாலும் வெம்மையான காடாகும் (கலித்.10). தலைவன் பொருள் மீது நாட்டம் கொண்டு கடுமையான சுரத்தின் வழி நடந்து செல்கிறான். அவ்வழித் தடத்தின் பாறாங்கல்லின் கல்லின் வெப்பத்தை எண்ணி தலைவி வருந்துகிறாள். மேகம் மழை பொழிந்தால் கல்லின் வெப்பம் குறைந்துவிடும். ஆகவே மேகத்தில் இருந்து மழை பொழிய வேண்டும் எனச் சூரியனை வணங்குகிறாள். காட்டுவழியில் செல்லும் பொழுது, உலர்ந்த சிறு சிறு புதர்கள் வெப்பத்தால் பற்றி எறியும். காட்டுத் தீயால் வீசக்கூடிய காற்று வெப்பமாக இருந்தன (கலித். 16).

காட்டு வழியில் செல்லும் எயினர்கள் கொலைத் தொழிலுக்கு அஞ்சாதவர்கள். சிலை மரத்தால் செய்த வில்லைக் கையில் வைத்திருப்பர். படைகளுடன் வரும் அரசனைக் கண்டும் அஞ்சாதவர்கள். வில்லின் நாண் ஒலி கேட்டால் அரசப்படைகள் அஞ்சி ஒடுங்கும். வன்மை மிக்க பார்வை உடையவர்கள். கொடுந்தொழில் புரியும் எயினர்கள் தன் உடலைத் தானே புண்படுத்தி மகிழ்வர் (கலித்.15) என்பதைப் பாடல்வழி அறியலாகிறது.

பாலையின் வழித்தடத்தைச் சுரம் என்பர். மலையிலும், காட்டிலும், வயலிலும், கடற்பகுதிகளிலும் வெம்மை சூழுகையில் சுரமாகிறது. "மலையிறந்து செயல் சூழ்ந்த பொருள்" (கலித்.1), "வரையோங் கடுஞ்சுரம்" (கலித்.5), "விறன்மலை வெம்பிய போக்கரு வெஞ்சுரம்" (கலித்.7), "கன்மிசை வேய்வாடக் கதைகதிர் தெறுதலாற் நுன்னுரூஉத் தகையவே" (கலித்.10) என்றும்,

**"வொன்கதிர் தெறுதலிற் சீறரூங் கணிச்சியோன்**
**சினவலி னவ்வெயி லேறுபெற் நுதிர்வனபோல**
**வரைபிளந் தியங்குற ராறுகெட விலங்கிய வழலவி**
**ராரிடை" (கலித்.1)**

எனவரும் பாடலடிகள் பாலை நிலத்தின் வெம்மையைக் குறிப்பிடுகிறது. சூரியன் சீற்றம் கொண்டு வலிமையான வெயிலைப் பரப்பி மலைப்பகுதிகளை வறட்சிக்குள்ளாக்குவது பாலை எனப்படும். இதனை வழித்தடம் மாற்றம் எனலாம். தன்னியல்பில் உள்ள மலைவளம், வெயில் காலத்தில் வறட்சியில் தன்னியல்பு மாறுவது வழித்தடம் மாற்றமாகும்.

பாலைக்குத் தனித்த நிலமில்லை. திணையாகிய ஒழுக்கம் உண்டு. தொல்காப்பியர், பாலைக்குரிய பெரும்பொழுது, 'வேனில் பின்பனி' என்று குறிப்பிடுவதும், சிறுபொழுது 'நண்பகல்' என்று குறிப்பிடுவதும் கருதத்தக்கது. வேனில் காலத்தை இளவேனில் முதுவேனில் என்று பாகுபடுத்துவதைவிட வேனில்12 என்று பொதுச்சொல்லில் நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறார். வேனில் காலம் என்பது போர் நிகழ்த்தும் காலமாகும். வேனில் என்பது வெய்யில் வருத்தும் காலமாகும். போர்த்தொழில் செய்யும் வீரர்கள் வெஞ்சுரத்தைக் கடப்பர். தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லும் காலமாகும். பிரிவு எண்ணுதலில் வழித்தட வெம்மையும், பாதுகாப்பற்ற வழித்தடம் மிகும் காலமாகும். நீர் இன்றி வருத்தும் காடும், வெப்பம் மிகுந்த மலை வரையும், எயினர்களின் கொடூர குணங்களும் நினைந்து வருந்தும் காலமாகும். ''பிரிவு முதுவேனிலில் பிரிந்தவர்கள் கார்காலத்தில் கூடுவர். இளவேனில் காலம் கூடுவதற்குரிய பருவமாகும். பின்பனிக்காலத்தில் பிரிந்தவர்கள் இளவேனிற் காலத்தில் கூடுவர்''[13] என்று ச.சோமசுந்தர பாரதி குறிப்பிடும் விளக்கம் வழித்தடத்தின் சென்று மீள்வோர் மிகுதி என்பதை உணர்த்துகிறது. பாலைக்கலியில் பதினோரு பாடல்கள் இளவேனில் காலத்தின் நிகழ்வை குறிப்பிடுகிறது. தலைவி தோழியிடம் இளவேனிற் காலம் குறித்து தன் கூற்றில் உரையாடுகிறாள்.

'நண்பகல் வேனிலொடு' என்று தொல்காப்பியர் குறிப்பிடுவது பெரும்பொழுதின் வெப்பத்துடன், சிறுபொழுதின் நண்பகல் வெப்பம் இணைதல் மிகுதி என்றாகிறது. பாலை நிலத்தின் வெம்மையைப் பாடுதலே பாலைத்திணையின் தனித்தன்மையாகிறது. அதன் உரிப்பொருளான பிரிதலும் பிரிதல் நிமித்தமும் வெம்மைகிணங்க அமைந்துள்ளது. நண்பகலும், வேனிலும் பிரிக்கமுடியாதது போல, நிலத்தின் வெம்மையும், மாந்தர்களின் மனத்தின் பிரிவின் கொடுமையும் இணைந்ததாகிறது. ''வேனிலுழந்த வறிதுயங்கு ஒய் களிறு'' (கலித்.7) யானை முதுவேனிலில் உணவின்மையால் உடல் சிறுத்தும், நீரின்மையால் வருந்துகின்றன. இக்கருப்பொருள் மாந்தர்களின் பிரிவுணர்வோடு இயையப்பெற்றது.

தொல்காப்பியர் பின்பனிக் காலமும் பாலைத்திணைக்கு உரித்தாவதை, ''பின்பனி தானும் உரித்தென மொழிப'' என்று குறிப்பிடுகிறார். பின்பனிக் காலம் என்பது வெயிலும், பனியும் வருத்தும் காலமாகும். வாடைக் காற்றும், கடும்மழையும் முன்பனிக் காலத்தைக் குறிப்பது. இக்காலம் குறிஞ்சித்திணைக்கு உரித்தானது. மழையின்றி கடும்பனியும், வாடையும், வெயிலும் வருத்துவது பின்பனிக் காலமாகும். இது பாலைத்திணைக்கு உரித்தானது. இதனை,''நிலன் ஒருங்கு மயங்குதல் இல்லை. காலம் இரண்டும் மயங்கும். இதனால் முன்பனியும் பின்பனியும் மயங்கிற்று'' என்று நச்சினார்க்கினியர் கூற்றிலிருந்து முன்பனியும், பின்பனியும் கால மயக்கம் என்று உணரமுடிகிறது.

கலித்தொகையில் பாலைத்திணையில் பின்பனிக் காலம் குறிப்பிடப்படுகிறது. பின்பனிக் காலம் என்பது வெயில் வருத்தாமல் பனி வருத்தும் காலமாகும். வெயில் உண்டென்றாலும், மனிதர்களை விலங்குகளை வருத்தாது. மாந்தர்களின் மனநிலையும் இக்காலத்தில் வறட்சி கொள்ளாமல் இன்புறும் காலமாகும். குறிப்பாக, உடன்போக்குப் பாடல்களில் இக்காலம் உணர்த்தப்படுகிறது. பின்பனிக்காலத்தில் உடன்போக்கு நிகழ்வதாகக் கருதமுடிகிறது. இக்காலத்தில் நண்பகல் வெயிலை, ''ஒண்கதிர் தெறுதலின்'' (கலித்.1),''ஞாயிறு கடுகுபு கதிர்'' (கலித்.7), ''விரிகதிர் தெரிதலின்'' (கலித்.9), ''கனைகதிர் தெருதலின்'' (கலித்.10) என்று அறியமுடிகிறது.

பின்பனி மலர்த் தீண்டும் காலமாகும். மலர்கள் மலர்ந்தும், வாடியும், வதங்கியும் செடியில் நோயுறும் காலமாகும். இக்காலத்தில் நீர்நிலைகள் நிரம்பியிருந்தும், பனி பெய்தும், குளிர் வாட்டியும் இருந்தாலும், வேனில் தொடங்குவதற்கு முன்தோன்றும் காலமாகும். ''பனியேற்ற விரவுப்பன் மலர்தீண்டி நோய் சேர்ந்த வைகலான்'' (கலித்.28) என்று, நீண்டு உயர்ந்த கரும்புகளில் பூத்த பூக்களின் நிறங்கள் மாறும் அளவிற்குக் கடும்பனி பெய்யும் காலமாகும். இரவில் வீசும் வாடைக் காற்று தலைவியின் உடலை நடுக்கமுறச் செய்யும். பின்பனிக் காலத்தில் சிறு மழைத்துளிகள் பொழிந்தன. புதர்களைச் சுற்றிலும் பனி சூழ்ந்தன. அவைப் புகை போல காட்சியளித்தன.

முல்லையரும்புகள் போன்ற பற்கள் வாடை தாளாமல் ஒன்றொடொன்று மோதியடித்துக் கொண்டன (கலித்.31) என்று பின்பனிக்காலத்தின் இயல்பினை அறியமுடிகிறது.

**"அடர்பொன் அவிரேய்கும் அவ்வரிவாடச்**
**சுடர்காய் சுரம்போகு றும்மையா மெங்கட்**
**படகூற நின்றது முண்டோ தொடர்கூரத்**
**துவ்வாமை வந்தக்கடை"** (கலித்.12)

எனவரும் பாடலடியில் சுடர்க்காய்கள் அடர்ந்திருந்த சுரத்தில் செல்லுகையில் தலைவனின் பிரிவை எண்ணி வருந்தும் தலைவியின் நிலையை,

**"புறந்தரல் கைவிட் டெந்நாளோ**
**நெடுந்தகாய் நீ செல்வ தந்நாள்கொண்**
**டிறங்குமிவ ளுயிரே"** (கலித்.5)

எனவரும் பாடலடிகள் குறிப்பிடுகின்றன. தலைவன் தலைவியைப் பிரிந்து வெகுதூரம், வெகுநாள் செல்லும் நாள் அவளைக் கைவிட்டுச் செல்லும் நாளாகும். அப்போது அவள் உயிரானது உடம்பிலிருந்து இறங்கும் நிலைக்குச் செல்வாள் எனத் தோழி அறிவுறுத்துகிறாள்.

**"சொன்னவை யரவத்து மினையயவ ணீநிப்பின்**
**……………………………………………**
**இன்னுயிர் தருதலு மாற்றமோ**
**முன்னிய தேஎத்து முயன்றுசெய் பொருளோ"**
(கலித்.7)

எனவரும் பாடலடிகளில் தலைவனிடம் தோழி, இவளுக்கு இன்னுயிர் தருவதாக சொன்னாய். ஆனால் பொருள் தேடி இவளை விட்டுப் பிரிகிறாய். இவள் உயிரை நீக்கிப் பின் பொருளிலான இன்னுயிர் தருதல் என முயலுதல் பொருளற்றது என அறிவுத்துகிறாள். தலைவியின் நிலையைத் தலைவனுக்குத் தோழி உணர்த்துகிறாள். தோழி தலைவனுக்க எடுத்துரைத்து பொருளீட்டச் செல்வதைத் தடுப்பதாக அமைந்துள்ளன. இப்பாடலடிகளில் கானம், காடு, ஆரிடை ஆகிய சொற்கள் பாலை நிலத்தின் தன்மையை உணர்த்துகின்றன.

**வேனில் பின்பனிக் காலத்தில் மக்கள்**

பாலை என்பது முல்லையும் குறிஞ்சியும் முறைமையாற் திரிதல். வெம்மையுறுதல். எங்கும் வளமை தீய்ந்து போன தன்மையாகும். இக்கருப்பொருளின் தன்மைக்கேற்ப மாந்தர்களை உணர்த்தும் உரிப்பொருளும் துயருறுகிறது. இந்த நிலத்தில் ஆறலைக் கள்வர் வாழ்கின்றனர். அவர்கள் திருடுதல், வழிப்பறி செய்தல் போன்ற தொழிலைச் செய்பவர்கள். கள்வர் என்ற சொல் ஆறலைக் கள்வர், கடுங்கண் மறவர், கொலைஞர் என உரையாளர்கள் தரும் விளக்கத்தின்வழி அறியலாகிறது. பிறருக்குத் துன்பமிழைக்கும் உடல் வலிமையும், மனவலிமையும் உடையவர். உறுதிவாய்ந்த கழுத்தையும், கலைமானின் கொம்பினைப் போன்ற முறுக்குண்ட தாழ்ந்த தாடியினையும் உடையவர். புலி போன்ற பார்வை கொண்டவர்கள்.

இக்கள்வர்களை, வன்கண் ஆடவர், துவர்செய் ஆடைச் செந்தொடை மறவர், "கொடுஞ்சிலை மறவர்" (கலித்.13), "வேட்டுவர்" (கலித்.14), "வேட்டச் சீறூர் "(கலித்.15), "வயவர், செயிர் நோக்கு ஆடவர்" (கலித்.16), "அத்தக் கள்வர், மழவர், வேட்டக்கள்வர், மறவர், கொடுவில் எயினர்" (கலித்.17), "கொலைவில் ஆடவர்" (கலித்.18), "வலைவர்" (கலித்.54), "கடுங்கண் மறவர், பழையர்" (கலித்.19), "செங்கண் ஆடவர்" (கலித்.20), "கொடுவில் எயினர்" (கலித்.21) ஆகிய பொருண்மைகளில் பாலைப்பாடல்களில் காணக்கிடைக்கின்றன. "கடுங்குரல் பம்பைக் கதநாய் வடுகர், நல்நெடுங் குன்றம்"[14] என்று நற்றிணைக் குறிப்பிடுகிறது.

**"கல்லைக் கண்ணி வடுகர் முனையது**
**வல்வேல் கட்டி நல்நாட்டு உம்பர்**
**மொழிபெயர் தேஎத்தர்………….."** (கலித்.23)

என்னும் பாடலடிகள் வடுகர்கள் வேட்டையாடி உள்ளனர். வணிகம் செய்துள்ளனர். வடுகவேடர் வாழ்ந்த பகுதியை வடுக தேசம், வேடர் தேசம் என அழைக்கப்பட்டது. வடுகநாட்டை எருமை நாடு என்றனர். தமிழ் அல்லாத மொழிகள் பேசியயுள்ளனர். மொழிபெயர்த்தும் உள்ளனர். வடுகர்கள் மொழியால் வேறுபட்டும் உள்ளனர். வேட்டை நாய் வளர்த்தும், வில் அம்பிலும் வேட்டையாடினர். ஆநிரை கவர்ந்து வருதல், பசுக்கறி உண்ணுதல், கள் குடித்தல் போன்ற பண்பாட்டைக் கொண்டிருந்தனர். பம்பை என்ற இசைக்கருவி இசைத்துள்ளனர்.

எயினர்கள் வேட்டையாடுதலைத் தொழிலாகக் கொண்ட வேட்டுவ குடியைச் சார்ந்தவர்கள். அம்பு எய்யுதலைத் தொழிலாகக் கொண்டதால் எயினர் எனப் பெயர்ப் பெற்றிருக்கக்கூடும். எயினர் குடிப் பெண்கள் எயிற்றியர் என அழைக்கப்படுகின்றனர். எயினர்களைப் பெரும்பாணாற்றுப்படை, "ஈத்திலை வேய்ந்த குடிசைகளில் வாழ்ந்தனர். மான் தோலை விரித்து படுத்துறங்கினர். இரும்பு உளியைக் கொண்டு புல்லரிசியைத் தோண்டியெடுத்து விளாமர முற்றத்தில் நிலவு வெளிச்சத்தில் உரலில் சிறு உலக்கையால் குற்றினர். நெடுங்கிணற்றில் உவர்நீர்

எடுத்து, உடைந்த பாத்திரத்தில் புல்லரிசையை இட்டு அதனோடு வாட்டிய ஊனையும் சேர்த்து சமைத்தனர். தேக்கு மர இலையில் உணவைப் பரிமாறி உண்டனர். பன்றியையும் முயலையும் வேட்டையாடினர். வேட்டைக்கு நாயைப் பயன்படுத்தினர். பெரிய அரண்களை அமைத்துத் தம்மைப் பாதுகாத்துக் கொண்டிருந்தனர்'' (கலித்.24).

எயினர்கள் எப்பொழுதும் கொடுவில்லைத் தாங்கிய நிலையில் சுற்றித் திரிபவர்கள். இவர்கள் பாறைகளில் தம் அம்புகளை தீட்டி கூர்மை செய்வர். எயினர்கள் செந்துவராடையை உடுத்தியிருந்தனர். பிறரைக் கொல்லும் தொழிலைச் செய்பவர்கள். முள்ளம்பன்றியின் இறைச்சியை உண்டனர். அழகில்லாத் தாடியையுடையவர்கள். வன்கொடுமை செய்பவர்கள். வழியில் செல்வோரிடம் பொருட்களைப் பறித்து, உயிரைக் கொல்லும் தொழிலைச் செய்பவர்கள்.

பாலைத்திணையில், எயினர்கள் தவிர காரோடர் என்பவர் இரும்பாலான ஆயுதங்களுக்குச் சாணை பிடிக்கும் தொழிலைச் செய்துள்ளனர். செக்கர்கள் எள்ளைக் கல்லால் ஆன செக்கில் ஆட்டி எண்ணெய் எடுத்துள்ளனர். யவணர்கள் மன்னர்களின் குதிரைகளைப் பராமரித்துள்ளனர். அரண்மனைகளைக் காத்துள்ளனர். செல்வந்தர்களின் வீடுகளைக் காவல் காத்துள்ளனர். பழையர் என்னும் மகளிர் பூ விற்றனர். கணியர்கள் மூன்று காலங்களையும் அறிந்து கூறும் அறிவர் எனப்பட்டனர். நாழிகையைக் கணக்கிட்டுள்ளனர். கட்டுவிச்சியர் கட்டும் கழங்கும் பார்த்தனர். மகளிர் கள் விற்கும் தொழிலைச் செய்தனர். மழவர், மல்லர், மறவர் போன்றோர் போர்த்தொழிலைச் செய்பவர்களாகவும், மன்னர்கள் தரும் வேலைகளைச் செய்தும் உள்ளனர். இவர்களில் பலர் செல்வந்தர் மனைகளில் வீட்டு வேலைகளைச் செய்யம் அடிமைத்தொழில் புரிந்தும் உள்ளனர்.

ஆறலைக் கள்வர் எனப்படுவோர் பாலை வழித்தடத்தில் வருவோரை இடைமறித்து வழிப்பறி செய்தனர். வழிப்போக்கர்களிடம் பொருள்கள் இல்லாதபோது அவர்களின் மீது அம்புகளை எய்தினர். அவர்கள் துடிதுடிப்பதைப் பார்த்து மகிழ்வர். இதனை,

**"அற்றம் பார்த்து அல்கம் கடுங்கண் மறவர்தாம்**
**கொள்ளும் பொருளிலராயினும் வம்பலர்**
**துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்து" (கலித்.3)**

எனவரும் பாடலடிகள் குறிப்பிடுகிறது. தன்னைப் பிரிந்து தலைவன் செல்லும் பாலை நிலத்தின் சுரம் கொடிய விலங்குகளால் மட்டுமல்ல கள்வர்களாலும் துன்புறுவர் என்று தலைவி அச்சம் கொள்கிறாள். இதனை,

**"பால் அம்செவிப் பணைத்தாள் மாநிரை**
**மாஅல் யானையொடு மறவர் மயங்கித்**
**தூறு அதர்பட்ட ஆறுமயங்கு அருஞ்சுரம்"**
**(கலித்.5)**

எனவரும் பாடலடிகளில் அறியமுடிகிறது. பாலைநிலத்தில் வாழும் கள்வர்கள் கொடிய விலங்குகளைக் காட்டிலும் அச்சம் தருபவர்களாக விளங்குகின்றனர். சேனைகள் சூழ அரசனே பெரும்படையுடன் வந்தாலும் ஆறலைக் கள்வர்கள் அஞ்சமாட்டார்கள். சிலை என்னும் மரத்தால் செய்த வலிமை மிகுந்த வில்லை வளைத்து அதிலே முறுக்கமைந்த நாண் கயிற்றைப் பூட்டுவர். அவர்கள் மீது போர் தொடுப்பது தம் வீரத்திற்குத் தகுதியற்றது என்று வெட்கங்கொண்டு நாணைத் தெறித்து ஒலி எழுப்புவர். சிங்கக்குரலைக் கொண்டு விலங்கினம் சிதறி ஓடுவதுபோல அவ்வொலி கேட்ட பெரும்படையினர் சிதறி ஓடுவர். ஆறலைக் கள்வர்கள் அத்தகைய கொடிய ஆற்றல் கொண்டவர். அன்பும் அருளும் அறவே இல்லாதவர்கள். இதனை,

**"அரிமான் இடித்தன்ன அங்சிலை வல்வில்**
**பரிநாண் புடையின் புறங்காண்டல் அல்லால்**
**இணைபடைத் தானே அரசோடு உறினும்**
**……………………………………………**
**அருள்புறம் மாறிய ஆரிடை அத்தம்"**
**(கலித்.14)**

எனவரும் பாடலடிகள் குறிப்பிடுகின்றன. ஆறலைக் கள்வர் அன்பும் அருளும் அறவே இல்லாதவர்கள். வழிச்செல்வோரை வில்லில் அம்பினைப் பூட்டி எய்து கொல்லுவர். இறந்தவரின் பிணங்களைச் செத்தைகளாலும், கள்ளிகளாலும் மூடிவைத்துப் பிறர் காணாதபடி மறைப்பர். மறைத்த அக்குவியல்கள் முள்வேலி இட்டது போலப் பாதையின் எப்புறத்தும் காணப்படும். அத்தகைய கொடுமைகள் நிறைந்த வழித்தடமாகும். இதனை,

**"இடுமுள் நெடுவேலி போலக்,கொலைவர்**
**கொடுமரம் தேய்த்தார் பதுக்கை நிரைத்**
**சுடுநவையார் ஆற்று, அறுசுனை முற்றி"**
**(கலித்.11)**

எனவரும் பாடலடிகள் விளக்குகின்றன. இப்பாலை நில மக்கள் வேட்டையாடியும், ஆநிரை கவர்ந்தும், வணிகப் பொருட்களைக் கொள்ளையிட்டும் வாழ்ந்தனர். இம்மக்கள் எயினர், மறவர், வாள்குடி மல்லர், மழவர் போன்ற பெயர்களில் அழைக்கப்பட்டனர். மழவர்கள் ஆநிரைக் கவர்தலைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். கடுங்கண் மழவர், வண்கண்

மழவர், செங்கண்மழவர், கல்லா மழவர், கூர்ம்படை மழவர் என்று அவர்களின் தொழிலோடும், பண்போடும் இணைத்து அழைக்கப்பட்டனர்.

மழவர்கள் போல வேடர்களும் எயினர்களும் ஆயர்களிடமிருந்து ஆநிரைகளைக் கவர்ந்தனர். வணிகப் பொருள்களைக் கொள்ளையடித்தனர். இதனால் “கொடுவில் ஆடவர்” என்றும் குறிக்கப்பெற்றனர். வணிகர்கள் வழிப்பறிக் கள்வர்களிடமிருந்து தங்களையும், தங்கள் பொருட்களையும் பாதுகாக்கப்பதற்காக வீரர்களுடன் சென்றனர் என்பதைப் பாடல்கள்வழி அறியமுடிகிறது.

**முடிபாக**

பாலைத்திணைப் பாடல்களில் திணைக்கலப்பும் உள்ளதெனத் தொல்காப்பியம் வரையறுத்துள்ள இலக்கண வரையறைகளின்படி அறியமுடிகிறது. வேனிற்காலத்தின் வெம்மையும், பின்பனிக் காலத்தின் இளவேனிலும் பாலைத்திணையின் இயல்புகளாக இருந்தபோதிலும் அந்நிலத்தின் உயிரினங்கள் அதற்கேற்றாற் போல தம்மைத் தகவமைத்துக் கொள்கின்றனர். மக்களும் நிலத்தின் இயல்பிற்கேற்ப தம் தொழிலை மாற்றிக் கொள்கின்றனர். அவர்களின் உணர்வுகளும் காலத்திற்கேற்ப மாற்றம் பெற்றுள்ளதைப் பாடல்களின்வழி அறியலாகிறது.

**அடிக்கருத்துகள்**

1. ச.வே.சுப்பிரமணியன் (உ.ஆ.), தொல். பொருள்., நூற். 947. 948.
2. ச.வே.சுப்பிரமணியன் (உ.ஆ.), தொல். பொருள்., நூற். 947.
3. தொல். பொருள்., நூற். 948.
4. மேலது, நூற். 951.
5. மேலது, நூற். 1002.
6. ந.மு.வேங்கடசாமி நாட்டார் (உ.ஆ.), சிலப்பதிகாரம், காடுகாண். 62-66.
7. ச.வே.சுப்பிரமணியன் (உ.ஆ.), தொல். பொருள்., நூற். 955. 956.
8. மு.அருணாச்சலம், தொல்காப்பியம் அகத்திணையியல் உரைவளம், பக். 112, 113. 3.
9. மு.அருணாச்சலம், தொல்காப்பியம் அகத்திணையியல் உரைவளம், பக். 124, 130, 124.
10. ச.வே.சுப்பிரமணியன் (உ.ஆ.), தொல். பொருள்., நூற். 957.
11. மு.அருணாச்சலம், மு. நூ., பக். 130, 133.
12. ச.வே.சுப்பிரமணியன் (உ.ஆ.), தொல். பொருள்., நூற். 955.
13. சோமசுந்தர பாரதியார், தொல். பொருட்படலப் புத்துரை, ப. 25.
14. நற். 17.

Vol. 9 Special Issue 1 October 2024 E-ISSN: 2456-5571

# கண்ணன் சிறுவர் இதழில் இடம்பெற்ற சிறுகதைகள் காட்டும் வாழ்வியல் நெறிகள்

**முனைவர் இரா. ஜீவா**
*தமிழ்த்துறை, உதவிப் பேராசிரியர்*
*வி.இ.நா.செ.நாடார் கல்லூரி (தன்னாட்சி), விருதுநகர்*

**இலக்கியமும் சமுதாயமும்**

இலக்கியம் என்பது காலக்கண்ணாடியாகும். சமுதாய நிகழ்ச்சிகள் எழுத்தோவியங்களாகத் தீட்டப்பெரும் பொழுது அவை இலக்கிய வடிவம் பெறுகின்றன. அக்கால சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. ஒவ்வொரு காலகட்டத்திலும் சமுதாயத் தாக்கம் இடம் பெறாத இலக்கியமே இல்லை எனலாம். சில இலக்கியங்களில் கவிஞனையும் அறியாமல் சமுதயாச் சிக்கல்கள் இடம் பெற்று விடுகின்றன. சமுதாயச் சிக்கல்களை விளக்குவதற்காகவே சில இலக்கியங்கள் இயற்றப் பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் கண்ணன் சிறுகதைகள் வாழ்வியல் நெறிகளை வெளிப்படுத்தும் விதமாக அமைந்திருக்கின்றன.

**கண்ணன் படைப்புகளில் சமுதாயப் பார்வை**

இதழ்கள் சிறுவர்களுக்கு அறிவூட்டுகின்றன, அறிவுறுத்துகின்றன, களிப்பூட்டுகின்றன. மனித வாழ்வில் பத்திரிகைகளின் பங்கு இன்றியமையாததாக விளங்குகின்றன. சிறுவர்களின் **"மனக் குரங்கு நல்லவற்றை விடதீயவற்றையே விரைந்து பற்றிக் கொள்ளும் பண்பு மிக்கது. ஆசிரியர்கள் கூடஎப்படி எழுத வேண்டும் என்று எழுதிக் காட்டலாமே தவிர,எப்படி எழுதக்கூடாது என்று எழுதிக் காட்டக்கூடாது**"[1] சிறுவர்களுக்குச் சொல்ல வேண்டியகருத்தை தீர ஆராய்ந்து நல்லமுறையில் நாம் கூற வேண்டும். தொலைக் கட்சிகளும் பல குழந்தைகளின் வாழ்வைச் சீரகுலைக்கும் வண்ணம் செயல்படுகின்றன." மருத்துவப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த குழந்தைகள்நல மருத்துவர் கூறுகையில் பொதுவாகக் காட்டப்படும் நிகழ்சிகளில் எது உண்மையானது: எது உண்மை இல்லாதது என்பது குறித்துக் குழந்தைகளால் புரிந்து கொள்ளமுடியாது. எனவே இரவு நேரங்களில் வன்முறையைத் துண்டும் தொலைகாட்சி நிகழ்ச்சிகளைக் குழந்தைகளுடன் சேர்ந்து பெற்றோர் பார்ப்பதைத் தவிர்ப்பது நல்லது ஏனென்றால் அந்த வன்முறைச் சம்பவங்கள் குழந்தைகள் மனத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

சிறுவர்கள் மனத்தில் நட்பு தன்னம்பிக்கை இல்லாமல் போய்விடும்.இரக்கமற்ற தன்மையும் ஏற்படும்.சிறுவர்களின் இன்றையத் தேவையை நிறைவேற்றும் வண்ணம் கண்ணன் சிறுவரிதழில் சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், வெளியிட்டுள்ளனர். ஆசிரியருக்குக் கடிதம் எழுதும் உத்தியயைச் சிறுகதையாக கண்ணன் இதழ்வெளிப்படுத்தி உள்ளது. அத்துடன் கதையின் கருவைப் படமாக வரைந்து காட்டியுள்ளனர். சிறுகதையைப் படிக்கின்ற காரணத்தால் புத்தகங்களை வாசிக்கும் திறனும் மற்றும் விட்டுக் கொடுக்கும் பண்பும் ஏற்படுகிறது. சிறுவருடைய முன்னேற்றத்தை மனத்தில் கொண்டு கண்ணன் படைப்புகள் வெளியாகியுள்ளன. அப்படைப்புகளை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது. அவை

1. விடாமுயற்சி
2. சூழ்நிலைக்கு ஏற்ப செயல்படல்
3. மனிதநேயம்
4. நாட்டுப்பற்று
5. ஒற்றுமையுணர்வு

போன்ற வாழ்வியல் நெறிகளை கடைபிடித்து வாழவேண்டும் என்பதை கண்ணன் கதைகள் வழியுறுத்துகின்றன.

**விடா முயற்சி**

தனிமனிதன் எதாவது ஒருதுறையில் சாதனை புரிய பல முயற்சிகளை மேற்கொள்கிறான். விடாமுயற்சியின் காரணமாக வெற்றி காண்கிறான். முயற்சி உடையவர்கள் வாழ்வில் என்றும் இகழ்ச்சி அடையமட்டார்கள். ஓரறிவு முதல் ஆராரிவு உடைய உயிரினங்கள் வரை தங்களுடைய உணவினைத் தேடி அலைவதே முயற்சியாகும். காந்தியடிகள் முயற்சியுடன் போராடிய காரணத்தால்தான் நாம் இன்று சுதந்திரக்காற்றை சுவாசிக்க முடிந்தது. விடாமுயற்சியை உணர்த்தும் விதமாக, நல்லவேலை என்னும் சிறுகதை படைக்கபட்டுள்ளன.

### நல்ல வேலை

"நல்லவேலை" என்ற சிறுகதையில் ஒரு குடும்பத்தில் அண்ணன், அண்ணி இவர்களுக்கு இரண்டு வயதுக் குழந்தை மற்றும் ராமு உள்ளனர். ராமுவிற்கு அம்மா, அப்பா இல்லை என்பதால் அண்ணன் தான் ராமுவைக் கவனித்து வருகிறார். அண்ணி எப்பொழுதும் இவனை எதாவது குறை சொல்லிக் கொண்டே இருப்பாள். பின்பு அண்ணன் அண்ணி இருவரும் இவனை எதாவது தர்மப்பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிட எண்ணினார்கள். அப்போது ராமுவின் ஊரில் இருந்து ஒரு சர்க்கஸ் குழு வந்திருந்தது. ஒரு நாள் காலையில் அண்ணனுடன் ஒருவர் வந்தார். அண்ணன் இவர்தான் உன் மாமா ஆவர். இவர் பல வருடங்களாக வெளிநாட்டிலே இருந்தார். இப்போதுதான் அங்கிருந்து ஊருக்கு வந்துள்ளார். நீ அவருடன் செல் என்று அனுப்பி வைத்தார் அண்ணன். பின்பு மகிழ்வுந்து சிலதூரம் சென்றபின்பு தான் அவர் சர்க்கஸ் நிறுவன மேலாளர் என்பது தெரிந்து. அவர் என்னை இப்படிக் குனியச் சொல்வார். அப்படி நிமிரச் சொல்வார். வில்லாக வலையச் சொல்வார். அவர் சொன்னபடியெல்லாம் என் உடம்பு கேட்க வில்லையென்றால் சாட்டையால் விளாசிவிடுவார். இவ்வாறு ராமு பல துன்பங்களை அனுபவித்தான். ஒரு நாள் இரவில் சர்க்கஸில் இருந்து ராமு தப்பிவிட்டான்.

அப்போது வேட்டைகார வீரமுத்துதேவரைச் சந்தித்தான். அவரை என் துன்பங்களுக்கு முடிவு கட்டவே தெய்வம் அவரை அனுப்பியிருந்தது என எண்ணினான். அவர் என்னைத் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். பின்பு நான்கு நாள் வீட்டில் வைத்திருந்தார்." ஒரு தர்மப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்தார். நான் படிப்படியாகப் படித்து முன்னேறி. ஒரு நிறுவனத்தில் வேலைக்கு அமர்ந்தேன்.அவர் செய்த உதவியை நான் மறக்கவே இல்லை"[2]. ராமுவின் விடாமுயற்சி குறித்து "நல்ல வேலை" என்னும் இச்சிருகதை அமைந்துள்ளது. அவன் முன்பே மனது உடைந்திருந்தால் இன்று நன்கு படித்து ஒரு வேலைக்குச் சென்றிருக்கமுடியுமா? என்ற செய்தி மற்ற சிருவர்களுக்குப் புலபடுதப்படுள்ளது. இறுதியில் அவனது அண்ணனும் அவனைத் தேடிவந்து சேர்ந்து கொள்கிறார்.

### சூழ்நிலைக்கு ஏற்பச் செயல்படல்

எந்த மனிதனும் சூழ்நிலைக்கு ஏற்ப புரிந்து செயல்பட வேண்டியது இன்றியமையாதது. சூழ்நிலைக்கு ஏற்ப புத்திக் கூர்மையுடன் செயல்பட்டால் வாழ்வில் வெற்றிபெறலாம்.

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தார் செயின்"[3]

என்கிறார் வள்ளுவர். செய்தற்குறிய சூழ்நிலையை ஆராய்ந்து ஒருவன் ஒரு செயலைச் செய்தால் அதுவே அவன் வாழ்வில் மிகப்பெரிய வெற்றி அடையும் நிலையைப் பெறலாம்.

இத்தன்மையை உணர்த்தும் விதமாக

### அரசனும் வேலைக்காரனும்

அரசனும் வேலைக்காரனும் என்ற சிறுகதையில் அரசன் ராம் சிங் அந்த நகரில் வசித்து வந்த ஒரு வாலிபன் கோபாலன். கோபாலன் உடைய தந்தை அந்த ஊரில் ஒரு பெயர் பெற்ற நீதிபதி ஆவார் அவர் நேர்மையாக நடந்து கொள்வார் அவரும் அரசனும் நண்பர்கள் அரசன் எந்த ஒரு செயலும் கோபால் தந்தையிடம் கேட்காமல் செய்ய மாட்டார் சில நாட்கள் கழித்து கோபாலனின் தந்தை இறந்து விட்டார். பின் குடும்ப பொறுப்பு கோபாலனின் தாய் மேல் விழுகிறது. கோபாலையும் தன்னால் முடிந்தவரை பார்த்துக்கொண்டால் பின்பு அவளால் செலவு செய்ய முடியவில்லை. வறுமை நிலையை அடைந்தனர் அப்போதான் அவன் தாய் நீ சென்று மண்ணை பார்த்து ஏதாவது பொருள் உதவி கேளென்றால் அவனும் நான் சாதாரண நிலையில் உள்ளவன் நான் எப்படி போய் பார்ப்பது என்றான் பின்பு வேறு வழியில்லாமல் பார்க்க சென்றான்.

மன்னர் நீதிபதியின் மகன் என்று தெரிந்து மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றார் அரசனுக்கு கிடைத்த மரியாதை அனைத்து அவனுக்கும் கிடைத்தது மன்னனை ஆச்சரியத்துடன் பார்த்த நான் எனக்கு இவ்வளவு மதிப்பு கொடுத்தது மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது என்றான் பின்பு கோபால் உனக்கு நீச்சல் தெரியுமா என்றார் மன்னர். ஓரளவு தெரியும் என்றார் சரி வா அரண்மனை நந்தவனத்தில் உள்ள குலத்திற்கு செல்லலாம் என்றார். நீ இதில் இறங்கு என்றார். அப்போது அங்கிருந்து முக்கியமான அரசருடைய சேவைகள் பாலசிங்குக்கு ஆச்சர்யத்தை விளைவித்தது இது என்ன அரசர் வேண்டாத விரோதி இல்லை அல்லவா? இந்த குளத்தில் இறங்கச் செய்வார் என்று அவன் உதடுகள் முனுமுனுத்தன. ஆனால் நெருங்கிய நண்பன் மகனை ஏன் இவ்வாறு இறங்கச் செய்கிறார் என்று நினைத்தான். அவன் இறங்கி சிறிது தூரம் சென்ற பிறகு அரசை என்னை காப்பாற்றுங்கள். என்னை முதலை துரத்துகிறது என்றான். கோபால் அதற்கு அரசன் தம்பி நீ கரையை விட்டு மேலே வராதே.

வந்தால் கத்தியால் குத்துவேன் என்றார். அப்போது அவன், தான் என்ன தவறு செய்தேன்? என்றான். நீ தவறு செய்யவில்லை. உன் தந்தை நீதிபதியாக இருக்கும்போது என்னுடைய சகோதரன் ராணாசிங்கக்கு தூக்கு தண்டனை விதித்தார். அதனால் தான் நான் உன்னை இவ்வாறு செய்கிறேன் என்றார். அரசர் அப்போது பாலசிங் சூழ்நிலைக்கு ஏற்ப செயல்பட்டான். அரசனை குளத்திற்குள் தள்ளிவிட்டான். நீங்கள் கரையேறினால் என் வாழ்க்கை இறையாவீர்கள் ஏனென்றால் உங்கள் சகோதரன் என் தந்தையை அடித்துக் கொன்று விட்டார் என்றார். அதற்காக பரிந்து பேசும் உங்களையும் இப்பொழுது முதலைக்கு ஆகாரமாக கொடுத்து பலிக்குப்பலி வாங்குவேன் என்றான் கோபத்துடன். **பாலாசிங் சொன்ன வார்த்தைகளால் அரசனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. தன் தவற்றை உணர்ந்து கோபாலனிடமும் பாலாசிங்கிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.**[4]இவ்வாறு சூழ்நிலைக்கேற்ப பாலாசிங் செயல்பட்டதால் கோபாலன் உயிர் காப்பாற்றப்பட்டான். அரசனின் தவறு உணர்த்தப்பட்டது. அரசனாக இருந்தாலும் தன் தவறை உணர்ந்து செயல்படவேண்டும். யாராக இருந்தாலும் தவறு செய்தால் அதை திருத்தி நல்ல முறையில் நடக்க வேண்டும் என்பதை இக்கதை உணர்த்துகிறது.

**மனிதநேயம்**

சமூகத்தில் கொலை, கொள்ளை, பொய் பேசுதல், ஏமாற்றுதல் ஆகியவை நடப்பதற்கு காரணம் மனிதநேயம் இல்லாமல் போனதே ஆகும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழும் பழக்கம் இல்லை. போட்டி போட்டுக்கொண்டு ஒருவரை ஒருவர் கடுமையாக தாக்கிக் கொள்கின்றனர். சில நேரங்களில் அது கொலையில் முடிகின்றது விலங்குகளையும் தாவரங்களையும் விட மனிதர்களை உயர்வாக நினைக்கிறோம். மனிதர்களிலே கூட மனிதர்களாக இல்லாத மனிதர்கள் உள்ளனர் பிறரை கெடுத்து வாழக்கூடாது ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து வாழ கற்றுக்கொள்ள வேண்டும் அப்பொழுதுதான் நம் சமூகம் வெற்றி பெறும் என்பதை விளக்கும் வகையில் மனிதநேயத்தின் அவசியத்தை கண்ணன் படைப்புகள் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**விட்டுக்கொடுத்து வாழ்தல்**

ராமலிங்கத்தின் சண்டை தீர்ந்தது என்ற சிறுகதையில் சின்ன கண்ணன் சொன்னபடி என் அப்பா பெரிய அதிகாரி அவ்வாறு என் அம்மா மகளிர் குழுவின் கௌரவ காரிய தரிசி ஆவார் ரொம்ப பிடிவாதம் பிடித்தவர் இவர்கள் இருவருக்கும் இடையில் அகப்பட்டு கொண்டு நான் திந்தாடினேன். அப்பாவின் பக்கம் பேசினால் அம்மா என்னை பார்த்து முறைப்பால் அம்மா பக்கம் பேசினா அப்பா என்னை அடிப்பார் அம்மாவை பெண்கள் குழுவிற்கு போக வேண்டாம் என்பார். ஆனால் அம்மாவோ நான் அப்படித்தான் போவேன் என்பார் உடனே அப்பா பாதி சாப்பாட்டில் எழுந்து போய்விடுவார் என்னம்மா அழுகிறாய் என்றால் எனக்கு முதுகில் இரண்டு விழும். சாயங்காலம் அப்பா வருவார் அம்மா அடித்ததை கூறுவேன். என் பிள்ளையை நீ ஏன் அடிக்கிறாய் என்பார். அவன் எனக்கும் தான் பிள்ளை என்பாள். ஒவ்வொரு நாளும் இவ்வாறு போய்க் கொண்டிருந்தது ஒருநாள் அம்மா தன்னை அலங்காரம் செய்து கொண்டிருக்கையில் அவளை தொந்தரவு செய்யக்கூடாது என்பது தெரியும் அப்படி செய்தால் எந்த அளவு கோபம் வரும் என்று தெரியும் அப்படி இருக்கையில் அப்பா அம்மாவை கூப்பிட்டார் என் அலுவலகம் தொடர்பான ஒரு கடிதம் இருந்தது பார்த்தாயா என்று கேட்பதற்காக அழைத்தார் அதற்கு அம்மா ஏன் இப்படி வீடு அதிரும்படிஇறகிறீர்கள் என்றால் உடனே அவருக்கு கோபம் வந்த அம்மாவை கன்னத்தில் ஒருவரை விட்டார். அப்பா முன்கோபகாரர் தான் அதனால் அம்மா உடனே கோபித்துக் கொண்டு தாத்தா வீட்டிற்கு சென்று விட்டார் எனக்கு அப்பாவின் மேல் கோபம் வந்தது அப்பாஅடித்ததால் தானே அம்மா வீட்டை விட்டு போய்விட்டார் அம்மா இல்லாத வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை நான் என் தாத்தா வீட்டிற்கு செல்ல முற்பட்டேன் அங்கு சென்றவுடன் அம்மா ஓடிவந்து என்னை வாரி எடுத்துக் கொண்டு முத்தம் மாரி பொழிந்தாள்

வேலைக்கார பெண்ணிடம் கூறிக்கொண்டு இருவரும் வீட்டிற்கு வந்தார்கள் வருகின்ற வழியில் தன் தந்தை ஒரு காகிதத்துடன் வந்து கொண்டிருந்தாள் என்னையும் அம்மாவையும் பார்த்தவுடன் அடப் பயலே எனக்கு முன்பாக வந்து விட்டேன் என்றார் பிறகு அம்மாவை பார்த்து சட்டை பையில் இருந்த காகிதத்தை பார்க்காமல் வண்ணானுக்கு போய்விட்டேன் என்றார் அவன் இப்போதுதான் கொண்டு வந்து கொடுத்தான் என்றார் அதற்கு அம்மா ஏன் நீங்கள் கவனித்து துணியை போடக்கூடாதா என்றால் பின்பு நீ எதற்காக இருக்கிறாய் என்று கிண்டலாக கேட்டார்

அப்பா மறுபடியும் சண்டை போடாதீர்கள் அம்மா தாத்தா வீட்டிற்கு சென்று விடுவாள் என்னை யார் கவனிப்பார்கள் என்று பரிதாபமாக கூறினான் இல்லை டா கண்ணை இனிமேல் அப்பாவுடன் சண்டை போட மாட்டேன் என்றவாறு என்னை தூக்கிக்கொண்டு அப்பாவின் அருகில் சென்றால் அம்மா இன்றிலிருந்து மகளிர் குழு உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து விடுகிறேன் என்று அப்பாவிடம் அம்மா கூறினாள் இவ்வாறு தாய் தந்தை குடும்பத்தில் விட்டுக் கொடுத்து வாழ்ந்தால் குடும்பம் மகிழ்ச்சியாய் இருக்கும். சிறுவர்கள் தன் பெற்றோரை பார்த்து நல்ல பண்புகளை கற்றுக் கொள்வார்கள் என்பதை இச்சிறுகதை உணர்த்துகிறது.

**நாட்டுப்பற்று**

நாட்டுப்பற்று என்ற உணர்வு சிறுவர்கள் மனதில் சிறு வயதில் இருந்தே பதிய வேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்று கூற்றிற்கு இணங்க நாட்டுப்பற்று என்பது சிறுவயதிலிருந்தே ரத்தத்தில் திளைத்ததாக இருக்க வேண்டும். அவ்வகையில்

**சுதந்திர தாகம்**

சுதந்திர தாகம் என்னும் சிறுகதையில் சுரேன் என்னும் இளைஞர் நாட்டுப்பற்று உடையவனாக இருக்கிறான். சத்தியன் என்னும் இளைஞன் பகைவருக்கு உதவி செய்யக்கூடிய உளவாளியாக இருக்கிறான். அது கண்டுபிடிக்கப்பட்ட ஒரு முகாமிலிருந்து இன்னொரு முகாமிற்குச் செல்லும் போது அவன் தப்பி விடுகிறான். அவனுடைய தலைக்கு அரசு விலை ஏற்படுத்துகின்றது. இந்நிலையில் சுரேன் இந்த சத்தியம் பற்றிய செய்தியை அறிந்து போலீசுக்கு தகவல் கொடுக்கிறான். போலீஸ் சத்தியனை பிடிக்க வருகின்றது. அப்போது சத்தியன் இங்குள்ள ஒவ்வொருவரையும் கொன்றுவிட்டு நான் தப்பிவிட முடியும் என்றான். அதற்கு சுரேன் அது உன்னால் முடியாது உன் கைதுப்பாக்கியில் ஒரு தோட்டா தான் இருக்கிறது. மீதி ஐந்தும் மாலையே தீர்ந்து விட்டது என்றான். பின்பு சத்தியன் சுரேனின் முகப்பொலிவைப் பார்த்தான். என்னால் உன்னை சுட முடியாது உன் போன்ற வீர இளைஞர்கள் இருக்கும் நாட்டில் நான் ஒரு துரோகியாவதற்கு வெட்கப்படுகிறேன் என்று சத்தியனின் விழிகளில் நீர் நிறைந்தது. அவன் கைதுப்பாக்கி நழுவி கீழே விழுந்தது. ‘வெரிகுட் சுரேன்!’ **இன்ஸ்பெக்டர் சுரேனை தட்டிக் கொடுத்தார். உன் போன்ற சுதந்திர தாகம் உள்ள இளைஞர்கள் இருக்கும் வரை நம் நாட்டை எந்த அன்னியனும் வெற்றி கொள்ள முடியாது. உன் படிப்பு முடிந்ததும் உன்னை ராணுவத்தில் சேர்க்க நானே சிபாரிசு செய்வேன் என்று பாராட்டினார். சுரேனின் விழிகள் நன்றி பெருக்கினால் கசிந்தன.**[5] இவ்வாறு இளைஞர்கள் நாட்டுப்பற்று உடையவராக இருந்தால் நம் நாடு என்றும் எந்த துன்பத்திற்கும் உட்படாது என்பதை வெளிக்காட்டுகிறது இச்சிறுகதை. ஒவ்வொரு இளைஞரும் தன் சிறுவயதில் இருந்தே நாட்டுப்பற்று என்பதை தன் ரத்தத்தில் ஊரிய ஒன்றாக வைத்திருக்க வேண்டும் அப்போதுதான் நாட்டுக்காக நாம் ஏதாவது செய்ய வேண்டுமென்ற எண்ணத்தை நாம் நிறைவேற்ற முடியும். பெரியோர்கள் அனைவரும் இளைஞர்களால் மட்டும்தான் நாட்டை வளப்படுத்த முடியும் என்ற கருத்தை கூறுகிறார்கள். அவர்கள் கனவை நாம் நினைவாக்க வேண்டும் அதற்கு நாட்டு பற்று எண்ணம் மிகவும் இன்றியமையாதது என்பதை உணரலாம்.

**ஒற்றுமை உணர்வு**

ஒற்றுமையுணர்வே உலகில் வாழும் எவ்வுயிரும் நிம்மதியோடு வாழ வழிவகுக்கிறது. தான் நினைக்கின்ற செயலை செய்ய ஒற்றுமையுடன் இருந்தால் தான் சாதிக்க முடியும். இத்தன்மையை உறுதிப்படுத்துவதாக “நாயும் கிளியும்” என்ற சிறுகதை அமைந்திருக்கிறது.

**நாயும் கிளியும்**

ஒரு பெரிய பணக்காரர் வீட்டில் ஒரு நாயும் கிளியும் இருந்தன. அதில் நாய்க்கு இந்த வீட்டை நாம்தான் காவல் காத்து காப்பாற்றி வருகிறோம் என்று கர்வம் இருந்தது. ஆனால் கிளியோ இதில் சற்று மனவருத்தம் கொண்டிருந்தது. ஒரு நாள் திருடன் வந்தான். வரும்போது லொள் லொள என்று குரைத்தது. இந்த சத்தம் கேட்டு திருடன் தப்பித்து ஓடிவிட்டான். வீட்டில் இருப்பவரும் திருடன் வரும்போது நாய் குறைத்திருக்கிறது என்று நினைத்து விட்டனர். பின்பு மற்றொரு நாள் திருடன் வரும்போது நாய் குறைக்கும் போது நாயை கிளி நீ குறைக்காதே என்றது. வீட்டில் அனைவரும் தூங்குவதால் எல்லா பொருளையும் திருடன் ஒருநாள் சுருட்டி கொண்டான். அப்போது திருடன் திருடன் என்று கிழி கத்தியது. வீட்டில் இருந்த அனைவரும் எழுந்து திருடனை பிடித்து விட்டனர். அனைவரும் கிளியை பாராட்டினர். பின்பு நாய்

கிளியிடம் நான் செய்த காரியத்தை நீயும் செய்தாய். ஆனால் உன்னை அனைவரும் பாராட்டுகின்றனர் என்றது. நீ திருடன் வரும்போது குறைப்பாய் உடனே அவன் தப்பித்து விடுவான். நான் பொருள் எல்லாம் எடுத்த பின்பு வீட்டிற்குள் அவன் இருந்ததால் தான் கத்திய பின்பு அவனால் தப்பிக்க முடியவில்லை. இனிமேல் நம்ம ஊர் திருடன் பயத்தால் இருக்க வேண்டியது இல்லை என்றது கிளி. பின்பு நாம் இருவரும் ஒற்றுமையுடனிருந்து நம் முதலாளிக்கு நன்மை செய்வோம் என்றது. இருவரும் நட்பாக அந்த வீட்டில் வளர்ந்தன. இதன் மூலம் சிறுவர்களும் நீ பெரியவன் தான் பெரியவன் என்ற எண்ணம் இல்லாமல் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் என்ற கருத்தை இச்சிறுகதை மூலம் உணர்த்தப்படுகிறது.

### தொகுப்புரை

சமூகம் பற்றியும் சமூகத்தில் சிறுவர்களின் முக்கிய பண்பையும் இலக்கியமும் சமுதாயமும் எப்படி தொடர்புடையனவாக இருக்கின்றன என்பதை இவ்வாய்வின் மூலம் அறிய முடிகிறது. கண்ணன் இதழ் படைப்புகளில் சிறுவர்களின் மேல் உள்ள அக்கறையால் அவர்களின் பண்பு நலனுக்காக படைப்புகள் வெளியாகியுள்ளன. பாரத பெருமைகளை பேணிப் பாதுகாப்பதும் அதன் மரபுப்படி வாழ்க்கையை கொண்டு செல்வதும் ஒவ்வொரு மனிதனின் கடமை என்பது இவ்வியல் ஆய்வில் வழியுறுத்தப்படுகிறது. செய்யும் வேலையில் முழு முயற்சியுடன் பணியாற்றினால் எந்த செயலிலும் வெற்றி அடையலாம் என்பதை பல சிறுகதைகள் கண்ணன் இதழில் உள்ளதை காட்டுகின்றன

### அடிக்குறிப்புகள்

1. பூ. வண்ணன். குழந்தை இலக்கிய வரலாறு, ப.270.
2. கா.நீ.ஶ்ரீ. நல்லவேளை, கண்ணன் கதைகள், தொகுதி 10,ப.25.
3. குறள் 484.
4. ராஜி, அரசனும் வேலைக்காரனும், கண்ணன் கதைகள், தொகுதி.13
5. கிறிஸ்டி, சுதந்திரதாகம், கண்ணன் கதைகள், தொகுதி-4.ப.38

# மாத்தளை சோமுவின் சிறுகதைகளில் ஆஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர் வாழ்வியல்

**முனைவர் உ. கருப்பத்தேவன்**
*தலைவர் (பொ.), இலக்கியத் திறனாய்வியல்துறை*
*தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை*

**முன்னுரை**

மாத்தளை சோமு, இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சென்று ஆஸ்திரேலியாவின் சிட்டினியில் வாழும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழ்ப் படைப்பாளி ஆவார். மாத்தளை சோமு படைப்புகள் அறிமுகம், பிளன் அண்ட் வைட், அத்தனை பேரும், வெள்ளைக்காரர்கள், கறுப்பு அன்னங்கள், முகம், அன்னையும் பிதாவும், சொந்த சோதரர்கள் முதலான சிறுகதைகளில் காணலாகும் புலம்பெயர் ஈழத்தமிழர்களின் ஆஸ்திரேலிய அவலவாழ்க்கை, நிறவாதச் சிக்கல்கள், நிறவெறிக் கொடுமை, வெள்ளையர் – தமிழின மாணவர்கள் மோதல், பெர்த் மாநிலத்தில் ஈழத்தமிழர் வாழ்க்கை, ஆஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்தோர்க்கு வேலைவாய்ப்பு, ஆஸ்திரேலிய வாழ்க்கைப் புனைவுகள் முதலியனவற்றைப் பதிவு செய்துள்ளனவற்றையும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களின் ஆஸ்திரேலிய வாழ்க்கைச் சூழலையும் விளக்கவியல், சமுதாயவியல் இலக்கியத் திறனாய்வு முறைகளில் ஆராய்ந்து வெளிப்படுத்துவதே இவ்ஆய்வுக் கட்டுரையின் மையப்பொருளாகும்.

**மாத்தளை சோமு படைப்புக்கள் – அறிமுகம்**

மாத்தளை சோமுவின் இயற்பெயர் மு.சோமசுந்தரம் என்பதாகும். இவர் இலங்கையின் மலையகப் பகுதியான மாத்தளை என்னும் ஊரில் பிறந்து தற்போது ஆஸ்திரேலியாவின் சிட்டினியில் வாழும் புலம்பெயர் இலங்கைப் படைப்பாளி ஆவார். 1967இல் சிறுதுணுக்குகள், கவிதைகளை எழுதி இலங்கைப் பத்திரிகைகளில் வெளியிட்டு பின்னர் சிறுகதைப் படைப்பாளி ஆனார். இலங்கையின் வீரகேசரி, தினகரன் தமிழ்நாட்டின் கலைமகள், கல்கி, குங்குமம், இந்தியா டுடே (தமிழ்ப்பதிப்பு) ஆகிய இதழ்களில் இவரது சிறுகதைகள் வந்துள்ளன.

தோட்டக்காட்டினிலே (1980), நமக்கென்றொரு பூமி (1984), அவன் ஒருவனல்ல (1989), அவர்களின் தேகம் (1995), கறுப்பு அன்னங்கள் (1998), மாத்தளை சோமுவின் சிறுகதைகள் தொகுதிகள் I, II (2003), ஒற்றைத்தோடு (2023) ஆகியவை மாத்தளைச் சோமுவின் சிறுகதைத் தொகுப்பு நூல்களாகும். அந்த உலகத்தில் இந்த மனிதர்கள் (1994), எல்லை தாண்டா அகதிகள் (1994), அவள் வாழத்தான் போகிறாள் (1996), மூலஸ்தானம் (1998), கண்டிச்சீமை (2017), ஐயனார் ஆடு (2021) ஆகியன இவரது நாவல் படைப்புக்களாகும். ஆயுதங்கள், ஒரு தோட்டத்து நாதஸ்வரம் (1998) ஆகியன இவரது குறுநாவல் படைப்புக்கள் ஆகும். இலங்கை நாட்டுத் தெனாலிராமன் கதைகள், சீனக்கோமாளியின் கதைகள் ஆகிய குட்டிக் கதைகளையும், மாத்தளை முதல் மலேசியா வரை, லண்டன் முதல் கனடா வரை, சிட்னி முதல் நோர்வே வரை, பாலி முதல் மியான்மர் (பர்மா) வரை ஆகியன மாத்தளை சோமுவின் பயணக்கதைப் படைப்புக்களாகும். எண்ணற்ற தமிழிலக்கிய ஆய்வுக் கட்டுரைகளையும், கம்போடியத் தொன்மக் கதைகள், கம்போடிய இராமாயணம் ஆகிய நூல்களையும் மாத்தளை சோமு தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். இவரது படைப்புக்களைத் திருச்சி தமிழ்க்குரல் பதிப்பகம் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றது.

**புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவில் வாழும் தமிழர் வாழ்க்கை அவலங்கள்**

வரலாற்றுப் பூர்வீகத்தைக் கொண்ட தம் சொந்த நாட்டின் பண்பாட்டு வாழ்க்கைப் பின்புலத்தை விடுத்து மற்றொரு அயல்நாட்டிற்குப் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள், அந்நிய நாடுகளில் தம் சொந்த வாழ்க்கை இருப்பினைத் தக்கவைத்துக் கொள்ளவும், அங்கு தம் பண்பாட்டை நிலை நிறுத்தவும், அடுத்த தலைமுறையினருக்குத் தம் தாய்மொழியாகிய தமிழைக் கொண்டு செய்யவும் பல்வேறு அக, புறப் போராட்டங்களை எதிர்கொள்கின்றனர். எனவே தான் புலம்பெயர்ந்தோர் படைக்கும் இலக்கியங்களில் தமிழ்மொழி அடையாளம், தமிழ்ப்பண்பாட்டு அடையாளங்கள், அவற்றை அடுத்த தலைமுறையினர் பாதுகாக்க வேண்டிய தேவைகள் வலியுறுத்திப் பேசப்படுகின்றன. இத்துடன் ஆஸ்திரேலியாவில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்கள், அந்நாட்டு மக்களின் நிறவெறித் தாக்குதல்களாலும் பாதிக்கப்படுகின்றனர். நிறவெறியும் அதனைக் கடந்த தேசியமும் உள்ள

ஆஸ்திரேலிய சூழலில் புலம்பெயர் தமிழர்கள் நிறவெறித் தாக்குதல்களால் உளவியல் ரீதியாக மனச்சோர்வும் அடைகின்றனர். நிறவெறி வெள்ளைத்தோல் கறுப்பு நிறம் என பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களிடமும் பல்வேறு இனரீதியான மோதல்களைத் தோற்றுவிக்கின்றன' வெள்ளை நிறத்தைப் பகடி செய்யும் கறுப்பின மாணவர்களும் உள்ளனர்.

**நிறவாதச் சிக்கல்கள்**

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளின் சாதி, மத, இன, மொழிச் சிக்கல்களைப் போல ஐரோப்பிய நாடுகளில் நிறவாதச் சிக்கல்கள் உள்ளன. ஆஸ்திரேலிய நாட்டு வெள்ளையர்கள், தம் நாட்டில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர் உள்ளிட்ட பிற நாடுகளின் கறுப்பின மக்களை 'மற்றவர்களாக'ப் பார்த்து **(Others)** ஒதுக்குகின்றனர். இதில் விதிவிலக்கான ஐரோப்பிய மக்களும் உள்ளனர்' நிறவேற்றுமையால் அங்கு கறுப்பினத் தமிழர்கள் கொல்லப்படுவதும் நடக்கின்றது. வெள்ளை நிற மக்களின் அழகியலுக்கு மாற்றாகக் கறுப்பின மக்களின் அழகியலை அலெக்ஸ் ஹேலி என்னும் நாவலாசிரியர் தம் 'வேர்கள்' **(Roots)** என்னும் நாவலில் அழுத்தமாக வெளிப்படுத்தி உள்ளார்.

மாத்தளை சோமுவின் 'பிளக் அண்ட் வைட்' என்னும் சிறுகதை அவற்றுள் ஒன்றாகும். இச்சிறுகதையில் ஆஸ்திரேலியாவில் உலோகங்களில் பிரிண்டிங் வேலை செய்யும் கம்பெனி ஒன்றில் தமிழ் இளைஞன் ஒருவன் வேலை செய்கின்றான். அவன் தன்னுடன் வேலை செய்யும் வெள்ளைக்கார இளைஞன் ஒருவனுக்கு ''வணக்கம்'' சொல்கின்றான். அவன் பதில் வணக்கம் கூறாமல் தமிழ் இளைஞனை முறைப்பது போல பார்த்துச் செல்கின்றான். மற்றொரு நாள் தமிழ் இளைஞன் அவனுடன் பேசுகின்றான். வெள்ளை இளைஞன் பேசவில்லை. இதனால் தமிழ் இளைஞன் கறுப்பர்களை அவனுக்குப் பிடிக்காது என மன உளைச்சல் கொள்கின்றான். ஆஸ்திரேலியாவின் கிறிஸ்துமஸ் விழாக் கொண்டாட்டத்தில் வெள்ளை இளைஞனுக்குப் பரிசு கிடைத்தது, அதை வாங்கச் சென்ற அவன் எதுவும் பேசாமல் கூட்டத்தைப் பார்த்துக் கையசைத்தான். இறுதியின் அவன் 'ஊமை' என்பது (மாத்தளை சோமுவின் சிறுகதைகள், தொகுதி ஐ, பக்.1-8) தமிழ் இளைஞனுக்குத் தெரிய வருகின்றது.

தமிழன், இளைஞன் தனது தவறான புரிதலை உணர்ந்து வெள்ளை இளைஞனுக்குக் கிறிஸ்துமஸ் வாழ்த்துச் சொல்ல நடப்பதாக இச்சிறுகதை முடிகிறது. மேலும் இச்சிறுகதையில் பிரிட்டனிலிருந்து ஆஸ்திரேலியாவிற்குக் குடியேறிய ஒரு கறுப்பின இளம் பெண்ணைத் தொலைக்காட்சிச் செய்தி வாசிப்பாளராக நியமித்தமைக்கு ஆஸ்திரேலிய வெள்ளையர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். ஆஸ்திரேலியா அரசு இது பல்லினப் பண்பாடு கொண்ட நாடு என அறிவித்து அந்தக் கறுப்பினப் பெண்ணிற்குத் துணை நிற்கின்றது.

**நிறவெறிக் கொடுமை**

மாத்தளை சோமு நிறவெறியின் கொடுமையை **"அத்தனை பேரும்"** என்னும் சிறுகதையின் அழுத்தமாகக் கூறியுள்ளார். இக்கதை 1992இல் இலங்கையின் ''அக்கினிக்குஞ்சு'' இதழில் வெளிவந்து, பின்னர் 1994இல் இந்திரா பார்த்தசாரதியும் எஸ்.பொன்னுதுரையும் தொகுத்த **'பனியும் பனையும்'** என்ற நூலில் **"ஒரே இனம்"** என்னும் சிறுகதையாக வெளிவந்துள்ளது. சிங்கள இனவெறியால் தன் தந்தையை இழந்து அண்ணனைப் பிரிந்து தாயுடன் ஆஸ்திரேலியாவுக்கு அகதியாகப் புலம்பெயர்ந்து வந்த ஈழத்தமிழன் காந்தனும், கம்போடியாவில் பொல்பொட் போராளிகளால் தாய்தந்தையை இழந்து பாதுகாப்பிற்காக ஆஸ்திரேலியாவிற்குத் தப்பித்துவந்த கம்போடிய இளைஞனாகிய அங்ஹோவும், ஹரிசன் என்னும் வெள்ளையனின் நிறவெறியை எதிர்கொள்வதே இச்சிறுகதையின் அடிக்கருத்தாகும்.

காந்தன், அங்ஹோ, ஹரிஸன், அஹமட் ஆகிய நால்வரும் ஆஸ்திரேலியப் பள்ளி ஒன்றில் பன்னிரெண்டாம் வகுப்புப் படிக்கும் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஆவர். லெபனான் நாட்டினான அஹமட் அப்பள்ளியின் எழுத்தராகப் பணியாற்றும் 'ஜூலி' என்னும் வெள்ளைக்காரியை விசிலடித்துக் கிண்டல் செய்கின்றான். இதனால் ஆவேசம் கொண்ட ஆஸ்திரேலிய வெள்ளை மாணவன் ஹரிஸன், **'Your dirty black. you want to rape a white women'** எனக் கத்திக்கொண்டு அஹமட் சட்டையைப் பற்றித் தாக்குகின்றான். **…'You Asian Worm. Are you tying to leach me?'** எனக்கூறி அங்கோவைத் தாக்குகின்றான்(மாத்தளை சோமுவின் சிறுகதைகள், தொகுதி-ஐ, ப.79.) இதனைக் கண்ட **'மத்யு'** என்னும் மாணவன், சண்டையில் இடையே புகுந்து வன்முறை வன்முறையைத்தான் பெருக்கும் என ஹரிஸனுக்கு அறிவுரை கூறுகின்றான். 'அகதிகளாக இவர்கள் பிறக்கவில்லை' ஆக்கப்பட்டனர்' என மத்யு கூறி,

ஆஸ்திரேலியாவின் பூர்வகுடிகளான 'அபோக்கள்' எனும் கறுப்பர்களின் உரிமைகளைப் பறித்துத்தான் வெள்ளை ஆஸ்திரேலியா உருவாக்கப்பட்டதென (மாத்தளை சோமுவின் சிறுகதைகள், தொகுதி-ஐ,ப.78.) என ஆஸ்திரேலியா என்ற நாடு உருவான வரலாற்றைக் கூறுகின்றான்.

மத்யு என்ற வெள்ளை ஆஸ்திரேலிய மாணவனின் மனிதநேயப் பண்பைப் போற்றும் மாத்தளை சோமு, "ஹரிஸனை உருவாக்கிய அதே சமூகத்தினால் எப்படி மத்யுவையும் உருவாக்க முடியும்? ஏசு பிறந்த இனத்திலேதான் யூதாஸூம் பிறந்தான். காந்தியும் கோட்சேவும் ஒரே மண்ணின் அவதாரங்கள்"[4] (மாத்தளை சோமு, மு.நூ., ப.79.) எனக்கூறி, புலம்பெயர்ந்த தமிழர்கள் உள்ளிட்ட பிற இனமக்கள் ஹரிஸன் போன்ற வெள்ளையர்களுக்குப் பயந்து வாழும் நிலையை விளக்கிக் கூறியுள்ளார்.

**வெள்ளையர்களுடன் பயிலும் வெள்ளைத்தோல் கொண்ட கறுப்பின மாணவர்கள்**

வெள்ளையர்களுடன் பயிலும் ஆசியக் கறுப்பின மாணவர்களும் தங்கள் வெள்ளைத் தோலில் பற்றுதல் கொண்டு, கறுப்புத் தோல் கொண்ட மாணவர்களைப் பகடி செய்வதை மாத்தளை சோமு 'வெள்ளைக்காரர்கள்' என்ற சிறுகதையில் விளக்கியுள்ளார். சிட்னியில் மூன்று மருத்துவமனைகளை வைத்திருக்கும் டாக்டர் சாம்யோ என்ற சாமிநாதபிள்ளை யோகேஸ்வரன் முதன்முதலாகத் தம் மருத்துவ மனையைத் திறந்தபோது நிற அடிப்படையில் வெள்ளையர்கள் அவரிடம் மருத்துவத்திற்குச் செல்லவில்லை. பின்னர் லேடி மேக்மில்லன் என்ற ஆஸ்திரேலியப்பெண் அவரிடம் முதன்முதலில் மருத்துவம் பார்த்து நோய்குணமான பின்னர் அப்பெண்ணின் பரிந்துரைகளால் வெள்ளைக்கார நோயாளிகள் அவரிடம் குவிந்தனர்' காம்யோ இன்று மூன்று மருத்துவமனைகளை நடத்தி உயர்ந்துள்ளார்.

தாய்மொழி (தமிழ்) தெரியாமல் ஆங்கில வளர்ப்பில் வளர்ந்த காம்யோவின் மகன் ராஜா தன் வெள்ளை நிறம் காரணமாக வெள்ளைக்காரப் பள்ளி மாணவர்களுடன் சிக்கலின்றிப் படிக்கின்றான். வெள்ளை மாணவர்கள் "இந்தியர்கள் பொதுவாகக் கறுப்பு நிறம், நீ மட்டும் எப்படி வெள்ளை நிறமாய் இருக்கிறாய்?" (மாத்தளை சோமு,மு.நூ.ப.85.)என்று மட்டும் ராஜாவிடம் கேட்கின்றனர். டாக்டர் சாம்யோவைப் பார்க்க டாக்டர் சிவாவும் அவரது மகன் குமாரும் வருகின்றனர். அவர்களது வருகையை ராஜா தன் தந்தையிடம் நல்லெண்ணெய், ஆப்பிரிக்கக் கறுப்புநிறம் கொண்ட இருவர் வருவதாகக் கூறுகின்றான். "னுயனனலஇ ழுநெ டீடயஉமஅயளெ ாயள உழஅந வழ ளநந லழர?" (மாத்தளை சோமு, மு.நூ.ப.86.)எனக் கூறுகின்றான். இது ராஜாவைச் சூழ்ந்துள்ள வெள்ளை இனச்சமுதாயப் பண்பாட்டின் தாக்கமாகும். இச்சிறுகதையில் தம் மகன்களான ராஜா, குமார் ஆகியோரின் மனநிலைகளைப் புரிந்து கொண்ட அவர்களது தந்தையர்களை டாக்டர் சாம்யோவும் டாக்டர் சிவாவும், அவர்களைத் தமிழ் வகுப்புகளுக்குப் படிக்க அனுப்புகின்றனர். புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவில் வாழும் இந்தத் தலைமுறை மாணவர்கள் தம் தாய்மொழியாகிய தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் மறந்து ஐரோப்பியப் பண்பாட்டின் அடிமைகளாகிவிட்டனர்.

**ஆஸ்திரேலியா பெர்த் மாநிலத்தின் சின்னம் – 'கறுப்பு அன்னம்'**

மாத்தளை சோமுவின் 'கறுப்பு அன்னங்கள்' என்ற சிறுகதையின் கதைக்களம் அந்நாட்டின் பெர்த் மாநிலமாகும். அம்மாநிலத்தின் சின்னமும் மாநிலப் பறவையும் கறுப்பு அன்னமாகும். இச்சிறுகதையில் புலம்பெயர் வாழ்க்கையை நடத்தும் முகுந்தன் என்ற தமிழன் ஆஸ்திரேலியப் பிஸ்கட் கம்பெனி ஒன்றில் வேலை செய்கின்றான். பணியிடத்திலும் பயணங்களிலும் அவன் நிறவேற்றுமையை எதிர்கொள்கின்றான். தான் குடியிருக்கும் வீட்டின் அறையில் தன் நண்பனால் ஒட்டப்பட்ட வெள்ளை மேகங்கள் சூழ்ந்த கறுப்பு அன்னங்களின் படத்தை அவன் ஓரிரவு முழுவதும் பார்த்துக் கொண்டே இருக்கின்றான். அவனுக்கு உறக்கம் வரவில்லை. பழைய நினைவுகள் அவன் மனத்தை அலைக்கழிக்கின்றன. அவனது நிறம் ஒருவாழ்க்கைப் பிரச்சினையாகச் சுழல்கின்றது. ஆப்பிரிக்கர் ஆஸ்திரேலியாவின் அபோர்ஜினிகளையும் விட அவனது நிறம் கரியது. அவனைக் காண்பவர்கள் அவன் அதிகக் கறுப்பாக இருப்பதாகக் கூறுகின்றனர். ரயில் பயணத்தில் ஒரு ஆஸ்திரேலிய வெள்ளை மூதாட்டி கூட அவனை அவமானப்படுத்துகீன்றாள்.

அவன் வேலைபார்க்கும் பிஸ்கட் கம்பெனியில் சீனர்களும் பிலிப்பைன்ஸ் நாட்டினரும் தங்களது நிறத்தை உயர்வாகக் கருதுகின்றனர். அவன் குடியிருக்கும் அடுக்குமாடிப் பகுதியில் ஒரு வெள்ளைக்காரனுக்கு முகுந்தன் கைகுலுக்கி

புத்தாண்டு வாழ்த்துக்கூற முற்படும்போது அந்த வெள்ளையன் **'புழ யறயல'** எனக்கூறி அவமானப்படுத்துகின்றான். இதனால் பாதிக்கப்பட்ட முகுந்தன் கறுப்பு அன்னம் ஓவியத்தை முறைத்துப் பார்க்கின்றான்.

இங்கு **'கறுப்பு அன்னங்கள்'** வெள்ளையர்கள் அல்லாத கறுப்பின மக்களின் குறியீடாகின்றன. வெள்ளை மேகங்களை வெள்ளைக்காரர்களாகவும், கறுப்பு அன்னங்கள் நீந்தும் குளங்களை ஆஸ்திரேலியா அல்லது ஐரோப்பிய நாடுகளாகவும் உருவங்களாகக் கொள்ளலாம். கறுப்பு அன்னங்களையே சின்னமாகவும், மாநிலப் பறவையாகவும் கொண்ட பெர்த் நாட்டில் கறுப்பு மனிதர்கள்மீது நடத்தப்படும் நிற வன்முறை முரண் நிறைந்ததாகும்.

முகுந்தன் கம்பெனியில் வேலை செய்யும் ஆப்பிரிக்க இளைஞன் ஒருவன் வெள்ளையர்கள் நிறவெறியைக் கருத்தில் கொள்வதே இல்லை. அவன் வெள்ளையர் நிறவெறிக்கு வருந்தாமல் வெள்ளை நிறத்தையே பகடி செய்கின்றான். அந்த ஆப்பிரிக்கன் முகுந்தனிடம்,''முகு! இந்த வெள்ளைக்காரர்கள் தாங்கள் வெள்ளையாய் இருப்பதையிட்டுப் பெருமைப்படலாம்' திமிராயும் இருக்கலாம். ஆனால் எங்கள் நாட்டில் இவர்களைத் தோல் இல்லாமல் படைக்கப்பட்டவர்கள் என்றுதான் சொல்வோம்! உன் நிறத்தைக்கூட கறுப்பு என்று சொல்லமாட்டார்கள். நல்ல கறுப்பு நிறத்தவர்கள்தான் தோலோடு படைக்கப்பட்டவர்களாம். இது ஒரு குருட்டு நம்பிக்கையாகவும் இருக்கலாம். ஆனால் இது எங்கள் நாட்டில் காலங்காலமாகச் சொல்லப்பட்டு வரும் ஒரு புராண ஐதீகம். அது சரியோ தவறோ அதையிட்டு எனக்குக் கவலை இல்லை. உன் நிறமாவது பரவாயில்லை. என் நிறத்தைப் பார். புகையைப் போன்ற நிறம். ஆனால் நான் அதற்காக அசரவில்லை. பொறுத்திருந்து பார், நான் கூடிய சீக்கிரம் ஒரு வெள்ளைக்காரியைக் கேர்ல் பிரண்டாய் கூட்டி வருவேன்'' (மாத்தளை சோமு, ஒற்றைத்தோடு, ப.150.) எனக் கூறுவதிலிருந்து வெள்ளை நிறம் பகடி செய்யப்படுவதை அறியலாம்.

**முகந்தனின் மற்றொரு நண்பனான தேவன்**

''சாதி, சமயம், பணம் எண்டு ஏற்றத்தாழ்வு பார்க்கின்ற நம் மட ஆட்கள் வெள்ளைக்காரர்களவிட மோசமானவர்கள்'' (மாத்தளை சோமு, ஒற்றைத்தோடு, ப.158.) எனக் கூறுகின்றான். நிறவெறியால் புலம்பெயர்ந்து அயல்நாடுகளில் வாழும் தமிழர்கள் மனநிலை பாதிக்கப்பட்டுச் சுயத்தை இழப்பதை இக்கதை விளக்குகின்றது.

**ஆஸ்திரேலியாவில் வேலைவாய்ப்பு**

புலம் பெயர்ந்து ஆஸ்திரேலியாவில் புகலிடம் புகுவோர்க்கு எளிதில் கிடைப்பதில்லை. அவர்கள் என்ன படித்திருந்தாலும் ஆஸ்திரேலியாவில் வேலை செய்த முன் அனுபவம் இருந்தால்தான் அவர்களுக்கு அங்கு வேலை கிடைககும். இதனை மாத்தளை சோமுவின் ''முகம்'' என்னும் சிறுகதை வெளிப்படுத்துகின்றது.

கொழும்பு நகரத்தில் தமிழனான நித்தியானந்தன் வங்கி ஒன்றில் மேனேஜராக வேலை பார்க்கின்றான். அவன் தன் வேலைக்கும் வரவேற்பிற்கும் திருமணம் உள்ளிட்ட அனைத்திற்கும் தன் முக வசீகரமே காரணம் என நம்புகின்றான். அவனைச் சுற்றியுள்ள சமுதாயமும் அவ்வாறே கூறுகின்றது. நித்தியானந்தன் இச்சூழலில் சிங்கள இனவாதப் போரினால் வேறுவழியில்லாமல் ஆஸ்திரேலியாவிற்குப் புலம்பெயரும் நிலை ஏற்படுகின்றது. ஆனால் ஆஸ்திரேலியாவில் அவன் முக வசீகரத்திற்கு வரவேற்பும் கிடைக்கவில்லை. அவன் மாமனார் கொடுத்தனுப்பிய பணமும் செலவழிகின்றது. அந்நாட்டு வெள்ளைக்காரர் பார்வையில் அவனுடைய முகம் கறுப்பு முகமே. அங்கு எதிர்பார்க்கும் வங்கி மேலாளர் வேலைக்கு உள்ளூரில் வேலை பார்த்த அனுபவம் தேவை என்கின்றனர். அவன் யாராவது வேலை கொடுத்தால்தான் ஆஸ்திரேலியாவில் உள்ளூர் அனுபவம் கிடைக்கும்'' (மாத்தளை சோமுவின் சிறுகதைகள், தொகுதி – I, பக்.58-63.) எனப் புலம்புகின்றான்.

இறுதியில் ஓர் அலுவலகத்தில் அக்கவுண்டண்ட் வேலை இருப்பதாகவும், வாரத்தில் அங்கு மூன்று நாட்கள் மெஷின் ஆபரேட்டர் வேலை செய்ய வேண்டுமென்றும் கூறுகின்றனர். அந்த வேலையை நித்தியானந்தன் மறுக்கின்றான். அங்கு தனியார் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் வேலை தேடும் சீன டாக்டர் ஒருவர் அந்த வேலையை விட்டுவிடாதே என அவனுக்கு அறிவுரை கூறுகின்றார். அந்த சீன டாக்டர் உட்பட பலருக்கும் உள்ளூர் பணி அனுபவம் இல்லாததால் வேலை மறுக்கப்படுகின்றது. ஆஸ்திரேலியாவில் தங்கள் நாட்டில் தேர்வு எழுதித் தேர்ச்சி பெற்றதால் வேலை என்கின்றனர். தேர்வில், அவர்கள் கையெழுத்துக்களை வைத்து அவர்களை வெளிநாட்டினர் என இனங்கண்டு தேர்ச்சியைத் தடுக்கின்றனர். **'கறுப்பர்கள்'** என்று தமிழர்களும் **'மஞ்சள் நிறத்தார்'** எனச் சீனர்களும் ஒதுக்கப்படுகின்றனர். இச்சிறுகதையைத் திறனாய்வு

செய்த பா.ஆனந்தகுமார்,"ஒரே முகம் இரண்டு நாடுகளில் இரண்டுவிதமான மதிப்பீட்டைப் பெறுகின்றது. அழகான முகம் ஆஸ்திரேலியாவுக்கும் போகும்போது அங்கு அது யாருக்கும் பிடிக்கவில்லை. ஏனென்றால் அது கறுப்புமுகமாக இருக்கிறது. ஆக, தன்னுடைய ஊரில் அழகனாதாகச் சொல்லப்பட்ட அந்த முகம் ஐரோப்பிய நாட்டில் நிராகரிக்கப்படுவதைக் கண்டு அக்கதையின்நாயகன் நித்தியானந்தன் மனம் நொந்து போகின்றான்" (பா.ஆனந்தகுமார், புலம்பெயர்ந்தோர் இலக்கியம் பனுவல்களும் மதிப்பீடுகளும், ப.36.) எனக் கூறியுள்ளார்.

**ஆஸ்திரேலிய வாழ்க்கைப் புனைவுகள்**

மாத்தளை சோமு 'அன்னையும் பிதாவும்' என்ற சிறுகதையில் இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்த தமிழ்க் குடும்பம் ஒன்றின் வாழ்க்கையைக் கூறியுள்ளார். இக்கதையில் கொழும்பில் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற முதியவர் சம்பந்தர், ஆஸ்திரேலியாவில் மனைவி மற்றும் குழந்தையுடன் வாழ்ந்துவரும் தன் மகனையும் பேரனையும் காணத் தன் மனைவியை அழைத்துச் செல்கின்றார். அங்கு சென்ற அந்த முதிய தம்பதியினர் தம் மகன் வீட்டில் வேலைக்காரர்கள் ஆகிப் போகுகின்றனர். சொந்த ஊரில் மரியாதையுடன் வாழ்ந்து வந்த ஓய்வு பெற்ற ஆசிரியரான சம்பந்தர், அவர் மனைவியின் வற்புறுத்தலால் கொழும்பிலிருந்து மெல்பெர்ன் நகரத்திற்குத் தன் மனைவியுடன் செல்கின்றார். அங்கு அவர்கள் தம் மகனுக்கும் மருமகளுக்கும் சிறுசிறு வேலைகளைச் செய்கின்றனர்.

நாளடைவில் அந்த வீட்டு வேலைகளே வழக்கமாகி அவர்கள் மகன் வீட்டின் வேலைக்காரர்கள் ஆகின்றனர். பின்னர் சம்பந்தர் தன் முயற்சியால் ஆஸ்திரேலியாவில் பகுதிநேர வேலை செய்து பணம் ஈட்டித் தனக்கும் தன் மனைவிக்கும் விமானப்பயண டிக்கெட் வாங்கி அதைத் தன் மகனிடம் அந்த முதியவர் தெரிவிக்கின்றார். அப்போதுதான் அவரது மகன் 'அப்பா!' என்ற வார்த்தைக்குள் சிக்கி அதிர்ச்சிக்கு உள்ளாவதாக இக்கதை முடிகின்றது. ஆஸ்திரேலியாவில் நீண்ட பகல் கொண்ட சம்மர் காலநிலை, டேலைட் சர்வீஸ், சுத்தமான ஆஸ்திரேலியச் சுற்றுச்சூழல், எந்திரமயமான வாழ்க்கை, ஐரோப்பிய முதியவர்களின் உடற்பயிற்சிகள், துரித உணவுகள், உணவகங்கள், தாய்மொழியிழப்பு, அந்நியப் பண்பாட்டுமயமாதல், பல நாட்டினர் – பல்லின மக்கள் ஒரே பகுதியில் வாழும் சூழல், ஆஸ்திரேலியாவில் கிடைக்கும் இந்திய வகை உணவுப் பொருட்கள் ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டள்ளன. மாத்தளை சோமு தன் தாய்மொழிப் பற்றினை, "பேரனைக் குறையாக நினைக்கவில்லை அவர். அந்நியக் கலாச்சாரக் காற்றில் ஆடிக் கொண்டிருக்கிற இளங்குருத்து. அவனுக்குத் தாய்மொழியை, தாய்க் கலாச்சாரத்தை அடையாளம் காட்ட வேண்டியவர்கள் பெற்றவர்கள். அவர்களே கண்ணை மூடிக் கொண்டிருக்கும்போது யார் என்ன செய்யமுடியும்?" (மாத்தளை சோமுவின் சிறுகதைகள், தொகுதி-ஐ, ப.51.) எனப் பெற்றோர்களைச் சாடுகின்றார். பேரன் தாய்மொழியாகிய தமிழை இழந்ததால், தாத்தாவும் பாட்டியும் அவனுடன் ஆங்கிலத்தில் உரையாட முடியாமல் தவிக்கின்றனர். இதனால் அவர்கள் உறவு நிலைகளில் விரிசல் ஏற்படுகின்றது.

ஈழத்தமிழன் ஆஸ்திரேலியாவில் தன் சொந்தத் தமிழனையே ஏமாற்றுவதை மாத்தளை சோமு 'சொந்த சோதரர்கள்' என்ற சிறுகதையில் நடப்பியல் பாங்கில் தனிஅனுபவத்தோடு வெளிப்படுத்தியுள்ளார். புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவில் வாழும் ஈழத்தமிழன் குமார், தன் சொந்த நாட்டைச் சேர்ந்த ராசண்ணன் என்பவனால் ஏமாற்றப்படுகின்றான்.

ஈழப்போர் காரணமாக தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஆஸ்திரேலியா செல்வதற்காக குமார் என்பவன் அலைகின்றான். அவன் ஈழத்தின் பெர்த் தமிழனாகிய பெயர்கூறப்படாத ஒரு முகவரால் அலைக்கழிக்கப்படுகின்றான். முகவர் ஒன்றரை லட்சம் ரூபாயை குமாரிடம் பெற்றுக்கொணடு அவனை ஆஸ்திரேலியாவிற்கு அனுப்புகின்றான். திருமணமானவர்களுக்கு எளிதில் சுற்றுலா பயணியர் விசா கிடைக்கும். விசாவிற்காகவே குமார் அவசர அவசரமாகத் திருமணம் செய்துகொண்டு ஆஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்கின்றான். ஆஸ்திரேலியாவிலும் தன் சொந்த நாடான ஈழத்தைச் சேர்ந்த ராசண்ணன் என்பவனால் ஏமாற்றப்படுகின்றான்.

ஆஸ்திரேலியாவில் 'புனித வின்செண்ட் தெ பவுல் சொசைட்டி' எனும் அறக்கட்டளை நிறுவனம் கொடுக்கும் (ஈழத்தமிழர்களுக்கும்) இலவச வீட்டு உபயோகப் பொருட்களை ராசண்ணன் பெற்றுப் பயன்படுத்திவிட்டு அதனைக் குமாரிடம் விற்றுப் பணம் பெறுகின்றான். இதனை ராசண்ணன் கூற்றாகவே மாத்தளை சாமு, "பார்த்தியே நான் அந்த நேரத்தில் அகதியெண்டு சொல்லி ஒரு சதம் கொடுக்காம வின்செண்ட் பாலில்ல (St.Vincent De Paul Society) வாங்கி ரெண்டு வருஷம் யூஸ் பண்ணிப்

போட்டு இப்ப அறநூறுக்கு வித்திருக்கிறன். எங்களுக்கு புதுகட்டில், டேபிள் வாங்க டிரக் எடுத்து எங்கட வேலையை முடிச்சுப்போட்டு அதற்கான வாடகை 40 டாலரையும் குமார் கிட்ட வாங்கிப் போட்டேன். உதான் ராசண்ணன். ஓம்! ஓம்! டெயிலி உந்த கட்டில் சோபாவை ஆடைச்சு வைச்சுக்காட்டி விப்பியளோ அறுநூறுக்கு என்றாள் ராசண்ணன் மனைவி. குமார் இன்னமும் ராசண்ணனைப் புகழ்ந்து கொண்டிருக்கிறான்'' (மாத்தளை சோமு, மு.நூ., ப.74.) எனப் பதிவு செய்துள்ளார். 1994இல் இச்சிறுகதை தினமணி சுடரில் வெளிவந்தது. இக்கதை தாய்நாடான ஈழத்திலும், அந்நிய நாடான ஆஸ்திரேலியாவிலும் தமிழினத்தாருக்குள் நிலவும் உண்மையற்ற, மோசடியான வாழ்க்கைப் போக்கை விளக்குகின்றது. இச்சிறுகதைகள் 'குக்கபரா' என்னும் பறவை துன்பத்தின் குறியீடாகவும், ஆஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களுக்குக் குறியீடாகவும் ஆளப்பெற்றுள்ளன. 'வானம்', ஈழத்தமிழர்களின் தாயகத்தை நினைவுபடுத்துகின்றது. ஆஸ்திரேலியாவின் காலநிலைகளும் இச்சிறுகதையில் அடங்கியுள்ளன. ஈழப்போரின்போது சிங்கள் இராணுவத்தால் தமிழர்கள் பாதிக்கப்பட்ட தகவல்களும், ஆஸ்திரேலியாவின் பண்பாட்டுச் சூழலும் இக்கதையில் விளக்கப்பட்டுள்ளன.

### நிறைவுரை

புலம்பெயர்ந்தோர் இலக்கியம் நவீனத் தமிழிலக்கியத்தில் முக்கிய இடம் பெறுகின்றது. சிறுகதை, நாவல், கவிதை, விமர்சனம் எனப் பன்முகங்களில் வளர்ந்து வருகின்றது. உலகந்தழுவிய நிலையில் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களின் வாழ்க்கை பல சிக்கல்களையும் சவால்களையும் எதிர்கொள்வதாகவே உள்ளன. அவர்களது இருத்தல் புலம்பெயர் நாடுகளில் பாதுகாப்பற்றதாகவே உள்ளன. நிறவெறியை எதிர்கொள்ளும் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர், தம் சொந்தப் பண்பாட்டையும் மொழியையும் இழந்து அகதி வாழ்க்கையில் ஆஸ்திரேலியாவில் எதிர்கொள்ளும் வாழ்வியல் நிலைப்பாடு மாத்தளை சோமுவின் சிறுகதைகளில் பரவலாகப் பேசப்பெற்றுள்ளன.

### பயன்பட்ட நூல்கள்

1. மாத்தளை சோமு, மாத்தளை சோமுவின் சிறுகதைகள் தொகுதி I படுமீன் பதிப்பகம், 2003.
2. மாத்தளை சோமு, மாத்தளை சோமுவின் சிறுகதைகள், தொகுதி II இளவழகன் பதிப்பகம், 2003.
3. மாத்தளை சோமு, ஒற்றைத்தோடு, தமிழ்க்குரல் பதிப்பகம், 2023.
4. ஆனந்தகுமார், பா.,புலம்பெயர்ந்தோர் இலக்கியம், பனுவல்களும் மதிப்பீடுகளும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், 2020.
5. ஆனந்தகுமார், பா., அலிபாவா, உ., இராமராஜ பாண்டியன், வை., மாத்தளை சோமுவின் படைப்புலகம், தமிழ்க்குரல் பதிப்பகம்,, 2023.
6. ஜீவகுமாரன், வீ., புலம்பெயர் தமிழ்ச் சிறுகதைகளின் நோக்கும் போக்கும், உலகத் தமிழ்ச்சங்கம்,– 2018.

# தொல்காப்பியத்தில் வடமொழியை உயர்த்திப் பிடித்த உரையாசிரியர்கள்

**முனைவர் சி. குமார்**
*இணைப்பேராசிரியர், தமிழ்த் துறை*
*மாநிலக் கல்லூரி, சென்னை*

**முன்னுரை**

தொல்காப்பியம் தமிழனுக்குக் கிடைத்த முழு முதல் இலக்கண நூலாகும். தொல்காப்பியம் இலக்கணநூல் மட்டுமன்று, தமிழனின் வாழ்வியலைப் பறைசாற்றி நிற்கும் பாசறையாகும். இது பழமையான தமிழ் மரபுகளைக் காத்து நிற்கும் காப்பு நூலாகும், “வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறும் நல் உலகத்து” வழக்கையும் செய்யுளையும் ஆய்ந்து, தமிழ் மொழியை எழுத்தும் சொல்லும் பொருளும் ஆகிய முப்பகுப்புக் கொண்ட இலக்கணம் செய்தவர் தொல்காப்பியர். தொல்காப்பியர், தமக்கு முற்பட்ட இலக்கண ஆசிரியர்கள் இருந்தனர் என்பதை, என்ப, என்மனார் புலவர், என்றும் “யாப்பென மொழிப யாப்பறி புலவர்“ என தம் நூலில் பல இடங்களிலும் குறித்துள்ளார். தமக்கு முன்னே இருந்த தமிழ்ப் புலவர்களின் வழியிலேயேயும் அவர் காலத்துக்கு முன்தோன்றிய முந்து நூல்களையும் தமிழகத்து நிலப்பரப்பில் வழங்கும் செய்யுளையும் வழக்குகளையும் கொண்டு தமிழர்களின் தொன்மைகளைக் காத்து நிற்கும் இலக்கண நூலைச் செய்தார், என்பதே உண்மை. மாறாக, இவர் வடமொழியைத் தழுவி இலக்கணம் செய்தார் என்பது எவ்வகையிலும் ஏற்க இயலாததாகும்.

சங்க காலத்தின் முற்பகுதியில் தொல்காப்பியத்திற்கு முன்பு வடவர் கூட்டுறவு தமிழகத்தில் இல்லை. சங்க காலத்தின் பிற்பகுதியில் தான் அவர்களின் கலப்பு ஏற்பட்டது எனலாம். எனவே, வடசொற்கள் தமிழிலும் பிற சங்க நூல்களிலும் கலந்திருப்பதை நாம் அறியலாம். பெரும்பாலும் சமயத் தொடர்பான சொற்கள், இப்பிறமொழிச் சொற்களாகவே காணப்படுகின்றன. வட நாட்டுப் புராணக் கதைகளும் சில தொகை நூற்பாக்களிலும், மணிமேகலை சிலப்பதிகாரத்திலும் இடம் பெற்றுள்ளன. மணிமேகலையும் சிலப்பதிகாரமும் பரந்துபட்ட சங்க காலத்தின் இறுதியாக கி.பி இரண்டாம் நூற்றாண்டில் தோன்றியவை. எனவே சங்க காலத்தின் முற்பகுதியில் தமிழ் மட்டுமே தனித்தியங்கியது எனலாம். தனித்தியங்கிய தமிழ் மொழியில் இலக்கணம் செய்த தொல்காப்பியர் தம் காலத்து வடமொழி கூட்டுறவால் வடமொழி எழுத்துகளை கலந்திட இயலாது. வடமொழிச் சொற்களை எவ்வாறு கையாள வேண்டும் என்பதற்கும் இலக்கணம் வகுத்துள்ளார் என்பதை நாம் அறியலாம். தொல்காப்பியத்திற்கு உரை எழுத வந்த உரையாசிரியர்கள் பெரும்பாலும் வடமொழியாளர்களாக இருந்துள்ளதையும் அவர்கள் தம் புலமைகளை தொல்காப்பிய நூற்பாக்களுக்கு வடமொழி உரையை கலந்து, வடமொழியை உயர்த்தி பிடித்துள்ளனர் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தொல்காப்பிய உரையாசிரியர்கள்**

முன் தோன்றிய மூத்தக்குடி தமிழ்க்குடியில் “பா“ வடிவில் எழுதப்பட்ட தமிழ் நூல்களின் பொருளை உரை வடிவில் விரித்து எழுதியவர்கள் தமிழ் உரைநூல் ஆசிரியர்கள் ஆவர். காலப்போக்கில் மொழிகள் மாற்றம் பெறுகின்றன. பழைய சொற்கள் வழக்கிப்பதும் புதிய புதிய சொற்கள் தோன்றுவதும் இயல்பு. இதனால் பழமை வாய்ந்த இலக்கிய இலக்கண நூல்களை பல நூற்றாண்டுகளுக்குப் பின் வருவோர் புரிந்து கொள்வதற்கும் புதிய புதிய நூல்களைப் படைப்பதற்கும் மொழியை பாதுகாப்பதற்கும் சிறந்த உரை நூல்கள் தேவைப்படுகின்றன. மிகத் தொன்மையான இலக்கிய இலக்கண வளத்தை உடைய தமிழ் மொழியிலும் இதற்கு விதிவிலக்கு அல்ல. சங்க காலத்திலும், சங்கம் மருவிய காலத்திலும் எழுதப்பட்ட மொழியில் ஏற்பட்ட மாறுதல்களால் புரிந்து கொள்ளப்படாமல் போனது ஒரு புறம் இருக்க பா வடிவில் சுருக்கமாக சொல்லப் பட்ட விடயங்களையும் கருத்துக்களையும் விரிவாக விளக்க வேண்டிய தேவையையும் ஏற்பட்டதனால் பல உரை நூல்கள் எழுந்தன எனலாம். ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரையிலுள்ள காலம் வரை உரைகள் மேலோங்கிய காலம் எனலாம். இவ்வாறு வளர்ந்த இவ்வுரைகளை எழுதிய உரையாசிரியர்களின் காலம் கி.பி பன்னிரண்டு முதல் பதினெட்டு ஆம் நூற்றாண்டு எனக் கூறப்படுகிறது.

இவ்வுரையாசிரியர்களை இலக்கண உரையாசிரியர்கள், இலக்கிய உரையாசிரியர்கள் சைவ சித்தாந்த உரையாசிரியர்கள் எனப் பகுத்துக் காண்பர்.

தொல்காப்பியத்திற்கு மட்டும் உரை எழுதிய உரையாசிரியர்கள் இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர் போன்றோராவார்.

இளம்பூரணர் தொல்காப்பியம் முழுமைக்கும் (எழுத்துஅதிகாரம்,சொல் அதிகாரம், பொருள் அதிகாரம்) உரையெழுதியவராவர். தொல்காப்பியத்திற்கு கிடைத்த உரைகளில் மிகப் பழமையான உரை, இவருடைய உரை எனலாம். தொல்காப்பிய உரையாசிரியர்களில் இவர் காலத்தால் முற்பட்டவர் எனலாம். இவரின் காலம் கி.பி 11 ஆம் நூற்றாண்டாகும். "உளங்கூர்கேள்வி இளம்பூரணர்" என்றும் "ஏதமில்மாதவர்" எனவும் அடியாருக்கு நல்லார் இவரை போற்றுவார். இவர் சோழ நாட்டில் பிறந்த வேளாண் குடியைச் சேர்ந்தவராகவும் இவர் ஒரு சமணராகவும் அறியப்படுகிறார்.

சேனாவரையர் இடைக்காலத் தமிழ் மொழி உரை ஆசிரியர்களில் ஒருவர் இவர். தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு மட்டும் உரை எழுதியவர். "சேனை" என்பது வடசொல் ஆகும், சேனை என்பது படையைக் குறிக்கும். இவரின் காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டு எனலாம்.

தெய்வச்சிலையார் தொல்காப்பிய சொல்லதிகாரத்திற்கு உரை எழுதிய இடைகாலத் தமிழ் உரையாசிரியராவர்.

**தொல்காப்பியரின் காலம்**

தொல்காப்பியரின் காலத்தை பல்வேறு அறிஞரும் பல்வேறு காலங்களை பல்வேறு வகையினிற் கூறியுள்ளனர்.

தொல்காப்பியத்தை இயற்றியவர் அகத்தியரே என்றும் அந்த அகத்தியரையே தொல்காப்பியர் என வழங்கினர் எனவும் தொல்காப்பியர் காலம் கி. மு 7000 எப்படியும் ஏறக்குறைய 10,676 ஆம் ஆண்டில் தொல்காப்பியம் தோன்றியிருக்க வேண்டும் என்று பொள்ளாச்சி நா. மகாலிங்கம் கூறுவர். பேராசிரியர் மு. இராமலிங்கம், பகீரதன் ஆகிய இருவரும் பொள்ளாச்சி மகாலிங்கம் கூறும் காலத்தைக் கொண்டவரே.

கி.மு மூவாயிரம் ஆண்டு என்று தனித்தமிழ் தந்தை மறைமலையடிகளாரும் வெள்ளைவாரணார் கி. மு. 3000 என்றும் பேராசிரியர், கி. மு. 5 ஆம் நூற்றாண்டு என்றும் கி. மு 3000 என்று பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்களும் கா.சு.பிள்ளை கி.மு. 2000 என்றும் நாவலர் சோமசுந்தர பாரதியார் கி.மு 1000 என்றும் தேவநேயப் பாவாணர் கி.மு 7 ஆம் நூற்றாண்டு என்றும் வி. ஆர். ஆர் தீட்சிதர் கி.மு 5 ஆம் நூற்றாண்டு என்றும் எம் சீனிவாச அய்யங்கார் 4ஆம் நூற்றாண்டு என்றும் பி.டி சீனிவாச அய்யங்கார் கி.பி. முதலிரண்டாம் நூற்றாண்டு என்றும் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை கி.பி. நான்காம் அல்லது ஐந்தாம் நூற்றாண்டு என்றும் ஒவ்வொருவரும் ஒவ்வோர் ஆண்டைக் குறிப்பிட்டாலும் வெள்ளைவாரணனார் கூறும் கி.மு. 5000 ஆண்டை ஏற்றுக்கொண்டு இன்று ஏறக்குறைய 7000ஆண்டுகள் என்பதனை உறுதி செய்யலாம்.

**தொல்காப்பிய பாயிரமும் காலமும்**

வடவர் கூட்டம் தொல்காப்பியரை சில ஒவ்வா கதைகளுக்குள் உட்புகுத்த நினைத்தனர்.

தமிழ் தொல்காப்பியரை ஆரியச் சமதக்கினியின் புதல்வராக்கினர். அகத்தியரின் மாணவர் எனக்கூறி அகம் மகிழ்ந்தனர். இக்கூற்றுகளால் தொல்காப்பியர் இராமன் காலத்தவர் என்று கூறுதற்கு இடமேற்பட்டுவிட்டது.

சமதக்கினி, பரசுராமரின் தந்தை, பரசுராமர் இராமர் காலத்தவர். தொல்காப்பியர் அகத்தியர் மாணவர். அகத்தியர் இராமர் காலத்தவர், ஆக, தொல்காப்பியரும் இராமர் காலத்தவர். இராமர் காலம் கி.மு இரண்டாயிரத்துக்கும் முற்பட்டது. தொல்காப்பியர் காலம் கி.மு. இரண்டாயிரத்துக்கு முற்பட்டதாகும். இவ்வாறெல்லாம் கூறுவதற்கு காரணம் தொல்காப்பியரைப்பியரைப் பற்றி வழங்கும் கதைகளே. தொல்காப்பியர் சமதக்கினி முனிவரின் புதல்வர் என்பதும், அகத்திய முனிவரின் மாணவர் என்பதும் சான்றுகளுடன் நிறுவ முடியாத கற்பனை எனலாம்.

"அகத்தியர் என்பவர் கற்பனையால் தோற்றுவிக்கப்பட்டவர் என்று ஆராய்ச்சியாளரில் சிலர் கூறுகின்றனர். அவருடைய வாழ்க்கைச் செய்திகள் அவ்வாறு கூறச் செய்கின்றன. இல்லாத அகத்தியருக்குத் தொல்காப்பியரை பொல்லாத மாணவராக்கிவிட்டனர். தொல்காப்பியரோ தம் ஆசிரியராம் அகத்தியரைப்பற்றியோ, தந்தையாம் சமதக்கினி பற்றியோ என்றும் கூறினாரிலர். ஆகவே அகத்தியர், சமதக்கினி முதலியோரின் தொடர்புக் கொண்டு தொல்காப்பியரின் காலத்தை நிறுவுதல் வரலாற்று ஆராய்ச்சிக்குப் பொருந்துவதன்று." (தொல்காப்பிய ஆராய்ச்சி-சி. இலக்குவனார், ப. 16) என திட்டவட்டமாகக் கூறியுள்ளார். இனி தொல்காப்பியரை அகத்தியரின் மாணவர் என்று கூறுவதை தமிழர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

தொல்காப்பியரின் காலத்தை வடமொழியாளர்களின் காலத்தோடு ஒப்பிட்டுக் கூறும் உரையாசிரியர்கள் சிலரும் உண்டு.

தொல்காப்பியம் பனம்பாரனார் பாயிரத்தை வடமொழியோடு தொடர்புப் படுத்தி முந்து நூல் என்பதை அகத்தியமும் மா புராணம், பூத புராணமும், இசை நுணுக்கம் என்று கூறப்பாடுவாரும் உண்டு. இந் நூல்களைப் பற்றியச் செய்திகள் நமக்கு கிடைக்காத காரணத்தினால் இவைகள் தொல்காப்பியத்திற்கு முந்து நூல்கள் இல்லை என உறுதிப்பட உரைக்கலாம், பாயிரத்தில் கூறும் முந்து நூல் என்பவை சங்கத் தமிழ் நூல்களே ஆகும்.

நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்தில் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது. இவ்வரிக்கு உரை கூறிய நச்சினார்க்கினியர்" மாற்றாரது நிலத்தைக் கொள்ளும் போர்த் திருவினையுடைய பாண்டியன் மா கீர்த்தி அவையின் கண்ணே என்று பொருள் கூறி" பாண்டியன் மா கீர்த்தி இருபத்து நாலாயிரம் ஆண்டு வீற்றிருந்தான் ஆதலின் அவனும் அவன் அவையில் உள்ளோரும் அறிவுமிக்க இருத்தலின் அகள்கள் கேட்டிருந்தனர். என்று விரிவுரையும் கூறுகின்றனர். ஓர் அரசன் இருபத்து நாலாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தான் என்று கூறுவது உண்மைக்கு மாறுபட்ட செய்தியாகும். கற்பனை அதன் வரம்பைக் கடந்து விட்டது என்று கருதவேண்டியுள்ளது. ஆகவே நச்சினார்க்கினியர் உரை நமக்கு பயன்படாது கழிகின்றது" (தொல்காப்பிய ஆராய்ச்சி- சி. இலக்குவனார், ப. 17,18).

இதே போன்று நான் மறை முற்றிய அதங்கோட்டாசான் என்னும் வரிக்கும் சமஸ்கிருத வேதங்களைக்கொண்டு விளக்கம் கூறி வேத வியாசருக்கு முற்பட்டவர் தொல்காப்பியர் என்பார் நச்சினார்க்கினியர். ஆரிய மறைகள் நான்காக வகுக்கப்பட்ட பின்னரே தொல்காப்பியர் வாழ்ந்து இருத்தல் வேண்டும் எனக் கருதி அவர் கி.பி இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர் என்று முடிவு கட்டுதல் தவறுடைடையதாகும்.

"அதர்வண வேதம் ஒரு வேதமாக ஒப்புக்கொள்ளப்பட்டு, நான்கு வேதங்கள் என்ற எண்ணிக்கை கொண்டது மிக மிகப் பிற்பட்ட காலத்தில்தான் என்று வரலாற்றாசிரியர் கூறுகின்றார்" (தொல்காப்பிய ஆராய்ச்சி -சி. இலக்குவனார், ப. 19) என்று குறிப்பிட்டுள்ளார். எனவே மிகத் தொன்மையான தொல்காப்பிய பாயிரத்தில் நான்மறை என்று கூறப்பட்டது, நான்கு ஆரிய வேதங்கள் இல்லை எனக் கருதலாம். மறை என்பது தமிழ் நான் மறையாக இருத்தல் வேண்டும் எனலாம்.

தென்னாட்டுத் தமிழர் ஒருவர் வடமொழி வேதங்களை முழுவதும் கற்பது என்பது அக்காலத்தில் எளிதன்று, வேதங்களைப் படிப்பரின் நாக்கை அறுத்தலும், கேட்பவருக்கு காதில் ஈயத்தை காய்ச்சி ஊற்றும் வழக்கமும் இருந்துள்ளதை நாம் அறிய முடிகிறது. ஆரியரே வேதம் ஒன்றினை முழுமையாக கற்று புலமை மிக்கவராகத் நிகழ்தல் எளிதன்று. அப்படி இருக்க தமிழர் கூட்டத்தை சேர்ந்த ஆசிரியர் ஒருவர் ஆரிய நான்மறைகளைக் கற்றார் என்று கூறுவது முற்றும் பொருந்தாது.

**ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்**

ஐந்திரம் என்ற நூல் பாணினீயத்திற்கு முன் தோன்றியது ஆகும். பாணினீயம் தோன்றியவுடன் ஐந்திரம் என்னும் நூல் வழக்கற்றுவிட்டது. பரணர் பாடிய ஐந்தாம் பத்துக் கண்ட செங்குட்டுவன் தம்பியாகிய இளங்கோவடிகள் காலத்தை இவ்வைந்து வியாக்கணம் வழக்கற்றுவிட்டது, அருகியது என்பதும் அவர் காடுகாண் காதை,

**புண்ணிய சரவனம் பொருந்துவராயின்**
**விண்ணவர் கோமான் விழுது லெய்துவீர எனவும்**
**கப்பத்திர்கிரன் காட்டிய நூலின்**
**மெய்பாட்டியற்கையின் விளங்கானாய்**

என்று கூறுவதை அறியலாம். எனவே பாணினீயின் காலம் கி.மு. 350 அதற்கு முன்னரே தொல்காப்பியர் வாழ்ந்துயிருக்க வேண்டும்.

தொல்காப்பியர் கூறும் எழுத்துப் பற்றிய கருத்துகளை வட மொழியோடு தொடர்புப் படுத்தி தூக்கிப் பிடிப்பார் நச்சினார்க்கினியர். வடமொழி நூல்களுள் கூறப்படும் முறைகளோடு சிற்சில இடங்களில் ஒற்றுமை உடையவனாய்த் தோன்றுதலால் தொல்காப்பியர் அவ்வடமொழி நூல்களை பின்பற்றியே தம் நூலை இயற்றியிருத்தல் வேண்டும் என்பது எத்துணையும் பொருந்தாது என்று கூறலாம்.

தொல்காப்பிய இலக்கண உரைகளில் சில...

மேலை நாட்டு மொழி ஆராய்ச்சியாளர்கள் எழுத்துக்களின் பிறப்பு பற்றிக்கூறும் கருத்துக்கள், தொல்காப்பியர் கூறும் கருத்துக்களோடு ஒற்றுமை உடையவனாய் இருக்கின்றன. அதனால் தொல்காப்பியர் மேனாட்டு ஆசிரியர்களைப் பின்பற்றியே கூறினார் என்று கூறல் பொருந்துமா? பொருந்தாதன்றோ? மொழிகள் பலவாக வேறுபட்டிருப்பினும் மொழிக்குரிய எழுத்தொலிகள் பிறக்குமிடங்கள் யாவர்க்கும் உரியனவே உதடும், பல்லும், நாவும், அன்னமும், குரல் வளையும், மூக்கும், தலையும், நெஞ்சும்

அற்ற மக்களும் உள்ளரோ? ஆதலின் தொல்காப்பியர் வடமொழி நூலாசிரியரைப் பின் பற்றியே கூறினார் என்னும் கருத்து பிழைபட்டது. உண்மைக்கு புறம்பானது.

**அகத்தெழு வளியிசை அரில்தபநாடி**
**அன்பில் கோடல் அந்தணர் மறைத்தே**

என்னும் அடிகளில் அந்தணர் மறைத்தே என்பதற்கு பார்பாரது வேதத்து வலிதே என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறியுள்ளார். அந்தணர் என்பது வடமொழியாளர்களையும் "மறை" என்பது வடமொழி வேதத்தையும் தான் குறிக்கும் என்று உரையாசிரியர்கள் சிலர் கருதியது இமயம் போன்ற பெருந்தவறாகும். என்று சாடியுள்ளார் சி. இலக்குவனார்.

அந்தணர் என்போர் தமிழரே! மறையே பின்னர் வந்த ஆரியர்கள் அவரில் சிறந்தோரை அந்தணர் என்றும் சிறந்த நூலை மறை என்றும் அழைத்துக்கொண்டனர் என்பதே உண்மை.

சொல்லதிகாரத்தில் வேற்றுமையைப்பற்றி தொல்காப்பியர் கூறுமிடத்து திராவிட இலக்கண ஆசிரியர்கள் தம் மொழி சொற்களின் வேற்றுமைகளைச் சமஸ்கிருத முறையினைப் பின்பற்றி கருதிவிட்டனர்.

**வேற்றுமைத் தாமே ஏழென மொழிப**
**விளிகொள் வதன்கண் விளியொடு எட்டே**

மொழியின் செம்மைக்கும் கருத்து விளக்கத்திற்கும் துணையாய் உள்ள வேற்றுமை பற்றிய ஆராய்ச்சி தமிழில் தொல்காப்பியத்திற்கு முன்பே தோன்றியிருந்தது அறிய முடிகிறது.

"அறிஞர் சுப்பிரமணிய சாஸ்திரியர் பாணினியையும் அவர்க்கு முன்புள்ளவர்களையும் பின்பற்றித் தொல்காப்பியர், தமிழ் வேற்றுமைகட்கு இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை எனப் பெயரிட்டார் என்று கூறுகின்றார். (History of grammatical theories in tamil page vlog) தொல்காப்பியர் இரண்டாக்குவதே மூன்றாக்குவதே என வரிசைப்படுத்திக் கூறியுள்ளரேயன்றி இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை எனக் கூறினார் இல்லை அன்றியும் ஐ எனப் பெரிய வேற்றுமை ஒடுவெனப் பெயரிய வேற்றுமை என்றும் குறிப்பிட்டுள்ளமையை நோக்குதல் வேண்டும். பாணினி தொல்காப்பியருக்குக் காலத்தால் பிற்பட்டவர் என்பதனையும் அறிதல் வேண்டும்". எனவே வடமொழியைப் பின்பற்றித் தமிழ் இலக்கண நூலார் தமிழ் வேற்றுமைகளை வரிசைம்படுந்தினார் என்பதோ தொல்காப்பியர் பின்பற்றினார் என்த்தோ, முற்றிலும் பொருந்தாது எனலாம்.

உரிச்சொற்களையும் இடைச்சொல்லையும் கூறுமிடத்தில் உரிச்சொல் என்பது பகுதியையும் பிற கூறுகளை இடையில் என்று குறிப்பிடுகிறார். இடைச்சொல் என்றால் பெயரிடையேயும் வினையிடையேயும் சொற்றொடர் இடையேயும் பொருந்தி நின்று பொருள் விளக்குவதற்கு துணை புரிவது என்று பொருளாகும்.

**"இடையெனப் படுவ பெயரொடும் வினையொடும்**
**நடைபெற் றியலும் தமக்கியல் பிலவே**
**அவைதாம்**
**புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக் உதவுநவும்**
**வினைசெயல் மருங்கிற் காலமொடு வருநவும்**
**வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்**
**அசைநிலைக் கிளவி ஆகி வருநவும்**
**இசைநிறைக் கிளவி ஆகி வருநவும்**
**தத்தங் குறிப்பிற் பொருள்செய் குநவும்**
**ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவும் என்று**
**அப்பண் பினவே நுவலுங் காலை**
**அவைதாம்**
**முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்**
**தம்மீறு திரிதலும் பிறிதவண் நிலையலும்**
**அன்னவை யெல்லாம் உரிய என்ப"**

இடைச்சொற்கள் யாவை? அவை எவ்வாறு சொற்றொடரில் நின்று கருத்தை விளக்கப் பயன்படுகின்றன என்பனவற்றை தெளிவுறக் கூறுகிறார்.

"தமிழுக்கே உரிய முறையில் இடைச்சொல் உரிச்சொற்களை ஆராய்கின்ற முறைமை வடமொழி நூலாராம் யாசுகருடைய நிறத்தில் காணப்படுகின்ற தாம். ஆகவே யாசுகரைப் பின்பற்றித் தொல்காப்பியர் கூறியிருப்பார் என அறிஞர் சுப்பிரமணிய சாஸ்திரியர் கருதுகிறார்". (History of grammatical theories in tamil pg 198, 301) இது சாஸ்திரியாரின் வடமொழிப் பற்றினையே வெளிப்படுத்துகிறது.

பொருளதிகாரத்தில்

**மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே**

என்னும் நூற்பாவிற்கு உரிய உண்மையான பொருளைக் கண்டுணர்ந்து உரை எழுதாமல் வடமொழி சார்புடைய உரைகளை எழுதிவிட்டனர் எனலாம். தொல்காப்பியர் கூறும் கடவுள் தமிழ் கடவுளர்களையே எனலாம். பெயர் பலவாயினும் கடவுள் ஒருவரே என்ற உணர்வு தமிழர்களுக்கு என்றும் உண்டு.

மாயோன் என்றால் அழியாதவன், சேயோன் என்றால் சேய்மையில் உள்ளவன், அறிவுக்கு

எட்டாதவன், வேந்தன் என்றால் தலைவன் வருணன் என்றால் நிறங்களுக்குரியவன் என்று பொருள் கொள்ளுதல் வேண்டும். மாறாக,

“புராணக் கதைகளைக் கற்றறிந்த உரையாசிரியர்கள் தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய காலத்து வடமொழிக் கதைகளை உள்ளத்தில் கொண்டு உரை எழுதி விட்டனர்.” (தொல்காப்பிய ஆராய்ச்சி சி. இலக்குவனார் ப. 135) மேலும்

**மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய**
**முல்லை முதலாச் சொல்லிய முறையாற்**
**பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்**
**இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே.**
**மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே**

என்னும் நூற்பாவிற்கு இளம்பூரணரும், நச்சினார்க்கினியாரும் தமிழ் நூல்களுக்கு மாறாக ஆரியர் நெறிகளை தழுவி உரை எழுதியுள்ளார் எனலாம்.

நால்வர் என்பது நான்கு நில மக்கள் என்பது பொருள் கொள்வது நான்கு வருணத்தார் என்றும் மேலோர் என்பதற்கு மேன்மையானவர் என்று பொருள் கொள்வது இரு பிறப்பினரான மேல் வகுப்பு மூவர் என்றும் அவருள் சிறந்த பிராமணர் என்றும் பொருள் கூறியுள்ளது நோக்கத்தக்கதாகும்.

இது போன்று பல நூற்பாக்களின் உரையை எடுத்துக்காட்டலாம். குறிப்பாக பொருளதிகாரத்தில் சாதி, திருமணச்சடங்கு, குடி போன்ற பல நூற்பாக்களின் உரைகளை எடுத்துக்காட்டலாம், பொருளதிகாரத்தில் வருகின்ற பல நூற்பாக்கள் இடை செருகல் நூற்பாக்கள் என்று (71-85) அறிஞர்கள் கருதுவதுண்டு.

## முடிவுரை

முற்சங்க காலத்தில் தமிழ்மொழி தனித்தியங்கிய செம்மொழியாகத் திகழ்ந்தது. பிற்சங்க காலத்தில் ஆரியர்களின் கலப்பால் வடமொழி போன்ற மொழிகலப்பு ஏற்பட்டது எனலாம். ஆனால் தொல்காப்பியர் மொழிக்கலப்பில்லாமல் தொல்காப்பியத்தைப் படைத்தார் என்பதற்கு “பானைச் சோற்றுக்குப் பதச்சோறு போல“, சில சான்றுகளை இக்கட்டுரை முன்வைத்துள்ளது. வடமொழி எழுத்துக்களைச் சேர்த்து அவற்றைத் தமிழ்ப்படுத்திச் சொல்லாகிக்கொள்ளலாம். என்று கூறினார், தவிர வடமொழிக் கலப்பை ஏற்படுத்தியோ, வடமொழிப் புலவர்களைப் பின்பற்றியோ, தொல்காப்பியர் தொல்காப்பியம் செய்தார் என்பதனை முற்றிலும் மறுக்கிறது இவ்வாய்வுக் கட்டுரை. மேலும் தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய சில வடமொழிச் சார்புடைய உரையாசிரியர்கள் வடமொழியை உயர்த்திப்பிடிக்கும் நோக்கில் உரை எழுதியுள்ளனர்.

# ராசன் - ராயன் - சொல்லாய்வு

**முனைவர் மு. கற்பகம்**
*இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*தியாகராசர் கல்லூரி, மதுரை*

நம் மொழி அமைப்பில் சில சொற்களுக்கான மீளாய்வுத் தேடல் அச்சொல் குறித்தத் தெளிவான புரிதலை வழங்கும். ஒரு சொல்லினைப் பயன்படுத்துபவர்களின் பயன்பாட்டின் அடிப்படையிலோ அல்லது ஆய்பவர்களின் கருத்தியலைச் சார்ந்தோ அல்லது ஒருவரின் பின்புலத்தினைச் சார்ந்தோ அல்லது அறிவுத் திறனைச் சார்ந்தோ அச்சொல் உருவாக்கத்திற்கான தேடலும், திரித்தலும் நடைபெறுவதுண்டு. ஈண்டு தொல்காப்பியரின்

**“உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே”**
**(தொல்.சொல். 387)**

என்னும் கூற்றே ஏற்புடைத்தாகின்றது. அவ்வகையில் ராசன் என்ற சொல்லும் புதிய சிந்தனை ஓட்டத்தினைப் பெறுகின்றது.

ராசன் என்னும் சொல் அரசனைக் குறிப்பதான சிந்தனாவாதம் இருந்தபோதினும் ‘‘ராஜா’’ என்னும் வடசொல்லின் திரிந்த வடிவமே அல்லது அதிலிருந்து தோன்றிய வடிவமே ‘‘ராசன்’’ என்ற சிந்தனைக் கட்டமைப்பு நம் மொழியின் வளமையினையும் போக்கினையும் மாற்றுவதாக உள்ளது. இச்சொல் குறித்து விளக்குமுகமாக இவ் ஆய்வுக்களம் விரிகின்றது.

சொற்களைப் பெயர், வினை, இடை, உரி என்று பாகுபடுத்தும் தொல்காப்பியர்

**“எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே”**
**(தொல். சொல். 152)**

என்கிறார். இருப்பினும் பெயர், வினையினைப் போன்று பொருள் புலப்பாட்டுத்திறன் இடை, உரிக்கு இல்லை என்பதே தேற்றம். அதன்பொருட்டே

**“சொல்லெனப் படுப பெயரே வினையென்று**
**ஆயிரண் டென்ப அறிந்திசினோரே”**
**(தொல். சொல். 155)**

என்றும்

**“இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்**
**அவற்றுவழி மருங்கின் தோன்று மென்ப”**
**(தொல். சொல். 156)**

என்றும் குறிப்பிடுகிறார். ஆயினும் இடைச்சொற்கள் இலக்கணப் பொருளினையும் உரிச்சொற்கள் அகராதிப் பொருளினையும் உணர்த்துவனவென்பது உய்த்துணர்ந்து கற்கவல்லாருக்குப் புரியும்.

இந்நால்வகைச் சொற்கள் மட்டுமன்றி செய்யுளீட்டச் சொற்களாக நான்கு வகையினைத் தொல்காப்பியர்

**“இயற்சொற் றிரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று**
**அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே”**
**(தொல். சொல். 391)**

என்று குறிப்பிடுகிறார். இத்தகு இயல்பினையும் சிறப்பினையும் கொண்ட தமிழ் மொழியினைப் பாவணர் ‘‘தமிழ் தொன்று தொட்டுத் தென்னாட்டில் வழங்கி வருவதாகும். இன்றும் பிறமொழித் துணையின்றித் தனித்தியங்கும் ஆற்றலுடையதாலும் எளிய ஒலிகளும் காரணச்சொற்களுமே கொண்டுள்ளமையாலும் ஒருதனி இயற்கை மொழியாகும்’’ என்கிறார். (1943 : 6)

இத்தகு இயற்கை மொழியில் பெயர்கள் இடுகுறிப்பெயர் என்றும் காரணப் பெயர் என்றும் வழங்குதல் உண்டு. ஆனால் பாவணர் ‘‘தமிழ் ஓர் இயன்மொழியாதலால் அதிலுள்ள எல்லாச் சொற்களும் காரணக்குறியாம். இடுகுறியென்பது திரிமொழிகட்குரியது. வடமொழியிலக்கணத்தைப் பின்பற்றிப் பவணந்தியார் தமிழுக்கும் இடுகுறி கூறியது பெருந்தவறாம்’’ (1943) என்கிறார். நன்னூலர் இங்ஙனம் கருதியமைக்குத் தொல்காப்பியர் வகுத்த

**“மொழிப்பொருள் காரணம் வழிப்பத் தோன்றா”**
**(தொல். 388)**

என்ற விதியில் பொருளுக்கான காரணம் தெளிவாக வெளிப்படாது என்றமையால் என்பதனை தவறாகப் புரிந்தமையினாலே எனலாம். இவ்வாறு காரணக்குறிகளைக் கொண்ட இயன்மொழியில் உள்ள ‘‘ராசன்’’ என்பதும் காரணப் பெயரின் திரிந்த வடிவமாகும்.

பழந்தமிழ் இலக்கியங்களில் அரண், அரணம் என்ற சொல்வழக்காறு உண்டு. தொல்காப்பியம் உழிஞைத் திணையினைச் சுட்டுமிடத்து

**“முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்**
**அனைநெறி மரபிற்று ஆகும் என்ப”**
**(தொல். பொருள். 66)**

என்கிறது. இங்கு சுட்டப்படும் அரணம் அல்லது அரண் என்பது யாதெனின் மக்களைப் பாதுகாக்கின்ற இடம் அல்லது மக்கள் வசிக்கின்ற இல்லங்களை அடங்கிய ஊர்ப்பகுதியினைச் சுற்றி படைக்கலக் கருவிகளோடு வடிவமைக்கப்பட்ட மதில் என்பதாகும். இது அர் என்பதன் அடியாகத் தோன்றியதே. அர் என்பதன் நீட்சியான அரங்கு என்பதற்கு படைக்கலம் பயிலும் இடம், போர்க்களம் என்ற பொருள் உண்டு. (1985: 94 – 95) அரண் என்பது இன்றளவும் வழக்கில் உள்ளது. இதனை

“பாதுகாப்பு அரணா அவன் இருக்கான்” என்பதன்வழி அறியலாம்.

பழந்தமிழ் இலக்கியங்களில் நாற்பத்து நான்கு இடங்களில் அரண், (அரண், அரணம், அரண்கள், அரணால்) என்னும் சொல் கையாளப்பட்டுள்ளது . இங்கு அரணம் என்பது மதில், கோட்டை, வேலி, காவல், சுற்றுமதில், பாதுகாப்பு என்னும் பொருள்களில் வருகின்றது. பாதுகாப்பான இடத்திற்குப் பெயர் அரண் என்பதால் அதற்குள் இருந்து கொண்டு மக்களைப் பாதுகாப்பவன் அரைசன் / அரசன் என்றழைக்கப்பட்டான்.

சங்க இலக்கியங்கள் தொடங்கி நீதி இலக்கியம், பக்தி இலக்கியம், காப்பிய இலக்கியங்கள் வரையில் இச்சொல்லாட்சி காணப்படுகின்றது. அரைசு (புறம். 26 – 6, 42 – 5, 211 – 6, 354 – 1, பதி. 34 – 11, கலி. 105 – 1, 149 – 3) அரைச (கலி. 147 – 43, 44) அரைசன் (கலி. 130 – 4), அரைசர் (நற். 21 -3, 4) என்பன காணப்படுகின்றன. நீதி இலக்கியக் காலத்திலே அரைசன் என்ற சொல் அரையன் என்றானது. பழமொழி நானூற்றின் ஆசிரியர் பெயர் முன்றுரையரையனார். முன்றுரை என்ற ஊரை ஆண்ட அரசன் என்பதே குறிப்பு. அரையன் எனில் “தலைமைத் தன்மை வாய்ந்தவன்” என்பதாகும். இது பிற்காலத்தில் உயர்ந்த அதிகாதிகளுக்கு வழங்கப்படும் பட்டமாகக் கருதப்பட்டது.

பக்தி இலக்கிய காலத்தில் மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என அனைவரின் பதிகங்களிலும் அரையன் என்ற சொல்லாட்சி இடம்பெற்றுள்ளது. மாணிக்கவாசகர் “என்அரையன்” (திருவெ. 7) என்பதனை “என்தலைவன்” என்ற பொருளிலேயே பயன்படுத்தியுள்ளார். சம்பந்தர்

**“புள்ளனார்க்கு அரையன் இடம் புள்ளிருக்கு வேளுரே”** (2 தி.மு.பா:1)

என்பதில் அரசன் என்ற பொருளிலே கையாண்டுள்ளார். அம்மட்டுமன்றி வெற்பு அரையன், மலையரையன், இலங்கை அரையன் என்று திருமுறைகளிலும் புள் அரையன் (நாலா. 416 – 4, 479 – 1), கடல் அரையன் (நாலா. 2004 – 3) மலை அரையன் (நாலா. 2058 – 4, 2750 – 2) குலமகளுக்கு அரையன் (நாலா. 2080 – 1) என்று திவ்ய பிரபந்தத்திலும் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பழந்தமிழ் இலக்கியங்களில் சுட்டப்படும் அரைசன் பிற்காலத்தில் அரையன் என்றொலித்திருத்தல் வேண்டும். அரைசன் – அரசன் என்றானது போல் அரையன் – அரயன் என்றானது. அரைத்தான் – அரச்சான், வரைந்தான் – வரஞ்சான் என்பது வழக்கு. பேச்சொலிகளின் தாக்கத்தினால் இத்தகு மாற்றங்கள் ஏற்பட்டன.

மொழி வழக்கில் யகரத்திற்கு சகரமும், சகரத்திற்கு யகரமும் மாற்றொலிகளாக வருதல் உண்டு. முயல் – முசல், உயிர் – உசுரு, மயிர் – மசுரு. அரசன் – அரயன் என்ற சொல்வழக்கில் முதல் குறைந்து ரசன் என்றும் ரயன் என்றும் ஆகியிருத்தல் வேண்டும். ஏனெனில் அகரத்தினை முதலாகக் கொண்ட உறவுப் பெயர்களில் முதல் எழுத்தினைவிட்டு ஒலிக்கும் மரபு நம்மிடையே உண்டு.

அம்மா - ம்மா (போ – ம்மா)

அப்பா - ப்பா (வா - ப்பா)

அக்கா - க்கா (சொல்லு – க்கா)

அண்ணா - ண்ணா (வா - ண்ணா)

தமிழில் நெடில் முன்னும் குறில் பின்னுமாகத் தோன்றியதாகத் தெரிகிறது என்ற பாவணரின் கூற்று இங்கு எண்ணத்தக்கது. சொல் வழக்காற்றிலும் குறில், நெடிலாக ஒலித்தல் உண்டு. மகபூப் பாளையம் – மாப்பாளையம் மண்ணங்கட்டி - மண்ணாங்கட்டி . இவ்வடிப்படையில் ரசன் – ரயன் என்பன முதல் நீண்டு ராசன் – ராயன் என்றானது. பின்னர் வடமரபின் தாக்கத்தினால் ராஜன் என்ற வழக்கு தோற்றம் பெற்றது. ராசன் என்ற சொல்லாட்சியின் ஆதியாக இருப்பது அரசன் என்பதே. இதனை தேவநேயப் பாவணர் சான்றுகளுடன் நிறுவியுள்ளார். அரைசன் - அரசன் என்றாகியிருத்தல் வேண்டும்

அர் – அரண் – அரணம் – அரைசன் – அரசன் – ரசன் – ராசன்

↓

அரையன் – அரயன் – ரயன் – ராயன் என்ற படிநிலைகளில் இச்சொல்லின் பரிணாமம் உருவானது எனலாம். இலக்கணத்தோடு பொருந்தாத காரணக்குறி மரூஉச் சொற்களின் பாற்பட்டதே ராசன் – ராயன் என்பன.

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே என்பதனடிப்படையில் தமிழ்மொழி வழக்காற்றில் புதுப்புதுச் சொற்கள் தோற்றம் பெறுவதும் மாற்றம் பெறுவதும் இயல்பான ஒன்றே. அவ்வடிப்படையில் ராசன் – ராயன் என்பன முறையே அரைசன் – அரையன் என்பதன் மரூஉச் சொல்லேயன்றி பிறமொழிச் சொல் அன்று என்பதே தேற்றம்.

# சங்கப் புறநூல்களில் வணிகம்

**முனைவர் க. கனகலட்சுமி**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை*
*அரசு கலை அறிவியல் கல்லூரி, வீரபாண்டி*

## முன்னுரை

சங்க காலத்தில் வாழ்ந்த தமிழர் அன்றாடத் தேவையான அரிசி, பருப்பு, உப்பு, பால், தயிர், மீன், இறைச்சி போன்ற பொருள்களைக் காசு கொடுத்து வாங்காமல் பண்டமாற்று முறையைப் பயன்படுத்தியுள்ளார்கள். வாணிகப் பொருட்களெல்லாம் ஓரிடத்தில் உற்பத்தியாவதில்லை. ஆகையால் வெவ்வேறு இடங்களில் உற்பத்தி செய்த பொருட்களை ஓரிடத்தில் கொண்டு வந்து சேர்ப்பவர்களாக வாணிகர்கள் திகழ்கின்றனர். ஒரு நாட்டின் தொழில்களில் முக்கியத் தொழிலாக இடம்பெறுவது வணிகமாகும். இத்தொழில் பழங்காலத்திலே இருந்து வந்துள்ளது. இவ்வணிகம் உள்நாட்டு வணிகம், வெளிநாட்டு வணிகம் என்ற இருவகையில் நடைபெற்று வந்துள்ளதை சங்கப் புறநூல்களான பதிற்றுப்பத்து, புறநானூறு, மதுரைக்காஞ்சி, ஆற்றுப்படை நூல்கள் ஐந்து போன்ற நூல்களில் வணிகம் எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## தொழில் அடிப்படையில் அமைந்த புலவர்களின் பெயர்கள்

சங்ககாலப் புலவர்களின் பெயர்களிலேயே அவர்கள் செய்த தொழில் இடம்பெற்றுள்ளது. ‘‘பண்டைக் காலத்திலே வணிகத்தின் பெருமையை நன்குணர்ந்து அதனைத்தம் தொழிலாகக் கொண்டு வாழ்ந்த புலவர் பலர் உளர். கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார், நெல், புல், வரகு முதலிய தானியங்களை விற்ற கூல வாணிகனாவார். அறுவை வணிகன் இளவேட்டனார் என்பவர் ஆடை வியாபாரி. பலசரக்கு வியாபாரம் செய்தவர் மதுரைப் பண்ட வாணிகன் இளந்தத்தனார். மதுரைப் பெருங்கொல்லனார், உறையூர் இளம்பொன் வாணிகன் சாத்தங் கொற்றனார்’’[1] முதலியோரின் பெயர்களிலேயே தொழில் இடம்பெற்றுள்ளதை சு.வித்தியானந்தன் குறிப்பிட்டுள்ளார்.

## வெளிநாட்டு வணிகம்

தமிழ்நாட்டில் பிறநாட்டார் உள்ளத்தைக் கவரும் பொருட்கள் நிறைந்திருந்தன. அவற்றில் முக்கியமானவைகளாக முத்து, பவளம், வெண்துகில், சங்கு, மிளகு போன்றவைகள் திகழ்கின்றன. யவனர் என்பவர் கிரேக்கரும் உரோமரும் ஆவார். இவர்கள் பொன்னொடு வந்து மிளகொடு பெயர்ந்தனர் என்பதை,

**“யவனர் தந்த வினைமாண் நன்கலம்**
**பொன்னொடு வந்து கறியொடு பெயரும்”**
**(அகம்.149)**

என்று அகநானூறு குறிப்பிடுகின்றது. பெரிய மரக்கலங்களில் பொன்மிகுதற்குக் காரணமாகிய பண்டங்களை நாட்டிலுள்ள மக்கள் நுகரும்படிக் கொண்டு வந்ததை,

**“பொன்மலிந்த விழுப்பண்டம்**
**நாடார நன்கிழி தரும்**
**ஆடியற் பெருநாவாய்” (மதுரைக்.81-83)**

என்று மதுரைக் காஞ்சி குறிப்பிடுகின்றது. மேலும் துறைமுகங்களிலிருந்து மேலை நாட்டுக் குதிரைகளை மரக்கலங்களில் கொண்டு வந்ததை,

**“விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்**
**நனந்தலைத் தேஎத்து நன்கல னுய்மார்**
**புணர்ந்துடன் கொணர்ந்த புரவியோ டனைத்தும்”**
**(மதுரைக்.321-323)**

என்று குறிப்பிடுகின்றது. கரிகாலச் சோழனுடைய முன்னோர் கடற்காற்றின் உதவியினால் கடலில் நாவாய் ஓட்டினார் என்பதை,

**“நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி**
**வுளிதொழில் ஆண்ட உரவோன் மருக”**
**(புறம்.66:1-2)**

எனப் புறம் சுட்டுகின்றது. இனிய ஓசையையுடைய அலைகள் ஒலிக்கும் கடலிலே வந்த நல்ல ஆபரணம் வைக்கப்பட்டுள்ள பண்டக சாலையைப் பதிற்றுப்பத்து,

**“நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்”**
**(பதிற்.55:4)**

என்று குறிப்பிடுகின்றது. கப்பல்கள் புறப்படும் பொழுது முரசு முழங்குவதை,

**“இன்னிசைய முரசு முழங்கப்**
**பொன் மலிந்த விழுப்பண்டம்**
**நாடார நன்கிழி தரும்**
**ஆடியற் பெருநாவாய்”(மதுரைக் 80-83)**

என உணர்த்துகின்றது. கடலில் செல்லும் மரக்கலங்கள் வழிதவறிச் சென்றுவிடாமல் துறைமுகத்திற்கு

வருவதற்கு உயரமான கலங்கரை விளக்கங்கள் இருந்ததை,

**"வான மூன்றிய மதலை போல**
**ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி**
**வின்பொர சிவந்த, வேயா மாடத்து**
**இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி**
**உரவுநீர் அழுவத்து ஓடு கலங்கரையும்"**
(பெரும்பாண்.346-350)

என்று பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது. இதே கருத்தை வலியுறுத்தும் முகமாக, பெரும் பண்டகசாலைகளைக் காக்கும் காவலர் கொண்டிருந்த விளக்குகளைச் சிலப்பதிகாரத்திலுள்ள கடலாடு காதையில்,

**"இலங்குநீர் வரைப்பின் கலங்கரை விளக்கமும்"**
(சிலம்பு 6:141)

என்ற அடியால் விளக்கப்படுகிறது. சோழநாட்டில் கப்பல்களிலிருந்து வெளிநாட்டுப் பொருள்களைக் கொண்டுவந்து இறக்கியுள்ளனர். கப்பலின் பாய்கள் விரித்தபடியே இருந்தன. இதனை,

**"...................... கூம்பொடு**
**மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது**
**புகாஅர்ப் புகுந்த பெருங்கலத் தகாஅர்**
**இடைப்புலப் பெருவழிச் சொரியும்**
**கடற்ப.்.றா ரத்த நாடுகிழ வோயே"**
(புறம் 30:10-14)

என்று புறம் குறிப்பிடுகின்றது.

கடலில் போகின்ற மரக்கலங்கள் காற்றின் வேகத்தினால் திசை தப்பிவிடாமல், கப்பலோட்டும் பரதவர் அவைகளை அடக்கிச் செலுத்தினர் என்பதை,

**"முரசு கடிபடைய அருதுறை போகிப்**
**பெருங்கடல் நீந்திய மரம்வலி யுறுத்தும்**
**பண்ணிய விலைஞர் போல"** (பதிற்று.76)

என்று பதிற்றுப்பத்து பகர்கின்றது.

உலகில் பஞ்சம் உண்டானபோது காவிரியாறு பாய்ந்து நாட்டை வளப்படுத்தியதை,

**'நறையும் நரந்தமும் அகிலும் ஆரமும்**
**துறைதுறை தோறும் பொறைஉயிர்த்து ஒழுகி"**
(பொருநர்.238-239)

என்னும் பொருநராற்றுப்படை அடிகள் சுட்டுகின்றன. யவன நாட்டிலிருந்து இறக்குமதி செய்த பொருள்களில் உயர்வகை மதுவும் ஒன்றாகும். இதனை,

**"யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்**
**பொன்செய் புனைகலத் தேந்த நாளும்**
**ஒண்தொடி மகளிர் படுப்ப"**

எனப் புறம் கூறுகின்றது. மேற்கூறியவற்றால் சங்ககால மக்கள் வெளிநாட்டு வாணிகத்தில் மேம்பட்டிருந்தனர் என்பது தெளிவாகின்றது.

**உள்நாட்டு வாணிகம்**

ஒவ்வொருவரும் தத்தம் பொருள்களைக் கொடுத்துத் தமக்குத் தேவையான பொருட்களை மாற்றிக் கொண்டனர். மாறுதல் என்றால் வணிகம் செய்தல் என்ற பொருள்படுவதாயிற்று.

பொருநராற்றுப்படை மூலம் தேனையும், நெய்யையும், கிழங்கையும் கொடுத்து மீனின் கொழுப்பையும், நறவத்தையும் பெற்று கொண்டதையும், கரும்பையும், அவலையும் கொடுத்து கள்ளையும், மானிறைச்சியையும் பெற்றுக் கொண்டதையும் அறிய முடிகிறது (பொருந.214-221). முல்லைநில ஆய மகளிர் தயிர் கொண்டு சென்ற குடங்களில், பாண்டிய நாட்டு மருதநில அரிவையர் குளநெல்லை நிறைத்தனர் (புறம்-33) என்ற செய்தி பெறப்படுகின்றது. ஆயர்குலப் பெண்கள் அதிகாலையில் எழுந்து தயிரைக் கடந்து பூஞ்சுமட்டிலேற்றிச் சென்று விற்றுவந்த பணத்தைக் கொண்டு பொன் பொருள் வாங்காமல் நல்ல பாலெருமைகளையும், பசுவையும் வாங்கினாள் (பெரும்பாண்.158-166) என்பதையும் அறிய முடிகின்றது.

மதுரை நகரில் அமைந்த நாளங்காடி, அல்லங்காடி என்ற இருபெரும் கடைத் தெருக்களையும், அவற்றில் கட்டப்பட்டுள்ள பல்வேறு கொடிகளையும்,

**"ஓவுக் கண்டன்ன இருபெரு நியமத்து**
**சாறு அயர்ந்து எடுத்த உருவப் பல்கொடி**
-----------------------------------------------------------------
**பல்வேறு குழூஉக் கொடி பதாகை நிலைஇ"**
(மதுரைக் 365-373)

என்று மதுரைக்காஞ்சி அடிகள் சுட்டுகின்றன. இக்கொடிகள் நாட்டின் அறநெறி பிறழாத வாழ்வினைக் குறிப்பதாகவும், மன்னனுடைய போர் வெற்றியை உரைப்பதாகவும், மக்களின் இன்ப வாழ்வினைச் சுட்டுவதாகவும் அமைந்துள்ளன. மக்கள் பலமொழிகள் கலந்து பேசும் நகரமாக மதுரை விளங்குகின்றது.

"மதுரைக் கடைத்தெருவில் பல மொழிகள் பேசும் பன்னாட்டு மக்களும் நெருங்கிச் சூழ்ந்தனர். வெளிநாட்டு வணிகர்கள் அவர் நாட்டுப் பொருள்களை ஈண்டுக் கொணர்ந்து விற்பவர்களும் இங்குள்ளவற்றை மொத்தமாக வாங்கித் தங்கள் நாட்டுக்குக் கொண்டு செல்வோருமாக இவர்கள் இருதரத்தராயினர். மதுரை அல்லங்காடியில் கீழ்க்கண்டோர் சுறுசுறுப்பாக வாணிபம் செய்தனர். கூலவணிகர், சங்கு வளையல்

விற்போர், பொற்கொல்லர், பொன்னுக்கும் பொன் அணிகலன்களுக்கும் மாற்றுக் காண்போர், கலிங்கம் முதலிய துணிவகைகளை விற்று வாங்குவோர், செப்புப் பண்டங்களை விற்போர், சித்திரக்காரர்கள், நறுமணப் பொருட்களைத் தருவோர், பூவும் சந்தனமும் விற்போர் என இத்திறத்தவர் பலராயினர். புகார் அங்காடியில் மனமிகு துகள் எழும் சந்தனக் குழம்பும் பூவும் அகில் முதலிய வாசனைக் கட்டைகளும் மிக்கு விற்கப்பட்டன. விழாக்காலங்களில் (சிறப்பாக இந்திர விழாக் காலத்தில்) மிகுதியான பூ விற்கப்பட்டமையால் கடைத்தெருவே மலர்வனம் எனப் பொலிந்தது”[2] என்கிறார் ந. சுப்பிரமண்யன்.

மதுரையிலுள்ள அங்காடித் தெருக்களைச் சுட்டும்போது,

**“மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்**
**நாளங்காடி நனந்தலை கம்பலை”**
**(மதுரைக் 429-430)**

என்ற அடிகளின் மூலம் பெருத்த ஆரவாரமுடையதாகக் காணப்படுவதைச் சுட்டப்படுகிறது. இதே கருத்தோடு தொடர்புடையதாக,

**“நாள்மகிழ் இருக்கை நாளங்காடி”**
**(சிலம்பு 5:196)**

என்னும் சிலப்பதிகார அடி காணப்படுகின்றது.

பிறர் பொருளையும் தம் பொருள் போல் பேணிச் செய்தால் அதுவே வணிகருக்குரிய நல்ல நெறியாகும் என்பதை வள்ளுவர்,

**“வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தமபோல் செயின்”** (குறள்-120)

என்று வலியுறுத்தியுள்ளார். இக்குறள் வணிகர்கள் நடுவுநிலை உடையவர்களாக நடந்து கொள்ள வேண்டும் என மொழிகிறது. இவ்விலக்கியச் சான்றுகளின்படி, சங்ககால மக்கள் உள்நாட்டு வாணிகத்தில் மட்டுமின்றி, வெளிநாட்டு வணிகத்திலும் சிறந்து விளங்கி, அதன்மூலம் தங்கள் வாழ்வின் வளங்களை மேம்படுத்திக் கொண்டனர் என்பது தெளிவாகின்றது.

## முடிவுரை

சங்க காலத்தில் வணிகர்கள் கால்நடைகளையும், வண்டிகளையும் பயன்படுத்தியுள்ளார்கள். தற்காலத்தில் உந்து வண்டிகள், ரெயில் வண்டிகள், வானவூர்திகள் போன்ற விரைவான போக்குவரத்துச் சாதனங்களால் வணிகம் செய்யப் படுகின்றனர். ஒரு நாட்டில் கிடைத்த பொருட்களை அந்நாட்டு மக்கள் மட்டும் நுகராமல் பிற நாடுகளுக்கு வணிகர்கள் எடுத்துச் சென்று விற்று வந்துள்ளார்கள். வெளிநாட்டு வணிகத்தால் பொன் போன்ற விலையுயர்ந்த பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. உள்நாட்டு வணிகத்தால் நாளங்காடி, அல்லங்காடி போன்ற கடைத்தெருக்கள் இருந்துள்ளன என்பதை இலக்கியங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

## அடிக்குறிப்புகள்

1. சு. வித்தியானந்தன் தமிழர் சால்பு பக் 145-146
2. ந.சுப்பிரமணியன்-சங்ககால வாழ்வியல் பக்.307-308

Vol. 9 Special Issue 1 October 2024 E-ISSN: 2456-5571

# “என்மகஜெ” புதினத்தில் சூழலியல் சிக்கல்கள்

**முனைவர் சு. முருகவேல்**
*தமிழ் உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*திருநெல்வேலி தெக்ஷ்ண மாற நாடார் சங்கம் கல்லூரி*
*தெ.கள்ளிகுளம், திருநெல்வேலி*

**ஆய்வுச்சுருக்கம்**
இன்று கவனிக்கத்தக்க பிரச்சனைகளுள் ஒன்றாகத் திகழ்வது சூழலியல் சிக்கல்கள். சூழலியல் பிரச்சனையை மையமாகக் கொண்டு மலையாளத்தில் அம்பிகாசுதன் மாங்காடுவால் எழுதப்பட்ட ‘என்மகஜெ’ என்னும் புதினம் தமிழில் சிற்பி பாலசுப்பிரமணியத்தால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இப்புதினத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள நவீன வேளாண்மை முறையில் பயன்படுத்தப்படும் பூச்சிக்கொல்லியான ‘எண்டோசல்பான்’ (Endosulfan) தெளிப்பால் ஏற்படும் சூழலியல் சிக்கல்களை வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

சூழலியல் சிக்கல்களிலிருந்து சமுதாயத்தை மீட்டெடுக்க வேண்டுமெனில் சூழலியல் சார்ந்த விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். அத்தகைய விழிப்புணர்வைக் கொண்டு வர சூழலியல் சார்ந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அந்தவகையில் கேரள மாநிலத்தில் காசர்கோடு மாவட்டத்தில் ‘என்மகஜெ’ என்னும் ஊராட்சியில் நடைபெற்ற உண்மைச்சம்பவத்தை மையமிட்டு எழுதப்பட்ட ‘என்மகஜெ’ புதினத்தில் காணப்படும், பூச்சிக்கொல்லியால் மனிதர்களுக்கும் மனிதரல்லா உயிரினங்களுக்கும் ஏற்படும் சிக்கல்களையும், ‘எண்டோசல்பான்’ என்னும் பூச்சிக்கொல்லி குறித்த பதிவுகளையும் ஆராய்வதாய் இக்கட்டுரை அமைகிறது.

**சூழலியல்**

சூழலியல் என்பது சுற்றுச்சூழல் சார்ந்த அறிவியல். உயிரினங்களுடன் சூழ்நிலைக்கும் உள்ள தொடர்பை விளக்கும் அறிவியல் பிரிவாகும். தாவரங்கள், விலங்குகள் அடங்கிய அனைத்து உயிரினங்களுடன், அவற்றுடன் தொடர்பு கொண்டிருக்கும் அனைத்து இயற்பியல் கூறுகளையும் சூழலியல் எனலாம்.

சூழலியலின் அடிப்படைக்கூறுகள் உயிரின வகைகளும் அவற்றின் தொகைகளும் குறித்த ஆய்வு ஆகும். உயிரினத்தொகை சமுதாயம் எனும் நோக்கில் சூழலியல் கல்வி என்பது உயிரினங்கள் எங்கு எவ்வாறு வாழ்கின்றன என்பதை ஆயும் இயற்கை வரலாறு (Natural History) எனும் துறையிலிருந்து கிளைத்தது எனலாம். மேலும் உயிரினப்பன்மை, உயிரினச் சமூகங்களின் கட்டமைப்பு ஆகியன குறித்த ஆய்வுகளும் இத்துறையில் மேற்கொள்ளப்படுகின்றன”[1] என சுற்றுச்சூழல் களஞ்சிய அகராதி விளக்கம் தருகிறது.

**புதினத்தில் பூச்சிக்கொல்லி**

‘என்மகஜெ’ புதினத்தில் நவீன வேளாண்மையில் பயன்படுத்தப்படும் ‘எண்டோசல்பான்’ என்னும் பூச்சிக்கொல்லியால் ஏற்படும் சூழலியல் சிக்கல்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அப்பூச்சிக்கொல்லியால் சுற்றுச்சூழல் மட்டுமின்றி மனிதர்களும், விலங்கினங்களும், பிற உயிரினங்களும் பாதிப்புக்குள்ளாகின்றன.

‘எண்டோசல்பான்’ என்பது ஒரு வகையான பூச்சிக்கொல்லி மருந்து. இது பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை அழிப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது. ஓர் ஆக்கவுரிமை நீங்கிய ஆர்கனோகுளோரின் பூச்சிக்கொல்லியும், மென்னுண்ணிக் கொல்லியும் ஆகும்.[2]

‘எண்டோசல்பான்’ என்பதற்கு “எண்டோசல்பான் என்பது உயிரினங்களில் உடல்களில் நீடித்துத் தங்கி இருக்கக்கூடிய உயிர்மமாசு என்ற பிரிவினைச் சார்ந்த மிகக் கொடிய நஞ்சு. இது உயிரினங்களில் உடலில் உயிரியல் கும்முதல் முறையில் உடலில் தொடர்ந்து சேர்ந்து கொண்டே இருக்கும்”3 என்று விளக்கம் தருகிறார் பாமயன்.

‘எண்டோசல்பான்’ பற்றி, “தவிடு போன்ற நிறமுள்ள பொடி. உடம்பில் மேல் எங்காவது பட்டால் சிவந்து தடித்துக் கொள்ளும். காயத்தில் பட்டால் மயக்கம் வந்துவிடும். டி.டி.டி. போல ஆர்கனோ குளோரின் வகையைச் சார்ந்த ஒரு ரசாயனப் பூச்சிக்கொல்லி மருந்து” (எ.ஜெ.ப.169) என எண்டோசல்பானைப் பற்றி ‘என்மகஜெ’ புதினம் கூறுகிறது.

எண்டோசல்பானின் நஞ்சுத்தன்மையைப் புதினம், “மருந்து என்று சொல்லிப் பல வருஷங்களாக விவசாயத்துறை உழவர்களுக்கு கொடுக்கும் எண்டோசல்பான் மருந்தல்ல. கொடிய விஷமாகும்.

எண்பதுகளில் நம் நாட்டில் இம்மருந்து எண்ட்ரினாக இருந்தது. பிறகு ஃப்யூரிடான் வந்தது. இதையெல்லாம் குடித்துதான் அப்போது ஆட்கள் தற்கொலை செய்து கொண்டார்கள்.'' (எ.ஜெ.ப.221) என்ற வரிகளில் எடுத்துக் கூறுவதன் மூலம் அறியலாம். மேலும்,

''எண்டோசல்பான் குரோமோசோம்களில் ஜீன்களில், அவ்வளவு ஏன் டி.என்.ஏ. அமைப்பிலும் கூட இந்த விஷம் எல்லை மீறுகிறதாம்'' (எ.ஜெ.ப.172) என்ற வரிகளின் மூலம் எண்டோசல்பானின் கொடிய விஷத்தன்மையைப் புதினம் பதிவு செய்கிறது.

### மனிதர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்

நவீன விவசாய முறைகளில் இரசாயன உரங்கள் மற்றும் இரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகள் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. தொடர்ச்சியாக பயன்படுத்தப்படும் பூச்சிக்கொல்லிகள் மண் மற்றும் நீரில் தங்கி விடுகின்றன. பின்னர் இவை உணவுப் பொருட்களின் மூலம் மனிதனின் உடலுக்குள் சென்று பலவித நோய்களையும் குறைபாடுகளையும் உண்டு பண்ணுகின்றன. இவ்வித மருந்துகளால் மனிதன் மறைமுகமாக விஷத்தினை உட்கொள்கிறான். இது அவனோடு மட்டும் நின்றுவிடாமல் மரபணுவின் மூலம் பல தலைமுறைகளுக்கும் தொடர்கிறது.

இதனால் தான், ''பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தும் விவசாயி, போராளியாக பார்ப்பதற்கு மாறாக சூழலியல் எதிரியாக கருதப்படும் சூழல் இருக்கிறது''[4] என சுப்ரபாரதிமணியன் கூறுகிறார். பூச்சிக்கொல்லிகளால் மனிதனுக்கு ஏற்படும் சிக்கல்களைப் புதினம் பதிவு செய்கிறது. இதனை, ''இந்த நாட்டுப்பகுதியில் நோய்களுக்குக் காரணம் முந்திரித் தோட்டங்களில் தெளிக்கப்படும் எண்டோசல்பான் (பூச்சிக்கொல்லி மருந்து)'' (எ.ஜெ.ப.142) என்ற புதினவரிகள் மூலம் அறியலாம்.

'எண்டோசல்பான்' என்னும் பூச்சிக்கொல்லியை நெடுங்காலமாக பயன்படுத்துவதால், குழந்தைகள் பிறக்கும்போதே குறைபாடுடன் பிறத்தல் போன்ற விளைவுகள் ஏற்படுகின்றன என்பது ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளன. ''மண்ணிலோ, தண்ணீரிலோ ஏதோ பெரிய பாய்சன் (விஷம்) பரவி இருக்கிறது. ஆனால் அது என்னவென்று புரியவில்லை. கொஞ்சம் முன்னால் பார்த்த குழந்தை இருக்கிறதே - அபிலாஷ் - சின்னதாக இருந்தபோது குரங்கைப் போலவே இருந்தது. இப்பொழுதுதான் ஒரு மனிதக் கோலத்துக்கு வந்திருக்கிறது. எவல்யூஷன் தியரி (பரிணாமக்கொள்கை)யைத் தலைகீழாய்ப் பண்ணுகிற அந்த சக்தி என்னப்பா? எனக்கு ஒரு பிடியும் கிடைக்கவில்லை. (எ.ஜெ.ப.102) என்ற புதின வரிகள் வழி அறியமுடிகிறது.

பெண்களுக்கு ஒழுங்கான மாதவிடாயே அடுத்த சந்ததிக்கு வழிவகுக்கும். ஆனால், அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த மாதவிடாயை, பூச்சிக்கொல்லியின் நச்சானது பாதிக்கிறது. இதனை, ''எண்டோசல்பான் பத்திருபது வருடங்களாக இங்கே தெளித்துக் கொண்டிருக்கிறார்கள். நீண்ட காலம் மண்ணில் இந்த விஷம் அழியாமல் கிடக்கும். இது போன்ற ஆல்கனோ குளோரின்களுக்கு ஹார்மோன்களை ஆளுகின்ற ஆற்றல் உண்டு. அதனால் உயிர்ச்செயல்பாடுகளின் ஒழுங்கு தவறும். பெண்களின் மாதவிடாய் ஒழுங்கு தவறிப்போகும்.'' (எ.ஜெ.ப.172) என்ற புதின வரிகள் புலப்படுத்துகின்றன.

'எண்டோசல்பான்' பயன்பாட்டால் பெண்களுக்கு கருச்சிதைவும், புற்றுநோயும் ஏற்படுகின்றன. இதனைப் புதினத்தின், ''மெடிக்கல் புத்தகங்கள்,. இதழ்கள் எதிலும் நான் காணமுடியாத ஒரு நோய் இந்தப் பகுதியில் நிறைய நிறைய.. என் மருந்து எதுவும் இசையவில்லை கருச்சிதைவும், புற்றுநோயும் கொஞ்சம் உண்டு.'' (எ.ஜெ.ப.102) என்ற வரிகள் புலப்படுத்துகின்றன.

### பிற உயிரினங்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்

வயல்களில் தெளிக்கப்படும் பூச்சிக்கொல்லிகள் நீரில் கலக்கிறது. நீர்நிலைகள் நிறைந்த இவ்வுலகில் நீரில் ஏற்றப்படும் நஞ்சு, சிறிது சிறிதாக நீரில் வாழும் பாசிக்கும், அதை உண்ணும் சில பூச்சிகளுக்கும், அதை உண்ணும் மீன்களுக்கும், மீனை உண்ணும் பறவைகளுக்கும் பறவைகளை உண்ணும் மனிதனுக்கும் என பரவுகிறது. ஒவ்வொரு நிலையிலும் பூச்சிமருந்தின் அளவு ஏற்றமடைந்து இறுதியில் நஞ்சு பயப்பதாய் உள்ளது. இவ்வாறு பூச்சிக்கொல்லிகளால் மனிதரல்லா உயிரினங்களுக்கு பலச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. அதிலும் குறிப்பாக 'எண்டோசல்பான்' என்னும் பூச்சிக்கொல்லியால் மனிதர்களுக்கும் மனிதரல்லா உயிரினங்களுக்கும் பற்பலச் சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பது புதினத்தில பதிவு செய்யப்பட்டுள்ளன.

எண்டோசல்பான் பூச்சிக்கொல்லியால் மீன்கள் அழிக்கப்படுவதை, ''இதுலே நெறைய மீன் இருந்தது முந்தி. குடிக்கவோ, குளிக்கவோ, மீனும் தவளையும் முளைக்காத தண்ணியாகிட்டதே'' (எ.ஜெ.ப.88) என்ற புதினவரிகள் புலப்படுத்துகின்றன. 'எண்டோசல்பான்' என்னும் பூச்சிக்கொல்லி நீருடன் கலக்கும்போது, தவளையை அழிக்கிறது. இதனை, ''மீனும் தவளையும் பாம்பும் எதுவும் இப்போது

இந்தத் தண்ணீரில் வளர்வதில்லை. முன்பு நிறைய இருந்தது.'' (எ.ஜெ.ப.115) என்ற புதின வரிகள் வழி அறியமுடிகிறது.

'எண்டோசல்பான்' நீருடன் கலக்கும் போது ஏற்படும் பாதிப்பை, ''கடல், ஏரி, குளம், ஆறு, கால்வாய் போன்ற நீர்நிலைகளில் பூச்சிக்கொல்லிகள் கலக்கும்போது, நீரில் வாழக்கூடிய மீன், தவளை, ஆமைகள் போன்றவை பெரிதும் பாதிக்கப்படுகின்றன''[5] என்று லிவின் தேவசகாயம் கூறுகிறார்.

தேனுக்கு இரத்தத்தைச் சுத்தப்படுத்தக்கூடிய குணம் உண்டு. நாக்கு, தொண்டை, குடல் போன்ற பாகங்களில் காணப்படும் புண்களைக் குணப்படுத்துகிறது. மருத்துவ குணமுடைய தேனைக் கொடுக்கும் தேனீயை 'எண்டோசல்பான்' அழிக்கிறது. ''எண்டோசல்பான் என்பது அதன் பெயர். தேனீக்களை ஒழித்துக் கட்டும் மருந்து'' (எ.ஜெ.ப.123) ''சொர்க்கத்தில் தேனீ வளர்ப்பவர்கள் நாங்கள் சில வருஷங்களாக எங்களுக்கு தேனீ கிடைப்பதில்லை. இந்த விஷம் ஷ்பிரே செய்யும் போது தேனீக்கள் செத்து போகின்றன. இனி இந்த விஷத்தை இந்த நாட்டில் ஷ்பிரே செய்ய நாங்கள் விடமாட்டோம்'' (எ.ஜெ.ப.127) என்ற புதினத்தின் வரிகளின் மூலம் எண்டோசல்பானால் தேனீக்கள் அழிக்கப்படுகின்றன என்பது புலனாகிறது.

பூச்சிக்கொல்லியானது தாவரங்களையும் பாதித்து அழிக்கிறது. உபயோகிக்கப்படும் மருந்துகளின் நச்சானது, பயிர்ப்பாகங்கள் மேல்பரப்பிலும், உட்திசுக்களிலும், நீடித்திருக்கக்கூடும். மனிதனுக்கும் கால்நடைகளுக்கும் உணவுக்காகப் பயன்படுத்தப்படும் பொருட்களில் நச்சானது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் இருக்கக்கூடாது என்று வரையறை செய்யப்பட்டுள்ளது. தாவரங்கள் எண்டோசல்பானால் அழிக்கப்படுவதை,''தாவரங்களுக்கும் விஷ பாதிப்பு உண்டு. விளைவு குறைவு. ஆரோக்கியம் குறைகிறது. சிலது வேகமாக கரிந்து போகிறது. இதையெல்லாம் ஆராய்ந்து எடுத்துச் சொல்ல வேண்டிய விஞ்ஞானிகள் எண்டோசல்பானுக்கு ஊடநயெ உாவை கொடுத்திருக்கிறார்கள். திருட்டுப் பயல்கள்.'' (எ.ஜெ.ப.151) என்ற புதின வரிகள் வழி அறியலாம்.

**முடிவுரை**

வேதிப்பொருளான பூச்சிக்கொல்லிகளில் ஒன்று 'எண்டோசல்பான்'. இது அளவுக்கு அதிகமாக பயன்படுத்தப்படும் போது, மனிதன் உயிர்வாழத் தேவையான அனைத்துப் பொருட்களிலும் கலந்து நோய்களை ஏற்படுத்துகின்றன என்பதைப் புதினம் புலப்படுத்துகிறது. மனிதனுக்கு இயற்கையாகவும், மனிதனாலும் பலச் சிக்கல்கள் ஏற்பட்டுவரும் நிலையில், சுற்றுச்சூழல் மாசுபாட்டில் ஒன்றான பூச்சிக்கொல்லிகளைத் தெளிப்பதால் மனிதர்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் பலச் சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பது புதினத்தில் வழி அறியமுடிகிறது.

**குறிப்புகள்**

1. சுற்றுச்சூழல் களஞ்சிய அகராதி, தொகுதி: 1, பக்.348-349
2. http://ta.wikipedia.org
3. பாமயன், வேளாண் இறையாண்மை, ப.145
4. சுப்ரபாரதிமணியன், சூழல் அறம் (சுற்றுச்சூழல் கட்டுரைகள்), ப.45
5. ஹெச்.லிவின் தேவசகாயம், பயிர்களைத் தாக்கும் பூச்சிகளும் பீடைகளும்,ப.214

**துணைநூற்பட்டியல்**


1. அம்பிகாசுதன் மாங்காடு (மலையாள மூல ஆசிரியர்) சிற்பி பாலசுப்பிரமணியம் (தமிழில்)., 'என்மகஜெ', கவிதா வெளியீடு, சென்னை, 2013.
2. கிருட்டினமூர்த்தி. சா.,சாமுவேல் நைட்.ஜெ.ம., (பதி.ஆ) சுற்றுச்சூழல் களஞ்சிய அகராதி, சுற்றுச்சூழல் அறிவியல் சிறப்புத் தகுதிக்கான திறன் மையம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை, 2007.
3. சுப்ரபாரதிமணியன்., சூழல் அறம் (சுற்றுச்சூழல் கட்டுரைகள்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை,2014.
4. பாமயன்., வேளாண் இறையாண்மை, தமிழினி வெளியீடு, சென்னை, 2011.
5. லிவின் தேவசகாயம். ஹெச்., பயிர்களைத் தாக்கும் பூச்சிகளும் பீடைகளும், சீயோன் பதிப்பகம், சென்னை, 1997.

# கம்ப இராமாயணத்தில் இராமனின் தனிமனித ஒழுக்கம்

**ஐ. மகாலட்சுமி,** எம்.ஏ.,எம்.ஃபில்.
*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*மாநிலக்கல்லூரி, சென்னை*

**முனைவர் சி. குமார்**
*இணைப்பேராசிரியர்*

ஒவ்வொரு தனி மனிதனின் ஒழுக்கமே சமூகத்தின் ஒழுக்கமாக அமைகிறது.

**ஒழுக்கம் விருப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்** (குறள் 131)

என்பது வள்ளுவனின் கோட்பாடு

ஒழுக்கம் எல்லார்க்கும் சிறப்பினைக் கொடுப்பதால் அதனை உயிரைவிட மேலானதாகக் கருதிக் காத்தல் வேண்டும். ஒழுக்கத்தை உயிராய்க் காக்காதவர்கள் எத்தகைய இழிவான நிலையை அடைவார்கள் என்பதையும் அவர்கள் சமூகத்தில் அடைந்த துன்ப நிலைகளையும் நம்முடைய இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. ஒழுக்கத்தைப் போற்றியவர்கள் காலங்காலமாக மக்கள் மனதில் நீங்கள் இருப்பதையும் அந்த வகையில் இராமன் சமூகத்தின் அனைவரின் உள்ளத்திலும் கற்புக்குச் சீதை. ஒழுக்கத்திற்கு இராமன் அண்ணன் தம்பி பாசத்திற்கு இராமன், இலக்குவன் என்ற பல நிலைகளில் தன் நிலை திரியாது விளங்கிய இராமனின் ஒழுக்க நலன்களை ஆராய முற்படுகிறது இக்கட்டுரை.

ஒரு மனிதனின் வாழ்க்கை ஒரு நூறு ஆண்டுகளுக்குள் முடிந்து விடுகின்றது. இக்குறுகிய காலத்திற்குள் அவன் வாழ்க்கையில் ஒரு சில நாட்கள் அல்லது திங்கள்கள் அல்லது ஒரு சில ஆண்டுகள் மிக முக்கியமானவையாக அல்லது மிக இன்பம் பயக்கக் கூடியவனாக அமைந்து விடுகின்றன. ஆனால் கம்பர் படைத்த காப்பியமோ எக்காலத்தும் மக்களுக்கு இன்பம் பயக்கக் கூடியதாக ஒழுக்கத்தைப் போதிக்கக் கூடியதாக அமைந்துள்ளது,

முன்னொரு காலத்தில் தேவர்கள் எல்லோரும் இராவணன் முதலிய அரக்கர்களின் கொடுமைகள் பொறுக்க மாட்டாமல் ஸ்ரீ மகா விஷ்ணுவைச் சரணமடைந்து" துஷ்டநிக்கரக சிஷ்டபரிபாலனம்" செய்து அருளுமாறு வேண்டினார்கள். அத்திருமால் அவ்வேண்டுகோளுக்கிரங்கி உலகக்காப்பின் பொருட்டுத் தனது அம்சமாக நான்கு ரூபமாகத் தசரத மகாராசனிடத்தில் அவதரித்துத் தீயோரை அழித்து நல்லோரைப் பாதுகாப்பதாக அருளிச் செய்தான்.

இராமபிரான் இளமையிலேயே விசுவாமித்திரர் மகாமுனிவனுடைய வேள்வியை பாதுகாத்தற்பொருட்டு அம்முனிவனது விருப்பத்தின்படி அவன் பின்னே இலக்குவன் உடன் வர இருவரும் சென்றார்கள் வழியில் எதிர்ப்பட்ட தாடகையென்னும் கொடிய அரக்கியையும், அந்த யாகத்தில் தீங்கு விளைவிக்க வந்த தாடகாகுமரனான சுபாகு முதலிய பல அரக்கர்களையும் கொன்றனர். தாடகையின் மற்றொரு குமாரனான மாரீசனை வாய்வ்யாஸ்திரத்தாற் கடலிலே தள்ளி விட்டு யாகத்தை நிறைவேற்றினார். அம்முனிவனுடன் விதேக தேசத்து மிதிலா நகரத்துக்குச் சென்றார்கள். அங்கு ஜனகமகாராஜன் வளர்த்த மகளான சீதைக்கு திருமணம் செய்தல் பொருட்டு சிவதநுசை வைத்திருந்தார்கள். அதை யார் வளர்க்கிறார்களோ அவர்களே சீதையை திருமணம் செய்து கொள்ளலாம். அத்தகைய சிவதநுசை இராமன், "எடுத்து கண்டனர் இற்றது கேட்டனர்" எடுத்த மாத்திரத்தில் அதை வளைத்து முறித்தார். இலக்குமியின் அவதாரமான அந்த ஜானகியைத் திருக்கல்யாணம் செய்து கொண்டான். அப்பொழுது அங்கு சனகன் தான் பெற்ற மகளான ஊர்மிளையை லட்சுமணனுக்கும், தன் தம்பி மகள் மாண்டவி, கருத கீர்த்தி என்பவர்களைப் பரதன், சத்துருகனன் இருவருக்கும் கொடுக்க அவர்களுக்கும் திருமணம் நடந்தது. தசரதனுக்கு பல மனைவியர் இருக்க அவள் பெற்ற பிள்ளைகள் வாழ்க்கைத் துணையாக தங்களுக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வது தமிழர் பண்பாட்டின் தனிச் சிறப்பாகும். பின்பு மிதிலையினின்றும் மீண்டு வருகையில், வலிய வந்து எதிரிட்ட பரசுராமன் ஸ்ரீ ராமர் வென்று செருக்கையடக்கி அனுப்பி விட்டு, அயோத்தி சேர்ந்தனர்.

கைகேயி தன்னைக் காணவந்த இராமனை நோக்கி, மைந்தனே! உன் தந்தை உனக்குக் கூறிச் சென்றது ஒன்றுண்டு என்றனள். அது கேட்ட இராமன்

**"தந்தையும் தாயும் நீரே தலைநின்றேன் பணியின்"**
**என்றனன் அதற்குள்,**
**"ஆழிசூழ் உலகமெலாம் பரதனேயாள நீ போய்த்**
**தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்குந் தவமேற் கொண்டு**
**பூமி வெங்கானம் நண்ணிப் புண்ணியத் துறைகளாடி**
**ஏழரண்டாண்டின் வாவென்று ஏவினன் அரசன்"**

என்றாள்

விதி வலியது என்பதால் தான் வள்ளுவனும்

**"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
**சூழனிந் தான்முந் தோறும்."** (குறள் 380)

என்று குறிப்பிடுகின்றார். ஊழைவிட மிகுந்த வலிமையுடையவை எவை இருக்கின்றன? அதைத் தவிர்பதற்கு ஏற்ற உபாயத்தைச் செய்தாலும் அது அதனைத் தடைப் படுத்திக் கொண்டு முன்வந்து நிற்கும். ஊழ்வினை உறுத்து வந்த காரணத்தால் இராமபிரான் கைகேயிக்குத் தந்தை கொடுத்திருந்த இரண்டு வரங்களையும் நிறைவேற்றுதலில் நிமித்தம் அக்கைகேயியின் சொல்லால் அவள் மகளான பரதனுக்கு உரியதாகும் படி அயோத்தியின் அரசாட்சிப் பொறுப்பைத் தான் கைவிட்டுப் பதினான்கு வருடம் வனவாசம் செய்ய உடன்பட்டு மனைவி சீதையோடும் தன்னைவிட்டுப் பிரியாத தம்பியான இலக்குமணனோடும் புறப்பட்டான்.

இராமன் காட்டிற்குச் செல்லும் செய்தி கேட்ட கோசலை,

**"ஏங்கினேன் இளைத்தாள் திகைத்தாள் மனம்**
**வீங்கினாள் விம்மினாள் விழுந்தாள்"**

இராமன் "நான் கானகம் ஆளப்போவது உறுதி இதைவிட யான் பெறப்போகும் பேறு என்னே? விண்ணும், மண்ணும், கடலும் மற்றும் எண்ணற்ற பூதங்களும் அழிந்தொழியினும் தந்தையின் கட்டளையை மறுப்பனோ? இதற்காக உள்ளம் அழியாதே" என்றெல்லாம் பொய்மையொழிந்த மெய்மைச் சொற்களைக் கூறி அவளைத் தேற்றுகிறான்.

இராமன், இலக்குவனையும் சீதையையும் அழைத்துக் கொண்டு கானகம் செல்கிறான். அவனுடைய செம்மாந்த ஏறு போன்ற பிற நடையை,

**"வெய்யோன் ஒளிதன் மேனியின் விரிசோதியின் மறைய,**
**பொய்யே எனும் இடையாளொடும்,**
**இளையானொடும் போனான்**
**மையோ, மரகதமோ, மறி கடலோ, மழை முகிலோ,**
**ஐயோ, இவன் வடிவு!' என்பது ஓர் அழியா**
**அழகு உடையான்".**

என்று பலவாறு புகழ்ந்து போற்றிய அயோதிய நாட்டு மக்கள் அனைவரும் வருந்தி நின்றார்கள். கானகம் செல்லும் வழியிடையே "குகனொடும் ஐவர் ஆனோம்" என்று குகனோடு தோழமை கொண்டு அவன் உதவியால் கங்கையைக் கடந்து சித்திரக்கூட்டத்தில் வசித்து வந்தார்கள். அப்போது தந்தை இறந்த செய்தியை வந்து சொல்லி அயோத்திக்கு எழுந்தருளி அரசாள வேண்டும் என்று வேண்டிய பரதனுக்கு இன்சொற்கூறிப் பாதுகை கொடுத்து அனுப்பியபின் தண்டகாரணியம் சேர்ந்தார்கள்.

அங்கு விராதனைக் கொன்று சரபங்கமுனிவருக்கு முத்தி அளித்தனர். பிறகு அசுநீதியரைத் தரிசித்துக் கோதாவரி நதி தீரத்திற் பஞ்சவடி ஆசிரமத்தில் வசிக்கலானார்கள்.

அப்போது அரக்கர் தலைவனாகிய இராவணனுடைய தங்கை

**"பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம னுங்கச்**
**செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி**
**அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்**
**வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்"**

என்று பிறர் காண வேண்டும் என்றே ஆசையுடன் சூர்ப்பனகை வந்தாள். இராமனின் திவ்ய சௌந்தரியத்தைக் கண்டு மிக்க ஆசைக் கொண்டு தன்னை திருமணஞ் செய்து கொள்ளும்படி பலவாறு வேண்டினாள். அதற்கு அப்பெருமான் உடன் படாமல் நல்ல அறங்களை எடுத்துக் கூறி அனுப்பினார். அவ்வரக்கி அருகிலிருக்கும் சீதையை அகற்றி விட்டால் இராமன் என்னை மனைவியாகக் கொள்வன் என்று எண்ணிச் சீதையைத் தனித்திருக்கிற சமயம் பார்த்துத் தூக்கிச் செல்லத் தொடங்கினாள். அது கண்ட இலக்குமணன் அவளுடைய மூக்கு முதலிய சில உறுப்புகளை அறுத்தான். அவளுக்காகப் பரிந்து வந்த கரன், தூஷணன் போன்ற கொடிய அரக்கர் பலரையும் இராமன் கொன்று ஒழித்தான். சீதையினிடம் பெருங் காதல் கொண்டான். சீதையைத் தனித்திருக்கிற சமயத்தில் வஞ்சனை யக எடுத்துப் போனான். அவ்வாறு போகும்போது எதிர்த்து வந்த ஜடாயுவின் வலிமையை அழித்துக் கொன்று விட்டான். இலங்கையில் அசோக வனத்தில் அரக்கியர் சூழச் சீதையைச் சிறை வைத்திட்டான்.

சீதையைத் தேடிக்கொண்டு இலக்குமணனுடன் சென்ற இராமபிரான், சீதையின் நிலைமையைச் சிறிது கூறி இறந்த ஜடாயுவுக்கு ஈமக்கடனைச் செய்தார்கள். அதன் பின் கவுந்தனைக் கொன்று சபரிக்கு முத்தியளித்தார். சீதையைத் தேடிச் செல்லும் வழியில் எதிர்ப்பட்ட அனுமான் மூலமாகச் சுக்ரீவனோடு நட்புக் கொண்டனர்.

சுக்ரீவன் சீதையைத் தேடுதற் பொருட்டு அநேக வானர வீரர்களை ஆங்காங்குத் தூது அனுப்பினான். அங்ஙணம் இரண்டு வானர சேனையுடன் தென் திசையில் சென்ற அங்கதன் ஜாம்பவான், நீலன், அனுமான் முதலிய வீரர்கள் பல இடங்களிலும் தேடிச் சீதையைக் காணாத பின்பு ஜடாயுவின் தம்பியான சம்பாதி சொல்ல, இராவணன் சீதையை இலங்கையில் சிறை வைத்திருந்ததையுணர்ந்தனர்.

சீதை அயலவன் நாட்டின் காவலில் இருந்த போதும் கற்பும் பொற்பும் விளங்குமாறு பொறுமையுடன் இராமன் வரவு நோக்கிக் காத்திருந்தாள்.

இராமன் இலக்குமணன் இருவரும் வானரப் படைகளைத் துணையாகக் கொண்டு இராவணனுடன் போர் செய்கின்றனர். முதற் போரில் தோற்றுவிட்ட இராவணனை ”இன்று போய் நாளை வா” என்று கூறுகின்றான்.

பிறன்மனை நோக்காத பேராண்மை, இல்லாத இராவணன் வெட்கத்தால் நாடு கின்றான்.

**“வான் நகும் மண்ணும் எல்லாம்நகும் நெடுவயிரத் தோளான்**
**நான் நகு பகைஞர் எல்லாம் நகுவர் என்று, அதற்கு நாணான்**
**வேல் நகு நெடுங் கண், செவ் வாய், மெல் இயல்,மிதிலை வந்த,**
**சானகி நகுவள்–என்றே நாணத்தால் சாம்புகின்றான்”**

இவ்வாறு இராவணன் நாணத்தால் கூனிக் குறுகி வீடு போய்ச் சேர்ந்தார். அடுத்த நாள் போரில் இராவணனைக் கொண்டு சீதையை மீட்டு கின்றான் இராமன், பின்பு

**நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மானப் பெரிது** (குறள் 124)

என்னும் வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப வாழ்ந்து சமூகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாய் விளங்கியவன் இராமன்.

வாழ்க்கையில் இலக்கணம் வருங்கால புதிய தலைமுறையினர்க்கு இலக்கிய மாய் வள்ளுவரின் வாக்காய் வாழ்ந்தான் இராமன் என்று கூறினால் மிகையில்லை. நாமும் இராமனைப்போல் வாழ்க்கையில் நல்லொழுக்கங்களைக் கடைப்பிடித்து சமூகத்திற்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் ஒரு வித்தாய் இருக்க வேண்டும் என்பதை இலக்காக கொண்டு இக்கருத்துகளை வலியுறுத்தி நிற்கின்றது இவ்வாய்வுரை.

# நாலடி நானூற்றில் அறக்கருத்துக்கள்

**பேரா. வெ. மணிகண்டன்,** D.T.Ed, M.A, M.Ed, M.Phil, SET, NET
*உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை*
*நேரு நினைவுக் கல்லூரி (தன்னாட்சி), புத்தனாம்பட்டி*

**முன்னுரை**

சங்க கால தமிழர்களின் பண்பாட்டில் ஒரு சிறந்த கூறாக திகழ்வது அறமாகும். தமிழிலக்கியங்களில் அறம் என்ற சொல்லானது நீதி, ஒழுக்கம், கடமை, புண்ணியம், ஈகை, அறக்கடவுள், சமயம், உயர்ந்தோர் வழக்கு, நடுவுநிலைமை போன்ற பொருள்களில் வழங்கி வருவதைக் காண முடிகிறது. சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான நாலடியாரில் கூறப்பட்ட தமிழர் பண்பாடுகளில் ஒன்றான அறக்கருத்துக்களைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

'அறம்' என்பதும் 'இம்மை' என்பதும் இந்த உலக வாழ்வு பற்றியது.'மறுமை' என்பது செய்த வினைகளின் பயனாக நாம் இறந்த பின்னர் அநுபவிக்கும் சுவர்க்கமும் நரகமும் ஆகிய வாழ்வு. அதாவது வீடு, அனைத்தையும் விட்ட பேரின்ப நிலை. இந்த மூன்றுமே அறத்தால் வருவதனால் அதன் தன்மை உணர்ந்து, அதனை அனைவரும் மேற்கொள்ளல் வேண்டும். அறம், பொருள், இன்பம் என்ற இம்மூன்றினும் சிறந்தாய் அமைபவை. இம்மை, மறுமை, வீடு என்ற மூன்றினையும் தருவதே அறமாகும். அறம் மூன்று வகைப்படும். அவை ஒழுக்கம், வழக்கு, தண்டம் என்பன. இவற்றில் ஒழுக்கம் ஒன்று தான் உயிர்க்கு நிலையான உறுதி தருவது. அறம் என்பது அகத்தின் (மனத்தின்) கண்ணே அழுக்கில்லாமையே, என்பதை,

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற**(குறள் - 34)

ஒருவன் தன் மனதில் குற்றமில்லாதவனாக இருத்தல் அறமாகும். மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத்தன்மை உடையவை இவையெல்லாம் வீணானவையாகும் என்பதும்,

**அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்.** (குறள் - 35)

என்ற குறளில் பொறாமை, பேராசை, வெகுளி, இன்னாச்சொல் இந்த நான்கையும் அறவே அகற்றுவதே, மனிதனின் மனத்தைத் தூய்மைப்படுத்தும் அறநெறியாகும்.

**அறத்தின் சிறப்பு:** நாம் இவ்வுலகில் வாழும் வரைக்கும் முடிந்த வரையில் அடுத்தவர்களுக்கு தீமை எதுவும் செய்யாமல், நன்மையான செயல்களைச் செய்யவும் அதைப்பற்றி நினைத்தலுமே சிறப்பான வாழ்க்கைக்கு அர்த்தமும் சாட்சியாகும் என்பதை,

**'இன்றுகொல்? அன்றுகொல்? என்றுகொல்? என்னாது**
**'பின்றையே நின்றது கூற்ற'மென் றெண்ணி**
**ஒருவுமின், தீயவை, ஒல்லும் வகையான்**
**மருவுமின் மாண்டார் அறம்.**(நாலடியார் - 36)

என்ற வரிகளின் மூலம் அறிவது, இன்றோ, நாளையோ, என்றோ ஒரு நாள் சாவு நிச்சயம் வரும் என்பதும் எமன் பின்புறமாகவே நிற்கிறான் என்று எண்ணிக் கொண்டு தீயனவற்றையெல்லாம் நீக்கி, முடிந்த வரையில் அறச்செயல்களைச் செய்பவரே மாண்புடையவராக கருதப்படுவர் என்பதை நினைவில் வைத்து செயல்பட வேண்டும்.

**புண்ணியத்தின் பலன்**

**கரும்பூர்ந்த**
**சாறுபோற் சாலவும் பின்னுதவி, மற்றதன்**
**கோதுபோல் போகும் உடம்பு.**
(நாலடியார் - 34)

என்ற வரிகளில் பெறுதற்கு அரிய இந்த மனிதப் பிறவியை (உடம்மை) முன்னோரின் புண்ணிய பயனால் பெற்றிருப்பதைப் போல நாமும்சிறந்த மிகுதியான புண்ணியத்தைத் தேடி கொள்ள வேண்டும் என்பதை, கரும்பானது பக்குவமாகத் தன்னை ஆலையிட்டு நசுக்கியவர்களுக்குத் தன்னிடம் பொருந்திய சுவை மிகுந்த சாற்றைக் கொடுத்து இன்புறுவது போல, தருமங்களும் உடலை வருத்தித் துறந்தவர்களுக்கே என்றும், மறுமையிலே சிறந்த இன்பத்தைத் தந்து உதவி செய்யும்.

எனவே தரும காரியங்களிலே ஈடுபடுபவர்க்கே அறமானது உதவும். ஆனால், அப்படி அறஞ்செய்யாத உடலோ ஒன்றுக்கும் உதவாது போய் விடும் என்பதே இதன் கருத்தாகும். ஆக, மேலுகத்திலே இருந்து அநுபவிக்கும் படியான பேரின்பத்தைக் கருதி, அதனைத் தருகின்ற அறவழியிலேயே அனைவரும் செயல்பட வேண்டுமென்பதை என்னுடைய கருத்தாகவும் பதிவு செய்கிறேன்.

மிகமிகச் சிறு அளவினதாகிய ஓர் ஆலம் விதையானது முளைத்து கிளைகள் நெருங்கி, அனைவருக்கும் நிழல் தந்து பெரிய மரமாகி

விளங்குவது போன்றே, தருமத்தின் பயனும், தன் அறப்பயன் செயல் செய்தவனுக்கு ஏற்ற அளவிலே மிகுந்த புண்ணிய பயனைத் தருவதாகும் என்பதை நாலடியார்,

**உறக்குந் துணையதோர் ஆலம்வித்து ஈண்டி**
**இறப்ப நிழற்பயந் தாஅங்கு – அறப்பயனும்**
**தான்சிறி தாயினும், தக்கார்கைப் பட்டக்கால்**
**வான்சிறிதாப் போர்த்து விடும்.**

(நாலடியார் - 38)

என்ற அடிகளின் மூலம் தருமம் செய்வதையும் அதை தகுதியுடையவர்களுக்கே செய்தால் பெரும் பயன் விளையும் என்பதை 'அறன் வலியுறுத்தல்' என்னும் அதிகாரத்தில் தெளிவாக உரைத்துள்ளதை காணலாம். இப்படியாக ஒவ்வொரு நாள் கழிவதுடன் தம் ஆயுளும் கழிந்து கொண்டு போவதை உணர்ந்து, அறநெறியிலே ஈடுபட்டு மறுமைப் பயனுக்கு வழி வகைச் செய்தலே சிறப்புடையது என்பதை இதன் வழி மக்களுக்கு வலியுறுத்துகின்றார்.

### பெரியவர்களின் சிறப்பு

மனிதர்கள் அனைவரும் செய்யக் கூடிய ஒரு அறச்செயல்களைப் பற்றி,

**ஆவேறு உருவின வாயினும் ஆபயந்த**
**பால்வேறு உருவின அல்லவாம்: - பால்போல்**
**ஒரு தன்மைத் தாகும் அறம்: நெறி, ஆபோல்**
**உருபு பலகொளல், ஈங்கு**(நாலடியார் - 118)

என்ற அடிகள் மூலம் அறிவது, பசுக்கள் பல்வேறு வகையிலும் பல்வேறு நிறத்தனவாயினும் அவை தரும் பால் வெவ்வேறு நிறமுடையதா என்றால் இல்லை, ஒரே நிறம் (வெண்மை) உடையது. இந்தப் பாலைப் போல, பெரியோர் போற்றக்கூடிய அறப்பயனும் ஒரே தன்மை உடையதாகும். அதற்காக செயல்படும் செயல்கள் (வெளிப்படுத்தும் முறைகள்) பசுக்களின் உருவம் போலவும் நிறம் போலவும் வேறுபட்டு தோற்றமளித்தாலும் கூட, அதே வாழ்க்கைப் பாதைப் பலவானாலும் சேருகின்ற இடம் ஒன்று தான் என்பதை ஆசிரியர் வலியுறுத்தி, இவ்வுலகில் நாம் வாழும் வரைக்கும் நம்மால் முடிந்த வரைக்கும் எந்த வகையிலாவது அறச்செயல்களைச் செய்து வாழ்தலே மாட்சிமையுடையதாக விளங்குவதை இதன் வழி உணர்த்துகின்றார். மேலும்,

**கொடைக்கடனும்,**
**சாஅயக் கண்ணும் பெரியோர்போல் மற்றையார்**
**ஆஅயக் கண்ணும் அரிது.** (நாலடியார் - 184)

என்ற அடிகள் மூலம் அறிவது, மழை பெய்தல் இல்லாத காலத்தும் ஊற்றினால் நீரையுடைய கேணியானது, அதன் நீரை இறைத்துக் குடித்தாலும் ஊரிலுள்ள மக்களைக் காப்பாற்றுவது போல, பெரியோர்கள் வறுமையினால் தளர்ந்து போய் விட்ட காலத்திலுங் கூட தானம் செய்தலாகிய கடமையை தகுந்த அளவில் செய்து முடிப்பர். ஆனால் சிறியவர்கள் தம் செல்வம் கருதி வருகின்ற காலத்திலும் கூடப் பிறருக்கு உதவுதல் இன்றைய கால கட்டத்தில் மிக மிக குறைவே என்பதை அறிந்து கொள்ளலாம். இதனை,

**அறமின் அறநெறி அஞ்சுமின் கூற்றம்**
**பொறுமின்பிறர் கடுஞ்சொல் போற்றுமின் வஞ்சம்**
**வெறுமின் வினைதீயார் கேண்மை எஞ்ஞான்றும்**
**பெறுமின் பெரியார்வாய்ச் சொல்**

(நாலடியார் - 172)

நாம் எப்பொழுதும் அறநெறியினையே மேற்கொள்ளுதல் வேண்டும். நல்லறங்களிலே எப்போதும் ஈடுபடவும், பிறர் சொல்கின்ற கடுமையான சொற்களைப் பொறுத்துக் கொள்ளவும் வேண்டும். தீய செயல்களில் ஈடுபடாமலும், வஞ்சகமான எண்ணங்களையெல்லாம் விட்டு விட வேண்டும். எப்போதும் பெரியோருடைய வாயினின்று வெளிப்படும் சொற்களைப் பெற்று சிறப்புடன் வாழ வேண்டுமென்பதை, 'நல்லினம் சேர்தல்' என்ற அதிகாரத்தில் 'பெரியோரின் வாய்ச்சொல் பெறுமின்' என்ற கருத்தைப் பதிவு செய்கின்றார்.

### செல்வத்தின் பயன்

செல்வத்தின் பயன் என்பது, ஒருவர் அதனை நல்ல வழிகளிலே செலவிட்டு, பொருள் ஈட்டும் போதும், வறுமையால் தன்னைச் சார்ந்த பிறரும் கூடி அனுபவிக்க வேண்டுமென்பதே சிறப்பானதாகும். செல்வம் நிலையாமை உடையது என்பதை எடுத்துரைத்து, செல்வம் உள்ள போது பலருக்கு உதவி செய்து (அறம் செய்து) வாழ்தல் வேண்டும். ஆனால் ஒருவருக்கும் உதவி செய்யாமல் சேமித்து வைக்கின்ற செல்வம் பயனற்ற செல்வமாகும். இதனை,

**அருகல தாகிப் பலபழுத்துக் கண்ணும்**
**பொரிதாள் விளவினை வாவல் குறுகா:**
**பெரிதணியர் ஆயினும் பீடிலார் செல்வம்**
**கருதுங் கடப்பாட்ட தன்று.** (நாலடியார் - 261)

என்ற வரிகளில், தான் வாழும் இடத்துக்கு அருகிலேயே பலவாகப் பழுத்திருந்தாலும் பொரிப் பொரியான தோற்றம் கொண்ட விளாம்பழத்தை வெளவாலானது உண்ண நெருங்குவதில்லை, ஏனெனில் அதை உடைப்பதற்கு மிகவும் கடினமானதாக இருக்கும். எனவே, அதனை பயன்படுத்திக் கொள்ள

முடியாது. அதுபோல தான் வாழும் இடத்துக்கு மிக அருகிலேயே பெருந்தன்மை இல்லாதவர் செல்வம் இருக்குமாயினும், அதாவது மற்றவர்களுக்கு உதவக்கூடிய மனதில்லாதவர்களுடைய செல்வம் இருந்தாலும், அந்த செல்வத்தால் அவர்களின் அருகில் இருப்பவர்களுக்கு எந்த விதமான பயனுமில்லை என்பதை ஆசிரியர் உணர்த்துகின்றார்.

**கல்வியின்மேன்மை**

கல்வியானது, இந்தப் பிறவியின் பயனாகிய தாம் இவ்வுலகில் உயிருள்ளவராக வாழும் அளவும் கல்வி அழியாது என்றும் நிலைப் பெற்றுத் தம்முடன் இருக்கும். ஆனால் ஒருவருக்கு செல்வம் என்பது, அடுத்தவருக்கு கொடுக்க கொடுக்க குறையும் தன்மையுடையது. ஆனால் கல்வியானது, அழிதல் இல்லாதது,என்றும் நிலைக்கவும், பல பேரின் அறியாமையைப் போக்கி அறிவை வளர்க்கும் சிறப்புடையது. ஆகவே கல்வியை வறுமையுள்ளவர்களுக்கு ஒரு சிறந்த அறமாய் செய்தால் நீங்களும் வளம் பெறலாம், அவர்களும் உங்களின் புகழை உலகிற்கு பெருமைப்படுத்துவார்கள் இதனை,

**இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்**
**தம்மை விளக்குமால் தாமுளராக் கேட்டால்**
**எம்மை யுலகத்தும் யாங்காணோம், கல்விபோல்**
**மம்மர் அறுக்கும் மருந்து.** (நாலடியார் - 132)

கல்வியைப் போல அறியாமையை என்ற நோயை ஒழிக்கின்ற ஒரு மருந்தினை நாம் எத்தன்மையான உலகத்திலும் காணமுடியாது. கல்வியானது அறியாமையைப் போக்கி, அறிவை வளர்க்கும், பிற செல்வங்களோ, அறிவை மறைத்து அறியாமையை வளர்ப்பன. ஆகவே, கற்றலுக்கு மிகவும் அறச்செயல்களைச் செய்வது சிறப்புடையது என்பது விளக்கப்படுகிறது.

**ஈகையின் சிறப்பு**

ஈகை என்பது, ஒரு பொருளும் இல்லாத வறியவர்களுக்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவுவதேயாகும்.

**முற்றுத்தம் துத்தினை நாளும் அறஞ்செய்து**
**பிற்றுத்துத் துத்துவர் சான்றவர்**
(நாலடியார் - 190)

என்ற அடிகள் மூலம், பெரியவர்கள், தாம் முதலிலே உண்ணும் படியான உணவினை, தினந்தோறும் வறுமையில் இருப்பவர்க்குத் (பிறருக்குத்) தானமாகக் கொடுத்து விட்ட பிறகே, தாம் உண்ணுதற்குரிய உணவினை உண்பார்கள். அப்படி கொடுத்த உணவுத்தானமானது, காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூவகைக் குற்றங்களால் வரும் பாவங்களைப் போக்கி, அவர்களின் வாழ்நாள் முழுவதும் அவர்களின் துக்கத்தினை நீக்கி விடும் தன்மையுடையதாகும் என்பதை அறியலாம்.

**தூய்தாக**
**நல்கூர்ந்தும் செல்வர் இரவாதார் செல்வரும்**
**நல்கூர்ந்தார் ஈயா ரெனின்.** (நாலடியார் - 270)

மனமானது தூய்மை உடையதாயிருந்தாலும் குடும்பத்தில் வறுமை இருந்தாலும் அடுத்தவரிடம் இரந்து செல்லாதவர்கள் செல்வர்களாவார்கள். செல்வம் உடையவரும், தம்மிடம் வரும் இரவலருக்குத் தருமம் செய்யாமற் போனார் என்றால், அவர்கள் வறுமைப்பட்டவர்களேயாவார் என்பதில் ஈதலே செல்வத்திற்கு உரிய மதிப்பைத் தரும் என்பதை பாடல் வழி உணர்த்துகிறார். இதனையே திருக்குறளில் வள்ளுவர் சிறப்பாக எடுத்துகாட்டியுள்ளார்.

**சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு** (குறள் - 31)

அறச் செயல்களைச் செய்வதால் மதிப்பும், மரியாதையும் ஒருவனுக்கு வரும். அறத்தினால் வாழ்வுக்கு நன்மை விளையும் எனக் குறிப்பிடுகின்றார்.

**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு.** (குறள் - 231)

ஈதலும் இசைப்பட வாழ்தலும் புகழ் உண்டாகக்கூடிய வாழ்க்கையை வாழ வேண்டும், அப்புகழ் இல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றும் இல்லை என்ற அறத்தினைக் காணமுடிகிறது.

**முடிவுரை**

மக்களை நல்வழிப்படுத்துவதற்காகவே நீதி இலக்கியங்கள் அறத்தை வலியுறுத்துகின்றன. மனிதன் தன் வாழ்வில் செய்ய வேண்டிய சிறப்பான செயல் அறமாகும். கல்வியுடையவர் தொடர்பே நெடுங்காலம் இன்பந்தருவது, ஒவ்வொருவரும் சிறந்த பல நல்ல செயல்களைச் செய்தோமென்றால் மனநிறைவையும் தருகின்றது. நாம் இப்பிறவியில் வறியவர்களுக்கு உதவும் மனப்பான்மையோடு செயல்பட்டால், மறுமையில் இதற்கு புண்ணியம் கிடைக்கும் என்பது உறுதி. பெரியவர்களின் சிறப்பும் செல்வத்தின் பயனும் கல்வியின் மேன்மைப் பற்றியும்,ஈகையின் சிறப்பும் விளக்கப்பட்டது. அறச்செயல்களைச் செய்வதால் மதிப்பும் மரியாதையும் வருவதோடு, வாழ்க்கையும் மனநிறைவோடு வாழ முடியும் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டுமென்பதே இக்கட்டுரையின் வழி விளக்கப்பட்டுள்ளது.

# குறுந்தொகைப் பாலைத்திணை புலப்படுத்தும் தலைவியின் பிரிவாற்றாமையும் தூய அன்பும்

**ஆ. மணி**
*பதிவெண்: 18211284021006, முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)*
*மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம்,அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்*
*தமிழ் ஆய்வு மையம்,தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்*

**முனைவர் சு. ரவி ஜேசு ராஜ்**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்*
*மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்*

**முன்னுரை**

பதினெண் மேற்கணக்கு நூல்களுள் ஒன்றாகக் குறுந்தொகை திகழ்கிறது. அஃது ஓர் அக நூல். அந்நூலுள் ஐந்திணைப் பாடல்கள் இடம்பெறுகின்றன. அவற்றுள் ஒரு பிரிவாகப் பாலைத்திணைப் பாடல்கள் காணப்படுகின்றன. அப்பாடல்களுள் பல, தலைவன், தலைவியரது களவு வாழ்விலும் கற்பு வாழ்விலும் இருவர்க்கும் ஏற்படுகின்ற பிரிவாற்றாமையைக் கூறுகின்றன. அவ்விருவகை வாழ்வினுள் கற்பு வாழ்வைக் குறிப்பிடும் மூன்று பாடல்கள் மட்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. அம்மூன்று கற்புப் பாடல்களிலும் இடம்பெறும் தலைவியின் பிரிவாற்றாமை குறித்தும் அதன் மூலம் புலப்படும் தூய அன்பு குறித்தும் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

**பிரிவாற்றாமை - விளக்கம்**

பிரிவாற்றாமை என்பது அகப்பாடல்களில் பயின்று வருவது. அஃது ஓர் அகத்துறை. பிரிவாற்றாமை என்பதற்கு, **“தலைவன் பிரிவைத் தலைவி பொறுக்கமாட்டாமை”**[1] என்று செந்தமிழ் அகராதி விளக்கம் தருகிறது.

ஏசுதாசன் என்பார்,**“பிரிவாற்றாமை என்பது, திருமணத்திற்குப்பின் தலைமகன் அறம், பொருள், இன்பம் முதலியவை காரணமாகத் தலைவியைப் பிரிந்து செல்லுதல். அந்நிலையில் அது பொறுக்கவியலாது துன்புறும் நிலை”**[2] என்று பிரிவாற்றாமைக்கு விளக்கம் தருவர்.

**தலைவியின் பிரிவாற்றாமை**

தலைவனும் தலைவியும் அன்பால் பிணைப்புண்டு இல்லறம் நடத்துகையில், தலைவன் பல்வகை அலுவல்களுக்காகத் தலைவியைப் பிரிந்து செல்ல வேண்டிய சூழல்களுக்கு உள்ளாகிறான். தொல்காப்பியம் அக வாழ்வில் நிகழ்ந்த ஓதற்பிரிவு, தூதுவயிற்பிரிவு, பகைவயிற்பிரிவு, பொருள்வயிற்பிரிவு என்றினைய பல்வகைப் பிரிவுகளைக் குறிப்பிடுகின்றது. அப்பிரிவுகளுள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட குறுந்தொகைப் பாலைப்பாடல்களில் தலைவனது பிரிவு எவ்வகைத்து என்பது குறித்து வெளிப்படையாகக் கூறப்படவில்லை. ஆயின், தலைவனது பிரிவு காரணமாகத் தலைவி பிரிவாற்றாமைத்துயர் கொள்வதாகக் குறிப்பிடப்படுகிறது. பசலை படர்தல், பொழுது கண்டு இரங்கல், கண்களில் நீர் சொரிதல் ஆகிய காரணிகளின் மூலம் தலைவியின் பிரிவாற்றாமைத்துயர் வெளிப்படுகின்றது. அம்மூன்று காரணிகளும் இக்கட்டுரையில் விளக்கப்படுகின்றன.

**பசலை படர்தல்**

**பசலை - விளக்கம்**

பசலை என்பது,**“பிரிவாற்றாமையால் உண்டாகும் வேறுபாடான பொன் நிறம்”**[3] என்று உ.வே.சா. குறிப்பிடுவர். **“பிரிவிடை உடலில் தோன்றும் பொன்னிறமான நிற வேறுபாடு”**[4] என்று பசலை என்பதற்கு வி.நாகராசன் விளக்கம் தருவர். **“காம நோய் கொண்ட மகளிர் மேனியிலுண்டாகும் நிறவேறுபாடு”**[5] என்று பசலைக்கு விளக்கம் கூறுவர் பொ.வே. சோமசுந்தரனார்.

தலைவன், தலைவி இருவரும் இல்லற வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.அத்தருணத்தில் தலைவன் தனது கடமையை நிறைவேற்றும்பொருட்டுத் தலைவியைப் பிரிந்து செல்கின்றான். அன்பால் பிணைப்புண்ட தலைவி, தலைவனது பிரிவைத் தாங்கவொண்ணாது பிரிவாற்றாமைக்கு உள்ளாகிறாள். அதன் விளைவாக அவள் தனது பேரழகு அழிந்து நலிவுறுகிறாள். தனது பேரழகைப் பசலை விரும்பி உண்கின்றது என்று கூறிக் கவலையுறுகிறாள்.

இதனை ஓர் உவமையின் மூலம் கொல்லன் அழிசி என்பார் குறுந்தொகைப் பாடலில் புலப்படுத்துவர்.

நல்ல பசுவின் இனிய பாலானது அப்பசுவின் கன்றினாலும் உண்ணப்படாமல், அப்பசுவினைப் பாதுகாக்கும் உரிமை பெற்றவர் பால் கறப்பதற்குப் பயன்படுத்தும் பாத்திரத்திலும் கொள்ளப்படாமல் பயனின்றி நிலத்தில் சிந்தி வீணானது. அதுபோலத் தலைவியின் மாந்தளிர் போன்ற பேரழகானது அவள் பார்த்து மனம் மகிழ்வதற்குப் பயன்படாமலும் தலைவன் நுகர்ந்து இன்பம் துய்ப்பதற்குப் பயன்படாமலும் பசலையால் விரும்பி உண்ணப்படுகின்றது என்று கூறிப் பிரிவாற்றாமையால் வருந்துகிறாள். இக்கருத்தினை,

**"கன்று முண்ணாது கலத்தினும் படாது**
**நல்லான் றீம்பா னிலத்துக் காஅங்**
**கெனக்கு மாகா தென்னைக்கு முதவாது**
**பசலை யுணீஇயர்வேண்டும்**
**திதலை யல்குலென் மாமைக் கவினே"** [6]

என்னும் குறுந்தொகைப் பாடல் புலப்படுத்தி நிற்பதனை அறிய முடிகிறது.

பசலை தலைவியின் பேரழகை உண்கின்றது என்பது மரபு வழுவமைதியாகக் கூறப்பட்டிருக்கின்றது. இதனை,

**"உண்டற் குரிய அல்லாப் பொருளை**
**உண்டன போலக் கூறலும் மரபே"** [7]

என்னும் தொல்காப்பியப் பொருளியல் நூற்பா மூலம் உணர முடிகிறது.

**பொழுது கண்டு இரங்கல்**

தலைவன் தலைவியைப் பிரியும்போது குறிப்பிட்ட பருவத்தில் வினைமுடித்து மீண்டு வருவதாகக் கூறிச் செல்வது வழக்கம். அப்பருவத்தில் தலைவன் மீண்டு வந்திலன் எனில், தலைவி ஆற்றாது பெரிதும் துயருறுவாள். ஆயின், குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள பாடலொன்று சற்று மாறுபட்டு அமைந்துள்ளது. அதாவது, குறிப்பிட்ட பருவத்தில்பிரிந்தவர் பல நாள்களான பின்னரும் (அப்பருவம் நிறைவடைவதற்குள்) மீண்டு வந்தாரிலர். அதனால், தலைவி ஆற்றாமைக்கு உள்ளாகிறாள். இதனைக் குறுந்தொகை 104-ஆம் பாடல் விளக்குகிறது.

தலைவனது பிரிவை ஆற்றாத தலைவி தோழியிடம் பின்வருமாறு கூறுகிறாள். கோத்த நூலிலிருந்து ஒவ்வொன்றாக அறுந்து விழும் முத்துக்கள் போன்று பின்பனிக்காலத்தில் குளிர்ந்த பனித்துளியானது ஒவ்வொரு துளியாகத் தாளியறுகின் கொடியின்மீது (ஒருவகை அறுகு) விழுகின்றது. பனித்துளிகள் விழும் குளிர்ந்த தாளியறுகின் கொடியை விடியற்காலையில் ஆனினங்கள் மேய்கின்றன. இத்தகைய பின்பனி வீழ்கின்ற காலத்தில் தலைவர் தன்னைப் பிரிந்து சென்றார். அங்ஙனம் அவர் பிரிந்து சென்று உறையும் நாள்களும் பல ஆகின்றன. அதனால், தலைவி தோழியிடம் தான் பிரிவாற்றாமைக்கு உள்ளாவதாகக் குறிப்பிடுகிறாள்.

**".... .... .... ....**
**பனிபடு நாளே பிரிந்தனர்**
**பிரியு நாளும் பலவா குவவே"** [8]

என்னும் பாடலடிகள் மேற்கருத்தைச் சுட்டி நிற்கின்றன.

தலைவியினது பிரிவாற்றாமை குறித்து உ.வே.சா. கூறுவது பின்வருமாறு: **"என்னோடு உடனிருத்தற்குரிய பருவத்திற் பிரிந்தனர் அது துன்பத்திற்குக் காரணமாயிற்று அங்ஙனம் பிரிந்தவர் சில நாளில் மீண்டு வந்திருப்பின் அத்துன்பத்தை ஆற்றியிருப்பேன் அவ்வாறின்றிப் பல நாட்களாகவும் இன்னும் வந்திலர் யான் என் செய்கேன்! என்று தலைவி கூறி இரங்கினாள்"** [9] என்பர் உ.வே.சா. அவர் தம் கருத்து இப்பகுதியில் நினைவுகூரத் தக்கது.

**கண்களில் நீர் சொரிதல்**

தலைவனைப் பிரிந்த தலைவி, அவன் சென்ற பாலை நிலத்தின் அருமையை நினைத்து ஆற்றாளாய்க் கண்ணீர் சொரிந்து அழுதனள். இதனை ஓதலாந்தையாரது பாடல் விளக்குகிறது.

காட்டில் வளர்ந்த இருப்பை மரம் நீண்ட கிளைகளைக் கொண்டு விளங்கியது. வேனிற்காலத்தில் அந்த நீண்ட கிளைகளில் வெள்ளிய மலர்கள் பூத்தன. கோடைக்காற்று அக்கிளைகளின்மீது விரைவாக வீசி மோதியது. அதனால், மரக்கிளைகள் அலைக்கப்பட்டன. அதன் விளைவாக, அம்மரக்கிளைகளில் உள்ள பூக்கள் பூக்காம்புகளிலிருந்து கழன்று கீழே உதிர்ந்தன. அப்பூக்கள் களிறுகள் செல்லும் சிறிய வழிகள் மறையும்படிக் குவிந்து பரவிக் கிடந்தன. ஓங்கிய மலைகளையுடைய கடத்தற்கரிய இத்தகைய கொடிய பாலை நிலத்தைக் கடந்து சென்ற தலைவனைத் தலைவி நினைந்து, தானும் தலைவனும் ஒருவரோடொருவர் பயிலுதற்குரிய இருளையுடைய நடு இரவில் துயில் கொள்ளாமல் ஆற்றாளாயினள். அவ்வேளையில் தெள்ளிய நீரில் உள்ள ஒளியுடைய மலரைப் போன்ற குளிர்ச்சியுடைய தனது கண்களிலிருந்து நீர்த்துளிகள் எளிதாகச் சொரிந்தன என்பதனை,

**".... .... .... ....**
**பயிலிரு ணடுநாட் டுயிலரி தாகித்**

**தெண்ணீர் நிகர்மலர் புரையும்**

**நன்மலர் மழைக்கணிற் கெளியவாற் பனியே"**[10]

என்னும் பாடலடிகள் மூலம் தலைவி தோழியிடம் கலங்கிக் கூறினாள்.

### ஆய்வுரை

மேற்பகுதியில் விளக்கப்பட்ட மூன்று குறுந்தொகைப் பாடல்களையும் ஆய்ந்து பெறப்பட்ட கருத்துக்கள் இவ்வாய்வுரைப் பகுதியில் தரப்படுகின்றன.

### பசலை படர்தல் தரும் கருத்து

தலைவனது பிரிவினால் தலைவி பிரிவாற்றாமல் துயருற்றபோது பசலை அவளது மேனியில் படர்ந்து அவளது ஆற்றாமைத்துயரை மேலும் மிகுவித்தது. எனினும், அவள் தலைவன்மீது தூய அன்பு கொண்டிருந்ததால் அவள் அவனது நினைவாகவே வாழ்கிறாள் என்பது பெறப்பட்டது. அவள் அவன்மீது தூய அன்பு கொண்டிருக்க வில்லையெனில் தலைவன் பிரிந்த தருணத்தில் தன் மேனியில் ஏற்பட்ட பசலை காரணமாக வருந்தி, அவன்மீது வெறுப்புக்கொண்டு வேறோர் ஆடவனுடன் செல்லும் நிலையை அவள் உருவாக்கியிருக்கலாம். ஆயின், அவளது தூய அன்பு அதனைத் தடுத்து, கொண்ட தலைவனையே பிரிவாற்றாமைத்துயருடன் எதிர்நோக்கியிருக்கச் செய்கின்றது. இதற்கு அவள் கொண்ட தூய அன்பே அடிப்படைக் காரணியாகத் திகழ்கின்றது எனலாம்.

### பொழுது கண்டு இரங்கல் தரும் கருத்து

ஆனினங்கள் விடியற்காலையில் பனித்துளிகள் விழும் தாளியறுகின் கொடியை மேய்வதில் ஆர்வத்துடன் செயல்படுவனபோலப் பிரிந்து சென்ற தலைவனும் விரைந்து வராமல் தனது கடமையில் ஈடுபாடுகொண்டு செயல்படுகிறான்.பல நாள்கள்கடந்த பின்னரும் அப்பனிக்காலத்தில் மீண்டு வந்திலன் என்று தலைவி பிரிவாற்றாமல் இரங்கினள். தலைவியின் தூய அன்புதான் தலைவன் பிரிந்த பின்னரும் அவனை நினைக்கச் செய்கிறது் பிரிந்து பல நாள்கள் ஆகின்றன என்று பிரிவாற்றாத நிலையிலும் விரைந்து மிண்டு வருவான் என எண்ணத் தூண்டுகிறது.

பிரிவில் தான் அன்பு மிகும். **"பிரிவே அன்பின் மிகுதியை உணர்த்த வல்லது. இன்பச்சுவைக் காட்சிகளைவிட அவலச்சுவை மனதில் சிறந்ததொரு இடம்பெற்று விடுதற்குரியதாகின்றது"**[11] என்னும் ஏசுதாசனின் கருத்து இப்பகுதியில் பொருத்தமுடையதாக அமைகின்றது.

### கண்களில் நீர் சொரிதல் தரும் கருத்து

கண்களில் நீர் சொரிதல் என்னும் பகுதியிலிருந்து, தலைவியைப் பிரிந்த தலைவன் ஓங்கிய மலைப்பகுதியில் களிறுகள் செல்லும் வழித்தடத்தில் சென்றதால் அவனுக்குக் கேடு எதுவும் நிகழக்கூடாது எனத் தலைவி நினைப்பதும் அவனோடு சேர்ந்து இன்புற்றிருக்க வேண்டிய நடு இரவுப்பொழுதில் துயிலாமல் பிரிவாற்றாது துயருறுவதும் அவற்றால் அவள் கண்ணீர் சொரிந்து அழுவதும் புலப்படுகின்றன. தலைவனது பிரிவால் அவனுடன் இன்புற்றிருக்க இயலவில்லை என்று கருதினாலும் பிறர் நலம் காரணமாகத் தலைவன்மீதுபரிவு கொள்ளும் ஆழ்ந்த தூய அன்பினை இப்பாடல் வெளிப்படுத்துகிறது.

### முடிவுரை

ஆய்வுக்குத் தேர்ந்து கொண்ட மூன்று பாலைத்திணைப் பாடல்களும் தலைவனது பிரிவு காரணமாகத் தலைவி பிரிவாற்றாமையால் பசலை படர்ந்து, பொழுது கண்டு இரங்கி, கண்களில் நீர் சொரிந்து துயருறுவது குறித்துக் கூறுகின்றன. மேலெழுந்த நிலையில் பார்க்கும்போது தலைவி பிரிந்த தலைவன் மீது அன்பில்லாதவள் போன்று காட்சியளிக்கலாம். ஆயின், அஃது உண்மையன்று. ஆழ்ந்து நோக்கும்போது, அவள் பிரிவாற்றாமையால் துயருற்றாலும் தலைவன்மாட்டுத் தூய அன்பு கொண்டுள்ளமையை மேற்குறித்த மூன்று பாடல்களும் வெளிப்படுத்தி நிற்பதை அறிய முடிகிறது. தூய அன்பு காரணமாகத்தான் அவள் உயிர் வாழ்கிறாள். இந்தத் தூய அன்பு இல்லற வாழ்வைத் திறம்பட நடத்துவதற்கும் வையத்துள் சிறக்க வாழ்வதற்கும் பெரிதும் தூண்டுகோலாக அமைகிறது எனலாம்.

### அடிக்குறிப்புக்கள்

1. ந.சி.கந்தையா, செந்தமிழ் அகராதி, ப.489.
2. ப.ச.ஏசுதாசன், திருக்குறளில் களவும் கற்பும், ப.38.
3. உ.வே.சாமிநாதையரவர்கள், (உரை.), குறுந்தொகை, ப.71.
4. வி.நாகராசன், (உரை.), குறுந்தொகை (மூலமும் உரையும்), புத்தகம்-1, ப.80.
5. பொ.வே.சோமசுந்தரனார், (உரை.), குறுந்தொகை, ப.68.
6. உ.வே.சாமிநாதையரவர்கள், (உரை.), மு.நூ., பா.எ.27.
7. இளம்பூரணர், (உரை.), தொல். பொருள். பொருளியல், நூ.எ.18.

8. உ.வே.சாமிநாதையரவர்கள், (உரை.), மு.நூ., பா.எ. 104.
9. மேலது., ப.236.
10. மேலது., பா.எ.329.
11. ப.ச.ஏசுதாசன், மு.நூ., மு.ப.

**துணைநூற்பட்டியல்**


1. இளம்பூரணர், (உரை.), தொல்காப்பியம் பொருளதிகாரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 79, பிரகாசம் சாலை, சென்னை-1, மறுபதிப்பு, மார்ச்-1982.
2. ஏசுதாசன், ப.ச., திருக்குறளில் களவும் கற்பும், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-600 108, முதல் பதிப்பு, டிசம்பர்- 2015.
3. கந்தையா, ந.சி., செந்தமிழ் அகராதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சி.ஐ.டி. வளாகம், சென்னை- 600 013, பதிப்பு, 2009 (பதிப்பு எண் இல்லை).
4. சாமிநாதையரவர்கள், உ.வே., (உரை.), குறுந்தொகை, கபீர் அச்சுக்கூடம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1947.
5. சோமசுந்தரனார், பொ.வே., (உரை.), குறுந்தொகை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 522, டி.டி.கே. சாலை, சென்னை-18, பதிப்பு, 2007 (பதிப்பு எண் இல்லை).
6. நாகராசன், வி., (உரை.), குறுந்தொகை (மூலமும் உரையும்), புத்தகம்-1, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை- 600 098, ஐந்தாம் பதிப்பு, அக்டோபர்-2014.

# பா.விஜய்யின் உடைந்த நிலாக் கவிதையில் - காதல்

**முனைவர் அ. மோகன்ராஜ்**
*இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, (தன்னாட்சி), ஈரோடு*

**முன்னுரை**

நிலாவை வைத்து வளர்பிறை, தேய்பிறை என்று அழைக்கும் வழக்கம் உண்டு. ஏன், தேயும்நிலா, மறையும் நிலா என்ற சொல்லும் கூட வழக்கில் உள்ளது. இவற்றையெல்லாம் தாண்டி கவிஞர் பா.விஜய் அவர்கள் "உடைந்த நிலாக்கள்" என்ற புதிய நிலாக்களை தம் கவிதை வரிகளால் உருவாக்கி இருக்கிறார். அவரின் அந்த வரிகளின் நிழலோட்டமாக காணப்படுகின்ற 'காதல்' என்ற ஒரு சொல்லை கருப் பொருளாக்கி இக்கட்டுரை தன் பயணத்தைத் தொடர்கிறது.

**காதலின் ஆரம்பம்**

**காதல் - எதிலிருந்து ? எதுவரை?**
**அணுவின் துவக்கத்திலிருந்து**
**அஸ்தியின் பிடிவரை!**

மனிதன் என்று இவ்வுலகில் படைக்கப்பட்டானோ அன்றே காதலும் ஆரம்பமானது. அக்காதல் உணர்வு சார்ந்ததாக இல்லாமல் உள்ளம் சார்ந்தஒன்றாக இருந்தது. காதல் என்ற சொல்லின் நேரடிப் பொருள் அன்பு என்று தான் கூறவேண்டும். இந்த அன்பு பலதரப்பட்ட மக்களைச் சார்ந்து அதன் தன்மைக்கு ஏற்ப மாறுபடும். 'காதல் என்பது மனிதர்களுக்கிடையே ஏற்படும் பாலியல் ஈர்ப்பு, அன்பு, அக்கறை கலந்த ஒர் உணர்வு சேர்ந்து வாழவேண்டும் என்ற ஆசை, இயற்கை, தொழில், கலை மற்றும் கருத்தியல் என பலவற்றின் அடிப்படையில் காதல் ஆரம்பமாகும்.

"காதல் என்பது ஆசை, அன்பு. நட்பு, காமம், விரகம் ஆகிய உணர்வுகளில் ஒன்று அல்லது இவைகள் அனைத்தும் கலந்த ஒரு உணர்வு என்று பெரியார் கூறினார்."

நமது சங்க இலக்கியங்கள் காதல் பற்றியும், காதல் வாழ்வு பற்றியும் கூறினாலும், அவைகள் அனைத்தும் உள்ளத்தோடு கலந்த பண்பாடு மாறாது வாழ்ந்த காதல் வாழ்க்கையாகும். ஆனால் இன்றைய நடைமுறை வாழ்க்கையில் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, எல்லை தாண்டிய கலாச்சார பண்பாட்டை மீறிய காதல் வாழ்க்கையாக உள்ளது.

**உடைந்தநிலாக்களில் காதல்**

உடைந்த நிலாக்கள் என்ற கவிதை நூலில், காதல் வாழ்க்கை வாழ்ந்த நமது முன்னோர்களின் வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளை தனக்கேயுரிய தனித்தன்மையில் கவிஞர் பா.விஜய் அவர்கள் எழுதியுள்ளார். அவற்றில் 'காதல்' என்ற சொல்லை மட்டும் கவிஞர் எவ்வாறு கையாண்டுள்ளார் என்பதை விளக்குவதே நோக்கமாக உள்ளது.

**காதல் என்பது அஹிம்சை அல்ல**
**தீவிரவாதம்**
**காதல் என்பது சரணாகதியல்ல**
**தன்னை உணருதல்**

என்று கவிஞர் காதலுக்கு விளக்கம் தந்துள்ளார்.

**காதல் - புள்ளி**

ஒரு புள்ளியில் இருந்துதான் பலகோடுகளும் கோலங்களும் தொடங்குகின்றன. அதைப் போலவே,

**காதல் ஒரு புள்ளி தான்**
**ஆனால் என்ன சூரிய - சந்திர - நட்சத்திர**
**மண்டலங்களும் அந்தப் புள்ளிக்குள்**
**அடங்கி விடுகின்றன.**
**விண்மீன், மின்னல், முகில்**
**வானவில், நிலா சூரியன்**
**இந்த வானத்து அதிசயங்களோடு**
**காதலையும் ஒப்பிடலாம்.**

அகில உலகமும் காதல் என்ற புள்ளிக்குள் அடங்குவிடுகின்றன. ''ஆறறிவு மனிதர் தொட்டு ஓரறிவுக்கலம் வரை, மறு திசையில் ஏழாம் எட்டாம் அறிவுகள் என பரிபூரண அறிவு வரை அன்பு என்ற மின் சக்தியே கருணையாக உலக வெளியெங்கும் வியாபித்துள்ளது. இந்தக் கருணையின் பல்வேறு ரூபங்கள் அல்லது கூறுகளின் மேலே அன்பு, காதல், பாசம், நேசம், பற்றுபாசம் என வரிசைப்படுத்தப்பட்டிருந்தன (காதல் என்ற மூன்றெழுத்து மந்திரம்-குகதாசன் கனடா) என்று கூறியுள்ளார்.

**காதல் - மண்**

மண் என்பது உலகில் பல்வேறு பயன்பாட்டிற்குத் தேவையான ஒன்றாகும். அந்த மண் குயவனிடம் இருந்தால், அவன் தன் மனதில் நினைக்கும் கற்பனை உருவத்தை மண்ணில் உருவாக்கி

விடுகிறான். அது பலவகையான பயன்பாட்டிற்கும் உதவுகின்றன. ஆனால் அந்த மண்ணோ கடற்கரையில் உள்ள மண்ணாக இருந்தால் ஒன்றுக்கும் பயன்படாது. அதைப் போலவே காதலாலும் ஒரு சிலர் நல்ல மனிதர்களாக உலா வருவார்கள். இதையே

**மண்ணைப் பிசைந்தால் குடம்**
**செய்யலாம்**
**நீரோ ஒரு மண்**
**அந்த மண்ணைக் குடமாக்க முயன்றாள்**
**ஆனால் நீரோ மண் கடற்கரை மண்**
**அதில் குடம் செய்ய முடியாது என்பது**
**அவளுக்குத்தெரியாமல்**
**அந்த மண்ணைக் காதலித்தாள்என்றும்**

**குயவன் கைக்குப் போகும்மண்**
**காதலிக்கப்போகும் மனம்**
**இரண்டுக்குமே உருவம் கிடைக்கும் - என்றும்**
**காதல் ஒரு மண்**
**இந்த மண்ணில் விதையாய் விழுந்த**
**யாவரும் போராடும் குணம் பெறுவர்**

என்றும் கவிஞர் காதல் என்ற மண்ணின் தன்மையை விளக்கியுள்ளார்.

“காதல் என்பது ஒரு வகையான தனித்த உணர்வு அந்த உணர்வை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. அது உள்ளுக்குள் சென்று ஊடுருவும்” (காதல் என்றால் என்ன? எவ்வாறு காதலிக்க வேண்டும்”)

**காதல் - நெருப்பு**

கற்கள் ஒன்றோடு ஒன்று உரசினால் நெருப்பு உண்டாகும். இந்த அடிப்படையில் தான் நெருப்பை மனிதன் கண்டுபிடித்தான் என்று ஒரு கருத்து உண்டு. ஆனால், மனித மனங்களில் காதல் என்ற கற்கள் நெருப்பை உண்டாக்கி வாழ்க்கை என்ற விளக்கை ஏற்றுகிறது. செயல் மாறுபாட்டால் சில இடங்களில் தானே கொளுத்தி அழித்து விடுகிறது.

**சிக்கிமுக்கிக் கல்லிலிருந்து மட்டுமல்ல**
**இரண்டு பனிக்கட்டிகளை**
**உரசினால் கூட**
**காதல் என்ற நெருப்பு கசியும்என்றும்**

**காதல் என்றப் பூ விழுந்து**
**அந்தக் கல் கூட**
**உள்ளுக்குள் உடைந்து போயிருக்கிறது**
**அந்தக் கல் கூட காதலிக்காக**
**கண்ணீர் சிந்தியிருக்கிறது**

என்று ஆசிரியர் காதல் என்ற நெருப்புக்கு விளக்கம் கொடுத்துள்ளார்.

**காதல் சூத்திரம்**

அறிவியலும், கணிதமும் சில சூத்திரங்களின் மூலமே விளக்க முடியும். அது போல கவிஞரும் காதலுக்குரிய சூத்திரங்களை வகுத்துள்ளார்.

பூ + தீ = வாலிபம்
வாலிபம் + பூ = காதல்
வாலிபம் + தீ = காமம்

ஆசை x கவிதை = பருவம்
பருவம் x கவிதை = காதல்
பருவம் x ஆசை = காமம்

இது இளமையின் கணித சூத்திரம்

காதல் என்பது உடல், உள்ளம் என்பதையும் தாண்டி, நமது உயிரான ஆன்மாவுடனும் தொடர்புள்ளதாகின்றது. பொதுவாக மானிடரின் ஏனைய தேவைகள் உடலையோ, உள்ளத்தையோ அன்றில் மனத்தையோ மட்டும் சார்ந்திருக்கையில் உடல், உள்ளம், மனம் உயிர் ஆகிய அனைத்து மனித அம்சக் குதிரைகளினாலும் பலமாக இழுத்துச் செல்லப்படும் அழகிய ரதம் காதல் இதையே சேக்ஸ்பியரும் டுழஎந டழழமள ழெவ றவைா வாந நலநளஇ டிரவ றவைா வாந அinனெ என்று எழுதியுள்ளார் (காதல் என்ற மூன்றெழுத்து மந்திரம் - குகதாசன் கனடா)

**இயற்கையும் - காதலும்**

காதலும் இயற்கையும் ஒன்றோடு ஒன்று இணைந்ததே இருக்கும். ஒன்றை விட்டு ஒன்றைப் பிரிக்க முடியாது.

**காதல் ஒரு வானம்!**
**இதை வானில் எவர் சஞ்சரித்தாலும்**
**அவருக்கு நட்சத்திர அந்தஸ்து**
**கிடைக்கும்!**
**காதல் ஒரு காற்று**
**இந்தக் காற்று யார் உயிரில் நுழைகிறதோ**
**அவர் உயிர் இசையளிக்கும் குழலாகும் ! என்றும்**
**விண்மீன், மின்னல், முகில்**
**வானவில், நிலா, சூரியன்**
**இந்த வானத்து அதியங்களோடு**
**காதலையும் ஒப்பிடலாம்**
**பூ, தீ, காற்று, மலை, கடல்**
**இந்தப்பூமியின் அதிசயங்களோடு**
**காதலை ஒப்பிடலாம்.**

என்றும் கவிஞர் இயற்கையோடு காதலை இணைத்துப் பாடியுள்ளார்.

'சமூகக் கட்டமைப்புக்களையும் சிதைத்து, சுற்றாடலையும் மாசுபடுத்தி பூகோள காலநிலையையும் பாழாக்கி திங்கள் குளிர், செவ்வாய் வெயில், புதன் கடுங்காற்று, வியாழன் உறைபனி, வெள்ளி பலத்த மழை என ஒரு வருட பருவகால மாற்றங்களை ஓரே வாரத்தில் அள்ளி வீசி குழப்புக்கிறது'' (காதல் என்ற மூன்றெழுத்து மாந்திரம்-குகதாசன் கனடா)

அதுபோல மனித வாழ்க்கையில் காதல் என்ற புயல் வீசும் போது மாற்றங்களையும், குழப்பங்களையும் உண்டாக்கி விடுகிறது.

**சூரிய ஒளிபட்டதும்**
**பனிதுளி தீபமாகி விடுகிறது**
**காதலின் ஒளிபட்டதும்**
**வெற்றிடமாய் இருந்தமனம்**
**தியான மண்டபமாய் ஆகிவிடுகிறது !என்றும்**

**காற்று போல் எங்கெங்கு காணினும்**
**நீக்கமற நிறைந்து**
**மலைபோல் யுகஊழி ஒளிக்காலம்**
**தாண்டி உயிர் பிடித்து**
**கடல்போல் உலகையே குடிக்கும்**
**தாகத்துடக் இருப்பது காதல்**

என்றும் பாடியுள்ளார் கவிஞர். காதல் என்பது ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டும் என்ற கட்டாயமோ அல்லது அது ஒன்றும் காசு கொடுத்து வாங்கும் விலை உயர்ந்த பொருளாகவோ அல்லது உயர்தரமானதாக இருக்கவேண்டும் என்பதோ இல்லை. உண்மையில் சில நேரங்களில் காதல் தருணங்கள் எளியதாகவும் மனதில் செய்ய வேண்டுமென்று தோன்றும் ஓர் உணர்வு.

**காதல் குறித்து... கவிஞர். நா. முத்துக்குமார்...**

**பதின் வயதில் முதன்முறை ஓர்**
**பேய் பிடித்து ஆட்டுவது!**
**நதிநீரில் வலைவிரித்து**
**விண்மீன்கள் மாட்டுவது!**
**புதிரென்று புரிந்தாலும்**
**புரியாமல் நெருங்குவது!**
**ரதி என்றும், ரம்பை என்றும்**
**இராப்பகலாய் புலம்புவது!**
**குதிரினிலே நெல்லைப் போல்**
**வார்த்தைகளை நிரப்புவது**
**எதிரினிலே பார்த்துவிட்டால்**
**வழக்கம்போல் சொதப்புவது**
**பதில் தெரியாக் கேள்வியுடன்**
**பல கடிதம் நீட்டுவது**
**முதிர் கண்ணன் ஆன பின்பும்**
**முதல் தழும்பைப் போற்றுவது !**

அதுதான் காதல் என கவிஞர் காதலின் புதுமொழியை அழகாக தன் வார்த்தைகளில் செதுக்கி உள்ளார்.

**உண்மைக்காதல்**

காதல் என்று வரும்போது தான் பல ஆயிரம் கேள்விகள் எழுகின்றன. ஏனென்றால் சிலகாதல் வகைகளை இனங்காண விவரங்கள் கூடத் தேவையாக உள்ளது. இது உண்மைக் காதல்தானா? அல்லது வெறும் வேடம்தானா? காதலின் நோக்கம் வெறும் உணர்ச்சித் தேவை மட்டுந்தானா? ஏனக் காதலிற்கான உண்மையான மூல காரணம் என்ன? என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

**காதல் ஒரு சலவை நிலையம்**
**இங்கே மனம் தூய்மையாகும்**
**ஆனால் என்ன**
**காதல் அடித்துத் துவைத்துத்தான்**
**தூய்மைப்படுத்தும் - என்றும்**
**காதல் ஒரு மனிதனைப்**
**பலப்படுத்தலாம்**
**பலவீனமாக்கக்கூடாது**

என்றும் காதலின் உண்மைத் தன்மையை எடுத்துக் காட்டியுள்ளார்.

**காதலின் மறுபக்கம்**

காதல் என்றால் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் என இருவரிடையே ஏற்பட்ட பழக்கம் என்பது மட்டுமல்ல. பெற்றோர்-பிள்ளைகள், அண்ணன்-தங்கை, நண்பர்கள் என்று பலநிலைகளிலும் காதல் என்ற சொல்லை பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் தவறான வார்த்தை என பலரால் சொல்லப்படுவதால் அவ்வார்த்தையை சொல்வதற்கே பலரும் தயங்கி வருகின்ற அவல நிலை காணப்படுகிறது. அதன் உண்மைப் பொருளை உணர்ந்தால் எவரும் தயங்கமாட்டார்கள்.

"பெற்றோர் பிள்ளைகளிடம் காட்டுவது Parental love குடும்பத்தில் அதன் அங்கத்தவரிடையே நிலவுவது Affection நம் நாட்டின் மீது நமக்கு தோன்றுவது Patriotism. இறை சக்தி மீது ஏற்படுவது Godly love எனப்படும் பக்தி. இனத்தின் மீது உள்ளது இனப்பற்று Radical Love'' எனக் காதலின் மறு பக்கத்தை அடுக்கிக் கொண்டே போகலாம் என்றும் ஒவ்வொரு நாளும் பணிவிடை செய்யப்பட வேண்டியவர்கள் தாய் தந்தையர். ஒவ்வொரு கணமும் சுவாசிக்கப்பட வேண்டியது குடும்பக் காற்று'' என்றும் காதலின் மறுபக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

**காதல் என்பது**
**மனதில் ஏற்படும் காயமல்ல**
**மனம் பூப்படைந்து விட்டதன் பொருள்**

முடிவாக

மனித வாழ்க்கையில் காதல் அன்பு இல்லாமல் வாழ முடியாது. அந்த காதல் சரியான வழியில் முறையான உறவுகளிடம் இருந்தால் சிறப்பாக இருக்கும் சமுதாயம் போற்றும் அவ்வுறவு நிலைகளில் மாறுபட்டால் சமூக சீரழிவும் உறவுகளில் கேடும் ஓங்கி நிற்கும்.

**முறையான அன்பும்**
**சரியான காதலும்**
**யார் அழித்தாலும் அழியாது**
**என்றும் வாழும் .........வாழட்டும்...!**

# எஸ்.அர்ஷியாவின் புதினங்களில் இஸ்லாமிய வழக்கங்கள்

**முனைவர் கா. மைதீன்**
*உதவிப்பேராசிரியர் மற்றும் தலைவர்*
*இஸ்லாம் மற்றும் இஸ்லாமியத் தமிழியல் துறை*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை*

**சௌ. பிரேம்குமார்**
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*இஸ்லாம் மற்றும் இஸ்லாமியத் தமிழியல் துறை*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை*

## முன்னுரை

தமிழ்ப் பண்பாடானது பன்முகத் தன்மை வாய்ந்த இனக்குழுக்களின் பண்பாடாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. சங்க காலத்தியச் சமூகத்திலேயே ஐந்திணை மக்களின் வாழ்வியல் நடைமுறைகள் இருந்தன. அதற்குப் பின்னர் பன்னெடுங்காலமாக இந்தியாவிற்குள் வந்த பல்வேறு நாட்டினரின் பண்பாட்டுத் தன்மைகள் இங்குள்ள மக்களின் வாழ்வியலில் ஊடுருவின. இனம் சார்ந்த பண்பாட்டு வேறுபாடுகளைப் போன்று சமயம் சார்ந்த பண்பாட்டு வெளிப்பாடுகள் இடத்திற்கும், காலத்திற்கும், சூழலுக்கும் ஏற்ப மாறுபட்டு அமைகின்றன. தமிழகத்தின் பல்வேறு வட்டார வழக்குகள் இருப்பது போல பல்வேறு சமய வாழ்வியல்களும் காணப்படுகின்றன. இந்து சமயத்தின் பிரிவுகள் எண்ணிறந்தனவாக இருக்கின்றன. கிறித்தவம், இஸ்லாம் சமயங்களின் பிரிவுகள் பலவாக இருக்கின்றன. இந்தியாவிற்குள் இஸ்லாமியர்கள் மற்றும் கிறித்தவர்களின் பரவலானது இங்குள்ள மக்களின் வாழ்வியலில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்தன. இதில் இஸ்லாம் சமயமானது பண்பாட்டு அடிப்படையில் வேறுபட்ட தன்மைகளைக் கொண்டதாக இருக்கிறது. அம்மக்கள் தங்களுக்குள் மூடுண்ட வாழ்வு முறையைக் கொண்டுள்ளதாகவும் கூறப்படுவதுண்டு. ஆனால் அவற்றைப் பட்டவர்த்தனப்படுத்தும்இலக்கியங்கள் தற்காலத்தில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அத்தகைய எழுத்தாளர்களில் சல்மா, ஸர்மிளா செய்யித், கீரனூர் ஜாகிர் ராஜா, பீர்முகம்மது, பிர்தவ்ஸ் ராஜகுமாரன் போன்றோர் முதன்மையிடம் பெறுகின்றனர். இவர்களுடன் இஸ்லாமிய வாழ்வை மட்டுமின்றி மதுரை மக்களின் வாழ்வையும் தன் இலக்கியத்திற்குள் கொண்டு வந்தவராக வெளிப்படுபவர் எஸ்.அர்ஷியா ஆவார். இவருடைய புதினங்களில் இஸ்லாமிய நடைமுறை வாழ்வு குறித்த சில குறிப்புகள் இக்கட்டுரையில் கூறப்படுகின்றன.

## இஸ்லாமிய சமயம் பற்றிய பொதுப்புத்தி

மேற்கத்திய சமயங்களில் ஒன்றாகவும் இந்தியாவில் பரவிய வெளிநாட்டு மதங்களுள் மிகுதியான மக்கள் தொகையைக் கொண்டதாகவும் விளங்குகிறது. இஸ்லாமியர்களைப் பற்றிய பொதுவான கருத்துக்கள் அவர்களை நாட்டின் விரோதிகளாகக் காட்டுதல் ஆகும். அவர்களது வாழ்வியல் நடைமுறைகள் பிற சமயத்தவர்களின் வாழ்வியல் நடைமுறைகளோடு எவ்விதத்திலும் ஒத்துப் போகாத தன்மையில் இருந்து வருகிறது. இஸ்லாமிய சமய மக்களின் வாழ்வானது வேறுபட்டு அமைவதின் பின்புலத்தைப் பற்றி "இஸ்லாமியர்கள் பயங்கரவாதிகள், குண்டு வைப்பவர்கள், அடிப்படைவாதிகள் உள்ளிட்ட எதிர்மறையான பிம்பங்கள் உருவாகுவதன் அடிப்படை இதுதான். உருவாக்குதலும் உருவாகுதலும் வெவ்வேறு செயல்பாடுகள் என்பதால் இஸ்லாமிய நோக்குதல் மக்களின் பொதுப்புத்தியில் இஸ்லாமியர்கள் ஒரு படித்தானவர்கள் என்பதாக உருவாகிறது" (ஜமாலன், குடியாண்மைச் சமூகமும் நுண்பாசிசமும், ப.112) என்ற கூற்றினடியாக இஸ்லாமியர்கள் குறித்த கருத்தாக்கம் பொதுபுத்தியில் உறைய வைக்கப்பட்டுள்ள நிலை பற்றி அறியமுடிகிறது. ஆனால் இஸ்லாமியர்களின் யதார்த்த வாழ்வானது அன்றாட செலவினங்களோடும், பந்த பாசங்களோடும், அன்பு காதலோடும், திருமணம் போன்ற வாழ்வியல் செயல்பாடுகளோடும்தான் இருக்கிறது. அவர்களின் வழிபாடு சார்ந்த பல்வேறு செயல்களைச் செய்கிறார்கள். அதனோடு இஸ்லாமையும் நம்புகிறார்கள். இறைவன் மீதான நம்பிக்கையே அவர்களது வாழ்வை நகர்த்துகிறது. இறைவனுக்கு உண்மையாக இருப்பதை வாழ்வியலாகக் கொண்டுள்ளார்கள். "இக்கலீமாவை ஒப்புவோன் எத்தகைய நிலையிலும் மனம் உடைந்து விரக்தி அடைவதில்லை. அவனோ விண்ணுலக, மண்ணுலக கருவூலகங்களின் உரிமையாளனும் பேரருளும் கருணையும்

எல்லையின்றிப் பெற்றிருப்பவனும் எங்கும் நிறைந்த சக்திகளைக் கொண்டிருப்பவனுமான ஏக இறைவனை நம்புகிறவன் இந்த நம்பிக்கையானது (ஈமான்) அவனுக்கு ஆறுதலை அளிக்கிறது" (மௌலானா சையித் அபுல் அ'.லா மௌதூதி, இதுதான் இஸ்லாம் பாகம் -1, ப.112) என்ற குறிப்பானது இஸ்லாயமிர்கள் கடுமையான பக்தியைக் கைக் கொள்ளக் கூடியவர்கள் என்பதை உணர்த்துவதாக அமைகிறது.

**தொழுகையில் பகைமை பாராட்டக் கூடாது**

இஸ்லாத்தில் தொழுகை என்பது அன்றாட கட்டாயச் செயலாகும். ஐந்து முறை தொழுது வணங்குவதை அவர்கள் தவற விடமாட்டார்கள். அதே போல் வெள்ளிக்கிழமை மசூதியில் தொழுகையில் கலந்து கொள்வதையும் தவற விடமாட்டார்கள். எதிரிகளாக இருந்தாலும் தொழுகை இடத்தில் தம் பகையை வெளிக்காட்டக் கூடாது என்பதைக் கடைபிடிக்கக் கூடியவர்கள் என்பதால் ஏழரைப் பங்காளி வகையறா புதினத்தில் பரம எதிரிகளான குத்தூசும் தாவூதும் எதிரும் புதிருமாகப் பார்த்துக் கொண்டனர். "அந்த வாரம் வெள்ளிக் கிழமை ஜும்மாத் தொழுகைக்குப்போயிருந்தப்ப பள்ளிவாசல்ல குத்தூசும் தாவூதும் எதிரும் புதிருமா பார்க்க வேண்டியதாப் போச்சு. அது தவுக்கு முடியாதது. சுத்தியிருந்த எல்லாரும் என்னமோ நடக்கப் போகுதுங்கிற ஆர்வலத்துல ரெண்டு பேத்தையும் மாறி மாறிப் பார்க்குறாங்க. அவன் என்னமாச்சும் சொல்லட்டும்முன்னு அவரு காத்திருக்காரு. அவரு எதுனாச்சும் சொன்னா பதில் பேசாமப் போயிறக் கூடாதுன்னு அவன் நெனச்சிக்கிட்டு இருக்கான். அவன் சாதுதான். மிரள வச்சிட்டாரு. ஆனா இது உதுந்து போயிர்ர வெத்துமிரட்சியில்ல. மேட்டுக்குடிகளின் மேட்டிமைல இருந்து அவரு நடந்துகிட்டாரு. ஏமாத்தப்பட்ட ஆதங்கத்தோட அவன் இருந்தான். ஜும்மா தொழுகை முடிஞ்சுது. எல்லாரும் சந்தோஷமா வாழ்த்துகளைத் தெரிவிச்சுக்க, 'முலாகத்' செஞ்சுக்குவாங்க. அதுக்கான சந்தர்ப்பம் வந்தப்ப ரெண்டு பேருமே வெலகிப் போயிட்டாங்க. பொது இடத்துல அப்டிப் பகைமையோட நடந்துக்கக் கூடாதுங்க்றது பாரம்பரியத்துல வந்த ரெண்டு பேருக்குமே தெரியும்." (ஏழரைப் பங்காளி வகையறா, ப.168) என்பதில் இரு பகைவர்கள் மசூதியில் சந்தித்துக் கொண்டாலும் இருவருக்குள் இருக்கும் பகைமையை வெளிக்காட்டிக் கொள்ளாத தன்மையை அவர்கள் நம்பும் இறைவன்பால் கடைபிடிக்கின்றனர் என்பதைக் காணமுடிகிறது.

**இஸ்லாமியர் தாடி வைத்துக் கொள்வதற்கான நெறிமுறை**

இஸ்லாமியர்கள் மீசையைக் கத்தரித்துக் கொள்ள வேண்டும். ஆனால் தாடியை நீளமாக வைத்துக் கொள்ள வேண்டும் என கூறப்பட்டிருக்கிறது. "மேல் உதட்டில் தொங்கிக் கொண்டிருக்கும் மீசையைக் கத்தரிக்க வேண்டும். தாடியைப் பொருத்தவரை அதை அடர்த்தியாக வளர்க்க வேண்டும். மீசையை கத்தரியுங்கள். தாடியை வளர விடுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர் அபூஹுு ரைரா (ரழி) நூல் முஸ்லிம்" (முஸ்லிமின் வழிமுறை, ப.90) என்ற கூற்றிற்கிணங்க தாடி வைக்காதவர்கள் இஸ்லாமியர் கிடையாது என்ற கட்டுப்பாடு இருக்கிறது. அதனை எஸ்.அர்ஷியாவின் அப்பாஸ்பாய் தோப்பு புதினத்திலும் கூறுவதைக் காணமுடிகிறது. "கத்னா - மார்க்க் கல்யாணம் - செய்யாதவன் எப்டி முஸல்மான் இல்லியோ, அதே மாதிரிதான் தாடி வளர்க்காதவனும்' என்பது அவர் கொள்கை" (அப்பாஸ்பாய் தோப்பு ப. 111) என்று குறிப்பிடப்படுகிறது. இஸ்லாமியர்கள் தாடி வைத்துக் கொள்வது அவர்களது மதச் சட்டத்தின்படி கட்டாயமாகக் கடைபிடிக்கப்படுகிறது.

**திருமணத்திற்கு முந்தைய நெறிமுறை**

இஸ்லாத்தில் திருமணம் என்பதுஆண், பெண் இருவரிடையே ஓர் ஒருங்கிணைவினை ஏற்படுத்தும் ஏற்பாடாக அமைகிறது. திருமணத்தின் போது கடைபிடிக்கப்படும் நடைமுறைகள் தற்காலத்தில் வழக்கொழிந்து போகும் நிலையில் இருப்பதை அப்பாஸ்பாய் தோப்பு புதினத்தில் சுட்டிக்காட்டும் விதமாக எழுதியுள்ளார். அதாவது திருமணத்தின் பின்னர்தான் மாப்பிள்ளை பெண்ணை பார்க்க வேண்டும் என்பது நடைமுறையாகும். ஆனால் உசேனை பெண்ணைப் பார்க்கும்படி அவனது உறவினர்கள் கூறுகின்றனர். "சின்ன மருமகள், உசேனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். அவன் காதில்மட்டும் படும்படி "எங்க எல்லாத்துக்கும் பிடிச்சிருக்குங்க்றது இருக்கட்டும், மாப்ளே. நீங்களும் ஒருதடவ பொண்ணப் பாத்துருங்க. நம்மதுல பொண்ணுமாப்ளே நிக்காஹ்வுக்கு முன்னாலப் பாத்துக்கக் கூடாதுன்னு சொல்லியிருந்தாலும், அது அந்தக்காலத்துப் பேச்சு, பொண்ணு படிச்சுருக்கா, வேலைக்குப்போறா, ஸ்கூல் டீச்சர். ஒருநாளைக்கு எத்தனை ஆம்பளைகளோட பேசவேண்டியிருக்கும். அதுல நீங்களும் ஒரு ஆளா இருந்துக்கோங்க" என்று கண்ணடித்தாள்." (அப்பாஸ்பாய் தோப்பு, ப. 259) என்று குறிப்பிடுவதன் மூலம் திருமணம்

சார்ந்த சில செயல்களை நடைமுறைகளை மீறி செயல்படுத்த முற்படுகின்றனர். காலத்திற்கேற்ப வாழ்க்கை நடைமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளும் மனப்பக்குவம் இதில் வெளிப்படுகிறது. ஆனால் பொதுவாக இஸ்லாமியர்களின் திருமணத்தின் போது பெண்ணை திருமணத்திற்கு முன்பு பார்க்கும் வழக்கம் இருப்பதில்லை. முற்போக்கு சிந்தனை கொண்டவர் என்பதால் அர்ஷியா தனது புதினத்தில் இவ்வாறான கருத்துக்களை கூறியிருக்கிறார் எனலாம்.

### தேங்காய் குடுமி குறித்த ஹராம்

இஸ்லாமியர்களின்வழக்கத்தில் ஹராம் என்பது சட்டப்படி விலக்கப்பட்டவை என்று பொருளாகிறது. அந்த வகையில் முறைகேடாக வந்த எந்தப் பொருளும் செயலும் ஹராமாகக் கருதப்படுகிறது. சட்டவிதிகளுக்குப் புறம்பான எதுவுமே ஹராம் ஆகையால் குர்ரானில் தேங்காயை குடுமியைப் பிய்த்துவிட்டுத்தான் உடைக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அதனை குடுமியோடு உடைத்தால் அதுவும் கூட ஹராம்தான். இதனை "குடுமியைச் சுத்தமாகப் பிய்த்துவிட்டுத்தான் உடைக்க வேண்டும் என்று அவளுக்குச் சொல்லப்பட்டிருந்தது. அதைப் பிய்க்காமல் உடைத்தால், அது ஹராம் என்று அந்தக் குடும்பத்தில் நினைத்து வந்தார்கள். தேங்காய் உடைபடும் சத்தம் வந்த நொடிகளில், தோப்பு வீட்டு ராபியாவின் பார்வை பொன்னம்மா மீது படிந்து விலகியது" (அப்பாஸ்பாய் தோப்பு ப. 22) என்ற குறிப்பிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. இஸ்லாமிய சட்ட விதிகள் வாழ்வியல் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தும் வகையில் ஹராம், ஹலால் விதிகளைப் பின்பற்ற வலியுறுத்துகிறது. "அல்லாஹ்வின் பெயர் கூறி (உங்களுக்கு அனுமதிக்கப்பட்டவற்றில்) அறுக்கப்பட்டதை நீங்கள் சாப்பிடாமலிருக்க என்ன (தடை) இருக்கிறது? நீங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டாலன்றி சாப்பிட உங்களுக்கு விலக்கப்பட்டவை எவை என்பதை அல்லாஹ் விவரித்துக் கூறியுள்ளான்- ஆனால் பெரும்பாலோர், அறியாமையின் காரணமாகத் தங்களுடைய மன இச்சைகளின் பிரகாரம் (மனிதர்களை) வழி கெடுக்கிறார்கள்; வரம்பு மீறிச்செல்பவர்களை நிச்சயமாக உம் இறைவன் நன்கு அறிகிறான்."-(திருக் குர்ஆன்-6:119) என்று குர்ரான் விதிக்கிறது. எனவே ஹராம் பற்றிக் கூறப்பட்டதற்கு மாறாகச் செய்யக் கூடாது என்பதை வாழ்வியலில் கடைபிடிக்கின்றனர்.

### ஹலால் மாமிசம்

ஹலால் என்பது உணவுக்காகக் கொல்லப்படும் விலங்குகளை கொல்லும் முறைகளைக் குறிக்கக் கூடியது. எந்த ஒரு விலங்கையும் துன்புறுத்தாமல் கொன்று அதன் மாமிசத்தை புசிக்க வேண்டும். அதுவும் முறையான வழியில் பெறப்பட்டதாக இருந்தால்தான் அந்த மாமிசம் புசிப்பதற்குத் தகுதியானது. இல்லையென்றால் அது ஹராம் என்று விலக்கப்பட வேண்டியது. பன்றியிறைச்சி ஹராம். அதனை எப்படிக் கொன்றாலும் அது ஹராம்தான். ஹலால் செய்யப்பட்டது என்பதற்கு விளக்கம் "மாமிச உணவாயின் இஸ்லாமிய முறையில் அறுக்கப்பட்டது. எனவும் ஏனைய உணவாயின், மனித உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும் பொருட்கள் அதில் உள்ளடக்கப்பட வில்லை என்பதே அதன் பொருளாகும். எனவே, மனித உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும் என வைத்திய ரீதியாக நிரூபிக்கப்பட்ட உணவு முறைகளை தவிர்ப்பது அனைவருக்கும் நன்மையானதே!" (<https://kattankudi.wordpress.com/2013/04) என்ற கூற்றின்படி இஸ்லாமிய முறைப்படி அறுக்கப்பட்ட மாமிசமே ஹலால் எனப்படுகிறது. இதனை "..ஆட்டின் கழுத்தை அறுக்கும் கொடூரம் அவர் முகத்தில் இருக்கவில்லை. 'பிஸ்மி' சொல்லி அறுக்கப்பட்ட விலங்குகளைத்தான் உண்ண வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டிருப்பதால் அதை சமூக அறமாக அவர் கருதியிருந்தார்" (சொட்டாங்கல் ப. 104) என்று தனது புதினத்தில் பதிவு செய்கிறார் ஆசிரியர்.

### ஆண்களுக்கு தலாக்கும் பெண்களுக்கு குலாவும்

திருமணம் செய்து வாழும் மணமக்கள் தங்களுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகளின் காரணமாக பிரிய நேரிடுகிறது. அவ்வாறு பிரியும் போது ஆண், தலாக் என்றும் பெண் குலா என்றும் கூறும் வழக்கம் காணப்படுகிறது. "ஒரு ஆண்மகன் தன்னுடைய மனைவியை விவாகரத்துச் செய்வதாகத் தொடர்ந்து ஒரே தடவையில் மூன்று முறை கூறினாலும் அவர் ஒருமுறை விவாகரத்து செய்யப் போவதாகக் கூறியதாகவே கருதப்பட்டது. இவ்வழமைக்குப் பின்னர் விலக்கு அளிக்கப்பட்டது. அப்படி இருந்தும் உமர் அவர்கள் இவ்வாறு விவாகரத்து செய்வதாக மும்முறை கூறுவதை மூன்று தடவைகள் கூறியதாகக் கருதி அவ்வாறு செய்யப்பட்ட விபாரத்து இறுதியானதென பிரகடனம் செய்தார்" (கமறுதீன் கான், இஸ்லாத்தில் மகளிர் நிலை, ப.45) என்ற குறிப்பின்படி விவாகரத்து

செய்வதை வழமையாகக் கொள்வதைத் தவிர்த்தாலும் பின்னர் அதே நடைமுறை பின்பற்றப்படுகிறது. மூன்று முறை ஒரே தடவையில் தலாக் கூறினால் அது விவாகரத்து ஆகும் எனப் பிரகடனம் செய்யப்பட்டது. இஸ்லாத்தில் இதனால் விவாகரத்து ஒரு கேலிக்குரிய செயலாக மாறி விட்டது என்பதையும் கூறுகின்றனர். எஸ்.அர்ஷியாவின் புதினத்தில் விவாகரத்தை ஆண் முன் மொழிவதும் பெண் முன் மொழிவதுமென இரு செயல்களும் நடைபெறுகின்றன.

“முக்தார் மகன் உசேன் நிக்காஹ்வுக்கு சம்மதிச்சுட்டானாம். ஒன்னியக் கட்டிக்கவா? அப்ப நான் தலாக் தரட்டுமா? இல்ல, நீ எனக்கு குல்உ தர்றியா?” (அப்பாஸ்பாய் தோப்பு ப. 33) என்று குறிப்பிடுவதில் இரண்டு பேரும் பிரிவதற்கு முயற்சிப்பது கூறப்படுகிறது. மேலும், “அவங்களத் தடுத்து நிப்பாட்டுன ரோசாப்பூ பாய் சொன்னது ஆம்பளயாலும் சொல்ல முடியாது. ‘வருசைல நான் தலாக் சொல்லிட்டு அதுமுன்னால போறது முறையில்லைல்ல’ ன்னு. குரான்ல என்ன சொல்லிருக்கோ அதுபடி நடந்துகிட்டாருன்னு பேச்சு.” (அப்பாஸ்பாய் தோப்பு ப. 225) தலாக் அல்லது விவாகரத்து குறித்து குர்ரானில் கூறப்பட்டுள்ளபடி செயல்படுத்த வேண்டும் எனக் குறிப்பிடுகிறார் ஆசிரியர். இஸ்லாத்தில் தலாக் மற்றும் குலா கொடுப்பதைப் பற்றிய கருத்துக்களை “இஸ்லாத்துப்படி ஆம்பளைக்கு ரெண்டு பங்கும், பொட்டைக்கு ஒரு பங்கும் தானே குடுக்கணும்?” (ஏழரைப் பங்காளி வகையறா ப.9) என்றும் “தாயா, கிச்சாப் பொண்ணுகளை நிக்காஹ் செய்ற வழக்கம் இஸ்லாத்துலதான் இருக்குல்ல” (ஏழரைப்பங்காளி வகையறா ப. 10) என்றும் “ஒன்னியக் கட்டிக்கவா? அப்ப நான் தலாக் தரட்டுமா? இல்ல, நீ எனக்கு குல்உ தர்றியா?” (அப்பாஸ்பாய் தோப்பு ப. 33) என்றும் கூறுகிறார். இதன் மூலம் ஆண், பெண் இருவரும் தாம் முன் வந்து விவாகரத்து கோரி பெறலாம் என்பதை அறியமுடிகிறது.

### முங்கா முங்காணி

மழை பெய்ய வேண்டி பள்ளி வாசலில் வழிபடும் இஸ்லாமியர்களின் குழந்தைகள் வீட்டு வீட்டிற்குச் சென்று பொம்மைகளை ஆட்டி பாட்டுப்பாடி காசு, அரிசி போன்ற பொருட்களைப் பெறும் ஊர்வலம் ஆகும். இந்துக்களில் கார்த்திகை மாதங்களில் நடத்தும் பரணி போன்று இது இஸ்லாமியர்களின் வீடுகளில் நடைபெறுகிறது. முங்கா முங்காணி குறித்து “முங்கா முங்காணி என்பது இரண்டு பொம்மைகள். ஒன்று ஆண் பொம்மை மற்றொன்று பெண் பொம்மை. துணியால் செய்யப்பட்ட அவை. அரையடி உயரமே இருந்தன. அந்த பொம்மைகளை தாதிமா என்றழைக்கப்படும் வயதான மூதாட்டி ஜொகராபீ செய்திருந்தார். பொம்மைகளை உலக்கைகளின் ஒரு பக்கத்து முனைகளில் தனித்தனியாகக் கயிறு கொண்டு கட்டியிருந்தார்கள். வலக்கையில் ஒன்றும் இடக்கையில் ஒன்றுமாக சிறுமிகள் தூக்கிப் பிடித்துக் கொண்டு சாலைக்கு இந்தப் பக்கத்தில் இருக்கும் எல்லாவீடுகளுக்கும் போனார்கள். ஒவ்வொரு வீட்டின் முன்பும் நின்று அந்த பொம்மைகளை உயரே ஆட்டி ஆட்டி முங்கா முங்காணி ஜல்தே… ஹை… ஒஜூக்கு பாணி மங்தே ஹை… ஒஜூக்கா லேட்டா புட் கயா… அல்லாமி யான் படா பர்சாத்தே என்று இறைஞ்சினார்கள்” (கரும்பலகை, ப.40) என்று குறிப்பிடுகிறார். மழை பெய்வதற்காக இவ்வாறான வழக்கம் இஸ்லாமியர்களிடம் காணப்படுகிறது. ஜொகராபீயின் இச்செயலால் கருத்தப்பாண்டியன் வலசில் மழை பெய்வதையும் அதனால் மக்கள் மகிழ்ச்சி அடைவதையும் புதினத்தில் சுட்டிக்காட்டுகிறார். இந்த முங்கா முங்காணி ஊர்வலத்தில் பெண் குழந்தைகள் மட்டுமே கலந்து கொள்கிறார்கள். “அவர்கள் அதை வைத்து இறைஞ்சலுடன் பாடிக் கொண்டு போன போது ஒவ்வொரு வீட்டிலும் அரிசி, காசு மற்ற பொருட்களைக் கொடுத்தார்கள். அவர்கள் சேகரித்துக் கொண்டு வந்ததை தாதிமா ஜொகராபீ சமைத்து அந்தச் சிறுமிகளை வரிசையாக உட்கார வைத்துப் பரிமாறினார். பெண்பிள்ளைகளை மட்டுமே கலந்து கொண்டு நடத்தும் முங்கா முங்காணி நிகழ்ச்சி இது“ (கரும்பலகை, ப.41) என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு இஸ்லாமியர்களின் நடைமுறை வாழ்வானது பல்வேறு வேறுபட்ட செயல்களைக் கொண்டது என்பதை அர்ஷியாவின் புதினங்கள் உணர்த்துகின்றன.

### முடிவுரை

இஸ்லாமியர்களின் வாழ்வியலில் கடைபிடிக்கும் செயல்பாடுகள் என்பன அவர்களுக்கே உரிய சட்ட விதிகளை அடிப்படையாகக் கொண்டவை. பெண்களுக்கென்று தனிச் சட்டங்கள் இருக்கின்றன. குடும்பத்தினருக்கென்று இருக்கின்றன. பாலினச் சமத்துவத்தில் மண வாழ்க்கையில் துணையைத் தேர்ந்தெடுப்பதிலும் மணவிலக்குப் பெறுவதிலும்

இருபாலருக்கும் சம உரிமையை இஸ்லாம் சமயம் வழங்குவதை இவர் புதினங்களில் சுட்டிக் காட்டுகிறார்.

புறத்தோற்றத்தின் வழியாக சமய அடையாளங்களை இஸ்லாம் சமயம் முன்னிறுத்தி பிற சமயத்தவர்களிடமிருந்து தன்னை தனித்துவப்படுத்திக் காட்டுவதை இவ்வாசிரியரின் புதினங்கள் புலப்படுத்துகின்றன.

மழை வேண்டி பெண் குழந்தைகள் மட்டும் உருவ பொம்மைகளுடன் பங்கேற்கும் இஸ்லாமிய வழிபாடானது இந்து சமயத்தில் பின்பற்றப்படும் வழிபாட்டுடன் தொடர்புடையதை எஸ்.அர்ஷியாவின் புதினங்கள் வழி அறியமுடிகிறது.

எல்லாச் சமயங்களும் உயிர்ப்பலியிடலை விரும்பாதது போல இஸ்லாமும் பிஸ்மி என்று கூறித் தன்னை ஆற்றுப்படுத்திக் கொள்ள முனைவதைத் தனது புதினங்களில் தெளிவுபடுத்துகிறார் ஆசிரியர்.

### துணை நூற்பட்டியல்


1. எஸ்.அர்ஷியா, ஏழரைப் பங்காளி வகையறா, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2009.
2. எஸ்.அர்ஷியா, அப்பாஸ்பாய் தோப்பு, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 2011
3. எஸ்.அர்ஷியா, சொட்டாங்கல், எதிர் வெளியீடு, திருச்சி, 2016
4. எஸ்.அர்ஷியா, கரும்பலகை, எதிர் வெளியீடு, திருச்சி, 2019
5. ஜமாலன், குடியாண்மைச் சமூகமும் நுண்பாசிசமும், பாரதி புத்தகாலயம், சென்னை, 2022
6. மௌலானா சையித் அபுல் அ.்.லா மௌதூதி, (மொ.பெ- மஹுதி) இதுதான் இஸ்லாம், இஸ்லாமிய நிறுவனம், ட்ரஸ்ட், சென்னை, 2015
7. -------, இதுதான் இஸ்லாம், ஜுல்பி வெளிநாட்டவர் அழைப்பு மையம், ஜுல்பி, சவூதி.
8. கமறுதீன் கான், இஸ்லாத்தில் மகளிர் நிலை, முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல்பாட்டு முன்னணி, கொழும்பு, 1996.

# மனமெங்கும் மனிதப் பூ நாடகத்தில் நா.இளங்கோவின் எடுத்துரைப்பு

**திருமதி த. முத்துலெட்சுமி**
*பகுதி நேர முனைவர்பட்ட ஆய்வாளர், பதிவு எண்* (MKU24PFOL11448)
*மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை*

**முனைவர் பா. சிங்காரவேலன்**
*இணைப்பேராசிரியர் மற்றும் தழிழ்த்துறைத் தலைவர்*
*அரசுக் கலைக்கல்லூரி, மேலூர்*

**ஆய்வுச்சுருக்கம்**
உலகமே ஒரு நாடக மேடை என்றார் ஷேக்ஸ்பியர். உயர்ந்தோர் முதல் பாமர மக்கள் வரை பண்டைய காலம் தொட்டு இன்றைய காலம் வரை போற்றப்படும் அரிய கலை நாடகக் கலையாகும். நாடகம் என்பது பல்வேறு கலைகளின் கூட்டு கலையாகும். நாடு+அகம் =நாடகம். அதாவது நாட்டு மக்களின் அகத்தினை பிரதிபலிக்கும் ஒரு அரிய கலையாகும். இயல், இசை மற்றும் உடல் அசைவுகளோடு நடித்துக் காட்டப்படுவது. அவ்வகையில் அன்றாடம் நம் வாழ்வில் நடந்த நிகழ்வுகளை நேர்மறை கருத்துககளோடு நம் முன் படம் பிடித்துக் காட்டுவதில் வல்லவர் நா. இளங்கோ அவர்கள்.

ஒரு படைப்பாளன் தான் பார்த்த, உணர்ந்த நிகழ்வுகளையே தனது படைப்பின் மூலம் வெளிப்படுத்துவான் ஒரு படைப்பாளனின் படைப்பு வெற்றி பெறுவது என்பது அவன் நிகழ்ச்சிகளை ஒழுங்கு முறைப்படி அமைத்துக் கொண்டுள்ள தன்மையாலே அமையும். இது எடுத்துரைப்பியல் ஆய்வில் முக்கிய இடம் பெறுகின்றன. அவ்வகையில் நா.இளளங்கோ அவர்கள் உதகையிலும் மதுரையிலும் தனக்கு ஏற்பட்ட அனுபவங்கனைக் கொண்டுஎழுதிய ஆறு நாடகங்களாக மனமெங்கும் மனிதப் பூ என்னும் நாடகத்தினை எடுத்துரைத்த விதம் பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்

**திறவுச்சொற்கள்:** எடுத்துரைப்பு, மனிதநேயம், மனமெங்கும் மனிதப் பூ நாடகம்

## முன்னுரை

மனிதத் தன்மை மறத்து விட்ட இக்காலத்தில் மனிதநேயத்தினை மீட்கும் முயற்சியாகவும் சமூதாயசிந்தனையை ஆழமாக வேருன்றி நேரிய சிந்தனையோடு நமக்கு ஆறு நாடகங்களின் மூலமாக ‘மனமெங்கும் மனிதப் பூ’ என்னும் நாடக நூலினை வழங்கியுள்ளார் நா.இளங்கோ. அவர் ஆறு நாடகங்களில் கதையினை எடுத்துரைத்த விதம் பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## எடுத்துரைப்பு

இலக்கியம் என்பது படைப்பாளிக்கும், வாசகருக்கும் இடையிலான தொடர்பாடலுக்கான ஊடகம். எடுத்துரைப்பியல் படைப்பாளியையோ, வாசகரையோ கருத்தில் கொள்வதில்லை. புதிலாக படைப்புகளில் இருந்தே உட்கிடையான படைப்பாளியையும், உட்கிடையான வாசகரையும் எடுத்துரைப்பியல் கருத்தில் கொள்கிறது. இது படைப்பின் உரையையே மையைப்படுத்துகின்றது. எடுத்தரைப்பியலில் கதை (Story), கதைப்பின்னல் (Plot) எடுத்துரைப்பு அல்லது விவரனை இந்த மூன்றும் அடிப்படைகளாகும். இந்த மூன்றும் அமைப்பியலில் விரிவாக பேசப்பட்டன. எடுத்துரைப்பு என்பது கதைப்பின்னலை ஆசிரியர் எவ்வாறு விவரிக்கிறார் என்றும் அந்த பனுவலை எவ்வாறு சொல்லாடல் செய்கிறார் என்பதினை விளக்குவதாகும்.ஒரு பனுவலை உருவாக்கும் படைப்பாளன் அப்பனுவலை உருவாக்க பல்வேறு நிகழ்ச்சிகளை அமைகிறான். அவ்வகையில் கதையில் பாத்திரங்களுக்கு இடையில் உரையாடல் அமையும் போது கதைகூறும் வேலையிருந்து கதை ஆசிரியன் விலகிக்கொள்கிறான்இ பாத்திரங்கள் தங்கள் கதையைத் தாங்களே கூறுவதாக அமைந்து விடுகின்றன.

## இமயம் தொட்ட இதயங்கள்

இன்றைய சூழலில் எல்லாம் பணம்தான் என்ற நிலையில் பணத்தினை விட நட்பு பெரிது, நல்ல மனது பெரிது என்பதை எடுத்துரைக்கும் கதை இமய மலை அளவில் உயர்ந்த எண்ணற்களைக் கொண்ட மனிதர்களை நம்மிடம் இந்நாடகத்தின் வழியே காட்சிப்படுத்துகிறார் ஆசிரியர்.

ஊட்டியில் நடுத்தர வாழ்க்கை வாழும் தினேஷ், தங்கம் தம்பதிகளுக்கு ஒருநாள் தினேஷின் பால்ய நண்பனிடமிருந்து ஒரு கடிதம் வருகின்றது. இதில் தான் ஊட்டியில் ஒருநாள் தங்கப்போவதாகவும் தனக்கு கொஞ்சம் பணஉதவி தேவைப்படுவதாகவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதனை கண்டு எரிச்சலுற்ற தங்கம் இக்கடிதத்தினை தன் கணவனிடமிருந்து மறைக்க நினைக்கிறாள். வேலைக்காரி மூலம் தெரிந்துக் கொண்ட தினேஷ் தனது நண்பன் வந்தால் விருந்தளித்து உபசரித்து காத்திருக்கச் சொல்ல என்று கூறிவிட்டு அலுவலகத்தில் அரை நாள் விடுப்பு எடுத்துவிட்டு வருவதாகவும் கூறிவிட்டு செல்கிறார் தினேஷ். வீட்டிற்கு வந்த காளியப்பனிடம் தினேஷ் வெளியூர் சென்றிருப்பதாகவும் அவர் இன்றுவரமாட்டார் என பொய் கூறுகிறாள். ஏமாற்றத்துடன் காளியப்பன் திரும்பும் நிலையில் வேலைக்காரப் பெண் ஓடிவந்து தினேஷிற்கு விபத்து ஏற்பட்டு உயிருக்கு போராடிக் கொண்டிருப்பதாக கூறுகிறாள். காளியப்பன் உடனே தினேஷினை கோயம்புத்தூர் மருத்துவமனையில் கொண்டு சேர்கின்றனர். அவரை பரிசோதித்த மருத்துவர் உடனடியாக அறுவை சிகிச்சை செய்யவேண்டும் இல்லையென்றால் மூளைக்கோளாறு ஏற்பட்டுவிடும் என்று கூறுகிறார். இதனை கேட்ட காளியப்பன் தனதுமகளின் மூளை ஆப்ரேஷனிற்காக சேமித்து வைத்திருந்த பணத்தினைக் கட்டி காப்பாற்றுகிறார். இதனை தனது மனைவி கல்யாணியிடம் கூறிக்கொண்டிருக்கும் போது கேட்ட தங்கம் விம்மி அழுகிறாள். தனது கணவனைக் காப்பாற்றியது கடவுள் அல்ல, கடவுளை விட உயர்ந்த இரண்டு உள்ளங்கள் என அவர்களின் காலில் விழுந்து அழுவதாக இந்நாடகத்தினை அமைத்துள்ளார் ஆசிரியர். இதில் மனிதப்பண்பு உயர்ந்ததாக இந்நாடகத்தில் கூறப்படுகிறது.

### ஆரம்பம் தேடும் முற்றுப்புள்ளி

சமூக அக்கறையுடன் செயல்படும் உள்ளங்களின் காதல் வாழ்க்கையில் நடக்கும் போராட்டமாக 'ஆரம்பம் தேடும் முற்றுப்புள்ளி' நாடகம் அமைகிறது. பாசமான தந்தை மகளுக்கான போராட்டமாகவும் காதலினை விடமுடியாத நிலையில் துடிக்கும் மனமாகவும் விமலா கதாபாத்திரம் அமைகிறது.

தமிழ் ஆசிரியையான விமலாவும் தமிழ் ஆர்வமுள்ள, தொழிற்சாலையில் பணிபுரியும் ராமுவும் இணைபிரியாத காதலர்கள். விமலாவின் தந்தை சிறுவயதிலேயே தனது மனைவியைப் பறிகொடுத்திருந்தாலும் தனது மகளின் நலத்திற்காக திருமணம் செய்யாமல் இளமையினைத் துறந்தவர். ஒருநாள் விமலாவிற்கு மாப்பிள்ளை பார்த்துள்ளதாகவும் அவர் தனது நண்பனின் மகனென்றும் கூறுகிறார். இதனை கேட்ட விமலா கவலையடைகிறாள். ராமுவிடம் இதனை தெரிவிக்கும் போது தனது தங்கை ஒருவனை காதலிப்பதாகவும் அவர்கள் இருவரும் சமூக இலட்சியத்தோடு வாழநினைப்பவாடகள் அவர்களின் காதலிற்கு அனைவரும் தடையாக உள்ளனர் என்று எடுத்துரைகிறார். மனசோர்வுடன் கடவுளை வணங்கி விட்டு வீட்டிற்கு செல்லும் போது விமலாவின் தந்தை 'உனக்கு நல்ல காலம் பிறந்துவிட்டது, நீ விரும்பிய ராமுவையே திருமணம் செய்து கொள்ளலாம் என்றும் தனது மகளின் தேர்வு எப்பொழுதும் சரியாகத்தான் இருக்குமென்றும் கூறுகிறார். திகைப்புடன் விமலா நிற்கும் போது தனது நண்பனின் மகன் குமார் வேறொரு பெண்ணை விரும்புவதாகவும் அவரையே திருமணம் செய்துகொள்ள போவதாக எடுத்துரைக்கிறார். கடவுள் கருணை காட்டிவிட்டதாக இந்நாடகம் முடிவடைகிறது. விமலா தட்டச்சு பயில்வதால் அவளின் மனநிலையோடு அவள் டைப் செய்யும் வார்த்தைகளும் பயணப்பதாக எடுத்துரைத்த விதம் ஆசிரியரை பாராட்டும்படி செய்கிறது.

அன்றாட வாழ்வியலில் இலக்கிய அறிவின் பயன்பாட்டை எடுத்துரைக்க விரும்பியதன் விளைவே 'ஆரம்பம் தேடும் முற்றுப்புள்ளி' எழுபத்தொன்பதில் ஒரு வாரம் தட்டச்சு கற்கச் சென்றதாலறிந்த சில செய்திகளை ஆங்காங்கே எடுத்தாண்டு இவ்வானொலி நாடகத்தை இயற்றியதாகவும் மதுரை பின்புலத்தில் உதகையும் இணைத்து மனிதத்தைக் குழைத்து ஒளிரும் நாடகமாக அமைகிறது.

### மனமெங்கும் மனிதப்பூ

மனிதம் என்ற ஒற்றை சொல்தான் இன்றைய குடும்பத்தையும் சமுதாயத்தினையும் இயக்கக் கூடிய சொல்லாக இருக்கிறது என்பதினை தெரிவிக்கிறது இக்கதை. பிறருடைய உடல்குறையை பெரிதாக எண்ணாமல் தம்முடைய உள்ள குறைபாட்டை சரிசெய்ய முயல வேண்டும் என்றும் பிறருக்காக வாழக்கூடிய வாழ்க்கை தவத்தை விட சிறந்தது. தன்னலம் கருதாது முகமறியாத பிறருக்காக உதவும் மனப்பான்மை தெய்வத்திற்கு நிகரானது. அப்பேற்பட்ட ஒரு கதாப்பாத்திரமாக செந்தில் கதாப்பாத்திரத்தினை ஆசிரியர் உருவாக்கியுள்ளார்.

மனித நேயத்தின் மறுஉருவமாக விளங்கும் செந்திலுக்கு ஒரு விபத்தினால் தனது ஒரு கையினை இழக்க வேண்டியிருந்தது. இதனால் தனது சகோதரியின் திருமணத்திற்கு வரும் மாப்பிள்ளைகள் இவரை காரணம் காட்டி

நிராகரிக்கின்றனர். பொண்ணு கேட்டு வந்த மற்றொரு வரணின் வீட்டிற்கே சென்ற செந்தில் ‘தான் ஒருநாள் சாலையைக் கடந்துபோகும் போது ஒரு குழந்தை விபத்தில் சிக்க இருந்ததை காப்பாற்றிதிரும்பும் போது ஒரு ஜீப் மோதி தனது கையை இழந்ததாகவும் கூறுகிறார். மேலும் ‘‘என் அக்காவோட கல்யாணத்துக்கு நான் ஒரு தடையாக இருக்க விரும்பல... நான் ஒதுங்கி போய் உழைத்துச் சாப்பிட்டுக்குவேன்! நீங்க ரெண்டு பேரும் மனசு வைச்சு என் அக்காவுக்கு வாழ்வு கொடுக்கனும்’’ என்கிறார். இதனை கேட்ட மாப்பிள்ளை ‘விபத்துல சிக்க இருந்த குழந்தையைக் காப்பாற்றி தன்னையே இழக்கத் தயாரா இருந்த மனிதநேயமாக விளங்கிற செந்திலுக்கு முன்னால் நாமெல்லாம் சுண்டைக்காய்’ என்கிறார். இவ்வாறு இந்நாடகத்தில் மனிதநேயத்தின் மகத்துவத்தினை செந்தில் மூலம் நமக்கு எடுத்துரைக்கிறார்.

**மருந்தும் உண்டுகொல்**

அறிவு திருடனைச் சுட்டிக்காட்டும் நாடகமாக அமைகிறது இந்நாடகம். அறிவு மேம்பட்ட இக்காலக் கட்டத்தில் பிறருடைய அறிவினைத் தன்னுடையது எனக் கூறுவதும் அதனை விலை பேசி விற்பது இச்சமுதாயத்திற்கு நோய் போன்றது என்பதினை எடுத்துரைகின்றது இந்நாடகம்.

படைப்பாளனின் காப்பிய புலமையோடு அமைகிறது இத்தலைப்பு. ‘மருந்தும் உண்டு கொல்’ கம்பராமயணக் காட்சியை நினைவுப்படுத்துவதாக அமைகிறது.

> **“அருந்தும் மெல்லடகு ஆரிட அருந்தும் என்று அழுங்கும்**
>
> **……………………………………………**
>
> **மருந்தும் உண்டு கொல் யான்கொண்ட நோய்க்கென்று மயங்கும்”**

சமுதாயத்தை ஒழுக்க சீர்கேடு மட்டும் பாதிக்காது, அறிவினை விலைபேசி விற்பதும் அதனை தன்னுடையதாக வெளிக்காட்டிக்கொள்வதும் சமுதாயத்தினை சீரழிக்கக்கூடியதான நோயாகும். அதனை சரவணன் என்னும் ஆய்வு நெறியாளர் வகையாக சுட்டிக்காட்டுகிறார். அவரிடம் ஆய்வு மாணவர்களாக பணியாற்றும் ஆய்வாளர்களின் மனநிலையும் எடுத்துக்காட்டுவதாகவும் இந்நாடகம் அமைகிறது.

**பாலைக்கண்ட கங்கை**

வறண்டு பாலைவனமாய் அன்பில்லாமல் இருந்த உள்ளத்தில் அன்பு வெள்ளபெருக்கெடுத்து கங்கை நீராய் ஓடுவதன் பொருள் பொருட்டு ‘பாலைக்கண்ட கங்கை’ எனத் தலைப்பு பொருத்தம் அமைகிறது. உடல் உறுப்பு தானம் பண்ணக் கூடிய மனது எல்லோருக்கும் அமைவதில்லை அப்படி சிறந்த பண்புள்ள மனிதர்களை நம்மிடம் இந்நாடகத்தின் மூலம் எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர். சிறந்த தம்பதிகளுக்கு எடுத்துக்காட்டாய் இருப்பவர்கள் ஆனந்த் நிர்மலா தம்பதிகள். தன் செய்கையினால் பிறர் மனதிலும் அன்பு ஊற்றெடுக்க செய்ய முடியும் என எடுத்துக்காட்டுகிறார்

**பிறர் தர வாரா**

எந்த ஒரு வினையின் பயன் நாம் செய்யக் கூடியசெயலின் விளைவாகத்தான் இருக்கும்.நமக்கு நடக்கும்தீ வினைகள் நம்மால் தான் வருகின்றன என்பதினை எடுத்துக்காட்டும் கதையாக இந்நாடகத்தினை எடுத்துரைக்கிறார் ஆசிரியர். நல்லது - கெட்டது, தீங்கற்றது - தீங்கானது, ஏற்புடையது - ஏற்பற்றது, என்ற முறையில் வருகின்ற மனிதாபிமான உணர்வும் கேடற்ற நடத்தையும் சமுதாயத்தைப் பாதிக்கின்றன. போதைப் பழக்கத்தினாலும், செல்ஃபி மோகத்தினாலும் நடக்கக்கூடிய தீமையினைச் சுட்டிக்காட்டுகிறார். இன்றைய இளைஞர்களின் வாழ்க்கையினை நயம்பட எடுத்துரைகின்றது இக்கதை. நன்மையும் தீமையும் பிறரால் வருவதில்லை தம்மால் மட்டுமே வருகின்றன. **“தீதும் நன்றும் பிறர்தர வாரா’** என்ற புறநானூறு பாடலுக்கு சான்றாக அமைகின்றது. இளைய தலைமுறையின் தவறான போக்கினை சுட்டிக்காட்டுவதில் தனது முயறினை செய்துள்ளார் இளங்கோ.

**முடிவுரை**

இக்கட்டுரையில் மனமெங்கும் மனிதப் பூ என்னும் நாடகத்தில் காரண காரியங்களோடு முறைப்படி அமைக்கும் கதைக்கோப்பும், கதாப்பாத்திரத்தின் அமைப்பை எடுத்துரைத்த விதம் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

# அறிவின் படிநிலைகளும் இயங்கியலும்

**த. மலர்விழி**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*புனித அந்தோணியார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தாமரைப்பாடி*

**முனைவர் கு. பெரியசாமி**
*உதவிப்பேராசிரியர், ஆய்வு நெறியாளர், தமிழ்த்துறை*
*எம்.வி.முத்தையா அரசு மகளிர் கல்லூரி, திண்டுக்கல்*

அறிவு என்பது ஒருவருக்கு பிறப்பு முதல் இறப்பு வரை கிடைப்பதாகவே உள்ளது. ஆனால் படித்தவர்களுக்கு மட்டுமே அறிவு இருப்பது போன்று ஒரு கருத்து பொதுவாக பலரிடமும் காணப்படுகிறது. அந்த எண்ணம் முற்றிலும் தவறானது. அறிவு என்பது தாவரங்கள், விலங்குகள் உட்பட அனைத்து உயிர்களுக்கும் உண்டு.

அறிவு என்பதற்குப் பொதுவான வரைவிலக்கணம் ஒன்று கிடையாது. அதாவது புறநிலையை எதார்த்தத்தை நம் ஐம்புலன்கள் மூலம் அறிந்து அதை நம் அகநிலைக் கருத்தாக (மனத்தின் கருத்தாக) ஆக்கிக் கொள்வதே அறிவு என்றும் கூறலாம். அறிவின் தேடல் என்பது அறிவினை ஆராய்ந்து தேடுவது. அந்த அறிவு தனக்கு மட்டும் பயன்படுவதாக இருத்தல் கூடாது. தன்னைச் சார்ந்தவர்க்கும் சுற்றத்தார்க்கும், மற்றோர்க்கும் உலகத்திற்கும் பயன்படுவதாக இருக்க வேண்டும்.

அறிவு காலத்திற்குக் காலம் மாறிவரும். அதன் மாற்றம் வளர்ச்சியாகவும், தொடர்ச்சியாகவும் உள்ளது.

**“அறிவினைப் பெறுவது என்பது,**

1. **கவனித்தல்**
2. **புலன்காட்சி**
3. **கண்டறிதல்**
4. **நினைவு கூர்தல்**
5. **பொதுவான கருத்தை உற்று நோக்கல்**
6. **கற்றல் மூலம் அறிவினைப் பெறுதல்**
7. **சிந்தித்தல்” - 1 (பின் நவீனத்துவம்)**

என்று அதாவது மொழியை வாழ்வியலைக் கையாளும் விதம் என அனைத்துத் திறன்களும் சேர்ந்த ஒன்றே அறிவின் வளர்ச்சி நிலை என்று கூறலாம். சில செயல்களை பகுத்து அறிவது அறிவு: அறத்தை நெறிபடுத்துவது அறிவு: ஏன், எதற்கு, எப்படி, என்று பல விதமான கோட்பாடுகளை அறிவது அறிவு.

அறிவு பற்றி வள்ளுவர்...

**“அறிவு அற்றம் காக்கும் கருவி செருவார்க்கும்**
**உள்அழிக்கல் ஆகா அரண்.”**

2 (திரு-421)

நம்முடைய இறுதிக்காலம் வரை காப்பாற்றும் கருவிதான் அறிவு. அந்த அறிவை மற்றவர்களால் களவாட முடியாது. நம் மனத்தை தீமையை விலக்கி நன்மையில் மட்டுமே செல்லவிடுவதுதான் அறிவு.

**“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.”**

3 (திரு-423)

என திருவள்ளுவர் தம் குறட்பாவின் மூலம் எடுத்து இயம்புகிறார். அதாவது புதுப்புதுத் தகவல்களை அறிந்து கொண்டால் மட்டும் போதாது. அறிந்து கொண்ட தகவல்களின் உண்மைத் தன்மையை ஆய்வு செய்வதே அறிவு என அவர் கூறுகிறார்.

## தொல்காப்பியம்

“ஒரு மொழியில் இலக்கியம் தோன்றிய பிறகே இலக்கணம் தோன்றி இருக்க முடியும். இலக்கியம் கண்டதற்குப் பின்புதான் இலக்கணம் தோன்றியிருக்க முடியும். நன்னூல் இயற்றிய பவணந்தி முனிவர் “இலக்கியத்திற்குப் பின்னர்தான் இலக்கணம் தோன்ற முடியும்” என்று கூறுகிறார். அகத்தியமும் தொல்காப்பியமும் கடைச்சங்க காலத்தில் இருந்த நூல். தொல்காப்பியத்திற்கு முதன்முதலில் உரை எழுதியவர் இளம்பூரணர். முதல்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்று மூன்று காலங்களிலும் இருந்த அகத்தியம் இன்று வரை நமக்கு கிடைக்கவில்லை. தொல்காப்பியத்திற்கு முன்பு தமிழ் இலக்கியத்தில் சிறந்த நூல்கள், அறிவு சார்ந்த நூல்கள் இருந்திருக்கின்றன என்பது உண்மை.

தொல்காப்பியப் பாயிரத்தில் தமிழகத்தின் எல்லைகள் வரையறுக்கப்படுகின்றன.

**"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்**
**தமிழ்கூறு நல்லுலகத்துச்**
**செந்தமிழ் இயற்கை சிவனிய நிலத்தொடு"[4]**
(தொல் பாயிரம்)

என தமிழ் மண்ணின் எல்லைகளை வகுத்துள்ளார் தொல்காப்பியர். இயற்கை மிகுதியும், செழித்த இந்த நிலத்தின் முன்தோன்றிய நூல்களை முறைப்பட எண்ணி இலக்கண விதிகளைக் கூறியுள்ளார். தொல்காப்பியரின் காலம் மிகவும் தொன்மையானது. கி.மு.5320-க்கும் முற்பட்டவர் என்றும் கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவர் என்றும் கூறுகின்றனர்.

தமிழறிஞர் சீனிவாச அய்யங்கார் கூறுகிறார், "தொல்காப்பியர் ஐந்திரம் நிறைந்தவர் என்று கூறுகிறார்கள். நிலம், நீர், தீ, வளி, விசும்பு என்றும் ஐம்பெரும் பூதங்களின் இயல்புகளை அறிவியல் நோக்கில் ஆராய்ந்த சிந்தனைப் பள்ளியே ஐந்திரம் என்பதாகும். உலகின் தலைசிறந்த படைப்புகளுள் ஒன்று தொல்காப்பியம். தமிழின் கலங்கரை விளக்கம் என்றே கூறலாம்.

தமிழர்களுக்கு இன்றுவரை வழிகாட்டியாக விளங்கும் நூல் தொல்காப்பியம். படைத்தவர் பெயரிலேயே நூல் அமைந்துள்ளது. இந்த வழக்கம் எல்லா மொழிகளிலும் காணப்படுகிறது. தொல்காப்பியம் தமிழ் மொழிக்கு இலக்கணம் கூற வந்த நூலாயினும் அறிவியல், தத்துவம், மருத்துவம் போன்ற கருத்துக்களை வெளியிடும் நூலுமாகும்.

உயிரினங்களின் பாகுபாட்டை,

**"ஒன்றறிவதுவே உற்றறிவதுவே**
**இரண்டறிவதுவே அதனொடு நாவே**
**மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே**
**நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே**
**ஆறறிவதுவே அவற்றொடு மனனே"**
5 (தொல்-மர-நூ)

உயிரினங்களோடு தொடர்புடைய மெய், வாய், மூக்கு, கண், செவி என்னும் ஐம்பொறிகளும் மனமும் என்று அறிவினால் சிறந்து விளங்கும் இயல்பினை அறிவியல் நோக்கில் கூறி உள்ளார். ஓர் அறிவிலிருந்து தொடங்கி ஆறறிவு வரை வகைபடுத்துகிறார். தாவரங்களுக்கும் அறிவு, உணர்வு, உயிர் உண்டு" என்று கூறியுள்ளார்.

**ஓரறிவு உயிர்கள்**

உலகின் பரிணாமத்தைப் பார்க்கும்போது உயிரினங்களின் இயல்பை அவற்றின் செயல்பாட்டை வைத்துப் புரிந்துகொள்ள முடியும். ஓரறிவுடைய அனைத்திற்கும் தொடுஉணர்வு உண்டு என்கிறார்.

**"புல்லும் மரமும் ஓரறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"**
-6 (தொல்)

என்கிறது தொல்காப்பியம்.

இயற்கையின் படைப்பில் உன்னதமான படைப்பு மரம். இந்த மரங்களுக்கென்று இயங்கியல் உள்ளது. மரம் நீரை வேர் மூலமாக உறிஞ்சி அதன் மற்ற பாகங்களுக்கு அனுப்புகிறது. சூரிய ஒளியைப் பெற்று அங்கு ஒளிச்சேர்க்கை நடைபெறுகிறது. இம்மரங்களின் மூலம் மனிதர்களுக்கு உயிர்வளி கிடைக்கிறது. இந்தத் தாவரங்கள் தமக்குத் தேவையான உணவை நீர் மூலமாகவும், நிலத்தின் மூலமாகவும் சூரியனிடமிருந்தும் பெறுகின்றன. அண்மைக்காலத்தில் உலகமே எதிர் கொண்ட மிகப்பெரிய துயர் கொரோனா என்ற தீநுண்மி தாக்கத்தினால் பல உயிர்கள் உயிர்வளி (ஆக்ஸிஜன்) பற்றாக்குறையால் மடிந்தன.

**ஈரறிவு உயிர்கள்**

சங்கு, நத்தை, சிப்பி, கிளிஞ்சல், புழுக்கள் போன்றவை ஈரறிவு உயிர்கள் எனப்படும். இவற்றிற்கு தொடுஉணர்வும், உணவை வாயால் உண்ணுகின்ற உணர்வும் இருப்பதால் இவை ஈரறிவு உயிர்கள் என அழைக்கப்படுகின்றன. இதனை,

**"நந்தும் முரளும் ஈரறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப்பிறப்பே"**
7 (தொல்)

என்ற நூற்பா மூலம் அறிய முடிகிறது. உலகில் வாழும் ஒவ்வொரு உயிரினமும் அதிசயம்தான். மெல்லுடலிகளில் வயிற்றுக்காலிகள் வகுப்பைச் சேர்ந்த உயிரினங்களாகும். இவை பொதுவாக கடல் நத்தை, தரை நத்தை, நன்னீர் நத்தை என்று மூன்று வகைப்படும். 600 நத்தை வகைகள் உள்ளன. மீன், புழு, பூஞ்சைகள் நத்தையின் உணவாக உள்ளன.

நத்தையின் விஷம் வலி நிவாரணியாகவும் பயன்படுத்தப்படுகிறது. கூம்பு வடிவ நத்தையின் விஷம் நீரிழிவு நோய்க்குச் சிறந்த மருந்தாக பயன்படுகிறது என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். மேலும் இதை இன்சுலினாக பயன்படுத்தும் போது மனித உயிரணுக்களில் உள்ள சர்க்கரையைப் பிரித்து எடுக்க உதவுகிறது.

சங்கு, நத்தை போன்ற உயிரினங்கள் தொடுஉணர்வு மற்றும் உணவை வாயால் உண்ணுகின்ற இரண்டு அறிவைப் பயன்படுத்தி தம்முடைய வாழ்வியலை நடத்துகின்றன. அந்த உயிரினத்திலிருந்து

கிடைக்கும் திரவத்தை மருத்துவத்திற்கு மனிதன் பயன்படுத்துகிறான்… அது மனித அறிவு!

**மூன்றறிவு உயிர்கள்**

தொடுஉணர்வு, சுவையுணர்வு மற்றும் முகரும் தன்மை கொண்ட உயிர்கள் மூவறிவுயிர்கள் என்று சுட்டுகிறார் தொல்காப்பியர். மூன்றறிவு உயிர் எந்தத் திசையில் மணம் வருகின்றதோ அந்தத் திசையை நோக்கி நகரும் தன்மை கொண்டவை. தம் உடலில் தோன்றும் மணத்தை அறிந்து அதன் மூலம் ஒன்றன் பின் ஒன்றாகச் செல்லும் தன்மையுடையவை எறும்பு கறையான் போன்ற உயிர்கள்.

**“சிதலும், எறும்பும் மூவறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே”**

-8 (தொல்)

தொடுஉணர்வு, சுவையுணர்வு, நுகரும்தன்மை இந்த மூன்று அறிவை வைத்து எறும்பு தனக்கு தேவையான உணவை தானே சேகரித்துக்கொள்ளும் தன்மை கொண்டது. ஆறறிவு கொண்ட மனிதனிடம் இல்லாத ஒற்றுமை மூன்றறிவு கொண்ட உயிர்களிடம் காணப்படுகிறது. ஒன்று சேர்ந்து வாழும் தன்மை கொண்டது: மனிதனை விட நுகரும் தன்மை அதிகம் கொண்டது எறும்பு.

வலிமையான உடல் அமைப்பைக் கொண்ட இராணி எறும்பு என்று சொல்லக்கூடிய எறும்பு 30 ஆண்டு வரை வாழும் தன்மை கொண்டது. சர்க்கரையையும் உப்பையும் சேர்த்து வைத்தால் இந்த எறும்பு அதன் அறிவைப் பயன்படுத்தி தேவையற்றதைத் தவிர்த்துத் தேவையானதைத் தனதாக்கிக் கொள்ளும் தன்மை கொண்டது. இந்தப் பண்பு இயற்கை எறும்புக்கு வழங்கிய பண்பு. இது படைப்பின் ஒர் அங்கம் இதிலிருந்து இயற்கை மனிதர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் பாடம் என்னவென்றால்,

தன் இயல்பில் செய்கின்ற எல்லாச் செயல்களையும் மனிதன் தன் புத்திக் கூர்மையால் மீட்டெடுத்து வாழவேண்டும். இந்த உலகம் நன்மையும் தீமையும் கலந்த ஒர் உலகம். இதில் நாம்தான் எறும்பின் குணம் போல் நன்மையை மட்டும் எடுத்துக்கொண்டு தீமையைப் புறந்தள்ளிவிட வேண்டும். எறும்பின் வாழ்வியலைப் போல நாம் வாழ வேண்டும்.

**நான்கறிவு உயிர்கள்**

உடலால் உணரும் தன்மையும் இரைதேடி உண்ணும் உணவின் சுவையை அறியும் பண்பும், மணத்தை உணரும் தன்மையும் மற்றும் ஒளி உணரும் உறுப்பாகிய கண்களும் கொண்ட அனைத்து உயிர்களும் நான்கறிவு உயிர்களாகும் என தொல்காப்பியர் கூறுகிறார் (மெய், வாய், மூக்கு, கண்).

**“நண்டும் தும்பியும் நான்கறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப்பிறப்பே”**

- 9 (தொல்)

நண்டு, வண்டுகள், தேனீக்கள் போன்றவற்றை நான்கறிவு உயிர்கள் எனத் தொல்காப்பியர் கூறுகிறார். இந்த நான்கறிவு உயிரினங்களான நண்டும் தும்பியும் தம்முடைய வாழ்வியலுக்குத் தேவையான உணவைக் காய்கறிகளிலிருந்து பெறுகின்றன. சிறிய மீன்கள், சிறிய உயிரினங்களில் இருந்து ஆல்கா போன்ற உணவை எடுத்துக் கொள்கின்றன.

இவை சந்தர்ப்பவாத உயிரினங்களாகச் செயல்படுகின்றன: மண்ணையும், நீரையும் சேர்த்து ஊட்டச்சத்தாக எடுத்துக்கொள்கின்றன. நண்டு தன் அறிவைப் பயன்படுத்தி தேவையற்றதை நிராகரிக்கும் குணம் உடையது. இயற்கையின் படைப்பில் இவற்றை உண்ணும் மனிதனுக்கு ‘விட்டமின் ஏ’ கிடைக்கிறது.

கண்பார்வை மேம்பட இந்த ‘விட்டமின் ஏ’ பயன்படுகிறது. இந்த நான்கறிவு உயிர் நீரிலும் நிலத்திலும் வாழும் உயிரி. ஆண் பெண் என்ற பாலின வேறுபாடு இதிலும் காணப்படுகிறது. தொடுஉணர்வு என்பது மெய், சுவைஉணர்வு என்வது வாய், முகரும் தன்மை என்பது மூக்கு, ஒளி உணரும் உறுப்பு கண் இவை 4 புலன்கள் நான்கறிவு என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

**ஐந்தறிவு உயிர்கள்**

தொடுஉணர்வு, சுவைஉணர்வு, முகரும்தன்மை, பார்க்கும் தன்மை, கேட்கும் தன்மை கொண்ட அனைத்து உயிரினங்களும் ஐந்தறிவு உயிர்கள் ஆகும். விலங்குகளும், பறவைகளும் ஐந்தறிவு உயிர்களுக்குச் சான்றாகும். மனிதர்களிடம் காணப்படும் 5 புலன்களின் அறிவு பிற உயிரினங்களிலும் காணப்படுகிறது. மனிதர்களிடம் 5 புலன் என்பதை பிற உயிரினங்களில் ஒர் அறிவு, இரண்டு அறிவு, என்று வகைப்படுத்தலாம்.

**“மாவும் புள்ளும் ஐயறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப்பிறப்பே”**

-10 (தொல்)

விலங்குகளும், பறவைகளும் ஐந்தறிவு உயிரினங்கள் எனப்படும். பறவைகளுக்குக் கேட்கும்திறன் அதிகமாக இருப்பதால் அவை 5 அறிவு உயிர்களாகக் கொள்ளப்படுகின்றன. மனித மூதாதையர்களான

ஆப்பிரிக்க குரங்கு, காட்டு மனிதக்குரங்கு போன்ற குரங்குகளின் மரபியல் காரணி மற்றும் இதர காரணிகள் மனிதனை ஒத்துக் காணப்படும். ஆனால் மனிதனுக்குரிய மனம் அல்லது பகுத்தறியும் தன்மை இல்லாத காரணத்தால் இவை ஐந்தறிவு உயிரின வகையில் அடங்குகின்றன.

விலங்கு என்ற வார்த்தையின் விளக்கமானது கடற்பாசிகள் பூச்சிகள், திமிங்கலங்கள், யானைகள் மற்றும் மனிதக்குரங்கு என்று பல்வேறு வகை விலங்குகளையும் உள்ளடக்கியது. இந்த விலங்குகளின் உலகம் பஞ்ச பூதங்களைச் சார்ந்தே இருக்கிறது. அவற்றின் உடல், வடிவம், அமைப்பு, வாழ்விடம், உணவுப் பழக்கம் மற்றும் நடத்தை ஆகியவற்றில் பன்முகத்தன்மையைக் கொண்டுள்ளன.

விலங்குகள், யூகாரியோடிக் செல்களால் ஆனவை அவை தங்கள் உணவை உட்புற அறையில் செரிமானம் செய்கின்றன. இவை இடம் விட்டு இடம் நகரும் தன்மை கொண்டவை. இந்த விலங்குகளுக்குத் தசைகள் உள்ளன. இந்தத் தசைகள் அவற்றின் இயக்கத்திற்கு உதவுகின்றன. விலங்குகளிடம் மட்டுமே காணப்படக்கூடிய கருவளர்ச்சியின் பிளாஸ்மா நிலை உள்ளது. பெரும்பாலான விலங்குகள் தாவரங்கள் சைவ உணவு உண்பதன் மூலம் சூரிய ஒளியின் ஆற்றலை மறைமுகமாகப் பயன்படுத்துகின்றன.

இருப்பினும் நீருக்கு அருகில் வாழும் உயிரினங்கள் மட்டும் கடல் அடிவாரத்தில் குளிர்ச்சியான கசிவுகள் வேதியியல் கலவை மூலம் தங்கள் சொந்த உணவைத் தயாரிக்கின்றன. அவை அவற்றில் உள்ள சில நொதிகளைப் பயன்படுத்துவதன் மூலம் இரசாயனங்களைச் சிதைப்பதன் மூலம் ஆற்றலைப் பெறுகின்றன. இவற்றில் புழுக்களும் அடங்கும். எனவே ஐந்தறிவு உயிர்கள் அவற்றின் அறிவைப் பயன்படுத்தித் தம் வாழ்வியலை நடத்துகின்றன.

**ஆறறிவு உயிர்கள்**

ஐந்து புலன்களால் பொருள்களை அறிவதோடு, இன்ப துன்ப உணர்வுகளையும் உணர்வன ஆறறிவு உயிர்கள். ஆறறிவு உயிர்களில் ஒவ்வொரு உயிரின் அறிவு வளர்ச்சியும் வேறுபடுகிறது. மனிதன் சிந்தனை ஆற்றல் பெற்ற பின் உள்ளத்தால் உணரும் தன்மை ஏற்படுகிறது. இதைத்தான் ஆறாம் அறிவு என்கிறார் தொல்காப்பியர்.

**"மக்கள் தாமே ஆறறிவுயிரே**
**பிறவும் உளவே அக்கிளைப்பிறப்பே"**

-11 (தொல்)

மனிதன் தன் வாழ்வாதாரத்திற்குப் பயன்படுத்துவது, ஆறாவது அறிவை. உயிர், மெய் அறிதல்-அதாவது மெய்ஞ்ஞானம் அடைவதற்கு மனிதனால் பயன்படுத்தக் கூடிய அறிவு: அறியச் செய்வது அறிவு: அறிவு ஒருவருக்குக் கூர்மையாக இருக்க வேண்டும். அந்த அறிவைப் பயன்படுத்தி மனிதன் தன் அறவாழ்க்கையை இன்பமாக வாழப் பழக வேண்டும்.

அதாவது சிந்தித்து. பகுத்தறிந்து தன் வாழ்வாதாரத்திற்குத் தேவையானவற்றை நேர்மையான முறையில் ஈட்டி தனக்கும் பிறருக்கும் பயன்படும் வகையில் வாழ்வதே ஆறறிவுயிரான மனிதனின் அறிவாகும். மனிதன் தன் அறிவை பல்வேறுதுறைகளில் பயன்படுத்துகிறான். கல்வியில் தன் அறிவை மாணவன் பயன்படுத்துகிறான். தொழிலாளி தன் தொழிலில் செம்மையுற தன் அறிவைப் பயன்படுத்துகிறான். மனிதனின் அறிவில் விஞ்ஞானமும் செயல்படுகிறது.

மெய்ஞ்ஞானத்தின் மூலம் மனிதனின் ஆன்மீக அறிவு வளர்க்கப்படுகிறது. ஒவ்வொரு மனிதனும் இந்த அண்டத்தின் ஆற்றலை உணர வேண்டும். அவ்வாறு உணரும்போது, அம்மனிதனிடம் இருந்து விஞ்ஞான அறிவு பிறக்கிறது. மருத்துவம், கல்வி, வணிகம், போக்குவரத்து என்று அனைத்து துறையிலும் விஞ்ஞானம் வளர்ந்துள்ளது. விஞ், ஞானம்-விண் ஞானம் பிறகு விஞ்ஞானம் என மருவற்றது'' என வெங்காலூர் குணா கூறுகிறார். இன்று விஞ்ஞானம் புதிய உலகத்தையே படைத்துள்ளது.

பஞ்சபூதங்களின் தத்துவம் இந்த விஞ்ஞானத்திலும் காணப்படுகிறது. விஞ்ஞானத்தில் உலகம் இன்று வளர்ச்சியடைந்தாலும் மற்றொரு பக்கம் சுற்றுச்சூழல் மாசுபாட்டைத் தடுக்க முடியவில்லை. அதனால் மனிதகுலம் பல இழப்புகளைச் சந்திக்க நேரிடுகிறது. ஆதிமனிதன் இயற்கையோடு ஒன்றியதான வாழ்வை வாழ்ந்தான். இயற்கை போற்றப்பட்டது: காக்கப்பட்டது: ஆறறிவு கொண்ட மனிதன் தன் அறிவைப் பயன்படுத்தி இயற்கையோடு இயைந்த வாழ்க்கையைக் கடைபிடித்தால் சுற்றுச்சூழல் மாசுபாட்டினைக் குறைக்கலாம்.

**"செஞ்ஞாயிற்றுச் செலவும்**
**அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்**
**பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்**
**வளி திரிதரு திசையும்"**

- 12 (புறம்)

என்ற வரியின் மூலம் சூரியனின் பாதையையும் அதன் இயக்கமும் அவ்வியக்கத்தால் சூழப்பட்ட மண்டலமும் காற்று இயங்கும் திசையில் நிற்கும்.

வானத்தைப் பார்த்து அதன் தன்மைகளை அளந்து கூறும் கல்வி உடையோரும் இருந்தனர் என்று புறநானூறு கூறுகிறது.

> **"இயற்கையின் அறிவு அதாவது இயல்பாக அமைந்த அறிவு, செயற்கை அறிவு என்பது நூல்களைக் கற்பதனால் கிடைக்கும் அறிவு. இவ்வறிவு கற்றலின் மூலமும் கேட்டலின் மூலமும் பார்ப்பதன் மூலமும் நமக்கு வாய்க்கிறது. இயற்கை அறிவையும் செயற்கை அறிவையும் முழுமையாக உணர வேண்டுமானால் உலகப் பொது அறிவு இருக்க வேண்டும். வள்ளுவர் இயற்கை அறிவு, செயற்கை அறிவு, உலகப் பொது அறிவு இந்த மூன்றையும் அறிவின் உட்பொருளாக ஆராய்ந்துள்ளார்".**
>
> -13 ("அறிவு பற்றிய தமிழரின் அறிவு")

**நிறைவுரை**

தொல்காப்பியரின் அறிவுக்கொள்கை ஓரறிவிலிருந்து தொடங்கி ஆறறிவு வரை அறிவை வகைப்படுத்தி முறையாக வகுத்துள்ளார். தாவரங்கள் முதல் மனிதர்கள் வரை அன்றைய காலத்தோடு ஒப்பிட்டு பார்க்கும்போது இந்தத் தகவல் அந்தக் காலத்திற்கு அப்பாற்பட்ட தகவலாகவே உள்ளது.

அனைத்து உயிர்களின் அறிவும் பரிணாமத்தின் வளர் நிலையில் மனிதனுக்கு மட்டும்தான் வாய்த்துள்ளது. ஐம்புலன்களின் பதிவை வைத்துப் பகுத்துப் பார்க்கும் மனமும் அதை ஒட்டிய சிந்தனை ஆற்றலும் உள்ளது என்பதனை தொல்காப்பியர் உறுதி செய்கிறார். ஓர் அறிவை வைத்து ஒரு உயிரினம் எவ்வாறு இயங்குகிறதோ அதே போல ஆறறிவு படைத்த மனிதன் தன் அறிவை அறச்செயலுக்குப் பயன்படுத்த வேண்டும். சிந்தனை வளர்ச்சிதான் மனிதனுக்கு அனைத்து அறங்களுக்கும் துணை செய்கிறது. அறத்தின் வழி பிறிதின் நோய் நம் நோய் போல் போற்றி அறிவிற் சிறந்த வராவோம்.

**துணைநூல் பட்டியல்**

1. பின் நவீனத்துவம் பித்தும் தெளிவும் அஸ்வகோஸ், தாமரை பள்ளிகேஷன்
2. திருக்குறள் - சிற்பி பாலசுப்பிரமணியம் தாமரை பள்ளிகேஷன்
3. திருக்குறள் - சிற்பி பாலசுப்பிரமணியம் தாமரை பள்ளிகேஷன்
4. தொல்காப்பியம், முனைவர் ச.சுபாஸ் சந்திபோஸ், இயல் வெளியீடு, தஞ்சாவூர்-613001
5. தொல்காப்பியம், முனைவர் ச.சுபாஸ் சந்திபோஸ், இயல் வெளியீடு, தஞ்சாவூர்-613001
6. தொல்காப்பியம், முனைவர் ச.சுபாஸ் சந்திபோஸ், இயல் வெளியீடு, தஞ்சாவூர்-613001
7. தொல்காப்பியம், முனைவர் ச.சுபாஸ் சந்திபோஸ், இயல் வெளியீடு, தஞ்சாவூர் 613001
8. தொல்காப்பியம், முனைவர் ச.சுபாஸ் சந்திபோஸ், இயல் வெளியீடு, தஞ்சாவூர் 613001
9. தொல்காப்பியம், முனைவர் ச.சுபாஸ் சந்திபோஸ், இயல் வெளியீடு, தஞ்சாவூர் 613001
10. தொல்காப்பியம் - முனைவர் ச.சுபாஸ் சந்திபோஸ், இயல் வெளியீடு, தஞ்சாவூர் 613001
11. தொல்காப்பியம், முனைவர் ச.சுபாஸ் சந்திபோஸ், இயல் வெளியீடு, தஞ்சாவூர்-613001
12. புறநானூறு - புலியூர்க்கேசி, சாரதா பதிப்பகம், சென்னை – 14
13. அறிவு பற்றிய தமிழரின் அறிவு -சி.மகேந்திரன், டிஸ்கவரி புக் பேலஸ், சென்னை-78

# ஆகாயத்துக்கு அடுத்தவீடு உணர்த்தும் சமுதாயச் சிந்தனைகள்

**முனைவர் இரா. நித்யா**

*உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், தமிழ்த்துறை*
*அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பரமக்குடி*

## முன்னுரை

மனிதன் குழுவாகச் சேர்ந்து வாழும் அமைப்பையே சமூகம் என்று அழைக்கிறன்றோம். ஒரு மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை பிறரைச் சார்ந்து வாழும் கட்டாயத்தை அடைகின்றான். அவ்வாறு மனிதன் வாழும் காலத்தில் சந்திக்க கூடிய நிகழ்வுகளை மனதில் படம்பிடித்து கவிதையாக படைப்பதில் கவிஞர் மேத்தாவிற்கு எப்பொழுதுமே தனியிடம் உண்டு. இவரது கவிதை நடையில் புதுமைப்பாதைகள் அமைந்திருக்கும். காலம் கொடுக்கமுடியாத நம்பிக்கையை ஒரு கவிஞன் கொடுப்பான் என்னும் வார்த்தைக்கு இலக்கணமாகத் தனது படைப்புகளை வெளியிட்டவர் கவிஞர் மேத்தா அவர்கள். தமிழ் மண்ணையும், மனிதத்தையும் தமது கவிதைகளில் எடுத்துரைத்து, சமுதாய சிக்கல்களை மையமாக வைத்து பல பொருண்மையில் கவிதைகள் படைத்ததில் ‘ஆகாயத்துக்கு அடுத்த வீடு’ என்ற சாகித்ய அகாதெமி விருது பெற்ற கவிதை நூலில் இருந்து சமுதாயச் சிந்தனைகளை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும்

சமூகம் சிறக்க வேண்டுமெனில் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் இருகண்களாக திகழவேண்டும். கவிஞர் பல பொருண்மையில் கவிதைகள் படைத்திருந்தாலும் நாட்டுப்பற்றுடனும் மொழிப்பற்றுடனும் கவிதைகள் படைப்பதில் தவறவில்லை.

**கார்கிலில் உயிர் நீத்த**
**மாவீரர்களே!**
**இந்தியா என்னும் மொழியில்**
**மொத்தம்**
**நூறு கோடி எழுத்துக்கள்...**
**அதில்**
**நாங்களெல்லாம்**
**‘மெய்’ யெழுத்துக்கள்...[1]**

**(ஆகயத்துக்கு அடுத்த வீடு ப.எண்-62)**

என்று தாய் மண்ணிற்கு வணக்கம் செலுத்தும் கவிஞர் மொழிபற்றைப் பற்றி சொல்லும் போது,

**இசங்களைக் கரைத்து**
**ரசங்களாய்க் குடித்தவர்கள்...**
**தமிழ்**
**செத்துப் போய்விடக் கூடாதே**
**என்ற**
**கருணையால்**
**பேனாவைப் பிடித்திருக்கும்**
**பிராம்மாக்கள்...[2]**

**(மேலது ப.எ.38)**

என கவிதையின் நிலைமையை எடுத்துரைக்கின்றார். தாயை மதிப்பைதைப் போல் தாய்மொழியையும் மதிக்கவேண்டும். அதிலும் கவிதை படைப்பவர்கள் மொழியை கருணையோடு பார்க்காமல் உணர்வோடு பார்க்க வேண்டும் என தெரியப்படுத்துகிறார்.

## மத ஒற்றுமை

கவிஞர்கள் தாங்கள் பார்க்கும் காட்சிகள் மற்றும் கேள்விப்படும் செய்திகளை தன் மனத்திற்குள் கொண்டு செல்லும் பொழுது ஏற்படும் உணர்வுகளே படைப்புகளாக இடம் பெறுகின்றது. அதிலும் கவிஞர்கள் பலர் சாதி கொடுமைகளுக்கு எதிரான கருத்துக்களைத் தங்கள் படைப்பில் படைப்பது வழக்கம். நல்ல நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட மதங்களையும் மக்களையும் பிரிக்கும் நிலையை கண்டு, மேத்தா ‘ஒரே குரல்’ என்ற கவிதையில் இடித்து கிடக்கின்ற மசூதிகளின் இடிபாடுகளுக்கிடையே எட்டிப் பார்க்கும் இறைவனும், எரிந்து கிடக்கும் தேவாலயங்களின் சாம்பலில் இருந்து மெல்ல எழும் கர்த்தரும் மற்றும் காயம்பட்டு கிடக்கும் கோவில்களில் கண்திறந்து பார்க்கும் கடவுள்களும் இணைந்து மனிதனை பார்த்து கேட்கும் கேள்வி மனதை உலுக்குகின்றது. இதனை

**“உங்களில் யாராவது**
**ஒரு மனிதன் இருந்தால்**
**வரச் சொல்லுங்கள்**
**ஒன்றாக நாங்கள்**
**உயிர்த்தெழுகிறோம்.[3]** **(மேலது.ப.எ.31)**

என்ற கவிதை அடிகளில் மதம்பிடித்த மனிதர்களே சாகுகின்றார். கடவுள் பெயரில் மதம் பிரிக்கும் மனிதர்களே, கடவுள் ஒருவனே என்ற கொள்கையில் தான் கடவுள் வாழ்கின்றான். ஆனால் மனிதன்தான் கடவுளைபிரிக்கின்றான். எனவே கடவுள் மனிதனை மனிதனாக பார்க்கவில்லை என கவிஞர் குறிப்பிடுகின்றார்.

இதனை

**“காயம்பட்டு கிடக்கிறான்**
**கடவுள்**
**அவனுக்கு**
**மருத்துவம் பார்க்க**
**மனிதர்களே வருவீரா?**
**மனிதர்களாய் வருவீரா?**
**மதயானைகளுக்கு**
**‘மதம்’ பிடித்து விட்டது.**
**அங்குசம் ஏந்திட**
**அனைவருமே வருவீரா?”[4](மேலது ப.எ.14)**

என்ற கவிஞர் கூற்றுப்படி மதத்தை வைத்து அரசியல் செய்தால் அங்குசம் ஏந்திட வேண்டியது அவசியம் என்பதை உணர வைத்துள்ளார். ஆனால் இன்று சிறிய பிரச்சினையையும் மதரீதியாக கொண்டு செல்லும் நிலை மனவேதனை அளிக்கிறது.

### நிலையாமை

வாழ்க்கை என்பது நிலையில்லாதது. நாம் உயிருடன் இருக்கும் போதே பிறர்க்கு பயனுள்ள வகையில் வாழ்ந்து காட்டவேண்டும். அவ்வாறு நாம் வாழ்ந்தால் தான், நாம் வாழ்வதற்கே ஒரு அர்த்தம் உண்டு. பிறப்பு இருந்தால் இறப்பு உறுதியானது. நாம் பிறர் இறந்தால் அழுகின்றோம். ஆனால் குண்டலகேசியை எழுதிய நாததத்தனார், தாயின் வயிற்றில் கருவான நிலை செத்து, பின் குழந்தையான நிலை செத்து, பின் இளைஞனான நிலை செத்து, முடிவில் வயது முதிர்ந்து, நாளும் சாகின்றோம் நாம். இந்நிலையில் நமக்கு நாமே அழாதது ஏன்? என்ற சிந்தனையை முன்வைக்கின்றார்.

‘வாழ்க்கை என்பது’ என்ற தலைப்பில் கவிஞர் மேத்தா

**“பெட்டி படுக்கைகளைக்**
**சுமந்தபடி**
**ஒரு**
**பிரயாணம்**
**எப்போது சுமைகளை**
**இறக்கி வைக்கிறோமோ**
**அப்போது**
**சுற்றியிருப்பவர்கள்**
**நம்மைச்**
**சுமக்கத்**
**தொடங்குகிறார்கள்...[5] (மேலது ப.எ:14)**

என்று கருத்துப்பட குறிப்பிடுகின்றார். நாம் தான் நினைக்கின்றோம், எல்லா இடத்திலும் நம்மால்தான் முடிகின்றது என்று, தான் இல்லை என்றால் இந்த வேலை சிறப்பாக செயல்பட முடியாது என்று, தன்னைத்தானே உயர்வாக நினைத்துக்கொண்டு வாழ்கின்றோம். எனவே நம் பாரத்தை இறக்கி வைத்தால் வேறொருவர் தாங்கிப்பிடிக்கும் நிலை உள்ளது என்பதை புரிந்துக்கொள்ள வேண்டும். எது இன்று நமதோ, அது நாளை மற்றொருவருடையது என்ற எதார்த்தத்தை புரிந்துக்கொண்டு, எதுவுமே நிலையானது அல்ல என்பதை மனதில் இருத்தி வாழவேண்டும் என்ற உண்மையை புலப்படுத்துகிறார்.

### வறுமை

உலகில் பிறந்த பிறவிகள் அனைத்துமே தன்னுடைய வயிற்றினை நிரப்புவதற்காகவே அழைந்து திரிந்து உண்கின்றது. அதில் மனித பிறவி மட்டுமே தன்னுடைய முன்னோர்கள் சேர்த்து வைத்தது, தன்னிடம் பழகக் கூடிய உறவினர்களிடம் ஏமாற்றி சேமித்து வைப்பது, அப்பாவிகளாக இருக்க கூடிய மக்களை ஏமாற்றி சேமித்து வைப்பது மற்றும் ஏமாறக் கூடியவர்களைப் பார்த்து ஏமாற்றுவர்கள் ஏமாற்றிக்கொண்டே சேமித்து வைப்பது என அழையாமல் உழைக்காமல் உண்டு பெருத்து வாழக்கூடிய கூட்டம் ஒரு பக்கம் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். மற்றொரு பக்கம் உழைத்து உழைத்து ஓடாய் தேய்ந்து எவ்வளவு உழைத்தாலும் தன்னுடைய ஒரு சான் வயிற்றினை நிரப்ப முடியாமல் தவித்துக் கொண்டு வாழும் மக்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இதனை

**“வானம் பொழியுது பூமி விளையுது**
**தம்பிப் பயலே - நாம்**
**வாழ வதங்கி வளப்படுத்துகிறோம் வயலே - ஆனா**
**தானியமெல்லாம் வலுத்தவனுடைய கையிலே- இது**
**தகாதுயின்னு எடுத்துச் சொல்லியும் புரியலே”**

என்று மருதகாசி திரையிசை பாடல்கள் மூலம் சமூகத்தின் வறுமையை வெளிப்படுத்தியதோடு, இவை தகாதது என்று அன்றே கூறியுள்ளார். ஆனால் வறுமை என்றுமே நாட்டில் நிலையானதாக நீடித்துக் கொண்டே தான் செல்கின்றது. இதனை

**“மக்கள் தொகையில்**
**நூறு கோடியைத்**
**தாண்டிவிட்டாய்...**
**ஒரே ஒரு**
**வறுமைக் கோட்டைத்**
**தாண்ட முடியாமல்**
**வழுக்கி வழுகின்றாய்... [6]**

**(மேலது ப.எ.4)**

என்று மேத்தா ‘இந்தியா என் காதலி’ என்ற தலைப்பில் இந்தியாவின் வறுமை நிலையை நினைத்து புலம்புகின்றார். மேலும்

**நாடுகள் தாண்ட வேண்டியது**
**எல்லைக் கோடுகளையல்ல...**
**வறுமைக் காடுகளை** [7]

**(முகத்துக்கு முகம் ப.எ.52)**

என்று வறுமையைக் காடாக உருவகிக்கும் கவிஞர், காசில்லாத சமூகத்திற்கு வறுமை நிரந்தரமான விருந்தாளி என்று நமக்கு புலப்படுத்துகின்றார். வறுமையை போக்க வேண்டுமெனில் எல்லோரும் உழைக்க வேண்டும். உழைப்பிற்கேற்ற ஊதியம் அடைய வேண்டும். இத்தகைய நிலை வந்தால் வறுமை நீங்கலாம்.

**பெண் கல்வி**

மனித வாழ்வினை சிறப்பிக்க நல்ல ஒழுக்கத்தையும், மனவலிமையையும், விரிந்த அறிவையும், சுயவலிமையையும் தருவது கல்வி ஆகும். சமுதாயத்தில் வாழும் மக்களுக்கு அடிப்படையாக அமைவது கல்வி ஆகும்.

**“கல்வி இல்லாத பெண்கள் கார்நிலம்**
**அந்நிலத்தில்**
**புல் விளைந்திடலாம்,**
**நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை”**

என்று பெண் கல்வியின் அவசியம் குறித்து பாரதியார் குறிப்பிடுகிறார்.

கோவை வேளாண்மை பல்கலைக்கழக மாணவிகள் மூவர் தர்மபுரியில் உயிரோடு எரிக்கப்பட்ட போது, நிகழ்ந்த நிகழ்வுகள் குறித்து ‘தந்தை பாடும் ஒப்பாரி’எனும் கவிதையாக மேத்தா எழுதியுள்ளார். இதில், நந்தவனமாக இருந்த மகள், மணக்க வைக்கும் சின்னமகள், படிக்க சென்றவள் வீட்டிற்கு பொணமாக தூக்கி வந்த காட்சிகளைக் கண்டு தந்தை துடிக்கிறார்.

**“வாய்க்கட்டி வயித்தக்கட்டி**
**மனசுக்குள்ள கோட்டைகட்டி**
**கோயமுத்தூர் அனுப்பி**
**குலவிளக்க படிக்க வெச்சேன்”**[8]

**(ஆகாயத்து அடுத்த வீடு ப.எ.16)**

என்ற பாடல் அடிகளில், தந்தை தான் படிக்கவில்லை என்றாலும், தன்மகள் படித்து பெரிய பதவிக்கு செல்ல வேண்டும் என்ற ஆசை, நிறைவேறா ஆசையாக மாறி, கதறும் காட்சியை நம் கண்முன்னால் கவிஞர் கொண்டு வருகிறார். பெண்கல்வி முக்கியம் என்று படிக்கச் சென்ற பெண், கலவரத்தால் தீயில் எரிந்து இறந்த காட்சியை, நாம் படிக்கும் பொழுதெல்லாம் கண்களில் கண்ணீர் வழியும் அளவிற்கு கவிதை, மனதை உலுக்குகின்றது.

**காதல்**

மனித உணர்வுகளில் மென்மையானது காதல். காதல் இல்லையேல் மனிதர்களின் வாழ்வு முழுமை அடையாது. பிறப்பு முதல் இறப்பு வரை நம்மீது யாராவதும் ஒருவர் உண்மையான அன்பும் அரவணைப்பும் தருவார்களா என எதிர்பார்ப்பது மனிதனின் இயல்பு. இறுதிவரை இன்பத்திலும் துன்பத்திலும் இருவரும் பங்கு கொண்டு வாழ்வது தான் உண்மையான காதல். இன்றைய சூழ்நிலையில் காதலிப்பது ஒருவரையும் கல்யாணம் செய்வது மற்றொருவரையும்என்ற நிலை உருவாகிக்கொண்டே செல்கின்றது. ஆனால் உண்மையாக காதலிக்கும் ஒரு ஆடவனின் உணர்வுகளை கவிஞர் படம் பிடித்து காண்பிக்கின்றார். காதலன் காதலிக்கு அனுப்பும் கடிதத்தை காதலி தொட்டவுடன் காதலன் பட்ட உள்உணர்வுகள் இதோ,

**“எந்த ஊரில்**
**இருந்தாலென்ன...**
**என் கடிதத்தை நீ**
**தொட்டவுடன்**
**சிலிர்க்கும் எனக்கு !**
**எழுத்துக்களைப்**
**பார்க்கிறாய் நீ**
**இந்த**
**எழுத்துக்களில் வழியே**
**உன்னை**
**எட்டிப் பார்க்கிறேன் நான்”**[9] **(மேலது ப.எ.41)**

என்ற கவிதையில் காதலியை அணுஅணுவாக காதலிப்பது தெரிகிறது. பின் சில காரணங்களால் பிரியும் நிலை ஏற்படும் பொழுதிலும் கூட, உண்மையான காதல் இறுதியிலும் அன்புடனே வெளிறியேறுகிறது.

**“அவசியம் அனுப்பிவை**
**உன் திருமண**
**அழைப்பிதழை...**
**பரிசு விழுந்தது**
**யாருக் கென்று**
**பார்த்துக் கொள்கிறேன்.**[10] **(மேலது ப.எ.42)**

தனக்கு தன் காதலி கிடைக்கவில்லை எனில் வேறு யாருக்கும் கிடைக்க கூடாது என நினைக்கும் சில மனிதர்களிடையே, தன் காதலியை மணம் முடிப்பவனை சிறந்த பரிசு பெற்றவனாக நினைத்து, அவனையும் சேர்த்து வாழ்த்தக்கூடிய எண்ணம்

கொண்ட சிறந்த காதலும் உள்ளது என மேத்தா வெளிப்படுத்துகிறார்.

**முடிவுரை**

சமுகத்தில் நிகழும் நிகழ்வுகளை சமநிலையில் பார்க்கும் பணியை கவிதைகள் செய்கின்றன. அவ்வகையில் 'ஆகாயத்துக்கு அடுத்த வீடு' கவிதைகள் நாட்டில் நிகழும் கொடுமைகளான கோவை வேளாண் கல்லூரி மாணவி எரிந்தது, கும்பகோணத்து தீ விபத்து, கார்க்கில் போர், கர்நாடகா தண்ணீர் தர மறுப்பது போன்ற பல்வேறு முக்கிய பிரச்சினைகள் குறித்து எழுதியுள்ளார். கவிஞர் தன் கண்ணில் பட்ட, கேள்விப்பட்ட நிகழ்வுகளை கவிதைகளாக்கி, அக்கருத்தை நம் மனதிலும் அழியாமல், இன்றளவும் இதனை படிக்கும் பொழுது ,நம்மனதை வருடமால் செல்லாது என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

Vol. 9 Special Issue 1 October 2024 E-ISSN: 2456-5571

# சங்க - இக்கால கவிதைகளில் பெண் மன உணர்வுகளும் கருத்தாக்கங்களும்

**ப. நீலாவதி**

*முனைவர்பட்ட ஆய்வாளர்*

**முனைவர் இரா. கௌரி**

*உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை*

*(அண்ணாமலை பல்கலைக்கழகத்துடன் இணைவுப்பெற்றது)*

*ஏ.வி.சி.கல்லூரி (தன்னாட்சி) மன்னம்பந்தல் - மயிலாடுதுறை*

**ஆய்வுச்சுருக்கம்**

சங்கப் பாடல்களில் நிறைந்திருக்கும் மொழியாளுமையும் பொருட்சிறப்பும் தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொள்ளப் பல்வேறு களன்களை தன்னகத்தேக் கொண்டுள்ளன. பெண், ஆண் புலவர்கள் பாடல்களின் ஊடான கருத்துக்களமும், அவர்தம் மொழிநடையும் பல நிலைகளில் வேறுபாட்டினைக் கொண்டுள்ளன. தலைவனைப் பிரிந்து வாடும் பெண்ணின் குரலாக மட்டுமின்றி தன் சுயமரியாதையைக் காக்க ஒலிக்கும் போர்க்குரலாகவும், சமூகப் பொதுச் சிந்தனையில் வளர்க்கப்பட்டுள்ள கருத்துக்களை மறுதலிக்கும் மாற்றுக் குரலாகவும் பெண் புலவர்களின் பாடல்கள் காணப்படுகின்றன. சங்க காலத்திற்குப் பிறகு பக்தி இலக்கியங்கள் தோன்றின. ஆண்டாள், காரைக்காலம்மையார் இவர்களின் பாடல்கள் சமயம் சார்ந்து பாடப்பட்டவையாக உள்ளன. கால இடைவெளிக்குப் பின் இக்கால இலக்கியத்தில் கவிதை படைக்கும் பெண், ஆண் கவிஞர்கள் பெண்ணின் உணர்வுகள் சார்ந்தும் சமூகத்தில் பெண்ணின் இடம் எப்படியான இயங்கு தளத்தில் உள்ளன. பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் எத்தகையது என்பதனை பாடல்கள் வாயிலாக ஈர்ப்பும் கவனமும் பெறுகின்றன. பெண் கவிஞர்கள் பெண்ணின் தேவையும், சமூகம் கட்டமைக்கும் பெண் விதிமுறைகளையும் கேள்விக்கு உள்ளாக்கி எழுதும் போக்கினை காண முடிகின்றது. இருப்பினும் பெரும்பாலான பெண் மொழியில் ஒருவித இறுக்கமும் வெளிப்படையான வார்த்தைகள் இடம் பெறாமல் இருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியமும் காலத்தின் தேவையாகும். கவிதைகளில் பெண்ணின் உணர்வு சார்ந்து கட்டுடைக்கும் தன்மைகளை சங்க காலம் தொடங்கி இக்காலம் வரையிலும் கவிதைகள் படைக்கப்பட்டபோதும் குறிப்பிட்டு சொல்லும் எண்ணிக்கையிலேயே பாடல்கள் எழுதப்பட்டு வருவதும் மறுதலிக்க முடியாத ஒன்றாகும். இவ்வாய்வுக் கட்டுரை பெண் மன உணர்வுகள், உடல் உணர்வுகள் சமூகத்தில் எப்படியான தாக்கத்தை நிகழ்த்தி வருகின்றன என்பதை கவிதைகளின் ஊடாக விளக்குகின்றன.

சங்க இலக்கியப் புலவர்கள் தத்தம் பாடுபொருளுக்கு ஏற்ப தமது இலக்கிய வளத்தையும் மொழி தனித்தன்மையையும் வெளிக்காட்ட முயன்றுள்ளனர் சங்க இலக்கியம் பழந்தமிழர்களின் வாழ்வியலையும் பயன்பாட்டையும் விளக்கும் இலக்கிய கருவூலமாகும் சங்க நூல்கள் 500 ஆண்டுகால இடைவெளியில் எழுதப்பட்டிருப்பதால் நூல்களின் மொழியமைப்பில் பல திறப்பட்ட வேறுபாடுகளைக் காண இடம் உள்ளது. ஆனால் சங்க இலக்கிய நூல்கள் அனைத்தும் பெரும் வேறுபாடின்றிப் பொதுவான ஒரு மொழியமைப்பைப் பெற்றுள்ளன பொருள் தெரிவிலும் பாடுபொருளிலும் சங்க இலக்கிய நூல்களுக்கிடையே பல ஒற்றுமைகளும் தனித்தன்மைகளும் காணப்படுகின்றன.

(முனைவர் அ. லெட்சுமணன்:ப - 103.)

சங்க அக இலக்கியங்களில் ஆண், பெண் புலவர்களின் பாடல்களின் போக்கு காலச்சூழலுக்கு ஏற்ப புனையப்பட்டிருப்பதை பாடல்கள் புலப்படுத்துகின்றன. சங்க இலக்கிய பாடல்களில் பெண் துறவியர் இல்லை. பெண்கள் இல்லற வாழ்க்கையில் முழுவதுமாக தங்களை ஈடுபடுத்திக் கொண்டு குடும்பப் பின்னணியில் வாழ்ந்திருக்கும் நிலையை பல பாடல்கள் பதிவு செய்கின்றன. சமூக விழுமியங்களுள் ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்றபண்பாட்டு விழுமியம் சங்ககால ஆண் பெண் வாழ்வில் காக்கப்பெற்றுள்ளது. இல்லற முறைமையில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற நெறி போற்றப் பெற்றுள்ளது. அரசியல் காரணங்களுக்காகக்கூட இருதார முறை சங்ககாலச் சமுதாயத்தில் அனுமதிக்கப் பெறவில்லை. இரண்டாம் மனைவியராகவோ அல்லது காம கிழத்தியராகவோ கூட பெண்கள் அரசனுக்கு இருத்தல் கூடாது என்பதைப் பேகன்-கண்ணகி வரலாற்றில் பேகனைக் கண்டித்த பரணர், கபிலர், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார் ஆகியோர் பாடல்கள் காட்டுகின்றன. புறநானூற்றில் 143, 144, 145, 146, 147 ஆகிய பாடல்கள் சான்றுகளாக உள்ளன. (தாயம்மாள் அறவாணன் : ப- 66,67)

**பெண் மன உணர்வுகள்**

பெண்ணுக்கு அச்சம், மடம், நாணம் இருத்தல் வேண்டும். தன் வேட்கையைத் தலைவனிடம் வெளிப்படையாகப் புலப்படுத்தக் கூடாது என்ற நெறியில் வாழ்வின் சமூக கட்டமைப்பு அமைந்திருந்தது.

**"தன்னுறு வேட்கை கிழவன்முன் கிளத்தல்**
**எண்ணுங்காலைக் கிழத்திக் கில்லை"**

**(தொல். களவு. 28: 1-2)**

பெண் காதலை வெளிப்படுத்தாமல் இருத்தலும் கூடாது என்பதை,

**"பிறநீர் மாக்களின் அறிய, ஆயிடைப்**
**பெய்ந்நீர் போலும் உணர்பிற்று என்ப"**

**(தொல். களவு. 28: 3-4)**

என்று சுட்டுகிறார் தொல்காப்பியர். மட்பானை நீர்க்கசிந்தால் போல அவள், தன் வேட்கையைக் குறிப்பால் உணர்த்த வேண்டும் என குறிப்பிடுகிறார். சங்ககாலத் தலைவி, கண்கள் நாணம் இல்லாதவை என்றும் தன் கண்களைக் கண்டிக்கிறார் வெள்ளிவீதியார்.

**"அளிதோ தானே நாணே நம்மொடு**
**நனிநீடு உழந்தன்று மன்னே, இனியே "**

**(குறுந்.149)**

தோழி! நாணம் எனும் நற்பண்பு இதுகாறும் நம்மோடு இருந்தது மிக நீண்ட காலமாகத் துன்புற்றது இனி வெள்ளிய பூவைக் கொண்ட கரும்பினையுடைய உயர்ந்த மணல்மேடாகிய சிறிய கரையானது இனிய புதுவெள்ளம் பாய்ந்து உடைத்தலால், அழிந்து கரைந்து போனது போல, நமது நாணமும் தாங்கக்கூடிய அளவுவரை தாங்கி இப்போது காமம் மிகுந்து நெருங்கி என்னிடம் நிலை பெறாது கழிகின்றது. அது வருந்த தக்கதாகும். இதனால் நாணத்தைக் கைவிட நேரும் என்று புலம்பும் நிலையில் பாடல் அமைந்துள்ளது.

காமம் எப்படி எல்லாம் தன்னை துன்புறுத்தும் என்பதை தலைவி கூறுவதாக அள அள்ளூர் நன்முல்லையாரின் பாடல்,

**"குக்கூ என்றது கோழி; அதன் எதிர்**
**துட்கென் றன்றுஎன் தூஉ நெஞ்சம்**
**தோல்தோய் காதலர்ப் பிரிக்கும்**
**வாள்போல் வைகறை வந்தன்றால் எனவே."**

**(குறுந்: 157)**

சேவல் கோழி குக்கூ என்று கூவியது அதைக் கேட்டதும் என் தோளைத் தழுவியிருந்த காதலரை பிரிக்கும் வாள்போல வைகறைப் பொழுது வந்தது என என் தூய நெஞ்சம் துணுக்குற்றது. தலைவியின் மன உணர்வு மிக நுட்பமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

காலம் காலமாக நம் சமூகம் பெண்ணிற்கு வழங்கி வரும் இரண்டாம் இடம் இரண்டாம் பாலினமாக கருதப்படும் சூழலில் தன் உணர்வுகளை வெளிப்படையாக முன்வைக்கச் சமூகம் அனுமதிப்பதில்லை பெண்ணிற்கான கருத்துச் சுதந்திர எல்லையின் அளவுகோல் சமூகத்தின் கையில் ஒப்படைக்கப்பட்டதே. இத்தகைய கடுமையான நெருக்கடிகளுக்கிடையே பெண், படைப்பிலக்கியங்களை உருவாக்குவது மிகப்பெரிய சவால் என்று உறுதியாக கூறலாம்.

சங்கப் பாடலொன்றில் காமமும் காதலின்பமும் உரியவரோடு உடன் இருந்து மட்டுமே துய்க்கப்படுவது நண்பரே என் நிலை கண்டு நீ ஏளனமாக நினைக்கிறீர் என் நோயை உன்னால் நிறுத்த முடிந்தால் நல்லது.

**"வெண்ணெய் உணங்கல் போலப்**
**பரந்தன் றிந்நோய், நோன்றுகொளற் கரிதே"**

**(குறுந்: 58)**

தலைவன் கூற்று பாடலாக இப்பாடலை பெண்பாற் புலவர் வெள்ளிவீதியார் மிக அழகாக பாடியுள்ளார். ஆண் மனநிலையை உள்வாங்கி எழுதுவது சங்க காலத்தில் மிகுந்திருப்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. சூரியன் காயும் வெப்பம் மிக்க பாறையின்மேல், கைகள் இல்லாத ஊமை ஒருவன், தன் கண்ணெதிரே பார்த்துக் காக்கின்ற, உருகும் வெண்ணெயைப் போல் இக்காம இன்பம் பரந்து அதிகமாகிவிட்டது. இ∴து என்னை மிகவும் துன்புறுத்துகிறது என்று தலைவன் துன்பம் மிகுதியை பாங்கனிடம் கூறுகிறான். மிக அறியதோர் உவமை என்பதும் பெண் புலவர்களின் சொற்சேர்ப்பு வியப்பாகவும் தெளிவுபடவும் புனையப்பட்டிருப்பதை பாடல் உணர்த்துகிறது.

**பெண் கருத்தாக்கங்கள்**

சங்ககாலத்தில் கற்றவராகவும், கவிஞராகவும் காதல் சமத்துவம் உடையவராகவும் இருந்த பெண் உலகம் சங்கம் மருவிய காலத்தில் உண்மையாகவே இருண்ட காலத்தில் இருந்ததாகவே கணித்தல் வேண்டும். சங்கம் மருவிய காலத்தில் பெண்கள் பெரிய இலக்கியங்களை படைக்கவில்லை, பெண்கள் பலர் கல்வி கற்கவில்லை என்று கருத இடம் அளிக்கிறது. வேதங்களைப் புனித நூலாகக் கொண்ட தமிழர் சமயங்கள் உருவாகி சைவம், வைணவம் வளரத் தொடங்கின.

பெண் காதலை வெளிப்படுத்த மாட்டாள் புலப்படுத்தக் கூடாது என்பதற்கு மறுதலையாக ஆண்டாள் பாடல்கள் அமைகின்றன.

இலக்கணம் கூறிய பெண் புலவர்கள் காக்கைப்பாடினியார், சிறுகாக்கைபாடினியார் ஆகியோர்தம் யாப்புப் படைப்புகள் சான்றாக அமைகின்றன.சங்க காலத்துக்குப் பின் பக்திக் காலத்துக்கு முன் பெண் புலவர்கள் இல்லாத நிலையை அறிய முடிகிறது. காரைக்கால் அம்மையார், ஆண்டாள் தோன்றி பாடல்கள் பாடி இருப்பதை தெரிந்து கொள்ள முடிகிறது.

சங்க காலத்தில் நூற்றுக்கணக்கான பெண் கவிஞர்கள் கவிதை எழுதி இருக்க வாய்ப்புண்டு. அவற்றில் தொகுப்பாளரின் மனத்தடை, கட்டுப்பாடு, நோக்கம் காரணமாகப் பல கவிஞர்களின் கவிதைகள் தொகுக்கப்படாமலிருக்க சாத்தியமண்டு. சங்க காலத்தில் பெண்கள் எழுத்தறிவு பெற்றிருந்ததுடன் கவிதைகளும் எழுதினர் என்பது அன்றை சமூக மதிப்பீட்டில் பெண்ணின் இடம் அறிய உதவுகிறது. சங்க காலத்தில் தான் பெண்கள் அதிக அளவில் கவிதைகள் எழுதியுள்ளனர். அதற்கடுத்துச் சமயம் சார்ந்த பெண்கள் கவிஞர்களின் கவிதைகள் மட்டும் தான் பதிவாகியுள்ளன.

சங்க காலத்தில் எச்சமாக நிலவிய தாய்வழிச் சமூக அமைப்பு பின்னர் வந்த பக்தி இயக்கக் காலகட்டத்தில் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டது, பெண் புழங்கும் வெளியானது “வீடு” மட்டும் என்று வரையறுக்கப்பட்டது. காரைக்கால் அம்மையார் எவ்வளவு தான் பக்தியுடன் இறைவனை வழிபட்டாலும் பெண்ணுடல் காரணமாகக் கடைசி வரை சிவபெருமான் அவருக்குக் காட்சி அளிக்கவில்லை தமிழர் வரலாற்றில் ஏறக்குறைய 1700 ஆண்டுகள் பெண்கள் எவ்விதமான அடையாளமும் அற்று முடக்கப்பட்டிருந்தனர். 19-ஆம் நூற்றாண்டில் கல்வி பெற்றதன் விளைவாக எழுதத் தொடங்கிய பெண்களின் ஆக்கங்கள் பெரிதும் ஆணின் மொழியிலே அமைந்திருந்தன. 1990 களுக்குப் பின்னர் எழுதத் தொடங்கிய பெண் கவிஞர்கள் மாறுபட்ட, புதிய மொழியில் கவிதைகள் படைக்கத் தொடங்கியுள்ளனர். (நா. முருகேசபாண்டியன் : ப - 6,7)

### சமூக கட்டுடைப்புகள்

சமூகக் கட்டுப்பாடுகள், மரபான கருத்தாக்கங்கள், சூழல் ஆகிய அனைத்தும் மிக இறுகிக் கிடந்த மையும் அதனூடாகத் தன்னை வெளிப்படுத்திய பெண்ணையும் அடையாளம் காட்டும் பாடலொன்று

**“சேற்று நிலை முனைஇய செங்கட் காரான்**
**ஊர் மடி கங்குலில், நோன் தளை பரிந்து”.**

**(அகம்: 135)**

பரத்தையர் வீட்டில் இருந்து வந்த தலைவனை வாயில் மறுக்கும் தோழி கூற்றாக இப்பாடல் அமைந்துள்ளது. நேரடியாகத் தலைவனின் விரும்பத்தகாத பண்பினைக் கூறாமல் அவன் ஊரில் வாழும் எருமையின் செயல்பாடுகள் மூலம் புலப்படுத்துகிறாள். பெண் புலவர் பாடிய இப்பாடலில் பரத்தையர் உறவில் ஈடுபடும் தலைவனை இடித்துரைக்கும் நிலையில் மிக அழுத்தமாக பாடல் பாடப்பட்டுள்ளதை அறிந்து கொள்ள முடிகிறது. சங்க இலக்கியப் பாடல்களில் பெண் தன்னுடைய எதிர்ப்புக் குரலை பதிவு செய்யும் போக்கு சங்க காலத்திலே தொடங்கி இருப்பதை உணர முடிகிறது.

பெண்ணைத் தன் தேவைக்கு ஏற்ப பயன்படுத்திக் கொள்ளும் ஆண்களின் தன்மையை வெளிப்படுத்தும் கவிதை 1990 -களுக்கு பிறகு பரவலாக எழுதப்பெற்று பெரும் சலசலப்பை ஏற்படுத்தின.

**“இன்று வந்திருக்கிறாய் நீ**
**துணையிழந்து**
**… … … … … … … …**
**எனக்குத் துணை தேவையில்லை.”**

**(சுயம் - 2000)**

தன் அடையாளம் இழந்த வாழ்நிலையை மறுதலிக்கும் உள்ளத் துணிவைப் பெண் படைப்பாளரிடம் காண முடிகிறது. மேலும் காம உணர்வுகளைப் புலப்படுத்த சமூகம் அனுமதிப்பதில்லை. உடைமைச் சமூகம், பெண்ணிற்கான கருத்தாக்கங்களை உருவாக்கி அதனைப் பெண்ணே ஏற்கும்படிச் செய்துவிடுகிறது. சங்க இலக்கியத்தில் “இல்லமே” பெண்ணுக்கான பெரும்பான்மை வெளியாக இருந்தமையை உணர முடிகிறது. எனினும் படைப்பு சார்ந்த விடுதலையோடு இயங்கிய பெண் படைப்பாளிகளை அடையாளம் காட்டுகிறது.

**“முட்டுவேன் கொல்! தாக்குவேன் கொல்!**
**ஓரேன் யானும் ஓர் பெற்றி மேலிட்டு**
**‘ஆஅ’ ஒல் எனக் கூவுவேன் கொல்**
**அலமரல் அசைவளி அலைப்ப என்**
**உயவு நோய் அறியாது துஞ்சம் ஊர்க்கே”**

**(குறுந்: 28.)**

காம உணர்வினால் தான் படும் வேதனை அறியாத ஊரில் உள்ள அனைவரும் உறங்கி விட்டனர் என்று தனித்திருக்கும் தலைவி புலம்புவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**“வார்த்தை வறண்ட**
**வாயில் ஒவ்வொரு மயிறாய் பிடுங்கிப் போட்டேன்**
**இது கட்டவிழ்ப்பு என்றேன்.”**

**(வலைப்பூ நூல் -2010)**

நவீனப் பெண் படைப்பாளிகள் சிலரின் பாலியல் உணர்வு படைப்பழகியல் நிறைந்து உணர்வுகளை வெளிப்படுத்தும் கவிதையின் ஏக்கம் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**"நீ தொட்ட இடங்களையே**
**நான் தொட்ட போது**
**... ... ... ... ...**
**மெல்ல மிக மெல்ல கலந்து விடட்டுமா?"**

**(தேன்முள்ளுகள் நூல் - 1980: ப-5)**

இன்று பேசப்படும் உடல்மொழி, பெண்மொழி ஆகியவற்றின் சாரத்துடன் கூடிய கவிதையாக இக்கவிதை அமைகின்றது.

சமூகத் தளத்தில் பெண்கள் பேசக் கூடாதவையாக எவற்றையெல்லாம் கலாச்சார பொந்தினுள் அடைத்து வைத்திருந்தனரோ அனைத்தும் படைப்புகளில் பதிவாகும் சூழல் உருவானது.

**"ஈரப் பிசுபிசுப்போடு**
**உட்கார்ந்து இருப்பீர்களா**
**...... ..... ......**
**உடலெங்கும் பரவி நிற்க"**

**(அ. வெண்ணிலா- 2001: ப-18)**

இது வரையான இலக்கியம் பேசத் தயங்கிய புனிதமெனக் கட்டி எழுப்பப்பட்ட பெண் சார்ந்த அனைத்துக் கருத்தாக்கங்கள் மீதும் இக்கால கட்டப் படைப்பாளிகள் உள்ளீட்டினை நிகழ்த்தினர். பெண் அரசியல் புரிதலோடு கூடிய கவிதைகளையும் பதிவு செய்து வருவதையும் அறிய முடிகின்றது.

### பெண் சுயதணிக்கையும் தேடலும்

பெண்ணுடைய உணர்வு சார்ந்த மிக வெளிப்படையாக கூறும் எழுத்துக்கள் படைப்புகளாயின. அப்படைபுகள் பெரும்பாலும் சுயதணிக்கை சார்ந்த வினாக்களையும், தெடலையும் பதிவு செய்தன.

**"கிளம்பி வந்து விட்டேன்**
**நான்**
**...... ...... ...... .....**
**புறவழிச் சாலையில் அமர்ந்து கொண்டு."**
**(பாலபாரதி- 2006: ப-42)**
**"பாலைச் சுவடுகள் போன்ற**
**சில ஞாபகங்கள்**
**... ... ... ... ... ... ...**
**கவிதையொன்று."**

**(தாரா கணேசன். 2004: ப-57)**

இக்கவிதை முழுக்கப் பூடகமான சொற்பிரயோகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சமூகக் கட்டுக்களைக் கடந்த சுதந்திரமான குரலாக இருப்பினும் மொழியின் இறுக்கத்திற்குள் மறைந்துள்ள தணிக்கையை இக்கவிதையில் காண முடிகிறது.

**"உலகம் உருண்டையானது**
**என்கின்றனர்**
**... ... ... ... ... ...**
**சதுரமாய்த்தான் தெரிகிறது."**

**(சுகிர்தராணி: 2002)**

சமூகத்தில் பெண்ணிற்கான வெளி குறுகியதாகவும், கருத்தாக்கத் திணிப்பினூடானதாகவும் தொடர்ந்து செயல்படுவதை இக்கவிதை கூறி விடுகின்றது. எத்தகைய முயற்சியை மேற்கொண்டாலும் சன்னலைக் கடந்து சிந்திக்க முடியாத கற்பிதங்களே பெண் படைப்பாளியின் சிந்தனையை நிர்ணயித்துள்ளன என்பதை இக்கவிதை மிக யதார்த்தமாக பதிவு செய்கின்றது.

இக்கால இலக்கியங்களில் உவமை, படிமம், குறியீடு, போன்ற உத்திமுறைகள் இடம்பெறுகின்றன. இதன் வாயிலாக கவிதைகள் பெரும்பாலும் சொல்லின் சாரத்தை உறுதியாக நிலைநாட்டுகின்றன.

### முடிவாக சில

- காலம் காலமாகச் சமூகத்தால் கட்டுண்ட பெண்கள், இலக்கிய மரபு மீறி தம் உணர்வுகளைச் சுதந்திரமாகப் படைப்பிலக்கியத்தில் வெளியிட்டுள்ளனர். சங்க இலக்கியத்தில் இம்மரபு மீறி பெண்ணுக்கான சுதந்திரத்தை வெளிப்படையாகப் பெண் புலவர்கள் பாடியுள்ள பாடல்களை சான்றாக கூற முடிகின்றது.
- சமூகத்தில் பெண்ணின் அடையாளம் ஆணை முன்னிறுத்தியே கட்டமைக்கப்படுகிறது. இக்கால கவிஞர்கள் தங்கள் கவிதைகளில் இத்தன்மையை மிக அழுத்தமாக பதிவு செய்திருப்பதை கவிதைகள் மூலமாக அறிந்து கொள்ள உதவுகின்றன.
- பெண் தனித்துவமான அடையாளத்துடன் வெளிப்படுத்தும் குரலினையும், உணர்வுத் தெறிப்புகளையும் பாடல்கள் மிகவும் நுட்பமாக விவரிக்கின்றன. சங்க கால கவிதையின் போக்கினையும் இக்கால கவிஞர்களின் கட்டுடைப்புகளையும் அறிந்து கொள்ள படைப்புகள் உதவுகின்றன.

### நெறித்துணை நூல்கள்

1. சங்க இலக்கிய கூட்டுச்சொற்கள் தொகுப்பும் ஆய்வும்-முனைவர் அ. லெட்சுமணன்.
2. சங்க இலக்கியம் மூலமும் உரையும்- கோவிலூர் மடாலயம்.

3. பெண்ணின் பெருந்தக்கது இல்-தாயம்மாள் அறவாணன்.
4. தொல்காப்பியம்-இளம்பூரணம் உரை-மு. சண்முகம்பிள்ளை.
5. தமிழும் குறியியலும்-தமிழவன்.
6. அற்புதத்திருவந்தாதி-காரைக்காலம்மையார்.
7. சங்கப் பெண் கவிஞர்களின் கவிதைகள் மூலமும் உரையும்-நா. முருகேசபாண்டியன்.
8. சுயம்-வத்ஸலா-2000.
9. வலைப்பூ நூல்-லீனா மணிமேகலை-2010.
10. கைப்பற்றி என் கனவு கேள்-சுகிர்தராணி-2002.
11. துறவியின் இசைக்குறிப்புகள் - சண்முகம் சரவணன்.
12. மகடூஉ முன்னிலை-தாயம்மாள் அறவாணன்.
13. காற்றில் மிதக்கும் நீலம்-சக்தி ஜோதி.

# குழந்தைகளின் மொழி வளர்ச்சியின் சிக்கல்களும் சில தீர்வுகளும்

**முனைவர் த. நிர்மல் கருணாகரன்**
*ஆய்வாளர், காடனேரி*

## முன்னுரை

“குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள் மழலைச்சொல் கேளா தவர்” என்று வள்ளுவர் வாக்கிற்கிணங்க, குழந்தையின் மொழி, குழந்தைகள் பேசும் மொழி, குழந்தைகளுக்காகப் பேசும் மொழி என்பன வெவ்வேறானவை. குழந்தைகளின் மொழி என்பது பெற்றோர்கள் தங்களின் மொழிகளைக் கூறும் கூறுபாட்டிலிருந்து குழந்தைகள் உள்வாங்கிக் கொண்டு பிரதிபலிப்பதாகும். குழந்தைகளின் புலனறிவு, உடல்வளர்ச்சி, மொழியின் நாட்டம் ஆகியவற்றினோடு பொருத்திப் பார்க்கலாம். குழந்தைகளின் புலனறிவு, தன்னைச் சுற்றியுள்ளோர் பேசும் மொழியின் ஒலிக்குறிப்புகள் புழங்குபொருட்களின் தன்மைகளின் ஒலிக்குறிப்போடு தொடர்புடையது. குழந்தைகள் இரண்டாம் வயதிலிருந்து ஐந்தாம் வயது வரை சொற்களின் ஒலிகளைத் தன் புரிதலுக்கேற்ப அவற்றின் ஒலிக்குறிப்புகளில் மொழியை உள்வாங்கி உணருகின்றனர். மனிதன் பயன்படுத்தும் மொழிகளில் பல்வேறு தன்மைகள் இருந்தபோதிலும் குடும்பம் சார்ந்த மொழிக்கும், சமூகம் சார்ந்த மொழிக்கும், கல்விப்புல எழுத்துமொழிக்கும் மாற்றங்கள் உள்ளன. குழந்தைகள் இத்தகைய மொழி மாற்றங்களின் தன்மைகளைத் தனது அனுபவத்திற்கேற்பப் புரிந்துகொள்வதை அதன் மொழிபயன்பாட்டில் தோன்றும் இடர்பாடுகளிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

குழந்தைகளுக்காகப் பெற்றோர், சமூகத்தினர் மொழிகள் கவனிக்கத்தக்கது. இங்கு தாய்மொழி முதன்மை பெறுகிறது. பின் நாட்டார் மொழிகளின் கூறுகளோடு வழக்குச் சொற்களும், கிளைமொழிச் சொற்களும் பயன்படுவதைக் காணலாம். வழக்கு, கிளைமொழிச் சொற்களின் உச்சரிப்பு கூறுகள் சற்றே வேறுபட்டனவாகவும், அதன் ஒலிக்குறிப்புகள் சொற்களின் தன்மைகளில் மாறுபடுவதையும் குழந்தை உற்றுநோக்குகிறது. தாய்மொழி கற்றலில் பொதுச்சொற்கள், வழக்குச் சொற்கள், கிளைமொழிச் சொற்களிலுள்ள ஒலிக்குறிப்புச் சிக்கல்கள், எதிர்நிலை கருத்து சார்ந்த ஒலிப்புகளைக் குழந்தைகளுக்குக் கற்பிப்பதில் குழந்தைகளுக்கான மொழியில் மாற்றம் ஏற்படுகிறது. இதனைக் குழந்தைகளின் அழுநிலை, பேச்சுநிலை, செங்கீரைநிலை முதலியவற்றில் அறிவதாக இக்கட்டுரை அமைகிறது.

## குழந்தைப் பருவத்தின் வரையறை

குழந்தைப் பருவம் என்பது இலக்கியங்களிலும், கல்விப்புலம் சார்ந்த நிலைகளிலும் வரையறுப்பது வெவ்வேறாக உள்ளது. குழந்தை பிறந்து முதல் ஐந்து ஆண்டுகள் என்ற கணக்கீடு கல்விப்புலம் அடையாளப்படுத்துகிறது. சிற்றிலக்கியங்களில் ஒன்றான பிள்ளைத்தமிழில் குழந்தைகளைக் குழவி என்ற சொல்லாடலில் பிறந்தது முதல் இரண்டு ஆண்டுகளைக் குறிப்பிடுகிறது. அதன் பாடுபொருள் வேறாக இருந்தபோதிலும் பாடுபொருளின் மையம் குழந்தையின் வளர்ச்சி பற்றியது. அதில் மொழி பேசுதல் என்பது தனிக் கூறாகும். காப்பு, தால் என்பதில் குழந்தை பற்றிய கண்ணோட்டம் இருந்தாலும் அதில் பெரியவர்களின் மொழியே உள்ளது. ஆனால் செங்கீரையில் குழந்தைகளின் மொழி உள்ளது. ‘கீர்’ என்ற ஒலிக்குறிப்பிலிருந்தே செங்கீரையின் பாடுபொருள் அமைகிறது. அது குழந்தையின் முதன் பேச்சுமொழியான ஒலிக்குறிப்பு. விரிவாகச் சொல்லப்போனால் மழலை மொழியின் தொடக்கம் என்றே சொல்லமுடியும்.

குழந்தையின் உடல் வளர்ச்சி என்பது அதன் மொழி வளர்ச்சியோடு இயைபுபடுத்தப்படுகிறது. குழந்தை பிறந்த நான்கு மாதங்களில் தலைநிமிர்தல், ஆறு மாதத்தில் உட்காருதல், பத்து மாதத்தில் தவழுதல், பதினெட்டு மாதத்தில் குறுநடை போடுதல் போன்ற வளர்ச்சியின் அதன் பேச்சும் வளருகிறது. கத்துதுல், ஒலியெழுப்புதல், ஒலி உள்வாங்குதல், அதற்குப் பதில் ஒலிகளை மொழிதல், பதினெட்டு மாதத்தில் திருத்தமான வார்த்தைகளைச் சொல்ல முயலுதல் என்பதும் தொடர் வளர்ச்சியினால் அமைந்தவை.

## பேச்சு ஒலிக்குறிப்பு வளர்ச்சி

பேச்சு ஒலிகளைக் குழந்தைகள் பெற்றோர்களிடமிருந்து பெற்றுக் கொள்கிறது. ஓரசை வார்த்தைகளைச் சைகை மொழியோடு கலந்து பேசுவதும், அசைவுகளால் வெளிப்படுவதும் இயல்பாக அமைகிறது. அசைவையே பிரதானமாகக் கொண்டு பின் அதனோடு வார்த்தைகளை இணைத்து குழந்தைகள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கின்றனர். தன் சுயம் சார்ந்த தேவைகளை வெளிப்படுத்துவதில் தொடர்புடைய ஒலிக்குறிப்புகளைக் குழந்தைகள் முதலில் கற்றுக்

கொள்கின்றன. அதோடு பெற்றோர் ஒலிக்கும் ஒலிக்குறிப்புகளையும் வார்த்தை வடிவங்களையும் உள்வாங்கி பேசும் ஆற்றலை வளர்க்கின்றனர். உயிர்கள், பொருள்களின் பெயர்களை அறிதலுக்கு முன் அப்பொருள்களில் தோன்றும் ஒலிகளை உள்வாங்குகின்றனர். இந்த ஒலி இந்தப் பொருளிலிருந்து பிறக்கிறது என்பதைக் கற்கின்றனர். உதாரணமாக, நாய் என்பதைக் கற்கும் முன் அது எழுப்பும் ஒலியான "வோவ் வோவ்" என்பதை நாயாக புரிந்துகொள்கின்றனர். பின்பே அவ்வொலி சார்ந்த பெயர்களை அறிகின்றனர். அதன் பயன்பாடு தொடர்பான வார்த்தைகளை அதன் ஒலிக்குறிப்போடு இணைத்து கற்றுக்கொள்வதை உணரமுடிகிறது.

இத்தகைய சந்தர்ப்பங்களில் ஓரசை ஒலிகள், ஈரசை ஒலிகள் அதன் சொற்களை அடையாளம் காணுகின்றன. குழந்தைகள் ஒலிகளை இணைத்து பேச்சினை உள்வாங்குகின்றன. பின் மூவசை, நாலசை ஒலிகள் கொண்ட சொற்களை ஓரசை, ஈரசைச் சொற்களாகவே அடையாளப்படுத்தி பேசுகின்றனர். சொல்லின் முதல் எழுத்தின் ஒலியை உச்சரித்தல். பின் இரண்டாவது எழுத்தை உச்சரித்தல். அதன்பின் வார்த்தை சிதைவாக உச்சரித்தல். அதன் முழுமை பெற்ற திருந்தாவடிவம். பின் முழுமை பெற்ற வடிவம் ஆகிய தன்மைகளில் பேச்சு நிகழுகிறது. இத்தகைய முயற்சியையே மழலைப் பருவம் என்கிறோம்.

குழந்தைகளுக்கு ரகரமும், நகரமும் முதலில் ஒலிக்க வருவதில்லை. முறுக்கு என்பதை முக்கு என்றும், பருப்பு என்பதைப் பப்பு என்றும் சாப்பிடுவதை பாப்புடு என்றும் உச்சரிக்கின்றனர். அதுவும் முழு வடிவமாக இல்லை. இதன் வடிவம் குழந்தைகளில் வேறுபடவும் செய்கிறது. சில குழந்தைகளுக்கு வரும் ஒலிகள், வேறு சில குழந்தைகளுக்கு வருவதில்லை. தொண்டையின் அமைப்பு உச்சரிப்பு, தெளிவு, ஒலியை உள்வாங்கலின் அறிவு ஆகியவற்றைக் கொண்டே பேச்சு பிறக்கிறது. பேச்சின் தொடக்க ஒலிகளை உள்வாங்கி பேசும் செயலிலேயே ஒரு குழந்தையின் அறிவுநுட்பத்தைப் புரிந்து கொள்ளமுடிகிறது.

மொழியில் எழுத்திற்கும் சொல்லிற்கும் அடிப்படையாக அமைவது ஒலியாகும். ஒலியின் தொடர்புடைய பொருள்களை எளிதில் மனதில் நிறுத்திக் கொள்கிறது. பிற பொருள்களின் ஒலியுடன் ஒப்புநோக்கவும், அதன் மூலம் பொருளின் ஒலிகளை வேறுபடுத்திப் புரிந்துகொள்ளவும் கற்றுக்கொள்கிறது. பின்பு மனிதர்களை நினைவுபடுத்துகிறது. தன் தாயை முதலில் சுவாசத்தின் மூலமும், பின் முகத்தையும், குரலையும் அடையாளப்படுத்திக் கொள்கிறது. தொடர்ந்து தந்தை, அத்தை, மாமா, தாத்தா, அக்கா என்பதை உருவ அமைப்பிலும், தன்னோடு நெருங்கியிருத்தல் நிலையிலும் கற்றுக்கொள்கிறது.

**மொழி வளர்ச்சியின் காரணிகள்**

மொழி வளர்ச்சி இரு காரணிகளால் நிகழ்வதென்று மொழியியலாளர்களும், உளவியலாளர்களும் வரையறுத்துள்ளனர். ஒன்று அகக்காரணிகள். மற்றொன்று புறக்காரணிகள். குழந்தைகளின் உடல் வளர்ச்சி, அதனால் அறிவில் ஏற்படும் முன்னேற்றம், அவர்களின் ஆர்வம், உற்றுநோக்கல், நுண்ணறிவு, கவனம், நினைவாற்றல் போன்றவை அகக் காரணிகளாக உள்ளன.

புறக்காரணிகள் என்பது குழந்தைகளைச் சுற்றி அமைந்துள்ள சூழல்களாகும். இதனை வெளிக் காரணிகள் என்பர். பெற்றோரின் அறிவுத்திறம், குழந்தைகளின் பயன்படு பொருள்கள், கற்றல் உபகரணங்கள், சூழலில் அமையும் ஒலிக்குறிப்புகள், வீட்டுச்சூழல், பள்ளிச்சூழல், ஆசிரியரின் கற்பித்தல் அணுகுமுறைகள், உத்திகள், ஆர்வத்தைத் தூண்டுதல் போன்ற காரணிகள், தொலைத்தொடர்புச் சாதனங்கள், நூலகங்கள், கிடைக்கக் கூடிய நூல்கள், சக நண்பர்கள், விளையாட்டு, இயற்கைக் காரணிகள், சுகாதாரக் காரணிகள் போன்ற பிறவும் புறக்காரணிகளாக அமைகின்றன.

**மொழியின் கருத்து வளர்ச்சி**

குழந்தையின் பேச்சு அதன் வளர்ச்சியில் தான் கருத்து நிலையாக மாறுகிறது. தொடக்கத்தில் ஒரே கருத்தை மாறுபட்ட ஒலிக்குறிப்பில் கற்றுக் கொண்ட குழந்தை, தன் பயன்படுத்தும் பொருள், தாம் உண்ணும் உணவு, விலங்குகளின் ஒலிகளிலிருந்து வேறு வேறு எனப் புரிகின்றன. ஒவ்வொரு வேறு சொல்லும் ஒரே பொருளைக் குறிக்கும் என்று தொடக்கத்தில் அறிகிறது. உதாரணமாக, தொடக்கத்தில் தனது அப்பாவை அறிமுகம் பார்க்கும் குழந்தை, அப்பாவுக்கான முக அடையாளத்தைவிட உடை, தோற்றம் என்ற சில அடையாளத்தை முன்வைக்கிறது. தன் அப்பாவைத் தவிர அவரை ஒத்த சாயலைக் கொண்ட பலரை அப்பா என்ற அழைப்பதைக் காணமுடிகிறது. சில அடையாளங்கள் மனதில் பதியும் போதும் யாரேனும் அவர் அப்பா இல்லை என்ற கூறிய பின் உற்றுநோக்குகிறது. பின்பே தன் தந்தைக்கும் பிறருக்கும் அடையாளத்தை அறிந்து கொள்கிறது.

இதனைக் கருத்து வளர்ச்சி எனலாம். தான் பேசும் வார்த்தையில் உள்ள பொருளை ஒப்புமை கருதியே குழந்தைகள் கண்டுணருகின்றன.

குழந்தைகள் எண்களைக் கற்பதை யெஸ் பர்ஸன் என்னும் அறிஞர், "வேனிற் காலத்தில் வெளியே செல்ல நேர்வதால் மற்ற காலத்தில் வீட்டினுள் இருந்து கற்றவற்றை அக்குழந்தை மறந்து விடுகிறது. முதலில் கற்ற எண்களை மறந்து விட்டு மறுபடியும் அவற்றையும் அவற்றிற்கு மேற்பட்டவற்றையும் கற்கிறது" எனக் குறிப்பிடுகிறார். குழந்தை தவறில்லாமல் பத்து வரையில் எண்ணுவதே பெரிய வெற்றியின் செயலாகும். ஒன்று அறிந்து இரண்டு எண்ணைக் கற்கும் போது ஒன்றுக்கு மேற்பட்ட எல்லாவற்றையுமே இரண்டு என்று குறிப்பது குழந்தையின் இயற்கை. மூன்று கற்றபோது ஐந்து பழத்தைப் பார்த்தாலும் மூன்று என்றே சொல்லும். பத்துப் பழத்தைப் பார்த்தாலும் மூன்று என்றே சொல்லும். இப்படியே மற்ற எண்களையும் படிப்படியாகக் கற்றுக் கொள்கிறது.

**மழலைமொழியும் சொற்பெருக்கமும்**

மொழியின் தோற்றத்தை அறிவதற்குக் குழந்தை மொழி பற்றிய ஆராய்ச்சி பெரிதும் பயன்படுகிறது. மொழி தோன்றி வளர்ந்து வரும் நிலை என்பது வேறு. குழந்தை மொழியைக் கற்கும் முறை என்பது வேறு. குழந்தை தான் வாழும் வீட்டுச்சூழல், சமூகச்சூழல் போன்ற காரணிகளில் மொழியைக் கற்கிறது. குழந்தைப் பருவத்தில் குழந்தை மொழியை கற்கும்போது குழந்தைகள் பெரும் முயற்சி செய்கின்றன. அதில் ஒன்று போலச்செய்தல் முறையிலும் பெற்றோர், உறவினர் பேசுவதைப் பார்த்து குழந்தை பேச முயற்சி செய்கின்றது.

மழலை மொழி இன்பத்தின் காரணமாகிறது. மொழி பேசும் குழந்தைகளும், பெரியவர்களும் சில போது மழலை மொழியில் பேசுவது இன்பத்தின் காரணமாகும். பிழையுடன் பேசும் குழந்தை போகப் போகப் பிழையின்றி பேசி பழகுகிறது. குழந்தைப் பேச்சு பெரியவர்களுக்குப் பிழை. குழந்தைக்கு அது இயல்பாகும். பேச்சு வளர வளர மழலைப்பேச்சில் இன்பம் குறைகின்றது. இரண்டு, மூன்று வயதில் குழந்தை பேச்சில் உள்ள இன்பம் ஐந்து வயதில் இருப்பதில்லை.

மொழிக்கு இனிமை நிரப்புதல் இருவகை. சொல்லும் சொற்களாலேயே அமையும் ஒலியின்பம் ஒன்று. அவற்றின் பொருளால் அமையும் கருத்தின்பம் குழந்தையின் மழலையில் யாழிசை போன்ற ஒலியின்பம் மற்றொன்று. குழந்தைக்குத் தன் கருத்தைப்புலப்படுத்தும் ஆற்றல் எளிமையாக அமைவது இல்லை. பெற்றோர் அதன் பொருளை அறிய முடியாமல் இருத்தலில் இன்புறுகின்றனர்.

பல நாடுகளில் இசைமொழி குழந்தை மொழியாக உள்ளது. பாலர் பள்ளிகளில் குழந்தைகள் கற்றலுக்கான இன்னோசைப் பாடல்கள் வைக்கப்படுகிறது. குழந்தை இசைமொழிக்கேற்ப இயைபோடு, எளிதாக மனதிலே பதியக் கூடிய வகையில் சொற்கள் அமைக்கின்றனர். குறிப்பாக ஒரு சொல்லில் தொடங்கி இன்னொரு அடுத்த அடியும் அதிலேயே தொடங்கினால் இன்னும் அவர்களுக்கு எளிமையாக புரியும். உதாரணமாக, "தட்டு நிறைய லட்டு, லட்டு கேட்டான் கிட்டு" என்பது குறிப்பிடத்தக்கது.

இதுபோல இயைபோடு மிகவும் எளிமையான பாடல் மனதில் எளிதில் பதியக்கூடியது. கடினமான வார்த்தைகள் பயன்படுத்தக்கூடாது. குழந்தைகள் எல்லோருக்கும் தெரிந்த வார்த்தைகளை பயன்படுத்துவது நல்லது. குழந்தைகள் மொழி ஆர்வமும், மொழியைக் கற்க வேண்டும் என்ற எண்ணமும் மேம்படும். குழந்தைகளுக்கு தெரியாததை சொல்லவே கூடாது. தெரிந்ததை நினைவூட்ட வேண்டும். ஒரு நாளில் ஐம்பது சொற்கள் கற்றுக்கொடுக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. நடைமுறையிலுள்ள பத்து சொற்களைச் சொல்லிக் கொடுத்தால் போதும். அந்த பத்து சொற்கள் இருபது சொற்களாக மாற்ற வேண்டும். ஒரு கதை சொல்லல், நூல் படித்தல், பள்ளிக்கூடத்தில் பாடல் பாடுதல் போன்ற பயிற்சியில் முப்பது வார்த்தைகள் வளரும்.

குழந்தைகள் வார்த்தைகளைத் தேடுவார்கள் அந்தத் தேடலில் அதிக வார்த்தை கிடைக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஒர் ஐந்து வார்த்தை கிடைத்தால் போதும். முப்பது வார்த்தையில் கேட்டது. பார்த்தது மனதில் நிற்காமல் போனது. ஏற்கனவே கற்றுக்கொடுத்தது பத்து. குழந்தையின் மனதில் நிற்பது பதினைந்து. பதினைந்து முப்பதாகும். முப்பது ஐம்பதாக மாறிவிடும். பின்னாளில் படைப்பாளியாக மாறும் சூழல் கூட வந்துவிடும். மொழி குழந்தைக்கு வசப்பட்டுவிடும். வசமாகிவிடும்.

குழந்தைகளுக்குக் கல்வியில் வளர்ச்சியும், முன்னேற்றமும் தோன்றுவதற்கு நினைவாற்றல் முக்கியத்துவம் பெறுகிறது. குழந்தைகள் ஆர்வமுடன் படித்தலால் மட்டும் நினைவாற்றல் வளர்ந்து விடாது. மொழியை விளையாட்டுப் போக்கிலும், உடல் இயக்கத்துடனும் படிக்கும் போது தான் நினைவாற்றல் அதிகரிக்கிறது.

குழந்தைகளிடையே தோன்றும் மொழி வளர்ச்சி என்பது அவர்களின் நினைவாற்றலைப் பொருத்தே அமைகிறது. மொழியைக் கேட்டல், பேசுதல், எழுதுதல், வாசித்தல் ஆகியவற்றின் மூலம் தெரிந்து கொள்வதுடன் பயிற்சியும் பெறுகின்றனர். மொழியிலுள்ள எழுத்துக்களையும் இலக்கணங்களையும் கற்பதன் மூலம் மொழியின் அடிப்படைகளைத் கொள்கின்றனர். அதுவே புதிய சிந்தனைகளைத் தோற்றுவிப்பதற்கும் இயங்குவதற்கும், நடத்தைகளில் புதுமையை நிகழ்த்துவதற்கும் உந்துசக்தியாக அமைகிறது.

**முடிவுரை**

குழந்தைகளின் மொழி பயிற்சி நிலையில் மட்டுமல்ல. அதன் வாழ்நிலை சூழல்களுக்கேற்ப இயல்பாகவே வளரக் கூடியது. ஒவ்வொரு படிநிலைகளிலும், பயிற்சி நிலைகளிலும், கருத்து நிலைகளிலும் குழந்தைகளில் மொழி வளர்ச்சியடைகிறது. அதன் அக, புற சூழ்நிலைகளை உருவாக்குதலே பெற்றோரின் கடமையாகிறது. சிறந்த மொழிச் சூழலில் வளரும் குழந்தை எளிதில் மொழியாற்றல் பெறும் என்பது புலனாகிறது.

**துணை நின்ற நூல்கள்**

1. மு. வரதராசன், மொழி வரலாறு, பாரி புத்தக நிலையம், சென்னை.
2. இராசாராம், மொழியும் மொழியியலும், சிவகாமி அச்சகம், சிதம்பரம்.
3. டாக்டர் பொற்கோ, மொழிசார் சிந்தனைகள், பூம்பொழில் பதிப்பகம், சென்னை.

Vol. 9 Special Issue 1 October 2024 E-ISSN: 2456-5571

# காளவாய் புதினம் காட்டும் சமுதாய நிலைகள்

**முனைவர் பா.நேருஜி**
*உதவிப் பேராசிரியர்*
*செந்தமிழ்க் கல்லூரி, தமிழ் உயராய்வு மையம், மதுரை*

மதியம் இரண்டு மணி. வெயில் நிலத்தின் தோலை உரித்துக் கொண்டிருந்தது. மரங்கள் அடர்ந்த சோலைகளாக இருந்த இடத்திலெல்லாம் கட்டடங்கள் ஆக்கிரமித்துவிட்டன. பனைமரங்களுக்குக்கூட விசிறியிருந்தும் விசிறிக்கொள்ள முடியவில்லை. பறவைகள் எல்லாம் மின்விசிறிகளில் கூடு கட்டிக் கொண்டிருந்தன. காற்று கொடைக்கானல் பக்கம் போய் விட்டதாகவும் பேசிக்கொண்டார்கள். உலகம் போட்டுக்கொண்டிருந்த கவசம் உடைந்திருக்கிறது. ஓசோன் என்ற தலைப்பாகை அவிழத் தொடங்கியிருக்கிறது. எதனால் அந்த அழிவுப்படலம்? மனிதன் இயற்கையைத் தன்னைவிட்டுத் தள்ளி வைத்ததனால் ஏற்பட்ட விளைவு என்ற சுற்றுச்சூழல் பாதுகாப்பு உள்ளிட்ட உள்ளடக்கத்தினைக் கொண்டுள்ள கு.வெ.பாலசுப்பிரமணியனின் 'காளவாய்' (2014, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை) புதினத்தில் இடம் பெற்றுள்ள சமுதாய நிலைகளை விளக்குவதாக இவ்ஆய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

### ஆதரவற்ற பிள்ளைகள் பள்ளிக்கூட விழா – பொது அறிவு வினாவிடை

அன்புள்ள என் மாணவச் செல்வங்களே! உங்களுக்குப் பெற்றோர்கள் இல்லை என்று கவலைப்படாதீர்கள். சொந்தக்காரர்கள் இல்லை என்று வருத்தப்படாதீர்கள். இந்த நாட்டில் மற்றவர்களுக்கெல்லாம் என்ன உரிமை உண்டோ அந்த உரிமை எல்லாமும் உங்களுக்கு உண்டு. எதிர்காலத்தில் நீங்கள் என்ன ஆகவேண்டு மென்பதை நீங்கள் திட்டமிடுங்கள். அதில் உறுதியாக இருங்கள். அதற்குத் தகுதிபடுத்திக் கொள்ளுங்கள். ஓர் எளிய குடும்பத்தில் பிறந்து உலகப் புகழ் விஞ்ஞானியாகி நோபல் பரிசு பெற்ற இந்தியர்? சர்.சி.வி.இராமன், துணிக்கடைப் பணியாளராக இருந்த ஒருவரின் மகன் உலகமே வியந்து போற்றும் கணித மேதையானாரே, அவரை நீங்கள் அறியமாட்டீர்களா? இராமானுஜம், இந்தியச் சட்டத்தை திருத்தி அமைத்த மாமேதை? டாக்டர் அம்பேத்கர், தொண்டுக்கே தன்னை ஆளாக்கிக் கொண்டு வீதியில் விடப்பட்ட அனாதைக் குழந்தைகளைத் தன் அன்புக் கரங்ளால் அள்ளிப் பாதுகாத்த அன்னை? அன்னை தெரசா, உலக நாடுகளைத் தன் கவிதையில் தாலாட்டிய கவியரசர்? இரவீந்திரநாத் தாகூர், தமிழகத்தைத் தன் கவிதைகளால் தட்டி எழுப்பிய விடுதலை முரசம்? பாரதியார், புதுவையிலிருந்து ஆமணக்கு விதை போல வெடித்தெழுந்த புரட்சிக் கவிதைக் குயில்? பாரதிதாசன், ஆங்கில ஆதிக்கத்தை அகற்ற எலும்பும் தோலுமாய் அரை நிர்வாணப் பக்கிரியாய் மக்களை அகிம்சை வழியில் ஒன்றுபட வைத்த தேசப்பிதா? காந்தி அண்ணல்.

இந்தியாவிற்கு விடுதலை வாங்கித் தந்த காந்திக்கிழவர், உண்மையில் இந்தியா விடுதலை பெற்ற நாடாக ஆகவேண்டுமென்றால் காசுமிரத்திலிருந்து கன்னியாகுமரி வரை அழகும் இளமையும் கொண்ட பெண் ஒருத்தி எந்தத் துணையுமில்லாமல் நிறை அணிகலன்கள் அணிந்தவளாய் நள்ளிரவில் நடந்து சென்று, தன் கற்புக்கும் அணி மணிகளுக்கும் எந்த இடையூறும் இல்லாமல் திரும்பும் அந்த நாள் வரவேண்டுமென்றார். அந்தக் கனவு நிறைவேறியிருக்கிறதா? இல்லை, இல்லை.

### தென்றல் நகர்

தென்றல் நகர் என்பது ஒரு சேரிக் கிராமம். பெரும்பாலும் மீனவர்களும், நகர சுத்தித் தொழிலாளர்களும் செருப்புத் தைப்பவர்களும் மிகுதியாகக் குடியிருக்குமிடம், கார் மெல்ல வீதிக்குள் நுழையும் போது மங்கை வியப்படைந்தாள். குடிசைகள் ஆனாலும் என்ன ஒழுங்கு! குப்பைகளுக்கு அங்கங்கே தொட்டிகள். மணம் பரப்பும் மலர்ச் செடிகள் தெருவின் இருபுறமும் அழகு செய்தன. 'இது தூய்மைப் பகுதி உங்கள் மனம் போல் வைத்திருங்கள்' என்ற அறிவிப்பைக் கண்டு அவள் புன்னகைத்தாள். சிறிய மரப்பலகைகளில் வெள்ளை எழுத்துக்களில் திருக்குறள் எழுதப்பட்டிருந்தது. "சென்ற இடத்தால் செலவிடாதீது ஒரீஇ - நன்றின்பால் உய்ப்பது அறிவு" என்ற குறளை எழுதி அதற்குக் கீழே அதன் பொருளையும் எழுதியிருந்தனர். "புலன்கள் போன பக்கமெல்லாம் அறிவைப் போகவிடாமல், நல்லவற்றை நோக்கிச் செலுத்தப்படுவதே அறிவுடைமையாகும்" என்று எழுதப் பெற்றிருந்தது.

"அண்ணா! இந்த வரிகள் யாருடையவை" ஒரு பலகையைச் சுட்டிக் கேட்டாள் மங்கை, "பெரியோரை வியத்தலும் இலமே – சிறியோரை

இகழ்தல் அதனினும் இலமே'' ''மங்கை இவை கணியன் பூங்குன்றன் என்ற சங்கப் புலவனின் பாடல் அடிகள்''. இதே போன்ற உரையாடலில்,

**''சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்**
**சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம் கற்போம்''**

பாரதியின் பாட்டுப் பகுதி,

**''அறிவை விரிவுசெய் அகண்ட மாக்கு**
**விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை**
**அணைந்து கொள் உன்னைச் சங்கம மாக்கு**
**மானிட சமுத்திரம் நானென்று கூவு''**

இவை புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல் வரிகள்.

அண்ணா இது…அவன் படித்தான்.

''ஒரு கழுதைக்கிருக்கும் அளவு கூட மூளையற்ற ஒரு முட்டாள் அறிவாளிகள் பலரையும் நல்லவர்கள் பலரையும் தனக்கு அடிமைகளாக வைத்திருக்க முடிவது. அவனது பண வலிமையினாலேயே ஆகும்.'' இது யார் சொன்னது? இது தாமஸ் மூர். 'உடோப்பியா என்ற நூலில் கூறியது. பாரதி சொல்வதைக் கேட்டு அவள் புருவங்கள் உயர்ந்தன. ''இதை எழுதி வைத்திருப்பவர் சொன்னவர் பெயரையும் எழுதி வைத்திருக்கலாமே!'' ''நானும் அப்படிக் கேட்டது உண்டு. அதற்கு ''தேடித் துருவிப் படிக்கட்டுமே என்றுதான் பெயர் விடப்பட்டிருக்கிறது. பெயரையும் எழுதியிருந்தால் இங்கே பலகைகளில் இருப்பதைப் படிப்பதோடு நிறுத்திவிடுவார்கள் என்றார் அவர்.'' என்று கூறப்பட்டுள்ளது.

**சிட்டுக்குருவி, குயில் வாயிலாக ஆண்களின் பண்பு**

சிட்டுக்குருவிகள் வாலை அசைத்தசைத்துச் சின்ன ஒலிகளை இசைக்கின்றன. அவற்றைப் பார்த்து கண்ணப்பனின் மனைவி மங்கை திருமணமான புதிதில் ''ஏ! சிட்டுக்களே! ஏன்ன இப்படி ஓயாத கொஞ்சல் வேண்டிக்கிடக்கிறது. எப்போதும் தாம்பத்யம் தானா? அதனால் தான் உங்கள் பரம்பரைக்கே உடல் வலிமை இல்லாமல் போய்விட்டது. உங்கள் கால்களைப் பாருங்கள் ஈர்க்குச்சிகளைப் போல இருக்கின்றன அல்லவா? பாலுறவில் அளவாக இருக்கும் விலங்குகளில் கால்களுக்கு இருக்கும் வலிமை உங்களுக்கு இல்லாமல் போய்விட்டது பார்த்தீர்களா? எதிலும் அளவாய் இருங்களேன்'' என்று மங்கை பேசினாள். ''கிறீச்! கிறீச்!'' பெண் சிட்டு அவள் முகம் பார்த்து ஏதோ சொன்னது. ''ஓ! அவரிடம் சொல்லுங்கள் என்கிறாயா? அதுவும் சரிதான். ஆண்களே இப்படித்தான். குழந்தைகள் கையில் விளையாட்டுப் பொருள் போலப் பெண்ணைத் தங்கள் உணர்ச்சிக்கு இரையாகும் பொருளாகவே கருதுகின்றனர். இவ்வளவு ஆசை வைத்திருக்கும் ஆண்கள் கொஞ்ச காலம் போனபிறகு தடமாறிப் போய்விடுகிறார்களே! சிட்டுக்களே நீங்களும் இப்படியா?'' ''சீச்சீ'' என்று குழறிற்று ஆண்சிட்டு. ''அதெல்லாம் மனிதர்களோடு வைத்துக் கொள்ளுங்கள் என்கிறாயா. அதுவும் சரிதான். ஒரு குயில் மரக்கிளையில் மிகுந்த சோகத்துடன் ஒலியெழுப்பிக் கொண்டிருந்தது. அது பெண் குயிலாக இருக்காது. பெண் குயில் கூவாது என்பது பலர்க்குத் தெரியாது. ஆனால் இது அன்பின் அழைப்பான கூவல் இல்லை. விரக தாபத்தில் வேதனையைக் கசிய விடும் மெல்லிய முனகல் ஆண்குயில் எங்கே போயிருக்கிறதோ. எத்தனை மணிக்கு வருமோ தெரியவில்லை.

**கிளி வாயிலாக அதிகாரவர்க்கம் பற்றியது**

கிளி பறந்துவிட்டது. அது கூண்டுக்குள் இருந்து நெல்லைக் கொறித்துவிட்டுச் சோதிடச் சீட்டு எடுத்துக் கொடுக்கும் கிளி இல்லை. தானும் உரிமையோடு மற்றவர்களும் உரிமையோடு வாழ வேண்டும் என்பதற்காக நாட்டைச் சுற்றிப் பறந்து வரும் கிளி. அதன் சிறகை அரியத் துடிக்கிறது அதிகாரவர்க்கம். இதுதான் உலக நடைமுறை.

**பெரியபுராணம் திருநீலகண்டர் கதை**

நரேந்திரன் அம்மா! இதோ இந்தத் திருநீலகண்டர் கதை எனக்குப் புரியவே இல்லையே. கையைப் பிடித்துக்கொண்டு குளத்தில் முழுகிச் சத்தியம் செய் என்றால் மூங்கில் கழியைப் பிடித்துக் கொண்டு சத்தியம் செய்தாராம். அப்படி என்ன அவர்களுக்குள் …மங்கை வரும் தலைமுறைக்கு இது எங்கே விளங்கப்போகிறது என்று நினைத்துக் கொண்டாள். ''திருநீலகண்டர் நடத்தை சரியாக இல்லை என்று தெரிந்து கொண்ட அவர் மனைவி ''என்னைத் தொடாதீர்கள்'' என்று சொல்வதற்குப் பதிலாக ''எம்மைத் தொடாதீர்கள் இறைவன் மீது ஆணை'' என்று சொல்லிவிட்டாளாம். அது முதற்கொண்டு அவர் மனைவி உட்பட யாரையும் தொடவில்லையாம். என்ன வைராக்கியம்! ஒரு சொல் அவரைச் சுட்டு அவர் கிழப்பருவம் எய்தும் வரையில் மண உறவிலிருந்தே விலக்கி வைத்துவிட்டதே! இந்தக் கதை மாறிப்போய்விட்ட இன்றைய சமுதாயத்திற்கு எப்படிப் புரியும்? எதிலுமே மன உறுதியும் வைராக்கியமும்

இல்லாமல் வாழ்கிற சமுதாயத்தில் தடம் பிறழாத இல்லறம் என்பதெல்லாம் இல்லாமல் போய் விடுமோ'' அவள் மனம் என்னென்னவோ மேலும் எண்ணியது.

**விவசாய நிலை**

மங்கையின் அப்பா சண்முகம் அரைக்காணி நிலத்தில் வியர்வை சொட்ட உழைத்து உழைத்துத் தேய்ந்து கொண்டிருந்தார். "பச்சைப் பசேலென்று பட்டு விரித்தது போல என் நிலம் எப்படி இருக்கும்? காவிரித் தண்ணீரைக் கனவாக்கிவிட்டது அரசியல். உரம், பூச்சி மருந்து, நெல் கொள்முதல் எல்லாவற்றிலும் கமிஷன் ஊழல்... விவசாயம் சாயம் இழந்துவிட்டது. இயற்கை வேளாண்மை செய்வதற்குத்தான் எத்தனை தடைகள்? செயற்கை உரங்களாலும் பூச்சிக்கொல்லி மருந்துகளாலும் தாய் மண்ணை நஞ்சாக்கிவிட்டார்களே! சாராயக் கழிவுகளும் தொழிற்சாலைகள் அகற்றும் மாசுகளும் தண்ணீரையும் நிலத்தையும் மீட்க முடியாத நச்சுக் கிடங்குகளாக ஆக்கிவிட்டனவே! இயற்கை போன தலைமுறையில் தாலாட்டிய வேளாண் குழந்தை இன்று விஞ்ஞான அரக்கர்களால் நாற்றுப் பருவத்திலேயே கொலை செய்யப்பட்டு விட்டதே'' என்று சண்முகம் ஏங்கி ஏங்கியே துவண்டு போனார்.

**இலட்சுமிகாந்தனின் பாராட்டப்பட்ட தீர்ப்பு**

இலட்சுமிகாந்தன் ஆசிரியராகப் பணியாற்ற வேண்டும் என்ற பெரிய இலட்சியத்துடன் கல்லூரிப் பேராசிரியராக வந்தார். ஆர்வத்தோடு வேலை செய்தார். ஆனால் பத்தாம் பசலித்தனமான பாடத்திட்டங்களும், உண்மையான அறிவு மதிப்பீடு செய்ய முடியாத தேர்வு முறைகளும், சக ஆசிரியர்களின் அறிவுத் தேட்டமில்லாத பணவேட்டை முயற்சிகளும் அந்தத் தொழிலுக்கே அவரை முழுக்குப் போடச் செய்தன. பின்பு அவர் வழக்கறிஞராகி நீதிபதியாகிப் பலரால் பாராட்டப்பெற்று சிறந்த தீர்ப்புகளுக்கு உரியனவரானார். அவர் தீர்ப்பு வழக்கை அலசி ஆராய்ந்ததாக இருந்தன என்பதோடு நடையழகும் கவித்துவமான வெளிப்பாடும் கொண்டிருந்தன.

விந்தையான வழக்க ஒன்று அவருடைய தொடக்க காலப் பணியின்போது வந்ததைப் பலரும் குறிப்பிடுவர். ஒரு பெரிய பணக்காரன் வீட்டில் இரவில் ஒருவன் உள்ளே புகுந்து பீரோவைத் திறந்து 132 ரூபாய் ஐம்பது காசுகளைத் திருடிவிட்டான். வழக்கு விசாரணைக்கு வந்த போது இலட்சுமிகாந்தனே குற்றவாளியை நேரடியாக விசாரணை செய்தார். "சுருளி சொல். நீ திருடியதை ஒப்புக்கொள்கிறாயா?'' "ஒப்புக்கொள்கிறேன் ஐயா!'' அவன் பணிவோடு சொன்னான். "நீ திறந்த பீரோவில் எவ்வளவு பணம் மற்றும் பொருள்கள் இருந்தன?'' "எவ்வளவோ இருந்தது ஐயா! இலட்சக் கணக்கில் ரூபாய் நோட்டுகள். எல்லாம் ஆயிரம் ரூபாய் நோட்டுகள். மேலும் தங்க நகைகள், வைர நகைகள் எல்லாம் இருந்தன.'' "அப்படி இருக்க நீ ஏன் 132 ரூபாய் ஐம்பது காசை மட்டும் எடுத்துக்கொண்டாய்.''

"அவரிமிருந்து எனக்குக் கூலியாகச் சேர வேண்டிய தொகை அவ்வளவுதான் ஐயா. நான் ஐயாவின் பண்ணையில் வேலை செய்தவன். எனக்கு நாலு வாரச் சம்பளம் ஐந்நூற்று முப்பது ரூபாய். நான் எந்தத் தவறும் செய்யாமல் இருக்கும் போது, என்னை ஐயா வேலையைவிட்டு நீக்கி விட்டார். எனக்கு ஒரு வாரச் சம்பளம் ரூ.132 ஐம்பது காசு பாக்கி. பல முறை நான் கேட்டதுண்டு. கடைசியில் ஆட்களைவிட்டு என்னை அடித்து விரட்டிவிட்டார். உழைத்த காசை அவரிடமிருந்து பெற்றே ஆகவேண்டும் என்று ஒரு வேகம். அதனால் அவருடைய இருப்பிலிருந்து 132 ரூபாய் ஐம்பது காசு மட்டும் எடுத்துக் கொண்டேன். அவர் கொடுத்த புகாரில் என்னைக் கைது செய்துவிட்டார்கள்'' என்றான் சுருளி.

நீதிபதி மன்றத்தைத் தன் பொருள் பொதிந்த பார்வையில் நோக்கினார். "சுருளிக்கு ஒரு வாரச் சம்பளம் அல்லது கூலியைக் கொடுக்க மறுத்த முதலாளி அரசுக்குக் கட்ட வேண்டிய வருமான வரித்தொகை ஐம்பத்திரண்டு இலட்சமாகும். அதற்கு அவர் மீது வழக்கு உள்ளது. அரசுக்குச் சேர வேண்டிய தொகையை அரசு அவரிடமிருந்து வசூல் செய்ய முடியவில்லை. சுருளி அவருக்குச் சேர வேண்டிய தொகையை வசூல் செய்திருக்கிறார். நாம் சுருளியை என்ன செய்யலாம்?'' என்றார் நீதியரசர். "பாராட்டலாம்'' என்றார் ஒருவர். நீதிமன்றம் கலகலவென்று நகைத்தது.

**காதல் பற்றிய கருத்து**

காதல் என்பது திருமணத்தால்தான் நிறை வெய்துகிறது என்றோ வெற்றியடைகிறது என்றோ சொல்லமுடியாது. திருமணத்தில் முடியாமல் காதல்கள் ஏதோ கட்டாயத்தால் பிரிய நேரிட்டாலும் அந்தக் காதல் தோற்பதுமில்லை, முடிவதுமில்லை. திருமணம் நடக்காமல் போய்விட்ட காதலின் புகழையே உலகப்

புகழ்பெற்ற காவியங்கள் பாடுகின்றன. லைலா மஜ்னு, ரோமியோ ஜூலியட், அம்பிகாபதி அமராபதி, தேவதாஸ் பார்வதி ஆகிய காதலர்கள் இறந்து புகழ்பெற்றனர். அவர்கள் உள்ளத்தில் இருந்த காதல் இறக்கவே இல்லை.

இன்னும் எத்தனையோ உள்ளங்களில் காதல் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறது. சாதித்தடைகளும் சம்பிரதாய விலங்குகளும், பிரதேச வெறிகளும், மத வேறுபாடுகளும் காதலை நிறைவேறவிடாமல் காலம் காலமாகத் தடுத்துக் கொண்டுதான் இருக்கின்றன. காதலர்கள் இணையாமல் இருந்தாலும் காதல் சிரஞ்சீவியாய் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

**குடும்ப அமைப்பு**

காலங்காலமாக ஆண்களின் உறுதியற்ற மனம் எப்படி வெளிப்பட்டிருக்கிறது பாருங்கள்! ஒருவன் ஒருத்தி என்ற குடும்ப அமைப்பை சிதைத்து ஒருத்திக்கு மேற்பட்ட பெண்களை மணக்கும் தங்கள் சபல மனத்தைக் கடவுளரைப் பற்றிய புராணங்களில் நன்கு வெளிப்படுத்துகிறது. சிவனுக்குப் பார்வதி, கங்கை என இருவர். முருகனுக்குத் தெய்வானை, வள்ளி என இருவர். திருமாலுக்கு சீதேவி, பூதேவி என இருவர். கண்ணனுக்கு பாமா, ருக்மணி என இருவர். இப்படிப்போகிறது பட்டியல். மனிதர்கள் தங்கள் சலன மனத்தை நியாயப்படுத்தும் முயற்சிதானே இது! இவையெல்லாம் தத்துவங்களின் உருவமாக இருக்கலாம். ஆனால் இவற்றைப் படிக்கும் சாதாரண மனிதன் நிலை என்னவாக இருக்கும்? எதிர்காலச் சமூகம் ஆணின் பாலியல் உரிமைகளை வரையறுக்கவும் நடத்தை விதிகளை மதிக்காத ஆணைத் தண்டிக்கவும் சட்டங்கள் வேண்டும் என்றார் இலட்சுமிகாந்தன் என்று கூறப்படுகிறது.

புதினத்தின் மற்றுமொரு இடத்தில், கணவன் மனைவி என்பது பிரிக்க முடியாதது என்ற நம்பிக்கை மிக்க கருத்து ஆழமாக இருந்தவரையில் இல்லறம் சரியாக இருந்தது. அந்த நம்பிக்கையை எந்த அறிவாராய்ச்சிக்கும் உட்படுத்தாமல் இருந்த வரையில் மண உறவு பிரியாமலும், அதிலிருந்து விலக முடியாததாகவும் இருந்தது. நம் பண்பாட்டின் கூறுகளை நம் வசதிக்காக நாம் விரும்புகிறபடி மாற்றி அமைத்துக் கொள்ள முயன்றபோது அழுத்தமாகக் கட்டப்பட்ட சுவரில், நடுவே ஒரு செங்கல் உருவப்பட்டதுபோல் ஒரு கட்டுக் குலைவு ஏற்பட்டது. அதனைச் சுற்றிலும் ஒவ்வொரு கல்லாக உருவப்பட்டுத் தமிழ்ப்பண்பாடு என்பது நிறம் மாறி, உருவம் மாறி வேறு வகையாக ஆகிவிட்டது.

**காமராசர் பற்றிய பதிவு**

மங்கையின் தந்தை சண்முகம்கொள்கைப் பற்று மிக்க ஒரு தியாகி. மகள் திருமணத்திற்கு தன்னோடு பழகியவர்களில் ஒரு இருபது பேரை அழைக்க வேண்டுமென்று எண்ணி இருந்தார். அந்த இருபதாவது மனிதர் தமிழ்நாட்டின் அப்போதைய முதலமைச்சராக இருந்த காமராசர். காமராசரும் சண்முகமும், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறையில் ஒன்றாக இருந்தவர்கள். சண்முகத்தின் நட்பபைப் பெரிதும் மதிப்பவர் காமராசர். அவரை மகள் திருமணத்திற்கு நேரே சென்று அழைக்க வேண்டுமென்று சண்முகம் நினைக்கவில்லை. ஆனால் ஊர்க்காரர்களும் உறவினர்களும் சண்முகத்தை வற்புறுத்தினார்கள். “எவ்வளவு பழக்கம் ஒண்ணா ஜெயில்ல கெடந்திருக்கீங்க. வராம போய்டுவாரா. போய் அழைக்கறதுதான் முறை. போங்க போங்க” என்று வற்புறுத்தினர். அவர் பதவியேற்ற பின்பு சண்முகம் போய் பார்க்கவே இல்லை. அதையெல்லாம் அவர் விரும்பவும் மாட்டார். எல்லோரும் சொன்னதற்கு இணங்கிச் சண்முகம் சென்னைக்கு வந்து திருமலைப்பிள்ளை சாலையில் இருந்த அவருடைய வீட்டில் சண்முகம் தன் நீண்ட கால நண்பரைக் கண்டார்.

“வாங்க சண்முகம்! ஆச்சரியமா இருக்குன்னேன்” என்றார். காமராஜ். புார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன். அத்தோட…” அவர் முடிக்கு முன்பு முதல்வர் குறுக்கிட்டார். “ஒங்க ஊர்ல அந்த உயர்நிலைப் பள்ளிக்கட்டடம் கட்டி முடிச்சிட்டாங்கல்லே! அந்த சேத்துக் குட்டையை ஆழப்படுத்தி விவசாயத்துக்குப் பாசனம் செய்யறாப்பல செய்து முடிச்சிட்டாங்களா…” இன்னும் பல செய்திகளை அவர் கேட்டார். எல்லாவற்றுக்கும் விடை சொல்லி முடித்த பின்பு சண்முகம் தன் மகள் திருமணத்தைப் பற்றிச் சொன்னார். “என்ன சண்முகம்! கல்யாணத்துக்கு அழைக்க நேரிலே வரணுமா? இந்த வழக்கமெல்லாம் எதற்கு! இந்த மாசம் இருபத்தெட்டாம் தேதி ஞாயிற்றுக்கிழமைன்னு சொல்றீங்க. அன்னக்கி இங்க முக்கியமான சர்க்கார் மீட்டிங் இருக்கு. நான் வரதுக்கில்லே. அதனாலே என்ன, அந்தப் பக்கத்திலே உள்ளவங்க வந்தா சரி. இந்த மாதிரி செய்திக்கெல்லாம் ஒரு கார்டு எழுதிப் போட்டாப் போதுமே!”

சண்முகத்துக்கு மனத்தில் சுருக்கென்றது. எவ்வளவு காலம் கழித்துப் பார்க்க வந்தவரை ஏன் வந்தாய் என்பது போலக் கேட்கிறாரோ என்று தோன்றியது. ஆனால் அவர் சம்பிரதாயங்களைப் பொருட்படுத்துகின்றவர் இல்லை என்பது சண்முகத்துக்கும் தெரியும். எது எப்படியானாலும் அவர் வர முடியாது. அவருக்குள்ள வேலையும் பொறுப்பும் தெரிந்ததுதான் என்று கருதிக்கொண்டு சண்முகம் அவரிடம் விடை பெற்றார்.

ஞாயிற்றுக்கிழமை காலை பத்துமணிக்குத் திருமணம் தொடங்கும் வேளையில், திருமணப் பந்தலில் ஒரு திடீர்ப் பரபரப்பு ஏற்பட்டது ''முதலமைச்சர் வந்துட்டார்'' என்று ஒரே ஆரவாரம். ஆடம்பரமில்லாமல் ஒரே ஒரு கார் வாயிலில் நின்றது. காமராஜ் அதிலிருந்து இறங்கி வந்தார். சண்முகம் ஓடோடி வந்து அவர் கைகளைப் பற்றிக் கொண்டார். ''நீங்க வர்ரதுக்கு இல்லேன்னு சொன்னீங்களே'' சண்முகம் கேட்டார். ''ஆமாம். நான் வர்ரேன்னு சொல்லியிருந்தா முதலமைச்சர் வர்றார்னு ஆடம்பரமா வரவேற்பீங்க இல்லியா! ஜனநாயக நாட்டிலே முதலமைச்சரும் ஒரு குடிமகன் தானே'' அவர் சொல்லக் கேட்ட எல்லார்க்கும் வியப்பில் விழிகள் விரிந்தன.

அன்று முழுவதும் அவர் சண்முகத்தின் எளிய வீட்டிலிருந்தார். மதியம் உணவுக்குப் பின் உள்ளூர்ப் பள்ளிக்கூடத்தைப் பார்வையிட்டார். மாணவர்களிடம் பேசிக்கொண்டிருந்தார். சேற்றுக் குட்டை வேலை நடக்கிறதா என்று பார்த்தார். மாலையில் விடைபெறும் போது சண்முகம் கண்கலங்கினார். காமராஜ் மங்கையைப் (மருத்துவப் படிப்பு முடித்திருந்த மணமகளான) பார்த்து ''உன் படிப்புக்கு அரசாங்கம் ரொம்ப செலவு செஞ்சிருக்கு. அந்தப் படிப்பு ஏழை மக்களுக்கு பயன்படணும்மா. நல்லாருங்க. வர்றேன்'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார். மக்கள் மனங்கள் எல்லாம் அசைந்தன. தெய்வத்தையே பார்த்துவிட்டதைப் போல் அந்த உள்ளங்கள் சிலிர்த்தன.

### புதிய கல்வித் திட்டம்

சேரிகளிலும் பிற சாதித் தெருக்களிலும் இருட்டுப் பொந்துகளில் நண்டுகளாய் நத்தைகளாய் ஒடுங்கிக் கிடக்கும் அவர்கள் கல்வி கற்றுவிட்டால், அவர்களை அடக்கி ஆண்டு கொண்டிருக்கும் தங்கள் மேலாண்மை போய்விடும் என்று மேல் சாதிக்காரர்கள் கருதினார்கள். பள்ளிகளை மூடிவிட்டால், தங்கள் நோக்கம் நிறைவேறிவிடும் என்று அவர்கள் நினைத்தார்கள். அவர்களின் கனவு இராஜாஜி அவர்களின் நனவாகத் தொடங்கியது.

இராஜாஜி மிகப்பெரிய போராளிதான். நாட்டு விடுதலைக்காக சிறை சென்றவர்தாம். ஆனால் அவருடைய வருணாச்சிரம நம்பிக்கை தமிழர்களின் முன்னேற்றத்துக்குத் தடை விதித்துவிட்டது. தமிழ்நாட்டின் முதலமைச்சராக 1952 இல் பதவியேற்ற இராஜாஜி, 'புதிய கல்வித் திட்டம்' என்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தார். அதன்படி பாதி நேரப் படிப்பும் பாதி நேரம் தொழிற்கல்வியும் மாணவர்கள் கற்பார்கள் என்று அறிவிக்கப்பட்டது. தச்சு, நெசவு, கொல்லுத் தொழில் போன்ற தொழில்களைக் கற்பித்தல் நடக்குமென்று கூறப்பட்டது. இதனால் இவற்றுக்குப் பள்ளிக்கூடங்களில் இடமும், மற்ற வசதிகளும் இல்லாமல் போகவே ''பிள்ளைகளே! வீட்டிற்குப்போய் அப்பன் தொழிலைக் கற்றுக் கொள்ளுங்கள்'' எனச் சிறுவர்கள் விரட்டப்பட்டார்கள்.

பள்ளிக்கூடங்களிலிருந்து மதியமே மகிழ்ச்சியாக வெளியேறிவிடும் சிறுவர்களுக்கு அவர்களின் எதிர்காலம் இருளாக இருக்கப்போகிறது என்பது தெரியவில்லை. வருணாச்சிரம சிந்தனை வகுத்த இந்தக் கல்வித் திட்டத்தின் உண்மையான அடிப்படையைச் சரியாகப் புரிந்துகொண்ட தந்தை பெரியார் இதனைக் 'குல கல்வித் திட்டம்' என்று கூறி கடுமையாக எதிர்த்துப் போராடினார். தமிழர்களின் முன்னேற்றத்தில் ஒரு கருப்பு நாளாகக் குல கல்வித் திட்ட நாள் தோன்றியது. பல்லாயிரவர் சிறை சென்றனர். அரசியலில் ஆலமரமாக ஓங்கி நின்ற இராசகோபால ஆச்சாரியார் அரசியலைவிட்டு விலக நேர்ந்தது. அவர் போவதற்கு முன் மூடிவிட்டுப் போன ஆறாயிரம் பள்ளிக்கூடங்கள் என்ன ஆகும் என்ற கவலை பலர் உள்ளத்தில் இருந்தது.

தமிழ் மக்களின் கல்வி வரலாற்றில் படிந்த கன்னங்கரிய இருளின் கறையைத் துடைக்க ஒரு கருப்புச் சூரியன் எழுந்தான். அந்தத் தலைவனே காமராசர். அவர் தமிழகத்தின் முதல்வராகி மூடிய ஆறாயிரம் பள்ளிக்கூடங்களைத் திறந்தார். பள்ளிக்கூடத்தில் சிறுவர்கள் பட்டினி கிடக்காமல் மதிய உணவுத் திட்டத்தைச் செயற்படுத்தினார். மாநிலத்திற்கு அது கூடுதல் செலவாகுமே என்ற தொடர்புடைய அமைச்சரும் செயலாளரும் கூறியபோது 'ஆகட்டும்! அதற்காக நான் பிச்சையெடுக்கவும் தயார்' என்றபோது அவரது உறுதி நாட்டையே மகிழ்ச்சி பூக்க வைத்தது. அந்தக் காலத்தில்

தொடக்கப்பள்ளியில் படித்த எளிய குடும்பத்துப் பிள்ளைகள் இன்று, மருத்துவர்களாக, பொறியாளர்களாக, மாவட்ட ஆட்சியாளர்களாக, காவல்துறைத் தலைவர்களாக, பேராசிரியர்களாக உயர்ந்துள்ளனர். ‘‘குல கல்வித் திட்டம் மட்டும் வந்திருந்தால் நான் எங்காவது ஒரு பட்டறையில் மாட்டுக்கு லாடம் அடித்துக்கொண்டிருப்பேன்’’ என்கிறார் கல்பாக்கத்தில் வேலை பார்க்கும் ஒரு விஞ்ஞானி என்று கூறப்படுகின்றது.

இப்போதும் பாரதி பார்க்கிறான். மழை நாட்களில், சின்னஞ்சிறு குடை பிடித்துக் கொண்டு காலில் செருப்பு மெரினா சாலையில் பள்ளிக்கூடம் போகிறார்கள். பட்டினப்பாக்கக் கடற்கரையில், காமராசர் சிலை வடிவில் பள்ளி செல்லும் இரண்டு பாலகர்களை அரவணைத்தபடி மழையில் நனைந்து கொண்டிருக்கிறார். மதிய உணவுத்திட்டம் எல்லா ஆட்சியிலும் வளர்ந்திருக்கிறது. அதை நிறுத்திவிட்டு யாரும் வாக்குக் கேட்க முடியாது. தனி ஒருவனுக்கு உணவில்லை என்னும் நிலை மாறியிருக்கிறது. இருந்தாலும் ஆதிக்க உணர்வு அறவே அணைக்கப்பட வேண்டுமென்று நினைத்துக் கொண்டான் பாரதி.

## தொகுப்புரை

குளத்திலே மலர்ந்த அல்லியும் தாமரையும் காணாமல் போய்விட்டன. அவற்றிலே தேன் குடித்த வண்டுகள் உண்ணா நோன்பிருக்கின்றன. பிளாஸ்டிக் பூக்களைக் கண்ணாடிக் குடுவையுள் வைத்து அழகு செய்கிறார்கள். ஆப்பிள் போலவும் ஆரஞ்சு போலவும் வாழைப்பழம் போலவும் மெழுகில் வண்ண வண்ணமாய்ப் பழம் செய்கிறார்கள். பாக்கு மரம் போலவும் தென்னை மரம் போலவும் செயற்கையாய்ச் செய்து அவற்றில் மிளகாய்ப் பழம் போல மின்விளக்கு வரிசையை எரிய விட்டிருக்கிறார்கள். வாழை இலை போலவே செய்து அதில் சாப்பிடுகிறார்கள். மின்சாரம் மட்டும் இல்லாவிட்டால் இவர்கள் சாப்பிட முடியாது. தூங்க முடியாது. எந்த வேலையும் செய்ய முடியாது. தென்றல் இவர்களுக்குத் தெரியாததாகிவிட்டது. மழை இவர்களுக்கு அதிசயமாகிவிட்டது. வானத்திலிருந்து மழையைப் பார்த்துதுக் கொண்டிருந்த காலம்போய் பூமிக்கடியில் தண்ணீரைத் தேடும் காலமாகிவிட்டது. மேலும் இப்புதினத்தில் டாஸ்மாக் பிரச்சினை, இலங்கைப் பிரச்சினை, நீதியரசர் இலட்சுமிகாந்தனின் நியாயமான நீதிதேவன் தீர்ப்புக் கதைகள், குடும்ப அமைப்பு சிதைவு, அரசாங்கத் துறைகளின் நிலைகள் (நீதி மற்றும் காவல்), பெரியபுராணக் கதை (பிள்ளைக் கறி), கடவுள் நம்பிக்கை, இராமர் பாலம், அடைகாக்காத முட்டைகள் (சாதி வேறுபாடு), மருத்துவம், இன்றைய கிராமிய் கைத்தொழில்களும் பண்பாடும், பகுத்தறிவுச் சிந்தனைகள் போன்றவை தெளிந்த நீரோடையாக புதினத்தின் கதையோட்டத்தில் புனைந்திருப்பது பாராட்டிப் போற்றுதலுக்குரியது.

Vol. 9 Special Issue 1 October 2024 E-ISSN: 2456-5571

# சிலப்பதிகாரம் சித்தரித்திடும் சமயப் பொறையறம்

**முனைவர் திருமதி. செ. பாண்டியம்மாள்**
M.A., NET, M.Phil,PhD,CGT,CSI,CBS,CVI,CTP, Certificate in Hindi, Agri.,
*தமிழியல் துறை, உதவிப் பேராசிரியர்*
*அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம், கீழக்குயில் குடி, மதுரை*

**முன்னுரை**

மழைத்துளி வானின்று வரும்போது தூய்மையாக வருகிறது. நிலத்தில் கால் கொண்ட பிறகு சாரும் இடத்திற்கு ஏற்றவாறு மாற்றம் பெறுகிறது. மனிதனும் இதற்கு விதி விலக்கானவன் அல்லன். தூய்மையாக படைக்கப்பட்ட மனிதன் சாரும் இடத்திற்கு ஏற்ப மாற்றம் பெறுகிறான். மனிதன் ஆசைகளுக்கு ஆட்பட்டவன். தான் தனது என்ற ஆணவத்திற்கு அடிமைப்பட்டவன். தான் மட்டும் வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் உழல்பவன். பல்வேறு தீய பண்புகளுக்கு இருப்பிட மாணவன் இத்தகைய மனிதனைத் தூய்மைப்படுத்துவதே சமயம் ஆகும். அன்பின் வழிபட்டது உயிர்நிலை என்ற கோட்பாட்டை உள்ளடக்கி அமைவது. “அன்பே சிவம்” என்ற தத்துவத்தை உணர்த்துவது.

கடவுள் மனிதனை தோற்றுவித்தானா? மனிதன் கடவுளை தோற்றுவித்தானா? என்பதே ஆய்வுக்குரிய வினாவாகும். இறைவன் ஆதாம், ஏவாள் என்ற உயிர்களைப் படைத்தான். அதிலிருந்து தோன்றிப் பல்வேறு பரிணாம வளர்ச்சியாக, உயிர்கள் தோற்றம் பெற்றன. என்று கிறிஸ்துவ சமயம் கூறுகிறது. மனிதன் பிறந்து வளர்ந்து சிந்திக்கத் தொடங்கிய பிறகு தனக்கு பயன்படுவதை எல்லாம் கடவுள் ஆக்கினான் அச்சம் தருவதை எல்லாம் வணங்கினான். அழகான பொருட்களை எல்லாம் வழிபட்டான். இதன் விளைவாகப் பல்வேறு சமயங்கள் உருவாயின. மனிதனின் விருப்பு, வெறுப்பு உணர்ச்சிகள் கடவுள்களுக்கும் ஏற்பட்டன. தன் கடவுள். தன் மதமும் தான் மற்ற கடவுளரினும், மதங்களினும் உயர்ந்ததாக இருக்க வேண்டும், என மனிதன் விரும்பினான். இதன் விளைவாக சமய பூசல்கள் தோன்றின. இந்த மண்ணிற்கு உரிய சமயம் பிற மண்ணிற்கு உரிய சமயம் என்னும் வேறுபாடுகள் தோன்றின. இந்த மண்ணிற்கு உரிய சமயங்கள் ஒன்றுடன் ஒன்று மாறுபட்டன. வேறு நிலத்திலிருந்து வரும் மக்களுடன் வந்த வேற்றுச் சமயங்கள் பரவத் தொடங்கிய காலத்தில் சமய பூசல்கள் பரவின.

பக்தி இலக்கியங்கள் அனைத்துமே சமயம் பரப்பும் நோக்குடையனவாகும். மதத்தைப் பரப்பும் நோக்குடைய சில இலக்கியங்கள் பிரச்சார இலக்கியங்களாகவும் மாறின. இவ் இலக்கியங்கள் தம் சமயக் கடவுளரை புகழ்ந்தன. பிற சமய கடவுள்ர்களை மிகையாக பழித்தனர். இந்த இலக்கியங்கள் கால வெள்ளத்தில் கரைந்து போயின. சமயபொறையை மேற்கொண்ட இலக்கியங்கள் கால வெள்ளத்திலிருந்து கரையேறின. தம் கடவுளரை போற்றுவதோடு மற்ற கடவுளாரைத் தூற்றாமல் பலிக்காமல் அக் கடவுளரையும் மதித்து போற்றிய இலக்கியங்கள் மதிக்கப்பெற்றன. புகழ்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். சமயபொறையறம் மிக்க இலக்கியங்களில் சிலப்பதிகாரமும் அடங்கும் சிலப்பதிகாரத்தில் அமைந்துள்ள சமயப்பொறையறம் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது. இந்நூலின் பதிகம்.

> **“குணவாயிற் கோட்டத்து அரசு துறந்திருந்த**
> **குடிக்கும் சேரல் இளங்கோ வடிகட்கு”**

என்று நூலாசிரியரைச் சமணராக அறிமுகப்படுத்துகிறது. குணவாயிற் கோட்டம் அடிகள் என்ற சொல்லாட்சிகள் இந்திர விழாவை ஒற்றுமையுடன் தேசிய விழாவாகக் கொண்டாடினர். புகார் நகரில்,

> **“அமரர் தருக்கோட்டம் வெள்யானைக்கோட்டம்**
> **புகர்வெள்ளை நாகர்தங் கோட்டம் பால்வாயில்**
> **உச்சிக்கிழான் கோட்டம் ஊர்க்கோட்டம்**
> **வேற்கோட்டம்”**

**- என பல கோட்டங்கள் இருந்துள்ளன.**

**இளங்கோவும் - சமயங்களும்**

“உன்னைப்போல் பிறனையும் நேசி” என்பது பைபிள் வசனத்திற்கு ஏற்றாற் போல் இளங்கோவடிகள் ஒவ்வொரு சமயத்தையும் நேசித்திருக்கிறார். ஆகவே, தான் இந்தியத் திருநாட்டில் தோன்றி வளர்ந்த சமயங்கள் பலவும் ஊக்கத்தோடு பணியாற்றி வந்த ஒரு சூழ்நிலையினையே சிலப்பதிகாரத்தில் காண்கிறோம்.

- இயற்கை
- பௌத்தம்
- சமணம்
- சைவம்

- வைணவம்
- சாக்தம்

முதலிய பல சமயங்களும் இளங்கோவடிகளின் படைப்பில் இடம்பெற்றுள்ளமை பலரும் அறிந்த ஒன்றே அறவழியில் சென்றால்தான் வீடுபேறு பாக்கியம் கிட்டும் என்பதைத்தான் வழிபாடு என்பர்.

**வழிபாடு**

சிலம்பில் பல்வேறு சமயங்கள் கடவுள்கள் வழிபாட்டு முறைகள் காட்டப்படுகிறது. மக்கள் இயற்கையோடு இணைந்த வாழ்வு நடத்தினர். என்பதற்கு சான்றாகத் திங்கள், ஞாயிறு, மாமழை, முதலியவற்றை வாழ்த்தி வணங்கினார். திருமால், செவ்வேல், முருகன், சிவப்பிரான், இந்திரன், புத்தன், கொற்வை முதலிய பெருந்தெய்வங்களும் இலக்கிய

ஐயை, மணிமேகலை, தீக்கடவுள், கடல் தெய்வம், மதுராபுரித் தெய்வம் நால் வகைப்பூதம் முதலில் சிறுதெய்வங்களையும் சிலப்பதிகாரம் சுட்டு செல்கிறது. இதன் மூலம் அக்காலத்தில் பல தெய்வங்களை வணங்கியதையும் பல சமயங்களில் நம்பிக்கை கொண்டிருந்ததையும் அறிய முடிகிறது.

**"பத்தினிக் கோட்டம் படிப்பறம் வகுத்து**
**நித்தல் விழாவினை நிகழ்கென்று ஏவிப்**
**பூவும் புகையும் மேவிய விரையும்**
**தேவந் திகையைச் செய்கின்று அருளி**
**வலமுறை மும்முறை வந்தனள் வணங்கி**
**உலக மன்னவ னின்றோன் முன்னர்"**

**தானம்**

சமயபொறையறத்தில் ஒன்று தான் குடும்பத்தில் எவரும் இல்லை இந்நிலையில் துறவை மேற்கொள்ளும் ஒருவர் தன்னிடம் உள்ள பொருட்களை (செல்வங்களை) எல்லாம் இல்லாதவருக்குத் தானமாக கொடுத்து விடுவர். அதன் பிறகே துறவை மேற்கொள்வர். அவ்வாறே கோவலன் தந்தையும், கண்ணகி தந்தையும், கோவலன் இறந்த நிலையில் துறவினை மேற்கொள்கின்றனர். அப்போது தானம் வழங்குவதை எடுத்துரைக்கலாம். மேலும் மாதவியும் மணிமேகலையும் துறவை மேற்கொள்வதன் வழியும் அறியலாம். இதனை,

**"கோவலன் தாதை கொடுந்துயர் எய்தி**
**மாபெரும் தானமா பொருள் ஈந்து ஆங்கு"**
**"புண்ணிய தானம் பாய்ந்து அறம் கொள்ளவும்"**
**"போதித் தானம் புரிந்தறம் கொள்ளவும்"**

**கொல்லாமை**

சமணம் உரைப்பதற்கென்றே வருபவர் கவுந்தியடிகள். அறிவினை ஏத்த மதுரைக்கு வரும் அவர் கண்ணகிக்கும் கோவலனுக்கும் சமண மதத்தின் முதல் கொள்கையாகிய கொல்லாமையைப் பின்பற்றி நடக்கக் கூடிய வழிகளைச் சொல்கின்றார்.

**துறவறம்**

துறவு என்றால் இல்லறம் நீங்கி நிற்றல் நிலையாகும். துறவிக்கு பிரிவுத் துன்பமும், பிரிந்தவர் கூடும்போது வரும் துன்பமும், பெண்களைச் சேர்ந்து அவர் பின் செல்வவர்களுக்கு உண்டாகும் துன்பங்கள் இல்லை என்பதை,

**"பிரிதல் துன்பமும் புணர்தல் துன்பமும்**
**உருவிலாளளன் ஒறுக்கும் துன்பமும்**
**புரிகுழல் மாதர்ப்புணர்ந்தோர்க்கு அல்லது**
**ஒரு தனி வாழ்க்கை உரவோர்க்கு இல்லை"**

என்ற சிலப்பதிகார அடிகள் குறிப்பிடுகின்றன. மேலும்,

**"அடல் வேண்டு மைந்தன் புலத்தை விடல் வேண்டும்**
**வேண்டிய எல்லாம் ஒருங்கு"**

என் மெய், வாய், கண், நாசி, செவி ஆகியவை தோற்றுவிக்கும் ஆசைகளைக் கட்டுப்படுத்துவதும் ஐம்புலன்கள் விரும்புகின்றவற்றை விட்டு விடுவதும் துறவியர் இயல்பு எனத் திருவள்ளுவம் குறிப்பிடுகிறது. ஆனால், துறவிகள் என்போர் தான் சார்ந்த ஆசைகளுக்கு மட்டுமே ஐம்புலன்களை அடக்கி வாழ்கின்றனர். நாட்டின் அறம் செழிக்க வேண்டும் தீமை அழிய வேண்டும் என்ற தன்னலமற்ற விரும்பிகளாய்க் காணப்படுகின்றனர்.

**மனத் தூய்மை**

சமண சமயத்தைச் சார்ந்த கௌந்தியடிகள்

**"தோமறு கடிஞையுஞ் சுவன்மே லறுமையும்**
**கவுந்தி யைகைப் பீலியுங் கொண்டு**
**மொழிப் பொருட்டெய்வம் வழித்துணை யாகென்ப"**

என்பதின் வழித் தூய பிச்சைப் பாத்திரத்தை மும்தோளில் உறியையும் மயிற்றோகையையும் வைத்திருந்தார். மேலும் மணிமேகலை பௌத்த மதத்தில் ஈடுபடும் போது கூந்தலை நீக்கினாள் என்பதை,

**"கோதைத் நாமம் குழலொடு களைந்து"**

என்ற அடி புலப்படுத்தும். இவ்வாறு மதத்தின் அடிப்படையிலே துறவியாயின் வெளித்தோற்றம் வெளிப்படுகின்றது. ஆனால், வேண்டிய தொன்றல்ல.

கூந்தலை நீக்குவதுடன் சடையாக்கி வளர்த்துக் கொள்தலும் தைவையில்லை. துறவிகளுக்கு மனத் தூய்மையே முக்கியமான ஒன்றாகும் என்பதோடு உடலாலும் மனத்தாலும் உலகச் சிற்றின்பங்களைத் துறத்தலே துறவு என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டிய காப்பியம் சிலப்பதிகாரம் எனில் மிகையாகா. இதற்கு முன்னோடியாகத் திகழ்ந்த பெண் மாதவி எந்தவொரு தாயும் தன் மகளைத் துறவியாகப் போவதற்குச் சம்மதிப்பார்களா? கூறுங்கள் பார்போம்.

**நோன்பு நோற்றல்**

கௌந்தியடிகளை கண்ட கோவலன் நோன்பிருந்து பட்டினி கிடப்பதால் இளைத்த தவவாழ்வை உடையவரே எனக் குறிப்பிடுவதை,

**“நோற்று உணல் யாக்கை நொசி தவத்தீர்”**

என்ற அடியும், மாதவியும் மணிமேகலையும் உடல் வாடிய நிலையில் கண்ட வயந்தமாலை வருந்துகிறாள்.

**“ஆடிய சாயல் ஆயிழை மடந்தை**
**வாடிய மேனி கண்டுளம் வருந்திப்**
**பொன்னே ரனையாய் புகுந்தது கேளாய்**
**உன்னோ டிவ்வூர் உற்றதொன் றுண்டுகொலப்”**

என்ற அடிகளும் விளக்கியமையால் நோன்பு நோற்றலும், உடல் வாடிய நிலையில் உள்ளமையும் அனைத்துத் துறவிகளிடமும் காணப்படுகிறது. என்பது விளங்குகிறது. நம்முடைய இன்றைய அனைத்து மத ஆண் பெண் சாமியார்கள் துறவியா? சொத்துபத்துள்ள முதலாளி முதலைகளா? சற்றே! சிந்திப்போம் அன்பை அகிலத்திற்கு அழைத்திட..

**அன்பு**

அன்பு சகலத்தையும் விட்டுக் கொடுக்கும் சகலத்தையும் துறக்கும். அன்பு சகலத்தையும் ஆளும் என்பதை,

**“அரைசுவீற் றிருக்குந் திருப்பொறி யுண்டென்று**
**உரைசெய் தவன்மே லுருத்து நோக்கிக்**
**கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்**
**செங்குட் டுவன்றன் செல்லல் நீங்கப்**
**பகல்செல் வாயிற் படியோர் தம்முன்”**

நகரில் அரசவையில் அத்தாணி மண்டபத்திற்கு நிமித்திகன் ஒருவன் வந்தான். இளங்கோவடிகளின் முகப்பொலிவை கண்டு அரசனுக்குரிய நல்லிலக்கணம் உன்னிடம் உள்ளது நீயே அரசன் ஆவாய் என்றான். இதைக் கேட்ட இளங்கோவடிகள் தன் சகோதரனான செங்குட்டுவன் நாட்டை ஆள வேண்டும் என்ற என்று விரும்பினான் அல்ல. என்ற செய்தி விளக்கப்படுகிறது. ஆனால் அரண்மனையில் வாழ்ந்தால் அரச பொறுப்பில் மோகம் பற்றுமோ என அஞ்சித் துறவிமானார். இங்கு இவர் துறவு போதலுக்குக் காரணம் தமயன் மீது கொண்ட அதிகப்படியான அன்பு எனலாம்.

அதுபோலவே இங்கு கண்ணகியின் தந்தைக்கும், கோவலன் தந்தைக்கும் தன் பிள்ளைகள் இறந்தது தெரிய வருகிறது. அப்போது சொல்ல முடியாத் துயருக்கு உள்ளாயினர். அவர்கள் மீது கொண்ட அதிகப்படியான அன்பு குடும்ப வாழ்க்கைத் துறக்கச் செய்கிறது. இவர்களைத் துறவு செல்லவும் தூண்டுகிறது. இதனை,

**“துறந்தோர்- தம் முன் துறவி எய்தவும்**
**துறந்தோன் மனைவி மகன் துயர் பொறாஅள்,**
**இறந்த துயர் எய்தி, இரங்கி மெய் விடவும்**
**கண்ணகி தாதை கடவுளர் கோலத்து**
**அண்ணல் அம் பெரும் தவத்து ஆசீவகர் முன்**
**புண்ணிய தானம் புரிந்து, அறம் கொள்ளவும்”**

என்ற சிலப்பதிகார அடிகள் உணர்த்துகின்றன. மேலும்,

**“மணிமேகலையை வான் துயர் அறுக்கும்**
**கனிகயர் கோலம் காணாது ஒழிக எனக்**
**கோதை தாமம் குழலொடு கலளந்து**
**போதித்த தானம் பாயீந்தறம் கொள்ளவும்”**

என் மாதவியும் அவள் மணிமேகலையும் பௌத்த மதத்தில் துறவு மேற்கொள்கின்றனர். மாதவி கோவலன் இறந்ததை அறிந்து அவன் மீது கொண்ட அன்பினால் துறவை மேற்கொள்கிறாள். எனினும் மணிமேகலையைத் தனியாக விட்டுத் தான் மட்டும் துறவை மேற்கொள்ளவில்லை. அவளைத் தனியே விடுத்தால் மாதவியின் தாய் சித்ராபதி மணிமேகலையை கணிகையர் வாழ்வில் இருந்து காக்க வேண்டும் என்ற அதிகப்படியான அன்பும் இவர்கள் இருவரையும் துளவியாகச்செல்லத் தூண்டுகின்றது. கௌந்தியடிகளின் துறவினைப் பற்றிச் சிலப்பதிகாரம் குறிப்பிடவில்லை. சிலப்பதிகாரத்தில் வரும் துளவியர் அனைவரும் துறவு போதலுக்கு அன்பை அடிப்படை அடையாளமாக அமைகிறது. அன்பே அடையாளமாக அமைகின்றது.

**சமூகத்தில் ஒருவர்**

துறவிகள் என்றாலே தவம் மேற்கொள்வது தான் அனைவர் மனத்திலும் எழும் எண்ணம். ஆனால், தவம் மேற்கொண்டு வாழ்வதே வாழ்வு என அவர்கள் கருதவில்லை மக்களுடன் மக்களாக அக்காலத்துத் துறவிகள் வாழ்ந்துள்ளனர். குணவாயிற்கோட்டத்தில் இருந்த இளங்கோவடிகளிடம் குன்றக்குறவர்கள் சிலர் வந்து வேங்கை மரத்தின் அடியில் ஒரு

பத்தினிப்பெண் வந்து நிற்பதைக் கண்டோம். எனக் கண்ணகியைப் பற்றி கூறினர். அப்போது அவ்விடம் இருந்த தமிழ்ப் பெரும் புலவர் சாத்தனார் என்பவர் இந்த பெண் யார்? என்பதையும் அவளைத் தேவர்கள் விண்ணுலகம் இட்டுச் சென்ற காரணத்தையும் நான் அறிவேன் என விளக்கினார். இளங்கோவடிகள் நாட்டை விட்டு ஒதுங்கி வாழவில்லை. குடிமக்களின் தொடர்பை அறுத்துக் கொள்ளவில்லை. என வாசுபமாணிக்கனார் காப்பியப் பார்வை பக்கம் -39 இன் வாயிலாகத் துறவிகள் மக்கள் தொடர்பைத் துண்டிக்காமல் மக்களுடன் மக்களாகவும், அவர்களுடன் சமூகத்தில் ஒருவராகவும் வாழ்ந்துள்ளனர். என்பது விளங்குகின்றது.

### தொகுப்புரை

- காப்பிய தலைமக்கள் இருவரும் சைன சமயத்தினர்.
- கோவலன் இறந்ததும் அவன் தந்தை பௌத்த துறவி ஆகிறார்.
- கண்ணகியின் தந்தையோ வைசிகர் துறவி ஆகிறார்.
- மாதிரி போன்றவர்கள் திருமால் வழிபாட்டினராக உள்ளனர்.
- சேரன்செங்குட்டுவன் சிவநெறியினன்
- குன்றவர்கள் முருகனை வழிபடுகின்றனர்.
- வேட்டுவர்கள் தேவியை வழிபடுகின்றனர்.
- சோழநாட்டு தலைநகரில் இந்திர விழா நடைபெறுகிறது.
- ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது திருமந்திரம் அனைவருக்கும் கடவுள் ஒருவரே அவரால் படைக்கப்பட்ட மனிதர்கள் யாவரும் ஒரே குலத்தினர்.
- இதைக்கூட புரிந்து கொள்ள முடியாமல் மக்கள் வாழ்கின்றனர்.
- மனித வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக சமயம் உள்ளதால் பிணக்குகளும் பிரச்சனைகளும் ஏற்படுகின்றன.
- அதனால் இந்திய மண்ணில் மத நல்லிணக்கம் ஏற்படுவது அவசியமான அவசரமான ஒன்றாகும் என்பதை அன்றே உணர்ந்த இளங்கோடிகள் இயற்கையை போற்றுகிறார்.
- சோழவள நாட்டினுடைய தலைநகரம் பூம்புகாரை போற்றுகிறார்.
- மேலும் மூன்று நாடுகளுக்கும் உரிய மன்னர்களைப் புகழ்ந்து துற ஐஸ் முகம் தலைநகர் பழம் சிறப்பு களை எல்லாம் போற்றுகிறார்.
- அதே சமயம் ஒரு சமயத்தவர் கொண்டாடும் விழாக்களில் மாற்றுச் சமயத்தவர் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் .
- அப்பொழுதுதான் மற்ற மதத்தினரிடையே சகிப்புத்தன்மையும் நல்ல உறவும் மலரும் என்பதை இச்சிலப்பதிகாரக் காப்பியம் மிக அருமையாக தெளிவாக விளக்குகிறது என்றால் அதற்குக் காரணம் ஒரு நல்ல தலைவன் ஒரு நாட்டை நடத்திச் செல்லக்கூடிய ஒரு தலைவர் எப்படி இருக்க வேண்டும் என்றால் இளங்கோவடிகள் போன்று எல்லாரையும் மதித்து போற்றும் வகையில் இருக்க வேண்டும் என்பதே இவ்ஆய்வுக் கட்டுரையின் வாயிலாக வெளிப்படும் கருத்துரையாம்.

### பயன்பட்ட நூல்கள்

1. இளங்கோவடிகள்-சிலப்பதிகாரம்(மூலமும்)-நாவலர்பண்டித.ந.மு.வேங்கடசாமி நாட்டாரவர்கள் எழுதிய உரையும்.
2. http;www. tamilvu.org>html
3. http://www.tamil digital library.in

# புலம் பெயர்ந்தோர் கவிதைகளில் வெளிப்படும் பெண்ணினக்குரல்கள்

**முனைவர் வெ. பிரபாவதி**
*தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்*
*வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்*

**ஆய்வு நோக்கம்**
மனித இனத்திற்கு எதிராக ஒடுக்குமுறை எந்த வடிவத்தில் வந்தாலும் அதை எதிர்த்துப் போராடுவது மனிதனின் இயல்பாகும். தொடக்க காலம் தொட்டே சமூகத்தின் சரிபாதியான பெண் இனத்தின் மீதான ஒடுக்குமுறை மனித குலத்துக்கே அவமானச் சின்னமாக இன்று வரை இருந்து வருகிறது. போரின் போது அதிகம் பாதிக்கப்படுவது பெண்களே ஆகும். போர்க்காலங்களில் பெண்களைச் சிறையில் அடைத்து கொடுமை செய்தல், பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்குதல் உள்ளீட்ட கொடுமைகளைச் செய்வது அன்று முதல் இன்று வரை நடைபெற்ற எல்லா போர்களிலும் பதிவாகி உள்ளதைக் காண முடிகின்றது. புலம் பெயர்ந்த பெண்களின் சொல்லொண்ணா துயரங்களை அவர்கள் சந்தித்த அவலங்களை வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.
**குறிப்புச் சொற்கள்:** புலம் பெயர் இலக்கியம், ஈழத்துக்கவிதைகள், ஈழத்துப் பெண்கள்

**ஈழத்துப் பெண்களின் நிலை**

ஈழத்துப் பெண்களை நோக்கினால் தமிழினத்துக்கு எதிரான சிங்கள அரசின் அடக்குமுறையும், அதன் விளைவான ஆயுதப் போராட்டமும் பெண்களின் வாழ்க்கையை மேலும் கேள்விக்குள்ளாக்கியது. தமிழ் ஈழ மக்களின் விடுதலைப் போராட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து ஈழத்துப் பெண்கள் அனைத்து நிலைகளிலும் தங்களது பங்களிப்பைத் தந்துள்ளனர். 1983ல் உச்சத்தை அடைத்த இலங்கை இனக்கலவரமும் அதன் தொடர்ச்சியாக இலங்கையில் நடைபெற்று வரும் தமிழினத்துக்கு எதிரான அரச அடக்குமுறையும் அதன் விளைவான ஆயுதப் போராட்டமும் பெண்களின் வாழ்வியலைப் பல நிலைகளிலும் துன்பத்திற்குள்ளாக்கி இருக்கிறது. இத்தகு பிரச்சனைகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்குப் புகலிடம் தேடி வந்த பெண்களுக்குத் தாய் மண் சூழலில் மறுக்கப்பட்ட உணர்வுகள், புகலிடச் சூழல் சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பைத் தந்துள்ளது.

தாய்நாட்டின் இனப்போராட்டச் சூழல், அது தந்த இழப்பு இந்திய இராணுவத்தின் கொடுமைகள், உள்நாட்டு இடம் பெயர்வுகள் இவற்றால் அதிகமாகப் பாதிக்கப்படும் பெண்களின் நிலை, போரை எதிர்கொள்ளும் மனநிலை என இப்பாடு பொருள் நீண்டு செல்வதைக் காண முடிகின்றது. ஈழத்துப் பெண்களால் பேசப்படும் படைக்கப்படும் பெண்ணிய இலக்கியம் எவ்விதமான மேற்கத்திய கோட்பாடுகளின் தாக்கமும் இன்றி உண்மையான பெண் விடுதலையைப் பேசுவதாக இருப்பதற்குக் காரணம் போரின் வலியை உணர்ந்த அவர்களின் அனுபவமே படைப்பாக வெளிப்படுவதாலேயே ஆகும். இதனாலேயே புகலிட ஈழத்துப் பெண் கவிஞர்களின் கவிதைகள் தனித்த கவனம் பெறுகின்றன. தமிழ்ப் பெண்களை ஈனப்பிறவியாக நடத்தும் பேரினவாதிகளின் இழிச்செயலையும், அவர்களின் கொலை வெறிச்செயலையும் ஈழத்துக் கவிதைகள் வெளிப்படுத்துகின்றது.

**பெண்கள் சந்திக்கும் பாலியல் சிக்கல்கள்**

பெண்கள் வெறும் காமப்பொருள் மட்டுமல்ல. அவர்களுக்கும் மனம், உணர்வு இருக்கிறது என்பதை,

> **“எங்களைப் பாருங்கள்
> எங்கள்
> சேலையையும் ரவிக்கையையும் அல்ல
> எமது உணர்ச்சிகளை
> எங்கள்
> முகத்தையும் மார்புகளையுமல்ல
> மனக்குமறல்களை”**

(கல்யாணி- மறையாத மறுபாதி பக். 31)

என்ற கவிதை வரிகள் பிரதிபலிக்கின்றது. பெண்கள் தங்கள் சொந்த நாட்டில் மட்டுமல்ல, புலம் பெயர்ந்த நாடுகளிலும் சீரழிக்கப்படுகின்ற தன்மையினைப் பல கவிதைகள் காட்டுகின்றன. குறிப்பாக, ‘‘ஆண்’’ என்ற தலைப்பில் அமைந்த கவிதையில் பெண்ணின் விரக்தியை,

> **“அன்று
> கூலிப்படை
> எனதுடலை
> பதம் பார்த்தது
> பின்பு
> அந்நிய இராணுவம்
> தன்னை
> திருப்தி செய்தது**

இன்று
மண்ணின்
மைந்தர்கள்
நமது தேவைகளையும்
வேறுபாடேதும் இன்றி
செய்தே முடித்தனர்"

(20ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க்கவிதைகள் பக்- 78-79)

என்று கூறுவதிலிருந்து உணர்ந்து கொள்ள முடிகின்றது. கூலிப்படையினர், இந்திய இராணுவத்தினர், மண்ணின் மைந்தர்கள், ஐரோப்பியர்கள் என அனைத்து ஆண்களுமே பெண்களைச் சீரழிப்பதில் ஒன்றாகவே செயல்படுகின்ற தன்மையை இக்கவிதையின் ஊடே காண முடிகின்றது.

மேலும்,

"வீரர்களே வாருங்கள்
உங்கள் வக்கிரங்களைத்
தீர்த்துக் கொள்ளுங்கள்
என்பின்னால் என்பள்ளித்தங்கையும்
உள்ளாள்
தீர்ந்ததா எல்லாம்
அவ்வளவோடு நின்று விடாதீர்கள்
எங்கள் யோனிகளின் ஊடே
நாளைய சந்ததி துளிர்விடக்கூடும்
ஆகவே, வெடி வைத்தே சிதறடியுங்கள்"

(20ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க்கவிதைகள் பக்- 102)

என்ற சொற்களின் ஊடே சிதறி கிடக்கும். வலிகளை நாம் உணர முடிகின்றது. போரின் போது எதிரியின் தாயை, மகளைப் புணரும் விலங்குமனம் ஒவ்வொரு வீரனிடமும் இருப்பதைக் காண முடிகின்றது.

### போரினால் பெண்கள் படும் துயரம்

போரில்லா வாழ்வையே அனைவரும் விரும்புவர். ஈழத்து மக்களும் அதனையே விரும்பினர். குறிப்பாக பெண்கள் கலவரம் இல்லா அமைதியான பூமியையே பெரிதும் நேசித்தனர். நிம்மதியாக சாப்பிடவோ, தூங்கவோ கூட முடியாத வாழ்க்கை அவர்களுடைய வாழ்க்கை தூங்கும் போது கண்மூடிய கண்கள் திரும்ப திறக்காமலே போக கூடிய வாழ்க்கையைத் தான் அவர்கள் வாழ்ந்தனர். கண்ணீரில் தான் அவர்களின் வாழ்வு என்பதை,

"நாடு புகுந்தவர்கள் நாளாக நாளாக
வீடு புகுந்தெங்கள் மானம் விலைகேட்டார்
தண்ணீருக்காகத் தவமிருந்த மக்களைக்
கண்ணீர் கடலாடவிட்டுக் கதையளந்தார்"

(20ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க்கவிதைகள் பக்-283)

என்ற வரிகள் படம் பிடித்துக் காட்டுகின்றது. பகைவர்களால் ஈழத்து மக்களின் வீடு, தோட்டங்கள் மட்டுமல்ல சுற்றத்தினரும் சிதறிக் கிடக்கும் நிலையைத் தான் பார்க்க முடிகின்றது. நடு இரவில் நிம்மதியான நித்திரையைக் கூட தழுவ முடியாமையை,

"அசுரர்களை ஏவி அநியாயம் செய்வித்தார்
நிசியில் கொலை களவு நிட்டூரம் அம்மம்மா!"

(20ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க்கவிதைகள் பக்- 283)

என்ற வரிகள் வழி உணர்ந்து கொள்ள முடிகின்றது. மேலும், தூக்கத்தில் துப்பாக்கியும், இரும்புக்கம்பியும் திரும்பத் திரும்பத் தன்னைத் தாக்குவதாகவும், வீட்டைச் சுற்றிலும் பிசாசுகளின் அரவம் கேட்பதாய் உணர்வு இருப்பதாகவும் பெண் ஒருத்தி புலம்புகிறாள்.

பள்ளிப் பருவத்தில் சிட்டுக் குருவியாய் பறந்த பெண்ணின் வாழ்வு போரினால் தலைகீழாக மாறுகிறது. எப்போதும் புன்னகை தவழும் அவளது முகத்தில் சோகம் ததும்பி கண்ணீர் வடிகிறது. இதைக் கவிஞர்,

"அழகிய வஜிராவின் முகத்தில்
கண்ணீர் வடிகிறது குருதியாய்
அவளிடமிருந்து வெள்ளலரியை
யாரோ பறிக்கிறார்கள்
ஓலமிட்டுக் கிளர்ந்தெழவும்
அவளது வாயை மூடுகின்றன
முரட்டுத் துப்பாக்கிகள்"

(20ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க்கவிதைகள் பக்- 63)

என்று கலவரச் சூழலால் மனமுடையும் பெண்ணின் மனதினைக் காட்டுகிறார். கலவரத்தின் போது ஈழத்து மக்கள் மரணமடைகிறார்கள். மரணமடைந்த அனைவரும் இயற்கை மரணம், எய்தியதாக அவர்களின் உறவினர்களிடம் சான்றிதழில் கையொப்பம் வாங்கும் நிலையினை என்னவென்பது?

### துயரத்திலும் துணிச்சல் மிக்க பெண்கள்

ஈழத்தில் தன் வீடு, தன் ஊர், தன் நாடு தன் கண்முன்னே அழியும் தருவாயிலும் வாழ்க்கையின் விளம்பினை எட்டிய போதிலும் மனம் துவளாது போராடிய பல பெண்களைக் காண முடிகின்றது. தனக்கும் தன் நாட்டிற்கும் ஏற்பட்ட கொடுமைகளைக்

கண்டு நெஞ்சில் நெருப்பு கனல் மிகுந்து, கோபத்தில் விழிகள் சிவந்ததாக பெண் ஒருத்தி கூறுகிறாள். மேலும் அவள், பூ தானே என்று நினைக்காதே அந்த பூ கூட துப்பாக்கியாய் மாறி வெடிக்கும் என கூறுகிறாள். மேலும்,

**"துடிப்புகள் நிறுத்தப்பட்ட**
**இதயங்களில் எரியும் தீயைச் சுமந்த காற்று**
**எப்படி தம்மைத் தகித்ததென**
**கயவர்கள் உணரட்டும்"**

**(20ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க்கவிதைகள் பக்- 67)**

என்று கயவர்களைத் தன் நெஞ்சில் எரியக் கூடிய தீயின் காற்றே அழித்து விடும் என கோபத்தை வெளிப்படுத்துகிறாள். பெண் எப்போதும் யாருடைய அனுதாபத்தையும் பெற விரும்புவதில்லை.துவண்டு விழுந்தாலும் திரும்ப நிமிர்ந்து நிற்கவே அவள் எப்போதும் முயற்சிப்பாள். அதுபோலவே யாருக்கும் அடிமையாக வாழும் அடிமை வாழ்வையும் அவள் விரும்புவதில்லை. மலம் தின்று வாழ்வதை விட நாம் தீ தின்று சாவோம்! என்று குரல் எழுப்புகிறாள். மேலும், உன்னத வாழ்வு தமக்கு அமையாவிடில் சாம்பல் மேடுகளே தனக்குச் சொந்தமாக அமையட்டும் எனக் கூறுவதிலிருந்து அவளது துணிச்சலையும், சாவைக் கண்டு அஞ்சாத அவளது நெஞ்சுரத்தையும் அறிய முடிகின்றது..

போரே வாழ்வாகி போன சூழலில் அவள் புதியதாய் பிறக்க நினைக்கிறாள்.அவளும் புதிது பூமியும் புதிதாய் இருக்க ஆசைக் கொள்கிறாள். தன்னால் தன் விதியை மாற்ற முடியும் என நம்புகிறாள்.

**"அஞ்சியும் கெஞ்சியும்**
**பணிந்தும் குனிந்தும்**
**வாழ்வதல்ல என்விதி"**

**(20ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க்கவிதைகள் பக்- 21)**

என்று கூறுவதோடு தனக்கான வாழ்வைத் திருத்தி புதிதாய் எழுதும் அற்புதக் கதையை அனைவரும் படியுங்கள் என அறிவுறுத்துகிறாள். தனக்கு மட்டுமின்றி தன்னைச் சார்ந்தவர்களுக்கும் நம்பிக்கை உணர்வினை ஊட்டுகிறாள். சின்னஞ்சிறியவர்களிலிருந்து வயதானவர்கள் வரை அனைவரும் அணிவகுத்துச் செல்லும் திசை நோக்கினால் அங்கே நமக்கான உதயம் தெரிகிறது என அவள் கூறுவதிலிருந்து நிச்சயமற்ற வாழ்விடையே கூட தன்னையும், தன்னைச் சார்ந்தவர்களுக்கும் நம்பிக்கை உணர்வினை ஊட்டுகிறாள். சின்னஞ்சிறியவர்களிலிருந்து வயதானவர்கள் வரை அனைவரும் அணிவகுத்துச் செல்லும் திசை நோக்கினால் அங்கே நமக்கான உதயம் தெரிகிறது என அவள் கூறுவதிலிருந்து நிச்சயமற்ற வாழ்விடையே கூட தன்னையும், தன்னைச் சார்ந்தவர்களையும் நிமிரச் செய்யும் இவளது துணிச்சல் தெற்றெனப் புலப்படுகின்றது.

**தமிழ் சமூகத்தில் பெண்ணினக்குரல்**

தமிழ்ப் பெண்கள் நவீன உலகத்தில் ஆளுமை மிக்க பெண்களாக உருவெடுத்துள்ளனர். வெறும் பண்பாட்டுச் சித்திரங்களாகவும், சமூக அடிமைகளாகவும் பார்க்கப்பட்ட அவர்களின் நிலை இன்று மாறியது. நவீன உலகின் பொருளாதார அரசியல் மோதல்களிலும் உரிமைகளுக்கான போர்க்களங்களிலும் ஈழத்துப் பெண்கள் வகிக்கும் இடமானது அளப்பரியது. ஈழத்து மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தில் ஈழப் பெண்களின் பணி சொல்லிலடங்காது. போர்க்களப் போராட்டப் பணிகளிலும், மனித உரிமைக்காக குரல் எழுப்பிய எழுச்சிகளிலும் ஈழத்துப் பெண்கள் தனித்த இடத்தினைப் பெறுகின்றனர். தவிர, உலகப் பெண்களின் வாழ்க்கையிலிருந்து முற்றாக விலகி பண்பாட்டுச் சித்திரங்களாகவும் சமூக அமைப்புக்களின் மரபுச் சட்டங்களுக்குள் சிக்குண்டவர்களாகவும் இருந்த பொழுது ஈழப்புரட்சி, ஈழப்பெண்களை அத்தகைய நிலையிலிருந்து மீட்டு எடுத்தது.

ஈழத்து மண்ணில் ஈழமக்களின் போராட்டங்களில் இந்தப் பெண்கள் உழைத்த தருணங்களும் அதற்காக அவர்கள் கொல்லப்பட்ட தருணங்களும் மனித உரிமைகளுக்காக வாழ்ந்த தருணங்களுமே அதிகம். அவர்கள் போரில் சந்தித்த சிக்கல்கள் பலவாகும். பெண்கள் போரின் போது இறப்பதற்கு முன்பும், இறந்த பின்னும் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட நிலையை என்னவென்பது? அடிபட்டு, மிதிபட்டு வாழ்வின் விளிம்பு வரை சென்ற பெண்கள் கூட்டுக்குள் அடைபடாமல் கூட்டை விட்டு வெளியேறி தன் இனத்திற்காக குரல் கொடுக்க முன் வந்தனர். பண்டைய தமிழ் இலக்கியங்களிலும், வாழ்க்கை முறைகளிலும் பெண் குறித்து மிகவும் பின் தங்கிய கருத்துக்களை விதைத்த ஆண் ஆதிக்க சமுதாயத்தில் ஈழப்பெண்கள் தமிழ் வாழ்க்கைக்கும், இலக்கியத்திற்கும் புதிய அடையாளத்தினைத் தந்துள்ளனர். பல ஈழப்பெண்கள் துணிச்சலுடன் தன்னை களப்போராளி ஆக்கி சாதனை நிகழ்த்தியுள்ளனர். இன்றைய சூழலில் பெண்நிலை சார்ந்த எழுச்சிகளும், முனைப்புகளும், மிக அவசியமே. பெண்கள்

ஒன்றிணைந்து குரல் கொடுத்தாலே ஒரு புத்துலகை நிச்சயம் நாம் உருவாக்க முடியும்.

ஈழப் போராளிகள்,ஈழக்கவிஞர்கள் தனது பங்கை ஆற்றிய ஈழத்துப் பெண்களின் எழுத்துக்கள் வழி மட்டுமன்றி ஈழ ஆண் கவிஞர்களின் கவிதைகள் வழியும் பெண்வலியையும், போராட்ட உணர்வையும் நாம் அறிய முடிகின்றது. வெறுமனே போராட்டம், துயரம், அவலம், கொலை கலவரம், வன்முறை மட்டுமின்றி பெண்ணின் அழகிய காதல், ஆசை, இயற்கையை நேசிக்கும் அழகு ஆண், பெண் சமத்துவம் போன்றவற்றையும் நாம் ஈழத்துக் கவிதைகளில் காண முடிகின்றது.

## தொகுப்புரை

போர்க்காலங்களில் எதிர்த்தரப்பின் பெண்கள் இராணுவப் படையினருக்கு விருந்தாக ஆக்கப்படுவதும், பலருக்கான பாலியல் போகப் பொருளாக, பாலுறவு இயந்திரமாக ஆக்கப்படுவதும் உலகம் முழுவதிலும் நடைப்பெற்ற அனைத்துப் போரிலும் இருந்து தெரியவருகின்றது. தமிழ்ப் பெண்களை ஈனப்பிறவியாய் நடத்தும் பேரினவாதிகளின் இழி செயலையும், இவ்வாய்வு வழி தெற்றென அறிய முடிகின்றது.தாய்நிலம் தன் பெண்களின் உயிர்குடிக்கும் எமனாக மாறியதையையும் ஈழத்துப் போர் உணர்த்துகின்றது. தமிழினத்துக்கு எதிரான சிங்கள அரசின் அடக்குமுறையும், அதன் விளைவான ஆயுதப்போராட்டமே பெண்களின் வாழ்க்கையை கேள்விக் குறியாக்கிய நிலையை ஈழத்துக் கவிதைகள் வெளிப்படுத்துகின்றது.

போர் ஈழத்துப் பெண்களுக்குப் பல வாழ்வியல் பாடங்களைக் கற்றுக் கொடுத்துள்ளது.போராட்ட வாழ்வின் ஆழ அகலங்களை வெளிப்படுத்தும் ஈழத்துப் பெண் போராளிகளையும் பார்க்க முடிகின்றது. அவர்களிடத்து வெளிப்படும் சொற்களிடத்து நிதானப்பண்பையும், ஆழ்ந்த அனுபவத்தையும், துணிச்சலையும், வாழ்வினை இனி எதிர்கொள்ளும் பக்குவத்தினையும் காண முடிகின்றது.

## பார்வை நூல்கள்


1. பிரசாந்தன். ஸ்ரீ, (தொ.ஆ), 20ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க்கவிதைகள், இலங்கை பூ பாலசிங்கம் புத்தகசாலை வெளியீடு, கொழும்பு, 2006.
2. ஆனந்தகுமார். பா, புலம் பெயர்ந்தோர் இலக்கியம் பனுவல்களும் மதிப்பீடுகளும், நியூசெஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை. 2020.
3. மங்கை. அ, (தொ.ஆ) பெயல் மணக்கும் பொழுது, மாற்று வெளியீடு, சென்னை, 2007.
4. லக்ஸ்மி, மறையாத மறுபாதி (புகலிடப் பெண்கள் கவிதைத் தொகுப்பு) எக்ஸில் பதிப்பகம், பிரான்ஸ். (1992).

# வள்ளுவரின் வாக்குமூலம்

**முனைவர் க. பிரீதா**
*தமிழ்த்துறைத் தலைவர்*
*செவாலியர் டி.தாமஸ் எலிசபெத் மகளிர் கல்லூரி,பெரம்பூர், சென்னை*

**முன்னுரை**

தீந்தமிழ்நாடு உலகத்திற்கே கொடையாக வழங்கிய திருவள்ளுவப் பெருந்தகை, மாந்தரினம் முழுமைக்குமான வாழ்வியல் அறங்களை ஈரடி குறட்பாக்களின் மூலம் வழங்கியுள்ளார். வள்ளுவர் தோன்றுவதற்கு முன்பு வரையிலான தமிழ் மக்களின் அனுபவங்களையெல்லாம் உள்வாங்கித் தமது உள்ளத்தில் தோய வைத்து அறிவுப்புலம் கொண்டு ஆராய்ந்து அன்றிலிருந்து பிழிந்தெடுத்தப் பிழிவாகத் திருக்குறளை வழங்கியுள்ளார். கைதேர்ந்த மருத்துவர் ஒருவர் மருந்தைச் சிறு சிறு வில்லைகளாகச் செய்து உடற்பிணி தீர்க்கக் கொடுப்பதைப் போலக் குறள் வடிவில் வாழ்வியலுக்கான செறிவூட்டப்பட்ட மருந்தைப் பொய்யாமொழிப் புலவர் அளித்துள்ளார். முப்பாலில் அறம், பொருள் ஆகிய இருபால்களில் கருத்துக்களை மக்களுக்கு எடுத்துரைக்கும் விதத்தில் 'செய்க', 'புரிக', 'வேண்டும்', எனப் பொதுப்பட பெரும்பாலும் பேசுகின்றார். சிற்சில இடங்களில் பிறரை மேற்கோள் காட்டி 'என்ப', 'என்பர்' என்கிற வகையில் குறட்பாக்களைப் பாடியுள்ளார். காமத்துப்பாலில் பெரும்பாலும் தலைவன், தலைவி, தோழி உள்ளிட்டவர்களைப் பேசவிட்டு வள்ளுவர் பின்னால் நின்று இயக்குவார்.

தேன்தமிழ் காவலர் திருவள்ளுவனார் சமுதாய வெளியில் வெளிப்பட்டு வந்து நின்று கொண்டு மக்களை நோக்கி, நான் அறிந்த வரையில் இதுபோல் இல்லை, என் அனுபவத்தில் இதை விட நல்லதை நான் கண்டதே இல்லை என்பன போலப் பேசும் குறட்பாக்கள் 4 மட்டுமே உள்ளன. வள்ளுவர் தம்மை முன்னிலைப்படுத்திக் கொண்டு இந்த 4 குறட்பாக்களில் எந்தெந்த வாழ்வியல் கருத்துகளுக்கு சிறப்பிடம் தந்து வலியுறுத்துகிறார் என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பெறுமவற்றுள் யாம் அறிவது இல்லை**

உலகத்தில் காலம் காலமாக மக்களினம் பெருகித் தழைப்பதற்குக் காரணம் மக்கட்பேறு தான். குழந்தைப்பேறு தான் குடும்பத்தில் சந்ததி வளர்வதற்கும், சமுதாயத்தின் நலன் சார்ந்த விரிவாக்கத்திற்கும் அடிப்படையாய் அமைந்துள்ளது. ஒரு குடும்பத்தில் பிள்ளைப்பேறு இல்லாமல் போனால் அக்குடும்பத்தாரும் உறவினரும் அதை எண்ணி வருத்தமுறுவதைக் காண்கிறோம். அதனால் தான் இல்லறவியலின் தொடக்க அதிகாரமாகிய 'இல்வாழ்க்கை'யில் கணவனின் கடமைகளையும் அடுத்த அதிகாரமாகிய வாழ்க்கைத் துணை நலத்தில் மனைவியின் பொறுப்புக்களையும் (ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் இல்லற வாழ்க்கைக்கு மக்கட்பேறு இன்றியமையாதது என்பதால் இவ்வதிகாரத்தை அடுத்ததாக வைத்துள்ளார்.) எடுத்துரைக்கும் வள்ளுவர் இவற்றை அடுத்து 'மக்கட்பேறு' அதிகாரத்தை வைத்துப் பிள்ளைப்பேற்றின் அவசியத்தைப் பற்றிப் பேசுகின்றார்.

> **பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த**
> **மக்கட்பேறு அல்ல பிற[1].**

என்பது மக்கட்பேற்றில் வரும் முதல் குறளாகும். அறிவார்ந்த பிள்ளைகளைப் பெறுவது தான் பேறுகளுள் சிறந்த பேறாகும். பெறக்கூடிய இது தவிர வேறு எந்தப் பேறுகளும் சிறந்தவையாக நான் அறியவில்லை என வள்ளுவப் பெருந்தகை தானே முன்வந்து சாட்சியாக நின்று பேசும் முதலிடமாக இக்குறட்பா அமைந்துள்ளது. பிள்ளைப்பேறு சந்ததிப் பெருக்கத்திற்குத் துணை செய்வதாய் அமைந்திருந்தாலும் அறிவார்ந்த பிள்ளைகளைப் பெறாவிட்டால் குடும்பமும், சமுதாயமும் மூடத்தனத்தின் அடர்ந்த காடாக மாறி இருள் மண்டிக் கிடக்கும் அல்லவா? அதனால்தான் இந்த உலகம் ஒளிவீசித் திகழ அறிவறிந்த மக்கட்பேறு அவசியம் என்கிறார் குறளாசான். இந்த பாக்கியத்தைத் தவிர வேறு சிறந்த பாக்கியம் எனக்குத் தெரிந்த வரையில் இல்லை என்னும் பொருள்படப்,'பெறுமவற்றுள் யாம் அறிவது இல்லை' என்று சமுதாய வீதியில் வந்து நின்று தன் முகத்தைக் காட்டி, மதிநுட்பம் வாய்ந்த பிள்ளைகளை வார்த்தெடுத்து நன்னடை நல்குவது பெற்றோர், அனைவரின் கடமையாகும் என வலியுறுத்திப் பேசுகின்றார்.

ஒரு நாட்டின் மனித வளம் என்பது வெற்று மக்களைக் குறிப்பது அன்று. பல்துறை அறிவு வாய்க்கப் பெற்ற மக்களே சிறந்த மனித வளமாகவும், நாட்டின் செல்வமாகவும் கருதப்

படுவர். அதைத்தான் பொதுமறை தந்த தெய்வப்புலவர், 'அறிவறிந்த மக்கட்பேறு' எனச் சுட்டுகின்றார். புறநானூற்றில் வரும் புரவலப் புலவராகிய ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் தாம் இயற்றிய பாடலில் ஒருகுடியில் பிறந்த புதல்வர்கள் பலருள்ளும் கல்வியறிவு இல்லாத மூத்த பிள்ளையைப் புறக்கணித்து விட்ட அறிவார்ந்த இளையவனின் அறிவுரைப்படி 'அரமலும் ஆட்சி புரிவார்' எனக்கூறி வள்ளுவரின் அறிவறிந்த மக்கட்பேற்றுக்கு அறம் சேர்க்கின்றார்.

**ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்**
**மூத்தோன் வருக என்னாது அவருள்**
**அறிவுடை யோன் ஆறு அரசம் செல்லும்**[2]

என்னும் புறப்பாடலடிகள் இங்கு நோக்கத்தக்கவை. வீட்டிற்கும், சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் அறிவறிந்த மக்கள் மிகமிக இன்றியமையாதவர்கள் என்பதனால் வள்ளுவப் பெருந்தகை தாமே முன்னால் வந்து, 'யாமறிவது இல்லை' எனக் கூறி உலகிற்கு அறிவறிந்த மக்களின் தேவையை உணர்த்துகின்றார் என்றால் அது மிகையாகாது.

**யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை**

வான்புகழ் கொண்ட வள்ளுவனார் தம்மை வெளிப்படுத்திக் காட்டும் இரண்டாவது இடம் வாய்மை அதிகாரத்தில் நிலை கொண்டுள்ளது.

**யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்**
**வாய்மையின் நல்ல பிற**[3]

என்பது அக்குறட்பா. வாய்மை என்பது நாம் பேசும் பேச்சில் உண்மைத்தன்மை மிளிர்வதைக் குறிப்பதாகும். எந்த வகையிலும் பிறர்க்குத் தீங்கு பயவாத வகையில் பேசுவதே வாய்மை என வள்ளுவர் நயமான இலக்கணத்தை எடுத்துரைக்கின்றார். வாய்மை தவறிப்பொய் பேசுகிற போது அப்பொய்யே எல்லாத் தீமைகளுக்கும் ஊற்றுக் கண்ணாகி விடுகின்றது. கொலை, களவு, காமம், வஞ்சனை முதலிய எல்லாக் குற்றங்களும் பொய்மையால் தான் வளர்கின்றன. ஆகவே தான் வள்ளுவர் வாய்மையின் அவசியத்தை மனித சமுதாயத்திற்கு வெளிப்படுத்த வேண்டி மேற்கண்ட குறட்பாவில் அவரே வெளிப்பட்டுத் தோன்றுகின்றார். 'யாம் அனுபவப் பூர்வமாக ஆராய்ந்து கண்டவற்றுள் வாய்மை பேசுவதை விட வேறெந்தப் பண்புகளும் சிறந்தவையாகத் தோன்றவில்லை' என்பது செந்நாப்போதாரின் செவ்விய வாக்கு. உள்ளத்து எண்ணங்கள் செம்மையாக இருக்குமானால் அது 'உண்மை' எனப்படும். பேசுகின்ற பேச்சில் நேர்மை துலங்குமானால் அது வாய்மை எனப்படும். உண்மையை நினைத்து வாய்மையைப் பேசி அதுவே செயலில் வெளிப்படுமானால் அது மெய்மை எனப் பெயர்பெறும். இந்த மூன்றும் ஒரே நேர்கோட்டில் அமையும்படி ஒழுகும் மனிதன் உத்தமனாகின்றான். தமிழ்மொழி தூய எண்ணம், தூய சொல், தூய செயல் ஆகிய மூன்றுக்கும் தனித்தனிப் பெயர்களை வகைப்படுத்தி வைத்திருப்பது நினைந்து இன்புறத் தக்கதாகும். வடமொழி மேற்கண்ட மூன்றையும் குறிக்கச் 'சத்தியம்' என்னும் பொதுச் சொல்லைக் கொண்டுள்ளது.

யாமெய்யாக் கண்டவற்றுள் வாய்மையின் நல்லபிற, எனைத்தொன்றும் இல்லை என்று வள்ளுவப் பெருந்தகை ஏன் உரைக்கின்றார் என நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். களவு செய்யும் ஒருவன் தாம் களவாடியதை ஒத்துக்கொண்டு வாய்மை உரைப்பானேயானால் அவனிடம் அக்குற்றம் தொடராமல் தடைபட்டுப் போகும். அது போலவே கொலை, காமம், முதலிய தீமைகளில் ஈடுபடுவோரையும் வாய்மையானது தடுத்தாட்கொள்ளும் தகுதியைப் பெற்றுள்ளது. இத்தகைய குற்றங்கள் குறையும்போது தனிமனித ஒழுக்கமும் சமுதாய வாழ்க்கையும் மேம்பாடு அடைகின்றன. அவற்றையெல்லாம் தமது வாழ்க்கை அனுபவத்தால் கண்டுணர்ந்த வள்ளுவனார் சமுதாயத்தை நோக்கி, 'என்னுடைய அனுபவத்தினால் எடுத்துரைக்கின்றேன். வாய்மையைக் காட்டிலும் சிறந்த பண்பு வேறெதும் இல்லை' என உறுதிப்பட மொழிகின்றார். இக்குறட்பாவின் தொடக்கத்தில் வரும் 'மெய்யாக் கண்டவற்றுள்' என்னும் தொடர் சிந்தனையைத் தூண்டுவதாகும். மெய் என்பது முதலில் உடலைக் குறித்து அதற்கடுத்து மெய்யினால் செய்யப்படும் செயல்களைக் குறித்து நிற்கின்றது.

செயல்கள் பின்னர் அனுபவமாக மாறுகின்றன. அதனால் தான் யாமெய்யாக் கண்டவற்றுள் என்னும் தொடரையிட்டு வள்ளுவர் தாம் வாழ்க்கை அனுபவத்திலிருந்து ஆராய்ந்து கண்டதில் வாய்மையே சிறந்தது எனப் பேசுகின்றார்.

அண்ணல் காந்தியடிகள் தம் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம் எனக் கூறித் தமது வாழ்க்கை வரலாற்றைச் சத்திய சோதனை என்னும் மெய்மை அனுபவ நூலாக வழங்கினார். காந்தியடிகளை மாற்றிய அரிச்சந்திரன் வாழ்க்கை உண்மை, வாய்மை, மெய்மை ஆகிய மூன்று பண்புகளையும் ஒரே நேர்க்கோட்டில் நிறுத்திய சத்திய மேம்பாட்டு வாழ்க்கையாக விளங்குகின்றது. விசுவாமித்திரன் மயானத்தில் பணியாளராக நின்ற அரிச்சந்திரனிடம்

வந்து ஒரேயொரு பொய் கூறினால் இழந்த நாட்டையும், செல்வத்தையும் திருப்பி அளிப்பதாக இறுதியாகக் கெஞ்சிய போதும் அரிச்சந்திரன் பொய்யுரைக்க மறுத்து விட்டான். அவன் விசுவாமித்திரனை நோக்கி, நான் சத்தியத்தை மேற்கொண்டு ஒழுகுவதால் எனது நாட்டை இழந்தேன். நிதியை இழந்தேன். பெற்ற மகனை இழந்தேன். உண்மை பேசினால் மோட்ச இன்பம் கிட்டாது என்னும் நிலை வந்தாலும் சத்தியத்திலிருந்து தவற மாட்டேன் என உறுதிப்பட உரைக்கின்றான். விசுவாமித்திரன் அரிச்சந்திரனிடம் தோல்வியடைந்து சத்தியத்திற்குத் தலைவணங்குகின்றான். இந்நிகழ்வை அரிச்சந்திர புராணத்தில்

**பதியிழந்தனம் பாலனை இழந்தனம் படைத்த**
**நிதியிழந்தனம் இனி நமக்கு உளதென நினைக்கும்**
**கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலேம் என்றார்**
**மதியிழந்து தன் வாய் இழந்து அருந்தவன் மறைந்தான்[4]**

என்று வீரகவிராயர் பாடி மகிழ்கின்றார். உண்மை உரைப்பதால் ஒருவன் தெய்வ நிலைக்கு உயர முடியும் என்பதை மேற்கண்ட நிகழ்வுகள் தெற்றென விளக்குகின்றன. அதனால் தான் வள்ளுவப் பெருமான் தாமே வெளிப்பட்டுத் தோன்றி, 'யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை' எனக் கூறி வாய்மைக்கும் நற்சான்றிதழ் வழங்கியுள்ளார்.

**இரப்பன் இரப்பாரை எல்லாம்**

வள்ளுவர், உண்ண உணவின்றி, பிறரிடம் யாசிப்பவர்களுக்கு இல்லை எண்ணாது வழங்க வேண்டும் என்ற கருத்தை இரவு என்கின்ற தலைப்பிலான அதிகாரத்தில் எடுத்துரைக்கிறார். அடுத்ததாக இரவச்சத்தில் யாசிப்பதன் இழிவைப் பற்றியும், அவ்வாறு யாசிக்கும் போது இல்லை என்பாரின் முன்னின்று பிச்சை கேட்கக்கூடாது என்ற கருத்தை அறிவுறுத்தியும் பாடியுள்ளார்.

**இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்**
**கரப்பாரை இரவன்மின் என்று[5]**

செல்வர்களிடம் சென்று ஒருவர் பொருள் தரும்படி கேட்பது வழக்கமாக இருந்து வந்தது. ஆனால் பிச்சை எடுப்பவர்களிடமே சென்று பிச்சை கேட்கும் தன்மை உலகத்தில் எங்கேனும் உள்ளதா? என்றால் இல்லையெனும் விடைதான் கிடைக்கும். உலகப் பொதுமறை வழங்கிய தெய்வப்புலவர் திருவள்ளுவர் பிச்சைக்காரர் எல்லோரிடமும் சென்று ஒரே நேரத்தில் பிச்சை கேட்கின்றார். அத்தகைய நிலை அவருக்கு ஏன் வந்தது என்கிற குழப்பம் ஏற்பட வள்ளுவரிடமே சென்று கேட்டு விடுவோம். வள்ளுவர் யாசிக்கும் பிச்சை இதுதான்.

'இரவலர்களே, நீங்கள் யாசிக்கும் போது வெறுப்புடன் பொருளை மறைத்து இல்லையென மறுத்துரைக்கும் கருணையற்றவர்களிடம் சென்று எந்தப்போதிலும் யாசிக்காதீர்கள், நான் இந்தப் பிச்சையைத்தான் உங்கள் எல்லோரிடமும் இரந்து வேண்டுகின்றேன் என்கிறார்.

இது, அவர் பொருட்டான பிச்சை அன்று. இரவலர் சமூகத்தின் மீது ஏற்பட்ட இரக்கத்தின் காரணமாகக் கேட்கப்பட்ட பிச்சை. அடுத்தவரிடம் சென்று யாசித்து அவர்கள் மறுத்துரைக்கும் போது யாசகர்க்கு உண்டாகும் முகவாட்டத்தையும் உடல் கூனிக் குறுகுவதையும் ஏற்படும் மன வருத்தத்தையும் வாழ்க்கையின் மீதான சலிப்பையும் கண்ணெதிரே கண்டபின் வள்ளுவர் அந்த இழிநிலையைத் தடுக்க வேண்டும் என்னும் சமூக அக்கறை அவர் நெஞ்சில் கவலை கொள்கிறது. பிச்சை எடுக்க வேண்டாம் எனப் போதிக்கும் வள்ளுவரே பிச்சைக்காரர்களிடம் பிச்சை கேட்கும் நிலைக்கு அந்த அக்கறை கொண்டு வந்து விடுகின்றது. அதனால்தான் குறள் வழியாக அவரே வெளிவந்து 'இரப்பன் இரப்பாரை எல்லாம்' என யாசிக்கத் தொடங்கி விடுகின்றார்.

மறைத்து வைத்துக்கொண்டு இல்லை என்பவர்களை வள்ளுவர் புறக்கணிக்கச் சொல்வதில் மிகுந்த பொருள் இருக்கிறது. யாசிப்பவர்கள் தாம், இரக்கம் என்னும் பயிரை விளைவிக்கும் விவசாயிகளாகத் திகழ்கிறார்கள். கொடுப்பவர்களின் நெஞ்சம் எனும் வயல்களில் கருணைப் பயிர் பச்சைப்பசேலென்று செழித்து வளர்ந்து ஈகைக்கதிர் முற்றி தலைகுனிந்து குலுங்குவதற்கு இரவலர் எனும் விவசாயிதான் காரணம். இந்த இரக்க குணம் இருப்பதனால் தான் மனிதன், மனிதனாக வாழ முடிகின்றது. கொடுக்காத மனிதர்களை உயிரற்ற மரப்பாறைகள் என்கிறார். வள்ளுவர் இரக்கம் இல்லாதவர்களை உயிர் இல்லாதவர்கள் என்று விளக்குகிறார். இரக்கம் இல்லாதவர்கள் வாழ்ந்தும் வாழாதவர்கள் என்று கொள்வது பொருத்தமாய் இருக்கும். வள்ளல்களை உருவாக்கும் வள்ளல்கள் யாசகர்கள் என்றால் அது மிகையாகாது. அந்த இரக்கம் இல்லாதவர்களைப் பார்த்து, கரப்புடைய நெஞ்சத்தாரைப் புறக்கணியுங்கள். உங்களுக்கு எடுத்து கொடுப்பவர்களுக்கு வள்ளல் பட்டம் வழங்கும் சமுதாயமானது ஈயாத புல்லர்களுக்குக் கருமிப் பட்டம் வழங்கட்டும். கருமிகளின் மனங்களை நீங்கள் எவ்வளவுதான் தோண்டினாலும் அவற்றில்

அன்பு நீர் துளியேனும் சுரக்காது என்று வள்ளுவர் எச்சரிக்கை செய்கின்றார். மேற்சொன்ன அனைத்தையும் இதயத்தில் இருத்தியதனால் தான் இரப்பன் இரப்பாரை எல்லாம் என்று சமுதாய நன்மைக்காக யாசகர்களிடம் யாசிக்கின்றார் என்பதைப் புரிந்து கொண்டால் அக்குறட்பாவின் இன்றியமையாமை தெற்றென விளங்கும்.

**யாம் கண்டது இல்**

பொருட்பாலின் இறுதியிலுள்ள கயமை அதிகாரத்திலும் வள்ளுவர் தம்மை வெளிப்படுத்திக் கொண்டு பேசத்தொடங்குகின்றார். மக்கள் சமுதாயத்தை நுட்பமாக ஆராய்வதிலும் ஆராய்ந்து கண்ட உண்மைகளை சுருங்கிய சொல்லால் தெளிவாக எடுத்துரைப்பதிலும் வள்ளுவருக்கு நிகர் வள்ளுவரேதான். அப்படிப்பட்டவர் நல்ல மனிதருக்கும் நாசச்செயல்களை மனம் கூசாமல் புரியும் கீழ்மக்களுக்கும் இடையிலுள்ள வேற்றுமையை உரைக்கும் போது திகைத்து நிற்பதைக் காண்கிறோம். அந்தத் திகைப்பின் வெளிப்பாடு தான் பின்வரும் குறட்பா.

**மக்களே போல்வர் கயவர் அவரன்ன**
**ஒப்பாரி யாங்கண்ட தில்[6]**

வள்ளுவர் நல்லவர்களையும் பார்க்கின்றார். தீயவர்களையும் பார்க்கின்றார். நல்லவர் தீயவர் என்னும் பாகுபாட்டை அவர்களின் செயல்பாட்டை வைத்துத்தான் கணிக்க முடிகின்றது. பார்த்த மாத்திரத்தில் இவர் நல்லவர், இவர் தீயவர் எனப் பிரித்தறிய முடிவதில்லை. இந்தத் திகைப்புத்தான் வள்ளுவரை, மக்கள் கயவர் ஒப்புமையில் தடுமாற வைக்கின்றது. கயவரும் நல்ல மக்களைப் போலவே இருக்கிறார்களே. இந்த ஒப்புவமையை வேறு எதிலுமே என்னால் காணமுடியவில்லையே என அயர்ந்து போய் விடுகின்றார். கயவர்களைப் பார்த்தால் மனிதர்களுக்குரிய அம்சம் அனைத்தும் இருக்கின்றன. அவர்களோடு பழகி உறவாடிய பிறகுதான் அவர்களின் சுயரூபம் தெரிய வருகின்றது. அதற்குள் மனத்துன்பம் பொருள் இழப்பு முதலிய தீய அனுபவங்களைப் பெற்று நல்லவர்கள் துயரடைய நேருகின்றது. மக்களிடமிருந்து கயவர்களை வேறுபடுத்திக் காட்டும் உவமைகளைத் தேடித்தேடிச் சோர்ந்து போகும் வள்ளுவர், மக்களைப் போலவே கயவர்களும் இருக்கிறார்களே இத்தகைய ஒப்புமை கொண்ட இணைகளை விலங்கு, பறவை முதலிய எந்தச் சாதியிலும் நாம் கண்டதில்லை என ஆச்சரியப்படுகின்றார். இந்த ஆச்சரியம் தான் அவரை ''யாம் கண்டது இல்'' என வெளிவந்து பேச வைக்கிறது. வள்ளுவரையே திகைக்க வைத்த கயவர்களால் தான் இன்றும் நல்லவர்கள் பலவற்றை வாழ்க்கையில் இழந்து அனுபவக் கொள்முதலை மட்டும் லாபப் பயனாக அடைந்து கொண்டு இருக்கின்றார்கள் என்றால் அது மிகையாகாது.

**முடிவுரை**

**என்றும் புலராது யாணர் நாள் செல்லுகினும்**
**நின்றலர்ந்து தேன் பிளிற்றும் நீர்மையதாய்[7]**

என விளங்குவது திருக்குறள். இத்தகைய பெற்றிவாய்ந்த பனுவலை வழங்கிய திருவள்ளுவனார் 1330 குறட்பாக்களுள் நான்கில் மட்டும் தன்மை இடத்தில் வைத்து யாம் எனக் கூறுவதை நோக்குங்கால் அவர் சொல்ல வந்த கருத்தின் சிறப்பும் வலிமையும் நன்கு புலனாகின்றன.

உலக வாழ்வியல் வளர்ச்சி முறைக்கு குழந்தைப்பேறு அவசியமானது. வள்ளுவர் அதையும் தாண்டி குடும்பம் ஓங்குவதற்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் அறிவார்ந்த பிள்ளைகளே இன்றியமையாதவர்கள் எனக் கருதுவதால் தாமே முன்வந்து ''பெறுமவற்றுள் யாம் அறிவதில்லை'' எனப் பேசுகின்றார். ''வாய்மையே வெல்லும்'' என்னும் கொள்கை நின்று நிலைத்து விளங்குவதாலும் வாய்மை கருகிப் பொய்மை பெருகுவதால் சமுதாயம் சீர்கெட்டு தாழ்நிலை அடைவதனாலும் திருவள்ளுவப் பெருந்தகை தம்மை முன்னிருத்தித் தம் அனுபவத்தால் ஆராய்ந்து கண்டமட்டில் வாய்மையை விடச் சிறந்தது வேறேதும் இல்லை என்னும் கருத்தமைய ''யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை'' எனக் கூறி வாய்மைக்கு நற்சான்று வழங்கியுள்ளார் என்பது பெறப்படுகின்றது.

உள்ளம் வறண்டு போய் உதவியென யாசித்து வருவோரை உதறி விடும் ஈயாத கருமிகள் மீது வள்ளுவருக்கு அறச் சீற்றம் பொங்குகின்றது. இதன் காரணமாகத்தான் அத்தகைய கருமிகளிடம் பிச்சை கேட்காமலே ஒதுக்கித் தள்ளுமாறும் அதுதான் கருமிகளுக்கான தண்டனை எனவும் கேட்டுக்கொள்ளும் விதத்தில் இரவலர்களிடமே சென்று யாசிக்கத் தொடங்குகின்றார். அதைத்தான்,

'இரப்பன் இரப்பாரை எல்லாம்' என்னும் குறள் வாசகம் வெளிப்படுத்துகின்றது. இந்த யாசிப்பும் கூட சமுதாய அக்கறையினால் ஏற்பட்டது என்பது புலப்படுகின்றது. கயவர்களிடமிருந்து மனிதர்களை வேறுபடுத்திக் காட்ட வள்ளுவர் உவமைகளைத் தேடும் முயற்சியில் ஈடுபடுகின்றார். திருக்குறள்

முழுவதும் உவமைகளை இட்டு நிரப்பி கருத்துக்களுக்கு அழகூட்டும் வள்ளுவருக்கு கயவர்களைச் சுட்டும் வகையில் உவமைப் பஞ்சம் ஏற்படுகிறது. மக்களையும், கயவரையும் உற்றுப் பார்த்து வேறுபாடு தெரியாமல் போகவே,'மக்களே போல்வர் கயவர்' எனக் கூறிவிடுகின்றார். இவர்களைப்போல ஒப்புமை கொண்ட வேறு எவரையும் வேறு எங்கும் அவரால் காண முடியவில்லை. ஆகவே, "அவரன்ன ஒப்பாரி யாங்கண்ட தில்" என்று இயலாமை கலந்த வியப்புணர்வை வெளிப்படுத்துகின்றார். யாம் கண்ட தில் என்று வள்ளுவர் வெளிப்பட்டு நின்று பேசும் இந்த குறட்பா கயவர்களை இனம் காண்பதில் சமுதாயம் ஏமாந்து விடாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துவதாய் அமைந்துள்ளது.

புலவர்கள் இலக்கியம் படைக்கும்போது முக்கியமான தருணங்களில் தாங்கள் வெளிப்பட்டுப் பேசுகிற வழக்கம் அவ்வப்போது நிகழும். அந்த வகையில் வள்ளுவரும் இயங்கியிருக்கின்றார் எனக் கொள்ளலாம். திருக்குறள் எல்லாப் பொருளையும் பேசும் நூலாகையால் நுணுகி ஆய்ந்து திட்ப நுட்பங்களை வெளிக்கொணர ஏராளமான களங்கள் உண்டு. அறிஞர் பெருமக்கள் ஆய்வில் ஈடுபட்டு ஒளிநெறி காண்பார்களாக.

**அடிக்குறிப்புகள்**

1. திருக்குறள், 27ஆம் பதிப்பு, 2011.
2. புறநானூறு முதல் பதிப்பு, 1997.
3. திருக்குறள், 27ஆம் பதிப்பு, 2011.
4. அரிச்சந்திரபுராணம், 1961.
5. திருக்குறள், 27ஆம் பதிப்பு, 2011.
6. மேற்படி
7. மேற்படி

**துணை நூற்பட்டியல்**

1. திருக்குறள் - உரையுடன்
   புலியூர்க் கேசிகன்
   27ஆம் பதிப்பு, 2011
   பூம்புகார் பதிப்பகம், பிரகாசம் சாலை,
   சென்னை.
2. புறநானூறு - உரையுடன்
   புலவர் அ.மாணிக்கனார்
   முதல் பதிப்பு, 1997
   வர்தமானன் பதிப்பகம், தி.நகர்
   சென்னை
3. அரிச்சந்திர புராணம்
   வீரன் கவிராயர்
   சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1961
   சென்னை

# கண்ணக்குமார விஸ்வரூபன் படைப்புகளில் பெண்கள்

**மு. பிரியதர்ஷினி**
*முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், இக்கால இலக்கியத்துறை, தமிழியற்புலம்*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை*

**முனைவர் வை. இராமராஜபாண்டியன்**
*நெறியாளர் மற்றும் புலத்தலைவர், இக்கால இலக்கியத்துறை, தமிழியற்புலம்*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை*

**முன்னுரை**

பெண்களை மையமாக கொண்டு பல்வேறு விதமான படைப்புகள் படைக்கப்பட்டு வருகின்றன. சமுதாயத்தில் பெண்களுக்கு நிகழக் கூடிய நிகழ்வுகளைப் பற்றி கண்ணக்குமார விஸ்வரூபன் தனது படைப்புகளில் எடுத்துரைத்துள்ளார். படைப்பாளர் பெண்களுக்கு ஏற்படக் கூடிய இன்னல்கள் பற்றியும், போராடும் தன்மைகள் பற்றியும் விளக்கியுள்ளார். படைப்பாளரின் படைப்புகளின் வழி சமுதாயத்தில் பெண்களின் வாழ்வியல் முறையினை இக்கட்டுரையில் காண்போம்.

**பெண்ணியம்**

பெண்ணியம் என்பது உலகளாவியது. ஒவ்வொரு காலக் கட்டத்திலும் பெண்களின் முன்னேற்றத்தை பற்றியும் அவர்களுக்கு ஏற்படுகின்ற அனைத்து விதமான இன்னல்கள் பற்றியும் எடுத்துரைக்கப்படுகிறது.

> **“Feminismஎன்ற ஆங்கிலச் சொல் Femina என்ற இலத்தின் சொல்லிருந்து மருவி வந்ததாகும்.1889 வரை womanism என்ற சொல் பெண்களின் உரிமைப் பிரச்சினையையும் அதனடிப்படையிலான போராட்டத்தையும் உணர்த்தப் பயன்படுத்தப்பட்டது. 1890 ஆம் வருடம் ‘Womanism’ என்ற சொல்லினிடத்தை ‘Feminism’ என்ற சொல் பெற்றது 1894 ஆம் ஆண்டு வெளிவந்த ஆக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியில் முதன் முதலில் இச்சொல் எடுத்தாளப்பட்டது.**
>
> (பெண்ணியம் ப-11)

‘பெண்ணியம்’ என்ற சொல் ஆண்களுக்கு பெண் நிகரானவளே எந்த நிலையிலும் எந்த காலத்திலும், தன்னிச்சையாக சிந்திக்க கூடிய ஆற்றலும் செயல்படக் கூடிய திறமைகளும் பெற்றவளே ஆவாள். பெண்களின் உரிமைகளுக்கும் தாக்குதலுக்கும் குரல் கொடுக்க உருவாக்கப்பட்டதே பெண்ணியம் ஆகும்.

**கல்வி கற்க ஏற்படும் இடர்பாடுகள்**

பெண்குழந்தைகளின் கல்வியானது பெற்றோர்களால் தடுக்கப்படும் ஸ்ரீ முறையினைப் பற்றி படைப்பாளர் ‘வெளிச்சத்திற்கு வராதவள்’ என்னும் சிறுகதைத் தொகுப்பில் எடுத்துக்காட்டியுள்ளார். தங்களின் குடும்ப வறுமையின் காரணமாகவும், கல்வியின் முக்கியத்துவம் பற்றி உணராத நிலையிலும் உள்ளனர் என்பதை

> **“பொட்டக் கழுதைங்களுக்கு எதுக்கு மச்சான் படிப்பு, கிடிப்பு எல்லாம்..? எவன் வூட்டு அடுப்படிக்கோ கஞ்சி காய்ச்சப் போவுதுங்க! அடுப்படி உத்தியோவத்துக்கு படிப்பெல்லாம் எதுக்கு..?**
>
> (வெளிச்சதிற்கு வராதவள் ப-3)

பெண்களின் கல்வியானது வீட்டுச் சூழலினாலும் பெற்றோரின் அறியாமையிலும் பெண்களின் வளர்ச்சியானது தடுக்கப்படுகிறது. பெண்ணானவளுக்கு கல்வி என்பது தேவையில்லாத ஒன்றாகவும், திருமணமாகி வேறொரு குடும்பத்திற்கு சென்று அடுப்படியில் தான் வாழப் போகிறாள் அவளுக்கு கல்வியானது தேவையில்லை என்று மறுத்து பேசுகிறார். பெண் பிள்ளைகள் வளர்ச்சி அடைந்ததும் தங்களுடன் காட்டு வேலைகளுக்கும் கழனி வேலைகளுக்கும் அழைத்துச் சென்று கூலியில் அதிகப்படியான வருவாயினை பார்க்கலாம் என்ற எண்ணத்தில் உள்ளனர். கல்வியின் முக்கியத்துவம் உணராத பெற்றோர் பெண் பிள்ளைகளின் எதிர்காலத்தை அடுப்படியில் முடக்குகின்றனர் என்பதை படைப்பாளர் எடுத்துரைத்துள்ளார்.

பாரதியார் பெண்களுக்கு கல்வி என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும் என்பதை எடுத்துரைத்துள்ளார்.

> **“பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி**
> **பேணி வளர்த்திடும் ஈசன்**
> **மண்ணுக் குள்ளே சிலமூடர் - நல்ல**
> **மாத ரறிவைக் கெடுத்தார்.**
> **கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்திக்**
> **காட்சி கொடுத்திட லாமோ?**
> **பெண்க ளறிவை வளர்த்தால் - வையம்**
> **பேதமை யற்றிடுங் காணீர்.”**
>
> (பாரதியார் கவிதைகள் ப-201)

உலகத்தை காக்க கூடிய ஈசன் பெண்களுக்கு நல்லதொரு அறிவினை வழங்கியுள்ளார். அதனை அழிக்கும் விதமாக மண்ணில் சில மூடர்கள பெண்ணினத்திற்கு எதிராக செயல்பட்டு வருகின்றனர். கணகளில் இரண்டில் ஒன்றை அழித்து காட்சி படுத்த முயலுகின்றனர். அவை தவறான செயல். பெண்களின் அறிவினை வளர்த்தால் அவ்வுலகமே நல்ல அறிவை பெற்ற அறிஞர்கள் நிறைந்தவுலகமாக மாறிடும் என்று பெண் கல்விக்காக முரசு என்பதில் முக்கியத்துவம் கொடுத்து பாடியுள்ளார்.

கல்வியினை முக்கியத்துவத்தை அதிவீரராம பாண்டியன் தனது நூலில் எடுத்துக் கூறியுள்ளார்.

**"கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே."**

**(நீதி நூல் தெளிவுரை ப-38)**

கல்வியைக்கற்றுக் கொள்வது மிகவும் நன்மை தருக் கூடியதாகும். பிச்சை எடுக்க நேரிட்டாலும் கல்வி கற்பது நன்மையே அளிக்கும். ஏன்பதை எடுத்துக் கூறியுள்ளார்.

கல்வி கற்றவருக்கு சமுதாயத்தில் கிடைக்க கூடிய நன்மையினை அதிவீரராம பாண்டியன் எடுத்துக் கூறியுள்ளார்.

**"எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும்**
**அக்குடியில் கற்றோரை மேல்வருக என்பர்."**

**(நீதி நூல் தெளிவுரை ப-38)**

எக்குலத்தில் பிறந்தாலும், யாராக இருந்தாலும் கற்றவரை எல்லோரும் மதிப்போடு வரவேற்பார்கள் என்பதை விளக்கியுள்ளார்.

**பெண்கள் சமுதாயத்தில் சந்திக்கும் இன்னல்கள்**

பெண்களுக்கு நடக்கும் கொடுமைமைகளை படைப்பாளர் 'பார்வைகள்' என்னும் சிறுகதையில் சமுதாயத்தில் பெண்களை ஆடவர்கள் நோக்கும் முறையினையும் நடக்கும் நிகழ்வுகளையும் பிள்ளைவாள் என்னும் முதியவர் மூலமாக எடுத்துக் கூறுகிறார். அவை

**"தன்னோட தாயையும், சகோதரியையும் மானுட ஜீவிகளாப் பாக்குறாங்க..! ஆனா பிற பெண்களை தங்களோட அனுபோகத்துக்காகப் படைக்கப்பட்ட போகப் பொருளா.. ஜட வஸ்துவா.. சதை இச்சையோ நோக்குறாங்க..! காமுகர்களோட இந்த இழிநோக்கு என்னைக்கித்தான் மாறப் போகுதோ.. தெரியல..!"**

**(வெளிச்சத்திற்கு வராதவள் ப-66)**

பெண்கள் சமுதாயத்தில் தனியாக எங்கும் சென்று வர முடியாத சூழலில் வாழ்வினை நகர்த்துகின்றனர். ஆண்கள் தன்னை பெற்றவளையும் தன்னுடன் பிறந்த பெண்களையும் தவிர மற்ற பெண்களை தவறான கண்ணோட்டத்தில் பார்க்கின்றனர். படைப்பாளர் சமுதாயத்தில் நிகழக் கூடிய பெண்களின் வாழ்வியலை எடுத்துக்காட்டியுள்ளார்.

**"பெண்ணினத்துக்கு எதிரா ஏன் சில ஆண்கள் இப்படி உன்மத்தம் கொண்டு அலையிறாங்க..? பெண்ணிடமிருந்தே பிறக்கிறாங்க பெண்களோடவே வாழுறாங்க..! ஆனா பெண்ணினத்தை இரையினமா நினைச்சி இரக்கமில்லாத வேட்டையாடுறாங்க..! பெண்களின் உடல் அங்கங்களை மட்டுமே வெறியோட பாக்குற அவங்க.. அந்த சதை, எலும்பாலான உடம்புக்குள்ள, ஆசாபாசங்கள் நிறைஞ்ச தங்கள் இதயத்தைப் போல ஒரு இதயம் துடிச்சிக்கிட்டிருக்கிறதை ஏன் நினைச்சிப் பாக்கத் தவறுறாங்க..? "**

**(வெளிச்சத்திற்கு வராதவள் ப-66)**

பெண்களுடன் தங்களின் வாழ்க்கையை வாழும் ஆண்கள் பெண்களின் மனநிலையினை புரிந்து கொள்வதில்லை. தங்களுடன் பிறந்தவர்களை தவிர மற்ற பெண்களை போகப் பொருளாக பார்க்கின்றனர். ஆண்களின் இரக்கமற்ற பார்வையினாலும் செயலினாலும் பெண் பிள்ளைகளின் வாழ்வானது முற்றிலும் பாதிக்கப்படுகிறது. பெண்களின் வாழ்க்கையில் அவர்களுக்கான எதிர் பார்ப்புகள், ஆசைகள், கடமைகள் அனைத்தும் முடக்கப்படுக்ன்றனர். எழுத்தாளர் சமுதாயத்தில் பெண்களுக்கு நிகழக் கூடிய கொடுமைகளை தனது படைப்பின் மூலமாக வெளிப்படுத்துகிறார். பெண்களுக்கு ஏற்படக் கூடிய இன்னல்களையும் இடர்பாடுகளையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

பாவேந்தர் பாரதிதாசன் பெண்களின் மீது தவறான பார்வை படும் போது அதனை எதிர்க்கும் முறையினை குடும்ப விளக்கு என்னும் பகுதியில் எடுத்துக் கூறியுள்ளார்.

**''தனித்து வரும் போது – கெட்ட**
**தறுதலை கண் வைத்தால்**
**இனிக்க நலம் கூறு – பெண்ணே**
**இல்லாவிடில் தாக்கு''**

**(தமிழ்க் கவிதைகளில் பெண்கள். ப-267)**

பெண்கள் தனிமையிலையில் வெளியில் வரும் போது ஏற்படக் கூடிய இன்னல்களை கண்டு அச்சம் கொள்ளக் கூடாது. தவறான பார்வை தங்களின் மீது விழுகின்றது என்று அறியும் தருவாயில் அவர்களை திட்டி விட வேண்டும். இல்லையெனில் அவர்களை தாக்கி விட வேண்டும்

என்று எடுத்துக்கூறுகிறார். பெண்ணானவள் எப்பொழுதும் தைரியமாக எதிலும் செயல்பட வேண்டும் என்று எடுத்தியம்பியுள்ளார்.

**விஞ்ஞான வளர்ச்சியில் பெண்களுக்கான பாதிப்புகள்**

படைப்பாளர் விஞ்ஞான வளர்ச்சியினால் பெண்களை நவீன சாதனங்களைக் கொண்டு ஆண்கள் நோக்கும் முறையினை பர்வைகள் என்னும் சிறுகதையில் எடுத்துக் கூறுகிறார்

> **"நவீன விஞ்ஞான சாதனங்களின் வளர்ச்சியினால..! இது கம்ப்யூர் காலம்..! கையடக்க செல்பேசி இல்லாம எந்த மனுசனும் இன்னைனக்கி இல்லங்கிற நிலை உருவாகியிருக்கிறயுகம்..! மேற்படி நவீன சாதனங்கள் மூலமாக நாசகரமான சமாச்சாரங்கள் மிதமிஞ்சி பரவிக்கிட்டிருக்கு..! கம்ப்யூட்டரை திறந்து சில பக்கங்கயுக்குள்ள நுழைஞ்சிட்டா.. படுமோசமான ஆபாசங்கள் மலை, மலையாக் குவிஞ்சிக் கிடக்கு..! பாக்கைட் செல்க்குள்ள படு அருவவருப்பான சீரமிவுச் சித்திரங்கள்..! இதையெல்லாம் பார்த்துப் பல ஆண்கள் அலைமோதி.. நிலை தடுமாறி.. நீச மிருகங்களா சமுதாய வீதிகள்ல திரிஞ்சிக்கிட்டிருக்கங்க..! நவீன விஞ்ஞானத்தின் வளர்ச்சி எதிர் காலத்துல இன்னும் அதிகப்படத்தான் செய்யும்…! அதோட சேர்ந்து இந்த நாசகர சமாச்சாரங்களும் அதிகப்படத்தான் செய்யும்**
>
> (வெளிச்சத்திற்கு வராதவள் ப-66)

விஞ்ஞான வளர்ச்சியில் நவீன சாதனங்களை நன்முறையில் ஒரு புறும் பயன்படுத்தினாலும் மறுபுறம் சமுதாயத்தில் பல சீர்கேடுகளையும் தவறான எண்ணங்களையும், தவறான நோக்குகளையும் உருவாக்குகிறது. மனிதர்கள் உபயோகப்படுத்தும் கணினி முதல் கையில் எப்போதும் வைத்துள்ள கைபேசி வரை அருவருப்பான சீரழிவுச் சித்திரங்கள் அதிகப்படியாக காணப்படுகின்றன. இவையாவையும் உபயோகப்படுத்தும் ஆண்கள் நிலை தடுமாறி பெண்களை பார்க்கும் விதமும் அணுகுமுறைகளும் தவறுதலாக உள்ளது. இதனால் பெண்களின் வாழ்வானத பெரிதும் பாதிக்கப்படுகிறது. சமுதாயத்தில் விஞ்ஞான வளர்ச்சியில் முன்னேற்றம் அடைந்தாலும், பாதிப்பானது மனித வாழ்வில் சீர்கேடுகளை ஏற்படுத்தும் விதமாக உள்ளது என்பதை படைப்பாளர் எடுத்துக்காட்டியுள்ளார்.

**பெண்களின் மீதான ஆண்களின் கண்யோட்டம்**

பெண்யானவள் பொது இடங்களில் வேலை செய்யும் போது அவளின் மீதான பார்வைகள் எம்முறையில் விழுகின்றன என்பதை படைப்பாளர் எடுத்துக் கூறியுள்ளார்.

> **"பாஸ்கர் உங்களைப் போலானவனா இல்லை..! அவனோட மேல் பேச்சு அவனை நல்லவன் போலக் காட்டுனாலும்.. அவனோட அடி மனசுக்குள்ள வக்கிரம் மறைவா இருக்குது..! அதனால தான் இங்க அழகாயிருக்கா.. அம்சமாயிருக்கா.. அப்புடி இப்புடினு பேசுறான்"[9]**
>
> (வெளிச்சத்திற்கு வராதவள் ப-71)

திலகா தான் வேலை பார்க்கும் இடத்தில் சுதந்திரமாக செயல்படுகிறாள். அவளின் மீதான பார்வை உடல்பீதியாக பாஸ்கர் என்பவரின் மூலமாக வெளிப்படுத்தி பின்பு எழுத்தாளர் பிள்ளைவாள் என்னும் முதியவர் கதாபாத்திரம் கொண்டு பெண்களின் மீதான அடக்கு முறையினை மாற்றி அமைக்கிறார். தவறுக்கு காரணமான இடத்தினை சரி செய்கிறார்.

> **"அவள் உலாவுற இடத்துல உடல்ரீதியான பார்வை கொண்ட பாஸ்கரை வந்து போக அனுமதிக்கிறது அதிமூடத்தனமானது..! அது எம் பேத்தியை அசிங்கத்துக்குள்ளாக்க கூடியதும் கூட..! அதனாலத் தான்.. என அவனோடு பேசிக் கொண்டிருந்தார் மாளசீகமாய் …"[10]**
>
> (வெளிச்சத்திற்கு வராதவள் ப-72)

படைப்பாளர் இச்சிறுகதையில் பாஸ்கரின் பார்வைக்காக பிள்ளைவாள் தனது பேத்தியிடம் ஒடுக்கு முறையினை கையாளவில்லை தவறான பார்வையோடு வரும் நபரை அவ்விடத்திலிருந்து தவிர்க்கிறார். பெண்ணினை இன்னல்களுக்கு உள்ளாக்க கூடிய நிகழ்வுகள் எவ்வாறு எல்லாம் ஏற்படும் என்றும் அதனை மாற்றியமைக்க முற்படும் எழுத்தாளரின் சிந்தனையும் இதனில் வெளிப்படுகிறது. சமுதாயத்தில் பெண்களின் சுதந்திரத்திற்கு இடம் தர வேண்டும் என்று எடுத்தியம்பியுள்ளார்.

**முடிவுரை**

கண்ணக்குமார விஸ்வரூபன் சமுதாயத்தில் வாழும் பெண்களின் வாழ்க்கை முறையினைப் பற்றி தனது படைப்புகளில் எடுத்துக் காட்டியுள்ளார். பெற்றோர்களால் கல்வி கற்க ஏற்படக் கூடிய தடையானது வறுமையின் காரணமாகவும் மற்றும் வேற ஒரு வீட்டில் வாழ போகும் பெண்ணிற்கு கல்வி எதற்கு

என்ற மனப்பான்மையில் உள்ளனர் என்பதை எடுத்தியம்பியுள்ளார். விஞ்ஞான வளர்ச்சியால் பெண்ணின் மீதான கண்னோட்டம் எம்முறையில் உள்ளது. அவாகளை மூடக்குவதற்காக வேலை பார்க்கும் இடங்களில் எவ்வாறு வழிமுறைகள் உருவாக்கப்படுகின்றன என்பதை எடுத்துக் கூறி அதனை சமுதாயத்தில் மாற்றியமைக்க ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய வழிமுறையான எண்ண மாற்றங்களையும் படைப்பாளர் தனது படைப்புகளில் எடுத்துக்காட்டியள்ளார் .

**பார்வை நூல்கள்**

1. இராமமநாதன் விகரு-மகாகவி பாரதியார் கவிதைகள், ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை.
2. கண்ணக்குமார விஸ்வரூபன் - வெளிச்சத்திற்கு வராதவள், மணிமேகலைப் பிரசுரம், சென்னை.
3. பிரேமா. இரா. பெண்ணியம், தமிழ் புத்தகாலயம், சென்னை.
4. மெய்யப்பன். ச. நீதிநூல் தெளிவுரை (பதிப்புச் செம்மல்), மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
5. ரகுநாதன் எம்.ஆர்-தமிழ்க் கவிதைகளில் பெண்கள், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை.

Vol. 9 Special Issue 1 October 2024 E-ISSN: 2456-5571

# சூழலியல் நோக்கில் "சோகவனம்" சிறுகதை

**முனைவர் இரா. பிரியதர்சினி**
*இணைப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை*
*ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (த), மதுரை*

**முன்னுரை**

சுற்றுச்சூழல் சிறப்பாகப் பாதுகாக்கப்படுதல் வேண்டும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது புவியின் பாதுகாப்பாகும். புவியின் பாதுகாப்பு என்பது புவியில் வாழும் உயிரினங்களின் பாதுகாப்பாகும். புவியில் ஓர்அணு உயிரி தொடங்கி ஆறறிவு உயிர் ஆன மனிதன் வரை அனைத்துயிர்களும் வளமுடன் வாழ சூழலியல் பாதுகாப்பு இன்றியமையாததாகிறது. சூழலியல் பாதிக்கப்படுமானால் புவியல் உள்ள உயிரினங்கள் படிப்படியாக அழிய நேரிடும். இக்கொடிய சூழல் எத்தகைய அவலத்தை ஏற்படுத்தும் என்பதை தன்னுடைய 'சோகவனம்' என்ற சிறுகதையில் ஆசிரியர் சோ.தர்மன் பதிவிட்டுள்ளார். சோகவனம் கதைக்காட்டும் சூழலியல் பாதிப்பு குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைக்கப்படுகிறது.

**சுற்றுச்சூழல் - வரையறை**

1. சுற்றுச்சூழல் என்பது மனிதனைச் சுற்றியுள்ள சமூக, பொருளாதார, உயிரிய, இயற்பிய, வேதிய காரணிகளின் கூட்டாகும்.
2. குறிப்பிட்ட இடத்தில், காலத்தில் காணப்பட்ட சுற்றுப்புற நிலைமைகளின் கூட்டே சுற்றுச் சூழலாகும்.
3. சுற்றுச்சூழல் என்பது புவியின் இயற்பிய அங்கங்களின் பிரிதிநிதியாகவும் மனிதனின் செயல்பாட்டால் மாறுதலுக்குட்படக் கூடியதாகவும் உள்ளது.

**சுற்றுச்சூழலின் வகைகள்**

சுற்றுச்சூழல் இரு பெரும் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. இயற்கை சுற்றுச் சூழல்
2. மனிதனால் உண்டு பண்ணப்பட்ட சுற்றுச்சூழல்

"இயற்கை சுற்றுச்சூழல் தானே ஒழுங்குப்படுத்திக் கொள்ளும் ஹோமியஸ்டேட்டிக் சுற்றுச்சூழல் செயலிக்கம் என்ப்படும்" (சுற்றுச்சூழல் மாசுபாடு ப:16) இச்செயலிக்க முறையில் இயற்கை சுற்றுச்சூழல் முறைமை இயங்குகிறது. அதாவது இயற்கை செயற்முறையால் தருவிக்கப்பட்ட இயற்கை சூழல் முறைமையின் எவ்வித மாற்றமும் அச்சுற்றுச் சூழலின் பிற அங்கத்தில் உள்ள மாற்றங்களால் எதிரீட்டு சமநிலையாக்கப்படுகிறது. ஆனால் மனிதனால் உருவாக்கப்படும் சுற்றுச்சூழல் இயற்கைச் சூழலலை மாற்றியமைக்கும் ஆற்றல் வாய்ந்தது.

**சுற்றுச்சூழலைப் பாதிக்கும் காரணிகள்**

சுற்றுச்சூழல் என்பது காலத்திற்குக் காலம் மாறி வருகிறது. சூழலியல் பாதிப்பு உயிரினங்களைப் பாதிக்கிறது. "பல்வேறு உயிரினங்கள் மாறிய சுற்றுச் சூழலுக்கு ஈடு கொடுத்து வாழமுடிவதில்லை. இதன் காரணமாக அவ்விலங்குகள் நாளடைவில் மறைந்து வருகின்றன. உதாரணமாக பழங்கால பேருருவ டைனோஸார்கள் மாறிய சுற்றுச் சூழலை எதிர்த்து சமாளித்து வாழமுடியாததற்குக் காரணம் அச்சுற்றுச் சூழலில் அப்பொழுது ஏற்பட்ட எதிர்ப்பு நிலைமையே காரணமாக அமைந்தது என அறியப்பட்டது" (சுற்றுச்சூழல் மாசுபாடு ப:12) மனிதன் சூழலியலில் மாற்றத்தை ஏற்படுத்தும் முக்கியக் காரணியாக உள்ளான். மனிதன் தனது ஆடம்பர மற்றும் வசதியான வாழ்விற்காகப் பயன்படுத்தும் நவீன தொழில் நுட்பங்கள் சுற்றுச்சூழலை வெகுவாக பாதிக்கின்றன.

**இயற்கைவளங்கள்**

காட்டுவளம், நீர்வளம், கனிவளம், உணவுவளம், ஆற்றல்வளம், நிலவளம் ஆகியவையே இயற்கை வளங்களாக உள்ளன. இந்த வளங்கள் மனிதனின் தலையீட்டால் பாதிக்கப்படுகின்றன.

**மாசுபாடு – விளக்கம்**

"காற்று, நீர், நிலம் ஆகியவற்றின் பௌதீக இரசாயன மற்றும் உயிரியப் பண்புகளின் விரும்த்தகா மாற்றம் மாசுபாடு எனப்படும். இம்மாற்றம் உயிரினங்களுக்கு தீங்காக/ இடராக/ அபாயமிக்கதாக/ ஆரோக்கியக் கேடாக அமையலாம்." (சுற்றுச்சூழல் மாசுபாடு ப:23)

**இயற்கையைப் போற்றிய பழந்தமிழர்**

பழந்தமிழர் இயற்கையுடன் இயைந்து வாழ்ந்தனர். "நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகுமென்று அன்னை கூறினள் புன்னையது நலனே" (நற்றிணை 172) என்ற பாடல் மரத்தைத் தன் உறவாகப் போற்றும்

மாண்பைக் காட்டுகிறது. வள்ளுவத்தின் ''வான்சிறப்பு'' மழையின் இன்றியமையாமையைக் கூறுகிறது. ''ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்'' (சிலப்பதிகாரம்) என்ற இளங்கோவின் வாழ்த்து இயற்கை வாழ்த்தாக ஒலித்தது. பக்தி இலக்கியங்களில் இறைவனின் புகழ் பாடப்படும் அதே வேளையில் இறைவனின் வாகனங்களாக விலங்குகளும், பறவைகளும், ஊர்வனவும், தலமரங்களும் போற்றப்படுகின்றன. பாரதியின் குயில்பாட்டும் பாரதிதாசனின் அழகின் சிரிப்பும் இயற்கையைப் பற்றிய துதிகளே ஆகும்.

### வளமான வனம்

சோ.தர்மன் தனது கதையில் தொடக்கத்தில் வளமான வனத்தைப் பதிவு செய்துள்ளார். மகிழ்ச்சியாக வாழ்ந்து வரும் இரு கிளிகளின் வாழ்வை வசந்தமாக்கியது வளமான சுற்றுச்சூழல்.

**"வனங்களின் ஏகாந்த மௌனத்திலும், இலைகள் சலசலக்கும் தாலாட்டிலும், நறுமணம் வீசும் காட்டுப் பூக்களின் சௌந்தர்ய வாசனையில் நாசிகளின் மென்னுணர் நரம்புகள் புடைக்க கிளைவிட்டுக் கிளைத் தாவி காற்றில் உதிரும் புக்களெனப் பறந்து உல்லாசமாய் ஆனந்தக் கூத்தாடிக்களித்திருந்தன அந்த இளஞ்சோடிக் கிளிகள்" (சோகவனம்)** ஆசிரியரின் இவ்வருணனை மனித இனம் காலடி எடுத்துவைக்காத வனத்தைக் காட்டுவதாக உள்ளது.

வனத்தில் மௌனம் இருக்குமா? என்ற வினா எழுகிறது. அடர்ந்த வனத்தில் நகர வாழ்க்கையின் இறைச்சல் இருக்காது. வனத்திற்கே உரிய ஒலியான பூச்சிகள், வண்டினங்கள் எழும்பும் ஒலி, நீரோடைகள், அருவிகள் எழுப்பும் ஒலி, விலங்குகள், பறைவகள் எழுப்பும் ஒலியென வனம் நிறைந்திருக்கும். ஆனால் இந்த இயற்கை ஒலியானது எவ்விதத்திலும் உயிரினங்களுக்கு உடல் ரீதியாகவோ, மன ரீதியாகவோ தீங்கை ஏற்படுத்தாது. மாறாக தங்கள் இருப்பிடத்தை அறியவும், கூட்டத்தை ஒழுங்குப்படுத்தவும், எச்சரிக்கை செய்யவுமே இத்தகைய ஒலி வனத்தில் பயன்படுகிறது. எனவே தான் ஆசிரியர் **'ஏகாந்த மௌனம்'** என்கிறார்.

**'இலைகளின் சலசலப்பைத் தாலாட்டு'** என்கிறார் ஆசிரியர். 'தாலட்டு' என்பது உறங்கும் நேரத்தில் கூட குழந்தையின் ஆளுமையை மேம்படுத்த உதவும் காரணியாகும். வனத்தைத் தாயாகவும் கிளிகளை சேயாகவும் கதைஆசிரியர் கூறியுள்ளார். உயிரினங்களுக்கு வனம் தாய்மடி என்ற உயரிய சிந்தனையை இவ்வரி காட்டுகிறது.

**'நறுமணம் வீசும் காட்டுப் பூக்களின் சௌந்தர்ய வாசனை'** என்ற வரி நிலவளம், நீர்வளம் நிறைந்த நிலையில் உருவாகும் காட்டுவளத்தைக் காட்டுகிறது.

### காட்டுவளம் அழிக்கப்பட்ட நிலை

காடுகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் உயிரினங்களுக்கு பல வகைகளில் உதவுகின்றன. அடுப்பெரிக்க விறகாகவும், நாற்காலி போன்றவை செய்யவும், உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வும், தொழில் பல செய்யவும், (இரப்பர் தொழில், சாயம் தயாரித்தல் ……) நோய் தீர்க்கும் மருந்தாகவும், பொருளாதாரத் தேவையை நிறைவு செய்யவும் நேரடியாகப் பயன்படுகிறது. மண்அரிப்பைத் தடுத்தல், இலை மக்குவதால் உரமாதல், மழைப்பொழிய உதவுதல், பறவைகள், விலங்குகளின் இருப்பிடமாதல் என மறைமுகப் பலனைத் தருகின்றன. இக்காடு மனிதனின் இடையூறால் தொடர்ந்து அழிக்கப்பட்டு வருகிறது. **"தன் வம்சத்தின் பாரம்பரிய நியதியை மீற முடியாமல் கிளைகளின் மேல் கூடு கட்டி வாழும் பறவைகளையும், உதாசீனப்படுத்தி விட்டு மரப்பொந்துகள் தேடி வனங்களின் மூலை முடுக்குகள் எல்லாம் தேடி அலைந்தன." (சோகவனம்)** இவ்வரிகள் மரங்கள் இல்லாமையைக் காட்டுகின்றன. தன் தாய் வீட்டைத் தேடி அழைந்த கிளகள் 'திசைமாறிவிட்டோமோ' என அஞ்சும் அளவிற்கு அவ்விடம் மாறியிருந்தாக ஆசிரியர் பதிவிட்டுள்ளார்.

### மரங்களைக் காணவில்லை

மரங்கள் அழிக்கப்படல் என்பது காடுகளை அழித்தலே ஆகும். காடுகள் அழிக்கப்பட்டன என்பதை **"ஆகா எவ்வளவு பெரிய இலவ மரம் தன் தாய்வீடாயிருந்தது. எவ்வளவு உயரம் எத்தனை பொந்துகள் பக்கத்திலேயே கூடாரமாய் கிளை பரப்பி வெய்யில் முகமே காணாமல் எந்நேரமும் நீருக்குள் இருக்கிற மாதிரியான குளிர்ச்சியில் அசைந்தாடி பறவைகள் எல்லாவற்றையும் 'வா,வா' என்று கையசைத்துக் கூப்பிடும் நிலவாகை மரத்தையும் காணவில்லை. சந்தன வாசைன எங்கே போயிற்று? அடர்ந்த மட்டியும், கோங்கும், பிள்ளை மருதும் இருந்த இடம் எது? ஆயிரம் கைகள் விரித்தாற்போல் நின்ற தேக்கு எங்கே போயிற்று." (சோகவனம்)** என்ற வரிகள் காட்டுகின்றன. இக்கதை அழிக்கப்பட்ட மரங்களைப் பட்டியலிட்டுள்ளன. இம்மரங்கள் அனைத்தும் நாட்டு மரங்களாகும். குறிஞ்சிப்படாடு தொண்ணூற்று

ஒன்பது வகை மலர்களைப் பட்டியலிட்டுள்ளது. முக்கூடற்பள்ளு நெல்வகைகளையும், மாட்டுவகைகளையும் பட்டியலிட்டுள்ளது. இலக்கியங்கள் பதிவிட்டுள்ளவற்றில் பலவற்றை இன்று நாம் இழந்துள்ளோம் என்பது உண்மையே. இன்றைய நிலையில் காங்ரீட் மரங்களாக அடுக்குமாடிக் குடியிருப்பையே அதிகம் காணமுடிகிறது. முட்டையிட்டு, குஞ்சு பொறிக்க பொந்துகளைத் தேடி அலைந்தது. இறுதியாக ஒரு மொட்டை பனை மரத்தைக் கண்டு அதன் பொந்தினுள் போய் அமர்ந்தது. **“கிழடு தட்டி வைரம் பாய்ந்த பொந்துகள் உள்ள மூத்தமரங்களைக் காணவேயில்லை” “மரங்களற்று செடிகளாகிப் போன வனங்கள்” “செடிகள் குறைந்து கொடிகள் நிறைந்த வானமாய்” (சோகவனம்)** என்ற வரிகள் பல ஆண்டுகளாக வளர்ந்திருந்த மரங்களை ஒரு சில நொடிகளில் வெட்டி வீழ்த்திய மனிதனின் கொடூர செயலை நம் கண்முன் நிறுத்துகின்றன. மண் விதையை மரமாக்குகிறது. மரத்தில் பழுக்கும் பழங்களில் இருந்து மீண்டும் விதையைப் பெற்று மரத்தை உருவாக்குகிறது. உதிரும் இலைகளையே மக்கவைத்து உரமாக்கி மரம் வளர உதவுகிறது. மண் மரத்தை வளர்க்க, மரம் மண்ணைக் காக்கிறது. இது போன்ற ஒரு சமநிலையான இயற்கையை மனிதன் அழிப்பது மிகப்பெரிய அவலமே.

### நீர்வளம் அழிக்கப்படுதல்

“நீரின்றி அமையாது உலகு” (குறள்.20) “பசும்புல் தலைகாண்பு அரிது” (குறள்.16) ஆகிய குறள்கள் நீரின் இன்றியமையாமையை உரைக்கின்றன. காடுகள் அழிக்கப்படும் பொழுது மழைப்பொழிவு குறைகிறது. ஒளிச்சேர்க்கையால் கார்பன்-டை-ஆக்ஸைடை உள் இழுத்து ஆக்ஸிஜனை மரங்கள் வெளியிடுகின்றன. மரங்கள் அழிக்கப்படும் பொழுது கார்பன்- டை- ஆக்ஸைடு அளவு பூமியில் உயர்கின்றது. இதனால் ‘புவி வெப்பமயமாதல்’ என்ற ஆபத்தும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே உள்ளது. கார்பன் டெட்ரா குளோரைடு, பெராக்ஸி அசிடைல் நைட்ரேட் ஆகியவை குளர்விப்பான்கள் மற்றும் நறுமணப்பொருட்களில் இருந்து வரும் வாயுக்கள் ஆகும். இவை ஓசோன் அடுக்கை பாதிப்படையச் செய்கின்றன. மனிதனின் ஆடம்பரமும் அறிவியல் உலகின் அவசர வாழ்க்கையும் இயற்கையை மாற்றி அமைக்கின்றன. **“மலையருவிகள் கொட்ட சிற்றோடைகளில் பாம்பின் நெளிவாய் சுவை கொண்டு பாய்ந்து வரும் கண்ணாடித் தண்ணீர் தேடி அலைந்தது. தூரத்தில் தெரிந்த குளத்தில் தாழப் பறந்து உற்றுப் பார்த்தது. ஓர்க்‘ாப் கழிவுகள் சேர்ந்து எண்ணெய்ப் படலம் மிதக்கும் கருமை நித் தண்ணீரின் நாற்றம் பிடிக்காமல் பறந்து போனது” (சோகவனம்)** என்ற வரிகள் தொழிற்சாலைக் கழிவுகள் நீர்நிலைகளில் கலக்கப்படும் அவலத்தைக் காட்டுகின்றன. மீன்செதில்கள் கலந்துள்ள நீர், பம்புசெட்டு கிணற்றின் உப்பு நீர் என ஆசிரியர் நீர்மாசுபாட்டைப் பட்டியலிட்டுச் செல்கிறார். நீரின் சுவை உப்பாக மாறுவதும் நீர்மாசுபாட்டினாலேயே ஆகும். நீர்மாசுபாடு கலரா, புற்றுநோய், சருமநோய், நரம்புதளர்ச்சி எனப் பல நோய்களைத் தரும் ஆபத்தை உடையது நீர்மாசுபாடு.

### நிலமாசுபாடு

கதிரியக்கக்கழிவுகள்,மருத்துவக்கழிவுகள்,உரத்தொழிற்சாலைக் கழிவுகள், பூச்சிக்கொல்லி மருந்துகள், உவர்கட்டிகள் என அனைத்தும் நிலத்தை மாசுபடுத்துகின்றன. **“ஒருநாள் பாலிதீன் பையின் கொஞ்சம் மீதம் இருந்த தண்ணீரை யாரோ தூக்கி எறிய தொண்டை நனையக் குடித்து தாகம் தீர்த்தது”(சோகவனம்)** என்ற வரிகளில் இருந்து பாலீத்தீன் பயன்பாடு உள்ளதை அறியமுடிகிறது. பஞ்சபூதங்களில் ஒன்றான நீர் பாலித்தீன் பைகளில் அடைக்கப்பட்டு விற்கப்படும் ஆரோக்கியமில்லாத நிலையைக் காட்டுவதாக ஆசிரியர் பதிவிட்டுள்ளார். பலித்தீன் நிலத்திற்கும், உயிரினங்களின் உடல் ஆரோக்கியத்திற்கும் கேடாகும். நிலத்தடி நீர் குறைவு போன்ற அபாயமும் நிலமாசுபாட்டால் உண்டாகிறது.

### காற்றுமாசுபாடு

புவியில் உள்ள உயிரினங்கள் அனைத்திற்குமான தேவைகளில் ஒன்று சுவாசிக்க தூய காற்று. இக்காற்றை மாசுபடுத்தும் தன்மையுள்ள காபன்மோனாக்சைடு, நைட்ரஜன் ஆக்சைடு, சல்பர் ஆக்சைடு மற்றும் சல்பர்ட்ரை ஆக்சைடு, புழுதிப்படலங்கள் ஆகியவற்றை மனிதன் தன் ஆடம்பர வாழ்க்கைக்காக உருவாக்குகிறான். தொழிற்சாலை, வாகனப்புகை, கழிவுகளை எரிப்பதால் உண்டாகும் புகை என வாயுமண்டலம் மாசுபடுத்தப்படுகிறது. மனிதனுக்கு சுவாசநோய், புற்றநோய், கண்எரிச்சல், தாவரங்களுக்கு குளோரோபில் நிறமிகளைச் சிதைத்தல் போன்ற தீங்கை காற்றுமாசுபாடு ஏற்படுத்துகிறது. **“வாகனங்கள் கக்கிச் செல்லும் டீசல் பெட்ரோல் புகை நாற்றத்தை சுவாசித்து முகஞ்சுளித்தது ஆண்கிளி” (சோகவனம்)** என்ற வரிகள் காற்றுமாசுபடலைக் காட்டுகின்றன.

### ஒலிமாசுபாடு

ஒலிமாசுபாடு என்பது அளவுக்கு அதிகமான ஒலியால் ஏற்படுவதாகும். விருப்பமில்லாத/ வெறுப்பைத்தருகிற/ மனதுக்கொவ்வாத ஒலியே இரைச்சல் எனப்படும். பயன் மதிப்பற்ற, உற்றுகேட்பவர்களுக்கு மனஉளைவை ஏற்படுத்தும், தவறான வேளையில் சட்டத்திற்குப் புறம்பான இடத்தில் முறைகேடான ஒலி எழுப்புவதை ஒலி மாசுபாடு எனவாம். ஒலி மாசுபாடு செவித்திறன் குறைபாட்டையும் அதன் விளைவாக தகவல்தொடர்பில் இடையூரையும் ஏற்படுத்துகிறது. **“இடைவிடாது கேட்கும் ஹாரன் சத்தங்களும் கேண்டீண்களில் அலறும் ஸ்பீக்கரின் ஓலங்களும் தூக்கத்தை மறக்கடித்தன. குஞ்சுகளுக்கு இரையூட்டும்போது அதன் தாய் பாடி‘யான கிகீகீ சத்தத்தைக் குஞ்சுகள் கேட்கவிடாமல் வாகனங்களின் ஹாரன் சத்தம் மேலெழும்பி அமுக்கியது. தன் குஞ்சுகள் எழுப்பும் சத்தம் வாகனங்களின் ஹாரன் சத்தம் மாதிரி ஒலிக்கக் கண்டு இரு கிளிகளும் பதறித் துடித்தன.” (சோகவனம்)** ஒலிமாசுபாடு கிளிகளின் தாய்மொழியையும் மறக்கடித்ததாக ஆசிரியர் பதிவிட்டுள்ளது மிகப் பெரிய ஆபத்தை உலகம் சந்திக்க உள்ளது என்பதை காட்டுகிறது.

### உணவுமாசுபாடு

“உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” (புறம்.18) என்கிறது புறநானூறு. அமுதசுரபி மூலம் பசியில்லா உலகம் படைக்க விரும்பினார் சீத்தலைசாத்தனார். வடலூரில் வள்ளலார் ஏற்றிய நெருப்பு இன்றும் பல உயிர்களின் பசியை விரட்டி வருகிறது. “நிரப்பினுள் யாதொன்றும் கண்பாடு அரிது”(குறள் 1049) என்கிறார் வள்ளுவர். “தனி ஒரு மனிதனுக்கு உணவில்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடல் வேண்டும்” (பாரதியார்) என்றார் பாரதி. இத்தனைச் சான்றோரும் ஏன் உணவில் கவனம் செலுத்த வேண்டும்? “பத்தும் பசி வந்திடப்போம் பறந்து” (நல்வழி பா.26) என்கிறார் ஔவையார். பசியால் ஏற்படும் தீங்குகளை எண்ணியே சான்றோகள் உணவு அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என எண்ணியுள்ளனர். ‘உணவே மருந்து’ என்ற வாக்கு சரிவிகித மற்றும் போதுமான உணவே ஆரோக்கிய வாழ்விற்கு வழி வகுக்கும் என்பதைக் காட்டுகிறது. “மருந்தென வேணடாவாம் யாக்கைக்கு” (குறள்.942) என வள்ளுவமும் உணவே மருந்து என்கிறது. ஆரோக்கியமான உணவே ஆரேக்கியமான உடலுக்கு அடிப்படை. ஆரோக்கியமான உடலே ஆரோக்கியமான சிந்தனைக்கு உதவும். இத்தகைய உணவில் ஆரோக்கியம் குறைவு ஏற்பட்டால் அது உணவுமாசுபாடே ஆகும். நிலமாசுபாடும், நீர்மாசுபாடும் விளையும் உணவுப் பொருட்களில் மாசுபாட்டை ஏற்படுத்துகின்றன. துரித உணவு மேலும் ஆரோக்கியக் கேட்டை உருவாக்குகிறது. உயிரினங்களுக்கு அவற்றின் செரித்தல் தன்மைக்கு ஏற்ப உணவு கிடைக்கவில்லை என்றால் அது மிகப்பெரிய ஆபத்தை ஏற்படுத்தும். தக்க உணவில்லாமல் அவ்வுயிரினம் அழிய நேரிடலாம் அல்லது அவ்வுயிரினம் வேறு தனக்கு ஒவ்வாத உணவுப் பழக்கத்திற்கு மாறுவதால் ஆபத்து நேரலாம். **“தன் வம்சத்தின் பாரம்பரிய நிறம் மாறி குஞ்சுகள் கிளிபச்சை நிறமிழந்து செம்பச்சையார் வளர்ந்தது கண்டு கிளிகள் இரண்டும் ஒன்றை ஒன்று ஆச்சரியமாய்ப் பார்த்துக் கொண்டன” (சோகவனம்)** என்ற வரிகள் உணவுமாறுபடுதலின் ஆபத்தைக் காட்டுகின்றன. **“பொட்டலங்களில் ஒட்டியிருந்த பிரியாணித் துகள்களையும் புளியோதரைப் பருக்கைகளையும் கொண்டு போய் இரையாகக் கொடுத்தது. எச்சியிலையில் சிவப்பாய் பழங்கள் கிடக்க, கிளி சந்தோஷத்தடன் ஆவலாய் கொத்தித் தின்னப் போனபோதுதான் தெரிந்தது. அந்தப் பழம் வேறெந்த உயிர்ப்பிராணிகளுமே தின்னாத, மனிதர்கள் மட்டுமே தின்கிற தக்காளப் பழமென்று. ஏமாற்றமடைந்த கிளி ஒரு குழந்தை கோபத்தில் விட்டெறிந்த காய்ந்த ரொட்டித் துண்டைத் தூக்கிக் கொண்டு பறந்தது.” (சோகவனம்)** இவ்வரிகள் உணவுமாசுபடுதலைக் குறிக்கிறது.

### முடிவுரை

இயற்கையை நேசித்தும் இயற்கையுடன் இணைந்தும் வாழும் வாழ்க்கையே சிறப்புடையதாகும். இயற்கையை மாற்றுவது என்பது அழிவுக்கு வழி வகுக்கும். இக்கதையில் கூறப்பட்டுள்ள மாசுபாட்டால் பாதிக்கப்பட்டுள்ள காடு, மரங்கள், பறவைகள், விலங்குகள் என அனைத்தும் புவியின் உயிரினப்பன்மயத்தையே காட்டுகின்றன. மாசுபாடு உணவுச்சங்கிலி, உயிரினப்பண்மயம் என புவியன் அடிப்டையையே அழித்துவிடும். இதை உணர்ந்து புவியையும் ஓம்பி நம்மையும் நாம் காக்க வேண்டுமானால் இயற்கையை சீரழிக்கும் செயல்களை நிறுத்த வேண்டும். இயற்கையைப் பாதுகாக்க சட்டம் இயற்ற வேண்டிய நிலை மாறி ஒவ்வொரு தனி மனிதனும் இயற்கைக்காப்பாளனாக தன்னை உணரவேண்டும். தனிமனிதனின் மனமாற்றமே இயற்கையைக் காக்கும் சக்கதியாகும்.

**துணைநூற்பட்டியல்**


1. ப.சந்திரசேகரன் - சுற்றுச்சூழல் மாசுபாடு,வு.மு பதிப்பகம் 922, ஹவுசிங் யூனிட்ராஜ கோபாலபுரம், புதுக்கோட்டை
2. ஞா.மாணிக்கவாசகன ் (உரை) - புறநானூறு, உமா பதிப்பகம், 58, ஐயப்பசெட்டி தெரு, மண்ணடி, சென்னை.
3. டாக்டர் மு.வரதராசனார் (உரை) – திருக்குறள், திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், லிட். 154, டி.டி.கே சாலை, சென்னை.
4. ஆசிரியர் குழு- நீதிக்களஞ்சியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட லிமிடெட், சென்னை.
5. பாரதியார்- பாரதியார் பாடல்கள்,மணிவாசகர் பதிப்பகம், 8/7 சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை

Bodhi International Journal is assigned by ISSN National Centre, India National Science Library, New Delhi

Journal Indexed and Impact Factor by International Institute of Organized Research (I2OR)

## Information of Bodhi Journal

## Subjects for Papers

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, entrepreneurship, bioscience, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

## Hosted by

அரசு கலைக் கல்லூரி, மேலூர்

Impact Factor 4.650

Articles should be mailed to bodhijournal@gmail.com

**BODHI**
**International Journal of Research in Humanities, Arts and Science**
www.bodhijournals.com

Powered & Published by
**Center for Resource, Research and Publication Services (CRRPS) India.**
www.crrps.in